# சுதேசமித்திரன்

[illegible] 30 [illegible] 21,22

21,28 [illegible] 1557


JL
N211, N302
N59.30.21,22
208215




ஓரியண்ட் விசிறிகளின் புதிய அமைப்பு தோன்றுவதற்கு முன், உற்பத்திப்பொருள்களின் அழகில் கைத்தொழில் டிஸைனர்கள் அவ்வளவு அறிவு ஆற்றல் காட்டவில்லை.

உபயோகிப்பாளரைத் திருப்தி செய்யவேண்டும் என்று சிரத்தை மிக்க ஓரியண்ட் டிஸைனர்கள் உங்கள் அறையின் அழகுக்கு ஏற்ற நேர்த்தியான விசிறியைத் தயாரித்துத் தருகின்றனர்கள். சிருங்காரக் கோடுகள் வழவழப்பான அச்சுப்பெட்டியின் எல்லைப் புறங்கள் அமைந்த கேஸிங் என்றும் நிலைத்திருப்பதுமான முத்துப்போன்ற ஸ்டோவ் எனமல் பினிஷ் இவைகள் ஒவ்வொரு வீட்டிலும் அழகான சிறபசித்திர மாக அமைந்திருக்கிறது. மகிழ்ச்சியைத் தரும் வஸ்து. வேலைத் திறனில் உத்தமமானது

Orient FANS

ஓரியண்ட் விசிறி தோற்றத்திலும் சேவையிலும்
பல வருடங்கள் முன்னதாக நிற்கிறது.

ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்,
6 கோர் பீபி லேன், கல்கத்தா-11

# பொருளடக்கம்

Vol: XXX] [No 21.
விகாரி௵ ஆனி 7. ஜூன் 21.


| | |
|---|---|
| சர்க்கார் ஆராயட்டும்! | 3 |
| மக்கள் மன்றம் | 5 |
| அர்சியல் துக்கடா | 6 |
| நாடகமும் நாட்டியமும் —சஞ்சாரி | 10 |
| இன்பம் எங்கே? —சரோஜா ராமமூர்த்தி | 12 |
| சாவித்திரி சதி —கே. ரகுபதி | 19 |
| எல்லைக் காளியின் தீர்ப்பு —க. பஞ்சாபகேசன் | 26 |
| நட்சத்திர பேட்டி | 32 |
| என்ன உறவு? —ஜி. கே. பொன்னம்மாள் | 34 |
| பாசமும் பரிவும் —ஏ. டி. ரங்கமணி | 47 |
| சந்திரோதயம் —ரகமி | 53 |
| பெற்ற மனம் —குக்கு | 54 |
| காணிக்கை கடன் —கோமதி நாகராஜன் | 60 |
| ராணியைக் காதலித்தவன் —ஆர். பி. மல்லாரி | 69 |
| தஞ்சு —அசுவத்தாமா | 76 |
| நினைவும் விளைவும் —புஷ்கலா | 81 |
| தீக்ஷிதர் கீர்த்தனை | 90 |
| சாகாத காதல் —அருள் செல்வநாயகம் | 96 |
| நாராயணீயம் —அனந்தராம தீக்ஷிதர் | 112 |


"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.





# சர்க்கார் ஆராயட்டும்!

சென்னை நகரில் கவர்ன்மெண்டு பஸ் போக்குவரத்து நிலைமை சீர்படுமாவென்று ஏங்கியிருப்பவர்களுக்கு அவ்விலாகா தலைவர் வெளியிட்டுள்ள கருத்து பெருத்த ஏமாற்றத்தை அளிக்குமென்பதில் ஐயமில்லை. பஸ் கட்டணங்கள் உயர்த்தப்படலாமென்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். போக்குவரத்தில் பிரயாணிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்களென்பது அதிகாரிகளுக்குத் தெரியுமா என்பதே சந்தேகம். ஒவ்வொரு சமயம் அதிகாரிகள் வெளியிடும் கருத்தைக் கவனித்தால் அவர்களுக்கு உள்ள நிலை புரியவில்லையென்பது தெளிவாகிறது. பஸ் போக்குவரத்தில் மக்கள் சொர்க்கபோகத்தை அனுபவிக்கிறார்கள் என்ற பிரமையிலேயே அதிகாரிகள் காலம் கழிப்பதாகத் தோன்றுகிறது.

உள்ள நிலைமை என்ன? அதிக நெருக்கடியுள்ள முக்கிய பாதைகளில் பஸ்கள் புறப்படும் இடைக்காலம் அதிகரித்து வருகிறது. எந்நேரமாயினும் பிரயாணிகள் பஸ்களுக்காகத் தவங்கிடக்கிறார்கள். அவர்கள் தவங்கிடந்தாலும் பஸ் வருவதில்லை. வந்தாலும் கொஞ்சத்தில் புறப்படுவதில்லை. புறப்பட்டாலும் வசதியாகப் பிரயாணம் செய்ய முடிவதில்லை. சிப்பந்திகள் மக்களைப் புளிபோல் திணித்து அனுப்புகிறார்கள். இடையே வழியில் ஏறவேண்டுமென்றால், பெருத்த சங்கடம். காலை, மாலை ஆபீஸ் நேரங்களில் கேட்க வேண்டியதில்லை. பஸ் பிரயாணிகள் தொகை பெருகி வருகிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால், பஸ் போக்குவரத்தை ஏகபோகமாகத் தங்கள் கையில் வைத்திருக்கும் சர்க்கார் இந்தக் கஷ்டங்களையெல்லாம் புறக்கணிப்பது ஒழுங்காகுமா?

இந்த நிலைமையில் பஸ் டிரான்ஸ்போர்ட்டு இலாகா டைரக்டர் சொல்வது பிரயாணிகளுக்கு இன்னும் ஆத்திரத்தையே உண்டுபண்ணும். மொத்த வருமானம் மிகப் பெருகியுள்ளது. மே மாதத்தில் தினசரி சராசரி வருமானம் ரூ. 50 ஆயிரமெனக் கூறப்படுகிறது.

இதுவும் கோர்ட்டு, கலாசாலைகள் இல்லாத விடுமுறை காலத்தில். ஆனால், இவ்விதம் வருமானம் கிடைத்தும் லாபம் குறைந்து கொண்டே வருகிறதாம். ஆகவே பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டிவருமெனச் சொல்லப்படுகிறது. இதுபற்றி அடுத்த மாதம் யோசனை செய்யப்படுமாம். சமீபத்தில்தான் பஸ் கட்டணமெல்லாம் உயர்த்தப்பட்டன. நயா பைஸா மாறுதலினால் வேறு அனுமத்தமாக உயர்வேற்பட்டிருக்கிறது. சென்னையைவிட அதிகத் திறமையாக பஸ் போக்குவரத்து நடத்தப்படும் பம்பாய் போன்ற நகரங்களில் இங்கிருப்பதைவிட அதிகக் கட்டணம் வாங்கப்படவில்லை. அங்கெல்லாம் வசதி அதிகம், கட்டணம் குறைவு. இங்கு தலைகீழ்ப் பாடம்.

உள்ள சௌகரியங்களே போதவில்லை என்கிறபோது அதிக அசௌகரியங்களுக்கு இலாகா அடிகோலுவது விபரீதப் போக்கையே காட்டுகிறது. அதிகமாக மொத்த வருமானம் வந்தும் லாபம் ஏன் குறைகிறது? டயர், டீஸல் எண்ணெய் மோட்டார் பாகங்கள் இவற்றின் விலை உயர்வு ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது. இது மாத்திரம் காரணமாவென்பதைத் திட்டமாக அறிய பொது மக்களுக்கு உரிமை உண்டு. லாபகரமில்லாத பாதைகளை மனம் போனபடி அதிகரித்துவிட்டு அதனால் ஏற்படும் பளுவை மக்கள் தலையில் சுமத்துவது சுத்த அநியாயம்!

எந்தெந்த பாதைகளில் பஸ் விட்டால் லாபம் கிடைக்கும். எந்தெந்த பாதைகளில் விட்டால் நஷ்டமேற்படும் என்பதை தீர ஆராய வேண்டும். பஸ் பிரயாணிகள் கருத்தையும் அறிந்து தீவிரப் பரிசீலனை நடத்த வேண்டும். நிர்வாகச் செலவு எவ்வளவு ஆகிறது, அவ்வளவு ஆவது அவசியமா என்பதிலும் கருத்துச் செல்ல வேண்டும். நிற்கும் பிரயாணிகளை அனுமதியாத, இன்னும் அதிகத் திறமையாக நடத்தப்படும் தனியார் பஸ் போக்குவரத்து லாபகரமாகவிருக்கும்போது, இத்தனை பிரயாணிகளைத்தான் ஏற்றலாம் என்ற கட்டுப்பாடுகூட இல்லாத கவர்ன்மெண்டு பஸ் டிரான்ஸ்போர்ட்டில் ஏன் லாபம் குறைய வேண்டும்? இதற்கும் சர்க்கார் பதில் சொல்ல வேண்டும். எல்லாவற்றையும் விட, லாபக் குறைவுக்கு நிர்வாகத் திறமைக் குறைவு காரணமா என்பதையும் சர்க்கார் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். நிர்வாக ஊழலை அதிகரிக்க விட்டு, அவசியமில்லாத நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டு, மக்கள் தலையில் கட்டணச் சுமையை அதிகமாகச் சுமத்திவிடுவதை மக்கள் ஒருக்காலும் அனுமதிக்கமாட்டார்கள் என்பதையும் சர்க்கார் உணர வேண்டும்.

# மக்கள் மன்றம்

7–6–59 மித்திரன் வார இதழ் கண்டேன். களி கொண்டேன். எழில் மங்கையும் கணவனும் மன்மதனும் அழகுறத் தோன்றுகின்றனர். ஓவியர் ராமுவின் அழகிய படைப்பு.

டி. எஸ். துரைராஜ் பேட்டிப் படத்தில் அவர் கையெழுத்தைக் காணோமே இது பெரும் குறை. கமலா லட்சுமணன் தன் வீட்டில் பிரமாதம்.

இதே மாதிரி எல்லா இதழ்களுக்கும் ஆர்ட் பேப்பர் அட்டை வந்தால் நன்றாய் இருக்கும். மேலும் அட்டைப்படக் கதை முன்போல வரவேண்டும்.

ஒரு குறை. ஒவ்வொரு வாரமும் சினிமாவிமரிசனம் வரவேண்டும். முக்கிய சினிமாக் குறிப்புகளும், புகைப் படங்களும் இன்னும் அதிகமாக்க வேண்டும். அப்பொழுது மக்கள் கவனத்தைக் கவரும் என்பது என் கருத்து. மா. கு நெடுமாறன், ரசவாதி, சாவித்திரி, மயிலன் ஆகியோரின் படைப்புகள் பிரமாதம். கல்லுள்ளம் என எண்ணிய உள்ளத்துக்கும் உணர்ச்சி உண்டு என்பதை ரசவாதியும் மானத்தின் மதிப்பை சாவித்திரியின் படைப்பும், மயிலனின் அழகிய கருத்தும் விளக்குகின்றன. நெடுமாறனின் எழுத்தோவியம் அழகிய முறையில் உள்ளது.

கே. செல்லப்பா,
தெப்பத்தூர், சீகாழி.

ஃ ஃ ஃ

பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும் இவ்வேளையில், தங்கள் தலையங்கம் 'கல்வியின் ஏகபோகம்' அரசாங்கத்திற்கு சரியான அறிவுரையாக அமைந்துள்ளது. 'நட்சத்திரப் பேட்டி' புதுமையாகவும், நேரில் காண்பது போலவும் அமைந்துள்ளது. உண்மைதானென்றாலும் வாரா வாரம் படவிமரிசனம் வெளியிடமாட்டேன் என்கிறீர்களே! பல படங்கள் வெளிவந்தும்! 'வளரும் விஞ்ஞானம்' அறிவைப் பெருக்கும். அற்புத கருத்துக்கள் நிறைந்தது. தொடர்ந்து வெளியிடவும். அது சரி. விஞ்ஞானம் சரியா? விக்ஞானம் சரியா? உலகக் கதைகள் எந்த பத்திரிகையும் இதுவரையில் வெளியிட்டதில்லை. தங்கள் முயற்சிக்கு எமது பாராட்டுதல்கள்.

கே. என். கோவாடி உபாமானு.
கோயம்புத்தூர்.

ஃ ஃ ஃ

சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் வெளிவரும் 'நெஞ்சிலே பட்ட வடு' எனும் நாவலை பாத்திரங்களுடன் ஒன்றிப் படித்துவரும் அன்பர்களில் நானும் ஒருவன். ஆசிரியர் தெள்ளிய சுனைநீர்போல் ஒவ்வொருவரின் மன இயல்புகளைச் சுருதியாக வைத்துக் கதையை மிகவும் அழகாக எழுதியுள்ளார். பாத்திரங்களுடன் ஒன்றிப் படிப்பவர்களுக்குத்தான் இதன் அருமை தெரியும். இந்த வாரப்பதிப்பில் சுரேஷ் சந்திரன் 'சாந்தி, இது என் அக்காவின் பெயர்' எனும் வார்த்தைகள் என் நெஞ்சிலே ஒரு வடுவை உண்டாக்கிவிட்டது. அடுத்த வாரம் கதை முடியப் போகின்றதே என்பதை நினைத்த உடன், சற்று வருத்தம் ஏற்படுகின்றது. இக்கதை சிலருடைய வாழ்க்கையில் உண்மையாகவே நடக்கின்றன. மாதவியும் சுரேஷும் சந்திக்கும்பொழுது அக்காவின் நிலையை அடுத்த வாரத்தில்தான் பார்க்கவேண்டும். தமிழாக்கம் நன்றாக உள்ளது. கதாசிரியருக்கு எனது பாராட்டுக்கள். இதையொத்த கதைகளே சுதேசமித்திரனில் அமையவேண்டுமென்பது என்போன்றோரின் விருப்பம்.

கா. சூரியராஜ்.
கொண்விடம்.

# அரசியல் துக்கடா...

உணவு நிலைமை; மத்ய ராஜ்ய மந்திரிகள் கூட்டு ஆலோசனை.

—செய்தித் தலைப்புகள்.

உணவு நிலைமை பற்றி கூட்டு ஆலோசனையின் விளைவாகப் பொது மக்களுக்குச் 'சாத'(க)மான 'ரஸ'மான நிலைமை ஏற்பட 'மோர்' சூழ்நிலை உண்டாகப் பிரார்த்திக்கிறோம்.

ஃ ஃ ஃ

பாகிஸ்தானின் தலைநகரம் கராச்சியிலிருந்து மாற்றப்படும்.

—லாகூர் செய்தி.

பாகிஸ்தானில் 'துக்ளக் ஆட்சி' நடக்கிறதோ என்ற சந்தேகம் இப்போது பலமாகிறது!

ஃ ஃ ஃ

கோளா பற்றிய வட்ட மேஜை மகாநாட்டுக்கு வர எனக்குச் சிறிதும் ஆட்சேபமில்லை. ஆனால் உருப்படியான பலன் கிட்டுமா என்பதுதான் சந்தேகம்.

—ஸ்ரீமதி இந்திரா காந்தி.

வட்டமேஜை மகாநாடுகளின் பலன் என்றுமே வட்டவடிவமான 'பூஜ்யம்' தான். இதில் சந்தேகம் வரக் காரணமே இல்லை.

ஃ ஃ ஃ

டிராபிக் போலீஸ்காரர்கள் தொகையை அதிகரித்தால்தான் விபத்துக்களைத் தடுக்க முடியும் என்று டிராபிக் சப் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது.

—ஒரு செய்தி.

இதனால் டிராபிக் போலீஸ்காரர்களிடையே விபத்துக்கள் அதிகரிக்கலாம்.

ஃ ஃ ஃ

ஆரம்பப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும்.

—ஒரு பிரசங்கி

அரசாங்கம் ஏற்று நடத்தும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், அரசியலில் ஈடுபட்டுக் குட்டிச் சுவராவதற்கா என்று கேட்கிறார் ஒரு அதிகப் பிரசங்கி.

நூற்றுப் பன்னிரண்டு கெஜட் அதிகாரிகள்மீது லஞ்ச ஊழல், ஒழுங்கீன நடத்தை போன்ற குற்றம் சாட்டிக் கிழக்குப் பாகிஸ்தான் அரசாங்கம் அவர்களை வேலையிலிருந்து நீக்கியுள்ளது. இந்த அதிகாரிகளின் பெயர்கள் கிழக்கு பாகிஸ்தான் கெஜட்டில் இடம் பெற்றுள்ளன.

—டாக்கா செய்தி.

கெஜட் 'பதவியை' இழந்தாலும் அந்த அதிகாரிகளின் பெயர்கள் கெஜட் 'பதிவை' இழக்கவில்லை பாருங்கள்!

ஃ ஃ ஃ

விளையாட்டு அபிவிருத்திக்காக இரண்டு கோடி ரூபாய் செலவழிக்கப்படும் என்று யூனியன் கல்வி மந்திரி ஸ்ரீ ஸ்ரீமாலி அறிவித்துள்ளார்.

—மவுண்ட் அபு செய்தி.

'பொதுமக்கள் தரும் வரிப் பணத்தை வைத்துக்கொண்டு சர்க்கார் விளையாடுகிறார்களா என்ன?' என்று விளையாட்டுக்காகவும் விளையாடியறியாத ஒருவர் கேட்கிறார்.

ஃ ஃ ஃ

ஜேப்படி செய்ததாக டைகர் ஆறுமுகம் என்பவன் கையும் களவுமாகப் பிடிபட்டான்.

—செய்தி.

என்ன செய்கிறது? 'புலிக்கும் புல் தடுக்கும்' என்ற வசனத்தின் பொருள் நமக்கு இப்போதுதான் புரிகிறது!

ஃ ஃ ஃ

அமைச்சர் தந்த வாக்குறுதிகளுக்கு விரோதமாகச் சிறிய வியாபாரிகளையும் விற்பனை வரி செலுத்தும்படி அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள் என்று 'அழுகும் பொருள் வியாபாரிகள் சங்கம்' புகார் செய்துள்ளது.

—சென்னை செய்தி.

அதாவது சர்க்கார் 'அழுவல் அடிக்கிறது' என்று சொல்கிறார்கள்!

# இலங்கை லிகிதம்

★

இலங்கைப் பார்லிமெண்டில் தமக்கென ஒரு தனி இடத்தைத் தேடிக் கொண்டிருப்பவரும் தமிழ் பேசும் மக்களின் தன்மானத்தைக் காக்கப் பார்லிமெண்டில் சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் சங்கநாதம் செய்து வந்திருப்பவருமான திரு. ஸி. சுந்தரலிங்கம் எம். பி. தமது பார்லிமெண்ட் ஸ்தானத்தைத் துறந்து விடவும் அரசியல் துறவறம் பூண்டுவிடவும் தீர்மானித்திருப்பதாக அறிவித்திருக்கிறார். வவுனியா நகரசபைத் தேர்தலில் அவருக்கு ஏற்பட்ட படுதோல்விதான் அவரது இந்தத் தீர்மானத்துக்குக் காரணமாகும். சென்ற வாரம் வவுனியா பட்டின சபைக்குத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தல் ஒரு சாதாரண ஸ்தலஸ்தாபனத் தேர்தலைப் போல இல்லாமல் அதிமுக்கியமான அரசியல் பிரச்னைகளை அடிப்படையாக வைத்து நடைபெற்றது. ஈழத் தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சி கோருவதைப்போல சமஷ்டி ஆட்சி முறையை விரும்புகிறார்களா? அல்லது தனித் தமிழ் ராஜ்யத்தைக் கோருகிறார்களா? இதுவுமின்றேல் தற்போதைய ஒற்றையாட்சி முறையிலேயே திருப்தியடைந்திருக்கிறார்களா? என்பதை அறிய சர்வஜன வாக்கெடுப்பு நடத்திப் பார்ப்பதைப் போன்ற முறையில் இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்நாட்டு ஸ்தலஸ்தாபனத் தேர்தலில் இவ்வளவு தெளிவான அரசியல் பிரச்னைகளுடன் நடைபெற்ற முதலாவது தேர்தல் இதுவேயாகும்.

தமிழர்களும் சிங்களவர்களும் சேர்ந்து இனி வாழ முடியாதென்ற நிலைமை ஏற்பட்டு விட்டதாயும் தமிழர் மானம் மரியாதையுடன் வாழ வேண்டுமாயின், தனி ராஜ்யம் ஏற்படுத்திக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லையென்றும் சொல்லி திரு. சுந்தரலிங்கம் பட்டின சபையின் மொத்தம் ஆறு வார்டுகளிலே மூன்று வார்டுகளில் அபேட்சகராக நின்றார். அந்த மூன்று வார்டுகளிலும் மக்கள் தம்மை வெற்றி பெறச்செய்யாவிட்டால், தமது கொள்கையை மக்கள் ஆதரிக்கவில்லையெனத் தீர்மானித்து பார்லிமெண்டு ஸ்தானத்தைக்கூடத் துறந்துவிடப் போவதாக அவர் அறிவித்திருந்தார். அதேபோல தமிழரசுக் கட்சியும் தனது சமஷ்டி ஆட்சி முறைக் கொள்கையை மக்கள் முன் வைத்து தேர்தலில் போட்டியிட்டது. தேர்தல் முடிவையறிய நாட்டு மக்கள் அனைவருமே விசேஷ ஆர்வம் காட்டினார்கள். திரு. சுந்திரலிங்கத்தை அவர் அபேட்சகராக நின்ற மூன்று வார்டுகளிலும் வாக்காளர்கள் படுதோல்வியடையச் செய்து, தனித் தமிழ் ராஜ்யத்துக்கு தங்களது கடும் எதிர்ப்பை ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொண்டு விட்டார்கள். இரண்டு வார்டுகளில் தமிழரசுக்



அண்மையில் திரிகோணமலையில் நடந்த அகில இலங்கை இசை விழாவில் எஸ் யோகநாதன் சிறப்பாக மயில் நடனம் ஆடிப் பாராட்டுப் பெற்றார்

கட்சி நிர்வாகிகளும் ஒரு வார்டில் சாதாரண தமிழரசுக் கட்சி அங்கத்தினரும் மற்றும் இரண்டு வார்டுகளில் தமிழரசுக் கட்சி அனுதாபிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆக மொத்தம் ஆறு வார்டுகளிலே ஐந்து ஸ்தானங்கள் தமிழரசுக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களுக்கும் கிடைத்தது. ஆறுவதாகத் தெரிவு செய்யப்பட்டது ஒரு முஸ்லிம் அங்கத்தினர். அவர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவரல்லவென்றாலும் இத்தொகுதியிலும் திரு. சுந்தரலிங்கம் தோல்வியடைந்தது தனித் தமிழ் ராஜ்யக் கோரிக்கையை அந்த வார்டு வாக்காளர்களும் ஆதரிக்கத் தயாரில்லையென்பதை எடுத்துக் காட்டிவிட்டது. இந்தத் தேர்தல் தமிழரசுக் கட்சிக்கு ஒரு மிகப் பெரிய வெற்றியென்று ராஜ்ய வட்டாரங்கள் வர்ணிக்கின்றன. தேர்தல் முடிவில் திரு. சுந்தரலிங்கம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் வவுனியா மக்கள் தங்களது தீர்ப்பைத் தெளிவாக வெளியிட்டுவிட்டார்களென்றும் ஆகவே, தாம் தமது பார்லிமெண்டு ஸ்தானத்தைக் காலி செய்வதுடன் அரசியலிலிருந்தும் ஓய்வு பெற்றுக்கொள்ளப் போவதாயும் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இதைப்பற்றி வீரகேசரிப் பத்திரிகை எழுதியுள்ள ஒரு தலையங்கத்தில், ஒரு ஸ்தலஸ்தாபனத் தேர்தலில் தோற்றுவிட்ட காரணத்துக்காக திரு. சுந்தரலிங்கம் ஏன் தமது பார்லிமெண்ட் ஸ்தானத்தை துறக்கவேண்டுமென்பது புரியவில்லையென்றும் மக்கள் விருப்பத்தை அனுசரித்து அவர்களுக்குச் சேவை செய்வதே உண்மையான தலைவர்களின் கடமையென்றும் ஆகவே திரு. சுந்தரலிங்கம் வவுனியா மக்களின் கொள்கையை அனுசரித்துப் பார்லிமெண்டில் சேவை செய்வதே சிறந்த முடிவென்றும் கூறியிருக்கிறது. ஸ்ரீ சுந்தரலிங்கம் பார்லிமெண்ட் ஸ்தானத்தைத் துறப்பது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல; நாட்டுக்கே பெரு நஷ்டமென்பதைச் சுட்டிக்காட்டி அவர் தமது தீர்மானத்தை புனராலோசனை செய்யவேண்டுமென்றும் வீரகேசரி கேட்டுக்கொண்டிருக்கிறது.

## பத்து வருடத் திட்டம்

இலங்கை மந்திரிசபை நியமித்த தேசீய நிர்மாணத் திட்டக் கமிட்டி சென்ற வாரம் பத்து வருட நிர்மாணத் திட்டம் அடங்கிய ஒரு விரிவான அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறது. இந்நாடு சுதந்திரமடைந்த பின்னர் நாட்டின் பொருள் வளத்தையும் தேசீய வருமானத்தையும் பெருக்க இவ்வளவு விரிவானதொரு திட்டம் தயாரித்து வெளியிடப்படுவது இதுவே முதல் முறையாகும். அடுத்த பத்து வருடங்களுக்கிடையில் பல்வேறு தொழில் முயற்சிகளிலும் மொத்தம் 1360 கோடி ரூபாய் தேவைப்படுமென்றும் இதில் 61 சதவிகிதம் அரசாங்கத்திடமிருந்தும் பாக்கி பொதுஜனங்களிடமிருந்தும் வரவேண்டுமென்றும் உத்தேசித்திருக்கிறார்கள். பொதுஜனங்களிடம் சேமிப்பு மனப்பான்மையை அதிகரிக்க லோகநாதன் திட்டத்தை திட்டக் கமிட்டி ஏற்றுக்கொண்டிருக்கிறது. லோகநாதன் திட்டமென்பது உண்மையான ஜனநாயக சோஷலிஸப் பொருளாதாரக் கட்டுக்கோப்புக்கு வழி வகுப்பதாகும். சகல தொழில்களையும் தேசீய மயமாக்குவது ஜனநாயகத்தை வேரறுக்கவும் சர்வாதிகாரத்துக்கு வித்திடவும்தான் வழிவகுக்குமென்றும் தேச நிர்மாணத்தில் பொதுஜனங்களுக்கும் போதிய பங்கிருக்கவேண்டுமென்றும் கூறுகிறது லோகநாதன் திட்டம். இதற்கு வழி செய்வதற்காக அபிவிருத்தி சேம நிதி பாங்க் ஒன்றை ஏற்படுத்தவும் அதில் பொதுஜனங்கள் பணம் சேமிக்கவும் அந்த சேமிப்புகளைப் பல தொழில்களிலும் முதலீடு செய்து மக்களுக்குப் பங்குகள் வழங்கவும் இத்திட்டம் வழி செய்கிறது. இந்த திட்டத்தை நிர்மாணக் கமிட்டியேற்றுக் கொண்டிருக்கிறது. பத்து வருடத் திட்டம் அமுல் நடந்து முடிந்தால் அநேகம் பொருள்களில் இலங்கை சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியுமென்றும் சுமார் 14 லட்சம் பேர்களுக்குப் புதிதாக வேலை வாய்ப்புகள் கிடைக்குமென்றும் திட்டக் கமிட்டி கூறுகிறது.

## சமஷ்டியாட்சி உதயம் நெருங்கி விட்டது.

மட்டக்களப்பு பார்லிமெண்ட் அங்கத்தினரான திரு. ராஜதுரை சென்ற வாரம் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபோது தமிழ் மக்களின் மொழியுரிமையும் அரசியல் உரிமைகளும் பறிக்கப்பட்டு அவர்கள் அனாதைகளைப்போன்ற நிலைமைக்கு உட்படுத்தப்பட்டதற்கு இன்றைய ஒற்றையாட்சி முறையே முக்கியக் காரணமென்றும் அந்த ஒற்றையாட்சி முறை தவிடுபொடியாகி சமஷ்டியாட்சிமுறை தோன்றும் காலம் நெருங்கிவிட்டதென்றும் முழங்கினார். தொடர்ந்து பேசுகையில், தமிழ் மக்களுக்கு அடுத்தடுத்துத் தீங்கிழைத்துவரும் இன்றைய ஆட்சி முறை ஆட்டம் கொடுத்துவிட்டதைத் தெளிவாகக் காணமுடிகிறதென்றும் சிறுபான்மை மக்களது உரிமைகளை மதியாத எந்த ஆட்சியும் நிலைக்க முடியாதென்றும் அஹிம்சா அடிப்படையில் பெரியதொரு போராட்டத்தை நடத்தவேண்டிய காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறதென்றும் அந்தப் போராட்டமே தமிழ் மக்களின் கடைசிப் போராட்டமாக இருக்குமாதலால், தமிழ் மக்கள் அதற்குத் தயாராயிருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## வகுப்புக் கலக ஞாபகார்த்த தினம்

சென்ற வருட ஜூன் மாதம் ஐந்தாம் தேதி வகுப்புக் கலகத்தை யொட்டி தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள். அதே தினத்தில்தான் கொழும்பு போன்ற பல நகரங்களிலிருந்தும் கலகத்துக்குப் பயந்த பல ஆயிரம் தமிழ் மக்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டார்கள். இந்தச் சோகம் நிறைந்த தினத்தின் ஞாபகார்த்த தினத்தை தமிழர் விடுதலை தினமாக தமிழ் மக்கள் நாட்டின் பல பகுதிகளிலும் அனுஷ்டித்தனர். இதையொட்டி நடைபெற்ற கூட்டங்களில் தமிழர் முன்னுள்ள பல பிரச்னைகளும் தெளிவாக ஆராயப்பட்டன. அதோடு அடுத்த போராட்டத்துக்குத் தமிழ் மக்கள் தயாராக வேண்டுமென்று தலைவர்கள் கேட்டுக்கொண்டார்கள். திருகோணமலையில் தமிழரசுக் கட்சித் தலைவரான திரு. ராஜவரோதயம் பேசியபொழுது தமிழினத்தின் விடுதலைக்காக சகல தியாகங்களையும் செய்ய தமிழ் மக்கள் தயங்காமல் முன்வரவேண்டுமென்று கூறினார்.



பிச்சைக்காரன் —'அம்மணி ஐயர் இட்டு உண்'

வீட்டுக்கார அம்மாள்:—'அப்பனே! ஏற்பது இகழ்ச்சி'




## 'இலங்கேஸ்வரன்' 200-வது தினம்

தி. நகர் ஆர்ட்ஸ் அகடமி சார்பில் நேஷனல் தியேட்டர்ஸாரின் 'இலங்கேஸ்வரன்' நாடகத்தின் 200-வது தின விழா ராமராவ் கலா மண்டபத்தில் ஜூன் 14-ந்தேதி விமரிசையாக நடைபெற்றது. அதற்கு திராவிட முன்னேற்ற கழகத் தலைவரும், சட்டசபை உறுப்பினருமான ஸ்ரீ ஸி. என். அண்ணாதுரை தலைமை வகித்தார்.

'ராவணேஸ்வர'னாகத் தோன்றும் மனோகர் நடிப்பில் நல்ல மெருகேறியிருப்பதை தலைவர் உட்பட எல்லோருமே பாராட்டினார்கள்.

அந்நாடகக் குழுவில் பணியாற்றி வரும் சீன் மேஸ்திரி ஸ்ரீ குமரன் நாயருக்கு ஸ்ரீ மனோகரும், அவரது குழுவினர்களும் ரூ. 1001 பண முடிப்பு அளித்து கௌரவித்தார்கள். மற்றும் அக்குழுவைச் சேர்ந்த ஸ்ரீமான்கள் சோமநாதன், பச்சையப்பன், தஞ்சை பாலு, சீதாராமன், சத்தார் சாகிப், கணபதி ஆகியவர்களுக்கு வெள்ளிக் கோப்பைகள் வழங்கப்பட்டன.

ஸ்ரீ சாயி கான சபை, பாரத் பைன் ஆர்ட்ஸ் முதலிய பல்வேறு சபைகளின் சார்பாக ஸ்ரீ மனோகருக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன. சினிமாப் புகழ் ஸ்ரீ கே. சாரங்கபாணியும் அவருக்கு மாலை போட்டு, அவரது நடிப்புத் திறனைப் புகழ்ந்தார். ஸ்ரீ கணேஷ் மூவிடோன் அதிபர் ஸ்ரீ சுந்தர்ராவ் நட்கர்ணி அவருக்கு வெள்ளிக் கோப்பையொன்றை பரிசளித்தார்.

ஸ்ரீ அண்ணாதுரை, ஸ்ரீ மனோகரின் நடிப்புப் புலமையை வெகுவாகப் போற்றிப் பேசுகையில், 'இலங்கேஸ்வரன்' நாடகத்தை மேன்மேலும் நடத்திக்கொண்டு போவதைவிட மக்களின் அன்றாட வாழ்க்கையைச் சித்தரிக்கும் சமூக நாடகங்களை நடத்தி ஸ்ரீ மனோகர் இன்னும் நல்ல பெயரும், புகழும் சம்பாதிக்க வேண்டுமென விரும்பினார். சினிமாத்துறையில் அவர் முன்னேற்றமடைய தம்மாலான உதவியைச் சமயம் வாய்க்கும்போது செய்வதாகவும் ஸ்ரீ அண்ணாதுரை குறிப்பிட்டார். அந்நாடகத்தில் இராமாயண காட்சிகள் அவ்வளவு தேவையில்லையென்றும் அவர் அபிப்பிராயப்பட்டார்.

ஸ்ரீ மனோகர் சாதாரணமாக மிக கனிவுடன் பழகக்கூடியவர். அவர் எப்படி ராவணனாக நடிக்க முடியுமென நான் சந்தேகப்பட்டதுண்டு. ஆனால், முற்றிலும் முரணான இயல்புடைய குண பாத்திரங்களை ஏற்று திறம்பட நடிப்பதில்தான் உண்மைக் கலையழகு இருக்கிறது என்பதை அவர் நிரூபித்துள்ளார் என்றும் ஸ்ரீ அண்ணாதுரை புகழ்ந்தார்.




*அப்பா! பழைய பத்திரிகை ஒண்ணுலே உன் பேர் போட்டிருக்கு அப்பா! இப்பதான் பார்த்தேன்!*

*என் பேர் போட்டிருக்கா! எந்தப் பத்திரிகையிலேடா?*

*அதாம்பா! உன் கல்யாணப் பத்திரிகையிலே!*

? ? ?

## வாழ்வது உனக்காக

ஸ்ரீ ஆர். எஸ். மணி எழுதிய 'வாழ்வது உனக்காக' எனும் தமிழ் சமூக நாடகத்தை திருவல்லிக்கேணி அமெச்சூர் ஆர்ட்ஸ் குழுவினர் அவர்களது முதலாண்டு விழாவையொட்டி திருவல்லிக்கேணி எஸ். கே. டி. கலா மண்டபத்தில் சமீபத்தில் நடித்தனர்.

அதில் 'வேணு'வாக வந்த பி. கிருஷ்ணமூர்த்தியின் நடிப்பு ஆரம்பம் முதல் கடைசிவரை மிகவும் முறுக்கேறியிருந்தது. பேச்சு அவ்வளவாக இயற்கையாக இல்லை.

'கணபதி பிள்ளை' எஸ். எஸ். மணி, 'சிவக்கொழுந்து' ஆர். எஸ். மணி, 'சுப்பையா பிள்ளை' பரணி கிருஷ்ணமூர்த்தி, 'கந்தப்பன்' வி. நாகராஜன் முதலானவர்கள் சுமாராக நடித்தனர். குமாரிகள் பத்மாவும், காந்திமதியும் பரவாயில்லை.

'ஹிந்து' 'ஸ்ரீ பார்த்தா' நாடகத்துக்கு தலைமை தாங்கி நடிகர்களைப் பாராட்டிப் பேசினார்.

—ஸஞ்சாரி.

## அட்டைப்பட விளக்கம்

*

'அஞ்சன வண்ணர்தான் அடித்துகள் கதுவா முன்னம், வஞ்சிபோலிடையாள் முன்னை வண்ணத்தளாகி நின்றாள்' என கம்பர்பிரான் மெய்சிலிர்க்கின்றார். மையைப் போன்ற வண்ணத்தையுடைய ராமபிரானின் திருவடியிலிருந்து கிளம்பிய தூள் பட்ட மாத்திரத்திலேயே கல்லுருவாயிருந்த அகலிகை பெண்ணுருப் பெற்றாள். அதுவும் எப்படி? 'முன்னை வண்ணத்தளாகி நின்றாள்'-கௌதமன் சாபம் ஏற்படு முன்பு அவள் உடல் வண்ணம் எப்படி அழகுடையதாய், தாய நிலையுடையதாய் இருந்ததோ அந்த தாய்மையும் அழகும் நிரம்பப் பெற்று எழுந்தாள்.

அப்படி பரிசுத்தப்பட்டு அவள் எழுந்து ராமன் அடிபணிந்து விசுவாமித்திரன் முதலியோருடைய ஆசி பெறும் படத்தை ஓவியர் ராகவன் மூவர்ணச் சித்திரமாக நமது அட்டைக்கு அமைத்திருக்கிறார்.

## 16

### கண்கள் கலந்தன

எங்கு பார்த்தாலும் வண்ண விளக்குகளின் தோரணங்கள், வனிதையர்களின் கூட்டம், நறுமலர்களின் மணம் என்று அந்தப் பூங்கா இன்பத்தின் உறைவிடமாக இருந்தது. யசோதாவின் பிறந்த நாளைக்கென்று ஆண்களின் கூட்டம் அதிகமாக வரவில்லை. காரியாலய நண்பர்






களில் முக்கியஸ்தர்களாகப் பத்துப் பேர்கள் மட்டுமே வந்திருப்பார்கள். மங்களகரமாகப் பூவும், புன்னகையோடும் யசோதாவின் தோழிகள் சிரித்துச் சிரித்துப் பேசி மகிழ்ந்தவாறு உட்கார்ந்திருந்தார்கள்.

கீழ்த்திசையில் நிலவு பால் கதிரைப் பரப்பியவாறு மெள்ள மெள்ள வானத்தின் மேல் ஏறி வந்துகொண்டிருந்தது. சிற்றுண்டி மேஜைகளின் மீது அழகிய வெள்ளை விரிப்புகள், அதன் மீது ரோஜா மலர்களைத் தாங்கிய பூ ஜாடிகள் வைக்கப்பட்டிருந்தன. ஊதுவர்த்தியின் புகை சுருள் சுருளாக எழும்பி அங்கு ஒரு மயக்க உலகத்தைச் சிருஷ்டித்துக்கொண்டிருந்தது.

யசோதாவும், லதாவும் ஒரு மேஜையின் அருகில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். யசோதாவுக்கு அன்று அலங்காரம் மிகவும் எடுப்பாக இருந்தது. ராஜாத்தி தன் கை வண்ணம் பூராவையும் உபயோகித்திருந்தாள். புசு புசு வென்று கட்டுக்கடங்காமல் பறக்கும் கூந்தலை வாரி உயரக் கொண்டை போட்டு அதைச் சுற்றி கதம்பமும், சம்பங்கியும், சண்பகமும் கலந்த சரத்தை வளைத்துச் சுற்றி இருந்தாள். கொண்டையின் நடுவில் வெள்ளைக் கற்களும், பச்சைக் கற்களும் பதித்த தங்கச் சாமந்திப் புஷ்பத்தைத் திருகி இருந்தாள். கருத்த நீலத்தில் ஜரிகைக் கட்டம் போட்ட புடவை. அதில் மின்னும் ஜரிகைப் பூக்கள்.

அவளுக்குஅருகில் எளிமையே உருவமாக லதா உட்கார்ந்திருந்தது யசோதாவின் தோற்றத்தை மிகைப்படுத்திக் காட்டியது.

லதா காரிலிருந்து இறங்கியதும் கை வளையல்கள் குலுங்க வாசலுக்கு ஓடிவந்தாள்யசோதா. காரின் கதவைத் திறந்து கொண்டு முதலில் பாஸ்கரன் இறங்குவான் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இரு



ஜோடி விழிகளும் ஒருகணம் ஒன்றை யொன்று கலந்து உறவாடின. காலத்தின் அளவு ஒரு கணம்தான். ஆனால், அவை அந்தக் குறுகிய நாழிகையை எவ்வளவு அழகாகப் பயன்படுத்திக் கொண்டன? பாஸ்கரன் கம்பீரமாகச் சிரித்தான். யசோதா முறுவலித்தவாறு, 'வாருங்கள், லதா வரவில்லையா?' என்று கேட்டாள்.

'நான் வராமல் உன் பிறந்த நாளா? நான் வந்தது உனக்கு என்னவோபோல் இருக்கிறதாக்கும்! ஏகாந்தம், தனிமை என்று ஏதாவது இருவரும் திட்டம் போட்டிருப்பீர்கள்.'

யசோதாவின் கையில் ஏதாவது மூடி இருந்திருந்தால் லதாவின் வாயைப் 'பட்'டென்று மூடி இருப்பாள். கேலி செய்ய இடம், காலம் எதையுமே அவள் யோசிப்பது கிடையாது. முகத்தைச் சுளித்து ஒரு நொடிப்பு நொடித்து விட்டுத் தோழியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றாள் அவள்.

'அடி அசடே! நல்ல வேளை! காரை நிறுத்தியதும், என் அத்தான் உன்னைக் கவனித்தவாறு உள்ளே போய்விட்டார். இல்லாவிட்டால் இவ்வளவு நேரம் உன் பேத்தலுக்கு அர்த்தம் விளங்கியிருக்கும்...'

'ஆமாம்...நீ கார் அனுப்பினால் தான் நான் வருவேன் என்று சொல்லியிருந்தேனா? வழக்கம் போல நடராஜா சர்வீஸ் எங்கே போயிற்று? இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது நம் டவுன் பஸ்.'

'அத்தான் காரை எடுத்துக் கொண்டு போனதே எனக்குத் தெரியாது. எல்லாம் உனக்காகத் தான்...'

'எனக்காகவா?'

'ஆமாம்டி ஆமாம்...'

'எனக்கு ஏன் அவர் கார் ஓட்ட வேண்டும்?'

'எனக்கென்ன தெரியும்? இதெல்லாம் ஒருத்தருக் கொருத்தர் சொல்லித் தெரிகிற விஷயமில்லை...'

லதாவின் முகம் கோபத்தால் சிவந்தது. விருட்டென்று எழுந்து நின்று, 'யசோதா! எனக்கும், இந்தக் காதல் விவகாரத்துக்கும் வெகு தொலைவு. உன் கேலியை நிறுத்திக்கொள். வேறு ஏதாவது விஷயம் இருந்தால் பேசு. மிஸ்டர், பாலையா அநுவசியமாகப் பல்லை இளிக்கிறதற்கும், அடிக்கடி வீட்டுக்கு வருகிறதற்கும் எனக்குப் பொருள் விளங்காமல் இருந்தது. இப்பொழுது விளங்கிவிட்டது...சே... இளம்பெண்களைப் பார்த்தால் இப்படிப் பல்லை இளித்துக் கொண்டு காதல் புரியவே ஒரு கோஷ்டி கிளம்பி இருக்கிறதே...' என்றாள்.

எழுந்து நின்று பிரசங்கம் புரியும் தோழியின் கைகளைப் பற்றி இழுத்துச் சோபாவில் உட்கார வைத்துக்கொண்டாள் யசோதா. மாடிப் படிகளில் ஏற முடியாமல் ரங்கம்மாள் பெருமூச்சு விட்டுக்கொண்டே ஏறி வந்தாள். அவள் கையில் பளபள வென்று மின்னும் நகைப் பெட்டி ஒன்று காணப்பட்டது. வெகு சுவாதீனமாக யசோதாவின் பக்கத்தில் உட்கார்ந்து, 'இதைப் போட்டுக்க கண்ணு! உன் பிறந்த நாளைக்கென்றே உன் அத்தான் வாங்கி வந்திருக்கான். உனக்குப் பிடிச்சிருக்கா பார்' என்று கூறி நகைப் பெட்டியைத் திறந்தாள்.

நகையைக் கையில் எடுத்து இப்படியும், அப்படியும் பார்த்து விட்டு லதா, 'அடேயப்பா! எத்தனை அழகாக இருக்கிறது? கல்யாணப் பெண் போட்டுக்கொள்கிறமாதிரி அல்லவா இருக்




வீட்டுக்காரர்.— ஓய்! நீர் கொடுக்க வேண்டிய வாடகையைக் கொடுத்துவிட்டு வீட்டைக் காலி பண்ணும் முதல்லே......

குடித்தனக்காரர்:— ஓய்! யோசித்துப் பேசுங்காணும்! நானும் இதுவரையில் எத்தனையோ வீடுகளில் குடித்தனம் இருந்திருக்கேன்... யாருமே "நீர் வாடகை பாக்கியைக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லே, வீட்டைக் காலி பண்ணுங்கோ"ன்னு தான் சொல்லியிருக்காங்களே தவிர வாடகையைக் கொடுத்துவிட்டு வீட்டைக் காலி பண்ணுன்னு ஒருத்தருமே சொன்னதில்லே...தெரியுமாங்காணும்......

! ! !

கிறது?! என்று கூறிக் குறும்புத்தனமாகச் சிரித்தாள்.

இதற்குள் கீழேயிருந்து இவர்களை அழைக்க செல்லப்பா மாடிக்கு வந்தான். தோழிகள் இருவரும் பேசிக்கொண்டே தோட்டத்துக்குள் சென்றார்கள்.

கோதையம்மாளுக்கு வீட்டை விட்டுக் கிளம்புகிறபோதே ஒரு ஆவல். எப்படியாவது பெரிய இடத்தில் நல்ல சிநேகிதமாகப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணம். ரங்கம்மாளைப் பார்த்துப் பேசிவிட வேண்டும் என்று அவனுடன் இருந்தவள் அந்தப் பக்கமாக வந்த ராஜாத்தியை அழைத்து ரங்கம்மாளின் இருப்பிடத்துக்கு அழைத்துப் போகச் சொன்னாள்.

வெளியே தோட்டத்தில் சிரிப்பும், கும்மாளமுமாக இருந்தது. பெரும்பாலும்கலாசாலை மாணவிகள் திரை உலகத்து அழகிகள் தோற்றுப் போகிறமாதிரி உடைகளும் நகைகளும் அணிந்து வந்திருந்தார்கள். பேச்சிலே ஒரு ஒய்யாரம், நடையிலே ஒரு தளுக்கு, சிரிப்பிலே ஒரு கவர்ச்சி என்று அங்கு வந்திருந்த ஆண்களின் கவனத்தைக் கவர முற்பட்டார்கள். செல்லப்பா இவர்களை அதிசயத்துடன் கவனித்தான். 'பெண்களின் முன்னேற்றம் இவ்வளவு தூரத்துக்கு வளர்ந்து விட்டதா? தத்தம் கணவனின் கருத்துக்கும், இன்பத்துக்குமே தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டிய பெண்கள் இப்படிப் பலரின் கவனப் பொருள்களாக ஏன் மலிந்து விட்டார்கள்?'

அந்த அப்பாவியின் மனதில் ஓடிய எண்ணங்கள் இவை. உள்ளே இரண்டு அம்மாக்களும் உட்கார்ந்து நெடுநாளாகப் பழகியவர்களைப்போல பேச ஆரம்பித்தார்கள். ரங்கம்மாள் தனக்குத் தம்பி வீட்டில் இருக்கும் சலுகை, அதிகாரம் முதலியவற்றை வெளிப்படுத்திக்கொள்ள விரும்பினாள். நொடிக்கொரு தரம் ராஜாத்தியை அழைத்து தலைக்கு மேலே இருக்கும் மின் விசிறியைச் சுழலவிடச் சொன்னாள். தவசுப்பிள்ளை பரமசிவத்துக்கு அன்று ஏகப்பட்ட அலுவல். கால்கள் ஓய்ந்து உட்கார்ந்திருப்பவனை விளித்துப் பலகாரமும், காப்பியும் கொண்டுவரச் சொன்னாள்.

'அதெல்லாம் வேண்டாம்மா. இன்னிக்கி சஷ்டி. நான் ஒரு வேளைக்கு மேல் சாப்பிடுகிறதில்லை...' கோதையம்மாள் கையை ஆட்டி கௌரவமாக மறுத்தாள்.

'ஆ...நம்ப வீட்டுக்கு வந்துட்டு வெறுமே போறதாவது? அதுவும் குழந்தைக்குப் பிறந்த நாள். பெரியவங்க நல்ல வாழ்த்தா செய்துட்டுப் போங்க. சீக்கிரம் அதுக்குக் கல்யாணம் ஆகணுங்க...'

'ஆகாம என்ன? அழகுக்குக் குறைச்சலா? அந்தஸ்துக்குக் குறைவா? ஜாம் ஜாம்னு நடந்து போகும்...'

'நகைகளை எட்டாயிரம் பத்தாயிரத்துக்கு எங்கிட்டே இருக்கு. எல்லாம் பழைய காலத்து நகைங்க. கல்லுக்கல்லா இருக்கு. அதுக்கு எந்தெந்தமாதிரி புது பாஷன் புடிக்குதோ செஞ்சுகட்டப் போவுது...'

ரங்கம்மாளின் பேச்சில் ஒரு திருப்பம் ஏற்படுவதைக் கோதையம்மாள் கவனித்தாள்.

'இதப் பாருங்க! இன்னிக்கிக் குழந்தை கழுத்திலே போட்டிருக்குதே அந்த அட்டிகை நான்தான் வாங்கிக் கொடுத்தேன். ஆறு நூறுக்கு மேல் ஆச்சுங்க. பணமா பெரிசு. யாருக்குச் செய்யப்போறேன்?...'

தவசுப்பிள்ளை கொண்டுவந்து வைத்த மலைவாழைப் பழங்களையும், மாம்பழங்களையும் வெறித்துப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள் கோதையம்மாள். பாஸ்கரனுக்கும், யசோதாவுக்கும் காதல் மலர்ந்து அது வளர்ந்து வருவதை அறியாதவளா அவள்? இந்தக் கூனி என்ன பேசுகிறாள்? கல்லுக் கல்லாக நகைகளாமே? பணம் காசுக்கு ஆசைப்பட்ட பெண்ணா யசோதா?

திரு திரு வென்று விழிக்கும் அவளைப் பார்த்து ரங்கம்மாள் பழங்களைச் சாப்பிடும்படி வற்புறுத்தினாள்.

'ஏய்! ராஜாத்தி!... மாம்பழத்தை அந்த அம்மா கடிச்சா திம்பாங்க? கத்தி கொண்டு வந்து துண்டம் போட்டு வை..'

ராஜாத்திக்குப் பதிலாக அருணாசலம் வந்து நின்றான்.

'என்னம்மா?'

'நான் உன்னையா கூப்பிட்டேன்? ஓம் பெண்ஜாதி எங்கே?...'

'குழந்தை கத்துது அம்மா வருவா. இப்ப என்ன வேலை செய்யணும்னு சொல்லுங்க...'

'அந்தக் குழந்தை எப்பத்தான் கத்தாம இருந்துது. சதா கத்தல் தான். யசோதாவுக்குத்தான் அதைப் பிடிச்சிருக்கு எனக்கு அந்த அழுமூஞ்சியைப் பிடிக்கலை போ...'

'கிடக்கு விடுங்க. எல்லாம் பிள்ளையும் நம்ப பிள்ளைமாதிரி ஆவுமா? அவர் வழியே தனி தான்!..'



அருணாசலம் இடுப்புத் தோற்பட்டை வளையத்தில் மாட்டியிருந்த பேனாக் கத்தியைத் திறந்து பழங்களின் தோலைச் சீவ ஆரம்பித்தான்.

அந்த வீட்டில் வேலைக்காரர்களுக்கு யசோதா கொடுத்து வந்த சலுகையினால் இப்படிக் கேலியாகவும், சிலேடையாகவும் பேசுகிறார்கள் என்பது ரங்கம்மாளின் அபிப்பிராயம். அருணாசலம் உண்மைக்குப் பயப்படுகிற ஆசாமியே தவிர, தகடுதத்தம் செய்கிற பேர்வழிகளுக்குத் தலை வணங்க மாட்டான். ராஜாத்தி அப்படி அல்ல. நன்மையும், தீமையும் கலந்தே உலக வாழ்க்கை இருக்கிறது. கசப்பும், இனிப்பும் வாழ்க்கையில் கலந்தே வரும் என்கிற உண்மையை அறிந்து கொண்டவள்.

அத்தையம்மாள் கூப்பிட்டவுடன் வராமல் போனால் அவர்கள் ஒரு நாடகம் ஆடித் தீர்த்து விடுவார்கள் என்பது அவளுக்குத் தெரிந்த விஷயம்.

ராஜாத்தி மாதவனை இடுப்பில் தூக்கிக்கொண்டு மேலாடை சரிய அவசரமாகக் கூடத்துக்கு வந்தாள். தைலத்தால் அபிஷேகம் செய்யப்பட்ட கிருஷ்ண விக்ரகத்தைப் போலிருந்தான் குழந்தை. அவன் கரிய நிறத்தை எடுத்துக் காட்ட வெள்ளை மல் சட்டையைப் போட்டிருந்தாள் ராஜாத்தி.

குழந்தையை வாரி அணைத்து முத்தமிட கோதையம்மாளின் மனம் விழைந்தது. பாஸ்கரனையும் லதாவையும் மிகச் சிறு வயதிலிருந்தே தாயும் தந்தையுமாக வளர்த்து வந்தவள். அவர்கள் இருவரும் பெரியவர்களாக வளர்ந்து விட்டார்கள். இனி அவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்து மக்கட் பேறு அடைவதைப் பார்த்து விட்டால் கோதையம்மாளின் ஆசைகள் அநேகமாகப் பூர்த்தியடைந்த மாதிரிதான். மாதவன் தாயின் இடுப்பில் இருந்தவாறு எல்லோரையும் பார்த்துச் சிரித்தான்.

'பாருங்க, பாருங்க. அம்மா பழம் சாப்பிடுகிறதைப் பார்த்துச் சிரிக்கிறான். பார்த்தீங்களா?' அருணாசலம் குழந்தையைப் பார்த்துக் களித்தவாறு கூறினான்.

'ஏம்ப்பா சிரிக்கமாட்டான்? எங்கேயோ நாட்டுப்புறத்திலே பிறந்து பங்களா வாசம் செய்ய வந்திருக்கானில்லே. நல்லா சிரிப்பான். இன்னும் கொஞ்ச நாள் போனால் என்னைப் பார்த்துக் கூட உன் மகன் சிரிக்கப்போகிறான். அதை வைக்கிற எடத்திலே வைக்கணும்'

ராஜாத்தியின் மலர்ந்த முகம் இதைக் கேட்டதும் சுண்டிப் போயிற்று. 'வயதான மனுஷி. ஆசைபாசங்கள் எல்லாம் குறைந்து, போகிற வழிக்குப் புண்ணியம் தேடிக்கொள்ள வேண்டிய காலம். அதைவிட்டுச் சதா பிறரைக் குற்றம் கூறுவதிலும், எதிலும் குறை காணுவதிலுமே காலத்தைச் செலவிடுகிறாளே. நல்ல அம்மாள்! அத்தைக்கும், மருமகளுக்கும் எத்தனை குண பேதம்' என்று உள்ளூரப் பொருமியவாறு நின்றிருந்தாள் அவள்.

வெளியே விருந்து முடிந்து எல்லோரும் கிளம்பி விட்டார்கள். லதாவுடன் கூடத்துக்கு வந்த யசோதா ராஜாத்தியின் இடுப்பிலிருந்த மாதவனை அப்படியே அள்ளி அணைத்து உச்சி முகர்ந்து அவன் கன்னங்களில் முத்தமிட்டாள்!

(தொடரும்)



# சாவித்திரி சதி



கே. ரகுபதி

ஐந்து நிமிடங்களுக்கு ஒரு முறை 'பாத் ரூமு'க்கு போய் முகம் கழுவிக் கொண்டு 'கர்ச்சீப்பி'னால் அழுத்தி அழுத்தித் துடைத்தபடியே இடத்துக்கு வந்து அமருவதும், பெருமூச்சு விடுவதுமாகப் பொழுதை ஓட்டினான் பாஸ்கரன்.

புல் பாண்ட்டும், ஸ்லாக் ஷர்டும் சலவை மடிப்பு கலையாமல் இருக்கிறதா என்று அடிக்கடி கவனித்தவண்ணமே கவலை பட்டுக்கொண்டிருந்தான் கண்ணன்.

தன்னுடைய 'திலீப் குமார் கிராப்' சுருள்கள் முன் நெற்றியில் வந்து விழுகிறதா என்பதை விநாடிக்கு ஒருதரம் சரிபார்த்தபடியே சிந்தனையில் ஆழ்ந்துபோயிருந்தான் சங்கரன்.

அழுக்கு வேஷ்டியும், ஒட்டுப் போட்ட சட்டையுமாக வரும் அய்யாச்சாமிகூட அன்று நல்ல சலவை வேட்டியும் புது சட்டையும் அணிந்து வந்திருந்தான். (வேஷ்டி லாண்டரியில் இரவல்; சட்டை ரெடிமேட் கடையில் வாங்கியது என்று அய்யாச்சாமியைப் பற்றி விமர்சனம் செய்தான் பாஸ்கரன்)

அது எப்படியோ? அன்று ஆபீஸ் முழுவதுமே தனிச் சோபையுடன் விளங்கியது. அனைவருடைய முகத்திலுமே ஒரு புத்தொளி வீசியது. சம்பள நாளாக இருக்கும் என இதற்குள் 'அனுபவம்' காரணமாய் ஊகித்திருப்பவர்கள் ஏமாற வேண்டியதுதான்.

லெட்ஜருக்குள் 'துப்பறியும் நாவல்' வைத்துக்கொண்டு படிக்கும் லட்சுமணன் அன்று அதை அடியோடு மறந்துவிட்டு, சுறுசுறுப்பாக வேலையைப் பார்த்தான்.

சக குமாஸ்தாக்களிடம் விரசமாக ஏதாவது பேசியபடியே பொழுதைத் தள்ளும் சாமிநாதன், அன்று துளிக் கூட சப்தம் இராமல் வேலை செய்தான்.

முன்னூற்றைம்பது ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு, மத்தியான டிபனை முக்காலணா டீ வாங்கிக் குடிக்க மூன்று நாழிகை யோசனை செய்யும் மானேஜர் மாணிக்கசாமி, அன்று துளிக்கூட

யோசியாமல் பியூனிடம் ஒரு ரூபாயை வீசி எறிந்தார்! டைபிஸ்ட் தர்மலிங்கம், தன் பக்கத்தில் புதிதாக போடப்பட்ட டேபிளையும் புது டைப் மிஷினையும் ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறை வியப்புடன் பார்ப்பதும், தனக்குள் சிரித்துக்கொண்டு மகிழ்வதுமாகப் பொழுதை ஓட்டினன்.

இப்படி, வழக்கமாக 'சந்தைக் கடை'யாக இருக்கும் ஆபீஸ் இந்தப் புதிய மாறுதலுடன், சிந்தனையாளர்கள் நிரம்பிய இடமாக மாறியதற்கான காரணம் என்னவாக இருக்கும்?

முதல் நாள் மாலை, 'சென்னையில் இருக்கும் கம்பெனி டைரக்டரிடமிருந்து வந்த அவசரக் கடிதத்தைப் படித்துவிட்டு மானேஜர் மாணிக்கசாமி தன் ஊழியர்களிடம் தெரிவித்த தகவல்தான் காரணம்:

'இந்தாப்பா பாஸ்கரன், கண்ணன், ஐயாசாமி! எல்லாருக்கும்தான் சொல்கிறேன், புது டைபிஸ்ட் நாளைக்கு வருகிறாராம். தம்புசாமிக்கு வேலை அதிகமாயிருக்கிறது என்று நான் எழுதியதற்காக டைரக்டர் அங்கிருந்தே ஒருவரை 'அப்பாயிண்ட்' பண்ணி அனுப்புகிறாராம். யாரோ மிஸ் சாவித்ரியாம்.'

'ஆ'வென்று வாய் பிளந்துவிட்டது அனைவருக்கும்.

'லேடி டைபிஸ்ட் அப்பா. என்ன எல்லாரும் திகைக்கிறீர்கள்? இத்தனை காலமாக இல்லாமல் முதல்முதலாக ஒரு பெண் இந்த ஆபீஸில் உத்தியோகம் பார்க்க வருகிறாள்'—விளக்கினார் மாணிக்கசாமி.

'ஸாருக்கு இப்பவே பால்யம் திரும்பிவிட்டது' என்றான் குறும்புக்கார கணேசன்.

மாணிக்கசாமி தன் பொய்ப் பல்செட் தெரிய சிரித்தார். 'எனக்கென்னப்பா, வயசானவன்'. சொல்லும்போதே அவர் உடல் நெளிந்தது!

'மிஸ். சாவித்ரி என்பதினாலே கல்யாணம் ஆகாதவளாய்த்தான் இருப்பாள்'—பரமசிவம் ஊகித்துச் சொன்னான்.

'அதனாலே சின்னப் பெண்ணாக இருப்பாள் என்று கனவு காணாதே! இந்தக் காலத்தில்தான் எத்தனை வயதுவரை மிஸ் என்று ஒரு 'லிமிட்' இல்லையே!'—அனுபவபூர்வமாகச் சொன்னான் அய்யாச்சாமி.

'எல்லாம் நாளைக்குத் தெரிந்துவிடுகிறது' என்று முடிவு சொன்னான் பாஸ்கரன்.

அதன் பலன்தான்—

'டைரக்டர் விஜயம்' செய்யப்படும் போதுகூடக் கடைப்பிடிக்கப்படாத 'டிஸிப்லின்' ஆபீஸில் இன்று அமுல் நடந்தது.

தினமும் 'லேட்'டாக வரும் வாடிக்கையாளர்கள்கூட குறித்த நேரத்தில் வந்துவிட்டார்கள்!

அநாவசிய சப்தம் இல்லை! அவரவர் இடத்தில் அமர்ந்து வரப்போகும் வனிதையைக் குறித்து அவரவருக்குத் தோன்றிய கற்பனையைச் செய்து கொண்டிருந்தார்கள்!

நடுப்பகலுக்குமேல்—

வந்து சேர்ந்தாள் மிஸ். சாவித்ரி!





பல ஜோடிக் கண்கள் ஒரேயடியாக அவளை உற்று நோக்க, எதையுமே லட்சியம் செய்யாதவளாக பல நாள் பழகியவள்மாதிரி மானேஜரின் அறைக்குள் நுழைந்தாள் அவள்.

எதிர்பார்த்ததற்கும் மேலாக அழகி தான். நவநாகரீகமாக உடையணிந்திருந்தாள்.

மாணிக்கசாமி அவளுடன் ஆபீஸ் ஹாலுக்கு வந்தார்.

'தர்மலிங்கம்! இவர்தான் புது டைபிஸ்ட். ஆபீஸ் ரொட்டீனை சொல்லிக் கொடுங்கள்.'

மானேஜர் உள்ளே போனதும்—

கசமுசவென்று விமர்சனங்கள் தொடங்கின. தர்மலிங்கம் குழைந்து குழைந்து ஒவ்வொரு கடிதம் டைப் செய்ய வேண்டிய முறையையும் எடுத்துச் சொல்ல, சாவித்ரி வேலையை ஆரம்பித்தாள்.

'இனிமேல்ஆபீஸ்கொஞ்சம்குளிர்ச்சியாக இருக்கும்' என்றான் கணேசன்.



[illegible] அடிச்சதுடா யோகம்' என்று பொருமையுடன் சொன்னான் அய்யாச்சாமி.

பாஸ்கரனுக்கு அடிக்கடி தாகம் எடுத்தது. தண்ணீர் பானை இருக்கும் இடத்துக்கு அடிக்கடி போனான். (டைபிஸ்ட் டேபிள் அருகாமையில்தான் பானை இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.)

சங்கரனுக்கு அடிக்கடி ஏதாவது ஒரு ஆங்கிலப் பதத்துக்கு சந்தேகம் வந்தது. 'டிக்ஷனரி' டைபிஸ்ட் டேபிளில்தான் இருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை! இவ்வளவு காலமாகப் பழகாதவன்மாதிரி ஏதேதோ தகவல்களை விசாரித்தவண்ணம் தர்மலிங்கத்தினிடமே நின்றுகொண்டிருந்தான் கண்ணன்.

பொதுவில் யாருக்குமே இருக்கை கொள்ளவில்லை.

சாவித்ரி யாரையுமே ஏறெடுத்துக் கூடப் பார்த்ததாகத் தெரியவில்லை. 'உம்'மென்று வேலையில் கருத்தைச் செலுத்தினாள்.

இத்தனை கோலாகலத்திலும் கலந்துகொள்ளாத ஒரு ஆத்மாவும் அந்த அலுவலகத்தில் இருக்கத்தான் இருந்தது. அதுதான்—

ராகவன்! சாதாரண நாலு முழம் வேஷ்டியும் அரைக் கை சட்டையும்தான். தான் உண்டு, தன் வேலையுண்டு என அநாவசிய அரட்டைகளில் கலந்துகொள்ளாமல் நேரத்தை நியாயமாக செலவழிக்கும் உண்மை உழைப்பாளியாக இருந்து வந்தான்.

'யோகீஸ்வரர்' என்றும் 'உம்மணா மூஞ்சி' என்றும் பலவிதமாகப் பேசப்படும் கிண்டல் சொற்கள் அவ்வப்போது காதில் விழும்; எதையும் பொருட்படுத்தமாட்டான் ராகவன்.

'ஊருக்கு இளைத்தவனாக'வே காலந்தள்ளி வந்தான்.

டிபன் பாக்ஸ் காலியாகியிருக்கும் ஒரு நாள்; செருப்புகள் எங்காவது ஒளித்து வைக்கப்பட்டுவிடும். சைகிளை 'பஞ்சர்' செய்து வைத்திருப்பான், யாராவது. இப்படி எந்தவிதமான இம்சைகள் நேரிட்டபோதிலும் பொறுமையைக் கடைப்பிடித்து வந்தவன் அவன்.

எனவே, இந்த சாவித்ரி விஷயத்தையும் அவன் ஒரு பெரிய விஷயமாகக் கருதாமல் வேலையிலேயே கருத்தாக இருந்தான்.

இத்தனைக்கும் சாவித்ரியின் மேஜைக்கு நேர் எதிரில் அவன் இருப்பிடம். அப்படியிருக்க, அநாவசியமாக நிமிர்ந்துகூடப் பார்க்காமல் வேலையில் ஈடுபட்டான்.

எதையாவது சாக்கிட்டு, ஆபீஸ் கடிதம் சம்பந்தமாய் பேசுகிறபாணியில், அவளிடம் போய் ஒரு வார்த்தை பேசிவிட்டு 'ஜன்ம சாபல்யம்' ஆகிவிட்டதாகக் கருதி மகிழ்ந்து இடத்திற்கு திரும்பிக்கொண்டிருந்தனர் ஒவ்வொருவரும், ராகவனைத் தவிர.

தனக்கு வேலை அதிகமாகிவிட்டது, இன்னொரு 'டைபிஸ்ட்' போட வேண்டும் என்று கேட்டுக்கொண்ட தர்மலிங்கம், இப்போது முன்னைவிட அதிகமாகத்தான் வேலை செய்துகொண்டிருந்தான்! சாவித்ரியிடமிருந்து தபால்களை வாங்கி, தானே டைப் அடித்து, அவளுக்கு வேலையைக் குறைத்து வந்தான்.

ஒரு வாரம் சென்றது.

ஓரளவுக்கு எல்லாரையும் எடை போட்டு வைத்துவிட்டாள் சாவித்ரி என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகப் பேசுவாளா?

ஒரு நாள்.

பச்சை நிற கிரேப் ஸில்க் சேலையும், கைகளுக்கு 'பிரில்' வைத்துத் தைத்த 'ஹைநெக்' வெள்ளை நிறச் சோளியும் அணிந்து அவள் வந்திருந்த நேர்த்தி, யாவருடைய கவனத்தையும் கவர்ந்தது.

டைப் மிஷினுக்குமுன் அமர்ந்து அவள் வேலையைக் கவனித்தவிதம், பாஸ்கரனுக்கு என்னவோ செய்தது.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அவள் இருப்பிடத்தை நாடிப் போனவன், 'இந்த 'டிரஸ்' உங்களுக்கு ரொம்பப் பொருத்தம் மிஸ். சாவித்ரி' என்று துணிந்து சொல்லிவிட்டான்.

'ஷட் அப்! 'மானெர்ஸ்' இல்லாமல் பேசினால் ஆபத்து மிஸ்டர்! ஜாக்கிரதை! இடத்துக்குப் போய் வேலையைப் பாருங்கள்.'



முகம் வெளிறிப் போய்விட்டது பாஸ்கரனுக்கு. நல்ல வேளை! தர்மலிங்கம்கூடப் பக்கத்தில் இல்லை. 'நோட்ஸ்' எடுத்துக்கொள்ள மானேஜர் அறைக்குப் போயிருந்தான்.

எதிரில் இருந்த ராகவன் சிரித்தது போலத் தோன்றியது பாஸ்கரனுக்கு.

சைகிளில் இருந்து கீழே விழுந்தவன் தன் அஜாக்கிரதையால் விழுந்ததைக் கவனியாமல், வேடிக்கை பார்த்தவன்மேல் கோபப்படுவதைப்போல, ராகவனை முறைத்துவிட்டுப் போனான் பாஸ்கரன். அன்றிலிருந்து சாவித்ரி நெருப்பாக இருந்தாள். கண்களில் கனல் பறந்துகொண்டிருந்தது. அரசல் புரசலாக, பாஸ்கரனுக்கு மூக்குடைந்த விதம் ஓரளவுக்கு புரிந்து ஜாக்கிரதையாகிவிட்டனர் அனைவரும்.

எனினும் காயம்பட்ட புலிமாதிரி பழி வாங்கும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தான் பாஸ்கரன்.

ஒரு நாள் தர்மலிங்கம் வரவில்லை.

ஒரு தபாலில் சந்தேகம் வரவே சாவித்ரி, எதிரில் இருந்த ராகவனிடம் போய்ச் சந்தேகம் கேட்டாள். அப்படியே பயந்து குளறினான் அவன்.

'என்ன மிஸ்டர் இப்படி நடுங்குகிறீர்கள்? நான் என்ன பேயா பிசாசா? என்று கலகலவென்று நகைத்தபடியே இடத்துக்குப் போனாள் அவள்.

தூரத்தில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த பாஸ்கரனுக்கு உள்ளம் பொறுமையால் வெந்தது. இந்த அப்பாவிப் பயல் எப்படி அவளைச் சிரித்துப் பேசச் செய்துவிட்டான்?

எப்படி பழி தீர்த்துக்கொள்வது என்று திட்டம் தீட்ட ஆரம்பித்தது அவன் நொந்த உள்ளம்.

ஒரு நாள்.

மானேஜர் மாணிக்கசாமி மறு நாள் ஓய்வு பெறுவதாக இருந்தார். அதற்காக ஒரு பிரிவுபசார விருந்து நடத்தவும் ஏற்பாடாகி இருந்தது. சென்னையில் இருந்து டைரக்டரும் வருவதாக இருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில், ஆபீஸ் அமர்க்களப்பட்டுக்கொண்டிருக்கையில், ராகவனை அவமானப்படுத்திவிட யுக்தி செய்தான் பாஸ்கரன்.

அன்று பிற்பகல்.

சிற்றுண்டிக்குப் போய்விட்டு இடத்துக்கு வந்தமர்ந்து வேலையைத் தொடங்கின சாவித்ரி, திடுக்கிட்டுப் போனாள் அந்தக் கடிதத்தைக் கண்டதும்!

'அன்பே!

என் காதலை எப்படி தெரியப்படுத்துவது என்றே தெரியவில்லை. நீயும் என்னை நேசிக்கும்பட்சத்தில் இன்று மாலை பூங்காவிற்கு வா. மனம்விட்டுப் பேசலாம்.

இப்படிக்கு,
உன் காதலன்.'

மொட்டையாக இருந்த இந்த கடிதத் துண்டைக் கண்டதும், கண்ணகியாக மாறினாள் சாவித்ரி.

கண்களில் தீப்பொறி பறக்க, கடிதத் துண்டை எடுத்துக்கொண்டு மானேஜர் அறைக்கு அவள் போவதைப் பார்த்தபடித் தனக்குள் சிரித்துக் கொண்டான் பாஸ்கரன்.

'எல்லாரையும் மானேஜரு கூப்பிடுறுருங்க' என்று ப்யூன் வந்து சொன்னபோது பதறாமல் புறப்பட்டவன் பாஸ்கரன் ஒருவன்தான்! பாக்கிப் பேரெல்லாம் என்னவோ ஏதோ என்று அவனைப் பின்தொடர்ந்தனர்.

'என்னப்பா இது கலாட்டா? இது என்ன ஆபீஸ் என்று நினைத்தீர்களா அல்லது...சேச்சே! யார் இந்த லெட்டர் எழுதியது? உண்மையைச் சொல்ல வேண்டும்.'

சீறினார் மாணிக்கசாமி.

ஆச்சர்யத்தை வரவழைத்துக்கொண்டு அந்தக் கடிதத் துண்டை வாங்கிப் பார்த்த பாஸ்கரன், உதட்டைப் பிதுக்கி, தலையை ஆட்டினான்.

'எதிர்பார்த்தேன் ஸார், இந்த மாதிரி ஏதாவது நடக்கும் என்று.'

அனைவருடைய முகத்திலும் ஆச்சர்யம் பரவியது.

'என்ன பாஸ்கரன்? என்ன சொல்கிறாய்?'

'எழுத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா ஸார், யாருடையது என்று? ராகவன்தான் ஸார் இது.'

'ஆ'வென்று திகைத்துவிட்டார் மானேஜர். சாவித்ரிகூடத் திகைத்துவிட்டாள்.

'கூப்பிடு ராகவனை'—கத்தினார் மானேஜர்.

கால்கள் தடுமாற, முகம் சிவக்க, முன்வந்த ராகவன் 'ஸார்! நான்..நான்..' என்று தடுமாறினான்.

'இவர்...' என்று ஆரம்பித்த சாவித்ரி, சட்டென்று மௌனமானாள்.

'இடியட்! உன்னை யோக்யன்னு நினைச்சிருந்தேன். இந்தமாதிரி வேலையெல்லாமா செய்கிறாய்? உன்னை ஒரு வாரம் 'சஸ்பெண்ட்' செய்திருக்கிறேன், போ'—எரிந்து விழுந்தார் மானேஜர்.

'ஸார். ஸார்' என்று கெஞ்சிய ராகவனை எரித்துவிடுவதுபோலப் பார்த்துவிட்டு 'போ வெளியே' என்று கத்தினார்.

தன் திட்டம் நிறைவேறிவிட்டது என்ற திருப்தி முகத்தில் நிலவ, மகிழ்ச்சியுடன் நின்ற பாஸ்கரனை வெறுப்புடன் பார்த்துவிட்டு, 'ஸார்! தாங்க விஷயம் தெரியாமல்..' என்று ஏதோ சொல்லத் தொடங்கின ராகவனை இடைமறித்தார் மாணிக்கசாமி.

'கெட்டவுட்! சொல்ல வேண்டியதெல்லாம் நாளைக்கு டைரக்டரிடம் வந்து சொல்லிக்கொள்.'

முதன்முறையாக சாவித்ரியை நிமிர்ந்து நோக்கிவிட்டு, தலை குனிந்தபடியே வெளியேறினான் அப்பாவி ராகவன்.

மறு நாள்.

மானேஜரின் ஓய்வு பெறும் நாளை ஒட்டிப் பிரிவுபசார விருந்து நடந்தது. விருந்துக்குப்பின் ஒவ்வொருவரும் அவரது சேவையைப் பாராட்டிப் பேசினர்.

கடைசியில் டைரக்டர் தண்டபாணி எழுந்தார்.

'மாணிக்கசாமி இவ்வளவு காலம் செய்துவிட்டு ஓய்வு பெறுகிறார். அவரது சேவையைப் பாராட்டுகிறோம். அடுத்தபடியாக உங்களில் ஒருவரை மானேஜராகப் போட வேண்டும் என்று அவரே சிபார்சு செய்திருக்கிறார்.'

அனைவரும் நிமிர்ந்து உட்கார்ந்தனர். தங்களில் யாரைத் தேர்ந்தெடுத்திருப்பார் என்ற கேள்விக் குறி ஒவ்வொருவர் முகத்திலும் படர்ந்தது.

'சிறந்த உழைப்பாளியும், யோக்யமானவனுமான ராகவனை அந்தப் பதவிக்குப் போடும்படிச் சிபார்சு செய்திருக்கிறார். அதையே நானும் ஒப்புக்கொள்கிறேன். உங்களுக்கும் திருப்தியாக இருக்கும் என நம்புகிறேன்.'

ஒரு ஓரமாக வந்து நின்றுகொண்டிருந்த ராகவனுக்கு, மயக்கமே வந்துவிடும்போல இருந்தது.

பாஸ்கரன் துள்ளி எழுந்தான்.

'ஸார்! ராகவன்...ஸஸ்பெண்ட்...'

'ஷட்அப்' என்று இடைமறித்துவிட்டார் தண்டபாணி.

'இதுவரை நீங்கள் அறியாத இன்னொரு விஷயமும் சொல்ல விரும்புகிறேன். ராகவனைத் தெரிந்து எடுத்தது, அவனுடைய திறமை எனக்கு அப்போதுக்கு அப்போது தெரிந்ததுதான். யார் யார் எப்படி வேலை செய்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரிய வந்தது. எப்படி என்று நீங்கள் விழிக்கலாம். இங்கு டைபிஸ்டாக வேலைக்கு வந்த மிஸ். சாவித்ரி என் பெண்தான்.'

அதிர்ச்சிமேல் அதிர்ச்சி!

என்ன பேசுவது என்றே புரியாமல் சிலையாகிவிட்ட அனைவரையும் சிரித்துக்கொண்டே பார்த்த தண்டபாணி, மூன்றாவது அதிர்ச்சி தரும் செய்தியையும் வெளியிட்டார்!

'இனி சாவித்ரி டைபிஸ்டாக இங்கு இருக்கமாட்டாள். படித்துவிட்டு, 'சும்மா இருந்தவள் ஆபீஸ் எப்படி நடக்கிறது என்பதையறிய விரும்பவே, உத்தியோகம் கொடுத்து அனுப்பினேன். அசட்டுத்தனமாக அவளிடம் எதுவும் பேசாமல், காதல் கடிதம் எழுதிவிட்ட ராகவனுக்கே அவளைத் திருமணம் செய்து கொடுத்துவிடத் தீர்மானித்துவிட்டேன். அதுவே அவள் விருப்பமும்கூட.'

'தடால்' என்று யாரோ மயக்கமடைந்து கீழே விழுந்த சப்தம் கேட்டது.

அது பாஸ்கரன்தான் என்று சொல்லவும் வேண்டுமா?



# இசை அரங்கு

[ நீலம் ]

தந்தி வாத்தியங்களுள் தலைசிறந்த வீணையை வீணையாகக் கையாண்டு, வழிமுறை பிறழாமல் சுத்தமாக வாசிப்பை உருவாக்கிக் கொள்வது சிரமம். இடைவிடாது, தொடர்ந்து அப்பியாசம் செய்வதுடன் ஞானபல அபிவிருத்தியுற நிறைந்த கேள்வியும் கூட வேண்டும். இவ்விசைக்கருவியாலே மேதாவிகளாக பெயர்பெற்று வாழ்ந்தவர்கள் பின்பற்றிய சுவட்டை அறிந்து அடக்கத்தோடு பயிற்சியிலிறங்குவதும் முக்கியம். அந்தநிலையில் உருப்பெற்ற வாசிப்புக்குக் கௌரவம் கிட்டாமற் போகாது. வாத்தியம் பழைமையானது, பவித்திரமானது என்பவையெல்லாம் வாயளவில் நின்று வாசிப்பில் அவை பிரதிபலிக்காமற்போன இடங்கள் எத்தனையோ உண்டு.

சென்ற வாரம் மயிலாப்பூர் ஸ்ரீ தியாகராஜ சங்கீத வித்வத் சமாஜத்தில் தஞ்சை ஸ்ரீ ஜி. லட்சுமணன் வீணைக் கச்சேரி செய்தார். உற்சாகத்தோடு கல்யாணி, ஆபேரி, வாகதீச்வரி, பந்துவராளி முதலியவற்றில் உருப்படிகளை வாசித்தார். இடையே ஓரிரு ராகங்களையும் சுருக்கமாக ஆலாபனை செய்தார். பந்துவராளியில் 'ஸாரஸாக்ஷ' கீர்த்தனை கவர்ச்சியோடு கச்சிதமாக விளங்கியது. 'பரமாத்முடு' கீர்த்தனையும் சுவையாக விருந்தது. கமகங்கள் நலிவுறாமல் நிச்சயமாக புஷ்டியோடும் பூரிப்போடும் கனை கொண்டு வாசிப்பு நிர்மாணமாவதற்கு நிறைந்த சாதகம் வேண்டும். இதற்கான வாய்ப்பு இவருக்கு உண்டென்பதை அவரது நிகழ்ச்சி நிரூபித்தது.

தற்காலத்தில் வீணைப் பயிற்சிக்கான அடிப்படை கிரமங்கள் எவ்வளவு தூரம் பின்பற்றப்பட்டு வருகின்றன என்பது வேறு விஷயம். ஆனால் இதில் விற்பத்தியுறுவதற்கு சுலபமான குறுக்கு வழிகள் கிடையாது என்பது தெளிவு. அடக்கத்தோடும், பொறுமையோடும் சாதகம் செய்வதன் மூலம் அருமையான பயன்



கைகூடும். இளைஞர் ஸ்ரீலட்சுமணனுக்கு இத்தகைய பயன் மேலும் கிட்டுவதற்கு நிரம்ப இடமுண்டு. இவரது வாசிப்புக்கு கோயமுத்தூர் ஸ்ரீ ஸ்ரீநிவாசன் இதமாகவும் அனுசரணையாகவும் மிருதங்கம் வாசித்தார்.

# எல்லைக் காளியின் தீர்ப்பு

★

[ க. பஞ்சாபகேசன் ]

முன்னிருட்டின் முழுக் கருமை சூழ் நிலையில் சூழ்ந்திருந்தது. இராக் கோழிகளின் ரீங்காரத்தைத் தவிர கிராமத்தின் மேல் அமைதி கவிழ்ந்திருந்தது.

வேளாளர் வீதி எல்லையில், புறமடைப் பக்கம் செல்லும் சிறு சந்தொன்றில்தான் இரு ஜோடி காலடி ஓசை பத்துப் பதினைந்தடி தூரம் இடையீடு விட்டு மெதுவாகக் கேட்கவாரம்பித்தது.

பின்னால் சென்று கொண்டிருந்த மனிதன், முன்னால் சென்றுகொண்டிருந்தவனை நோக்கிக் குரல் கொடுத்தான்.

'இருட்டிலே கண் தெரியாமல்தான் கேட்கிறேன். யாரங்கே, புறமடைப் பக்கம் போகிறது? மெதுவா நடை போட்டுப் போனால் இந்த மாரியின் காதிலே காலடி விழுந்துக்கிட்டுத்தான் இருக்குது, யாரது?'

இயல்பாகவே மாரியின் குரலில் தடபுடலும் சத்தமும் அதிகம். மாரியம்மன் திருவிழாக் காலத்தில், அம்மனைச் சுற்றி வந்து குழுமும் கூட்டத்தைச் சமாளிக்க ஊர்ப் பஞ்சாயத்தார் மாரியின் குரலில் வெகு நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

முன்னால் சென்றுகொண்டிருந்த வேடியப்பனை மாரியின் குரல் சற்று அதிரச் செய்தது. வேளை கெட்ட வேளை இவன் எங்கே இங்கே வந்தான்? நாமென்ன, திருட்டுத்தனம் செய்யவா போகிறோம்?'– அலட்சியமான தினைப்பு வேடியப்பனின் உள்ளத்தில் நிறைந்தது.

முண்டாசாகக் கட்டியிருந்த சரிகை உருமால் மார்பில் அவிழ்ந்து விழ, வேடியப்பன் திரும்பி மாரியை நோக்கி நடை போட்டான். முகம் தெரியாத முன்னிருட்டில், கிராமத்துப் பழக்கமான புறமடைச் சந்தில், அவர்கள் ஒருவரையொருவர் நெருங்கினர். புறமடைக்குள் தெள்ளிய நீரின் 'குபுகுபு' வென்ற ஒலி, சுற்றுப்புற நிசப்தத்தை எடுத்துக் காட்டிய வண்ணமிருந்தது.

'என்னப்பா மாரி, ஏன் அதிர்வேட்டுக் கணக்காய்ச் சத்தம் போடுகிறாய்? நான்தான் வேடியப்பன்...'

'அட, நீயா வேடி? யாரோ வெளியூர் கயவாளிப் பயலோன்னு பயந்துப்பிட்டேன்... அது சரி வேடி, அமாவாசை முன்னிருட்டு அதிகமாக இருக்கிற இந்த நேரத்திலே எங்கே புறப்பட்டாய்? அதுவும் இத்தினி மெதுவான நடையிலே? ஒருவேளை...'

மாரி மேலும் ஏதும் சொல்லாமல் கொஞ்சம் நிறுத்தினான். வாய்க்காலின் புறமடைக் கதவுக்கடியில் இப்போது தண்ணீர் 'குபுக் குபுக்' என்று சத்தமிட்ட ஒலி மிகத் தெளிவாகக் கேட்டது.

புறமடையிலிருந்து மூன்று நான்கு கிளைகள் சுற்றுப்புறமிருந்த வயல்களுக்குத் தண்ணீர் எடுத்துச் சென்று கொண்டிருந்தன. ஊரில் நீருக்காக அடிதடி வராமல் 'முறை' ஏற்படுத்திக் கொண்டிருந்தது இந்தப் புறமடை.

ஆனால், முன்பொரு சமயம் வேடியப்பன் இப்படித்தான் மையிருட்டில் வந்து புறமடைக் கதவைத் தன் கிளை நோக்கித் திருப்பிவிட்டு, மறுநாளைக்கு ஊர்ப் பஞ்சாயத்து எதிரே நின்று, ஒன்பது பொய்களை 'நான் அப்படிச் செய்யவில்லை' என்று சொல்லி பெரிய விவாதத்துக்குப் பிறகு 'செய்தேன்' என்ற ஒரு நிஜத்தையும் சொன்னான்.



'ஒரு வேளை...' என்று மாரி இழுத்ததும் வேடியப்பன் இலேசாக நகைத்துக்கொண்டு, 'புறமடைக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ' என்று கவலைப்படாதே, மாரி! இப்போது இந்த இருட்டில் என் புறப்பாட்டின் நோக்கமே வேறு... மாரி! இன்று காலையில் நாம் சில பேர் மண்டபத்திலே கூடிப் பேசினோமே ஒரு பேச்சு?...' என்று இழுத்தாற்போல நிறுத்தினான்.

மாரிக்குப் புரிந்துகொண்டு வந்தது இலேசாக. அன்று காலையில் அவர்கள் பேசியது, ஒரு சாதாரண ஒற்றைப் பனை மரத்தைப் பற்றிய பேச்சுத்தான்.

சிங்காரம் ஊரில் ஏழைதான். ஆயினும் மானஸ்தன். அதனால் பெரிய புள்ளிகளுக்குக்கூட ஊரில் சிங்காரத்தைக் கண்டால் அவ்வளவு பிடிக்காது.

சிங்காரத்துக்குச் சொந்தமான ஒற்றைப்பனை அது. அவனுக்கு நிலம் நீச்சு கிடையாது. தென்னந்தோப்பு, பனை தோப்பு என்று கூடச் சொந்தம் கிடையாது. ஒரு சிறுபெட்டிக் கடை வைத்திருந்தான்; அதைத் தவிர சிங்காரத்துக்குச் சொந்தமானது அந்த ஒற்றைப் பனைதான்.

அந்தப் பனை மரம் ஊர் கவனத்தைக் கவரும்படியான இடத்தில்தான் இருந்தது. பனைக்குப் பத்தடி தூரத்தில் எல்லைக் காளியம்மன் கொலு வீற்றிருந்தாள். அவள் உக்கிர காளி. வருடம் ஒரு முறை வரும் உற்சவ நாளில் காளி அம்மனுக்குப் பந்தல் போட்டு, உள்ளே கோயில் போலாக்கி அலங்காரம் செய்வார்கள்.

அப்படிப் போடப்படும் பந்தலின் நான்கு கால்களில், ஒரு காலமாக சிங்காரத்தின் இந்த ஒற்றைப் பனை மரத்தை உபயோகிக்கவே வேண்டியிருந்தது.

பனையை அப்புறப்படுத்த அநேக முறை ஆட்சேப சமாதானமெல்லாம் கிராமத்தில் எழுந்தாயிற்று. பனையைப்பற்றிய பேச்சு வந்தால், சிங்காரம் சிங்காரமாயில்லை. 'அது வெறும் ஒத்தைப் பனை இல்லே, ஐயா! அந்தப் பனையில் எங்கள் குடும்ப குலதெய்வம் முனீசுர பகவான் இருக்கிறான்... பனையை வெட்டினால் முனீசுரன் உலகத்தையே வெட்டிப் போடுவான், ஆமாம்!'– சிங்காரம் ஆவேசத்தின் உருவமாகி விடுவான்.

இப்போது இவ்வருடமும் காளியம்மன் திருவிழா நெருங்கிக்கொண்டிருந்தது. இரண்டு நாளில் திருவிழாவுக்காகக் காப்புப் போட வேண்டும்.

மாரியின் காதிலே வேடியப்பனின் குரல் தெளிவாக விழுந்தது. 'இன்னைக்கு அமாவாசைன்னு தெரிஞ்சு தானே புறப்பட்டேன், மாரி? ஒரு காரியத்திலே விருதாவா இந்த வேடி ஒரு போதும் இறங்கமாட்டான். ஒத்தைப் பனை மரம் இருக்கிற திக்குக்குத்தான் போய்க்கிட்டு இருக்கிறேன். இன்னைக்கு ஒண்ணில் இரண்டு தீரணும்!'

'அதற்கு இந்த இருட்டில் என்ன அவசரம் வேடி?'–புரியாமல் குழம்பினான் மாரி.




"அறுபது பக்கம்கூட இல்லாத இந்த இரண்டாம் ஃபாரம் புத்தகத்திற்கு விலை பத்தணாவா?...ஏன் ஸார்! இதற்கும் மலிவுப் பதிப்பு போடப் படாதோ?"

'தலைக்கு மேல் விஷம் ஏறிவிட்டது. மாரி, நானே மறுநாள் காளிக்குக் காப்புக் கட்ட வேண்டும்; அதற்குள், காளிக்குப் பத்தடி தூரத்திலிருக்கும் அந்தப் பனையை வெட்ட வேண்டும்!'

'வேடி...'

'பனை மரத்து முனீசுவரனுக்கு இப்போ ஏதோ இரவலேபூசைபோடப் போயிருக்கிறானும் சிங்காரம்! நான் ஒண்ணும் அந்தப் பனைகிட்டே ஆளில்லாத சமயத்தில் போகவில்லே. சொந்தக்காரன் இருக்கிற சமயத்தில்தான் போகிறேன். ஒரு காலத்தில் நம்ம காளியாயிக்கும் கோயில் எடுக்கிறோம்னு வைச்சுக்குவோம். அப்போ எழப் போகிற இந்த ஒத்தைப் பனை விவகாரத்தை இப்போதே தீர்த்து வைக்கப் போகிறேன்...'

வேடியப்பன் நடந்து கொண்டிருந்தான், ஆத்திரத்தால் சூழ்ந்த எண்ணங்களின் வேகத்தில், மாரி ஓட்டமும் நடையுமாகக் கூடப் போய்க் கொண்டிருந்தான்.

'சரி, வேடியப்பா, அதோ பனை தெரியுது. பனைக்கடியிலே அதோ சிங்காரமும் உட்கார்ந்துக்கிட்டிருக்கிறான். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளு வேடி! நீ கொஞ்சம் மறைவாக இரு. நான் சிங்காரத்துக்குக் கொஞ்சம் புத்தி சொல்லிப் பார்க்கிறேன்' என்றான் மாரி.

வரப்போரத்துக் கருவேல மரத்துக்குப் பின்னால் வேடியப்பன் தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு மறைந்து நின்று கொண்டான். மலரால் அர்ச்சிக்காமல் மௌனமாக மரத்தடியில் அமர்ந்து கொண்டிருந்த சிங்காரத்தை அணுகினான் மாரி.

சிங்காரம் தன் மனத்தில் கவலைச் சிக்கல் விழுந்து விட்டதாகக் கூறினான். 'என் சொத்தில் நான் கவனமாயிருக்கிறது குத்தமா மாரி?' என்று கேட்டான் அவன். இரண்டு நல்ல மனிதர்களிடையில் விவாதம் வந்து விட்டால் அது தீர்ந்து விடுவது அத்தனை சுலபமல்ல. பிரச்னைக்கு இரு நியாய முனைகள் அமைவதைப் போலத்தான்!

மாரி சொன்னான்; ஊரில் வேடியப்பன் ஒரு முக்கியமான புள்ளி. அவன் விரோதம் உனக்கு எதற்கு மாரி?'

'வேடியப்பன் நல்லவனுக்கு நல்லவன், பொல்லதவனுக்குப் பொல்லாதவன், ஆறு, மாரி, என்னோட தாதிருஷ்டம், அவன் என்னைப்போல நல்லவனுக்கும் பொல்லாதவனாகவே இருக்கிறான்.'

'நல்லது கெட்டதெல்லாம் நம்ம எண்ணத்திலேதான் இருக்கிறது சிங்காரம். அதோ பாரு, பத்தடி தூரத்தில் நமக்கு முன்னால் காளியாத்தா அமர்ந்திருக்கிறா. நம்ம எண்ணங்களுக்கெல்லாம் மேலே நல்லது கெட்டது அந்த அம்மைக்குத் தெரியும்...புறப்படு, சிங்காரம்! இருட்டில் இங்கே ஏன் உட்காரணும்?'

'மாரி! என்னுடைய சூழ்நிலை உனக்குத் தெரியாதா? இந்த வருஷ திருவிழாவுக்கு மட்டும் இதென்ன திலுசான ஏற்பாடு? என் ஒத்தைப்





பனையை வெட்டப் போறுங்களாமே! ஆனா, அதுக்கு முன்னாடி என் உடம்பையும் மனசையும் வெட்டிச் சாய்ச்ச பிறகுதான் யாரும் இந்தக் காரியத்தைச் செய்ய முடியும். காளியம்மா சாட்சியாச் சொல்றேன், மாரி! நல்லவன் நீ கேட்டுக்க! என் உடம்பிலே கடைசிச் சொட்டு உதிரம் மிஞ்சாவிட்டாலும் அஞ்சமாட்டேன்... பனையும் விட்டுக் குடுத்துட மாட்டேன்!'

தனக்குச் சொந்தமான ஒற்றைப் பனையின் கௌரவம் சிங்காரத்தின் மனத்தில் அழியாத நம்பிக்கையைப் பாய்ச்சியிருந்தது. அதில் முனீசுவரன் குடியிருக்கிறான். எத்தனையோ பேய்க் காற்று, புயலுக்கெல்லாம் ஈடு கொடுத்திருக்கிறான் அந்த முனீசுவரன்....

தூரத்தில் கருவேல மரமே சடசடவென்று அசைந்து கொடுத்த சத்தம்.

'பனையை விட்டுரமாட்டாராம்மா?...' என்று உறுமிய குரலுடன் வந்தான் வேடியப்பன். நட்சத்திரங்களின் இலேசான ஒளி வேடியப்பனின் கருத்த தடித்த தேகத்தையும், தார் பாய்ச்சிக் கட்டியிருந்த வேட்டி, சாலை உருமால் ஆகியவற்றையும் 'பளிச்' சென்று எடுத்துக் காட்டியது.'

'மாரி' வேடியும்கூட வந்தானா?' என்று கேட்டான் சிங்காரம்.

'ஆமாம், சிங்காரம்...'

இதற்குள் வேடியின் குரல் சீறியது: 'மாரி என்கூடத்தான் வந்தான். நானும் நீயும்தான் பாம்பும் கீரியுமாச்சே! அதனாலே மாரியை— உன் கண்ணுக்கு அவன் நல்லவனாச்சே! தூதனுப்பிப் பார்த்தேன். நீ தான் எந்தக் காலத்துக்கும் அசையாத ஒத்தைப் பனையா இருக்கிறியே!'

இதற்கு சிங்காரம் மென்னகை புரிந்துகொண்டே சொன்னான் 'நமக்குள் பகை இருக்கிறதாக நான் ஒன்றும் நினைக்கலே, வேடியப்பா. பாம்பும், கீரியும் நம்மைப் போல அதிகப்படியான அறிவு இல்லாததால், ஒன்னையொன்னு பகைச்சுக் கொள்கின்றன.'

இடையில் மாரி சொன்னான் 'நல்லறிவைப் பற்றிப் பேசும் இரண்டு பேரும் எதுக்கு இப்படி சூடாகப் பேசிக் கொள்றீங்க?'

'குற்றம் செய்யிற மனுசனுக்கு இத்தனை குறுகுறுப்பாவது இருக்க வேண்டாம்?' வேடி பேச்சால் குத்தினான்.

சிங்காரம் பொறுமை இழந்தான். 'வார்த்தைகளை அனாவசியமாகக் கொட்டாதே, வேடி! அப்புறம் வார முடியாது!'

'ஏன் வார வேண்டும்? குப்பைத் தொட்டியிலே கொட்டுற கணக்காகத் தானே பேசுகிறேன்? ஆனா, சிங்காரம் இப்போ கொட்டத்தான் போகிறேன். உன் பனை மரத்தை நால் தோராய் மாறிக் கொட்டத்தான் போகிறேன்... நாளை மறுநாள் காளியாயி திருவிழாவுக்குக் காப்புக் கட்டப் போகிறோம்... இதோ மாரி, நீயும் நின்னுக்கிட்டிருக்கிறே சாட்சிக்கு! கேட்டுக்க! காப்புக் கட்டறதுக்கு முன்னாடி இந்தப் பனையைத் தரையிலே சாய்க்கல்லே, என் பேரை மாற்றிப் போட்டுத் தண்டோரா, அடியுங்க...' பேச்சோடு மூச்சு பாம்பின் மூச்சாகச் சீறிக் கொண்டிருந்தது.

திகைப்பில் நின்றுகொண்டிருந்த மாரியின் காதில் சிங்காரத்தின் சீற்றப் பேச்சும் விழுந்தது. 'என் சொத்தில் ஒருவன் அனாவசியமாகக் கை வைக்க முடியுமா? இந்த விநாடியிலிருந்து என்னுடைய இந்த ஒத்தைப் பனைக்கு— என் முனீசுர பகவானுக்குக் காப்புக் கட்டிவிட்டேன் நான்! இது என் வாழ்க்கைப் பிரச்னை. சோறு, தண்ணி, மூச்சுக் காத்து எல்லாம் இனி அப்புறம்தான்!'

பிறகு இருவரும் மாறி மாறிப் பேசினார்கள்.

'ஊரைப் பகைச்சுக் கொண்டவன் எவனும் உலகத்தில் வாழ்ந்ததில்லை சிங்காரம்! உன் தலை எழுத்துப்போல நடக்கட்டும்!'

வேடி! 'அதோ பத்தடியிலே காளியம்மை எல்லாத்தையும் கவனிச்சபடி அமர்ந்துக்கிட்டிருக்கிற... எழுத்தை எழுதினவள் அவள்! நியாய அநியாயம் தெரிஞ்சுதான் அந்த அம்மை என் தலை எழுத்தையும் எழுதியிருப்பாள்!'

'காளியாயிக்கு நியாயம் வழங்கத்தான் இந்தக் காரியத்திலே இறங்கியிருக்கிறேன்!'

'எனக்கும் நம்பிக்கை உண்டு, அவள் என்னைக் காப்பாள் என்று!'

இருவரும் நியாயம் பேசினார்கள். தீர்ப்பைப் பத்தடி தூரத்தில் மௌனமாய் அமர்ந்துகொண்டு இந்த வேடிக்கையையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அன்னையிடமிருந்து எதிர் பார்த்தார்கள்!

இதற்குள் வேடியப்பன் புறப்பட்டு விட்டான்.

'நாளை பட்டப் பகலில் ஊரறிய இந்தப் பனையை வெட்டப் போகிறேன்... காலையில் பட்டறையிலே என் கோடலியை நானே கூர் தீர்க்கிறேன்... தலைக்கு மேலே விசயம் போய் விட்டது, மாரி! இனி சும்மாயிருக்கமாட்டேன்!'

மாரி கூப்பிடக் கூப்பிட நிற்காமல் வேடியப்பன் நடந்து இரவின் இருளில் மறைந்து விட்டான்.

சிங்காரம் சாதித்த மௌனத்தில் வேறெதுவும் பேசுவது நல்லதல்ல என்று மாரியும் கொஞ்ச நேரத்தில் புறப்பட்டு விட்டான்.

மறுநாள் காலையில் —

வீதியில் கிராம வைத்தியர் வேகமாக எதிர்ப்பட்டதை மாரி கவனித்தான்.

பெரிய செந்தேளோ, நட்டுவாக்களியோ இருக்க வேண்டும். வலது உள்ளங்கையிலே பைசா அளவுக்குச் சதையைத் தீண்டியிருக்குது. வருசக் கணக்காக கூரையடுக்கில் வைச்சிருந்த கோடலியை இன்னைக்கு எடுத்த வேளை அப்படி! கோடலியைக் கொட்டிக்கிட்டிருந்தது இவன் கையை அல்ல கீறு போட்டுக் கொட்டிவிட்டது...' வைத்தியர் சொல்லிக் கொண்டே போனார்.

மாரி பதறி ஓடினான் வேடியப்பனின் வீட்டுக்கு. கையைத் தலையணைத் திண்டில் உயரமாக வைத்துக்கொண்டு, வலியால் அழுத்தமாக முனகிக் கொண்டிருந்தான் வேடியப்பன், மாரியைக் கண்டதும்—

'சிங்காரம் நிசத்துக்கே அந்த ஒத்தைப் பனைக்கு நேற்று காப்புக் கட்டி விட்டான் மாரி! அந்தக் காப்பை என்னால் கலைக்க முடியவில்லை...' என்றான்.

அந்த வருடம் காளியாயின் திருவிழா மற்ற வருடங்களைவிட வெகு நேர்த்தியாக இருந்ததாகவே கருதினான் வேடியப்பன்.




"வழி மறைத்திருக்குதே......
மலைபோ...ஓ...ஓ...லே...ஒரு......

? ? ?

# பெண் வேடத்தில் நடித்திருக்கிறேன்

## —பாலாஜி கூறுகிறார்

இப்போது சுமார் 25 படங்களில் நடித்துவரும் பாலாஜி, நாடக மேடையிலிருந்து திரை உலகில் பிரவேசித்தவர். பல படங்களில் நடித்து வருகிற போதிலும் நாடகக் குழுவொன்றை நடத்தி, அதில் நடித்து வருவதிலிருந்து நாடகம் என்றால் அவருக்கு உயிர் என்பது தெளிவாகிறது. பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே அவர் நாடகங்களில் நடித்து வந்தார் என்பதுடன், பெண் வேடம் தரித்து நடித்தார் என்பது மிகவும் ருசிகரமான விஷயம். இதை அவர் பேட்டியின் போது தெரிவித்தார்.

தாம் திரையுலகில் பிரவேசித்தது பற்றி அவர் பின்வருமாறு கூறினார்:—

1950-ம் ஆண்டில்தான் திரைப் படத்தில் நடிக்கும் ஓர் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எம். ஸி. டி. ஹைஸ்கூலில் நாலாவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்தேன். நாடகத்தில் ஆர்வம் மிகுந்த நான் பள்ளிக்கூட நாடகங்களில் நடித்து அனுபவம் பெற்றவன். அநேகமாக பெண் வேடம் தாங்கி நடிப்பேன். ஜெமினி கணேசன்தான் என்னை திரையுலகிற்கு அறிமுகப்படுத்தினார். அப்போது அவர் ஜெமினி ஸ்டுடியோவில் நடிகர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியைப் புரிந்து வந்தார். ஜெமினி ஒளவையாரில் சுப்ரமணியராகத் தோன்றும் வாய்ப்பை எனக்கு ஜெமினி கணேஷ் அளித்தார். பள்ளிக்கூட நாடகங்களில் நடிக்கும்போது எனக்கு நடிப்புக் கலையை சொல்லிக் கொடுத்த ஆசான், எஸ். ஏ. சுப்பராமன் என்பவர். அவருக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். பள்ளிக்கூடத்தைவிட்டு விலகிய பிறகு நான் எனது நாடகக் குழுவை அமைத்தேன். அது அமெச்சூர் நடிகர்களைக்கொண்ட குழு. இப்போது வசனகர்த்தாவாக விளங்கும் ம. ரா. எனது பள்ளித் தோழர். சுப்பராமனுக்கு அடுத்தபடியாக எனக்கு குரு ம. ரா. அவர்களே. அமெச்சூர் நாடகங்களை நடத்தியது நாடகக் கலையின்மீதுள்ள ஆர்வத்தினால்தானே தவிர, பணம் சம்பாதிப்பதற்காக அல்ல. வருமானத்திற்காக தபால் இலாகாவில் குமாஸ்தாவாக சேர்ந்தேன். ஆனால், 6 மாதங்கள்தான் அந்த வேலையிலிருந்தேன். அது பிடிக்காததால் ராஜிநாமா செய்துவிட்டு நாக ஸ்டுடியோ புரொடக்ஷன் டிபார்ட்மெண்டில் சேர்ந்தேன். நாக பிக்சர்ஸ் தயாரித்த 'பிரேம பாசம்' என்ற படத்தில் துணைக் கதாநாயகனாக நடித்தேன். அதன் பிறகு நாக ஸ்டுடியோவிலிருந்து விலகி, சுதந்திர நடிகனானேன், 'மாதர்குல மாணிக்க'த்தில் அஞ்சலி தேவியின் சகோதரனாக நடித்தேன். டி. எஸ். துரைராஜ் தயாரித்த 'பானை பிடித்தவள் பாக்கியசாலி'யில் கதாநாயகனாக நடித்து புகழ் பெற்றேன். அன்று புது முகமாக இருந்த என்னை துணிச்சலாக கதாநாயகனாக நடிக்கச் செய்து என்னை முன்னுக்குக் கொண்டுவந்த துரைராஜ் அவர்களது உபகாரத்தை என் நெஞ்சம் என்றும் மறக்காது.

'பானை பிடித்த'வளைத் தொடர்ந்து மனைவியே மனிதனின் பாக்கியம், மனமுள்ள மறுதாரம், அன்பு எங்கே, மஞ்சள் மகிமை முதலிய படங்களில் நான் நடித்தேன். மனமுள்ள மறுதாரம், அன்பு எங்கே, மஞ்சள் மகிமை ஆகிய படங்கள்மூலம் நான் ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்றேன். நான் இப்போது 25 படங்களில் நடித்து வருகிறேன். இவற்றில் தெய்வ பலம், மனிதனே மனைவியின் மாணிக்கம், சகோதரி ஆகிய படங்கள் சீக்கிரத்தில் வெளிவரவிருக்கின்றன.

'தங்களுக்கு எந்தவிதமான பாத்திரமேற்று நடிப்பது பிடிக்கும்?'

எல்லாவிதமான பாத்திரங்களையும் ஏற்று நடிக்க நான் விரும்புகிறேன். இளைஞனாக, காதல் புரியும் கட்டிளம் காளையாகமட்டும் நடித்தால் போதாது. கிழவனாகக்கூட நடிக்க வேண்டும் என்பதுதான் என் அவா. நான் சமூகப் படங்களில் மட்டுமல்லாமல், ராஜா ராணி கதைகளில்கூட நடித்து வருகிறேன் என்பது உண்மை. எல்லாவித பாத்திரங்களிலும் ஒரு நடிகன் நடிக்க வேண்டித்தான் இருக்கிறது. ஆயினும் எனக்கு சமூக சித்திரங்களில் நடிப்பதுதான் விருப்பமானது. சமூகப் படங்களில்தான் இயற்கையான நடிப்புக்கு வாய்ப்பு அதிகம் உள்ளது. சமூகப் படங்களைத் தவிர, 'ராபின் ஹூட்' மாதிரி வன வாழ்க்கையையும் வீரதீர சாகசச் செயல்களையும் சித்தரிக்கும் படங்களில் நடிப்பதென்றாலும் எனக்கு மிகவும் பிடிக்கும். ஏ. வி. எம். ஸ்தாபனத்துடன் கூட்டு சேர்ந்து பி. வி. என். புரொடக்ஷன்ஸார் தயாரிக்கும் இத்தகைய வன வாழ்க்கைப் படத்தில் நான் கதாநாயகனாக நடிக்கிறேன். அப்படத்தை ரகுநாத் டைரக்ட் செய்கிறார்.

தங்களுக்குத் திருமணமாகிவிட்டதா?

இன்னும் ஆகவில்லை. அடுத்த வருடம் கலியாணம் செய்து கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

யாரை மணம் செய்துகொள்ள உத்தேசம்? சினிமா நடிகை யாரை யாவது...?

சேச்சே. அதெல்லாம் இல்லை. குடும்பப் பெண்ணாகப் பார்த்துத்தான் மணம் புரியப் போகிறேன்!

திரையுலகில் புது முகங்கள் தேவை தானே? தங்கள் கருத்து என்ன?

திரைப்பட உலகில் புது முகங்கள் நிறையத் தேவை. புது முகங்கள் முன்னுக்கு வருவதற்கு பட முதலாளிகள் ஒத்துழைப்புமட்டும் போதாது. பிரபல பழைய முகங்களின் ஒத்துழைப்பும் தேவை. புது முகங்கள் யாராயிருப்பினும், அவர்கள் திறமையுள்ளவர்களாயிருந்தால் அவர்களை ஊக்கப்படுத்தி முன்னணிக்குக் கொண்டுவர வேண்டும். சொந்த விருப்பு வெறுப்புகளைக் காட்டாமல் கலையின் வளர்ச்சியையே கருதி, திறமையுள்ளவர்களுக்கு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும். 'இந்த நடிகருடன் நடிக்க முடியாது. அந்த நடிகரைப் போடுங்கள்' என்று சொல்லும் மனப்பான்மையை விட்டொழிக்க வேண்டும்.

சினிமாத்துறையில் முன்னேறியுள்ள நீங்கள், நாடகங்களை தொடர்ந்து நடத்த உத்தேசிக்கிறீர்களா?

'நாடகம் என்றால் எனக்கு உயிர். நாடகத்தின்மூலம்தான் நான் நடிப்புக் கலையை கற்றுக்கொண்டேன். நடிப்புக் கலையில் மேன்மேலும் அபிவிருத்தியடைய நாடகங்களை நான் தொடர்ந்து நடத்தி வருவேன். தற்போது நான் நடத்தி வரும் 'அவன் வந்த வழி'க்கு கதையை மஸ்தானும், வசனங்களை ம. ரா.வும் எழுதினர். காமினி, புலியூர் சரோஜா, நாகேஷ், பானு (இருவரும் காமெடியன்கள்) உள்பட 15 நடிகர்கள் என் குழுவில் உள்ளனர். ரசிகர்களின் உள்ளத்தை கவரக்கூடிய சோக பாத்திரங்களில் நடிப்பதில் நான் அதிக கவனம் செலுத்தி வருகிறேன்.

உங்களது பொழுது போக்குகள் யாவை?

படப் பிடிப்பிலிருந்து ஓய்வு கிடைக்கும்போது எனது நாடகங்கள் பற்றி குழுவினருடன் ஆலோசிப்பதும், நண்பர்களுடன் உரையாடுவதும் சினிமா பார்ப்பதும்தான் எனது பொழுதுபோக்குகள். காலையில் நான் தேகப் பயிற்சி செய்கிறேன்.

தமிழ்ப் படங்கள்மட்டும் பார்க்கிறீர்களா? பிறமொழிப் படங்களும் பார்ப்பதுண்டா?

அநேகமாக எல்லாத் தமிழ்ப் படங்களையும் பார்ப்பதுடன், ஹிந்தி, ஆங்கிலப் படங்களையும் அடிக்கடி பார்க்கிறேன். ஆனால், அந்த ஜோக்கர் நடிக்கும் படங்களைப் பார்ப்பதில்லை — தமிழ்ப் படங்களைப்பற்றி உளறியிருப்பதால்.

# என்ன உறவு?

ஜி.கே.பொன்னம்மாள்

ஆறு பழத்தையும் நான்கு மசால் வடையையும், இரண்டு கிளாஸ் டீயையும் ஒரே மூச்சில் சாப்பிட்டுவிட்டு நிமிர்ந்தான் சோதியன். அவன் முகத்தில் வயிறு நிரம்பிவிட்ட திருப்தி நிழலாடியது. இடுப்பிலிருந்து சில்லறையை எடுத்து டீ கடை மேஜை மேல் வைத்துவிட்டு, தன் கைவண்டியை நோக்கி நடந்தான். வண்டி நிறைய வெங்காய மூட்டையும், புளி மூட்டையுமாக நிரம்பி இருந்தது. பலம் பொருந்திய காளைபோல் சோதியன் வண்டியை இழுத்துக்கொண்டு, அநாயாசமாக நடக்க ஆரம்பித்துவிட்டான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த மாதவன், 'அண்ணே நானும் ஒரு கை கொடுக்கட்டுமா' என்றான். 'எதற்கடா? என் இரண்டு கைகளும் எங்கே போயிற்று? கையில் துட்டில்லாவிட்டால் இந்தா 'நாலணா' போய் டீ சாப்பிடு' என்று நாலணாவை மாதவனுக்கு கொடுத்தான். வெயில் முதுகை துளைத்தது. அந்த தார் ரோடு வழியாக மின்னல் வேகத்தில், தன் கைவண்டியை இழுத்துக்கொண்டிருந்தான் சோதியன். அவன் வைரம் பாய்ந்த உடல், வியர்வையில் நனைந்து, வெயிலில் பளபளத்துக் கொண்டிருந்தது.

சோதியனையும், அவன் கைவண்டியையும் தெரியாதவர்கள் அந்தப் பேட்டையில் யாருமே கிடையாது. பெற்ற தாய் பிள்ளையிடம்காட்டும் அன்பைப்போல, சோதியன் தன் வண்டியிடம் அன்பு செலுத்தி வந்தான். பச்சை, சிவப்பு, நீலம் என்றுஅவன் வண்டிச் சக்கரம் அடிக்கடி நிறம் மாறிக்கொண்டே இருக்கும். அவனுக்கு வீடாகவும், படுக்கும் கட்டிலாகவும் எல்லாம் பயன்பட்டது அந்த வண்டி. காலையிலிருந்து மாலைவரை ஓயாமல் உழைத்துவிட்டு, மொஹிதீன் முதலாளி கொடுக்கும் கூலியை வாங்கிக்கொண்டு, மிலிட்டரி ஓட்டலில் நுழைந்துநன்றாக பிரியாணியும், வாத்து முட்டையுமாக ரசித்து சாப்பிட்டுவிட்டு, வேப்ப மரத்தடியில் தன் வண்டியில் தழை பாயை போட்டு படுத்துவிடுவான். தூக்கம் வரும்வரையில் பீடியை புகைத்தவாறு, சக வண்டிக்காரர்களுடன் அரட்டை அடித்துக்கொண்டிருந்துவிட்டு, நிம்மதியாக தூங்குவான். குடும்பம், பெண்டாட்டி என்ற தொந்தரவு எதுவும் இல்லாதபடியால், தன் சக தொழிலாளிகளுக்கு அவர்கள் கஷ்டம் உணர்ந்து, அடிக்கடி பண உதவி செய்வான். வண்டியில் எத்தனை மூட்டை சாமானை வைத்து அனுப்பினாலும், நாணயமாக குறிப்பிட்ட சமயம் கொண்டு போய் சோதியன் ஒருவன்தான் என்று அந்த பேட்டை வியாபாரிகளுக்கெல்லாம் நன்றாகத் தெரிந்திருந்தது. பழக்கடை பரமசிவம், வாழைப்பழம், மாம்பழம் என்று கூடை கூடையாக வாங்கி சோதியன் வண்டியில் வைத்து அனுப்பிவிடுவான். சந்தையிலிருந்து கடைத்தெருவுக்கு நாலு மைல் தூரம்; வழியில் எத்தனை பசித்தாலும் சோதியன், ஒரு பழத்தைக்கூட எடுத்து ருசி பார்த்துவிடமாட்டான். அத்தனை நாணயம். வழியில் தங்கள் வண்டியிலிருந்து பழத்தை எடுத்து சாப்பிடும் நண்பர்களிடம்கூட 'உழைத்து சாப்பிடவேணுமடா. உழைக்காமல் பிறர் பொருளைத் தின்றால், அது ஜீரணமாகாது' என்பான் சிரித்துக் கொண்டே. இரண்டு பேர் இழுக்கும் பாரத்தை அவன் ஒருவனே அனாயாசமாக இழுத்துவிடுவான். கடை முதலாளிகளிடம் கூலியும், அப்படி கணிசமாக சண்டை போட்டு வாங்கமாட்டான். கொடுத்ததை வாங்கிக்கொள்ளுவான். இந்த நல்ல குணங்களினால், சோதியனுக்கு வேலை இல்லை என்ற நிலைமையே ஏற்பட்டது கிடையாது.

அன்று லேசாக மழை தூறிக்கொண்டிருந்தது. ஜட்ஜு வீட்டு கலியாணத்துக்கு காய்கறிகளும், பூவும், பழமுமாக சோதியன் வண்டி நிறைந்திருந்தது. பின்னால் வந்த குமாஸ்தா 'சீக்கிரம் போ, அப்பா. இப்பவே மணி நாலு அடித்துவிட்டது. இந்த காய்கறிகள் போய்தான் இரவு சமையல் நடக்க வேண்டும். சமையற்காரன், என்னுடன் சண்டை போடுவான்' என்று துரிதப்படுத்தினார். சோதியனுக்கு கோபமாக வந்தது. 'இதோ பாருங்கள்! என் வண்டியில் கூடைகளை ஏற்றிவிட்டால், குறிப்பிட்ட சமயத்துக்கு கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது என் பொறுப்பு. அது எனக்கு தெரியும். நீங்கள் நடுவே தொண தொணக்க வேண்டாம்' என்று எச்சரித்துவிட்டு, அதிவேகமாக வண்டியைக் கிளப்பினான். எதிரே வந்த 'லாரி'யை சமாளிக்க, வண்டியை ஒடித்து திருப்பவே, வண்டியின் சக்கரம் பாதை ஓரத்தில் வந்து கொண்டிருந்த ஒரு சிறு பெண்மீது பட்டு, அந்தப் பெண், 'ஐயோ' என்று ஒரு ஓரமாக விழுந்தாள். அவள் கையிலிருந்த குவளையிலிருந்து சூடான டீ நாலாப்பக்கமும் சிந்தி ஓடியது. 'ஓ' என்று அழ ஆரம்பித்தாள், அந்தப் பெண். சோதியனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அதற்குள் தெருவில் கூட்டம் சேர்ந்துவிட்டது. கூட்டத்தை விலக்கிக்கொண்டு 'பெண்ணே, நீ இங்கே இரு; அழாதே. நான் வந்து உனக்கு வேறு டீ வாங்கித் தருகிறேன்' என்று சமாதானம் சொல்லிவிட்டு, வண்டியை இழுத்துக்கொண்டு முன் பாய்ந்தான்.

சோதியன் திரும்பி வந்ததும், அதே இடத்தில் அந்தப் பெண் அழுது கொண்டே நின்றிருந்தாள். 'அக்கா, அடிப்பாளே!' என்ற ஒரே வார்த்தைதான், அவள் வாயிலிருந்து வந்து கொண்டிருந்தது. அவள் முகத்தில் நிறைந்திருந்த சோகம், சோதியனை நிலைகுலையச் செய்தது. டீ கடையிலிருந்து அவள் குவளை நிறைய தேநீரும், இட்டிலியும், வடையும் வாங்கிக் கொடுத்தான். தின்பண்டங்களைப் பார்த்ததும், அந்தப் பெண்ணின் முகம் மலர்ந்தது. 'இதெல்லாம் உனக்கு யார் கொடுத்தார்கள்?' என்று கேட்டாள், அந்தப் பெண் மெல்லிய குரலில். 'உண்மையாக நடந்ததையெல்லாம் சொல்லிவிடு' என்றான் சோதியன். அந்தப் பெண் சந்தோஷத்துடன் குதித்துக்கொண்டு ஓடினாள். சோதியன் மனத்திரையில், அந்த சிறு பெண்ணின் உருவம் இடம் பெற்றுவிட்டது. என்னவென்று சொல்ல முடியாத ஒரு பாசம், அந்தப் பெண்ணிடம் தோன்றியது. நாட்கள் ஓடிக்கொண்டே இருந்தன. மறுபடியும் [illegible] அந்தப் பெண்ணைப் பார்க்கவேண்டும் என்று சோதியனுக்கு ஆசையாக இருந்தாலும், அவளைக் காண முடியவில்லை.

அன்று மைதீன் முதலாளியின் கடைக்கு பருப்பு மூட்டைகளை இறக்கிவிட்டு, கைவண்டி படியில் நிம்மதியாக பீடியை புகைத்தவாறு உட்கார்ந்திருந்தான் சோதியன். பின்னாலிருந்து கலீர் என்ற சிரிப்பொலி கேட்டு, திரும்பிய சோதியனுக்கு, அந்தச் சிறுமியை பார்த்ததும் மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. 'அதோ அந்த சிறுகுடிசைதான் எங்கள் வீடு. நீங்கள் வருகிறீர்களா? அன்று நீங்கள் வாங்கித் தந்த பணியாரங்கள், எத்தனை நன்றாக இருந்தது தெரியுமா? என்று பணியாரத்தின் ருசியை நினைவுபடுத்திக் கொண்டாள், அந்தப் பெண். அவள் பெயர் பகவதி என்றும், குடிசையில் அவளையும் அவள் சகோதரியையும் தவிர வேறு யாருமில்லை என்றும், தாய் தந்தையர்கள் விஷ ஜுரத்தால் இறந்து விட்டார்கள் என்றும் தெரிந்து கொண்டான் சோதியன்.

'அக்கா. அன்று என்னை ரோட்டில் தள்ளி விட்டு, பணியாரம் வாங்கி தந்தாரே—அந்த மாமா—வந்திருக்கிறான்' என்று குழந்தை உள்ளத்துடன் குரல்

கொடுத்தவாறே குடிசையை நோக்கி ஓடினாள். குடிசை என்ற பேரில், நாலு ஓலைக் கீற்றால் மறைத்திருந்த அந்த குடிசையிலிருந்து மெதுவாக எட்டிப் பார்த்தாள் அம்மு. சுமார், இருபத் பத்தொன்று வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த அவள், பசியிலும் பட்டினியிலும், மனோ வேதனையிலும் அடிபட்டு இருந்தாள். 'வாருங்கள். இந்த வீட்டில் விளக்கேற்ற கூட வசதி இல்லை. உங்களைப் பற்றி பகவதி சொன்னாள். உட்காருங்கள்' என்று கந்தல்பாயைப் போட்டாள். அந்த உபசரிப்பை ஏற்றுக்கொண்டு உட்கார்ந்தவாறு, அந்தக் குடிசையை கண்ணோட்டம் விட்டான் சோதியன். எந்த இடத்திலும் தரித்திர நிலையை பறை சாற்றிக் கொண்டிருந்தது. மூலையிலிருந்த அடுப்பருகே, இரண்டு மண் பானைகளைத் தவிர அங்கு வேறு எதுவும் இல்லை. எத்தனையோ நாட்களாக அடுப்பு புகையவேயில்லை என்று தெரிந்தது. இந்நிலையில் என்ன பேசுவது, என்று அவனுக்குத் தெரியவில்லை. 'ஏதாவது சாப்பிட்டாயா?' என்றான் பகவதியிடம். 'ஓ, சாப்பிட்டேனே ஒரு கோப்பை நிறைய, குளிர்ந்த தண்ணீரும், ரோட்டு ஓரத்திலிருக்கும், புளியமரத்திலிருந்து இரண்டு புளியம்பழமும் சாப்பிட்டேன்' என்றாள் கண்ணங்குழிய சிரித்துக் கொண்டே. 'நீங்கள் எப்படி காலம் தள்ளுகிறீர்கள்' என்றான் அம்முவிடம்.

ஒவ்வொரு நாளைத் தள்ளுவதும், ஒவ்வொரு யுகமாக இருக்கிறது. ஏதோ, என்னாலான வேலையைச் செய்கிறேன். இலை தைத்தும் பக்கத்து வீடுகளில் ஏதாவது வேலை செய்து கொடுத்தும் காலம் தள்ளுகிறோம். அப்பா— குடையிப்பேர் செய்து கொண்டிருந்தார். அம்மா தோசை வியாபாரம் செய்து வந்தாள். நல்ல வரும்படி வந்து கொண்டிருந்தது. நானும், என் தங்கையும், செல்லமாகவே வளர்ந்து விட்டோம். அவர்கள் எங்களை, விட்டுப் போன பின் கண்ணைக் கட்டி, காட்டில் விட்டதுபோல் இருக்கிறது. எப்படியோ—சாகாமல் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறோம்' என்றான் விம்மலுக்கிடையே. சோதியன் கண்களிலும் நீர் நிறைந்து விட்டது. 'சரி, பகவதி, என்னுடன் வா. அரிசி வாங்கித் தருகிறேன். இரவு சமையல் செய்து சாப்பிடுங்கள்' என்றான்.

'நீங்கள் எதற்காக சிரமம் எடுத்துக் கொள்கிறீர்கள். எங்கள் தலைவிதிப்படி நடக்கிறது.' என்றாள் அம்மு.

'நான் உங்களுக்கு உதவுவது கெட்ட எண்ணத்திலல் அல்ல. அதை மட்டும் நம்புங்கள். நானும் ஒரு அநாதை. நான் உதவவோ, எனக்கு உதவவோ, எவரும் கிடையாது. இந்தக் குழந்தை பகவதி, என் மனதில் இடம் பெற்று விட்டாள். என் செய்கையை தடுக்காதீர்கள்' என்றான் தீர்மானமாக. அவன் போக எழுந்தான். 'நீங்களும் என்னுடன் சாப்பிட வருவீர்களா மாமா' என்றாள் பகவதி.

சோதியன் யோசித்தான். 'இன்று இரவு எனக்கும் சாப்பாடு போடுகிறீர்களா? என்றான் அம்முவிடம். அம்மு யோசனையில் ஆழ்ந்தாள். அவள் முகத்தில் சிந்தனையின் ரேகை படர்ந்தது. 'சாப்பாடு போடுகிறேன்' என்று சொல்லேன் அக்கா. அப்பொழுது தானே, எனக்கும் சாப்பிடலாம்' என்றாள் குழந்தைத் தனமாக பகவதி.

'ஊரார் என்ன சொல்லுவார்கள். ஆடவர்கள் யாரும் இல்லாத இந்த வீட்டில் நான் உங்களுக்கு சாப்பாடு போட்டால்?' என்றாள் தயக்கத்துடன். ஊரார் என்னதான் சொல்லமாட்டார்கள்? நேர்மை, நம் மனதில் இருக்க வேண்டும். கடவுளுக்குத்தான் பயப்பட வேண்டுமே தவிர ஊராருக்கல்ல. சரி. நான் வருகிறேன். வா குழந்தாய்' என்று பகவதியின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்தான். ஒரு கடையில் அரிசி, பருப்பு, எண்ணெய், விளக்கேற்ற மண்ணெண்ணெய் — காய் கறிகள் எல்லாம் வாங்கி நிரப்பிவிட்டு பகவதியிடம், இரண்டு ரூபாயையும் கொடுத்தான். சோதியன். 'நீ வீட்டுக்குப் போ' பகவதி. நான் வேலையை முடித்து விட்டு சாப்பிட வருகிறேன்' என்றான். 'கட்டாயம் வர வேண்டும். நான் உங்களுக்காக காத்திருப்பேன்' என்றாள் பகவதி.



அன்று இரவு சாப்பிடும்போது. சூடான வெங்காயக் குழம்பும், கத்தரிக்காய் பொரியலும், சோதியனின் இலையில் விழுந்தன. பகவதியுடன் பேசியவாறு சாப்பிடுவது அவனுக்கு திருப்தி அளித்தது. மறுநாளிலிருந்து, சோதியன் தன் ஜாகையை அந்த குடிசைக்கே மாற்றிக்கொண்டான். அந்தக் குடிசையில் இப்பொழுது, பல முன்னேற்றங்கள் காணப்பட்டன. கூரை வேய்ந்து, இரண்டு அறைகளாக தடுக்கப்பட்டிருந்தன. முன் அறையில் சோதியன், தன் தகரப் பெட்டியை வைத்துக் கொண்டான். அம்முவுக்கும் பகவதிக்கும் நல்ல துணிமணிகள் வாங்கிக் கொடுத்தான் என்றும், காலையிலும், மாலையிலும் அம்முவின் குடிசையிலிருந்து அடுப்பு புகை கிளம்புவதையும், ரசம் கொதிக்கும் வாசனையும், வெங்காய குழம்பின் வாசனையும், வருவதைப் பார்த்து பக்கத்து குடிசையில் வசிப்பவர்கள் அதிசயப்பட்டார்கள். அன்று சாப்பிடும்போது 'பகவதி உனக்கு படிக்க வேண்டும் என்று ஆசையிருக்கிறதா?' என்றான் சோதியன். பகவதி மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள். ஆமாம் மாமா. 'எனக்கு படிக்க வேண்டும் பக்கத்து வீட்டு பாருவும் அப்புக்குட்டனும், பள்ளிக்கூடத்துக்கு புத்தகப் பையை தோளில் போட்டுக்கொண்டு போவது போல் எனக்கும் போக வேண்டும் மாமா? என்றாள். மறுநாள் பகவதியை பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டான் சோதியன்.

நாட்கள் ஓடிக்கொண்டே இருந்தது. இப்பொழுதெல்லாம் சோதியனுக்கு செலவு அதிகமாகிக் கொண்டே வந்தது. உழைப்பு, உழைப்பு என்று உழைத்தான். உழைப்புக்குத் தக்க கூலியை கணக்குப் பேசி வாங்கினான், முன்மாதிரி 'உங்கள் இஷ்டப்படி கொடுங்கள்' என்ற பேச்சையே விட்டு விட்டான்.

அவனுக்கு வாழ்க்கையில் ஒரு லட்சியம் ஏற்பட்டு விட்டது. கண்ட கண்ட சமயங்களில் டீ சாப்பிடும் பழக்கத்தை விட்டு விட்டான். அவசியம் என்று தோன்றினால்தான் சாப்பிடுவான். காலையில் வேலைக்கு கிளம்பும்போது, புத்தம் புது அலுமினியம் தூக்கில் ருசியாக சோறும், கறியும் தயார் செய்து கொடுத்து விடுவாள், அம்மு பகல் அந்தச் சாப்பாட்டு குழாயிலிருந்து தண்ணீரையும் சாப்பிடுவான். அப்படி மிலிட்டரி ஓட்டலில் செலவு செய்து வந்த பணம் மீதியாயிற்று. இரவு குடிசைக்கு வந்ததும் வெத வெத என்று வெந்நீர் தயாராக இருக்கும். உடம்பு வலி தீர குளித்து விட்டு சாப்பிடுவான் பகவதி. அன்று பள்ளிக்கூடத்தில் நடந்த வேடிக்கைகளையும், தான் படித்த பாடங்களையும் சொல்லிக் காட்டுவாள். அந்த இன்பத்தில் மெய்மறந்து விடுவான் சோதியன். அவன், உண்ணும் போதும், உறங்கும்போதும், அவன் நினைவெல்லாம் பகவதியின் முன்னேற்றத்திலே இருக்கும். பகவதி எதைக் கேட்டாலும், அது தன் சக்திக்கு மீறியதாக இருந்தாலும், வாங்கி கொடுத்து விடுவான்.



டியூஷன் வாத்யார்:—டேய் அப்பாக்கு காலே வாங்கேண்டா?

ஃ ஃ ஃ

கொளுத்தும் வெயிலில் சோதியன் வண்டியை இழுத்துக்கொண்டு போகும் போது பகவதி தன் தோழிகளுடன் பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருப்

பான். தலைவாரிப் பின்னி பாவாடையும், ஜாக்கெட்டும் போட்டுக்கொண்டு சிரித்துப் பேசிக்கொண்டு போகும் பகவதியை பார்த்து பெருமை அடைவான் சோதியன். மாலை வேளையில் பள்ளிக்கூட வாசலில் மறைந்து நின்று பகவதி பள்ளிக்கூடத்திலிருந்து வெளியே வரும் அழகைப் பார்த்து ரசிப்பான் அவன். பகவதி வழியில் சோதியனைப் பார்த்தால் பார்க்காதது போல் போய்விடுவாள். பகவதியின் தோழிகள்—ஜட்ஜு வீட்டு பெண், டாக்டரின் மகள், கம்பெனி முதலாளியின் மகள், என்று பணக்கார வீட்டுப் பெண்களாகவே இருந்தார்கள்.

பகவதி மேல் வகுப்புக்குப் போவதோடு சோதியனின், செலவும் பன்மடங்கு அதிகமாயிற்று. சோதியனின் சக தொழிலாளிகள் பலவிதமாக பேசிக்கொண்டார்கள். 'சோதியனுக்கென்ன? ஒரு பெண்ணையும், அவள் தமக்கையையும், காப்பாற்ற வேண்டிய பொறுப்பு வந்துவிட்டது. இப்பொழுது பணத்தை கணக்குப் பேசி வாங்கிக் கொள்கிறான். முன்போல் நாலணா எட்டணா, என்று நமக்கு உதவுவதையே மறந்துவிட்டான்' என்றான் ஒருவன்.

'தன் நிலைமைக்கு ஏற்றபடி வாழ வேண்டும். அந்தப் பெண்ணை உயர்நிலை பள்ளிக்கு அனுப்புகிறான். எத்தனை பணம் வந்தாலும் அவள் படிப்புக்கே, சரியாக இருக்கிறது. இந்தப்பயல் இப்பொழுது இரவில்கூட வண்டி தள்ளுகிறான்' என்றான் இன்னொருவன். இதெல்லாம் சோதியன் காதில் விழுந்து கொண்டுதான் இருந்தது. அவன் எதையும் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை; அவனுக்கு உழைத்து. உழைத்து, சாப்பிடவும், குளிக்கவும்கூட பொழுது கிடைக்கவில்லை. ஓயாத வேலை. இரவு சற்று ஓய்வு. அந்த சமயம் பகவதியை பாடச்சொல்லி கேட்டு மகிழ்வான். அவளுக்கு இயற்கையிலேயே நல்ல சாரீரம் இருந்தது. எந்த மழையிலும், பனியிலும் சோதியன் குடிசைத் திண்ணையில்தான் படுத்துக் கொள்ளுவான். இதுவரையிலும் சோதியன் முறை தவறி அம்முவிடம், பேசியதோ—பழகியதோ கிடையாது. அம்முவையும் சோதியனையும் பற்றி தாறுமாறாக பேசிக்கொண்டார்கள், பக்கத்து குடிசையில் வசிப்பவர்கள்.

பகவதி நன்றாக வளர்ந்து யுவதி ஆகிவிட்டாள்: பாவாடை கட்டிக்கொண்டிருந்தவள் தாவணி போட ஆரம்பித்துவிட்டாள். இப்பொழுதெல்லாம், அவள் அதிகமாக சோதியனிடம் பேசுவதே கிடையாது. புத்தக படிப்பிலேயே, மூழ்கியிருப்பாள். காலையில் அவள் படுக்கையை விட்டு, எழுந்து வருவதற்குமுன், அவன் வேலைக்கு போயிருப்பான். இரவு அவன் வீடு திரும்பும்போது அவள் தூங்கியிருப்பாள். இப்படியே நாட்கள் நகர்ந்தன. அவள் தேவைகள் எல்லாம், அம்மு மூலமாகவே, சோதியனுக்கு அறிவிக்கப்பட்டன.

அன்று சந்தோஷத்தோடு வீட்டுக்கு வந்தாள் பகவதி, 'அக்கா நாளை எங்கள் பள்ளிக்கூடத்தில் நாடகம் நடக்கிறது. நான்கூட நடிக்கிறேன். வீடு திரும்பும்போது, இரவு பன்னிரண்டு மணி ஆகிவிடும். தனிமையில் எப்படி திரும்பி வருவேன் என்றுதான் தெரியவில்லை' என்றாள்.

'உன் மாமாவை அழைத்துக்கொண்டு போயேன். அவரும் நாடகம் பார்க்கட்டுமே' என்றாள் அம்மு வெகுளித்தனமாக.

பகவதியின் முகத்தில் வெறுப்பு தோன்றியது. அதெல்லாம் முடியாது அக்கா—என்னுடன் நடிப்பவர்கள் எல்லாம் பணக்கார வீட்டுப் பெண்கள். அவர்கள் வண்டி இழுத்துப் பிழைக்கும் மாமாவை பார்த்தால், பிறகு என்னுடன் பேசக்கூடமாட்டார்கள்' என்றாள்.

அம்முவுக்கு கோபத்தால் உடல் நடுங்கியது. 'அடி நன்றிகெட்ட பெண்ணே. உனக்கெப்படியடி இத்தனை துணிச்சல் வந்தது. தெருவில் கிடந்த உன்னை, இன்று இப்படி பேசவைக்க, சோறு போட்டு படிக்கவைத்த அந்த மனிதனை பற்றியா இப்படிப் பேசுகிறாய்?' அவள் குரல் இதுவரையில் இப்படி ஓங்கியதே இல்லை. கதவுக்கு வெளியே சோதியன் இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தான். அவனுக்கு கோபத்தால்



உடல் ரத்தமெல்லாம் முகத்துக்கு வந்துவிட்டதுபோல் முகம் சிவந்தது. அவளை அடித்து நொறுக்கிவிடவேண்டும் என்று தோன்றியது, ஒரு கணம் யோசித்தான். எட்டு வருடம், படாத பாடுபட்டு. அதிகமாக உழைத்து, கட்டிய கண்ணாடி மாளிகையை, ஒரே கணத்தில் தகர்த்துவிடலாம். ஆனால், அது கூடாது. முகத்தில் லேசாக புன்னகை பரவியது. சத்தமாக இருமி தன் வருகையை தெரிவித்தான். அக்காளும், தங்கையும், அறைக்கு வெளியே வந்தார்கள்.

அன்று சாப்பிடும்போது சோதியனுக்கு சாதம் ருசிக்கவில்லை. மனக்குமுறலை ஒருவாறு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான். அம்முவும் எதுவும் பேசவில்லை. மௌனமாகவே சாப்பாடு நடந்து கொண்டிருந்தது. 'இந்தப் பெண் பகவதியின் படிப்பை நிறுத்தி விடுவதுதான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. படிப்பு அதிகமாக. அதிகமாக அவளுக்கு திமிர் அதிகமாகிறது. மட்டு மரியாதை இல்லாமல் பேசுகிறாள்' என்றாள் அம்மு படபடப்புடன். சோதியன் லேசாக சிரித்தான். 'அவள் சின்ன பெண்தானே. அவள் பேசுவதையெல்லாம் தப்பாக நினைத்துக்கொள்ளக்கூடாது' என்றான். 'அது மட்டுமல்ல; உங்களால் தாங்க முடியாத அளவுக்கு இப்பொழுது செலவு அதிகமாகிக்கொண்டு வருகிறது. நாளை சம்பளம் கட்ட வேண்டுமாம். நீங்கள் இப்படி எங்களுக்காக, உழைத்து ஓடாவதை என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. நீங்கள் மிகவும், மெலிந்துவிட்டீர்கள். முன்போல் சாப்பிடவும் மாட்டேன் என்கிறீர்கள். அடிக்கடி இருமல் வேறு உங்களுக்கு தொந்தரவு கொடுக்கிறது' என்றாள் கவலையுடன்.

'அதெல்லாம் ஒன்றுமில்லை. பகவதிக்கு எந்தக் குறையும் வைக்கக்கூடாது. அவளுக்கு என்னைத் தவிர யார் இருக்கிறார்கள்?" அவள் என்னிடம்தானே கேட்பாள். நாளை சம்பளம் கட்டிவிடலாம்' என்றான் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தோரணையில்.

மறுநாள் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போதே சோதியன் இருமலுடன்தான் எழுந்திருந்தான். அவன் உடம்பும் லேசாக சுட்டுக்கொண்டிருந்தது. தள்ளாடியவாறு, திண்ணையிலிருந்து இறங்கினான். இதைப் பார்த்த அம்மு, அவன் முன்னால் சென்று 'இன்று வேலைக்குப் போக வேண்டாம். தயவுசெய்து ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்' என்றாள். 'எல்லாம் என் உடம்பை பற்றி எனக்குத் தெரியும் வழியைவிடு. இன்று பகவதிக்குச் சம்பளம் கட்ட வேண்டும்' என்றான் அதட்டும் குரலில். அவள் பதில் பேசவில்லை. அம்முவின் மனம் அந்த உழைப்பாளியை நினைத்து வியந்துகொண்டிருந்தது.

இரவு சமையல் செய்துவிட்டு, விளக்கருகே உட்கார்ந்திருந்தாள் அம்மு. மணி பன்னிரண்டு அடித்துவிட்டது. இன்னும் பகவதி பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பவில்லை. இந்தப் பெண் இப்படி சோதியனை கேவலமாக நினைக்கிறதே, என்று நினைத்து வருத்தப்பட்டாள் அம்மு.

வெளிச்சத்தை வாரி இறைத்துக் கொண்டு ஒரு விலை உயர்ந்த கார் ரோட்டில் வந்து நின்றது. அதிலிருந்து சிரித்துக்கொண்டே பகவதி இறங்கினாள். காரில் இருந்து ஒரு ஆடவனின் குரலும் அம்முவின் காதுகளில் நன்றாக விழுந்தது. அம்மு வந்தகோபத்தை அடக்கிக்கொண்டே, 'யாருடனடி காரில் வந்தாய்? இது உனக்கு அவமானமாக இல்லை. இதை மாமா—பார்த்தால் நாக்கை பிடுங்கிக்கொண்டு உயிரை விட்டுவிடுவார்' என்றாள்.

'கோபித்துக்கொள்ளாதே அக்கா. அவர்தான் கிரிதரன்: என்னுடன் படிக்கும் ராதையின் அண்ணன். நம் மாமாவைக்கூட அவருக்கு நன்றாகத் தெரியுமாம். என் நடிப்பை மிகவும் பாராட்டினார். இந்த ஊர் வியாபாரிகளில் அவர் அப்பாதான் மிகவும் பணக்காரராம். அவர் நாளைக்கு நம் வீட்டுக்கு வருகிறேன் என்றார். மாமாவிடம் எதைப்பற்றியோ பேச வேண்டுமாம்' என்றாள் நாணத்துடன் பகவதி. அவள் முகம் குங்குமம்போல் சிவந்துவிட்டது. ஒருவாறு விஷயத்தை ஊகித்துக்

கொண்ட அம்மு 'பெண் நம் கைப் பிடியைவிட்டு நழுவிக்கொண்டிருக்கிறாள்' என்று நினைத்தாள்.

வானத்தில் மேகங்கள் தோன்றி வரப்போகும் மழைக்கு கட்டியம் கூறின. இடியும், மின்னலும் உடன் சேர்ந்துகொண்டன. பகவதி சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொண்டுவிட்டாள். அம்மு திண்ணையில் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். இருட்டில், மின் மினி பூச்சிகள் கண்ணை சிமிட்டிக்கொண்டிருந்தன. தூரத்தில் ஒரு சொறி நாய் குலைத்துக்கொண்டிருந்தது. உலகமே இருளின் அணைப்பில், முழுகியிருந்தது. திண்ணையிலிருந்த அகல் விளக்கு காற்றில் இப்பொழுது அணைந்துவிடுவேன் என்று பயம் காட்டியது. தூரத்தே இருமல் சத்தம் கேட்டது. அந்த மங்கிய வெளிச்சத்திலும் நடக்கும் பாணியிலிருந்து வருவது சோதியன்தான் என்று தெரிந்தது அம்முவுக்கு. விளக்கு கம்பத்தைப் பிடித்துக்கொண்டு நெஞ்சு பொடியாகிவிடும்படி இருமினான் சோதியன். இரண்டு நிமிஷம் நின்று ஆஸ்வாசப்படுத்திக்கொண்டு தள்ளாடியவாறு நடந்து வந்துகொண்டிருந்தான். லேசாக மழை தூறியதைக்கூட அவன் பொருட்படுத்தப்படவில்லை. இப்பொழுதெல்லாம், இருமிவிட்டு, உமிழும் போது ரத்தம் வந்துகொண்டிருந்தது. வீட்டை அடைந்ததும் 'நீ இன்னும் தூங்கவில்லையா?' என்றான் அம்முவிடம் 'இல்லை' என்றாள் அம்மு ஒரே வார்த்தையில். பேருக்கு இரண்டு வாய் சோற்றை அள்ளிப் போட்டுக்கொண்டு, திண்ணையில் உட்கார்ந்தான் சோதியன். தலையணையும் பாயும் போட்டிருந்தாலும் இருமல் அவனை படுக்கவிடாமல் தொந்தரவு படுத்திக்கொண்டிருந்தது. இதுவரையில் குமுறிக்கொண்டிருந்த வானத்திலிருந்து சோ என்ற இரைச்சலுடன் மழை கொட்ட ஆரம்பித்தது. மின்னல் கண்ணைப் பறித்தது. சாரல் அடித்து சோதியன் பாயெல்லாம் நனைந்துவிட்டது. கதவைத் திறந்துகொண்டு வந்த அம்மு 'இப்படி மழையில் நனைந்தால் உடம்புக்கு வந்துவிடுமே. உள்ளே வந்து படுத்துக் கொள்ளுங்கள். நான் வெளியே படுத்துக் கொள்கிறேன்' என்றாள். 'வேண்டாம். உள்ளே போ' என்றான் சோதியன் அதட்டும் குரலில். இத்தனை நாள் பழக்கத்திலிருந்து சோதியன் குணம் அவளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அவனுக்கு தோன்றினால்தான் ஒரு காரியம் செய்வானே தவிர, பிறர் சொல்லி கேட்பது என்பது அவன் அகராதியிலே கிடையாது. தன் மனதுக்கு பட்டதுதான் சரி என்று வாதிப்பான். இதையெல்லாம் தெரிந்துகொண்டிருந்தபடியால், அம்மு





மறு பேச்சுப் பேசாமல், அறைக்குள் சென்று கதவை தாளிட்டுக்கொண்டாள். அன்று இரவெல்லாம் திண்ணையில் சோதியனும், அறைக்குள் அம்முவும் தூங்கவே இல்லை. பொழுது விடியும் தருணத்தில் சோதியனும் சற்று கண் அயர்ந்தான். நனைந்த பாயில் அவன் முடங்கிக் கிடந்த காட்சியைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. லேசாக இளம் வெயில் உடம்பில் பட்டதும், கண்ணை விழித்தான் சோதியன். சூடான காப்பியை வைத்துக்கொண்டு, எத்தனையோ நாட்களுக்குப் பிறகு பகவதி அவன் அருகே நின்றிருந்தாள். காலையில் குளித்துவிட்டு, பவழ மல்லி பூவை சரமாக தொடுத்து தலையில் வைத்துக்கொண்டிருந்தாள் பகவதி. நெற்றியில் சிறு குங்குமப் பொட்டு. கழுத்தில் கறுப்பு மணிமாலை. எல்லாமாக அவள் வெகு அழகாக இருந்தாள். இயற்கை, ஏழைப் பெண் என்ற வித்தியாசம் பாராட்டாமல், அழகை வாரிச் சொரிந்திருந்தது அவள் உடலில்.



எதிரிலிருந்த பவழமல்லி மரம் பூத்து குலுங்குவதைப்போல், அவளும் தன் முத்துப் பல் வரிசை தெரிய சிரித்தாள். 'என்ன வேண்டும் குழந்தாய்?' என்றான் சோதியன். அந்தக் குரலில் அன்பும், பாசமும் நிறைந்திருந்தது. 'மாமா! உங்களுக்கு கிரிதரனை தெரியுமா?' என்று கேட்டாள் பகவதி. 'தெரியும், மிகவும் நல்லவர். பணக்காரர்' என்று பதில்வந்தது. 'அவர் இன்று உங்களைப் பார்க்க வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் சீக்கிரம் காப்பியைச் சாப்பிடுங்கள்' என்று உபசரித்தாள் பகவதி. 'அவர் எதற்காக என்னைப் பார்க்க வரவேண்டும்? அவர் பணக்காரர்' என்றான் சோதியன். 'அதை அவரே சொல்லுவார், மாமா' என்றாள் பகவதி வெட்கத்துடன். 'உம்' என்ற பதில்தான் சோதியனிடமிருந்து வந்தது. அவன் நெற்றி சுருங்கியது. கேள்விக் குறி ஒன்று அவன் முகத்தில் எழுந்தது.

படாரென்று கார் கதவை சாத்திவிட்டு மகிழ்ச்சி பொங்க, இறங்கி வந்தான் கிரிதரன். சில்க் சட்டை, ஜரிகை வேஷ்டி, பிரகாசமான கண்கள், முகத்துக்கு அழகு தரும் அரும்பு மீசை, கழுத்தில் மெல்லிய தங்க செயின்; எல்லாமாக அவன் பணப் பெருமையை எடுத்துக் காட்டின.

'வாருங்கள்' என்றான் சோதியன். அந்தக் கந்தல் பாயில் கிரிதரனும் உட்கார்ந்துகொண்டான்.

'நான் உங்களிடம் ஒரு விஷயம் பேசவேண்டும் என்றுதான் வந்தேன். பணக்காரர்-ஏழை என்ற வித்தியாசமெல்லாம் எனக்கு கிடையாது. நான் உங்கள் பகவதியை கலியாணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன். என் அப்பாவும் சம்மதித்துவிட்டார். பகவதியும் விரும்புகிறாள். உங்கள் அனுமதிதான் வேண்டும்' என்றான் குழைவுடன் கிரிதரன். ஓலைச் சுவருக்குப் பின்னாலிருந்து பகவதி, சோதியன் என்ன பதில் சொல்லப்போகிறான் என்பதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். 'எதற்கும் அவள் பரீட்சை முடிந்து கலியாணத்தை வைத்துக்கொள்ளுங்கள். எனக்கிதால் சந்தோஷம்தான்' உணர்ச்சியற்ற குரலில் சோதியன். கிரிதரன் ஜேபியிலிருந்து ஒரு கவரை வெளியே எடுத்து, 'இதை என் அன்பளிப்பாக வைத்துக்கொள்ளுங்கள். நான் ஏதோ பணத் திமிரினால் பேசுகிறேன் என்று நினைக்காதீர்கள்' என்று கவரை சோதியனிடம் கொடுத்தான். கவரைப் பிரித்துப் பார்த்த சோதியன், அதில் கத்தை கத்தையாக ரூபாய் நோட்டு இருப்பதை பார்த்துவிட்டு, வரண்ட சிரிப்புடன் 'இதெல்லாம் எனக்கு வேண்டாம். இந்த கை உழைத்து உண்ணும் கை. அன்பளிப்பு பெற்று இந்த கைக்கு பழக்கமில்லை. இதை எடுத்துக்கொண்டு போங்கள்' என்றான் தீர்மானமான குரலில்.

மறு பேச்சு பேசாமல் கிரிதரன் வெளியே நடந்தான். கிரிதரனின் தலை மறைந்ததும், அம்மு அறைக்குள்ளிருந்து வெளியே வந்தாள்.

'இந்தப் பிடிவாத குணம்தான் உங்களை நாசப்படுத்துகிறது. அவர் அத்தனை அன்பாக தந்த பணத்தை வாங்கிக்கொண்டால் என்னவாம். ஏதாவது மருந்து வாங்கி சாப்பிட்டு உடம்பை பார்த்துக்கொள்ளலாமே. வலிய வந்த ஸ்ரீதேவியை உதறி தள்ளிவிட்டீர்கள்' என்று பேசிக்கொண்டிருக்கும் போதே, சோதியன் துள்ளி எழுந்தான். 'சரி. வாயை அடக்கிப் பேசு. பணத்தைக் கண்டு பல்லை இளிக்கும் குணம் எனக்கு கிடையாது. எனக்கு யாரும் உபதேசம் பண்ணவேண்டாம். படாடோப வாழ்க்கை எனக்கு வேண்டாம். இந்தக் கை உழைக்க பிறந்தது. என் எதிரில் நிற்காதே' என்று எரிந்து விழுந்தான்.

கோபத்தால் அவன் உடல் பதறியது. தள்ளாடிக்கொண்டிருந்தான். அம்முவுக்கு அழுகை வந்துவிட்டது. 'நான் இப்பொழுது என்ன சொல்லிவிட்டேன்' என்றாள் கவலையுடன்.

பதில் பேசாமல், எடுத்து வைத்த காப்பியையும் சாப்பிடாமல், சோதியன் வெளியே சென்று விட்டான். அன்றிலிருந்து ஆகாயவெளியை பார்த்துக்கொண்டே பொழுது போவது தெரியாமல் உட்கார்ந்து விடுவான். இப்பொழுதெல்லாம் சோதியனால் முன்போல் வேலை செய்ய முடிய



வில்லை. இரண்டு பர்லாங் வண்டி தள்ளுவதற்குள், இருமல் வந்துவிடும். இதனால் கடை முதலாளிகள் சோதியன் வண்டியைக் கூப்பிடுவது கிடையாது. அன்று இரண்டு மூட்டை உப்பை வண்டியிலேற்றிக்கொண்டு புறப்பட்டான் சோதியன். பாதி வழியில் உடல் அசதியினால் கையை விட்டுவிட்டான். உப்பு மூட்டைகள் மண்ணில் விழுந்தன. இதைப் பார்த்த மற்ற வண்டிக்காரர்கள் சிரித்தார்கள். உப்பானதால் அதிக நஷ்டம் ஏற்படவில்லை. அதே வண்டியில் இருபது மூட்டைகளை ஏற்றிக்கொண்டு அநாயாசமாக இருக்கும் நமக்கா இந்த கதி? என்று சோதியன் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டான்.

பகவதிக்கு இந்த உலகமே, இன்பமயமாகத் தோன்றியது. அந்த மாதம் நாலாம் தேதி கலியாணம் நிச்சயமாகிவிட்டிருந்தது. அவள் புது மணப் பெண்ணுக்கேற்ப அழகில் இன்னும் கவர்ச்சியுடன் காணப்பட்டாள். கிரிதரன் அவளுக்கு நல்ல புடவைகளும், நகைகளும் வாங்கி அனுப்பியிருந்தான். அக்காளும், தங்கையும் அவைகளைப் பார்த்து மகிழும் இன்பத்தில் மூழ்கியிருந்தார்கள். சோதியன் எப்பொழுதும்போல் வேலைக்குப் போவதும், வருவதுமாக இருந்தான்.

விடிந்தால் பகவதிக்கு கலியாணம், கிரிதரன் வீட்டிலேயே நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று இரவு வெகு நேரமாகியும், சோதியன் வீடு திரும்பவில்லை. களைப்பு மிகுதியால் ரோட்டில் எங்காவது மயக்கமாக விழுந்திருப்பானோ என்ற கவலை அம்முவைப் பிடித்துக்கொண்டது. இரவு பன்னிரண்டு மணிக்கு தள்ளாடியவாறு வந்தான் சோதியன். கையில ஒரு பொட்டலம் வைத்திருந்தான். அதை அம்முவிடம் கொடுத்துவிட்டு, 'இதை பகவதிக்கு கலியாணப் பரிசாக கொடுத்துவிடு' என்றான். கண்ணைப் பறிக்கும்படி ஜரிகைபார்டருடன் ஒரு பட்டு புடவை அதில் இருந்தது. 'இது வாங்க உங்களுக்கு பணம் எப்படி கிடைத்தது' என்ற அம்முவின் கேள்விக்கு, 'என்னுடைய செல்வமான கை வண்டியை விற்றுவிட்டேன். நாளை ஒரு நல்ல நாள் என் உழைப்பால் வளர்ந்த சிறுமி பகவதி, யுவதியாகி, மணம் செய்துகொள்ளும் நன்னாள். அதைக் கொண்டாட வேண்டாமா? என் வண்டி போனால் போகிறது. இனிமேல் நான் யாருக்காக வாழவேண்டும்? யாருக்காக உழைக்கவேண்டும்? என் வாழ்வில் சுடர் விளக்காக இருந்தவள், என்னைவிட்டுப் போகிறாள்' என்று பேச முடியாமல் திணறினான். இருமல் அவன் இதயத்தை உலுக்கி எடுத்தது. இந்தப் பேச்சை கேட்டுக்கொண்டிருந்த பகவதியும் உணர்ச்சி வசப்பட்டு, 'மாமா, என்னை மன்னித்துவிடுங்கள். நான் இதுவரையில் நன்றி மறந்து, உங்களை உதாசீனம் செய்து வந்தேன். தெருவில் அநாதையாகக் கிடந்த என்னை எடுத்து வளர்த்து, படிக்க வைத்து, இந்த உன்னத நிலைமைக்கு கொண்டு வந்தவர் நீங்கள்தான். இதற்காக உங்கள் வாழ்க்கையே தியாகம் செய்துவிட்டீர்கள். நீங்கள் உடல் நோயால் அவதிப்படுவதும், எங்களுக்காக உழைத்ததன் பலன்தான். என்னை மன்னித்துவிடுங்கள்' என்று சோதியன் காலில் விழுந்தாள்.

கண்ணீர் வழிய பகவதியை தூக்கி நிறுத்தினான் சோதியன். 'அழாதே, குழந்தாய்! உனக்கு ஒரு குறையும் வராது. என் மனம் இப்பொழுது நிறைந்திருக்கிறது. நாளை கலியாணமாக வேண்டிய நீ அழவே கூடாது' என்று தேற்றினான். அந்த இரு உள்ளங்களும், அன்பின் ஆழத்தில் மூழ்கி பரவசமாகியது. அன்று இரவு எத்தனையோ நாட்களுக்குப் பிறகு சோதியன் ருசித்து சாப்பிட்டான். இரண்டு முறை வாய்விட்டு சிரிக்கக்கூட செய்தான். மறுநாள் பொழுது விடிந்ததும், பகவதியும் அம்முவும் கிரிதரன் வீட்டுக்கு புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள். வாசலில் அவர்களுக்காக கார் ரெடியாக காத்துக்கொண்டிருந்தது. சோதியன் நிம்மதியாக தூங்கிக்கொண்டிருந்தான். பகவதிதான் அவனை எழுப்பினாள். சோதியனுக்கு புது வேஷ்டியும், அங்கவஸ்திரமும் தயாராக வைத்திருந்தாள். கண்ணை விழித்ததும், மணப் பெண்ணுக்கு ஆசி

கூறிவிட்டு, 'சீக்கிரம் புறப்படுங்கள்' என்றான். 'மாமா, இதோ நல்ல உடைகள். நீங்கள் வரவேண்டும்' என்றாள் பகவதி.

'நான் அங்கு வரவேண்டிய அவசியமில்லை. நான் இல்லாமல் கலியாணம் நின்றுவிடாது. சீக்கிரம் புறப்படுங்கள்' என்றான் சோதியன் அழுத்தமாக.

'ஏதோ குழந்தை ஆசைப்படுகிறாள், வாருங்கள். கலியாண சமயம் எத்தனை பேர்கள் இருந்தாலும், மாமா வரவில்லையே என்று அவள் குறைபட்டுக் கொள்ளுவாள். இங்கு தனிமையில் என்ன செய்யப் போகிறீர்கள்? நீங்கள் வரவில்லை என்றால் பகவதி வருத்தப்படுவாள்; புறப்படுங்கள்' என்றாள் தாங்கியபடி அம்மு.

சோதியன் ஒரு வரண்ட சிரிப்பு சிரித்தான். அவனைப் பேசவிடாமல் இருமல் தடுத்தது.

'தனிமையா? அதுதான் மனிதனுக்கு நிரந்தரமானது. துணைகள் எல்லாம் நடுவில் வந்துபோகும். பிறக்கும் போதும் தனியே பிறக்கிறான். இறக்கும்போதும், தனிமையில் இறக்கிறான். தனிமையைப்பற்றி, எனக்கு பயமில்லை. என்னைப் பற்றி கவலைப்படாதீர்கள். பகவதியும் நான் வரவில்லை என்று வருத்தப்படமாட்டாள். அவளைத் தேற்ற இன்னொருவர் வந்துவிட்டார். போய் வாருங்கள்' என்றான் விடை கொடுக்கும் தோரணையில்.

அவன் பிடிவாத குணத்தை நன்கு தெரிந்துகொண்டிருந்த அம்முவும், பகவதியும், காரில் ஏறிக்கொள்ள கார் பறந்தது.

சோதியன் அந்த கார் கண்ணிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றான். அவன் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக ஒழுகியது. வான வெளியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று எதையும் சாப்பிடவும் இல்லை. உட்கார்ந்த இடத்திலிருந்து அசையவும் இல்லை. எதையோ பறி கொடுத்தவன் போலிருந்தது அவன் தோற்றம். பக்கத்து வீட்டுக் கிழவி பரிதாபப்பட்டு, ஒரு கோப்பையில் சாயாவும், புட்டும் கொண்டு வந்து கொடுத்தாள். வேண்டாம் என்று சொல்லிவிட்டான் சோதியன். இருமிக்கொண்டே வெயிலிலேயே, உட்கார்ந்திருந்தான். தூர இருந்து நாதசுர இசை அவன் காதில் விழுந்தது. மாலை நெருங்கியது. நீல வானத்தில் சந்திரன் தன் பூரணப் பொலிவுடன் உலவிவர ஆரம்பித்தான். கலியாண வீட்டில் விருந்தும், விளையாட்டுமாக மகிழ்ச்சி நிரம்பியிருந்தது. அம்முவுக்கு மட்டும் இடையே சோதியன் நினைவு வந்தது. கலியாண நெருக்கடிக்கு இடையே 'இத்தனை நல்ல விருந்தை உன் மாமனும் வந்து சாப்பிட்டிருக்கலாம். இன்று சமையல்கூட செய்யாமல் பட்டினியாக இருப்பார். யாரையாவது அனுப்பி அழைத்து வரலாமா? இல்லை, பாயசம், பட்சண வகைகள் ஏதாவது கொடுத்தனுப்பலாமா?' என்றாள் அம்மு. கழுத்திலிருந்த ரோஜா மாலையைக் கழட்டி மேஜை மேல் வைத்துவிட்டு குளிர்ந்த பாதம்கீரை அருந்தி சிரம பரிகாரம் செய்து கொண்டிருந்த பகவதி, 'சும்மா இரு அக்கா. நாம் கூப்பிட்டால் அவர் வரவா போகிறார்? இல்லை, அனுப்பும் பட்சணத்தையாவது ரசித்து சாப்பிடுவாரா? அவருக்கு அந்தக் குடிசையும் மண்சட்டியும்தான் சரி. நீ வீணாக அலட்டிக்கொள்ளாதே' என்றாள் அலட்சியமாக. கிரிதரன் அந்த அறைக்குள் வரவே அவர்கள் பேச்சு நின்றது.

ஒரு வாரம் போனதே தெரியவில்லை. பகவதியும், கிரிதரனும் புதுமண தம்பதி ஆனபடியால் இன்ப உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். அம்முவுக்கு மட்டும் சில சமயம் சோதியனின் நினைவு வரும். அன்று இரவு சாப்பிட்டு விட்டு, கிரிதரனும் பகவதியும் தங்கள் புத்தம் புது காரில் சினிமாவுக்குச் சென்றிருந்தார்கள். அம்மு யோசனையில் மூழ்கியவாறு படுக்கையில் படுத்திருந்தாள். இங்கு விதம் விதமாக உடைகள் உடுத்திக் கொண்டு, ருசிருசியாக பலவித பட்சணங்களும், கறி வகைகளும் சாப்பிட்டாலும், இதெல்லாம் இரவல், இரவல் என்று அவள் மனம் ஓலமிட்டுக் கொண்டே இருந்தது. சோதியனின் குடிசையில் உடல் நோக உழைத்து விட்டு பழைய சோறும் வெங்காய



துவையலுமாக, மண்சட்டியில் சாப்பிடும் இன்பம் அவளுக்கு இங்கு கிடைக்கவில்லை. அவள் தன் வருங்காலத்தைப் பற்றி யோசித்தாள். பகவதியுடன் எத்தனை நாட்கள் வசிப்பது என்று கேள்வி எழுந்தது. இத்தனை நாளும் சோதியனுடன் ஒரே குடிசையில் வாழ்ந்து விட்டாள். இது வரையில், முறை தவறாமல் சகோதர பாசத்துடன் தான் வாழ்ந்திருக்கிறாள் என்றாலும் அதை இந்த உலகம் நம்பாது. சோதியன் உழைத்து உழைத்து தன்




வாழ்நாளையெல்லாம், பகவதிக்கும் தனக்குமாகவே செலவிட்டு விட்டு இப்பொழுது எழுந்து வேலை செய்ய முடியாத நோயாளி ஆகிவிட்டான். இந்த நிலைமையில், சோதியனைக் கொண்டே ஒரு தாலியைக் கட்டச் சொல்லி அவன் மனைவியாகி அவனுக்கு பரிசாரணை செய்துதான் கொஞ்சமாவது தன் நன்றிக் கடனை தீர்த்துக் கொள்ளலாம் என்று அவளுக்குத் தோன்றியது. வெகு நேரம் யோசித்த பின் நாளை காலை சோதியனைப்பார்த்து தன் யோசனையை நிறைவேற்ற வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

எங்கோ மணி இரண்டு அடித்து ஓய்ந்தது. அந்த நிசப்தமான சமயத்தில் தூரத்தில் அவளுக்குப் பழக்கமான இருமல் சத்தம் கேட்டது. அம்மு வேறு ஒன்றும் யோசிக்காமல், படுக்கையிலிருந்து எழுந்து வீடு விடென்று தெருவில், இறங்கி நடந்தாள். ஜில்லென்று குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. மூடல் பனி கண்ணை

மறைத்தது. அம்முவுக்கு சோதியனைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர வேறு ஒன்றும் தோன்றவில்லை. தூரத்தில் சோதியன் நெஞ்சை பிடித்துக்கொண்டு இருமியவாறு இருந்தான். அவன் கண்கள் குழி விழுந்து உடல் இளைத்து தாடியும், மீசையுமாக பார்வைக்கு பரதேசிபோல் இருந்தான். அவன் மனம் இனம் புரியாத வேதனையில் தவித்துக் கொண்டிருந்தது. தன் வாழ்நாளில் பழைய ஏடுகளைத் திருப்பினான், முதல் நாள் ரஸ்தாவில் பகவதியை பார்த்ததிலிருந்து அவள் கலியாணத்தன்று விடை பெற்றுக் கொண்டது வரையில் மனத்திரையில் நிழலாடியது. காட்டில் எங்கோ ஒரு விதை விழுந்து அது முளைத்து செடியாகி, மரமாகி வளருகிறது. பிறகு பட்டுப் போகிறது. இதனால் யாருக்கும் லாபமல்லை. தன் வாழ்வையும், அப்படி பாழாக்கிக் கொள்ளாமல் ஒரு அநாதைப் பெண்ணை—குடிசை வாழ்விலிருந்து, குபேர வாழ்வுக்கு உயர்த்தி விட்டோம் என்று நினைத்து பெருமை அடைந்தான்; அடுத்தபடி அவனுக்கு அம்முவின் நினைவுதான் வந்தது. அவளும் தன் சகோதரிக்காக வாழ்க்கையை தியாகம் செய்திருக்கிறார்கள். இரண்டு தியாகிகளினால் ஒருவள் உன்னத பதவியை அடைந்துவிட்டாள்; அம்முவை கடவுள் காப்பாற்றுவார் என்று நினைத்துக்கொண்டான்.

ஒருகணம் பகவதியின் வீட்டை நிமிர்ந்து பார்த்தான் சோதியன்; அவன் கண்களில் கணநேரம் ஒரு பிரகாசம் தோன்றியது. மறுகணம் உலகமே சுழலுவது போலிருந்தது அவனுக்கு. நா வரண்டு தாகம் எடுத்தது. தண்ணீர் சாப்பிட ரோட்டு குழாயை நோக்கி இரண்டடி நடந்தான். அவன் கால்கள் தள்ளாடின. தடாலென்று கீழே விழுந்தான். அந்த அநாதையை அன்புடன் பூமிதேவி தன் மடியில் தாங்கிக்கொண்டாள். அவன் கடைசி மூச்சும் நின்றது. முகத்தில் ஒரு பொலிவும், திருப்தியும் நிறைந்திருந்தது. சோதியன் விழுந்ததைப் பார்த்த அம்மு, பதட்டத்துடன் ரோட்டுக்கு குறுக்கே ஓடினாள். எதிர்பாராமல் தெருவுக்கு நடுவே ஒரு பெண் ஓடி வரவே, அந்த லாரி டிரைவருக்கு சமாளிக்க முடியாமல் போயிற்று. 'ஐயோ' என்ற ஒரே குரலுடன் லாரிக்கடியில் சுருண்டு விழுந்தாள் அம்மு. நாலாபுறமும் ரத்தம் சிந்தியது பார்க்க தயநீயமாக இருந்தது. உலகத்தில் எதை எதையோ எதிர்பார்த்த அந்தப் பெண்ணுக்கு சோதியனிடம் நன்றி கடனைக்கூட செலுத்தவிடாமல் விதி அவள் உயிரை வாங்கிவிட்டது.

மறுநாள் அந்தக் குழாயடியில் ஒரே கூட்டம்; ஒரே இரவில் ஒரு ஆணும், பெண்ணும் இறந்திருக்கிறார்கள். பொய்க் கண்ணாலேயே பார்த்து தீர்ப்பு கூறும் இந்த உலகம், அவர்கள் கணவனும் மனைவியும்தான் என்று கூசாமல் கூறியது. அவர்களுக்குள் இருந்தது பவித்திரமான சகோதர பாசம் என்பதை எதற்கும் சாட்சியாக இருக்கும் அந்தக் கடவுளைத் தவிர, வேறு யாரும் அறியமாட்டார்கள். கன்னிப் பெண்ணாகவே வாழ்ந்து, இறந்த பின் மட்டும் மனைவி என்ற பட்டத்தைப் பெற்ற அம்முவின் ஆத்மா—இந்த அபத்தமான பேச்சைக் கேட்டு சிரித்திருக்கும்.

விஷயம் கேள்விப்பட்ட பகவதி தன் அந்தஸ்தை மறந்து, அந்த தியாக மூர்த்தியின் காலைத் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டாள். அம்முவை கட்டிக் கொண்டு 'ஓ'வென்று அழுதாள். வெகு ஆடம்பரமாக சோதியனின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. 'என்ன இருந்தாலும் கிரிதரன் மிகவும் தாராள மனம் படைத்தவர். ஒரு அநாதைப் பிணத்தை இப்படி ஆடம்பரமாக அடக்கம் செய்ய எத்தனை நல்ல மனது வேண்டும்' என்று புகழ்மாலை சூட்டியது விஷயம் தெரியாத இந்த பொய் உலகம்.

இதுவரையில் வாழ்க்கையில் எந்த சுகத்தையும் அறியாமல்; தனக்காக உழைத்து உயிரைவிட்ட சோதியனை நினைத்து, கரம் குவித்தாள் பகவதி. அவள் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர், அந்த தியாகமூர்த்தியின் பாதங்களுக்கு பன்னீர் அபிஷேகம் செய்வது போலிருந்தது. அவள் குமுறல் குரல்—மேலுலகத்தில் சோதியனின் செவியிலும், அம்முவின் செவியிலும் எட்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.




கல்லால மரத்தின் நிழலில் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கொண்டு களத்துமேட்டில் காய வைத்திருந்த உயர்ந்தரக கிச்சிலிச் சம்பா நெல்லை கவனத்துடன் காத்துக்கொண்டிருந்தார் கணபதி சர்மா.

வயது அறுபதைக் கடந்துவிட்டது என்பதை அவருடைய முகத்தில் கீறப்பட்டிருந்த காலத்தின் கோடுகள் எடுத்துக் காட்டின. இளமையின் மேடு கரைந்து போய் புஷ்டியின் சின்னம் தகர்ந்து கன்னங்கள் குழிந்திருந்தன. அவர் உள்ளம் இளம் கன்றைப்போல் பெருமிதத்தால் துள்ளிக் கொண்டிருந்தது.

ஆனி மாதம் பத்தாம் தேதியை அவரது எண்ணத்தாள் புரட்டிப்பார்த்தது. பத்தாம் தேதிவர இன்னும் பத்து நாட்களேதான் இருந்தன. அன்று அவர் வீட்டில்...

நீண்ட நாட்களாக கேட்காத மேளச் சத்தமும், நாதஸ்வர கானமுமாக வீடு அமர்க்களப்படும். உற்றார் உறவினர், நண்பர் எல்லோரும் அவர் வீட்டிலே அன்று படையெடுத்திருப்பர். இந்த வைபவத்திற்கென்றே அரைக் காணி நிலத்தை ஒதுக்கிப் பயிரிட்டு பலன் தந்த இந்த இச்சிலிசம்பா நெல்லை, இந்த உமியின் போர்வையில் உறங்கிக் கொண்டிருக்கும் உயர்ந்த அரிசியின் சுவையை எல்லோரும் அனுபவிப்பார்கள்.

'நாட்டுப் பெண் மைதிலி ஸ்நானம் செய்யாமலிருக்கிறாள்' இந்த நல்ல

சேதியை அன்று தன் மனைவி தன்னிடம் சொன்ன அடுத்த நாளே சம்பா நாற்றைப் பிடுங்கி மஞ்சள் காணியில் நட்டு விட்டார் சர்மா.

நிலமகளும் தன் பலனை நெல்லிலே காட்டிவிட்டாள். அதற்கேற்றாற்போல் மருமகள் மைதிலிக்கும் எட்டாவது மாசம் பிறந்துவிட்டது. தனக்கு இருக்கும் ஒரே மருமகளின் சீமந்த முகூர்த்தத்தை விமரிசையாக நடத்த திட்டமிட்டு நாளும் குறித்து அழைப்பிதழ்களும் அனுப்பிவிட்டார் சர்மா.

ஆள் அரவம் கேட்டு எழுந்து உட்கார்ந்தார் சர்மா. அவர் மனைவி மங்களம் டிபனும்காபியுடனும்நின்றுகொண்டிருந்தாள்.

'என்ன மங்களம்! இன்னிக்கு என்ன டிபன்.'

'எல்லாம் உங்களுக்கு பிடித்தமானது தான்! பால் கொழுக்கட்டை.'

'மைதிலியின் காரியமா!' சர்மா ஆச்சரியமாக கேட்டார்.

'இந்த உடம்பிலே செய்யக் கூடாதுன்னு எவ்வளவு சொல்லியும் அவள் உங்களுக்காக இதைச் செய்து அனுப்பினாள். பெற்ற பிள்ளைக்கு கூட நம்மீது இவ்வளவு பாசமில்லை. ஆனால். இந்த பொண்ணு!... மங்களத்தின் சொற்களில் தன் மருமகள்மீது இருக்கும் பாசம் எவ்வளவு என்பதை எடுத்துக் கூறியது.

'மங்களம்! உண்மையிலேயே நாம் இரண்டு பேரும் இப்படிப்பட்ட பெண்ணை மருமகளாக பெற்றதற்கு ரொம்பவும் அதிர்ஷ்டம் செய்திருக்க வேணும்.' சர்மாவின் கண்களில் தேங்கியிருந்த கண்ணீர் அன்பின் எல்லையை அளந்து சொல்லிற்று.

காலி டம்ளருடன் மங்களம் சென்றுவிட்டாள். சர்மா கட்டிலைவிட்டு எழுந்து காய்ந்து கொண்டிருந்த நெல்லின் மீது நடந்தார். கால்கள் நெல்லைக் கிளறிக்கொண்டிருக்க அவரது நினைவுக் காளை தன் வாழ்க்கையில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளையெல்லாம் அசை போட்டது.

கொடுப்பினை எவ்வளவோ அவ்வளவு தான் மனிதர்களுக்கு கிட்டும் என்பது எல்லோரும் வாழ்க்கையில் அறிந்த படிப்பினை. சர்மா தன் வாழ்க்கை பயணத்தில் ஐம்பதாவது மைல் கல்லைக் கடந்த பின்னர்தான் அந்த பாக்கியம் கிட்டியது.

சர்மாவின் மனதுக்கேற்ற மனைவி இருந்தாள். அன்பும், அறிவும் அமைந்த அவரது ஒரே புதல்வன் சிவராமனும் படித்து பட்டம் பெற்று அவர் கிராமத்துக்கு அருகாமையிலேயே இருந்த ஒரு உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தான். வயதான பெற்றோரைவிட்டு வேறு வேலைக்குச் செல்ல அவனுக்கு இஷ்டமில்லை.

தன் பையனின் மனதிற்கும், குணத்துக்கும் அமைந்த பெண் வேண்டும். வரப்போகிறவள் மகனுக்கேற்றவளாகவும், தங்கள் போக்கை அறிந்த மருமகளாகவும் அமையவேண்டும். அதன்படி நீண்ட நாட்களாக தன் உள்ளத்தில் படம் போட்டு வைத்திருந்த எண்ணத்தைத் தன் மகனிடமும், மனைவியிடமும் வெளியிட்டார் சர்மா.

தன் சகோதரி மகள் மைதிலிதான் தங்களுக்கேற்ற மருமகள். குடும்ப விளக்கு அவள் வருகையால் இதைவிட நன்கு பிரகாசிக்கும்.

சர்மாவின் இளைய சகோதரி சௌந்தரத்தின் கணவன் சென்னையில் ஒரு பாங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரது மூத்த மகள்தான் மைதிலி.

மனதில் நினைத்ததை உடனே சாதித்து விடும் பழக்கம் சர்மாவினிடத்தில் அமைந்திருந்தது. அதன்படி வெகு சீக்கிரத்திலேயே மைதிலியின் கரத்தைப் பற்றினான் சிவராமன்.

அருணபுரத்திலிருந்த அத்தனை பேரும் சிவராமன்—மைதிலியின் ஜோடிப் பொருத்தத்தைப்பற்றி வாயாரப் போற்றி புகழ்ந்தாலும், ஒரு சிலர் சர்மாவின் செய்கையைத் தூற்றாமல் இருக்கவில்லை.

'படிச்ச பொண்ணு: பட்டினத்து வாசம் வேறு. இந்தப் பட்டிக்காட்டிலே நாலு நாள் சேர்ந்து இவள் இருப்பாளா!'

'சிவராமனுக்கு சொக்குப்பொடி போட்டு சீக்கிரத்திலேயே சென்னைக்கு அழைச்சண்டு போயிடப் போகிறாள். இந்த கிழங்கள் இரண்டும் இங்கு திண்டாட வேண்டியதுதான்.'

'என்னதான் சகோதரி மகளாக இருந்தாலும் சர்மா செய்தது தவறுதான். ஊம்! அவனவன் எழுத்துப்படி எல்லாம் நடந்துதானே தீரும்!'



களையிழந்து காணப்பட்ட அந்த வீட்டிலே களையைப் போக்க மைதிலி வந்து சேர்ந்தாள். சந்தோஷமும், சந்தடியும் எப்பொழுதும் காணப்பட்டன.

வந்தவளின் கால் ராசியைப் பின்னால் தான் சர்மாவால் அறியமுடிந்தது. மண்ணில் போட்டதெல்லாம் பொன்னாக விளைந்தது. பால் பாக்கியமும் குறைவில்லாமல் அந்த வீட்டில் காட்சி அளித்து வந்தது. அதைவிட மாமி

யார், மாமனாரிடத்தில் மைதிலி நடந்துகொள்ளும் விதத்தைப் பார்த்து ஊரே அதிசயித்தது. தன் கணவரிடம் காட்டும் அன்பைக் காட்டிலும் தன் மாமியாரிடமும், மாமனாரிடமும் தன் உயிரையே வைத்திருந்தாள் மைதிலி.

மாமனின் மூக்குக் கண்ணாடியைத் தேடிக்கொடுப்பதிலிருந்து அவருடைய இருமலுக்கு இரவு மருந்து அளிக்கும் வரை எல்லாம் மைதிலியுடையது தான்.

மங்களத்துக்கு தலையை வலித்தாலோ, சர்மா இரண்டு மூன்று தரம் தும்மினாலோ மைதிலி துடிதுடித்து விடுவாள்.

ஆட்களுடைய படி கணக்கைக்கூட சர்மா பார்ப்பதில்லை. வீட்டுச் செலவைப்பற்றி மாத்திரம் கவலைப்படுவது இல்லை. அவ்வளவு அழகாகவும், ஆனந்தமாகவும் . சென்றுகொண்டிருந்தது அந்த வீடு.

தனது வாழ்க்கை இப்படி சுகமாகவும், ஆனந்தமாகவும் அமையும் என்று சர்மா கனவில்கூட நினைக்கவில்லை. மைதிலியின் வருகை மஹாலக்ஷ்மியே தன் வீட்டிற்கு வந்ததுபோலிருந்தது அவருக்கு இனி எதைப்பற்றிதான் கவலை. அன்பும் அடக்கமும் அமைந்த அருமை புதல்வன் சிவராமன், அவருக்கேற்ற மனைவி மங்களம், உயிரையே தன்மேல் வைத்திருக்கும் மருமகள் மைதிலி.

உணர்ச்சி சுழலிலிருந்து விடுபட்டார் சர்மா. நெல்லை அம்பாரமாகச் செய்து மூடிவிட்டுத் திரும்பினார்.

கஷாயத்தை வைத்துக்கொண்டு தயாராக காத்திருந்தாள் அவன் மனைவி மங்களம்.

'இரண்டு நாட்களாக இரவு நேரங்களில் அதிகமாக இருமிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று இந்த சித்தரத்தை கஷாயத்தைக் குடிக்கச் சொன்னாள் மைதிலி' மங்களம் டம்ளரை அவர் கரங்களில் கொடுத்தாள்.

'மங்களம்! குழந்தை மைதிலியை அந்த பாட்டைக் கொஞ்சம் பாடச் சொல்லேன். வெள்ளிக்கிழமையாச்சே! சிறிது கேட்போம்' சொற்களில் அன்பும் தயமும் கலந்திருந்தன.

'ஜய ஜய பத்மநாப முராரே' என்ற கீர்த்தனையை கூடத்தில் அமர்ந்து கொண்டு கணீரென்று பாடினாள் மைதிலி.

திண்ணையில் உட்கார்ந்திருந்த சர்மா தன்னை மறந்தார். பாட்டிலேயே தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டார்.

'அப்பா! எல்லோருக்கும் பத்திரிகை அனுப்பியாகி விட்டது. அத்தையிடமிருந்தும் இன்று கடிதம் வந்துவிட்டது. அவர்களெல்லோரும் சீமந்தத்திற்கு இரண்டு நாட்கள்முன்னதாகவே வந்துவிடுகிறார்களாம். அப்பொழுது தான் பள்ளி விட்டுத் திரும்பிய சிவராமன் தன் தகப்பனாரிடம் கூறினான்.

இன்னும் சீமந்த முகூர்த்தத்திற்கு இரண்டு நாட்கள் தான் இருந்தன. சர்மா வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார். புகழ்பெற்ற வையாலூர் மேளத்தையும் அமர்த்தி விட்டார். சமையல்காரர்களுக்கும், பந்தல்காரனையும் பார்த்து சொல்லிவிட்டார். செங்கற்பட்டுக்குச் சென்று மளிகை சாமான் அத்தனையும் வாங்கி வைத்துவிட்டார். களத்து மேட்டில் இருந்த நெல்லை மிஷினில் கொடுத்து அரிசியாக்கியும் போட்டு விட்டார். தன்னை அறுபது வயது கிழ ஆத்மா என்று எண்ணாமல் இருபது வயது குமாரனைப்போல ஓடி ஆடி செய்து கொண்டிருந்தார்.

வருடக் கணக்காகவே அவர் உள்ளத்தில் செய்து வைத்திருந்த ஏற்பாடு தானே இது! குழந்தையே பார்த்திராத அந்த வீட்டிலே ஒரு மழலைச் செல்வம் குதித்து விளையாடப் போகிறது. இத்தனை நாட்கள் தனக்கு வாஞ்சையோடு பணிவிடைகளைச் செய்த மருமகளுக்கு, இனி அவளது குழந்தைக்கு, தன் பேரனுக்கு விளையாட்டு காட்டுவதிலிருந்து உறங்க வைக்க வேண்டிய பொறுப்புவரை எல்லாம் இனி சர்மாதானே!

பொழுது விடிந்தால் சீமந்தம்.' ஆனால் இரவிலிருந்தே சர்மாவுக்கு உடம்பு சரியில்லை. அடிக்கடி வரக்கூடிய மார்பு வலி அவரைத் துன்புறுத்தியது. உறவினரும், நண்பரும், ஒவ்வொருவராக விசேஷத்திற்கு வந்து கொண்டிருந்தனர். இருந்தும் இந்த நேரத்தில் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்க அவருக்குப் பிடிக்கவில்லை. தனது கடைசி தெம்பை மருமகள் ஊட்டிய அன்பு டானிக்கை வைத்துக்கொண்டு உலாவிக்கொண்டிருந்தார் சர்மா. வந்திருந்தவர்களை வரவேற்பதிலும், வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிப்பதிலும் அவர் உள்ளம் ஈடுபட்டிருந்தது.

'அப்பா! உனக்குதான் உடம்பு சரியாயில்லையே! பேசாமல் படுத்துக்கொண்டிருக்கக்கூடாதா!

'நாங்களெல்லாம்தான் இருக்கிறோமே! நீங்கள் ஏன் அலட்டிக்கொள்கிறீர்கள்.'

மகனின் சொற்களோ வந்திருந்தவர்களின் அன்பு மொழிகளோ அவர் செவிகளில் ஏறவில்லை.

சீமந்த முகூர்த்தம் வெகு விமரிசையாக நடந்துகொண்டிருந்தது. கூடத்தில் குழுமியிருந்த கூட்டத்தைக் கண்டு சர்மாவே பிரமித்துவிட்டார். வீடு அமர்க்களப்பட்டுக்கொண்டிருந்தது. 'வையாலூர் பிரதர்ஸ்' பொழிந்து தள்ளிக்கொண்டிருந்தார்கள். மனையில் உட்கார்ந்து புரோகிதர் கூறும் மந்திரங்களை உச்சரித்துக்கொண்டிருந்த தன் மகன் சிவராமனையும், அவன் அருகில் அடக்கமே உருவாக அமர்ந்திருக்கும் மருமகளையும் ஒருகணம் அவர் கண்கள் ஏறிட்டுப் பார்த்தன. அடுத்த கணம் அவர் உள்ளத்தில் துன்பம் கலந்த உணர்ச்சி பரவியது.

'அழகு பிம்பமாக காட்சி அளிக்கும் தன் மருமகளைப் பார்த்து வந்திருந்தவர்களின் கண்கள் பட்டுவிடக்கூடாதே! இருக்கட்டும். முகூர்த்தம் முடிந்ததும் மங்களத்தைக் கூப்பிட்டு திருஷ்டி சுற்றிப் போடச் சொல்லணும்'

முகூர்த்தம் முடிந்து விட்டது. மகனும் மருமகளும் சர்மாவின் ஆசீர்வாதத்தைப் பெற அவரிடம் வந்தனர். தன் கால்களில் வணங்கி எழு[illegible] அவர்களைப் பார்த்து 'ப[illegible] பெற்று பெரு வாழ்வு பெ[illegible]' என்று கூறிய அவர் மெதுவா[illegible] மைதிலியைப்பார்த்து 'நீ போய் '[illegible]ண்ட் எடுத்துக்கொள்ளும்மா! ஒரு வேலையும் செய்ய வேண்டாம்' என்று கூறினார் சர்மா.



வாத்யார்:—(புதிதாக வந்த பையனைப் பார்த்து) ஏண்டா உன் வாயிலே ஒரு அக்ஷரம்கூட நுழையல்லியே. ஆமா உன் பெயர் என்னன்று சொன்னே?

பையன்:—பஞ்சாக்ஷரம் சார்!!!

அன்று இரவு நெடுநேரம் வரையிலும் சர்மா உறங்கவில்லை. உடல் நோய் அவரை அப்படி வதைத்தது. தான் படுத்திருந்த பக்கத்து அறையிலிருந்து முனகல் சப்தமும் அதைத்தொடர்ந்து பேச்சு சப்தமும் கேட்டு படுக்கையை விட்டு எழுந்தார் சர்மா.

'எட்டாவது மாசத்திலே இப்படி நோவு எடுத்தால் ஜாக்கிரதையாக இருக்கவேணும். உடனே டாக்டரைக் கூப்பிட்டு வந்தால் நல்லது. இல்லையேல் தாய்க்குக்கூட ஆபத்து...'

அதற்கு மேல் தொடர்ந்து சொற்களைத் தாங்கிக்கொள்ளும் சக்தி சர்மாவின் இதயத்திற்கு சக்தியில்லை. விஷ[illegible]ட்டது. உடனே உத்திர[illegible]ருக்குச் [illegible] டாக்டரை அழை[illegible] வரவேண்டும்[illegible]

சிவராமனும் சீமந்த முகூர்த்தம் முடிந்து அன்று மாலை [illegible]க்கு உல்

லாசப் பயணம்சென்றுவிட்டான். இனி யாரையாவது பிடித்து டாக்டரை அழைத்துவரும் அளவுக்கு சர்மாவுக்கு பொறுமையில்லை. மூலையில் சாய்த்திருந்த கைத்தடியை எடுத்தார். செருப்புகளைக் கால்களில்கூட மாட்டிக்கொள்ள அவருக்கு நேரமில்லை. அடுத்த சில விநாடிகளில் அவரது கால்கள் உத்திரமேரூரை நோக்கி விரைந்துகொண்டிருந்தன.

இரவு நேரத்தில் தெளிவாக சர்மாவுக்கு கண்கள் தெரியாது. ஆனால் அன்று இரவு எப்படியோ காட்டிலும் மேட்டிலும் நடந்து உத்திரமேரூரை அடைந்து விட்டார். உடலிலுள்ள அசதியும் மார்பு வலியும்கூட அந்த நேரத்தில் மாயமாக மறைந்திருந்தது.

டாக்டரைப் பார்த்து விஷயத்தை எடுத்துச் சொல்லி உடனடியாகக் கிளம்புமாறு மன்றாடிக் கேட்டுக் கொண்டார். சைகிலில் டாக்டரைப் போகச் சொல்லிவிட்டு பின்னாலேயே ஊருக்கு வேக நடை போட்டார் சர்மா.

'மைதிலிக்கு உடம்பு ஒன்றுமில்லாமல் இருக்கவேண்டுமே! பாசமும், பரிவும், சுறுசுறுப்பும் அமைந்த இளங்கொடியான என் மருமகளுக்கு எந்த விதமான ஆபத்தும் வரக்கூடாதே! ஸ்வாமி! இந்த உடலிலுள்ள உயிரை எடுத்துக்கொண்டு அவளுக்கு உயிர்ப்பிச்சை கொடு' மனதில் நினைத்த தெய்வங்களையெல்லாம் மனதார பிரார்த்தித்துக்கொண்டார் சர்மா.

ஊரும் வந்துவிட்டது. அவர் வீட்டை அடைய இதோ இருக்கும் இந்த அம்மன் கோயிலையும் கடந்து அந்த வாய்க்காலையும் தாண்டினால் தன் தெரு வந்துவிடும்.

இதோ! டாக்டர் வருகிறாரே! இப்பொழுதுதான் அனுப்பினேன். இதற்குள் திரும்பிவிட்டாரே! ஒரு வேளை... வரப்போகும் பயங்கரத்தை எண்ணிப் பார்த்தது. அதைத் தொடர்ந்து இனந் தெரியாத கலக்கம் அவர் உள்ளத்தில் பாய்ந்தது.

சைகிளை நிறுத்திவிட்டு டாக்டர் சர்மாவிடம் கூறினார்.

'நான் வருவதற்குள் எல்லாம் முடிந்து விட்டது. நான் வந்திருக்கவேண்டிய அவசியமே இல்லை.'

அதற்கு மேல் டாக்டர் கூறிய சொற்கள் எதுவும் சர்மாவின் செவிகளில் விழவில்லை. ஆம்! அவர் நினைத்தது நடந்துவிட்டதா! உலகமே சர்மாவின் முன் சுற்றும் மின்சார விசிறியாக காட்சி அளித்தது. அவ்வளவுதான் அவருக்குத் தெரியும்.

மெதுவாக கண்களைத் திறந்தார் சர்மா. தன்னைச் சுற்றிலும் பலபேர் நிற்பதையும் தன் அருகில் தான் அழைத்துவந்த டாக்டரின் குரல் கேட்பதையும் உணர்ந்தார் அவர். பஞ்சடைந்திருந்த அவர் விழிகளுக்கு எல்லாம் மார்கழி மாதத்து பனித் திரையைப்போல் காட்சி அளித்தது.

என்ன சர்மா ஸார்! நான் விஷயத்தை விளக்குவதற்குள்ளாகவே பயந்து மயக்கமடைந்து விட்டீர்களே! உங்களுக்கு தங்கப்பதுமைபோல் பேத்தி பிறந்திருக்கிறாள்.

டாக்டர்கள் சொற்கள் சர்மாவின் நொந்துபோன இதயத்தில் புகுந்து இதமூட்டிற்று. சர்மாவின் இதழ்கடையில் புன்னகை மலர்ந்து சோபையிழந்த முகத்தில் தனிக் களை வீசிற்று. அதைத் தொடர்ந்து உள் அறையிலிருந்து வெளிவந்த பச்சிளம்குழந்தையின் அழுகை சப்தம் அவர் செவிகளில் அமிர்தத்தை வார்ப்பதுபோல் இருந்தது.

இந்த ஆனந்தத்திலே, உற்சாகத்திலே பொதுவாக அவரது கண்ணின் இமைகள் மூடின. அவரிடமிருந்து வெளியான கடைசி பெருமூச்சு தான் நிம்மதியாகப் போவதை அறிவித்ததுபோல் இருந்தது. இளந்தளிரைக் கண்ட பிறகு பழுத்த இலைக்கு என்ன கவலை? பகவான் சர்மாவின் பிரார்த்தனைக்கு இணங்கி விட்டார்.



# சந்திரோதயம்

ரசுமி

தண்கடலெங்குமே பொங்குதடி—அலை
தளதளவென மோதித் துள்ளுதடி
விண்ணிலொளி ரேகை மின்னுதடி—இது
வெண்மைச் சந்திரோதய காலமடி.

பத்தரை மாத்துப் பசும்பொன்னடி—அது
பார்க்கச் சலிக்காத வெண் பந்தடி
முத்திரையிட்ட நம் முள்ளத்திலே—ஒரு
மோகனப் புன்னகை மூட்டுதடி.

பேரான வானம் பெருவானம்—ஒளி
பின்னி வெளுத்தது மைவானம்
ஜோரான சொக்கிலே மின்மினிதான்—வட்டம்
சுத்துதடி புல்லைப் பற்றுதடி.

காதல் மகிழ்ச்சியைக் காணாமல்—பாவ
காரணத்துக் கிடங் கோளாமல்
சீதமலருள்ள தாமரையாள்—இதழ்
சேர்த்து முகமூடிப் பாருங்கடி.

தென்றல் சிறுகாற்றுச் சொக்குதடி—அதைச்
சேர்ந்த மாலைப்பூ மணக்குதடி
மன்றல் விளைந்திடும் காதலர்கள்—கெஞ்சம்
மஞ்சத்தில் வக்கணை பேசுதடி.




பட்டம்மாள் தனது கண்களை நம்பவேயில்லை. பட்டம்மாள் மட்டுமில்லை. அப்பொழுது அவளுடன் பேசிக் கொண்டிருந்த பக்கத்து வீட்டு பங்கஜம், எதிர் வீட்டு எச்சுமு, கோடி வீட்டுக் கோமளம் யாருமே அவர்கள் கண்களை நம்பவில்லை.

'அந்தத் தட்டை எடு' என்றான் கோவிந்தராஜன்.

பையிலிருந்து ஓர் வெள்ளித் தட்டை எடுத்துக் கொடுத்தாள், கோவிந்தராஜனின் மனைவி கோமதி.

'இந்தத்தட்டு குட்டிக் கண்ணனுக்கு (கோவிந்தராஜனின் மருமான்) சாப்பிடுவதற்காக வாங்கினேன். போதுமா பார்?' என்று அதைத் தனது தாயார் பட்டம்மாளிடம் கொடுத்தான் கோவிந்தராஜன்.

'நன்றாக இருக்கிறது. நாற்பது ரூபாய் எடை இருக்கும்போலிருக்கிறதே?' என்றாள் பட்டம்மாள்.

'முப்பத்தைந்து ரூபாய் எடை. குட்டிக் கண்ணனுக்கு நிஜாருக்கும், சட்டைக்கும் துணிவாங்கி 'டெய்லரிடம்' கொடுத்தேன். வரும்பொழுது தைத்தாகவில்லை. இது கனகாவுக்குப் புடவை' என்று சொல்லிவிட்டு, காஞ்சி ஸில்க் புடவை ஒன்றையும், ஆர்கண்டி ரவிக்கைத் துண்டு ஒன்றையும் பட்டம்மாளிடம் கொடுத்தான்.

தனது கணவன் இறந்துபோன பிறகு பட்டம்மாளுக்கு இவ்வளவு மகிழ்ச்சி என்றுமே ஏற்பட்டதில்லை. சந்தோஷம் பிடி கொள்ளவில்லை அவளுக்கு. தான் காண்பது ஒரு வேளை கனவோ என்ற சந்தேகம்கூட ஏற்பட்டுவிட்டது அவளுக்கு. தனது எதிரில் நிற்பது தனது மகன் கோவிந்தராஜன் தானா என்று நன்கு நிதானித்துக் கொள்வதற்காக ஒரு முறைக்குப் பன்முறை அவனைக் கீழும் மேலுமாக உற்று உற்றுப் பார்த்தாள்.

'இந்தா! உனக்காக வாங்கிக்கொண்டு வந்தேன். இன்னும் பெரிதாக இருக்கலாமா? அல்லது இதுவே போதுமா?' என்று சொல்லிக்கொண்டே, பையிலிருந்து ஓர் வெள்ளிச் சொம்பை எடுத்துத் தனது தாயாரிடம் கொடுத்தான் கோவிந்தராஜன்.

பட்டம்மாளின் நீண்ட நாளைய கோரிக்கை இது.

உண்மையிலேயே இத்துடன் கோவிந்தராஜன் நிறுத்தியிருந்தால் பட்டம்மாள் பிழைத்திருப்பாளோ! மேலும் எதையாவது எடுத்துக் கொடுத்திருந்தானானால், சந்தோஷ மிகுதியினால் அவள் இருதயம் வெடித்து அப்போதே இறந்துவிட்டிருப்பாள். சந்தோஷம் அப்படிப் பொங்கிக்கொண்டு வந்தது அவளுக்கு.

அடுத்த நிமிஷமே கோவிந்தராஜன் சாஷ்டாங்கமாக அவள் காலில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு, 'அம்மா! நான் என்ன பிழை செய்திருந்தாலும் அதை எல்லாம் மறந்துவிட்டு, என்னை ஆசீர்வதிக்க வேண்டும்' என்று சொல்லி



விட்டு, சிறு குழந்தை மாதிரி கேவிக் கேவி அழுதான்.

'எதற்காகடா அழுகிறாய், பைத்தியமே!' என்றாள் பட்டம்மாள்.

'நான் மகா பாபியம்மா, பாபி!' என்றான் கோவிந்தராஜன் தழுதழுத்த குரலில்.

'சே! பேசாமலிரு. நேற்றுகூட கனகா உனது ஜாதகத்தை, பிரபல ஜோஸ்யர் ஒருவரிடம் காண்பித்தாளாம். 'பத்து வருஷ காலமாக இந்த ஜாதகனுடைய கிரகங்களின் அமைப்பு சரியாக இல்லை. அத்துடன் ஏழரைநாட்டு சனி வேறு ஆட்டி வந்தான். சென்ற வாரத்தோடு எல்லா பாபிகளின் ஆட்டமும் ஓய்ந்துவிட்டது. இனி ராகு தசை. குருபுக்தியும் சேர்ந்திருக்கிறது. இந்த ஜாதகனுக்கு இனி வரப்போகும் நாட்கள் ரொம்பவும் நன்றாக இருக்கும்' என்றாராம் ஜோஸ்யர். 'என்னமோம்மா! அவருடைய வாக்காவது பலிக்கட்டும்' என்றாள் கனகா. பகவான் ஒரு குறையும் வைக்கமாட்டார்' என்றாள் பட்டம்மாள்.

ஆகா! என்ன ஆச்சரியம்!

தாயின் உள்ளத்தை நினைத்துப் பார்க்கும்போது கோவிந்தராஜனுடைய கேவல் மேலும் பன்மடங்காகப் பெருகியது.

............

கோவிந்தராஜனுடைய சிறு வயதிலேயே அவனுடைய தகப்பனார் நாகராஜ ஐயர் இறந்துவிட்டார். கோவிந்தராஜன் மூத்தவன். கனகா சிறியவள். நன்றாக வாழ்ந்த குடும்பம். ஆனால், நாகராஜ ஐயர் இறக்கும்போது அவர் பட்டம்மாளுக்கு இவ்விரு குழந்தைகளைத் தவிர வேறு எவ்வித ஆஸ்தியையும் வைக்கவில்லை. ரொம்பவும் கஷ்டஜீவனந்தான். எவ்வளவோ சிரமப்பட்டு கோவிந்தராஜனை பி. ஏ., வரையில் படிக்கவைத்து, சில பெரிய மனிதர்களின் உதவியைக்கொண்டு சர்க்காரில் ஒரு நல்ல உத்யோகத்தையும் கொஞ்சம் சுமாரான இடமாகப் பார்த்து ஒரு கலியாணத்தையும் செய்து வைத்துவிட்டாள். அவ்வளவுடன் கோவிந்தராஜனைப் பற்றி விசாரம் விட்டது, பட்டம்மாளுக்கு.

கனகாவின் கலியாண விஷயம் ஒரு பெரிய பிரச்னையாகவே போய்விட்டது அவளுக்கு. 'நம் குடும்பத்திலேயே இல்லாத இப்படிப்பட்ட ஒரு கறுப்பு நிறம் எங்கிருந்து வந்ததோ தெரியவில்லையே. கறுப்பாக இருந்தாலென்ன! 'கறுப்பே ஒரு அழகு. காந்தலே ஒரு ருசி' என்று சொல்வதில்லையா? மூக்கும் முழியும் எடுப்பாக இருந்து, முகத்தில் ஒரு களையும் இருக்குமானால், கறுப்பு என்ன செய்ய முடியும் அங்கே? அப்படியும் இல்லாமல் குரூபியாக வேறு வந்து சேர்ந்ததே! இவற்றிலிருந்தெல்லாம் மீண்டு வருவதற்கு பணமாவது இருக்கிறதா? அந்த பாக்யமும் இல்லையே. இதற்குக் கலியாணம் என்று ஒன்றாகி, இந்த ஜனங்களின் வாயிலிருந்து எப்படி நாம் மீண்டு வரப் போகிறோம்?' என்று அடிக்கடி மனதுக்குள்ளேயே தன் பெண் கனகாவின் எதிர் காலத்தைப் பற்றி 'விண்டு விரிந்து போவாள்' பட்டம்மாள்.

கனகாவுக்கு வயது பதின்மூன்று ஆகிவிட்டது. அதற்குமேல் ஒவ்வொரு ஸெகண்டும் முள்ளின்மேல் நிற்பது போல்தான் தத்தளித்தாள் பட்டம்மாள். அது அந்தக் காலம். பனிரண்டு, பதின்மூன்று வயதான பெண்களைக் கலியாணம் செய்துகொடுக்காமல் வீட்டில் வைத்துக் கொண்டிருப்பது வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கிற மாதிரி இருந்த காலம் அது.

கூடியவரையில் கோவிந்தராஜன் கொஞ்சம் உலக நியாயத்துக்குக் கட்டுப் பட்டவன்தான். ஆனால், அவன் மனைவி கோமதி இதற்கு நேர் விரோதமானவள். புக்ககத்திற்கு வந்த ஒரு வருஷத்திற்கெல்லாம் தனிக் குடித்தனத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டாள். மாமியாரும், நாத்தனாரும் தன்னிடமிருந்து பிரிந்து போய் தனியாக இருக்கும் வழியையும் செய்துவிட்டாள்.

அவர்கள் ஜீவனத்திற்குப் போதிய பணம் அனுப்புவதில்லை. கனகாவின் வருங்கால வாழ்க்கைக்கு இங்கிருந்து இப்பொழுதே பட்டம்மாள் பணம்

சுருட்டுவதாக கோவிந்தராஜன் மனதில் நன்கு படும்படியான வகையில் 'விஷத்தையும்' ஏற்றியும் விட்டாள்.

பட்டம்மாளுடைய ஜீவனம் நடப்பதே பெரும் கஷ்டமாகிவிட்டது.

ஒருநாள் அவளுக்கும் தாளாமல் கோவிந்தராஜனிடம் வந்து, 'அப்பா கோவிந்து! உன் படிப்புக்காகவும், உனக்கு நல்லதாக உத்யோகம் கிடைப்பதற்கும் நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன் தெரியுமா?' என்று ஆரம்பித்தாள் பட்டம்மாள்.

'அது என் அதிர்ஷ்டம்! நீ ஒன்றுமே செய்யாமல் இருந்தால்கூட, அதிர்ஷ்டம் என்று ஒன்று இருக்குமானால், எந்த வகையிலாவது சௌகரியங்கள் நம்மைத் தேடிக்கொண்டு வந்து சேரும்' என்று பிரும்மாண்டமானதொரு வேதாந்த தத்துவத்தை எடுத்து வீசினான் கோவிந்தராஜன்.

'அப்பா! நான் எப்படியாவது இருந்து விட்டுப் போகிறேன். கனகாவுக்கு ஒரு கலியாணத்தைச்செய்து, அவளைப் புக்ககத்திற்கு அனுப்பிவிட்டால் எனக்கு அப்புறம் ஒரு விசாரமும் இல்லையடா! அது கண்ணைக் கசக்கிக்கொண்டு நிற்பது நமக்குத்தான் ஆகாதுடா! ஒரு இரண்டாயிரம் ரூபாய் இருந்தால் கொஞ்சம் சுமாரான இடமாகப் பார்த்துக் கொடுத்துவிடலாம்' என்றாள்.

'இரண்டாயிரமா? சரியான கனவு தான் காண்கிறாய்! இரண்டு பைசா ஏது இப்பொழுது? ஒரு வீடு ஏழாயிரம் ரூபாய்க்கு விலைக்கு வருகிறது. இந்த சமயம் விட்டால் அப்புறம் அது நம் கைக்கு வராது. அதற்காகப் பணத்துக்கு அலைந்து கொண்டிருக்கிறேன். இப்பொழுது ஒன்றும் முடியாது. இந்த அவசரமெல்லாம் அடங்கட்டும். அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். இப்பொழுது என்மீது நிஷ்டூரப் படுவதில் உபயோகமில்லை' என்று பட்டுக் கத்தரித்த மாதிரி பதில் சொல்லிவிட்டான் கோவிந்தராஜன்.

'இப்படி வயதான ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொடுக்காமல் வீட்டில் வைத்துக் கொண்டிருப்பது நியாயமாகப் படுகிறதாடா உனக்கு?' என்றாள் பட்டம்மாள்.

'அது அவள் அதிர்ஷ்டம்! அதற்கு யார் என்ன செய்யலாம்? இதற்குமேல் வயதான பெண்களையெல்லாம் எத்தனை பேர் வைத்துக்கொண்டிருக்கவில்லை? அது அவரவர்கள் ஜாதக விசேஷம்' என்றான் உதாசீனமாக.

இந்த வார்த்தையைக் கோவிந்தராஜன் தனிமையில் சொல்லியிருந்தால் பட்டம்மாள் அவ்வளவு பொருட்படுத்தியிருக்கமாட்டாள். கோமதியை வைத்துக்கொண்டு அவளெதிரில் சொன்னதுதான் அவளுக்கு நாக்கை அறுத்துக் கொண்டு சாகலாம்போலிருந்தது.

அதற்குமேல் எதுவும் பேசாமல் விடுவிடுவென்று போய்விட்டாள் பட்டம்மாள்.

'அம்மாவுக்குக் கோபம் வந்து விட்டது போலிருக்கிறது' என்றாள் கோமதி.

'அவள் கிடக்கிறாள். அவளுடைய கோபம் யாரை என்ன செய்யும்? அது கிடக்கட்டும். விட்டுத்தள்ளு அதை. வீட்டுக்கு இன்னும் மூவாயிரம் ரூபாய் வேண்டுமே. அதற்கு என்ன யோசனை சொல்கிறாய்?' என்றான் கோவிந்தராஜன்.

'அந்த மார்வாடியிடம்தான் வாங்க வேண்டும்' என்றாள் கோமதி.

'ஒன்றரை வட்டியாயிற்றே.' என்றான்.

'அதற்கு என்ன செய்வது? கொஞ்சம் சிக்கனமாக வாழ்க்கையை நடத்தி மிச்சம் பிடிக்க வேண்டியதுதான்' என்றாள்.

............

பட்டம்மாள் அதற்குப் பிறகு அதிகமாகத் தன் பிள்ளையின் வீட்டுக்குச் செல்வதையே விட்டு விட்டாள். அந்த வட்டாரத்தை விட்டு வேறு பேட்டைக்கு ஜாகையை மாற்றிவிட்டாள். எப்படியோ படாத கஷ்டமெல்லாம் பட்டு, தன் பந்துக்கள், சிநேகிதர்களையெல்லாம் கெஞ்சிக் கேட்டு, ஒரு வழியாகக் கனகாவுக்குக் கலியாணத்தைச் செய்து அவளைப் புக்ககத்தில் கொண்டு



போய் விட்டுவிட்டாள். ஒரு பெரிய பாரம் கழிந்த மாதிரி இருந்தது அவளுக்கு. கொஞ்சம் கஷ்ட ஜீவனந்தான். இருந்தாலும் ஒரு பெரிய பளு நீங்கியதில் பரம திருப்தி அவளுக்கு.

............



மார்வாடியிடம் கடன் வாங்கி வீட்டை வாங்கினான் கோவிந்தராஜன். உத்யோகமும் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து ஒரு சுமாரான அந்தஸ்து ஏற்பட்டுவிட்டது அவனுக்கு. அவனது பெண் வைஜயந்திக்குக் கலியாணம் செய்யும் வயது வந்துவிட்டது. இதற்கிடையில் அவளுக்குப் படிப்பு, ஆடல், பாடல்—ஒரு பெண்ணானதால்—பணத்தை அவளுக்காக ஜலம்மாதிரி வாரி இறைத்தான். உயர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வரனைத் தேர்ந்தெடுத்து, அதற்கேற்றபடிப் பணத்தைச் செலவு செய்து, தடபுடலாக நாலு பேர் மெச்சிக் கொள்ளும் வகையில் கலியாணத்தைச் செய்துவிட்டான்.

இவ்வளவு பணத்தை அவன் எப்படிச் சேர்த்து வைத்திருந்தான் என்பது எல்லோருக்கும் பெரும் புதிராகவே இருந்தது. இதற்கிடையில் கொஞ்சம் கொஞ்சமாகக் கோமதியின் ஆடம்பர வாழ்க்கை அத்துமீறிப் போய்க்கொண்டிருந்தது. எல்லாம் கொஞ்ச நாளைக்கு தேவ ரகசியமாகவே இருந்தது. கடைசியில் ஒரே சமயத்தில் கடன்காரர்களெல்லாம் கோவிந்தராஜனின் 'கழுத்தில் கத்தியை வைக்க' ஆரம்பித்து விட்டார்கள். இந்த சமயம் அவன் எப்படியோ இந்தத் தொல்லைகளினின்றும் மீண்டு வந்துவிட்டான்.

ஆனால், ஆபீஸ் பணத்தைக் கையாடல் செய்ததற்காக கோவிந்தராஜனின்

உத்யோகத்துக்கே ஆபத்து வந்து விட்..ு.

...டைய மேலதிகாரி நடேச ஐய.. இந்த சமயத்தைத்தான் எதிர் பா..்..க் கொண்டிருந்தார். தாயைப் பட்..னி போட்டு இவன் ஆடம்பர வா..கை நடத்துவதும் தனது அ..ஷ்டத்தைப் பற்றித் தனது தாயினிடம் அவன் வீராப்புப் பேசியதும் இவருக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. நடேச ஐயர் கோவிந்தராஜனுடைய தகப்பனாரின் பழய நண்பர். அவருடன் படித்தவர். பட்டம்மாள் மிகவும் நல்லவள் என்று அவளிடம் நல்ல மதிப்பு வைத்திருந்தவர். அப்படிப்பட்டவளிடம் மனைவியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு இப்படி நடந்து கொள்கிறானே என்று சொல்ல முடியாத வருத்தம் கோவிந்தராஜன்மீது நடேச ஐயருக்கு. இந்த சமயத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டு அவனுக்குச் சரியான பாடம் கற்பித்து விட வேண்டுமென்று தீர்மானித்து விட்டார் நடேச ஐயர்.

இது பட்டம்மாள் காதுக்கு எப்படியோ எட்டிவிட்டது. அப்பொழுது இரவு மணி ஒன்பது இருக்கும். இருந்தாலும் வேடிக்கை பார்க்கும் சமயம் இதுவல்ல என்று கருதியவளாய், அப்பொழுதே நடேச ஐயரின் வீட்டுக்குச் சென்றாள் பட்டம்மாள்.

'என்ன இந்த அவேளையில் இப்படி? ஒரு வார்த்தை சொல்லியனுப்பியிருந்தால், நான் உங்கள் வீடு தேடி வந்திருக்க மாட்டேனா? எனக்கு இக்கட்டான ஒரு சமயத்தில் உங்கள் நகையை நாகராஜ ஐயரிடம் கழற்றிக் கொடுத்து என் மானத்தைக் காப்பாற்றிக் கொடுத்த உங்களை நான் மறக்க முடியுமா?' என்றார் நடேச ஐயர்.

'பிரமாதந்தான். ஒருவருக்கொருவர் சமய சந்தர்ப்பங்களில் அந்த உதவி கூடச் செய்துகொள்ளவில்லையென்றால், நாம் மனிதர்கள் என்று எதற்காகச் சொல்லிக்கொள்ள வேண்டும்?' என்றாள் பட்டம்மாள்.

'நீங்கள் பின்னே எப்படிச் சொல்வீர்கள்? ஆமாம். என்ன விசேஷம்? எங்கே வந்தீர்கள்? கோவிந்தராஜன் உங்களை ரொம்பவும் உதாசீனம் செய்கிறானாமே? அவனை ஒரு மனிதனாக்குவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பீர்கள்? எத்தனை பாடுபட்டிருப்பீர்கள்? அதற்குப் பிரதிபலனுக்கும் இது!' என்றார் நடேச ஐயர்.

'இதெல்லாம் உலகத்திலே சகஜந்தானே! அது கிடக்கட்டும். கோவிந்தராஜனைப்பற்றி ஏதோ கேள்விப்பட்டேன். அது உண்மையாக இருக்குமானால், இந்த சமயம் அவனை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும். அதற்காகத்தான் உங்களைத் தேடிக்கொண்டு வந்தேன். நீங்கள் இங்கு மாற்றலாகி வந்திருப்பது இன்றுதான் எனக்குத் தெரியும்' என்றாள் பட்டம்மாள்.

'நன்றாகச் சொன்னீர்கள். உங்களை அவன் எவ்வளவு உதாசீனம் செய்கிறான்? அவனைச் சும்மா விடுவதா? மீதிக்கெல்லாம் அவனுக்குப் பணம் அகப்படுகிறது. உங்களுக்குக் கொடுப்பதற்குத்தான் அவனுக்குப் பணம் அகப்படாமல் போய் விடுகிறதாமோ? இந்த சமயம் அவனுக்குச் சரியான பாடம் கற்பித்து விடுவது என்றல்லவோ முடிவு செய்திருக்கிறேன்' என்றார் நடேச ஐயர்.

'கிடக்கிறான் அசட்டுப் பயல்! இந்த தரம் மட்டும் எனக்காக அவனை மன்னித்து விடுங்கள்' என்றாள் பட்டம்மாள்.

'அவனுடைய அயோக்யத்தனத்திற்கு மன்னிப்பு வேறா?' என்றார் நடேச ஐயர்.

'என்னமோ தொலைந்து போகிறான். இந்த தரம் மன்னித்துவிட்டால் பிறகு, அவன் சரியாகி விடுவான் என்று நம்புகிறேன். ஏதோ தெரியாத்தனமாகச் செய்துவிட்டான். எங்கள் பழைய பந்து ராமசுப்பய்யரைக் கேட்டு ஆயிரம் ரூபாய் வாங்கி வந்திருக்கிறேன். மீதியை நீங்கள் சரி செய்து, அவனை எப்படியாவது இந்த தரம் காப்பாற்றியாகவேண்டும்' என்று சொல்லிவிட்டு, தான் வாங்கி வந்த ஆயிரம் ரூபாயை நடேச ஐயரிடம் கொடுக்கப் போனாள் பட்டம்மாள்.



'உங்களைப் போன்ற சில நல்ல ஆத்மாக்கள் இருப்பதால்தான் உலகம் இந்த மட்டிலாவது இருக்கிறது. நீங்கள் மாத்திரம் இப்பொழுது இதில் தலையிட்டிராவிட்டால் நாளை அவன் கதி என்ன ஆகியிருக்குமோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்! அந்த ரூபாயை ராமசுப்பய்யரிடமே திருப்பிக் கொடுத்து விடுங்கள். நானே பார்த்துக் கொள்கிறேன். உங்களுக்காக அவனை மன்னிக்கிறேன்' என்றார் நடேச ஐயர்.

இந்த உறுதிமொழியை வாங்கிக் கொண்டு, பட்டம்மாள் அவரிடம்விடை பெற்றுச் சென்றாள்.

............

'இன்னும் இரண்டே வாரத்தில் எப்படியாவது மீட்டுக் கொடுத்து விடுகிறேன். இந்த சமயம் மட்டும் கொஞ்சம் மனசு வை' என்றான் கோவிந்தராஜன்.

'நன்றாகத்தானிருக்கிறது. பத்தாம் தேதி அக்காவின் பெண்ணுக்குக் கலியாணம். வெறும் உடம்புடன் 'மரக்கட்டை மாதிரி' போய் நின்றால் நன்றாகத்தானிருக்கும். வேறு யாருடைய கலியாணமாக இருந்தாலும் பரவாயில்லை. போகமல்கூட இருந்து விடலாம். இதற்கு அப்படி முடியுமோ? ரங்கராஜன் உங்களுக்கு ரொம்பவும் வேண்டியவர் என்று சொல்லிக் கொள்கிறீர்களே. அவரைப் போய்ப் பாருங்கள்' என்று சொல்லி, அடகு வைப்பதற்கு நகையைக் கழற்றிக் கொடுக்க முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள் கோமதி.

பிறகு கோவிந்தராஜன், ரங்கராஜன், வரதராஜன், தேவராஜன் என்று தனக்கு வேண்டியவர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களையெல்லாம் கேட்டு விட்டான். பைஸா கொடுப்பவர்களைக் காணோம். கடைசியில் நடேச ஐயருக்கு ரொம்பவும் வேண்டியவர் ஒருவரிடமிருந்து நடேச ஐயருக்கு சிபார்சுக் கடிதம் ஒன்று வாங்கிச் சென்றான்.

கோவிந்தராஜன் இந்த சிபார்சுக் கடிதத்துடன் சென்ற சமயம்தான் நடேச ஐயருடன் பட்டம்மாள் பேசிக் கொண்டிருந்தாள். மறைவானதொரு



"அடியே! குழந்தை அம்பிப் பயலுக்காக பாட புத்தகம் வாங்கிண்டு வந்துட்டேன் பார்!...ஆமாம், அந்த அம்பி எங்கே காணோம்?"

இடத்திலிருந்துகொண்டு இவர்களிடையே நடைபெற்ற சம்பாஷணை முழுவதையும் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தான், கோவிந்தராஜன். முடிவு தெரிந்ததும், அங்கு வந்தது தெரியாமலே வீடு போய்ச் சேர்ந்துவிட்டான்.

............

அதற்கு மறுநாள்தான், முதலில் கூறப்பட்ட அத்தனை வைபவங்களுடன் தனது தாயைப் பார்க்கச் சென்றான் கோவிந்தராஜன்.

இது எப்படித் தெரியும் பட்டம்மாளுக்கு! தனது மகனுக்குச் சொல்லி வைத்தாற்போல் திடீரென்று நல்ல புத்தி வந்து விட்டதாகவே எண்ணிவிட்டாள் அவள். இதில் சொல்ல முடியாத சந்தோஷம் அவளுக்கு, பாவம்!

'என்னதான் இருந்தாலும் 'பெற்றமனம்' என்பது வேறுதான், என்று தன்னையறியாமலே முணுமுணுத்தான் கோ..தாராஜன்.

☆

# காணிக்கை கடன்



பஸ்ஸின் அலறலைக் கேட்டதும், குறைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த கிழவன் விசுக்கென்று எழுந்து உட்கார்ந்துகொண்டான். களைப்பையும், சோர்வையும் இமைச் சிமிழுக்குள் தேக்கியபடி, சுவரிலே சாய்ந்து நித்திரை வசப்பட்டிருந்த ரங்கத்தைத் தட்டி எழுப்பினான். நினைவு தெரிந்த நாள்முதல் காரின் சந்தடியையே தாலாட்டாகக்கொண்டு வளர்ந்த சிறுமி உடலை வளைத்து சோம்பல் முறித்தாள். கிழவன் உண்டியல் தகரத்தைக் காதருகே கொண்டு போய் குலுக்கினான். விரிந்த உதடுகளூடே முறுவல் மலர, ரங்கம் எழுந்து அதை வாங்கிக்கொண்டாள். உடலை மூடியிருந்த மஞ்சள் கந்தலில் ஒட்டியிருந்த புழுதியைத் தட்டிவிட்டு ஓடினாள் ரங்கம். பழக்கத்திற்கு அடிமையான பரபரப்பு நடை!

ஓடிக் களைத்த இளைஞன்போல நெட்டுயிர்த்து நின்ற பஸ்ஸிலிருந்து பிரயாணிகள் இறங்கினர். குலுங்கிய உண்டியலின் பின்னணியோடு ரங்கத்தின் குழைந்துவந்த குரல், இசைந்து ஒலித்தது. 'ஐயா, ஏழுமலையானுக்கு காணிக்கை செலுத்த, கையாலான தர்மம் போடுங்க'–ஒடுங்கதி பிரயாணிகள் சாடிக்கொண்டு சென்றனர். கையிலிருந்த தகரத்தைக் கீழே விழாமல் இறுகப் பற்றிக்கொண்டாள்.

மஞ்சள் நீராடிய உடை காற்றிலே பறக்க, ஒரு குடும்பம் இறங்கியது. ரங்கத்தின் உள்ளத்திலே மகிழ்ச்சி அரும்பு கட்டியது. தகரத்திற்குள் நாணயங்கள் கலகலத்தன.

நடுத்தர வயதுள்ள மாது ஒருத்தி சிறிது சினந்தாள். 'வருஷக் கணக்காலே போட்டுக் கிடந்த கடனை சேர்க்கத்தான் போகிறோமே. வழியிலே இது வேறு பாக்கியா?'

சிறுமியின் கண்கள் ஒவ்வொருவர் மீதும் பாய்ந்தன. கடனை நிறைவேற்றப் போகும் திருப்தியும், கவலைகளும் நிழலாடிய முகங்கள். எண்ணெய் காணாத குழற்கற்றைகள் பிரயாண அலுப்பில் சிலும்பிக் கிடந்தன. பார்வைக் கிடங்கிலே பக்தி மினுமினுக்கும் கண்கள்! பளீரென்ற பார்வையோடு கலந்த மஞ்சள் வர்ணத்தின் ஒளி நெஞ்சைப் பறித்தது.

'சரி, அடுத்த பஸ்ஸைப் பிடிக்கலாம் வாருங்கள். கொண்டு சேர்ப்பிக்கும்வரை பணம் பத்திரம். அப்புறம் ஏழுமலையான் பொல்லாதவன். வட்டி போட்டு வாங்கி விடுவான்.' மஞ்சள் துணியிலே கட்டியிருந்த பண முடிச்சை பத்திரப்படுத்தியபடி அவள் விரைந்தாள். அவளைத் தொடர்ந்து மற்றவர்களும் அடுத்த பஸ்ஸில் ஏறி உட்கார்ந்துகொண்டனர்.

நெற்றியிலே புரண்ட கூந்தலை ஒதுக்கி விட்டுக்கொண்டாள். விரல்களிலே ஒட்டிய எண்ணெய் பிசுக்குப் போல, சிந்தனையிலும் எண்ணங்கள் பிசுக்கென ஒட்டிக்கொண்டன. உண்டியலின் கனம் மனத்தை அழுத்தியது. கூட்டத்தினர் எடுத்துச் சென்ற பணம் கலகலவென்று ஆண்டவன் உண்டியல் பெட்டிக்குள் ஐக்யமாகும் காட்சி மனக்கண் முன்பு எழுந்தது. பூர்ணமாகாத கனவைப்பற்றிய நினைவு அலைகள் தொடர்ந்து நெடுமூச்சாகத் தூரத்தி வந்தது. அவள் கையிலிருக்கும் காணிக்கைப் பணம் இட்டிலி, இடியாப்பம். வெற்றிலைச் சருகு வயிற்றுப் பொரிகளாக மாறிவிடுமே!

கண்கள் கந்தல் ஆடைகளை ஊடுருவின. ஓட்டுக் கந்தலாகத் தொங்கிக் கொண்டிருந்த மஞ்சள் ஆடையில் திட்டுத் திட்டாக புழுதி முத்திரைகள்! மஞ்சள் நிறத்திலே இழையோடிய மாசு நெஞ்சை நெருடியது. நோக்கங்களிலே அதன் பிரயோகம் வேறுபட்டிருந்ததை அறிய முடியாத ஓர் குழப்பம்! மஞ்சள் ஆடையையும், உண்டியல் தகரத்தையும் வயிற்றை நிரப்பும் கருவிகளாக, வாழ வகுத்த வழிகளாக அமைந்துகொண்டுள்ளதைப் புரிந்துகொள்ள இயலாத உணர்ச்சிகளின் போராட்டத்திலே நடை தேங்கியது. ஏழு வயதுச் சிறுமியின் பகுத்தறிவிலே எண்ணற்ற கேள்விகள் எழுந்தன.

'ஏ, ரங்கம், வயிற்றிலே சங்கு ஊதியாச்சு. எடு காசை'. கிழவன் தகரத்தை [illegible] ஆணியுடன் நெருங்கினான். ரங்கம் வெடுக்கென்று ஆணியைப் பிடுங்கிக்கொண்டாள். அந்த ஆணியிலிருந்த துரு அனைத்தும் அவள் மனத்தில் ஏறிவிட்டதோ?

சிறுமியின் நுதலில் கோபமும், வெறுப்பும் கூத்தாடின. 'ஏன் தாத்தா, இப்படியே காணிக்கைப் பணத்தை வயிற்றுக்குள் தள்ளிக்கொண்டிருந்தால், என்றைக்கு அவன் கடனைச் செலுத்துவதாம்?'

கிழவன் 'கடகட'வென்று சிரித்தான். 'செலுத்தலாம் இரு. அவன் காசு எங்கே போகுது?' மறுபடியும் கண்களில் நீர் முட்டும்வரை சிரித்தான். ஆண்டவனே அன்றுவரை அறிவுறுத்தாத கேள்வி, சிறுமி வாயிலாக வெடித்து வரவே, தனது சாமர்த்தியம் பற்றிய எல்லையில்லாத பெருமை சிரிப்பாக எதிரொலித்தது.

'அவன் பொல்லாத சாமி. கடனை வட்டி போட்டு வாங்கிவிடுவான். அவன் சொத்தை நாம் சாப்பிடுவது பாவமில்லையா?' சிறுமியின் நோக்கிலே பயமும், பக்தியும் பின்னலாடின. கூற்



"என்ன... [illegible] மாம்பழம் ஒரு ரூபாயா?"

'குருக்ஷேத்ரம் சாப்பிடறதுக்குள்ளே மாம்பழத்தையெல்லாம் ஏஷ்யாவுக்கு அனுப்பிச்சாச்சில்லே? அதனாலே விலை ஏறிப்போச்சு!"

தின் உண்மை நெஞ்சாழம்வரை வேர் விட்டிருந்த நெகிழ்ச்சி, குரலிலே பிரதிபலித்தது.

'பாவமா? யார் சொன்னது? சும்மா அவன் பேரைச் சொல்லிக்கிட்டு பிழைச்சுக்கிட்டுத் திரியலே நான். எனக்கு அவன் ஒரு வழியிலே பட்டிருக்கிற கடனை இப்படித் தீர்த்துக்கிட்டு வரேன்'. கிழவன் அசுர வேகத்தில் கைகளை ஆட்டினான்.

ரங்கத்தின் விழிகள் எல்லையற்ற வியப்பைச் சொரிந்தன. 'என்ன தாத்தா, சொல்லுறே? சாமி கடன்பட்டிருக்குதா?' இதழ்கள் கொட்டி விரிந்தன.

'அது பெரிய கதை. நீ ஓடிப் போய் வெற்றிலைச் சருகு வாங்கி வா. சொல்லுகிறேன்'. நாக்கின் முரமுரப்பை எச்சிலை விழுங்கித் தணித்துக்கொண்டான்.

கொய்து வீசிய மலரென சிறுமி அங்கிருந்து ஓடினாள். மழலைப் பருவம் பிரிந்து அறிவு மொட்டவிழப் போகும் சின்னஞ்சிறு உள்ளத்தை ஏமாற்ற ஓர் புனைக் கதையை மனதிற்குள் அசை போட்டுக்கொண்டான் கிழவன். காதளவோடிய புன்னகையில் எள்ளலம் மின்னியது.

வெற்றிலையை அவன் கையில் திணித்துவிட்டு, ரங்கம் பார்வையின் நேர்கோணத்திலேயே உட்கார்ந்து கொண்டாள்.

வாயிலே விறுவிறுத்த புகையிலை நெஞ்சுவரை இனித்தது. 'ஏ புள்ளே, எப்பொழுதும் இதுபோலக்கையேந்திக்கிட்டு வயிறு வளர்த்தேன்னு நெனைக்கிறே? சங்கு ஊதவும் வெள்ளை வேட்டி சரசரக்க பஞ்சாபகேசனுக்குக் கிளம்பிருவேன். சூரியனைப் பார்த்தால் இரண்டு ரூவா கைமேலே. உன்னைப்போலவா உங்க ஆயா இருந்தாள்? பறிச்ச வெள்ளரிப்பழம்போல; வெற்றிலைச் சிவப்பு கழுத்துலே தெரியுமே. அந்த வருசம் உன்னையும் சுமந்துகிட்டு மலைக்குப் போனோம். இன்னைக்கு காணுறுப்போல வெத்து ஆளல்ல நான். எப்படியோ குளிர அவனைக் கும்பிட்டோம். எசைகேடான கூட்டம்! நெரிசல் பிரிந்து வெளியே வந்து பார்த்தால், உன் இடுப்புலே கட்டியிருந்த ஐஞ்சுபவுன் அரைக்கவுறும், 50 ரூபாயும் மணி பர்ஸோடு போயிருச்சு. ஆயுசெல்லாம் அருவி மூக்காலே சேர்த்த ரொக்கம் அது. அழுது புலம்பினால் திரும்பி வந்திடுமா? அதையே நெஞ்சிலே வைத்து நொந்து, உயிரையே விட்டாள் பாவி மகள். தானும் இப்படித் திரியலானேன் உன்னையும் காலிலே கட்டிக்கிட்டு. அவன் பறிச்சுக்கிட்ட கடன் தான் இப்படிக் கழியுது...' கிழவன் கொட்டாவி விட்டான்.

'பின்னே, காணிக்கைப் பணத்தைக் கொண்டு செலுத்திடுவியா?' உண்மையான ஆதங்கத்தோடு வினவினாள் ரங்கம்.

கிழவனின் உள்ளுணர்வில் ஊசிபட்டாற்போல ஓர் குறுகுறுப்பு! 'ஓ! கட்டாயம் செய்திடுவோம்'. அவனையுமறியாத உறுதி குரலின் சுருதியோடு வந்தது. ரங்கத்தின் பிஞ்சுக் கரங்கள் கிழவனின் முரட்டுக் கண்டத்தைச் சுற்றி இறுகின. மகிழ்ச்சிப் பெருக்கை முத்துப் பற்களிடையே அணைகட்டிய படி ரங்கம் ஓடினாள்.

## 2

ரங்கத்தின் கேள்விகள் முதிய கண்டத்தை அடைத்தது. அனுபவத்தால் இறுகிப்போன நெஞ்சத்தைத் தடவிய படி 'இதோ பார் ரங்கம்! இனி சேரும் பணமெல்லாம் அவனுக்குத்தான்' என்றான் எரிச்சலோடு.

இப்பொழுதெல்லாம் ரங்கத்திற்கு ஓய்வேயில்லை. நரம்புக் கோலமிட்ட தளிர் பாதங்கள் எரிக்கும் வெயிலில் கொப்புளித்துக் கிடந்தன. பஸ் ஸ்டாண்டு மட்டிலுமன்றி, எல்லாப் பொது இடங்களிலும் அவளது உண்டியலின் பின்னணிதான். வெயிலும், மழையும்; அலைச்சலும் கன்னத்திற்குக் கருஞ்சிவப்பை ஏற்றி, முன்னே தள்ளி நின்ற மார்புக் கூட்டை, மயிர்க்கற்றை கவசம்போல மறைத்தது.

நிறை மாதக் கருவைச் சுமந்து நிற்கும் சூலிபோல, உண்டியல் பாரத்தின் நெருக்கம் தாங்காது, குலுங்கிக் குரல் எழுப்பத் திராணியற்று நின்றது.



'தாத்தா, நாம் மலைக்கு எப்பொழுது புறப்படலாம்?' என்றாள் மகிழ்ச்சியோடு.

கிழவன் விழிகளை உருட்டி விழித்தான். 'எல்லாம் கொடுத்து வைச்சிருக்கிறவன், தானே வாங்கிக்கொள்கிறான்'. தனது வயிற்றுப் பொறியிலே கூறு போட வந்துவிட்ட பங்காளிமீதுள்ள துவேஷம் சொற்களாகத் திரண்டன.

காலை இளங்காற்றின் ஸ்பரிசத்திலே, வைகறையின் தண்மையிலே விழிகள் மலர, ரங்கம் எழுந்தாள். பொம்மையை மார்போடு கட்டி உறங்கும் சிறுமிபோல, இனிய நினைவுகளுடன் கலந்து உறவாடிய மகிழ்ச்சி முகத்திலே துள்ளி விளையாடியது. உண்டியல் பெட்டியுடன் அவள் கிளம்பிவிட்டாள். கிழவனின் குறட்டை ஒலி அவளைத் தடை செய்யவில்லை. யுகம்யுகமாக அந்தச் சேவைக்கே காத்துக் கிடந்த ஓர் சக்தி கால்களுக்கு உரம் கூட்டின.

ரங்கத்தின் இமை கொட்டாத பார்வை எதிரேயிருந்த மூர்த்தியின் மீதே லயித்திருந்தது. சலனமற்ற அந்தப் பார்வையினூடே பாரோடு விண்ணும் பரந்த எம்பெருமான் புகுந்து விட்டானோ? ஜாஜ்வல்யமான ஒளி வெள்ளத்திலே, கணகணவென்ற மணியின் இசை நாதத்தோடு ரங்கத்தின் உடல் குலுங்கியது. எத்தனை வருடங்களாக உணர்வோடு பின்னிப் பிணைந்து கிடந்த ஆசைக் கொடி அது! உணர்ச்சி மிகுதியால் கண்களிலே நீர் திரண்டது. கைகளிலே கனத்த பணம் கலகலவென்று உள்ளே உருண்ட ஒலியை ஆண்டவன் ஆழ்வார் அமுதி



னும் இனிய சுவையாக உணர்ந்தானே என்னவோ?...ஆனால், ரங்கத்தின் மனச்சுமை யாவும் வண்ண மலர்களாகக் கொட்டின. அவளது மெலிந்த கரங்கள் தலைக்குமேல் உயர்ந்து குவிந்தன. இதயத்தின் கசிவு கண்களுக்குக் கரையிட்டது. மோதிச் சிதறும் முகில் வெள்ளத்திலே ஆடி ஆடி வெகு தூரம்—தொலை தூரம் அந்த அமைதி ரூபம் கைக்கு எட்டாத—ஆனால், உள்ளத்தோடு ஒன்றிவிட்ட இனிக்கும் அனுபவம்!

அவளுடைய தாயும் இதுபோலத் தானே ஆண்டவனைச் சேவித்திருப்பாள்? எத்தனை நிராசையோடு திரும்பியிருப்பாள்? பண்படாத அந்த நெஞ்சத்தினின்றும் உருக்கமான சொல் அலங்காரங்களும், பிரார்த்தனை வரிசைகளும் கிளைத்தெழவில்லை! தண்ணீரையும், ஒளியையும் கண்டவிதை பூமியினின்றும் வெடித்து வருவதுபோல, பிஞ்சு உள்ளத்திற்குள்ளே புதைந்து கிடந்த நினைவுகள், சூழ்நிலையின் நெகிழ்ச்சியால் கூறிக் கொண்டு வந்தது. 'பெருமாளே! எங்கம்மாவினுடைய பொருளையும், உயிரையும் பறிச்சுக்கிடலேன்னு தாத்தாவே வந்திருப்பாரே உன்னைக் கும்பிட' கண்ணீர் உதடுகளை நனைத்தன.

கூட்டம் அவளைக் கசக்கிப் பிழிந்தது. உயர்த்திய கைகள் கீழே களர்த்த முடியாத ஓர் நெகிழ்ச்சி! ஏதோ ஓர் சக்தி ஆகாயத்திலே தூக்கி எறிந்தாற்போல ஒருவித நிஷ்பிரக்ஞை நிலை! வழவழவென்று காலைச் சுற்றியது ஒரு வஸ்து. இடறிய நிலையில் தலை குப்புற விழுந்தாள் ரங்கம். தூணுக்கும் அப்பால் அவளைத் தள்ளிவிட்டு ஊர்ந்துகொண்டிருந்தது ஜனத்திரள்.

ரங்கம் குனிந்து காலைச் சுற்றியதை வெடுக்கென்று இழுத்து இடறிய வஸ்துவையும் ஒளிக் கோலத்திற்குள் தூக்கிப் பிடித்தாள். உள்ளக் கவாடமே இடம் பெயர்ந்துவிட்டாற்போல உடலே அதிர்ந்தது அந்தப் போதிர்ச்சியால்! இடது கையிலே ஒரு கறுப்பு மணிபர்ஸும்; வலது கையிலே ஒரு தங்க அரைஞாணும் ஊசலாடியது. நினைவுக் குவியலுக்குள் மறைந்து பழங்கதை பேசிய அசேதனப் பொருட்கள் இன்று மெய்யாகவே அந்தப் பிஞ்சுக் கரங்களை ஸ்பரிசிக்கின்றனவோ?

ரங்கத்தின் சிரம் பூமியோடு இணைந்தது. கண்ணீர் பொட்டுகள் உதிர்ந்து காணிக்கை சேவையை நிறைத்தன!

## 3

'சோத்துக்குக்கூட வழி வைக்காமே அத்தனை காசையும் தூக்கிக்கிட்டுப் போயிட்டாளே'. அலுத்துக்கொண்ட கிழவனின் மடியிலே பந்துபோல வந்து விழுந்தாள் ரங்கம்.

'தாத்தா, இதோ பார் உன்னிடமிருந்து பறிச்ச பொருளை என் கையிலே கொடுத்திட்டார் பெருமாள்'. தங்க அரைஞாணையும், கறுப்பு மணிபர்ஸையும் அவன் கைக்குள் திணித்தாள்.

ஐம்புலன்கள் சுழல, அவன் அவற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். நெஞ்சப் பாறை தூள் தூளாகச் சிதறிய பேரொலியிலே அவனது கயமை மண் பாண்டம்போல நொறுங்கிச் சிதறியது.

அவனது கூரிய திருஷ்டி சிறுமியின் விழிச் சுருக்கத்திற்குள் எதைத் துருவியது? இறைவனின் பெயருக்குப் பின்னே அவன் தன்னைத்தானே தான் ஏமாற்றிக்கொண்டு திரிந்தானா? குழந்தை உள்ளத்து உணர்ச்சிகளோடு மனிதன் விளையாடினாலும், அந்தப் பிஞ்சு இதயத்தில் வித்திட்டுவிட்ட நம்பிக்கையோடு ஆண்டவன் விளையாடவில்லை! அதை அவர் உணரவைத்த நொடியிலேயே உடல் முழுவதும் பொடிந்து சிலிர்த்தது.

விம்மித் தணிந்த மார்பிற்குள் புதைந்த ரங்கத்தின் முகத்தில் அன்பு முத்திரைகள் பதிந்தன. மறுநாளே உண்டியல் தகரமும், மஞ்சள் உடையும் குப்பைத் தொட்டிக்குள் சரணடைந்தன. அந்த வட்டாரமே ரங்கத்தின் குரல் தவறாது, மழலை கேளாத தாய் இதயம்போல வெறிச்சோடிக் கிடந்தது.



# திரையில் கண்டிராத காட்சிகள்



## MBS. வீட்டில் சரோஜா

தொகுப்பு, புகைப்பட
எம்பியெஸ்

படவுலகில் மட்டுமல்லாமல் நடன உலகிலும் தனிப்பெயர் பெற்றுள்ள ஈ.வி. சரோஜா, தினமும் தன் சகாக்களுடன் நடன ஆசிரியை சரஸாவிடம் நடனப் பயிற்சி பெறுகிறார்.

★

நடராஜருக்குப் பயபக்தியுடன் தூபம் காட்டுகிறார்.



ஆபத்தில்லாமல் கார் ஓட்டும் சரோஜா, தன் தம்பி ராசையனி டம் மோட்டார் சைகிள் ஓட்ட கற்றுக்கொள்கிருரோ ?





சாப்பிக்கொட்டைக்கு வலிக்குமோ என்று அஞ்சுகிருரோ இந்த நடன நட்சத்திரம்.



ாத்தனே பெரிய மாமர ாளுலும் சரி, மாங் காய் என்ருல் போதும் பறித்துச் சாப்பிட்டு விட்டுத்தான் மறு வேலே இவருக்கு.



வெறுந்தோண்டி என்று நினைக் காதீர்கள். இதைப்போல் இரு மடங்கு குடங்கள் இழுத்தபோது பட்வுலகுக்கு அவர் வரவில்லே.



ஓய்வு நேரத்தில் காதுக் கினிய பாட்டுகளைக் கேட்டு ஆனந்திப்பது தான் அவருக்கு பொழுது போக்கு.



ணுமூச்சி ஆடு தில் சரோஜாவுக்கு பி டம் அதிகம். தன் சி கிதிகள் சீதாவையும் ஜெயாவையும் தேடி பிடிக்கப் பார்க்கிருர்.

தான் வளர்க்கும் நாயிடம் அளவில்லா அன்பு வைத்திருக்கிறார் இவர்.

★

''ஈ. வி. சரோஜாவைப் பாருங்கள். வர வர ஆண் குழந்தை மேல்தான் ஆசை போகிறது. என்னைத் தொடக்கூட மாட்டேன் என்கிறார்'' என்று நம்மைப் பார்த்துக் கூறுவதுபோல் கையைக் காட்டும் பெண் குழந்தை ஒரு பொம்மைதான்.







# ராணியைக் காதலித்தவன்

ஆர். பி. மல்லாரி

[ராணி ரஸியாவைக் காண ஃபிரோஸ் வந்திருக்கிறான். அவன் உள்ளே போக வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்க, சற்று சலசலப்பு ஏற்படுகிறது. இதைக் கேட்ட ராணி ரஸியா வெளியே வருகிறாள்.]

ரஸியா:—யாரது?

ஃபிரோஸ்:—பிரோஸ்!...நான்தான்... ஃபிரோஸ்!

ரஸியா:—பிரோஸ் என்றால்? சபைப் பிரதானியின் மகனா?

ஃபிரோஸ்:—(மெதுவாக) என்ன! என் ரஸியாவுக்கு நான் யார் என்றுகூட மறந்து போய்விட்டதா?

ரஸியா:—(அகங்காரத்துடன்) என்ன முணுமுணுக்கிறாய்? நீ யார்? சீக்கிரம் சொல்!

ஃபிரோஸ்:—என் பிரிய ரஸியா! நான்...

ரஸியா:—நிறுத்து! என் பெயரை உன் நாவால் உச்சரித்தால் துண்டித்து விடுவேன்.

ஃபிரோஸ்:(நகைத்து) உன் அடிமை புன்முறுவலுடன் ஏற்றுக்கொள்வேன்! (இளக்காரமாக நகைத்து) அப்போது நீ ஹிந்துஸ்தானத்தின் ராணியல்ல. எத்தனை நாட்கள் இந்த அழகான நதியின் கரையில், நிலவின் வெண் கடலில்..!!

ரஸியா:—யாரங்கே? அஷ்ரப்! இந்தப் பைத்தியக்காரனை வெளியே விரட்டச் சொல்!

(பல தோழிகள் வருகிறார்கள்)

ஃபிரோஸ்:—ரஸியா பேகம்! இந்த அடிமைக்கு, மனதில் உள்ளவற்றை முழுவதும் சொல்லவாவது அனுமதி கொடு! இன்று ஈத் முபாரக் அல்லவா? ...ஈத் வாழ்த்துக்களை உன்னிடம் சொல்லாமல் உன் ஃபிரோஸ் வேறு யாரிடம் உரைப்பான்?

ரஸி:—சரி...சொல்ல வேண்டியவற்றைச் சீக்கிரம் சொல்!

ஃபிரோ:—சரியாக மூன்று வருஷங்களுக்குமுன்...அன்றும் ஈத் பெருநாள்! (பெருமூச்சு விடுகிறான்) ஆம்; அன்று ரம்ஸான் ஈத்!...வான் முகட்டில் இலேசாகப் பிறைச் சந்திரனின் தோற்றம்! புல் புல் பறவைகள் இன்பகீதமிசைத்துக் கொண்டிருந்தன. நான் உனக்காக இனிய பேரீச்சம் பழங்கள் கொண்டு வந்தேன்...நீயும் நானும்...

ரஸி:—(கோபமாக) வாயை மூடு! இப்போது நீ யாருடன் பேசுகிறாய் என்பதை நினைத்துப் பார்! ஹிந்துஸ்தானத்தின் ராணி!

ஃபிரோ:—(மெதுவாக) இல்லை, என் இதய ராணி!

ரஸி:—(இளக்காரமாக) பிறைச்சந்திரன்! ஆஹ்ஹாம்! புல் புல்...ஹூம்! என்ன பேதமை!

ஃபிரோ:—அப்போது, ஒரு ஜோடி சோலைக் கிளிகள் ஆனந்தமாக எதிரே இருந்த மாமரத்தில் வந்து உட்கார்ந்து தங்கள் காதல் உலகில் பேச ஆரம்பித்தன; நீகூடச் சொன்னாய், அவைகளைப் போல நாமும் கொஞ்சிப் பேசினால்...

ரஸி:—(ஆத்திரத்துடன்) ஃபிரோஸ்! என் சபைப் பிரதானியின் குமாரன் என்பதற்காக மன்னிக்கிறேன். என் முன்னால் நிற்காமல் ஓடிவிடு!

ஃபிரோ:—அப்படியானால், நீ கொடுத்த வாக்குறுதிகள்? அவைகளை மறந்துவிட்டாயா?

ரஸி:—(ஆணவத்தோடு) எப்போதோ அறியாப்பருவத்தில் கண்ட பகற்கனவுகள் அவை!...நான் இப்போது மகாராணி! நீ ஒரு சாதாரண பிரஜை!

ஃபிரோ:—அப்படி என்றால்?...அ...ப்...ப...டி...யென்...றா...ல்...???

ரஸி:—என்னை மணப்பதென்றால் மன்னனாகப் பிறந்திருக்க வேண்டும்...

ஃபிரோ:—இல்லையென்றால், நான் உன்னை மறக்கவேண்டுமா? நான் எப்படி மறக்க இயலும்? நான் வேதாந்தியல்ல...கலைஞன்!...உன் காதலன்! உன் காதலுக்காக என் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கும் வீரன்?

ரஸி:—வரம்பு மீறி வார்த்தையாடுகிறாய்...பிறகு அதற்காக வருந்த வேண்டியிருக்கும்!

ஃபிரோ:—உன்னை அடைய எந்த வருத்தத்தையும் நான் ஏற்கத் தயாராக இருக்கிறேன் – நான் கலைஞன்! மனோசக்திக்கு அடிமைப்பட்டு கவிதை புனையவில்லை. கற்பனைக்கு அடிமைப் பட்டே கவிதை புனைகிறேன். நான் வீரன்! காமத்தால், பேடித்தனமாக வீரம் பேசவில்லை. கண்ணியமாக உன் உயிரைக் காக்கவே வீரம் பேசுகிறேன் ...உன் சௌந்தர்யத்தில்தான் என் கற்பனா சக்தி வளர்ந்தது! உன் எழில்தான் லாகிரியை அளிக்கும்...

ரஸி:—உளறலை நிறுத்து! உன் அறியாமைக்காக நான் பரிதாபப்படுகிறேன். ...ம்...யாரங்கே? யாஹெஸன்மீன்! காவலனை அழைத்து, இந்தப் பைத்தியக்காரனை அப்புறப்படுத்து!

ஃபிரோ:—ரஸியா! என் இதயத்தில் எழுந்துள்ள சுடரை நீ அணைக்கவில்லை! அதன் நிழலைத்தான் அணைக்க முயலுகிறாய்!

ரஸி:—எல்லாம் இந்த இரத்தினமாலையை அணிந்துகொள்ள! சிம்மாசனத்தில் வீற்றிருக்க!



(அவள் கைதட்ட, காவலாளிகள் வருகிறார்கள்.)

ரஸி:—கொண்டு போங்கள் இந்தப் பைத்தியக்காரனை!

(அவர்கள் ஃபிரோஸை இழுத்துக் கொண்டு போகிறார்கள்.)

ஃபிரோ:—(போய்க்கொண்டே) ரஸியா! நீ இன்று ராணியாக இருக்கலாம்! ஆனால், ராணிகள் என்றுமே ராணியாக இருந்ததில்லை......இந்த ஃபிரோஸை இப்போது நீ பிரஜையாக மதிக்கிறாய்! ஆனால், அவன் என்றும் உனது அன்பன்தான்...அதை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்தால், நான் பெரிய பாக்யசாலி! இன்று ஈத்காஹ்விலும் இந்த 'துஆ'தான் கேட்டேன்!

(இழுத்துக்கொண்டு போகிறார்கள்.)

## காட்சி 2

(ஃபிரோஸின் தந்தை ஷாஹுஸைனியும், தம்பி மிர்ஸாவும் கோபமாக இருக்கிறார்கள். ஃபிரோஸ் மெதுவாக வருகிறான்.)

ஷாஹு:—(கேலியாக) யார்? காதலரா வருவது! மஜ்னூ மகானே! வரவேண்டும்! வரவேண்டும்! உங்கள் வரவு நல்வரவாகுக!

ஃபிரோ:—(அலட்சியமாக) தங்கள் வரவேற்பு போதும்! அழைத்த காரணம்?

ஷா:—அழைத்த காரணம் – நீ அந்த ரஸியாவை மறக்கவேண்டும்!

மிர்:—மறப்பது மாத்திரமல்ல – அவளைக் குழி தோண்டிப் புதைக்க வழி வகுக்க வேண்டும்!

ஃபிரோ:—(எல்லையற்ற கோபத்துடன்) மிர்ஸா! நிறுத்து! நீ ஒரு நம்மக் ஹராம்!...உப்பு தின்ற நன்றிகூட இல்லை!

ஷா:—மிர்ஸா சொன்னதில் என்ன தவறு? ராணியைத் தொலைக்க வேண்டுமென்றுதான் பெருநாளும் அதுவுமாக இன்று ஒரு கூட்டம் நம் வீட்டிலேயே கூடப்போகிறது. அதில் உன் பங்கு என்ன என்று விளக்கிச் சொல்ல வேண்டும்.

ஃபிரோ:—(கோபத்தை அடக்க இயலாமல்) மறுவார்த்தை பேசினால் நீங்களும் இந்த உடன்பிறந்தவனும் இந்த வாளுக்கு இரையாவீர்கள்! சே! என்ன எண்ணம்! பெருநாளன்று விருதுகள் பெற்ற உங்கள் நெஞ்சில் எத்தனை விஷமிருக்கிறது!

ஷா:—என்ன சொல்லுகிறாய்?

ஃபிரோ:—சற்று யோசனை செய்து பாருங்கள்! தங்களுக்கு இவ்வளவு கௌரவம், அந்தஸ்து, பட்டம், பதவி, பொருள் எல்லாம் வழங்கியிருக்கும் ராணி ரஸியாவையா வஞ்சகமாகத் தொலைக்கப் பார்க்கிறீர்கள்? நீங்கள் வாழும் வாழ்வு, உண்ணும் உணவு, பேச்சின் துடிப்பு – எல்லாம் ரஸியா கொடுத்த பிச்சை! பாதுஷாவின் கோபத் தீயில் குளித்தெழுந்த உங்களை மீட்டவளும் ரஸியாதான். உங்களைத் தன் சபையின் பிரதானியாக்கியது ராஜத்துரோகம் செய்யவா?

மிர்:—இவ்வளவுதானா?...இல்லை, என் சகோதரர் சொல்லவேண்டியது இன்னும் ஏதேனும் பாக்கி இருக்கிறதா?

ஃபிரோ:—இந்த மிர்ஸா ஒரு பெரிய குள்ள நரி! அவன் மாய்மாலம் யாருக்குத் தெரியாது? வீரமில்லாத கோழைகள்.

மிர்:—இந்த ஃபிரோஸ் பெரிய சூராதிசூரர்! ஒரு பெண்ணிடம் காதல் பிச்சைக்காக மண்டியிட்டு மண்ணைக் கௌவிய வீரர்!

ஃபிரோ:—(கோபமாக) மிர்ஸா ஷரீஃப்! நிறுத்து!

ஷா:—உன் காதலை மறுத்த அவளை அங்கேயே இரண்டு துண்டாக வெட்டிப் போட்டிருந்தால், உன்னை என் வீர மைந்தன் என்று புகழ்ந்து பாடியிருப்பேன். ஒரு பேதைப் பெண்ணின்முன் கோழையாக நடந்து, அவள் உதாசீனம் செய்தும், இப்போது வீரம் பேசுகிறாய்!

ஃபிரோ:—(கேலியாக) வீரத்தைப் பற்றி உங்களுடைய 'மனோதத்துவ' விமரிசனம் பிரமாதமாக இருக்கிறது! ...அப்பா! உங்களையும், தம்பி மிர்ஸாவையும் உங்களுடைய பேடித்தனமான செய்கையையும் நான் வெறுக்கிறேன்!

மிர்:—ஆனால், பிச்சைக்காரனைப் போலச் சென்ற உனக்குப் பிச்சைக் கூடப் போடாமல் விரட்டிய அந்த



"எனக்குச் சம்பளம் இல்லேன்னதும் சந்தோஷப்படறியே? உனக்கு உங்க முதலாளி சம்பளம் இல்லேன்னு சொன்னதற்கு மட்டும் ஏன் வருத்தப்படறே?"

மாபெரும் ராணியை விரும்புகிறாய்! பேஷ்!

ஷா:—எப்படியும் ரஸியா வஞ்சகமாகத் தொலைக்கப்படுவாள் என்பதை நீ உன் கண்கூடாகப் பார்க்கத்தான் போகிறாய்.

ஃபிரோ:—(வீரத்தோடு) என் ரஸியா ராணியை ஒருவரும் வஞ்சகத்தால் அழித்துவிட முடியாது! இந்நாட்டின் அரசியை நான் கண்ணிமைபோல் காப்பாற்றுவேன்!

ஷா:—பார்க்கலாம், நீ காப்பாற்றுவதை...!

ஃபிரோ:—(நகைத்தவாறு) ஆம், பார்க்கத்தான் போகிறீர்கள்...என் உயிரைக் கொடுத்தாவது என் அரசியை, இந்த சாம்ராஜ்யத்தின் இரத்தினத்தைக் காப்பாற்றுவேன்.

(ஃபிரோஸ் வெளியே போகிறான்.)

## காட்சி 3

(புத்திரபாசத்தால் உந்தப்பட்டு மீண்டும் ஷாஹுஸைனி ஃபிரோஸைத் தேடி வருகிறார்.)



ஷா:—ஃபிரோஸ்! உன்னை நேரே நான் காண வந்தது உனக்கு ஆச்சரியமாக இருக்கலாம்.

ஃபிரோ:—......

ஷா:—ஃபிரோஸ்! நான் உன் தந்தை! உனக்கு வேண்டியதை, நல்லதைத்தான் நினைப்பேன்

ஃபிரோ:—......

ஷா:—நீ இந்தப் பத்து தினங்களாகப் பித்தன்போலிருக்கிறாய் என்பதை அறிந்தே வந்தேன். பெற்ற மனம் தாங்கவில்லை! இந்தக் கிழ வயதில் எனக்கு உன்னால் வேறு சுமையா?

ஃபிரோ:—வந்த காரியத்தைச் சொல்லிவிட்டுப் போகலாம்.

ஷா:—உன்முன் ஹிந்துஸ்தானத்தின் ராஜ பதவி காத்து நிற்கிறது. உன்னைப் போன்ற வீரன் ரஸியாவுக்கு எதிராகக் கிளம்பிவிட்டால், ஒரு நொடியில் அவளைச் சின்னாபின்னம் செய்துவிடலாம். இரத்தின மாலை உன் கழுத்தில் மின்னும்!

ஃபிரோ:— தந்தையே! நான் எத்தனை தடவை சொல்லுவது? எனக்கு ராஜ பதவி தேவையில்லை! ரஸியாவின் மனோ ராஜ்யம் கிடைத்தால் போதும்!

ஷா: மனோராஜ்யமும் சாம்ராஜ்யமும் கிடைத்தால்...

ஃபிரோ:—இந்தப் பத்து தினங்களுக்குள் நான் முழுவதும் மாறிவிட்டேன். கேவலம் காதலுக்காக ரஸியாவை நேசிப்பது சுயநலம்! ஆனால், ஹிந்துஸ்தானத்தின் மகாராணியின் நலம், அவளுடைய பந்தோபஸ்து — அவையெல்லாம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன!

ஷா:—பைத்தியக்காரன்! இன்னும் உன் புத்தி தெளிவடையவில்லை! ஹிந்துஸ்தானத்தின் ஏகசக்கிராதிபதியின் பதவி உன் காலடியில் காத்து நிற்கிறது! இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்!

ஃபிரோ:—அதாவது, தங்களைப் போலவே ராஜத்துரோகம் செய்தால்!

ஷா:—ஃபிரோஸ்! நீ தந்தையை இழிவுபடுத்தும் தனயனாகவே இருக்கிறாய்! மீண்டுமொரு முறை உன்னை மன்னிக்கிறேன். இப்போது நான் சொல்வதைக் கேள்! இரத்தினமாலை நாளையே உன்னை அலங்கரிக்கும்.

ஃபிரோ:—என்ன?

ஷா:—ரஸியா இப்போது இங்கில்லை. அல்தூனியாவின் கலகத்தை அடக்கப் போய்விட்டாள்.

ஃபிரோ: ஆனால், இந்த ஃபிரோஸ் ராஜபக்தன்! ராணியின் உப்பைத் தின்று வளர்ந்தவன் என்பதை எப்போதும் மறக்காதவன்! உங்களைப் போன்ற வஞ்சகர்களை ஒவ்வொரு கணமும் கண்காணிப்பில் வைத்திருப்பவன்!

ஷா: (இளக்காரமாக) சே! கோணல் உள்ளம் படைத்தவனாக இருக்கிறான்! தலைக்கேறிய பித்தம் இறங்கவே இல்லை!



ஃபிரோ:— தந்தையே! நான் என்றுமே இத்தகைய கோணல் உள்ளம் குழந்தையுள்ளம் படைத்தவனாக இருக்கவே விரும்புகிறேன்! தங்களைப் போன்ற துரோக மனப்பான்மை நிறைந்த பெரிய உள்ளம் வேண்டாம்!

ஷா:—(கோபமாக) புலிக்குப் பிறந்தது பூனையாக இருக்கிறது!...ராஜ விசுவாசமாம்! ஹும்! உன்னை ராஜ சிம்மாசனத்தில் பார்க்க நினைத்தேன்! அதற்கு நீ அருகதையற்றவன்!

ஃபிரோ:—தங்கள் ஆசீர்வாதத்துக்கு என் நன்றி! இன்று முதல், தங்கள் மைந்தனை நானே தங்களுடைய முதல் எதிரி!

ஷா:—(பயங்கரமாகச் சிரித்து) முட்டாள்! காதல் போதையில் புத்தி மழுங்கி நிற்கிறான்?

ஃபிரோ:—தாங்கள் சென்று வரலாம்! நான் என்றும் ராஜ விசுவாசி! ராஜத் துரோகியின் மகனாக இருக்க முடியாது!

ஷா:—பார்க்கிறேன் உன் வீரத்தை.

(ஷாஹானி கோபமாகப் போகிறார்.)

## காட்சி 4

மைமூன்:—பேகம் ஸாஹிபா!

ரஸி:—யார்? தோழி மைமூனா!

மை:—ஆம், பேகம் ஸாஹிபா! இன்று ஈத் பெருநாளல்லவா?

ரஸி:—ஈத் பெருநாள் எல்லாம் மகிழ்ச்சியுடன் இருப்பவர்களுக்கல்லவா?... ஹும்! மைமூன்! எங்கும் படுதோல்வி என்னைச் சூழ்ந்துகொண்டது! இதிலிருந்து வெளியேறவே மார்க்கமில்லை, (கண் கலங்குகிறாள்) இன்னும் எத்தனை நாட்களுக்கு நான் ராணி!

மை:—(திடுக்கிட்டு) என்ன பேகம் ஸாஹிபா? தாங்கள் கண் கலங்குகிறீர்களா?

ரஸியா:—ஆம்...என் அதிகார மமதையால் மானிட வாழ்வையே மறந்து, மற்றவர் ஆசாபாசங்களை இகழ்ந்து, அரச வாழ்வையே அமர வாழ்வாக நினைத்தேன். ஆனால்...

மை:—பேகம் ஸாஹிபா! அதோ பாருங்கள் இளம் பிறை! அந்த நீரோடையின் சிலுசிலுக் காற்றும், புல்புலின் இனிய கீதமும்!

ரஸி:—(எதையோ நினைத்துப் பெருமூச்சுவிட்டு) ஹும்! சென்ற வருஷம் இதே நேரத்தில் ஃபிரோஸ் என் அருகில் இருந்தார். என் இதயத்தில் அவருக்காக இடமிருந்தும், என் அந்தஸ்து என் கண்ணைத் திரை மறைத்திருந்தது!..இப்போது நான் தனி! அநாதை! என் பிரதானிகள்கூட வெளிப்படையாகவே எனக்கு எதிரிகளாகிவிட்டார்கள்!

மை:—தங்களுடைய ஃபிரோஸ் இருக்கும்வரை தங்களுக்கென்ன குறை?

ரஸி:—ஃபிரோஸ் இப்போது எங்கிருக்கிறார்?

மை:—சென்ற ரம்ஸான் குத்பாவின் போது தங்களைப் பார்க்க வந்தார்; விரட்டினீர்கள். இப்போது அவரைத் தேடி அலைகிறீர்கள்!

ரஸி:—என்ன மைமூன்?

மை:—ஒருசமயம் ஃபிரோஸ் யாரோ ஒரு பெண்ணை மணக்கப் போவதாகக் கதை கட்டிவிட்டோம். தங்கள் முகம் வெளுத்துவிட்டது! இந்த இரத்தின மாலையைக்கூட — ராஜாங்க சின்னத்தைக்கூட — கழற்றிப் போட்டுவிட்டீர்கள்.

ரஸி:—அந்த விளையாட்டை இப்போது நினைப்பானேன்?

மை:—உங்கள் கழுத்திலிருக்கும் இரத்தின மாலை இந்த இருட்டில்கூட மின்னுவதைக் கண்டதும் அந்த ஞாபகம் வந்துவிட்டது...அவர் எந்தப் பெண் மேலும் காதல் கொள்ளவில்லை என்று நான் விளக்கியதும், தாங்கள் முகமலர்ந்து ஒரு முத்து மாலையை என் கழுத்தில் சூட்டினீர்கள்..

ரஸி:—இப்பொழுது இந்த இரத்தின மாலையை மாத்திரம் நான் அவர் கழுத்தில் போட முடிந்தால்...

மை:—அவர் சக்கரவர்த்தியாகி விடுவார்! தாங்கள் வெறும்...வெறும்... (சிரித்து) மகாராணிகூட இல்லை! வெறும் மனைவி!

ரஸி:—(கவலையை மறந்து சிரித்து) போடி பைத்தியக்காரி! கற்பனை நான் எத்துணை இனிமையாக இருக்கிறது!

(பக்கத்து மரத்தில் இருவர் உட்கார்ந்திருக்கின்றனர்! ஷாஹானியும், மிர்ஸா தைமூரும்! அவர்கள் ராணியை நோக்கி வாளை எறியத் தயாராக இருக்கிறார்கள். எங்கிருந்தோ ஒரு குதிரை வீரன் — ஃபிரோஸ்...அவசரமாக வந்து நிற்கிறான்.)

ஃபிரோ:—மகாராணி!

ரஸி:—(சந்தோஷத்துடன்) யார்? தாங்களா...ஃபிரோஸ்!...ஃபிரோஸ்!

ஃபிரோஸ்:—மகாராணி! இங்கே தாங்கள் தனிமையில் இருக்கக்கூடாது! நம் எதிரிகள் நாலா பக்கமும் சூழ்ந்திருக்கிறார்கள். இப்போதுதான் ஒற்றர்மூலம் அறிந்தேன்! இன்று எப்படியும் தங்களைத் தொலைத்துவிடுவது என்று என் தகப்பனார் என்ற அந்தக் கோழை ஷாஹானியும், தம்பி என்ற வஞ்சகன் மிர்ஸாவும் தங்கள் பின்னாலேயே மறைந்து மறைந்து வந்தார்களாம். இப்போதுகூட இங்கேயே இருக்கிறார்களாம். (மரத்தைப் பார்த்து) ஆ! அதோ பாருங்கள், மரத்தில் இரண்டு உருவங்கள்! அந்த நன்றியற்ற துரோகிகளாகத்தானிருக்கவேண்டும்.

(இருவரில் ஒருவர் வாளை வீசி எறிகிறார்.)

(அவசரமாக) ரஸியா!......ரஸியா ராணி! நகர்ந்து கொள்ளுங்கள்! (வாளைத் தன் மார்பில் ஏந்திக் கொண்டு) ஹா!...யா அல்லா! ஹா!...

ரஸி:—(திடுக்கிட்டு) ஆ!...என்ன? என்னை நோக்கி வந்த வாளை உங்கள் மார்பில் ஏந்திக்கொண்டீர்களா?

ஃபிரோ:—ரஸியா ராணி!...தாங்கள் எங்கும் ஓடாதீர்கள்! இந்த வஞ்சகர்கள் பிடித்துக்கொள்ளலாம். (தூரத்தில் ஏதோ சப்தங்கேட்டு மகிழ்ச்சியுடன்) ஆ! அதோ! என் ஆட்கள் குதிரைப் படையுடன் வருகிறார்கள்! இனி தாங்கள் உயிரைப்பற்றிக் கவலையில்லை! இந்தத் துரோகிகளும் ஒழிந்தார்கள். (வலியைப் பொறுக்க முடியாமல்) ஹா...! ஆ...! அல்லா!... ஆ!...

ரஸி: (அழுதவாறு) அந்தோ! இன் முகம்கூட காட்டாத இந்தப் பாவிக்காகத் தங்கள் உயிரையே பலி கொடுத்தீர்களே!

ஃபிரோ:—(கனிவுடன்) கலங்காதே ரஸியா! என் கடமையைச் செய்தேன்... உன் அன்பைக் காட்ட இப்படி ஒரு சந்தர்ப்பம் கொடுத்த அல்லாஹ்தாலாவை மனமாற துதிக்கிறேன்... ம்...இன்றுதான் எனக்கு ஈத் பெருநாள்! தியாக தினம்! இது என் ரஸியா இரத்தின மாலையைக் கழற்றுகிறாய்?

ரஸி: தாங்கள்தான் என் அரசர்! சக்கரவர்த்தி! இதை அணியுங்கள்! நான் தங்கள் அடிமை!

ஃபிரோ:—(மகிழ்ச்சியுடன்) இந்த... இரத்தின...மா...லை...யை போடு!... நான் ர...ஸி...யா...வின்...சக்கர... வர்...த்...தி!...

(இரத்தின மாலையை ரஸியா ஃபிரோஸ் கழுத்தில் அணிவிக்கிறாள். குதிரை வீரர்கள் வந்து அணிவகுத்து மரியாதை செய்கிறார்கள். ஃபிரோஸ் புன்முறுவலுடன் நிரந்தர மௌனமாகிறான்.)

☆



உலகக்கதைகள்

# நஞ்சு

—அசுவத்தாமா

'ஆகா, ஆகா, ஆகா! என்ன சுகமான வாசனை! என்ன அற்புதமான குளுகுளுப்பு!' என்று ரோஸி மார்க்கரெட் வாய் விட்டு உரத்துக் கூறி மூச்சை தீர்க்கமாக உள்ளுக்கு இழுத்தாள். அதே சமயம் இளந்தென்றல் அவளது தளிரிள மேனியை வெகு லளிதமாக வருடிச் சென்றது.

மார்க்கரெட் போதைக் கிறக்கத்தில் திளைத்தாள். அவள் உள்ளமும் உடலும் வருணிக்க முடியாததொரு ஆனந்த பரவசத்தை அனுபவித்துக்கொண்டிருந்தன. இருபத்தைந்து வயது மதிப்புடன் கூடிய பருவ மங்கையாகிய அவளுக்கு, இந்த மணமும் மந்தமாருதமும் இன்ப லாகிரியை ஏற்படுத்தியது ஒன்றும் வியப்பளிக்கக்கூடியதல்ல தான். என்றாலும், அன்று அவள் அனுபவித்த சூழ்நிலையே வேறு; அவள் நெட்டுயிர்த்து இழுத்த மணமே அலாதி.

மரங்களும், செடிகளும், கொடிகளும், புதர்களுமாக மண்டியிருந்த அந்தத் தோட்டத்திலே உலவி வருவதும், அங்கே பூத்துக் குலுங்கும் மலர்களின் வாசனையையும், அந்த வண்ண வண்ணமான பூக்களின் வடிவழகையும் கண்டு வியப்பதும் அவளுக்குப் புதிய பழக்கமல்ல; பல ஆண்டுகள் பழக்கம். ஆனால், அன்று அவள் தோட்டத்தின் அந்தக் குறிப்பிட்டதொரு மூலையிலே அனுபவித்த மணமும், அந்தச் சூழ்நிலையில் மிதந்த போதையும் அத்தனை ஆண்டுகளில் என்றுமே உணர்ந்தும் அறியாததாகும்.

மார்க்கரெட் ஒருகணம் தயங்கினாள். 'எந்த மலரினின்று இத்தகைய அருமையான, விவரிக்க முடியாத அற்புதமான மணம் வருகின்றது?' என்று, மணம் வந்த திக்கில் உற்றுப் பார்த்தாள். ஆனால், அவளால் மணமுள்ள மலர் எதையும் அந்த இடத்திலே காண முடியவில்லை. ஏதோ புதர் ஒன்று அந்த இடத்திலே ஏகாந்தமாக மண்டியிருந்ததேயன்றி, அதிலே வாசனை வீசக்கூடிய மலர் எதையும் காணவே முடியவில்லை.

'ஆனால், தெய்வீகமான சுகந்தம் அந்த இடத்திலிருந்துதானே வருகிறது...? அது எப்படி...?'—அவள் உள்ளம் அவளையே வினவியது.

மறுபடியும் அந்தத் திசையிலேயே, அந்தப் புதரை நோக்கியே உற்றுப் பார்த்தாள், மார்க்கரெட். அப்போது அவள் கண்ட காட்சி அவளை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. அவள் தலை முதல் கால்கள்வரை ஒரேயடியாக வியர்த்துக் கொட்டியது. தேகம் தன்னை அறியாமலேயே ஒரு குலுங்கு குலுங்கி நின்றது. கண்கள் அளவுக்கு மீறிய அச்சத்தால் பிதுங்கின. மூச்சேகூட நின்றுவிடுமோ என்ற அளவுக்கு அவள் நிலைகுலைந்து போய் விட்டாள்.

அந்த இடத்திலிருந்து ஓடிவிடலாமா என்று மின்னல் வேகச் சிந்தனையொன்று அவளுள் எழுந்தது. ஆனால், அதைச் செயல் படுத்தத்தான் அவளால் முடியவில்லை. அச்சம் அவளை அவ்வளவு செயலற்றவளாக ஆக்கிவிட்டிருந்தது! அத்தனையிருந்தும், அவள் கண்கள் தான் கண்ட அந்தக் காட்சியிலேயே லயித்துப் போய் குத்தாக நிலைத்திருந்தன. அந்தப் புதருக்கு இடையில் இரண்டு நீண்ட அரவங்கள் ஒன்றையொன்று இறுக்கிப் பிணைத்துக்கொண்டு இந்த உலகத்து நினைவேயின்றி ஒன்றிய நிலையில் இருந்த அந்தக் காட்சிதான் அவளை அவ்வளவு கதிகலங்கிப் போகச் செய்திருந்தது. அவ்விரு நச்சரவின் சங்கமமே அன்று அலாதியாக வீசிய அற்புதமான மணத்துக்கும் காரணம் என்பதை உணர்ந்தபோதோ, அந்த மணத்திலேயே நஞ்சும் கலந்து வீசுவதாக அவள் கற்பனை செய்தாள். எப்படியும் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தேயாக வேண்டும் என்று திடசங்கற்பம் செய்து






உங்களுக்கும்
சினிமா நட்சத்திரங்களின்
சுடர் மேனியழகு!

எம். என். ராஜத்தைப்போன்ற பொன்னான தேக காந்தியை எய்துவீர்களானால் உங்கள் அழகும் அற்புதமாக சோபிக்கும். "தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப் உபயோகித்து வருகிறேன்" என்கிறார் அவர். உங்கள் மேனியழகின் பொருட்டும் இன்றே நீங்கள் உபயோகிக்கத் தொடங்க வேண்டிய சோப்...

...தூய, வெண்மையான
லக்ஸ் டாய்லெட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

LTS. 11-60 TM

கொண்டு மிகுந்த பிரயாசையுடன் ஒரு காலை முன் எடுத்து வைத்த மார்க்கரெட், புதரிலே திடீரென்று ஏதோ சலசலப்பு ஏற்படுவதை உணர்ந்து திரும்பவும் உற்றுப் பார்த்தாள். அவள் அப்போது கண்ட காட்சி மேலும் குலை நடுக்கம் கொள்ளச் செய்வதாக இருந்தது. இரண்டு பாம்புகளும் வெகு துரிதமாகப் பிரிந்து, தன்னை நோக்கிப் பாய்ந்து வரும் பயங்கரக் காட்சிதான் அவள் இரண்டாவது முறையாகக் கண்ட காட்சி.

அப்பொழுது மார்க்கரெட் ரோஸியின் தேகத்தில் அளவற்ற வலு திரண்டெழுந்து வந்துவிட்டதாக ஒரு உணர்வு ஏற்பட்டது. அவள் கால்கள் அந்த ஒருகண அவகாசத்துக்குள் குதிகொண்டெழுந்து வேகத்துடன் முன்னேக்கி ஓடின. அந்தத் தோட்டத்தின் சீரற்ற பாதையிலே எத்தனையோ முட்களும், கற்களும் அவளது மலர் போன்ற பாதத்தில் குத்திப் புண்ணாக்கின. இடையிலே இருந்த எத்தனையோ புதர்



களிலும், முட்செடிகளிலும் மாட்டிக்கொண்டு மார்க்கரெட்டின் பட்டுக் கவுன் ஓரங்களிலெல்லாம் கிழிந்தன. இவை எதையும் அவள் பொருட்படுத்தவேயில்லை. பின்னலிருந்து பேய் பிடித்துத் தள்ளுவதுபோன்று அவள் ஓடிக்கொண்டேயிருந்தாள்.

அவளுக்குப் பின்னல் அந்த இரண்டு அரவங்களும் தரையிலே ஊர்ந்து ஊர்ந்து வெகு வேகமாக வந்துகொண்டிருந்தன. 'புஸ்...புஸ்...' என்று சீறிக் கொண்டு, இரு பிளவுகளாகப் பிளந்திருந்த நாக்கை வெளியே நீட்டியும், வாயுள் மடித்துக்கொண்டுமாக அந்த இரு பாம்புகளும் அளவற்ற ஆக்ரோஷத்துடன் மார்க்கரெட்டைப் பின்பற்றித் துரத்திக்கொண்டு வந்தன. தங்கள் இருவரையும் ஒருசேரக் கண்ட ஒருத்தியை எப்படியும் கொன்றுவிட வேண்டும் என்று அவை முடிவு செய்து விட்டமாதிரி இருந்தது, இடையிலுள்ள எந்தத் தடையையும் மதியாமல் அவை மார்க்கரெட்டைத் துரத்திய கோரம்.

இப்பொழுது மார்க்கரெட் தோட்டத்தைக் கடந்து விட்டாள்; மக்கள் நடமாடும் தெருவுக்கு வந்துவிட்டாள். அப்பொழுதும் அவள் ஓடிக் கொண்டேயிருந்தாள். எத்தனையோ பேர் அவளையும், அவளைத் துரத்தி வரும் பாம்புகளையும் கண்டனர். ஆனால், அவர்கள் அந்த அரவங்களினின்று அந்தப் பெண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கவும் இல்லை. அவர்களும் அச்சத்தால் நிலை குலைந்து மார்க்கரெட் ஓடிய திசையிலேயே ஓடினார்கள்!

ஓடி ஓடிக் களைத்துப் போன மார்க்கரெட், கதவு மூடப்படாமல் பரக்கத் திறந்திருந்த ஒரு வீட்டினுள் திடுமென்று நுழைந்து, உடனே இரு கதவுகளையும் உட்பக்கமாகத் தாளிட்டுக் கொண்டாள். அப்போதும் அவள் உடல் பதறிக்கொண்டிருந்தது. 'உஸ்... உஸ்...' என்று பெருமூச்சு வாங்கியது, அவளுக்கு. தேகமெல்லாம் வியர்த்துக் கொட்டிப் பட்டுக் கவுன் முழுதும் தெப்பமாக நனைந்திருந்தது. முகத்திலும், தலையிலும், கவுனிலுமாகத் தலை முதல் கால்வரை ஒரே தூம்பும் தூசியுமாக நிறைந்திருந்தது. கால்கள் கடுத்துக்கடுத்து வலித்தன பாவம், அவளுக்கு. நா வறண்டு போய்த் தண்ணீருக்காக ஏங்கியது. 'உள்ளே யாராவது இருந்தால் ஒரு குவளை தண்ணீராவது கேட்டுக் குடிக்கலாமே' என்ற எண்ணத்தில், மார்க்கரெட் தட்டித் தடுமாறி உள்ளே நோக்கிச் சென்



றாள். இப்படியும் அப்படியுமாக அவள் கண்கள் வளையமிட்டன. ஒரு இடத்திலே ஒரு வாளியில் கொஞ்சம் நீர் இருக்கக்கண்ட அவள், அதை மிகுந்த ஆவலுடன் எடுத்து வாளியுடனேயே 'மடக், மடக்'கென்று அருந்தினாள். அதிலேயே சற்றுத் தண்ணீரை எடுத்து முகத்திலே அப்பிக் கொண்டு, அந்த வீட்

டின் கூடத்திற்கு வந்தாள். அங்கு போடப்பட்டிருந்த ஒரு கட்டிலின்மேல் ஒரு ஆடவன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு, மறு விநாடியே அந்த மனிதனை உற்றுப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் அவளுக்கு உண்டாயிற்று. ஆகவே, சற்று நெருங்கி அந்த மனிதனின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்.

அப்படிக் கூர்ந்து கவனித்த அதே சமயம் அவள் உள்ளம் 'ஐயோ!' என்று அரற்றியது. 'ஆபத்துக்கு அபயம் வேண்டி நுழைந்த வீட்டிலும் இப்படி ஒரு ஆபத்தா...?' என்று அவள் மனம் பதறியது. 'விஷப் பாம்பிடமிருந்து தப்பிக்கும் நோக்கத்தில் புகுந்த ஒரு வீட்டில், பெண்கள் விஷயத்தில் அந்த விஷப் பாம்புகளைக் காட்டிலும் கொடுமையான ஒரு மகாபாவியா...?' என்று அவள் துடிதுடித்துப் போய்த் தலையில் கையை வைத்துக்கொண்டு கண்ணீர் வடிக்கிறாள். ஒருநாள் அந்த மகாபாவி மனிதன் அவளை மடக்கிக் கொண்டு படுத்திய பாட்டையும், அன்று அவனிடமிருந்து தப்பிக்க அவள் பட்ட கஷ்டத்தையும் நினைத்த போது அவள் விதிர்விதிர்த்துப் போனாள். 'இனி இங்கிருப்பது நல்லதல்ல; எப்படியும் இங்கிருந்து தப்பியாக வேண்டும்' என்று அவள் முடிவு செய்த அதே சமயத்தில் கட்டிலில் படுத்து உறங்கிக்கொண்டிருந்த அந்த மனிதன் விழித்துக்கொண்டுவிட்டான். அப்படி விழித்தவன், தன் முன்னே மார்க்கரெட் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு, 'திடுதிப்'பென்று கட்டிலினின்றும் எகிறிக் குதித்தெழுந்து மார்க்கரெட்டை நோக்கித் தாவினான். அதற்குமேல் தாமதிப்பதற்கில்லை என்று உணர்ந்த மார்க்கரெட் உடனே ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். 'இந்தப் பாவியிடம் சிக்கிச் சீரழிவதைவிட, நச்சரவங்களுக்குப் பலியாவதே மேல்' என்ற முடிவுதான் அது. கண் இமைக்கும் நேரத்திற்குள் அந்த மனிதனின் கைக்கு அகப்படாமல் வாயிற் கதவண்டை வந்துவிட்ட மார்க்கரெட், சற்றும் தாமதியாமல் கதவுத் தாழ்ப்பாளை நீக்கி வாசல் முற்றத்திற்கு வந்துவிட்டாள். அங்கே 'புஸ் புஸ்' என்று மிகுந்த ஆக்ரோஷத்துடனும், 'தப்பிவிட்டாளே' என்ற ஏமாற்றத்துடனும் இப்படியும் அப்படியும் வேக வேகமாக நெளிந்து நெளிந்து ஊர்ந்து வாயிற்புறத்தைக் காவல் காத்துக் கொண்டிருந்த இரு பாம்புகளும் கதவுத் தாழ்ப்பாள் திறக்கப்படும் ஓசையைக் கேட்டு மிகுந்த உன்னிப்புடன் கதவையே கவனித்துக்கொண்டிருந்தன. அடுத்து, மார்க்கரெட் பரபரப்புடன் கதவைத் திறந்துகொண்டு வாயில் முற்றத்தை அடைந்த அதே நொடியில் அந்த இரு அரவங்களும் அவளது இரு கால்களிலும் 'சரக் சரக்' கென்று இரண்டு கொத்து கொத்தின. மார்க்கரெட் அடியற்ற மரம்போல அங்கே வீழ்ந்து தலை சாய்த்துவிட்டாள்.

மார்க்கரெட்டைப் பிடித்துக்கொள்வதற்காக அவள் பின்னால் ஓடிவந்த அந்தக் கயவன், மார்க்கரெட் கதவைத் திறந்த அதே சமயம் பாம்புகளால் கொத்தப்பட்டு விழுந்துவிட்டதையும், அந்த இரு பாம்புகளும் தமது பணி முடிந்துவிட்டதுபோல் திரும்பிச் செல்வதையுங் கண்டு தன் மனத்துக்குள்ளேயே நஞ்சு உமிழ்ந்துகொண்டான். தன் இச்சை நிறைவேறாமல் செய்த அந்த இரு பாம்புகளையும் வஞ்சம் தீர்த்துக்கொள்வது என்று முனைந்துவிட்டான், அவன். உடனே, வாசலில் ஓடிப்போய் இரண்டு பெரிய பாறைகளைப் பெயர்த்தெடுத்து அவ்விரு அரவங்களின் தலைகளிலும் படுமாறு ஓங்கி எறிந்தான். பாவம், அந்த இரண்டு நாகங்களும் அந்த மனிதனின் இலக்கை மீறமாட்டாமல் பாறைகளினால் தாக்குண்டு துடித்துத் துடித்து உயிரை விட்டன.

நாகத்தின் நஞ்சு நங்கையின் உயிரைக் குடித்துவிட்டது. மனிதனின் நஞ்சினுங் கொடிய வஞ்சம் அந்த இரு நச்சரவங்களையும் கொன்றுவிட்டது. ஆனால், (அந்த) மனிதனின் உள்ளம் முழுதும் பரவியுள்ள நஞ்சுமட்டும் எப்பொழுதுதான் அழியப் போகிறதோ..?

(கனடா தேசத்துக் கதைகளில் ஒன்று இக்கதை.)

★



# நினைவும் விளைவும்

புஷ்கலா

அன்று காலை சினிமா பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது இச்செய்தியையும் படிக்க நேர்ந்தது.

'பிரபல பின்னணிப் பாடகியான ராகினிக்கும், சங்கீத டைரக்டர் சுந்தருக்கும் விரைவில் திருமணம் நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.'

'அடப்பாவி! என்ன, ராகினிக்கும் சங்கீத டைக்டர் சுந்தருக்கும் திருமணமா! கூடாது, இந்தக் கல்யாணம் நடக்கக்கூடாது. செய்தியைப் படித்ததால் உண்டான ஆச்சர்யமும் கோபமும் என்னிடமிருந்து இவ்வாறு வெளிப்பட்டன. மறுகணமே, 'சே! என்ன முட்டாள்தனம் இது? ராகினியையோ, சுந்தரையோ நான் முன்பின் பார்த்ததுமில்லை, பழகினதுமில்லை. யார் யாரை மணந்துகொண்டால் நமக்கென்ன?' என்ற எண்ணமும் உண்டாயிற்று.

அதற்குள் உள்ளிருந்து வந்த என் மனைவி ஜயா, 'என்ன, கூடாது, முடியாது என்று தனக்குத்தானே பேசிக்கொள்கிறீர்கள்! இப்படித்தானே பேசிக் கொள்பவர்களை என்ன சொல்வார்கள் தெரியுமோ?' என்று தலையை ஒருபுறமாக அழகாகச் சாய்த்துக்கொண்டு விஷமச் சிரிப்பு நெளியக் கேட்டாள்.

'போடி பைத்தியமே! இதைப் பார்த்துவிட்டு பிறகு பேசு' என்று பத்திரிகையை அவளிடம் நீட்டினேன்.

'யார் இந்த ராகினி? ஓஹோ, ரமேஷுடன்கூட சினிமாவிற்குக் குரல் கொடுக்கும் அந்த ராகினியா? ஆஹா! அந்த ராகினியும் ரமேஷும்தான் என்ன அழகாகப் பாடுகிறார்கள்! சோக கீதமானாலும் உள்ளம் அப்படியே உருகுகிறது. இன்பகீதமானாலும் நெஞ்சை கொள்ளை கொண்டு அல்லவா போகிறது! நல்ல வேளை! அவள் சங்கீத டைரக்டரையே மணந்து கொள்வது எவ்வளவு பொருத்தம்!' ஜயா பேசிக்கொண்டே இருந்தாள்.

'நிறுத்து ஜயா! ராகினியும் ரமேஷும் எவ்வாறு இரு குரலிசையில் சிறிதும் பேதமின்றி இணைந்திருக்கிறார்களோ, அவ்வாறே அவர்கள் வாழ்விலும் தம்பதிகளாக வேண்டுமென்று நான் அன்றிலிருந்தே பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். இதற்கிடையில் என் எண்ணத்தில் மண்ணைப்போட இந்த டைரக்டர் எங்கிருந்து முளைத்தான்? துளிக்கூடப் பொருந்தாத இத் திருமணம் எப்படி நடக்க முடியும்?'

என் கோபத்தையும் படபடத்த பேச்சையும் கேட்ட ஜயா சிரித்தாள். 'என்ன இது? இதுவரை பார்த்தோ பேசியோ அறியாத அந்த ராகினி—ரமேஷை நீங்கள் உங்கள் மனதில் தம்பதிகளாக்கி விட்டாலே, அவர்கள் இருவரும்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையா? நன்றாக இருக்கிறதே, நீங்கள் இதற்காக இப்படித் தவிப்பது! மணி எட்டு அடித்துவிட்டது. ஸ்நானம் செய்ய வேண்டாமா, ஆபீஸிற்கு நேரமாகவில்லையா, எழுந்திருங்கள்.'

'சே! சே! கொஞ்சமாவது கலாரசனை இருக்கிறதா உனக்கு? இதோ பார், ஜயா. ராகினி டைரக்டரை மணந்த பிறகும் ரமேஷுடன் பாடுவாள் என்று நினைக்கிறாயா நீ? அப்படியே, டைரக்டர் பரந்த மனப்பான்மையுடன் ராகினியை ரமேஷுடன் பாடச் சொன்னாலும், அந்தப் பாட்டு இப்பொழுதுள்ளதைப்போல், பேதமில்லாமல் ஒன்றுபட்டு, கேட்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுமா? அதில் உயிர்

இருக்குமா? ஒன்றும் விவரம் தெரியாமல் உளறுகிறாய் நீ. அவர்களைப் பிரித்தால், அந்தப் பாட்டிலும் உயிர் இருக்காது என்பது என் முடிவு! நான் மனக்குறையுடன் துவாலை எடுத்துக்கொண்டு குளிக்கும் அறைக்குச் சென்றேன்.

சினிமாவிற்காகப் பின்னணி பாடும் இவ்விருவரையும் ஏன் என் மனம் தம்பதிகளாக்க முயல்கிறது என்று எனக்கே தெரியவில்லை. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், ரமேஷ் வேறொரு பாடகியுடனோ அல்லது ராகினி மற்றொரு பாடகனுடனோ இதுவரை சேர்ந்து பாடியதில்லை. அவர்கள் பாடிய சினிமாக்களுக்கே நல்ல வரவேற்பு. சினிமாவிற்கு நடிப்புதான் பிரதானம் என்றாலும் பாட்டிற்கும் அதில் முக்கிய ஸ்தானம் உண்டு என்பது என் திடமான எண்ணம். என் மனத்திரையில், ராகினி—ரமேஷின் குரலில் இருக்கும் குழைவு, இனிமை, விறுவிறுப்பைப்போலவே அவர்கள், உருவங்களிலும் எல்லாவிதத்திலும் பொருத்தத்தையும் அழகையுமே கண்டேன். இது பைத்தியக்கார எண்ணமாகத் தோன்றினும் எனக்கு ஏனோ அவர்கள் இரு குரலைக் கேட்கும் பொழுது இந்நினைவுதான் எழுந்தது. இந்நினைவை மறக்க முயன்றுகொண்டே ஸ்நானம் செய்துவிட்டு உள்ளே வந்துகொண்டிருந்தேன். அப்பொழுதும் ஐயா திருப்பிவிட்ட ரேடியோவிலிருந்து அதே இரு குரலிசைதானா வந்து என் நினைவைக் கிளற வேண்டும்?

ஆபீஸிற்குச் சென்றேன். ஏதோ வேலை என்று செய்தேனே தவிர, மனம் என்னவோ ஏக்கத்தில்தான் தவித்துக்கொண்டு இருந்தது. ஒருவிதமாக ஆபீஸ் வேலை முடிந்து வீடு செல்ல பஸ்ஸிற்காக நின்றுகொண்டிருந்தேன். சிந்தனை பறந்துகொண்டே இருந்தது. உலகம் கலையை ஏன் மதிக்கமாட்டேனென்கிறது? ராகினி-ரமேஷ் இப்பொழுதானே ஆரம்பக் கலைஞர்கள்? ஜனங்கள் இவர்கள் குரலை இன்னும் ஆசை தீரக் கேட்டு மகிழாமல் அதற்குள் ஒரு தடையா? சே! ரொம்ப நன்றாக இல்லை.

சிந்தனைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தது என் முதுகில் விழுந்த அடி. ஆனால், அருகில் சிரித்துக்கொண்டு, நின்றிருந்தவனைப் பார்த்ததும், இது அடியல்ல, அன்பினால் கிடைத்த 'ஷொட்டு' என்று தெரிந்தது. அதற்குள் அவன், 'ஏண்டா அலாரம்! என்ன, கண்கள் திறந்திருக்கின்றனவே தவிர, அருகில் ஆள் வந்து நிற்பதுகூடத் தெரியாமல் என்னடா யோசனை? நீ முழிப்பதைப் பார்த்தால் என்னையும் அடையாளம் தெரியவில்லை என்று தோன்றுகிறதே...' என்று அவன் முடிப்பதற்குள், நிலையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு அவனையும் அடையாளம் புரிந்துகொண்டேன். சற்றுத் தொலைவில் நின்றிருந்த காரும் அவன் கொண்டு வந்து நிறுத்தியது என்று தெரிந்தது.

'அலாரம்' என்ற சொல்தான் அவனை யாரென்று புரியவைத்தது. ஆம். அந்த நாளில் ஹாஸ்டலில் என்கூட இருந்த ராகவன்தான் அவன். நான் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டி தவறாமல் நாலு மணிக்கே அலாரம் வைத்துவிடுவேன் என்றும், எந்த விஷயத்தையும் மனதில் வைத்துக்கொள்ளாமல் படபடவென்று மொழிந்து தள்ளிவிடுவேன் என்றும் அந்தப் பெயரைச் சூட்டியவன் இந்த ராகவன்தான். அவனைப் பார்த்து பத்து வருடமாயிற்று. அவன் வடக்கே வேலையாகச் சென்ற பின் சில கடிதங்கள் வந்தனவே தவிர பிறகு அவனைப் பற்றிய தகவல் ஒன்றும் தெரியவில்லை.

'நான் உன்னைப் புரிந்துகொள்ளாததில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. ஆன் இப்படி யானைமாதிரி ஆகிக்கொண்டிருந்தால், அந்த ஒல்லி ராகவன்தான் நீ என்று எப்படி உடனே அறிய முடியும்? ஆமாம்...இப்பொழுது எங்கிருக்கிறாய்? கல்யாணம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா...' நான் சரமாரியாகக் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனேன். அவன் அவைகளுக்குப் பதில் ஒன்றும் சொல்லாமல், 'நீ முதலில் ஏறு வண்டியில். நான் மயிலாப்பூரில்தான் இருக்கிறேன். எத்தனை வருடம் ஆயிற்று, உன்னைப் பார்த்து? வீட்டிற்குச் சென்று எல்லாம் பேசலாம்' என்று என் கையைப் பிடித்து இழுத்



தான். அன்று எனக்கு வேறு அவசர வேலை இருந்ததால் மற்றொருநாள் வருவதாகச் சொல்லி, அவன் பிடியிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு அவன் வீட்டு விலாசத்தையும் வாங்கிக்கொண்டேன்.

பழைய நண்பனைக் கண்டதில் அவனுடைய மாறாத அன்பையும், அவன் நல்ல நிலைமையில் இருப்பதையும் எண்ணி ஒருபுறம் ஆனந்தம் உண்டானாலும், ஒரேமாதிரி ஒரே கல்லூரியில் படித்த இருவரில் நான் மாத்திரம் ஏன் இன்னும் ஒருவித முன்னேற்றமுமில்லாமல் இருக்கவேண்டும் என்று ஏக்கமும் உண்டாயிற்று.

மறுதினம், காலை எழுந்ததுமே இன்றாவது, ஆபீஸைவிட்டுக் கிளம்பி எப்படியாவது அவன் வீட்டிற்குச் சென்று வருவது என்று நினைத்துக்கொண்டேன். ஆனால், ஆபீஸ் சென்றதும் எதிர்பாராவிதமாய், மானேஜர் என்னைக் கூப்பிட்டு, ஒரு வருட வியாபாரப் பயிற்சிக்காக என்னை வெளிநாடு அனுப்பப் போவதாயும் இரண்டு நாட்களிலேயே கிளம்ப வேண்டுமாதலால், அப்பொழுதே என்னை வீட்டிற்குச் சென்று ஏற்பாடுகளைச் செய்யும்படியும் சொல்லிவிட்டார். இந்தத் திடீர்ச் செய்தியில் மனதில் இருந்த பழைய எண்ணங்களெல்லாம் மறைந்து 'நமக்கும் ஒரு நல்ல காலம் உண்டுபோலிருக்கிறது' என்ற புது நினைவு உண்டாகவே, நண்பனைப்பற்றியும் மறந்துவிட்டேன்.

* * *

ஒரு வருடம் சென்றுவிட்டது. எனது மேல் நாட்டுப் பயிற்சியில் வெற்றியுடன் திரும்பி வந்தேன். பெரிய பதவியையும் ஏற்றுக்கொண்டேன். ஐயாவிற்கு அளவில்லா மகிழ்ச்சி. பெரிய பதவியாதலால் அதிக வேலையும் இருந்ததால் கொஞ்ச நாட்கள் எந்த இதர விஷயத்தையும் என்னால் கவனிக்க முடியவில்லை.

திடீரென்று ஒருநாள் ஐயா, 'உங்களுக்கு இந்த நல்ல செய்தியைச் சொல்லவே மறந்துவிட்டேனே...நீங்கள் விரும்பியதுதான் நடந்தது... ராகினி ரமேஷையே மணந்துகொண்டு விட்டாள்...' என்றாள்.

அவள் முடிக்கு முன்னரே, 'அட, என் வேலையில் இந்த விஷயத்தையே நான் மறந்துவிட்டேனே! கல்யாணம் எப்பொழுது நடந்தது? போட்டோ ஏதேனும் பத்திரிகையில் வந்ததா?' என்றேன் நான். எனக்கு ஒரே ஆனந்தம். நான் நினைத்ததே நடந்தது.

'கல்யாணம், அப்பொழுதே நடந்துவிட்டது. செய்திதான் வந்ததே தவிர, போட்டோ ஒன்றும் வரவில்லை' என்றாள் ஐயா. அவர்களை நேரில் காண வேண்டும். என் சந்தோஷத்தைத் தெரிவிக்க வேண்டுமென்றெல்லாம் அவா. ஆனால், அது நடக்கக்கூடியதா...வீண் ஆசைதான்.

அன்று, மயிலாப்பூரில் உறவினர் ஒருவர் வீட்டில் கல்யாணத்திற்கு ஐயாவுடன் சென்றிருந்தேன். அப்பொழுது மின்னல்போல ராகவனின் நினைவு வந்தது. அவனும் மயிலாப்பூரில் அல்லவா இருக்கிறான்! அவனைக் காணாமல் வருவதில்லை என்று அவன் வீட்டிற்கும் சென்றோம். எங்களைக்கண்ட ராகவன் மிகவும் சந்தோஷமடைந்தான். தன் மனைவிக்கும் எங்களை அறிமுகப்படுத்திவைத்தான். 'என்னப்பா, நான் உடனே வரச் சொல்லிக் கூப்பிட்டதற்கு இப்பொழுதுதான் வரத் தோன்றிற்றா? நீ சொல்லாவிட்டாலும், நீ வெளிநாடு சென்ற விஷயம், பெரிய பதவி வகிப்பது, எல்லாம் கேள்விப்பட்டேன் கோபால்... 'கன்கிராஜுலேஷன்ஸ்' என்று என் கையை வலிக்கும்வரை குலுக்கினான், ராகவன். சிறிது நேரத்தில் சிற்றுண்டி—காபி முதலியவை வந்தன. அதைச் சாப்பிட்டுக்கொண்டே பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், திடீரென்று என் மனதைக் கவர்ந்த இரு குரல்—ராகினி-ரமேஷுடைய இன்னிசை கேட்க ஆரம்பித்தது. நான் ஆச்சர்யத்துடன், 'என்ன ராகவா...இது ரேடியோவில் எந்த 'ஸ்டேஷன்?' ராகினி-ரமேஷின் குரல் அல்லவா இது? அதுவும் 'புதுப் பாட்டாக இருக்கிறதே' என்றேன்.

'உனக்கு ராகினி என் தங்கை என்பது தெரியாதா கோபால்...? ஆம். ஹாஸ்டலில் நண்பர்களான நமக்கு வீட்டு விஷயத்தைப்பற்றி அதிகம் தெரிய நியாயமில்லையே...என் தங்கை

யும் ரமேஷூம்தான் பாடுகிறார்கள். புதுப் படத்திற்கான பாட்டு இது.'

'என்னது? ராகினி உன் தங்கையா? இத்தனை நாளும் எனக்குத் தெரியவே தெரியாதே...! இந்த இருவர் குரலிலும்தான் என்ன இனிமை! என்ன பொருத்தம்! சமீபத்தில்தான் இருவருக்கும் திருமணம் நடந்ததாமே...? அவர்களைக் கண்டு என் மகிழ்ச்சியைத் தெரிவிக்கத் துடிக்கிறேன் நான். என்னை அவர்களிடம் அழைத்துச் செல்லேன். நான் அவர்களைக் காண எழுந்துவிட்டேன். என் நெஞ்சிலும் பேச்சிலும் ஒரே துடிப்பு. ஆனால், ராகவன் இடத்தை விட்டும் எழுந்திருக்கவில்லை, ஒன்றும் பதிலும் சொல்லவில்லை. பிரமை பிடித்த மாதிரி இருந்தான் அவன்.



'என்ன ராகவ், நான் கேட்பது ஒன்றும் காதில் விழவில்லையா' அவன் தோளைப் பிடித்து உலுக்கினேன்.



'அவர்களைக் காணும் எண்ணத்தை விட்டுவிட்டு அவர்கள் குரலைக் கேட்பதோடு திருப்திகொள் கோபால்: பார்த்தால் உனக்கு வேதனையே உண்டாகும். வேண்டா வெறுப்புடன் மொழிந்தான் ராகவன்.

நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன். இருந்தும் பிடிவாதத்துடன் அவர்களை காண்பிக்கச் சொல்லி மன்றாடிய பின் ஒருவாறு அதற்குச் சம்மதித்தான். பாட்டு இன்னும் கேட்டுக்கொண்டுதான் இருந்தது. மாடிப் படியேறி என்னை அவன் அழைத்துச் செல்லும் போதே அவன் வேதனையின் காரணத்தை வினவினேன். 'நீயே நேரில் பார் தெரியும்' என்பது தான் அதற்கு பதில்.

எந்த அதிர்ச்சியைக் காண இருக்கிறதோ என்று படபடத்த ஹ்ருதயத்துடன் அவனோடு மாடி வராந்தாவை அடைந்தேன். அதை அடுத்து பெரியதொரு 'ஹால்' உள்ளே இருப்பவர் தெரியாது. பெரிய திரைகள். சன்னல்களிலும் வாயிற்படியிலும் காற்றில் அசைந்தவாறு தொங்கிக் கொண்டிருந்தன.



அந்த இசை ஹாலிலிருந்து தான் வந்து கொண்டிருந்தது.

ராகவன் திரையை மெதுவாக விலக்கி விட்டு சற்று நேரம் நின்றான். ஹாலின் நடுவே அநேக ஸோபாக்கள் ஒழுங்காக போடப்பட்டிருந்தன. நடுவில் வட்ட மேஜையின் மீது அழகாக

மேஜை விரிப்பு விரித்திருந்தது. அதில் புத்தம் புது ரோஜாக்களுடன் பூத்தொட்டியொன்று பெருமையுடன் வீற்றிருந்தது. இவை யாவும் கண்ணில் தென்பட்டாலும் எண்ணமும் பார்வையும் அங்கு உட்கார்ந்திருந்த இருவரையுமே நோக்கிப் பாய்ந்தன.

அங்கு கண்ட காட்சி என்னை மெய்ச்சிலிர்க்கச் செய்தது. வலதுபுறத்தில் சுவரோரமாக கிடந்த ஒரு ஸோபாவில் ராகினியும், ரமேஷும் அருகருகே அமர்ந்து இருந்தார்கள். ராகினியின் கையில் எழுதப்பட்ட சில காகிதங்கள் இருந்தன. அவற்றைப் பார்த்து அவள் பாட்டின் வரிகளைச் சொல்வதும் அதை ரமேஷ் திரும்பப் பாடுவதுமாக இருந்தார்கள். ராகினி கொஞ்சம் திரும்பினாற்போல உட்கார்ந்திருந்ததால் நாங்கள் வந்து நின்றதை கவனிக்கவில்லை. அவள் மாநிறந்தான். ஆயினும் அவள் அணிந்துள்ள பொருத்தமான உடையில் அழகாகவே காணப்பட்டாள். ரமேஷ் மாத்திரம் என்ன? நல்ல சிவப்பு. துல்லியமான வெள்ளை நிற நீண்ட பைஜாமாவும் ஜிப்பாவும் அவனுக்கு ரொம்பப் பொருந்தியிருந்தது. அவனது இடது கரம் சுவாதீனத்துடன் ராகினியின் மடிமேல் கிடந்த விதமே அவர்கள் அன்பை பறை சாற்றிற்று. ஆனால், இவ்வளவிலும் அவன் அணிந்திருந்த கறுப்புக் கண்ணாடியும், எங்களை அவன் பார்க்கும் விதத்தில் உட்கார்ந்திருந்தும் பாராதவன்போல் இருந்ததும் தான் என்னுள் ஒரு அதிர்ச்சியையும், சந்தேகத்தையும் கிளப்பி விட்டது.

இதற்குள் ராகினி எங்களை கவனித்து விட்டதால் நாங்களும் அவர்கள் அருகில் சென்றோம். ராகவன் எங்களை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வைத்தான். ராகினி எனக்கு புன்முறுவலுடன் வணக்கம் தெரிவித்தாள். அதேபோல ரமேஷும் முறுவலித்துக்கொண்டே வணக்கம் தெரிவித்தான். ஆனால், அவன் சிரிப்பிலோ செயலிலோ உயிர் இல்லாதது என் சந்தேகத்தை வலுவடையச் செய்தது. இருந்தும் உணர்ச்சிகளை வெளிக்குக் காட்டாமல் 'உங்கள் இருவர் குரலிசையும் கேட்டால் தான் மெய்மறந்துவிடுவேன். அவ்வளவு ஆனந்தம் எனக்கு அதைக் கேட்பதில். அத்துடன் நீங்கள் இருவருமே வாழ்விலும் ஜோடியானது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியையளிக்கிறது...' என் வாய் ஒப்புக்காக இதைச் சொல்லிற்றே தவிர உள்ளம் மாத்திரம் வேதனையையனுபவித்தது. அதற்குள் என் தடுமாற்றத்தை அறிந்த ராகவன் 'சரி ராகினி, உங்கள் 'பிராக்டிஸ்' நடக்கட்டும். நாங்கள் கீழே செல்கிறோம்' என்று என்னை அழைத்து வந்து விட்டான்.

பழையபடி எங்கள் இடத்திற்கு வந்து உட்கார்ந்ததும் 'பார்த்துவிட்டாயல்லவா?' என்றான் ராகவன். அவன் குரலில் சிறிது ஏளனமும், அதிக துக்கமும் கலந்திருந்தது.

அவன் கேள்வி என் உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டது. 'எக்ஸ்யூஸ்மி' ராகவ். வந்து...ரமேஷின் செயலும் அவன் அணிந்துள்ள கறுப்புக் கண்ணாடியும......'.

'ஏன் பயப்படுகிறாய், கேட்பதற்கு கோபால்? இரு கண்களும் இல்லாதவன் செயல் பின் எவ்வாறு இருக்க முடியும்? என் அன்புத் தங்கையின் கணவனுக்கு இரு கண்களும் தெரியாது அப்பா'. ராகவன் நிதானமாக எங்கோ பார்த்துக்கொண்டு ஒவ்வொரு வார்த்தையாக ஒப்பித்தான். அதில் ஒருவித உணர்ச்சியும் இல்லை. நான் ரமேஷைக் கண்டதும் என் உள்ளத்தில் உண்டான எந்த ஒரு சந்தேகத்தை உண்மையாகாமல் இருக்க வேண்டுமே என்று நினைத்தேனோ அது ஊர்ஜிதமாகி விட்டது. ஐயோ! நான் அவர்களை தம்பதிகளாக ஆவதற்கு செய்த பிரார்த்தனை இப்படியா விபரீதமாக நிறைவேற வேண்டும்?

'ராகவா, ராகினி அவனை விரும்பித் தான் மணந்து கொண்டாளா? எப்படி இதற்கு அவள் மனம் ஒப்பியது? ஆமாம். முதலில் அவளுக்கும் சங்கீத டைரக்டர் சுந்தருக்கும் திருமணம் நடப்பதாக இருந்ததல்லவா? அது ஏன் இவ்விதம் மாறியது? உனக்கு துன்பம் தரும் விஷயமாக இருந்தாலும், அதை அறிய நான் துடிக்கிறேனே...' என் மனதில் ஒரு மூலையில் ராகினி அந்த சங்கீத டைரக்டரையாவது மணந்து கொண்டிருக்கலாமே என்று பச்சாதாபம் உண்டாயிற்று.

என் ஆவலைப் பார்த்த ராகவன் ... 'என்னால் வந்த வினைதானப்பா' என்று ஆரம்பித்தான். நான் வடக்கே இருக்கும்பொழுது ரமேஷை நன்றாகத் தெரியும் எனக்கு. அவனுக்குப் பிறவியிலேயே கண் தெரியாது. நம் ஜாதிப் பையன், நன்றாகப் பாடுகிறான் என்று அடிக்கடி வீட்டிற்கு அழைத்து வருவேன். ராகினியும் பாடுவாளாதலால், முற்போக்கான கொள்கையுடைய நான்தான் அவர்கள் சேர்ந்து பாடவும், பழகவும் சென்னை வந்த பிறகு அவர்கள் சினிமாவிற்கு பின்னணி பாடுவதற்கும் கூட ஏற்பாடுகள் செய்து கொடுத்தேன். அதில் இவர்கள் இவ்வளவு தூரம் பிரசித்தமடைந்ததில் மகிழ்ச்சியும் அடைந்தேன். அப்பொழுது நான் சங்கீத டைரக்டர் சுந்தருக்கு ராகினியை மணக்கும் எண்ணம் இருப்பது தெரிந்து, இந்த நல்ல 'சான்ஸை' விடக் கூடாதென்று கல்யாணத்திற்கும் ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தேன். அதற்குள் இந்த விபரீதம் நடந்து விட்டது... என்னவென்றால், கல்யாணத்திற்கு , பத்து நாட்கள் இருக்கையில், ஒருவரிடமும் தெரிவிக்காமல் ராகினி ரமேஷை 'பதிவு மணம்' செய்துகொண்டு வந்து நிற்கிறாள்...'அண்ணா எங்களை மன்னித்து உங்கள் ஹிருதயபூர்வமான ஆசியை எங்களுக்கு அளியுங்கள்' என்று என்னை அவர்கள் நமஸ்கரித்த பொழுது இவர்களை இவ்வளவு தூரம் பழகவிட்ட என்னை நானே நொந்து கொண்டதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை என்றால்...'. அவன் முடிக்கும் முன்னரே, 'என்ன அண்ணா விபரீதம் வந்துவிட்டது' என்றபடி சிரித்துக்கொண்டே அண்ணன் அருகில் வந்து உட்கார்ந்தாள் ராகினி.

ராகவனின் கரங்களைப் பற்றியபடி, 'அண்ணா, உனக்கு அவர் புறக்கண்கள் ஊனமாகத் தோன்றலாம். ஆனால் நான் அவரோடு பழகினதில் அவர் இசையாலும், குணத்தாலும் எல்லாம் நிறைந்தவராகவே காண்கிறேனே. இந்தக் குறைவில்லாத புருஷனையோ அல்லது என் குரலோடு ஒன்றி இசையும் இக்குரலையோ விட்டால் எனக்கு வாழ்வே சூன்யமாகுமெனத் தோன்றிற்று. அதுதான் நான் சுந்தரை மணக்காமல் இவரை மணந்த காரணம். என் மனம் நிறைந்து நான் சந்தோஷமா இருக்கையில் நீ ஏன் வருந்த வேண்டும் அண்ணா? ஸார்...நான் சொல்வதை நீங்களாவது புரிந்து கொண்டிருப்பீர்களென நம்புகிறேன். தயவுசெய்து நீங்கள் தான் என் அண்ணாவின் வருத்தத்தைப் போக்கவேண்டும்...' ராகினி குழைவுடன் கூறிய இவ்வார்த்தைகளைக் கேட்டு என் மெய்சிலிர்த்தது.

அவள் உள்ளத்தை உணர்ந்து ராகவனுக்கும் கொஞ்சம் ஆறுதல் ஏற்பட்டிருக்குமென எண்ணுகிறேன். ஏனெனில் அதன் பிறகு கொஞ்சம் கலகலப்பாக இருந்தான்.

ஒருவாறு அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு நானும் ஜயாவும் வீட்டிற்கு கிளம்பினோம். கடைசியில் உங்கள் ஆவல் நிறைவேறின விதத்தைப் பார்த்தீர்களா? ஒரே ஆச்சர்யமாக இல்லை...' நடந்த விஷயத்தைக் கவனித்து வந்த ஜயாதான் கேட்டாள். ஆனால் என் உள்ளத்தில் உண்டானது என்ன? ஆனந்தமா, ஏமாற்றமா அல்லது ஏக்கமா? ஒன்றும் புரியவில்லை.

'என்னே இந்த மனித உள்ளத்தின் தன்மை!' ஒரு நீண்ட பெருமூச்சுடன் என் நெஞ்சிலிருந்த எல்லா உணர்ச்சிகளும் இந்த வார்த்தைகள் ரூபத்தில் வெளி வந்தன.


சிங்கக்குட்டி சீனு
உடனே கஜேந்திரன் தன் கூட்டத்தாருடன் புறப்பட்டது அக்குட்டையை நோக்கி.
சிறிது தூரத்தில் கஜேந்திரன் நிற்பதைக் கண்ட சிம்பன்ஸி வேகமாய் கிளைக்குக் கிளை தாவி, தன் தோழனுக்கு முன்னால் வந்து நின்றது. தனக்குத் தெரிந்த மிருகபாஷையில் ஒரு யானைக்குட்டிக்கு நேர்ந்திருக்கும் விபத்தையும், அங்கு சீனு இருப்பதையும் தெரிவித்தது.
இது இப்படியிருக்க, கொஞ்சம் கொஞ்சமாக சேற்றில் அழுந்திக் கொண்டிருக்கும் யானைக்குட்டிக்குத் தைரியம் கூறிக் கொண்டிருந்தான் சீனு.
பயப்படாதே! உன் அப்பாவையும், அம்மாவையும் சிம்பன்ஸி ஒரு நொடியில் கூப்பிட்டுக் கொண்டு வந்து விடுவான். அவர்கள் உன்னைக் காப்பாற்றுவார்கள்.
ஆனால், அதே சமயத்தில் தன் இரையைத் தேடிக் கொண்டு, புறப்பட்ட கருஞ்சிறுத்தையொன்று, குளக்கரையில் நின்று கொண்டிருக்கும் சீனுவைக் கவனித்து விட்டது. உடனே அவனை நோக்கிப் பாய்ந்து வந்தது.

சிறுத்தையைக் கவனித்த சீனு திடுக்கிட்டான். அவனுடைய இருதயம் பயத்தினால் படபடத்து இருந்தாலும், சர்க்கஸ் வேலைகள் தெரிந்தவனானதால் குப்ரென்று அருகிலிருந்த மரத்தின் மீது தாவி ஏறினான்.
மேலே ஏறிய சீனுவை கீழே இருந்து கவனித்த சிறுத்தைக்குக் கோபம் பொங்கியது. உடனே அதுவும் மரத்தின்மீது தாவியது.
உயரமான அம்மரத்தின் ஒரு கிளையில் சீனு. சிறுத்தையை எதிர்த்து நின்றான். அக்காட்டு மிருகம் அவனைக் கொல்ல ஆவென்று வாயைப்பிளந்தது.
தப்புவதற்கு வேறு வழியில்லாது போகவே, சிறுத்தை வாயில் அகப்படுவதைவிட சேற்றில் விழுந்து செத்தாலும் சரி என்று தீர்மானித்த சீனு, கிளையின் நுனியை அடைந்து, அதைப்பிடித்துக் கொண்டு அபாயகரமாகத் தொங்கினான்.
தொடரும்

# ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனைகள்

**சங்கீத கலாநிதி டி. எல். வேங்கடராமய்யர் உதவியது**

ஸ்வரப்படுத்தியவர்: ஸ்ரீ அரியக்குடியின் சிஷ்யரான
ஸ்ரீ பி. ராஜம் அய்யர் அவர்கள்

### பல்லவி

மானஸ குருகுஹ ரூபம் பஜரே
3 3 4
மாயா மய ஹ்ருத்தாபம் த்யஜரே (மானஸ)

### அநுபல்லவி

மானவ ஜன்மனி ஸம்ப்ராப்தே ஸதி
பரமாத்மனி நிரதிசய ஸுகம் வ்ரஜரே (மானஸ)
2

### சரணம்

ஸத்வ குணோபாதி ஸஹித ஸதாசிவம்
3 4 3
ஸ்வ வித்யா ஸமேத ஜீவோத்பவம்
3 3 4
தத்வம் தாமஸயுத விச்வ வைபவம்
4
தாரகேச்வரம் ஆனந்த பைரவம்
3 4

### மத்யம காலம்

நத்வா ஸ்ரீ குரு சரணம்
3
க்ருத்வா நாம ஸ்மரணம்
ஜித்வா மோஹா வரணம்
மத்வா தததேக சரணம் (மானஸ)
3



ராகம்: ஆனந்தபைரவி.] [தாளம்: ரூபகம்.

### பல்லவி

1 ஸ ; பா.நி ஸிபா;மா மப கரி | ,கமா பா தப\ஸ் மபதப | பம கரி ஸா ; நி ஸ க ம ||
மா . ன ஸ கு . ரு . | குஹ ரு . . பம் . . . . | .. பஜரே . . . . ||
2 பா ; பநி..ஸ்நி நிபா மப கரி | Do ||
மா . ன . . . ஸ கு . ரு . | குஹருபம் பஜரே ||
3 பா ; பநி ஸ்ரிஸ் நிதபா மப கரி | | ஸா ; ஸா,க ஸா ரி ||
மா ன . . . . . . ஸ கு ரு | குஹருபம் பஜ | ரே ||
நி ; ஸா ஸ/மக கரிரி, | ரி,க மா மகாம பா தபதம | கா மாபதபா,த பமகா ரி மகா பமமா ||
மா யா ம . . ய . . . | ஹ்ரு . . த்தா . . . பம் . . | த்ய ஜ . . . . . ரே . . . . . ||
(மானஸ)

### அநுபல்லவி

ஸா ஸா ஸா பா ஸ்நிநி | ஸ்ா ம்ா ம்க்ரிம்க்ா.ரி ஸ்ா ; | ஸ்ரிஸ் நி, பஸ்நிஸ்ா பப ||
மா ன வ ஜன் . . . | ம னி ஸம் . . . ப்ரா | ப்தே ஸதி ப ர ||
ஸ்ா ஸ்நிநி தா தபதா | நி\பா நிநி தா தபதம | கா மாபதபா.த பமகா ரி மகா பமமா ||
மா த்ம.. னி நி ர | தி ச ய ஸு கம் . . | வ்ர ஜ . . . . ரே . . . ||
(மானஸ)

### சரணம்

ஸா ; மா\ரி கமா ; | பா ; மா மாபக கரிரிநி | ஸா கா ; கமபா ; ||
ஸ த்வ கு ணோ . | பா தி ஸ . . ஹித . | ஸ தா . சி வம் . ||

ஸ்ா; ஸ்நிநீ தா பா தப | மா மா பக\கா ரீ\ஸா; | ஸா,க ஸா,நி நீ ஸா;; ||
ஸ்வா. வி . . த்யா.. | ஸ மே. . த ஜீ. | வே . த்ப வம் . ||
\ஸா; ஸா;/நீநிநி | ஸ்ா,ம்க்ரிஸ்ா ஸ்ா ஸ்ா ஸ்ா க்ஸ்ா நி | நீ பநிஸ்ா ஸ்நிஸ்ா; ||
த த்வம். தா. . | ம..ஸ. . யு த வி.... | ச்வ வை . ப . வம். ||
ஸ்ா; ஸ்நி தா தநிபா | நிஸ்ா\பா, தா தநிபா | மகபம பகரீ\ஸா; ||
தா . ர . . கே. ச்வ | ரம். ஆ. னந். . த | பை.. . ..ர வம். ||

மத்யம காலம்

கஸஸா/ஸ்ாஸ்ஸ் ஸ்நிஸ்ா | ஸ்ா க்ரி ரிம்க்ரி ஸ்நிஸ்ா ||
ந. த்வா ஸ்ரீ குரு சரணம் | க்ருத்வா. ஶா. ம.. ஸ்மரணம் ||
பா ஸ்ா ரிஸ்நித பநிபம | மகமா\தபா ம கரிகம ||
ஜித்வா மோ ஹா. வரணம். | ம. த்வா ததேக சரணம்: ||
(மானஸ)






# பச்சிலை வைத்தியம்

## பண்டித ஆ. மருத்துவமணி

மனிதனுக்கு மூக்குக் கண்ணாடியை அவசியமில்லாமல் அடிக்கும் பச்சிலை கரிசலாங்கண்ணி கண் பார்வைக்கு இது ஒரு தெய்வப் பிரசாதம்.

இது சாதாரணமாக எங்கும் எப் பொழுதும் கிடைக்கும். மழைக்காலங் களில் விசேஷமாகக் கிடைக்கும். கரி சலாங்கண்ணியில் மூவகையுண்டு. எனி னும், எளிதில் கிடைக்கக்கூடியது இரண்டே வகைதான்.

இதில் ஒன்று வெள்ளை நிறத்தை யுடைய புட்பத்தையும், மற்றொன்று மஞ்சள் நிறத்தையுடைய புட்பத்தை யும் கொண்டது. இதன் இலையும் மஞ் சள் நிறத்தை யொத்திருக்கும். எனவே, இதனை மஞ்சள் கரிசலாங் கண்ணி என்று கொள்ள வேண்டும்.

காரணப் பெயர் கரிசலாங்கண்ணி என்று இருப்பினும், இதனைச் சிறப் புப் பெயரால் பல பெயரிட்டழைக்க லாம். அதாவது கரியசாலை என்றும், கரிப்பான் என்றும், கையாந்தகரை என்றும் அழைக்கலாம்.

மஞ்சள் கரிசாலையைப் பொற்றலைக் கையான் என்றும் பெயரிட்டழைக்க லாம். இது பொன்னிறத்தை யொத் திருப்பதால் இப்பெயர் வழங்கலா யிற்று.

கரிசல் என்பது உப்பு. அந்த உப்புச் சத்து, இயற்கையாகவே கரிசலாங் கண்ணியில் உண்டு என்பதை நாம் உணர வேண்டும்.

கரிசல் = உப்பு; ஆங் = அங்கே; காண்ணி=காண் நீ.

என, கரிசாலையில் உப்புச்சத்து அடங்கியிருப்பதை வெகு அழகாக நமக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்கள் சித்தர்கள்.

கரிசாலையினால் கண்ணுக்கு மை செய்து தீட்டி வர, சிறுவர், சிறுமி யர்கள் நிச்சயமாக மூக்குக்கண்ணாடிப் போடவேண்டியதில்லை.

மை தயாரிக்கும் விதம் பெரும் பாலும் நமது தாய்மார்களுக்குத் தெரியுமாதலால் விவரம் தரப்பட வில்லை.

கரியசாலை கருப்பக மூலிகைகளின் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

கரிசாலையினால் சிந்தூரங்கள், பற் பங்கள், சூரணங்கள், குளிகைகள் தைலங்கள் முதலானவைகள் தயா ரிக்கப்படுகின்றன.

இனி மக்களுக்கு இதனால் எளிதில் நீங்கக்கூடிய நோய்களைப் பற்றிச் சிறிது விவரிப்போம்.

### வயிற்று வலியால் துன்புறுபவர்கள்

மஞ்சள் கரிசாலங்கண்ணியை நெகிழ அரைத்துக் கொட்டைப் பாக்களவு எடுத்து ஒரு ஆழாக்குப் பசுவின் மோரில் கலந்து [illegible] இரு வேளையும் உணவுக்கு [illegible] ஒரு மண்ட லம் அல்லது (48 நாட்கள்) உண்டு வர வயிற்றுவலி நீங்கும். இது கண் கண்ட உண்மை. இதற்குப் பத்தியமும் இல்லை.

### சொறி சிரங்கிற்கு

கரிசலாங்கண்ணியில், இரண்டினில் ஏதேனும் ஒன்றை இடித்து ஒரு ஆழாக் குச் சாறு எடுத்து, உடம்பு முழுவதி லும் பூசி வெய்யிலில் சிறிது நேரம் காய்ந்து பின் குளிர்ந்த நீரில் இலுப் பைக் கட்டி அல்லது சீயக்காய் தேய்த் துக் குளிக்க ஒரே வாரத்தில் சொறி, சிரங்கு, நமைச்சல் காணாதோடும்.

மஞ்சள் கரிசாலையை தூளாக எடு த்து பாசிப்பயறு அல்லது துவரம் பருப்புடன் கலந்து நாம் உண்ணும் மற்றக் கீரைகளைப்போல் பாகஞ் செய்துச் சாப்பிட, வயிற்றுப் புண்கள்

ஆறும். வயிற்றில் உள்ள நாசக்கிருமி களும் அற்று விழும்.

## மஞ்சட் காமாலைக்கு

மஞ்சள் கரிசலாங்கண்ணிச் சாறு ஒரு ஆழாக்கும் சிற்றுமணக்கெண்ணெய் ஒரு ஆழாக்கும் சேர்த்து ஒரு பழகிய மண்பாண்டத்தில் இட்டு, அதில் ஒரு பலம் வெள்ளைப்பூண்டை நறுக்கிப் போட்டு அடுப்பேற்றிப் பத முறக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

அனுபவமில்லாதவர்கள் எண்ணெய் பக்குவம் சரியாய் வந்துவிட்டதா என்று தெரிந்துகொள்ள ஒரு மெல்லிய துணியை சிறுவத்தியாய்ச் சுருட்டி காய்ச்சும் எண்ணெயில் தோய்த்து வத்தியின் நுனியைக் கொளுத்தினல் சிடச்சிட என்று தண்ணீர்ப் பசையோடு கூடிய சப்தம் வராமல் உடனே சட்டென்று தீப்பிடித்துக் கொண்டால் பக்குவம் வந்துவிட்டதாகத் தெரிந்து கொள்ளவும்.

உபயோகம்:— காலை நேரத்தில் மட்டும் அரை அல்லது முக்கால் பலம் எண்ணெயை தேகத்தின் மென்மை, வன்மைக்கேற்றவாறு சாப்பிட இரண்டல்லது மூன்று தடவைப் பேதியாகும். இவ்வாறு ஐந்து நாட்கள் குடித்தால் போதும்.

பத்தியம்:– பால், தயிர் உணவு உண்ணலாம். நோய் நீங்கு மட்டும் காரம், புளிப்பைக் கண்டிப்பாய் நீக்கவும்.

குறிப்பு:— பாலுண்ணும் குழந்தைகளுக்கு ஒரு சிறு சங்கு வீதம், மூன்று நாள் கொடுக்கப் போதுமானது. குழந்தைக்குத் தாய் மேற்சொல்லியவாறு காரம், புளிப்பை நீக்கிவிடவும்.

## புழு வெட்டுக்கு

கரிச்சாலை சாறு 4 அவுன்ஸ், மருதோன்றி இலைச்சாறு 4 அவுன்ஸ், எள்ளெண்ணெய் 5 பலம் ஆக இம்மூன்றினையும் ஒன்ருய்க் கலந்து லேசாகக் காய்ச்சி இறக்கும் தருவாயில் கால் பலம் ஏல அரிசிலைய் நசுக்கி அதில் போட்டு மேலே ஒருமூடியை மூடிவிடவும், பிறகு அரைமணி நேரம் சென்ற பிறகு வடித்துக் குப்பியிலடைத்து வைத்துக்கொண்டு புழு வெட்டினல், மயிருதிர்ந்து மொட்டையாய்ப் போகும் இடத்தில் தடவி வந்தால், சில தினங்களில் மயிர் முளைத்து வருவதைக் காணலாம்.

## பித்த வாயு நீங்கி உடற்சூடு தணிய

கரிசலாங்கண்ணியை நிழலிலுலர்த்தி இடித்துச் சூரணித்து குப்பியிலடைத்து வைத்துக்கொண்டு ஒரு ஆழாக்கு காய்ச்சின ஆவின் பாலில் ஒரு தேக்கரண்டி வீதம் சூரணத்தைப் போட்டுக் கலந்து, காலையும், மாலையும் அருந்தி வர பித்தவாயு நீங்கி தேகம் குளிர்ந்து உடல் நலம் பெறும். பத்தியம் இல்லை.

கரிசாலையை நாள் நெடுகத்தின்று வந்தால் நரை திரையை மாற்றும். இதனல் பல் துலக்கிக்கொண்டு வர, பல்லில் ரத்தம் வருதல், சீழ் வடிதல், வாய் துற்நாற்றம் இவைகளை நீக்கி பற்களை கெட்டிப் படுத்தும்

கரிசாலையை அதிகாலையில் பசுமையாக எடுத்து நன்ருய்க் கழுவி ஒருவாய் அப்படியேமென்று விழுங்கினல் ஒரு மண்டலத்தில் கண்கள் குளிர்ச்சியடைந்து பிரகாசித்து பகலிலும் நட்சத்திரத்தைக் காணலம்.

கரிசலாங்கண்ணியைச் சேர்ந்த ஸ்நானத் தைலங்கள் எதுவாயிருப்பினும் வாரம் இரு தடவை ஸ்நானம் செய்து வர வாத, பித்த சம்பந்தமான நோய்கள் நீங்கும். நாள்பட்ட ஒற்றைத் தலைவலி, பீனசம் கண் எரிச்சல், மண்டையில் நீரேற்றம் உடற்சூடு இவைகளை நீக்கி கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

நேத்திர ரோகங்கள் இதனைக் கண்டதும் சூரியனைக்கண்ட பனிபோலாகிவிடும்.







மானுக்குப் பின்னல் ஓடிக்கொண்டிருந்த அவன் களைப்படைந்தான் எப்படியும் அந்த அழகிய மானை உயிருடன் பிடித்து விட வேண்டுமென்ற ஆசையினுல், களைப்பையும் பொருட்படுத்தாமல் மானைத் துரத்திக் கொண்டேயிருந்தான்.

வேட்டையாடவென்று கானகத்தினுக்கு வந்த அவனது அன்பினுக்கு ஏராளமான மிருகங்கள் பலியாகின. அதிகமான மிருகங்களைக் கொன்று குவித்துவிட்டோமேயென்று அவன் ஓயவில்லை. மேலும் மேலும் முன்னேறிக்கொண்டேயிருந்தான்.

உணவுக்காக அவன் வேட்டையாட வரவில்லை. அப்படி வந்திருப்பானுகில் அவன் எப்பவோ திரும்பியிருப்பான். வேட்டையாடுவது அவனது குலத்தொழிலுமல்ல. ஆனுல், அவனுக்கு



வேட்டையாடுவது இன்பகரமான பொழுதுபோக்கு. ஆமாம். அரச பாம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு, வேட்டையாடுதல் பொழுதுபோக்குத்தானே! அவர்களுக்கு இன்ப விளையாட்டு ஆனுல் பகுத்தறிவற்ற விலங்கினங்களுக்கோ மரண விளையாட்டு.

அம்பின் வேதனை தாங்காது மரணத்தைத் தழுவிக்கொண்டிருந்த மிருகங்கள் பலவற்றைக் கண்டும் அவனுக்கு வேட்டையார்வம் குறையவில்லை. அதற்குப் பதிலாக மேன்மேலும் வேட்டையாடுவதிலே ஓர் வெறி தோன்றியது.

கானகத்தையே அதிரப் பண்ணும் எத்தனையோ கொடிய மிருகங்கள் நஞ்சு தோய்ந்த அவனது அம்புகளுக்குப் பலியாகின. சாதுவான மிருகங்கள் கூட வேதனைப்பட்டவாறு கிடந்தன. இத்தகைய துன்பகரமான காட்சியைக் கண்டும் அவனுக்கு இரக்கமென்பது தோன்றவில்லை. தனது வீரத்திலே பெருமைதான் தோன்றியது.

சில்லெனப் பாய்ந்து செல்லும் அவனது அம்பினுக்கு எந்த மிருகமும் தப்பவில்லை. எப்படித்தான் தப்ப முடியும். குறி வைப்பதிலுள்ள தேர்வை வளர்த்துக் கொள்ளத்தானே அடிக்கடி வேட்டையாட வருகிருன். வேட்டையாடுவதிலே அவனுக்குத் தனியோர் ஆர்வம். அந்த ஆர்வம் விலங்குகள் எந்த மட்டில் பலியாகின்றனவோ, அந்தளவிலே பெருகிக்கொண்டே சென்றது.

# சாகாத காதல்

## அருள் செல்வநாயகம்



அவன் எத்தனையோ தடவைகள் வேட்டையாடியிருக்கிறான். பல உயிர்களை அம்பினுக்கு இரையாகக் கொடுத்திருக்கிறான். இருந்தாலும் அன்று போல் அவனது வில்லினுக்கு என்றுமே வேலை ஏற்பட்டதில்லை. கண்ணில் தென்பட்ட அத்தனை மிருகங்களும் உயிரை இழந்தன. அவன் வைத்த இலக்கு ஓர் போதும் தவறவேயில்லை. விலங்குகள் பாய்ந்து ஓடும்போதுதான் அவன் அம்பு தொடுத்தான். அவ்வாறு தொடுப்பதிலும் அவனுக்குத் தனியோர் ஆனந்தம்.

பதுங்கிப் பதுங்கிச் சென்று குறி வைக்கும் பண்பு அவனிடம் கிடையாது. அப்படிச் சென்று வைக்கவேண்டிய அவசிய நிலையும் அவனுக்கில்லை.

அவனது வில்லின் கர்ச்சனை அந்தக் காட்டு மிருகங்களுக்கு ஓர் நடுக்கத்தை ஏற்படுத்தவே செய்தது. நாலு பக்கமும் விரைந்து சென்ற அவனது அம்புகளால் வனமே அதிர்ந்தது.

'இன்றுதான் இந்த வில்லினுக்கு நல்ல வேலை கிடைத்திருக்கிறது' என்று வாய்விட்டுக் கூறியவாறு வேட்டையாடுவதிலே மென்மேலும் முன்னேறிக்கொண்டிருந்தான்.

அந்தத் திக்கிலே செல்லுகிறோம். நகரம் எந்தத் திக்கிலே இருக்கிறது. எவ்வாறு சென்றால் மாளிகைக்குப் போகலாம். கொடிய வனமாயிற்றே. வேளையோடு வெளியேறவேண்டும். ஆதலின் மேற்கே சென்றுகொண்டிருக்கிறான். இன்னும் சில நாழிகைப்பொழுதில் இருள் சூழ்ந்துவிடுமே என்ற எந்த வகையான எண்ணமுமின்றி மிருகங்களை வதைத்துக்கொண்டே சென்றான்.

தூரத்தே தெரிந்த புதரொன்றிலே சலசலப்புச் சத்தம் கேட்டது. அவ்வளவுதான். அவன் வில்லை வளைத்துப் பிடித்தான். புதரிலிருந்துபுறப்பட்டோடிய மான் குட்டியின் மீது அம்பை விட முனைந்தவன் ஓர் கணப்பொழுது தடுமாறினான். இந்த அழகான மான்குட்டியைக் கொல்லாமல் உயிருடன் பிடித்துக் கொண்டாலென்னவென்ற எண்ணம் எழுந்தது. கையில் பிடித்திருந்த நாண் மெதுவாக நழுவியது. தோளில் வில்லை மாட்டியவாறு மானைத் தொடர்ந்து ஓடலானான்.



கானகத்திலே துள்ளித் திரியும் மான் குட்டிக்குப் பின்னால், அவனால் எப்படி ஓடமுடியும். இருந்தாலும் கண் பார்வையினின்று மறையாமல் மானைத் தொடர்ந்து ஓடிக்கொண்டேயிருந்தான்.

காற்றிலும் கடு வேகமாகச் செல்லும் மானுடன் மனிதனால் எப்படி ஓட முடியும். புதர்களினுள்ளே புகுந்து மான் ஓடுவது போல் மனிதனால் ஓட முடியுமா? இருந்தாலும் அவன் மானை உயிருடன் பிடிக்க வேண்டுமென்ற ஆர்வத்தினால் ஓடிக்கொண்டிருந்தான்.

அவன் சாதாரணமானவனல்லவே! வேட்டைப் பிரியன். குறி வைப்பதில் தவறாதவன். போர் முகத்திலே துணிந்து முன்னேறுபவன். அது மட்டுமல்ல! இலங்கை நாட்டு இளவரசன். வருங்கால மன்னவன். இலங்கை மன்னவனான வசபனின் அருமைக் குமாரன்! தாம்பூல ராணியான மெந்நாவின் ஆசைப் புதல்வன். ஆமாம். அவன்தான் இளவரசன் வங்கநாசிகதீசன்.

அரச பரம்பரையைச் சேர்ந்த முரட்டுப் பிடிவாதத்தினால், எதனையும் பொருட்படுத்தாது மானைத் தொடர்ந்து வங்கநாசிகதீசன் ஓடிக்கொண்டிருந்தான். இளவரசனாக இருந்தாலும் மனிதன்தானே! மனித இயந்திரம் அதிகம் உழைத்தால் ஆறுதல் வேண்டும். ஆறுதல் கொடுக்காமல், இயந்திரத்தைத் தொடர்ந்து இயக்க முடியாதே. ஓடிய வேகத்தினால் வங்கநாசிகதீசனுக்கு நா வரண்டது. கண்கள் இருளடைவது போற் தோன்றியது. கை கால்கள் எல்லாம் அப்படியே முறிவிடுவதுபோற் தோன்றியது. அவ்வளவுதான். வங்கநாசிகதீசன் அப்படியே மயங்கி வீழ்ந்தான்.

தன் உணர்வு வந்து கண் விழித்த தீசன், பூரண முழுமதி பவனி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான் முழுமதியின் அழகிலே ஈடுபட்டவாறு கண்களைப் பதித்திருந்த தீசனுக்குத் தன் நிலை நினைவுக்கு வந்தது.

'மானைத் தொடர்ந்து ஓடிய நாம் இங்கு எப்படி வந்தோம்' என்ற நினைவு நிலைக்கவும் கண்களைச் சுழற்றிப் பார்த்தான். பார்த்த அவனது கண்கள் அப்படியே நிலை குத்தி நின்றன. கனவு

தான் காண்கிறோமோவென்ற ஐயம் எழவும் கையைக் கிள்ளிப் பார்த்தான். கிள்ளிய இடத்தில் வலித்தது. இது கனவல்ல! நிஜமேதான் எனக் கண்ட தீசன் தன்னைப் புன்முறுவல் தவளப் பார்த்து நிற்கும் மங்கை நல்லாளை நோக்கினான்.

கானகத்தில் படுத்திருக்கிறோம். அப்படியானால் அவள் கானகத் தேவதையோ என்ற ஐயம் எழுந்தது தீசனுக்கு.

அவள் கானகத் தேவதை போலத்தான் தோன்றினாள். முழு மதியின் தண்ணொற்ற ஒளி அவளது அழகினுக்கு மெருகு பூசிக்கொண்டிருந்தது.

அரண்மனையிலே வகை வகையான மங்கையர்களைப் பார்த்திருக்கிறான். அழகிகள் எனப் புகழப்பட்ட காரிகைகளையும் பார்த்திருக்கிறான். தேர்ந்த ஆடலரசிகளையும் பார்த்திருக்கிறான். அப்படியிருந்தும் அவளைப் போன்ற அழகி ஒருத்தியை இதுவரை தீசன் காணவேயில்லை.

அவள் ஓர் மலர்ச் சோலையாகவே தோன்றினாள். அவளது மேனியைக் கதம்ப மலர்கள் அலங்கரித்துக்கொண்டிருந்தன. கால்களிலே கதம்ப மலர் வளைய மெட்டிகள் கட்டியிருந்தாள். கைகளில் கதம்ப மலர் வளையங்கள் காப்புப் போல் கட்டியிருந்தாள். அது போதாதென்று மார்பிலும் கதம்பமலர் மாலை அணிந்திருந்தாள். கதம்ப மலர்களாலே அலங்கரித்துக்கொண்ட ஓர் நங்கை கானகத்திலே இரவில் தோன்றினாளென்றால், அவள் எப்படி மானிடப் பெண்ணாக இருக்கக்கூடும். கானகத் தேவதையாகவேதானிருப்பாள் என்ற எண்ணம் தீசனுக்கு எழுந்தது.

இயற்கையிலே அழகியான அவளுக்குக் கதம்ப மலர்கள் தனியோர் பொலிவை ஊட்டியது. அந்தப் புதுப் பொலிவிலே தன் மனதைப் பறி கொடுத்த தீசன், அவள் வன தேவதையாயிற்றேயென்ற எண்ணம் எழவும் எழுந்து உட்கார்ந்தான்.

அவளது அழகை எடை போட்ட அவனுக்கு படிப்படியாக ஐயம் எழலாயிற்று. தேவதையென்றால் இப்படியிருக்குமா? இராதே...தேவதையென்றால்

இது வரை எத்தனையோ சம்பவங்கள் நடைபெற்றிருக்குமே! ஐயம் தீரவில்லை தீசனுக்கு. அதனைப் போக்கிக் கொள்ள மெதுவாக

'நான் எங்கிருக்கிறேன்' என்று குழைந்தான்.

அவள் புன்முறுவல் பூத்தாள்.

'மானைத் துரத்திக்கொண்டு ஓடிய நான் இங்கு எப்படி வந்தேன். நான் எங்கிருக்கிறேன்' என்று திரும்பவும் கூறினான் தீசன்.

அவனது ஆத்திரத்தையும், பீதியையும் மட்டிட்டுக்கொண்ட அவள், அவனது பொறுமையைச் சோதிக்கவிரும்பாமல்

'நீங்கள் கதம்ப மலர்ச் சோலையில் இருக்கிறீர்கள்', என்றாள்.

அவள் கூறிய வார்த்தைகள் தீசனுக்குத் தேனாக இருந்தது. தேவதையென்றால் இப்படியாகக் கூறமாட்டாள், இவள் வனத்துப் பெண்தான் என்று நம்பிக்கை ஏற்பட்டது. இருந்தாலும் அந்த நம்பிக்கை உறுதியாகப் பேச்சுக் கொடுத்தான்.

'கதம்ப மலர்ச் சோலையா? இங்கு எப்படி வந்தேன்.'

'இங்குதான் நீங்கள் களைப்பு மேலிட்டு மயக்கமடைந்து கிடந்தீர்கள்.'

'அப்படியென்றால் மானைத் துரத்திக்கொண்டு வந்த நான் கதம்பமலர்ச் சோலைக்கா வந்தேன்.'

'ஆமாம், இது கதம்ப மலர்ச்சோலைதான்.'

'அனுராதபுரத்தை அடுத்துள்ள மலர்ச் சோலைதானே'

'அதே கதம்ப மலர்ச் சோலைதான்...'

'கதம்ப மலர்ச்சோலைதான், கதம்ப மலர்ச் சோலையிலேதானிருக்கிறேன் என்பதை உன் மேனியை அலங்கரிக்கும் கதம்ப மலர்களே சொல்லாமல் சொல்கிறதே. கதம்பமலர் அணிந்த இல்லை!...கதம்ப மலர்க் காரிகையுடன் பொன்னான இந்த முழு மதியிலே இருப்பதற்கும் கொடுத்து வைக்கவேண்டாமா' என்றவாறு காதல் கனிய அவளை நோக்கினான்.

அவளைப் பார்த்த அந்தக் கணமே, தீசன் தன் உள்ளத்தை அவளிடம் பறி கொடுத்தான். அவனது உள்ளத்திலே அவளைச் சிறைப் பிடித்து

வைத்தான். அவன் காதலால் கட்டுண்டு கிடந்தான்.

மானைத் துரத்திக்கொண்டு வந்த நான் மயங்கி விழுந்துவிட்டேன். என்னைக் கானகத்திலே மயக்கம் தெளிவித்து பாதுகாத்தாள். ஆகவே அவள் கானகத்துத் தேவதைதான் என்ற எண்ணம் மேலோங்கியபோது காதல் பக்திப் பரவசமாக மாறியது.

அவளுடன் பேச்சுக் கொடுத்தபோது அவள் தேவதையல்ல, மானிடப் பெண்ணேதான், கதம்ப மலர்க் சோலைக் காரிகையேதான் என்ற நம்பிக்கை வேரூற்றவும் பக்திப் பரவசமாக மாறிய காதல் முன்போல் தணியாத காதலாக நிலைத்தது.

அவள் இன்றி இனி வாழ முடியாது. அவளைக் காணுமல் இருக்கமுடியாதென்ற நிலைக்கு வந்த தூசன்

'கதம்பமலர்க் காரிகையே...' என்றவாறு காதல் கனிய விழித்தான்.

'இந்தக் கதம்ப மலர்ச் சோலையிலே எத்தனையோ காரிகையர்கள் இருக்கிறுர்கள். அப்படியிருக்க நான் மட்டும் எப்படிக் கதம்ப மலர்க் காரிகையாவேன்...' என்றவாறு அவள் புன்முறுவல் பூத்தாள்.

'இந்தக் கதம்ப மலர்ச்சோலை எங்குமே கதம்ப மலர்க் காரிகையர்களாக இருந்தாலும் எனக்கு நீ மட்டுந்தான் கதம்ப மலர்க்காரிகையாவாய். என் உள்ளத்திலே என்றுமே அழியாவண்ணம் உறைந்த கதம்பமலர்க் காரிகையே...'

'நான் கதம்ப மலர்க் காரிகையா? உங்களுக்காக அப்படியே இருந்துவிடுகிறேன். ஆனல் என்னை மகாமத்தா...'

'மகாமத்தாவா! அழகிய பெயர் என் அன்பே! என் தூய்மையான காதலை இந்தப் பொன்னுன முழு மதி வேளையில் ஏற்பாயா? எனக்கு இன்ப வாழ்வளிப்பாயா' என்று குழைந்தான் தூசன்.

வங்கநாசிகதூசன் உள்ளத்தைப் பறிகொடுக்கு முன்னரே, அவள் அவனைக் கண்டவுடனே தூய்மையான அன்பு கொண்டுவிட்டாள்.

எதேச்சையாக முழு மதியைப் பருக வந்த மகாமத்தா அவனைக் கண்டாள். அவனைப் பார்த்தவுடனே அவனது வசீகரமான தோற்றத்திலே மயங்கிளுள். அவனுடன் ஓர் காதல் உலகிலே கைகோர்த்து உலவுவது போன்ற இன்ப நினைவிலே சஞ்சரித்தாள். பல நாழிகையின் பின்னர்தான் இன்ப நினைவிலிருந்து விடுபட்டாள். பல நாழிகையாக அசையாமல் படுத்திருப்பதைக் காணவும் அவளுக்கு ஐயமேற்பட்டது. மெதுவாக மூக்கிலே கை வைத்துப் பார்த்தாள். சுவாசம் வந்துகொண்டிருந்தது. களைப்பினுற்றான் மயங்கி விழுந்து கிடக்கிருனென்பதை உணர்ந்த அவள் விரைந்து சென்று நீர் மொண்டு வந்து தெளித்தாள். இதமான காற்று வீழ மேலாடையினால் ஒத்திறுல் விசிறினுள். அவளது அன்புப் பணியினுற்றான் தூசன் மயக்கம் தெளிந்து எழுந்தான்.

பார்த்தால் உயர்ந்த குலத்தவர்போற் தோன்றுகிறுரே! ஆதலினுல் அலைபாய்ந்த் தனது உள்ளத்தை வேதனைப் படுத்துவாரோவெனச் சந்தேகமுற்ற நிலையில் தடுமாறினுள் மகாமத்தா. அந்த நிலையிலே தூசன் தனது மனதைத் திறந்து காட்டவும் பெருமிதமுற்றுள். இன்ப உலகிலே களி நடனம் புரியலானுள்.

மௌனம் சம்மதத்திளுக்கு அறிகுறிதானே என எண்ணிய தூசன்

'கதம்ப மலர்க் காரிகையே என்னை சந்தேகிக்கிறுயா! என் உள்ளத்தைப் பிளந்து பார். அங்கே நீ நின்று ஆனந்தமாக நடனம் புரிவதை வாழ்வென்பது ஒன்று உண்டென்றுல், உன்னுடன்தான். இல்லையேல் எனக்கு வாழ்வே கிடையாது. என் தூய்மையான அன்பை ஏற்பாயா! உன் அழகு வாய் ஆசை தீர என்னை அத்தானென்று அழைக்கமாட்டாயா?' எனக் குழைந்தான்.

'அத்தான்...'

'கதம்ப மலர்க் காரிகையே...' என்றவாறு அவளது மென்கரத்தைப் பற்றித் தழுவிக் கொண்டான். உரியவள் உரியவனிடம் சேர்ந்துவிட்டாளென்ற பூரிப்பிலே முழு மதியும் கருமேகத்திரையை விலக்கியவாறு வெளிப்பட்டு ஆசி கூறினுள். ஆதற்கேற்ப கதம்ப மரங்களும் கதம்ப மலர்களைக் காதலர்கள் மேல் சொரிந்தன.



## 2

'அப்பா' என்றவாறு உள்ளே நுழைந்தான் வங்கநாசிகதூசன்.

'யார் தூசனு! வா குழந்தாய்' என்ருன் மாமன்னன் வசபன்.

'தங்களது சிந்தனையைக் குலைத்துவிட்டேனு அப்பா' எனக் கூறியவாறு பக்கத்திலே கிடந்த சோபாவில் அமர்ந்தான் தூசன்.

'மன்னவனுகப் பிறந்தால் சதா சிந்தனைதானே! மக்களுக்காகப் படைக்கப் பட்டவன்தானே மன்னவன். அவனுக்கென்று தனி விருப்பு வெறுப்புகள் கிடையாதே' என்றவாறு மகனை ஏறிட்டு நோக்கினுன் வசபன்.

'அப்பா! நீங்கள் சொல்வதைப் பார்த்தால், மன்னவனுக்கு மனம் என்பது இல்லை போலிருக்கிறதே'

'மனம் ஏன் இல்லை மகனே! பரந்துபட்ட மனம் இருக்கிறது. அந்த மனம் மக்கள் வழியிலே செல்ல வேண்டும்.

---

# தப்ப வழியின்றி தலையிடாதே!

[ரஞ்சனி]

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

★

சந்தையில் கோழியைத் திருடியதாம் சாப்பிட்டுத் தண்ணீர் மறந்ததுவாம்
வந்திடு வழியதும் புரிந்திடாமல் தலைகால் தெரியாது நடந்தது
தந்திர மிகுந்திடு நரியொன்றே தடுக்கி விழுந்ததாம் கிணற்றினிலே
சந்தோஷ மிகுதியில் கூரறிவும் மழுங்கிடல் இயல்பது தானன்றே?
குந்திக் குதித்ததாம் திரண்பற்றி கூச்சலு மிட்டதாம் எதிரொலிக்க
எந்த வகையிலும் எகிறிடுதல் இயலா மையினுல் தவித்ததந்தோ
விந்தை முகத்தினில் தாடியுடன் ஓங்கி வளர்ந்திடும் இருகொம்பு
அந்த வழியினில் ஓர்ஆடு தாக வேட்கையும் தகித்திடவே
வந்ததன் காதினில் ஒலிகேட்க விரைந்தது அத்திசை நோக்கிடவே
பொங்துக் கிணற்றினில் பார்த்ததுவே புத்தியில் மேலான நரியினையே
"எந்தன் சோதரா மதிமிகுந்தாய், எப்படித் தேர்ந்திட்டாய் இவ்விடமே
நொந்துடல் வாடினேன் மனம்வெதும்ப நாவினிற்கோர் சொட்டு நீரிலையே"
"வந்திடுவீர் நீர் அமுதமிங்கே வேண்டியபடியே அருந்திடலாம்
சிந்தனை செய்தற்கும் நேரமுண்டோ" என்றதே இச்சக நரிதானே
மந்த புத்தியின் அவதாரம் பொதுக்கெனக் கிணற்றில் குதித்ததுவே
அந்த தருணத்தைப் பயன்படுத்தி கொம்பேறி நரிமேல் பாய்ந்ததுவே
"அந்த மிகுந்திடும் தாடியாரே அதிலே பாதியும் நுமக்கிருந்தால
இந்த கதியுமக் கேற்படுமா குதிக்குமுன் எறிடல் ஓர்ந்திலீர்நீர்
சந்ததம் வாழ்ந்திடும் தலைகனத்தீர் எந்தனுக் குயிரினை மீட்டளித்தீர்
அந்தோ உம்நிலைக் கிரங்குகின்றேன்" என்றுமே ஓட்டம் பிடித்ததுவே

மக்கள் சக்தியினாற்றானே மன்னவன் வாழ முடியும்'

'என் மனம் அப்படியில்லையே'

'உனக்கென்று மனம் கிடையாது தீசா! மக்கள் நலத்தினுக்காகப் படைக்கப்பட்டதுதான் உனது மனம்.தெய்வ அம்சம் பொருந்தியவனல்லவா மன்னவன். அவன் மக்களின் பிரதிநிதி. மக்களால் வழிபடத் தக்கவன். ஆகவே மன்னவன் மக்கள் விருப்புகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமே.'

'எனக்கென்று தனி எண்ணம் இருக்கத்தானே வேண்டும்.'

'அப்படி உனக்கு இருக்கக்கூடாது. மக்களுக்குப் பிடியாத எண்ணங்கள் உன் மனதில் எழவும் கூடாது. மக்கள் விரும்புகிறார்கள் உனது திருமணக் கோலத்தைக் கண்டு களிக்க, நானும் என் வாழ்நாளில் என்று பேரனை எடுத்துக் கொஞ்ச வேண்டாமா' என்றான் மன்னவன் வசபன்.

தனது மனக் கருத்தை எப்படித் தந்தையிடம் சொல்லலாமென்று சிந்தையைக் குழப்பிக்கொண்டு வந்த தீசனின் மனதை அறிந்தவர்போலவே தந்தை வழியைத் திறந்து பேசவும் குதூகலப்பட்டான். தந்தையிடம் எனக்குத் திருமணத்தை முடித்து வையுங்கள் என்று சொல்வது கௌரவக் குறைவாகுமேயென்றுதான் பல நாட்களாக எண்ணிவந்தான் தீசன். இந்த எண்ணத்திலே பல திங்கள் தீசனுக்குச் சென்றுவிட்டன.

நாட் செல்லச் செல்ல தீசனின் காதலும் வளர்ந்துகொண்டே வந்தது. நாள் தவறினாலும் மாலைப் பொழுதில் தீசன் கதம்ப மலர்ச் சோலைக்குச் செல்லத் தவறவில்லை! காதலியுடன் உல்லாசமாகப் பொழுதைப் போக்கவும் தவறவில்லை, கதம்ப மலர்ச்சோலையில் அவர்கள் யாரும் காணுவண்ணமே ஆடிப்பாடித் திரிந்தார்கள். அதிலும் ஓர் தனி இன்பம் அவர்களுக்கு இருக்கத்தான் செய்தது. என்றாலும் பலரறியத் திருமணம் என்னும் கூண்டினுள் அடைபட்டு இன்பம் துய்க்க இருவரும் விரும்பினார்கள். அவளைப் பொறுத்த வரையில் எந்தவிதமான தடையுமில்லை. ஆனால் அவனைப் பொறுத்த வரையிற்றான் சிறிது சந்தேகமாக இருந்தது.

நாடாள வேண்டியவன் கதம்ப மலர்க் காரிகையை மணக்க அனுமதி கிடைக்குமா என்ற சந்தேகப் பேய் தீசனிடம் புகுந்து கொண்டது.

கதம்பமலர்க் காரிகையில்லாமல் வாழ முடியாதென்ற நிலைக்கு வந்த தீசன், தனது மனக் கருத்தைத் தந்தையிடம் வெளியிடப் பல முறை முயன்றான். வெட்கம் அணை போட்டுத் தடுத்தது. இன்ப வாழ்வை அனுபவிக்கத் துடிக்கும் கதம்ப மலர்க் காரிகையான மகாமத்தாவைத்தான் எத்தனை நாட்களுக்கு ஏமாற்ற முடியும். எப்படியும் இன்று தந்தையிடம் சொல்லித்தானாக வேண்டுமென்ற முடிபினுக்கு வந்தான். அவனது முடிபினுக்கேற்றாற் போல் தந்தையே வழியைத் திறந்துக் காட்டினார். கிடைத்த தருணத்தைத் தவறவிடாது பயன்படுத்த முனைந்தான் தீசன்.

தீசனது முகத்திலே தோன்றிய பல மாறுதல்களைக் கவனித்த வசவன்,

'திருமணம் என்றவுடன் குதூகலப்படவேண்டிய உன் உள்ளம், ஏன் சிந்தனையில் பாய்கிறது' என்றான்.

'அப்பா'

'சொல் மகனே உன் கருத்தை. உன் அன்னை உனக்கேற்ற குலக்கொடியாளை தெரிந்தெடுத்திருக்கிறாள்.'

'நான் வந்து...'

'நீயாக மனைவியைத் தெரிந்தெடுத்துவிட்டாயாக்கும்'

'ஆமாம் அப்பா'

'அப்படியா! உன் உள்ளத்தைக் கவர்ந்தவள் யார் தீசா'

'அவள்...'

'ஏன் தயங்குகிறாய். உன் தந்தையிடம் சொல்வதற்குத் தயக்கமா'

'அப்பா! அவள் என் இதயத்தில் இரண்டறக் கலந்துவிட்டாள். ஆனால் உங்களுக்கு...'

'பிடிக்காது என்று கருதுகிறாயா. வருங்கால மன்னவன் தகாத காதல் கொள்ளமாட்டானே'

'எங்கள் காதல் தூய்மையானது. அமரத்துவமானது. செத்தாலும் பிரிக்க முடியாத காதலப்பா'

'அதுதான் வேண்டப்படுவதுமகனே! உனக்காக உயிரைத் தியாகம் செய்யும் அந்தக் காரிகை யார்'

'கதம்பமலர்க்காரிகை'

'கதம்பமலர்க் காரிகையா! விசித்திரமாக இருக்கிறது. கதம்பமலர்ச் சோலையில் வசிப்பவர்கள் அனைவரும் கதம்பமலர்க் காரிகையர்தானே'

'இருக்கலாம். ஆனால் அவள் எனக்குக் கதம்பமலர்க் காரிகைதான்..அவள் மகாமத்தா'

'மகாமத்தா! அழகான பெயர்தான். கதம்பமலர்ச் சோலையில் அரச மரபைச் சேர்ந்தவர்கள் யாருமில்லையே. அவள் யாரின் மகள் மகனே'

'சூலநாகனின் மகள்...'

'சூலநாகன். அப்படியென்றால் கட்டிட வேலை செய்யும் கொத்தன் சூலநாகன் தானே'

'ஆமாம்'

'தீசா! நீதான் சொல்லுகிறாயா? வசபன் தவமிருந்து பெற்ற ஒரே மகன்தான் சொல்கிறானா' ஈழநாட்டு வருங்கால மன்னவன்தான் சொல்கிறானா'

'நான் கொண்ட காதல் புனிதமானதப்பா'

'புனிதமென்ற வார்த்தையைச் சொல்லாதே. நாடாள வேண்டியவனெங்கே! கட்டிட வேலை செய்யும் கொத்தன் மகள் எங்கே' அரச குலத் தோன்றலான உனக்கு அவள் ஏற்றவளா! ஈழ நாட்டு வருங்கால மன்னவன் தாழ்ந்த குலப் பெண்ணை மணந்தானென்றால் அதன் முடிவுதானென்ன! மக்கள் விரும்புவார்களா'

'மக்கள் விரும்புவதும், விரும்பாததும் என்னைப் பொறுத்ததல்லவே'

'நீ மக்களின் முதல்வன். இலங்கை அரியணையில் அரச குலப் பெண்களுக்குத்தான் இடம் கிடைக்கும், தாழ்ந்த குலப் பெண்ணுக்கு இடமில்லை. நீ அவளை மறந்துவிடு மகனே'

'என்னால் அவளை மறக்க முடியாது'

'உன்னால் மறக்க முடியாதா? அரசாங்க ஆணையைப் பற்றி நீ அறியாயா? ஆணைக்கு நீ தலை வணங்கித்தானக்வேண்டும்.

'ஆணைக்குத் தலை வணங்குகிறேன் அப்பா. ஆனால் என் விருப்பை மறக்க முடியாது. என் காதலை அழிக்க முடியாது'

'எப்படியும் உனது காதல் அழிந்துதானாக வேண்டும். இந்த இலங்கைநாட்டின் நலனுக்காக உன் காதல் அழிந்துதானாக வேண்டும். மக்கள் நலத்தினுக்காக உன் காதல் அழிந்துதானாகவேண்டும்.

'கதம்பமலர்க் காரிகையை மறக்க முடியாது. அவள்மேற் கொண்ட காதலை அழிக்க முடியவே முடியாது.

'தீசா இழிந்த குலப் பெண் அரியணையில் அமர அரசியல் சட்டம் இடந் தராது.'

'நாம்தானே அப்பா சட்டத்தை ஆக்கினோம்'

'இருக்கலாம். மக்கள் விருப்பினுக்கு இயையத்தான் சட்டம். அதுவும் அரச குடும்பச் சட்டம் மக்களால் ஆக்கப்படுவது. அதற்குக் கட்டுப்பட்டேயாக வேண்டும்'




"ஸார் ஒரு ரூபா கைமாத்தாக கொடுங்க"

"ஏன் ஒரு ரூபா? 5 ரூ வைத்துக்கொள்"

"வேண்டாம் சார்...அதிகமாக வாங்கினால் திருப்பித் தரணும் பாருங்க"

‘நான் மன்னவனாக இருந்தாற்றானே கட்டுப்படுவது’

‘நீ மன்னவனுக்கு மகனாகப் பிறந்துவிட்டாய். ஆகவே சட்டத்தினுக்குக் கட்டுப்பட்டேயாக வேண்டும். மன்னவன் வசபன் அரச நெறிப்படிதான் நடப்பான். இது வரையும் தந்தையென்ற பாசத்திலே கூறினேன். இனி அரசன் என்ற வகையிலே நடக்கப் போகிறேன்’ என்று வசபன் சினம் பொங்கக் கூறினான்.

‘நல்லது மன்னவா! உங்கள் ஆணையாது’ என்று பணிவாகக் கேட்டான் தீசன்.

‘நீ கதம்ப மலர்க்காரிகையை மறக்க வேண்டும்’

‘அவளை நான் மணக்கமுடியாது இருப்பதன் காரணம்’

‘இந்த நாட்டின் வருங்கால மன்னவனாக நீ இருப்பது.’

‘நான் அவளை மணந்தால் அரியணை தானே எனக்குக் கிடைக்காது. பாதகமில்லை. எனக்கு மணிமுடி வேண்டாம். என் கதம்பமலர்க் காரிகை மட்டும் கிடைத்தாலே போதும்...’

‘தீசா! மணிமுடியை உன்னால் துறக்கவும் முடியாது. கதம்ப மலர்க்காரிகையை மணக்கவும் முடியாது. இது இலங்கை மன்னவனின் ஆணை. நீ ஆணைக்குப் பணிந்துதானாக வேண்டும்.’

‘பணிய மறுத்தால்...’

‘இந்த நாட்டுச் சட்டப்படி கழுவிலேற்றப்படுவாய்’

‘என் காதல் நிறைவேறினால் எனக்கு கிடைப்பது மரணம்தானே! பாதகமில்லை. இந்தப் பிறவியில் நாங்கள் இணைந்து வாழக் கொடுத்துவைக்காவிட்டாலும், அடுத்த பிறவியில் இணைந்து வாழ்வோம். உங்கள் ஆணை தரும் மரணத்தை ஏற்பதைக் காட்டிலும், நாங்கள் இணைந்தே மரணத்தைத் தழுவுவது மேலானதல்லவா! வருகிறேன் மன்னவரே’ என்று வார்த்தைகளைக் கக்கிவிட்டு வெளியேறினான் வங்கநாசிகதீசன்.

இறுதியாகத் தீசன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் வசபனை வதைத்தன. ஒரேயொரு மகன் காதலுக்காகப் பலியாகிவிடுவேனென்ற என்றவெண்ணம் எழுந்தபோது அவனது உடலே ஆட்டங் கண்டது. என் வம்சம் என்னோடு வேரற்றுப் போவதா? முடியாது! வசபனது புகழை வங்கநாசிகதீசன் அமரத்துவமாக்க வேண்டும். அப்படியானால் தீசன் வாழவேண்டும். தீசன் வாழ்வதென்றால் அவன் கதம்ப மலர்க் காரிகையை மணக்க அனுமதிக்கவேண்டும். நான்தான் அனுமதித்தாலும் மக்கள் அனுமதிக்கமாட்டார்களே! மக்கள் அனுமதிக்காவிட்டால் அவன் முடி புனைந்து ஆணை செலுத்த முடியாதே. அப்படியென்றால் தீசன் காதலுக்காக மரணத்தைத் தழுவுவதா! முடியவே முடியாது. தீசன் மறைந்தால் அந்த ஏக்கத்திலே நானும் மறைந்துவிடுவேனே! என்ற சிந்தனையிலே உழன்ற வசபனின் கண் முன் கதம்பமலர்க் காரிகை தோன்றினாள். அடுத்து அவளது தகப்பன் தோன்றினான். அவ்வளவுதான் வசபன் வெகுண்டெழுந்தான்.

‘நீதானே என் மகனைக் கெடுத்தாய். உன் மகளை ஏவி என் மகனின் மனதைக் கெடுத்துவிட்டாயே! இளவரசனை அறிந்தும் தகாத காதலெனத் தெரிந்து வைத்தும் இடம் கொடுத்துவிட்டாய். உன் மகள் அரியணையில் அமர வேண்டுமென்ற பெருவேட்கை கொண்டுவிட்டாயா!’ என்று வாய்விட்டுக் கூறிய மன்னவன் வசபன், கைகளைத் தட்டினான்.

இரு காவலர்கள் வந்து பணிந்து நின்றார்கள்.

‘இப்பொழுதே சென்று கதம்பமலர்ச் சோலையில் வசிக்கும் கொத்தன் குலநாகனைப் பிடித்து இழுத்துக்கொண்டு வாருங்கள்’ என்று ஆணை பிறப்பித்தான் மன்னவன்.

ஆணையை நிறைவு செய்யவிரைந்து சென்றார்கள் காவலர்கள்.

## 3

அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஈழநாகன் என்னும் மன்னவன் இலங்கையை ஆட்சி செலுத்தலானான். இவனது காலத்திலே இலங்கையில் தமிழர் சிங்களவர் என்ற பேதமே இருக்கவில்லை. அதற்கு வழிகாட்டிபோல் மன்னவனே துலங்கினான்.



ஈழநாகன் தமிழ் பெண்ணை, மணந்து அரியணையில் அமர்த்தினான். தனக்குப் பிறந்த இரு குமாரர்களுக்கும் முறையே தமிழ்ப் பெயரான சந்தமுக சிவன் என்றும், சிங்களப் பெயரான யசலாளகதீசன் என்றும் நாமகரணம் சூட்டினான்.

ஒன்பதாண்டுகள் செம்மையாக ஆட்சி செலுத்தி ஈழநாகன் அமரவாழ்வடைந்தான். அவனது மூத்த மகனான சந்தமுகசிவன் அரசனாக முடிசூடினான்.

தமையனான சந்தமுகசிவன் மன்னவனாக ஆணை செலுத்துவது தம்பியான யசலாளகதீசனுக்குப் பொறாமையாக இருந்தது. எப்படியும் ஈழத்து அரியணையில்தான் அமர வேண்டுமென்று முடிவு கட்டினான். அவனது முடிவு நிறைவேறுவதானால், சந்தமுகசிவனைக் கொலை செய்தாகவேண்டும். அதற்கான தருணத்தை அவனும் எதிர்பார்த்து நின்றான்.

ஓர்நாள் சந்தமுகசிவன் குளத்தில் நீராடிக்கொண்டிருக்கையில், யசலாளகதீசன் அவனது தலையைத் துண்டித்தான்.

தமையன் மரணமாகினால் அரியணை தம்பிக்குத்தானே! யசலாளகதீசன் விரும்பிய அரியணை தானாகவே கிடைத்தது.

மணிமுடிதரித்து மன்னவனாக யசலாளகதீசன் ஆட்சி செலுத்தினாலும் அவன் ஓர் விளையாட்டுப் பிரியன். உல்லாசப்பிரியன் நகைச்சுவைரசிகன்.

யசலாளகதீசனின் ரதச்சாரதியாக சுபா என்னும் தமிழ் மறவன் இருந்தான். சுபாவும் யசலாளகதீசனும் உருவத்திலே ஒரே சாயலாக இருந்தார்கள். ஒருவரையொழித்துவிட்டு இன்னொருவரைக் காட்டலாம். அத்தகைய உருவ ஒற்றுமை அவர்கள் இருவருக்கும் இருந்தது.

ஒரே அச்சிலே வார்த்தது போன் தோன்றிய யசலாளகதீசனையும், சுபாவையும் அவர்களது ஆடைகளே மன்னவனென்றும். ரதச்சாரதியென்றும் காட்டிக் கொடுத்தான்.

தனது சாயலாக இருக்கும் சுபாவின் மேல் மன்னவன் அளவுகடந்த அன்பு கொண்டிருந்தான். சுபாவை மன்னவன் ரதச்சாரதியாக எண்ணாமல், தனது நண்பனாகவே கருதினான்.

விளையாட்டுப் பிரியனான யசலாளகதீசன் தனது உடைகளைச் சுபாவினுக்கு அணிந்து அழகு பார்ப்பான். அதேபோல் சுபாவின் ஆடைகளைத் தான் அணிந்து வேடிக்கைப் பார்ப்பான். இந்த உடை மாற்று வேடிக்கை அடிக்கடி அரண்மனையிலே நடந்துகொண்டிருந்தது.

சுபா அரசனாக இருக்கும்போது, அதாவது அரச உடையிலே இருக்கும்போது அமைச்சர்கள் வந்து பணிந்து நாட்டு விவகாரங்கள்பற்றிச் சொல்வார்கள். அதற்கேற்ப மறு உத்தரங்களைச் சுபாவே கொடுப்பான். அந்த வேளை மன்னவன் யசலாளகதீசன் ரதச்சாரதி போலவே நடித்துக்கொண்டிருப்பான்.

அரச ஆடை அணிந்து அடிக்கடி சில வேளைகளில் ஆணை செலுத்திவந்த சுபாவினுக்குத்தான் அரசனாகிலாலென்னவென்றதோர் எண்ணம் எழுந்தது. சபல எண்ணமென்று சுபா ஒதுக்கித் தள்ளவில்லை. எண்ணத்தை நிறைவு செய்யத் தருணத்தை எதிர்பார்த்திருந்தான்.

சுபா எதிர் பார்த்திருந்த தக்க தருணமும் கிடைத்தது. அரச உடையிலே இருந்த சுபா, அமைச்சருக்குக் காரணம் பலகாட்டி ரதச்சாரதியாக இருந்த மன்னவன் யசலாளகதீசனைக் கொலை செய்ய ஆணை பிறப்பித்தான். அடுத்த கணமே யசலாளகதீசனின் தலை துண்டிக்கப்பட்டது.

நீராடும்போது அதர்மமான வழியிலே உடன்பிறந்த தமையனான சந்தமுக சிவனைக் கொன்று அரசனாகிய யசலாளகதீசனுக்கும், அதே கதிதான் கிடைத்தது.

யசலாளகதீசனாக நடித்த சுபா. சேனைத் தலைவனைத் தனது பக்கமாக்கிக்கொண்டு, தானே சுபா என்று பகிரங்கப்படுத்திக்கொண்டு ஆணை செலுத்தலானான்.

ஓர்நாள் அரண்மனைக்கு வந்த பிரபலியமான சோதிடர் ஒருவர் மன்னவனின் கை ரேகையைப் பார்த்துவிட்டு

'வசபா என்னும் பெயருடையவனால் உயிராபத்து ஏற்படும்' எனக் கூறினார்.

மன்னவன் சுபாவினுக்குச் சோதிடத்தில் அபாரமான நம்பிக்கை. ஆகவே, நாட்டிலுள்ள வசபா என்னும் பெயர் கொண்ட அனைவரையும் கொலை செய்யும்படி படைத் தலைவர்களுக்கு ஆணை பிறப்பித்தான்.

சுபாவின் படைத் தலைவர்களுள் அபயன் என்பவன் ஒருவன். அபயன் ராஜ விசுவாசம் கொண்டவன். அரச ஆணையைச் சிரமேற் தாங்கி நிறைவு செய்பவன். மன்னவனது ஆணையைக் கேட்ட அபயன். தனது இல்லத்திலேயே வளர்ந்துவரும் மருகனான வசபாவை அரச ஆணைக்கிணங்கக் கொலைக்களத்தினுக்கு அழைத்துச் செல்ல முனைந்தான்.

இதனை அறிந்த அவன் மனைவியான மெத்தா மிகவும் கலங்கினாள். கணவனின் ராஜவிசுவாசம் அவளுக்குத் தெரிந்ததே. ஆகவே, வசபாவினை அழைத்துச் சென்ற கணவனிடம் சுண்ணாம்பு தடவாமல் தாம்பூலம் கொடுத்து அனுப்பினாள்.

அபயனுக்குத் தாம்பூலமென்றால் உயிர். நகரத்தின் எல்லையைக் கடந்தவுடன், தாம்பூலம் தரிக்க முனைந்தபோது சுண்ணாம்பு இல்லாததைக் கண்டான். ஆகவே, மனைவியிடம் சுண்ணாம்பு பெற்று வரும்படி வசபாவை அனுப்பிவைத்தான். தான் அழைத்துச் செல்லும் விஷயம் வசபாவினுக்குத் தெரியாததனால், தப்பி ஓடமாட்டானென்ற துணிவிலேதான் அனுப்பி வைத்தான்.

மெத்தா வசபாவைத் தப்புவிக்கவே சுண்ணாம்பு தடவாமல் அனுப்பினாள். சுண்ணாம்பு பெற வசபா திரும்பி வருவானென்று எதிர்பார்த்தான். அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.

வசபாவிடம் உண்மையினைக் கூறி ஒரு தொகைப் பணமும் கொடுத்துத் தம்பி ஓடும்படிக் கூறினாள் மெத்தா.

தன் உயிரைக் காத்த மெத்தாவை வாயார வாழ்த்திவிட்டு வசபன் மகா விகாரைக்குச் சென்று தஞ்சமடைந்தான்.

காலவரையில் வசபா பெரும்படை திரட்டிக்கொண்டு அனுராதபுரத்தை முற்றுகையிட்டான். அப்பொழுதுதான் சுபா செய்வதறியாது தவித்தான். மக்கள் சக்தியும் வசபாவினுக்கு ஆதரவாகத் திரண்டது.

தான் இனித் தப்ப முடியாது. எப்படியும் வசபாவின் வாளுக்கு இரையாகத்தான் வேண்டுமென்ற எண்ணம் சுபாவிற்கு எழுந்தது. அந்த எண்ணத்தை ஒலவே சோதிடர்கள் ஊட்டிவிட்டார்களே.

தான் மடிந்தாலும் தனது குலம் விளங்கவந்த ஒரேயொரு மகளைப் பலியிடச் சுபா விரும்பவில்லை. ஆகவே, தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவனிடம் கொடுத்து வளர்க்கும்படி கூறி அருமைக் குழந்தையை ஒப்படைத்தான்.

வசபாவினுடன் பொருத சுபா அவனது வாளுக்குப் பலியானான். ஈழத்து மணிமுடி வசபாவின் காலடிக்குத் தானாக வந்தது. மணிமுடி புனைந்து கொண்ட வசபா, தன் உயிரைக் காத்த மெத்தாவை மணந்து பட்டத்தரசியாக்கினான். தாம்பூலத்தின் மகிமையினால் வசபாவினுக்கு ஈழத்து மணிமுடி கிடைத்தது. ஆகவே, தாம்பூலராணியான மெத்தாவை மணந்து. மகாராணியாக்கித் தனது நன்றிக் கடனைத் தீர்த்துக் கொண்டான் வசபன்.

தாம்பூல ராணியான மெத்தாவுக்கும் வசபனுக்கும் பிறந்த அருமைக் குழந்தைதான் வங்கநாசிகதீசன்.

வரலாற்றினூடே மனதை அலையவிட்டுக் கொண்டிருந்த வசபனை 'மகாராஜா' என்ற குரல் கலைத்தது. நிமிர்ந்து பார்த்தான். எதிரே சூலநாகனைப் பிடித்தவாறு காவலர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

'நீங்கள் போகலாம்' என்று காவலர்களுக்கு ஆணை பிறப்பித்த வசபா, சூலநாகனை ஏறிட்டு நோக்கினான்.

'உமக்கு எத்தனை நெஞ்சழுத்தம். வங்கநாசிகதீசன் பட்டத்து இளவரசன். வருங்கால மன்னவன், என்று தெரிந்திருந்தும் உமது மகளை ஏவிவிட்டீரே! உமது மகளை மணந்தால் தீசன் அரியணையில் அமர முடியுமா?



சிந்தித்துப் பார்த்தீரா? எனது குலத்தை அழிக்கவென்று நீ கனவு கண்டு வந்தீரா! நீ செய்த குற்றத்தினுக்கு என்ன தண்டனையென்று தெரியுமா' என்றவாறு மன்னவன் வசபன் வார்த்தைகளை அள்ளி வீசினான்.

'மன்னவா! இளவரசனை என்மகள்...'

'கெடுத்துவிட்டாள்.'

'இல்லை மன்னவா! அவள் ஏதுமறியாள்...'

'விளையாடுகிறீரா...'

'மன்னவா நான் ஏன் விளையாடுகிறேன். இளவரசன் என்மகளைக் காதலிப்பதையோ, என் மகள் இளவரசனைக் காதலிப்பதோ எனக்குத் தெரியாது...'

'உண்மையை மறைக்க முடியாது சூலநாகா! செய்வதைச் செய்துவிட்டு வேஷமா போடுகிறீர்...'

'அந்த அவசியம் எனக்கில்லை மன்னவரே! என் மகள் உங்கள் மகனைக் காதலிப்பதாக மட்டும் எனக்குத் தெரிந்திருந்தால், அன்றே அதற்கு முற்றுப் புள்ளி வைத்திருப்பேன். இந்த வாளுக்கே அவளை இரையாக்கி இருப்பேன். பகைவன் மகனை அவள் காதலிப்பதா... முடியாது...'

'என்ன பகைவன் மகனா...'

'ஆம் மன்னவா! அவளுக்கு இளவரசன் பகைவனின் மகன்தான்...'

'அப்படியென்றால், நான் பகைவனா? உமக்கு என்ன பகை செய்தேன்... இலங்கை மன்னவனுடன் பேசுகிறாய் என்பதை மறந்துவிடாதே...'

'நியாயத்தைப் பேசுகிறேன். மன்னவரான நீங்கள் நியாயம் செலுத்தத்தானே வேண்டும்.'

வசபனின் நீதி சரியாது. பகைவன் என்றீரே அதன் அர்த்தம்...'

'மன்னவா! மகாமத்தா எனது மகளாக உலகத்துக்கு வளர்க்கப்பட்டாள். ஆனால், அவள் எனது மகள் அல்ல...'

'மகாமத்தா உமது மகளில்லையா...'

'இல்லை...'

'அப்படியென்றால்...'

'இந்த நாட்டைச் சுபா மன்னவர் தங்களுக்கு முன்னர் ஆட்சி செலுத்தினார்...'




"ஸார் தங்கள் வீட்டை என் சொந்த வீடு மாதிரி நினைத்து சுத்தமா வச்சுக்கிறேன்"

"அது சரி! உங்க சொந்த வீடு மாதிரி நினைத்து, வாடகை கொடுக்காமலிருந்து விடாதீர்கள்"

'தெரிந்த கதைதான். அவனது தலையைத் துண்டித்தது இந்த வாள்தான். இதேவாள் உம்மையும் பதம் பார்க்கும்...'

'பாதகமில்லை மன்னவா! உயிரை இழக்க நான் அஞ்சவில்லை...மகாமத்தா இறந்த மன்னவரான சுபாவின் ஏக புதல்வி...'

'என்ன! சுபாவின் மகளா... இது நிஜந்தானா...'

'ஆமாம் மன்னவா! சுபாவின் அருமை மகள்தான் மகாமத்தா! அதனாற்றான் பகைவனின் மகன் என்றேன்...'

'கதம்ப மலர்க்காரிகை மகாமத்தா, சுபாவின் மகள் என்றால் நம்ப முடியவில்லையே...'

'மன்னவரே! எனக்கென்று மனைவி இருந்தாற்றானே மகள் பிறக்க முடியும். நான் இன்றும் பிரமச்சாரிதான். இறந்த மன்னவரின் வேண்டுதலுக்காகவே

வாழ்கிறேன். துங்கள் மகனை மகாமத்தா காதலிப்பதாக எனக்குத் தெரிந்திருந்தால் அன்றே இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பேன். கதம்ப மலர்ச் சோலையிலே வளர்ந்தவள் அவள். அப்படியிருக்க இளவரசனைத்தான் காதலித்தாள் என்றால் குற்றம் எப்படி மகாமத்தாவைச் சாரும். இளவரசனைத்தானே சாரும்...'

'வசபனின் நீதியை நீ சோதிக்க வேண்டியதில்லை. மகாமத்தா, சுபாவின் மகள் என்பதற்கு என்ன சான்று...'

'சான்றுதானே! நீங்கள் அரண்மனையை முற்றுகையிட்டிருக்கும் போது, சுபா போருக்குக் கிளம்ப முனைந்தார். அந்த வேளை அவரது அருமை மகளைப்பற்றிய நினைவு வந்தது. அந்தப் புரத்தினுக்குச் சென்று மகளை எடுத்து வந்து என் கையிலே கொடுத்து, 'நான் மடிவதைப் பற்றிக் கவலையில்லை. எனது குலமாதல் விளங்க என் மகள் வாழவேண்டும். அவளை வளர்த்து எனது குலத்தைத் தழைக்கச் செய்வது உனது கடமையென்றவாறு' குழந்தையை ஒப்புவித்தார். நானும் அவ்வாறு செய்வதாக வாக்குறுதி கொடுத்தேன். மகாமத்தா சுபாவின் மகள்தான் என்பதை அவளது கழுத்திலே தொங்கும் தங்கச் சங்கிலி சொல்லும். அதிலே அரச இலச்சனையுடன் சுபாவின் பெயரும், மறு பக்கம் அரச இலச்சனையுடன் மகாமத்தாவின் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கிறது...'

'மகாமத்தா சுபாவின் மகள்' என்று வசபனின் வாய் முணு முணுத்தது.

'மன்னவரே!...' என்று விழித்தான் சூலநாகன்...

'சூலநாகரே! வசபனின் நீதி எங்கே என்றுதானே கேட்கப் போகிறீர். வசபனின் நீதி சரியாது...

'நான் வருகிறேன் மன்னவா' என்றவாறு சூலநாகன் வெளியேறினான்.

சூலநாகன் செல்லுவதைப் பார்த்துக் கொண்டிருந்த வசபனின் எண்ணச் சுழல் விரிந்தது. சூலநாகன், கதம்ப மலர்ச் சோலைக்குச் சென்றவுடன் முதல் காரியமாக மகாமத்தாவைத் தீர்த்துக்கட்டுவான். பகைவனின் மகனைக் காதலிப்பதாகத் தெரிந்திருந்தால் அவளுக்கு முடிவு கட்டுவேனென்றேனே! சொன்னதை நிறைவு செய்யும் பண்பு கொண்டவனாயிற்றே சூலநாகன்.

தீசனைக் காதலித்த குற்றத்தினுக்காக மகாமத்தா மடிவதா! வேண்டாம். மகாமத்தாவில் தவறேயில்லை...தீசன் தான் கதம்ப மலர்ச் சோலைக்குச் சென்றிருக்கிறான். அவளைக் கண்டு மயங்கி இருக்கிறான். மயக்கியவன் தீசனே! ஆகவே, அவனில் குற்றமிருக்கிறது.

மகாமத்தா மடிந்தால், கூடவே தீசனும் மடிந்துவிடுவான். அதில் சந்தேகமே வேண்டியதில்லை. அத்தனை தூரம் மகாமத்தா அவனது உள்ளத்திலே இடம் பெற்றிருக்கிறாள்.

சுபாவைத்தான் பகைவன் என்ற கோதாவில் வாளுக்குப் பலியாக்கினேன். அவன் மகள் என்ன தவறு செய்தாள். தகப்பன் செய்த தவறுக்கு மகளின் பழி தீர்ப்பதா... வேண்டாம்... எண்ணச் சுழலிலிருந்து விடுபட்ட வசபனின் மனக் கண் முன்னே தீசன் தோன்றினான்.

'அப்பா! இந்தப் பிறவியில் நாங்கள் இணைந்து வாழக் கொடுத்து வைக்கவில்லை. இருந்தாலும் அடுத்த பிறவியிலாவது இணைந்து வாழ்வோம். உங்கள் ஆணை தரும் மரணத்தைக் காட்டிலும் நாங்கள் இணைந்தே மரணத்தைத் தழுவுவது மேலானதல்லவா...'

'போதும் தீசா! என்னைக் கொல்லாமல் கொல்லாதே' என்று வாய்விட்டுக் கூறிய வசபனின் முன்னே மகாமத்தா தோன்றினாள்.

'மன்னவரே! நான் என்ன தவறு இழைத்தேன். என் தகப்பன் செய்த தவறுக்காக என் வாழ்வைப் பாழ்படுத்த முனைந்து விட்டீரே! நான் தமிழன் மறவர் குலத்திலே வந்தவள். உள்ளத்திலே ஒருவனுக்குத்தான் இடம் கொடுப்பேன். வாழ்ந்தால் தீசனுடன் வாழ்வு. இன்றேல் இந்த வாழ்வையே முடித்துக்கொள்வேன். நான் சாகத்தான் வேண்டுமென்று நீர் விரும்பினால் அபலையான நான் சாவைத் தழுவுவதைத் தவிர வேறு வழிதான் ஏது! தீசனைக் காதலித்த குற்றத்தினுக்காக, நான் சாவதா? என்பாவம் உம்மைச் சும்மா விடாது...'

'மகாமத்தா! உன் சொல்லம்பால் வதைக்காதே என்னை உன் தகப்பனும் தவறு செய்யவில்லை. நீயும் செய்யவில்லை. நான்தான் தவறு செய்து விட்டேன்' எனக் கதறிய வசபன் முன்னே மன்னவன் சுபா தோன்றினான்.

'நான் உமக்கு என்ன குற்றம் செய்தேன். என்னைக் கொன்று அரசைக் கவர்ந்து கொண்டீர். அப்படியிருக்க உனக்கோ, உனது குடும்பத்தினுக்கோ என்ன தவறு இழைத்தேன். என்னைத்தான் நிர்மூலமாக்கியதுடன் எனது மகளையும் நிர்மூலமாக்க முனைந்து விட்டாயே! அவள் என்ன கொடுமை செய்தாள்! நான் தமிழன், என் மகள் தமிழ்ப் பெண் என்ற பேதம் காட்டுகிறாயா? வசபனின் நீதி இதுதானா? வாலிப உள்ளங்கள் இரண்டு காதலால் கட்டுண்டு கிடப்பது தவறா? என் மகளைப் பழி வாங்காதே. தமிழன் என்ற பேதம் காட்டாதே...'

'போதும் சுபா! தமிழன் சிங்களவன் என்ற பேதம் வசபனின் ஆட்சியிலே கிடையாது. என் நாட்டிலே தமிழரும் சிங்களவரும் கலப்பு மணம் செய்து வாழ்வதை நீ காணவில்லையா! இரு மொழிகளும் அத்தாணி மண்டபத்திலே வழங்கப்படுவதைக் காணவில்லையா? உன்னைத்தான் அநியாயமாகக் கொன்று தவறு இழைத்தேன். அதே தவறை உனது மகளுக்கும் செய்யமாட்டேன். என்னை மன்னித்துவிடு சுபா' எனக் கூறிய வசபன் முன்னே. சூலநாகன் வாளை ஏந்தியவாறு தோன்றினான்.

'என் மகளை உமது மகன் காதலென்று சொல்லிக் கெடுத்துவிட்டான். பகைவன் மகன் என்று தெரியாமல் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாள். இல்லை, அவளை மயக்கிக் கெடுத்து விட்டான் உன் மகன். சுபாவைத்தானே உயிருடன் பலிவாங்கினாய்...மகாமத்தாவை நீ பலிவாங்க முன்னர், பகைவன் மகனைக் காதலித்ததற்காக நானே பலிவாங்குகிறேன்...'

'வேண்டாம் சூலநாகா! அவள் குற்றமற்றவள். சுபாவும் தவறு செய்யவில்லை. மகாமத்தாவும் தவறு செய்ய



வாழ்கிறேன். தங்கள் மகனை மகாமத்தா தீர்த்துக்கட்டுவான். பகைவனின் மல

யில்லை' என வாய்விட்டு அரற்றிய வசபன் முன்னே, அவன் மனைவி மெத்தா தோன்றினாள்.

'தவமிருந்து பெற்ற என் மகனைக் கொன்றுவிட்டீர்களே! அவனது ஆசைக் கனவைப் பாழாக்கியதுடன் என்னையும் நடைபிணமாக்கிவிட்டீர்களே! என் மகன் சென்ற வழியிலே நானும் செல்லுகிறேன்...'

'மெத்தா! நான்தான் குற்றவாளி. தவறு செய்தவன் நான்தான்' என்றவாறு வசபன் இருக்கையை விட்டெழுந்தான். மறுகணம் ஏதோ முடிபினுக்கு வந்தவனாக வெண் புரவியிலே பாய்ந்து ஏறினான். அந்த வெண் புரவி மன்னனைச் சுமந்துகொண்டு கடுவேகமாகச் சென்றது.

## 4

முழு நிலா வானத்திலே பவனி வந்துகொண்டிருந்தான். வனது குளுமையிலே. தனிமை மகாமத்தாவை வதைத்தது. வழமையாக வரும் காதலன் இன்னும் வரவில்லையே. ஓர் நாளாவது இப்படி என்னைக் காக்கவைக்கவில்லையே யென்று அவள் அங்கலாய்த்தாள்.

'கதம்பமலர்ச் சோலையினுள்ளே இன்னும் எத்தனை நாட்களுக்கு நமது காதல் அடங்கிக் கிடப்பது. மாலை வேளையிற்றானே உன்னைச் சந்திக்கலாம். என் உள்ளத்தினுக்கு அது போதாது. நாள் முழுதும் உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கவே தோன்றுகிறது. எப்படியும் இன்று தந்தையிடம் அனுமதி கேட்கப் போகிறேன்' என்று சொல்லிப் போனார்.

தந்தைக்கும், தனயனுக்கும் உடன்பாடு ஏற்படவில்லையோ! எப்படித்தான் உடன்பாடு ஏற்படும். நாடாளும் மன்னவன், என்போன்ற ஓர் பெண்ணை மணக்க அனுமதிப்பாரா? ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். அப்படியானால் என் காதல் மண்ணோடு மண்ணாவதா! அவரைப் பிரிந்து என்னால் வாழ முடியாதே! இறைவா! இந்த ஏழையை ஏன் இன்னுமின்னும் சோதிக்கிறாயென்று அங்கலாய்த்தாள் மகாமத்தா.

தாமரை இலைத் தண்ணீர்போல் மகாமத்தா தத்தளித்துக் கொண்டிருந்தாள். அவளது உள்ளுணர்வு ஏதோ விபரீதம் நிகழப் போகிறதென்பதைச் சொல்லிக்கொண்டேயிருந்தது.

கதம்பமலர்ச் சோலையிலே காதல் அரும்பியும் நான்கு திங்கள் ஆகிவிட்டனவென்பதை முழுமதி சொல்லாமல் சொல்லியது ஆமாம். தீசன் அன்றொருநாள் முழுமதி நாளிலேதான் அவளைக் கண்டான். காதல் கொண்டான். அன்று முதலாகத் தினமும் அவர்கள் சந்தித்துக் கொண்டே வந்தார்கள். காதலும் வளர்ந்து கொண்டே வந்தது.

மகாமத்தாவின் தனிமையைக் குலைப்பதுபோல் பக்கத்தே குதிரையின் குளம்பொலி கேட்டது. திரும்பிப் பார்த்தாள். தீசன் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

'அன்பே...' என்றவாறு மகாமத்தா எழுந்தாள்.

'என் காதல் ஜோதியே' என்றவாறு தீசன் அவளைத் தழுவிக்கொண்டான். அந்த இன்பத்திலே ஒரு கணம் தடுமாறிய தீசன் விடுவித்துக்கொண்டு கதம்ப மரத்தின் கீழ் வந்தமர்ந்தான்.

'மகாமத்தா! நம் வாழ்க்கைப் பாதைக்கு ஓர் முடிவு கண்டுவிட்டேன். தந்தையே அந்த முடிவையும் வகுத்துத் தந்தார்...'

ஆவல் பொங்க அவனது முகத்தை ஏறிட்டு நோக்கினாள்.

'இந்தப் பிறவியில் நாம் இணைந்து வாழக் கொடுத்து வைக்கவில்லை. அந்தஸ்து என்னும் திரை நம் காதலைக் குழி தோண்டிப் புதைக்க முன் வருகிறது...'

'அத்தான்...'

'கண்ணே!'

'நான் எதிர்பார்த்த முடிவுதான்...'

'அரச ஆணை நமக்கு மரணத்தைத் தான் தருகிறது. ஆணைக்குக் கட்டுண்டு மரணத்தைத் தழுவதைக் காட்டிலும், நாமே நமது விருப்பம்போல் மரணத்தை அமைத்துக் கொள்வது மேலானதல்லவா?...'

'உங்களைப் பிரிந்து என்னால் வாழ முடியாதே.'



'என்னாலும் வாழ முடியாதே!... ஆதலினாற்றான் நமது இன்ப வாழ்வை நாம் இணைந்தே முடிவாக்கிக் கொள்வோம். எந்தக் கதம்ப மலர்ச்சோலை நமது காதலை வளர்த்ததோ. அதே கதம்ப மலர்ச் சோலையிலே நமது காதலும் சிரஞ்சீவியாகட்டும்...'

'அத்தான்.'

'மகாமத்தா! அந்தஸ்து தலை நீட்டியபோது நம் காதல் வாழ முடியாது...'

'அந்தஸ்தை மீறி நான் ஆசை வைத்ததுதானே, இத்தனைக்குக் காரணம்.'

'இல்லை கண்ணே! மனிதனாகத்தானே அந்தஸ்தை வகுத்துக்கொண்டான். தூய்மையான இரு உள்ளங்கள் அந்தஸ்தைக் கொண்டா இணைவது... தூய்மையான காதலுக்கு இந்த நாட்டில் இடமில்லை. நமது தூய்மையான காதல் சமாதி இனி வருங்காலச் சந்ததியாருக்குக் காதல் வாழ வழி வகுக்கட்டும்...'

'பிரபு'

'இதோ பார் கண்ணே! கொடிய நஞ்சு தோய்ந்த கட்டாரிகள். இரத்தத்திலே சிறிதளவு பாய்ந்தாலே போதும்... உயிரைக் குடித்துவிடும். இந்தா ஒன்றை நீ எடுத்துக்கொள். இருவரும் ஒரே கணத்திலே வாளை மார்பிலே செலுத்திக் கொள்வோம்' என்றவாறு ஓர் கட்டாரியை அன்புக் காதலியிடம் கொடுத்துவிட்டு, மற்றதைக் கையில் எடுத்துக்கொண்டான்.

'சாவிலும் உங்களுடன் இணைந்து சாக நான் கொடுத்து வைத்தவள்.'

'நானுந்தான் கண்ணே! இனித் தாமதிக்க நேரமில்லை. அரச ஆணை பாய்ந்து வருவதற்கு முன்னர் இந்த நாடே அறிய நமது புனித காதல் சமாதியாக வேண்டும்...'

'உண்மைதான்...'

'மக்களின் தலைவரான மன்னவர் நமது காதல் சமாதியைக் கண்டதால், தம்மைத் திருத்திக் கொள்ளட்டும். காதலுக்குச் சாதி பேதமில்லை, சமய பேதமில்லை, அந்தஸ்துப் பேதமில்லை என்பதை இனியாதல் உணரட்டும். கதம்ப மலர்க்காரிகையே! இதோ எனது அன்பு முத்தம்...' என்றவாறு அவளது முகத்திலே அன்பு முத்திரையைப் பொதித்தான்.

'இதே இடத்திற்றான் நமது காதல் ஆரம்பமாகியது. இதே இடத்திற்றான் நமது காதலும் அமரத்துவமாகிறது. அடுத்த பிறவியிலாவது நான் ஒன்று கூடுவோம்... கட்டாரியைப் பாய்ச்சிக் கொள்வோம்' என்றவாறு தீசன் கட்டாரியை மார்புக்கு நேராகக் கொண்டு போனான். அதேபோல் மகாமத்தாவும் தனது மார்பினுக்கு நேராகக் கட்டாரியைக் கொண்டுபோனாள்.

கண்களை மூடியவாறு கட்டாரியை மார்பிலே பாய்ச்ச முனைந்த அவர்களது கரங்களை இரும்புக் கரமொன்று பிடித்தது. மகாமத்தாவின் கரத்திலிருந்த கட்டாரியும். தீசனது கரத்திலிருந்த கட்டாரியும், மன்னவன் வசபனின் இரு கரங்களிலுமிருந்தது. கண்களைத் திறந்து பார்த்த தீசன். 'சாவதற்கும் உங்கள் ஆணை தடுக்கிறதா' என்றான்.

கட்டாரிகளை தூரத்தே வீசிவிட்டு 'என் மகனே! நீ வாழவேண்டும்' என்றவாறு மகனைத் தழுவிக் கொண்டான்.

இந்தக் காட்சியைப் பார்த்து நின்றவாறு சூலநாகன் வெளியே வந்தான்.

'தீசா! உனது காதலை அனுமதிக்கிறேன். நீ கதம்பமலர்க் காரிகையோடு ஆனந்தமாக வாழ ஆசி கூறுகிறேன்.'

'நிஜமாகவா அப்பா.'

'ஆமாம் மகனே! நீ காதலித்த கதம்பமலர்க் காரிகையும் அரசிளங் குமரிதான். எனக்கு முன்னர் ஆளுகை நடத்திய தமிழ் மறவனான சுபாவின் அருமை மகள். தமிழ் அணங்கு ஒருத்தியை என் மகனுக்கு மனைவியாக்குவதில் நான் பெருமை கொள்கிறேன்...'

'மன்னவா' என்று குழைந்தாள் மகாமத்தா.

'சூலநாகனே! சுபாவினுக்குப் பிராயச்சித்தம் செய்துவிட்டேன். உனது வளர்



# நாராயணீயம்

சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்

### 23-வது தசகம்

### 3. நாராயண கவசத்தால் இந்திரன் ஜயமடைதல்

☆

षष्ट्या ततो दुहितृभिः सृजतः
कुलौघान्
दौहित्रसूनुरथ तस्य स विश्वरूपः ।
त्वत्स्तोत्रवर्मितमजापयदिन्द्रमाजौ
देव त्वदीयमहिमा खलु सर्वजैत्रः ॥

ஷஷ்ட்யா ததோ துஹித்ருபி:
ஸ்ருஜத: குலௌகான்
தௌஹித்ரஸூனுரத தஸ்ய
ஸ விச்ரூப:
த்வத் ஸ்தோத்ரவர்மித மஜாபயதி
ந்த்ரமாஜௌ
தேவ த்வதீயமஹிமா கலு
ஸர்வ ஜைத்ர:

பதவுரை:—தத-பிறகு, ஷஷ்ட்யா—(அதிதி, திதி முதலிய) அறுபது, துஹித்ருபி:—பெண்களின் மூலம், குலௌகான்—வம்ச பரம்பரைகளை, ஸ்ருஜத—ச்ருஷ்டி செய்த, தஸ்ய—அந்த தக்ஷனுக்கு, விச்வரூப:—விச்வரூபன், தௌஹித்ர ஸூனு:—பெண் வயிற்றுப் பேரனின் பிள்ளையாக (பிறந்தான்), அத-பிறகு, ஸ:—அந்த விச்வரூபன், த்வத் ஸ்தோத்ரவர்மிதம்—உமது ஸ்தோத்திரமாகிய (நாராயண கவசத்தால்) ரக்ஷிக்கப்பட்ட, இந்த்ரம்—இந்திரனை, ஆஜௌ—(தேவாஸுர) யுத்தத்தில், அஜாபயத்—ஜயமடையச் செய்தான், தேவ—ஹே தேவனான குருவாயூரப்பா!, த்வதீய மஹிமா—உமது மஹிமையானது, ஸர்வஜைத்ர: கலு—எல்லோரையும் ஜயிக்கக்கூடியதல்லவா?

கருத்துரை:—'ஹே குருவாயூரப்பா, பிறகு தக்ஷன் அறுபது பெண்களைப் பெற்று வம்ச பரம்பரைகளை விருத்தி செய்தார். அந்தப் பரம்பரையில் தக்ஷனுடைய பெண் வயிற்றுப் பேரனின் பிள்ளையாக விச்வரூபன் பிறந்தான். பிறகு அந்த விச்வரூபன் தன்னுடைய ஸ்தோத்ரமாகிய நாராயண கவசத்தை இந்திரனுக்கு உபதேசித்தான். நாராயண கவசத்தால் ரக்ஷிக்கப்பட்ட அந்த இந்த்ரன் தேவாஸுர யுத்தத்தில் ஜயமடைந்தானே. ஹே! தேவதேவனான குருவாயூரப்பா! தங்களுடைய மஹிமை யாவரையும் ஜயிக்கக்கூடியதாகச் செய்யும் என்று ஸ்ரீ நம்பூதிரி ஸ்ரீ குருவாயூரப்பனைப் பார்த்துக் கேட்க, சிலையாக நின்ற அந்த மூர்த்தி தலையை அசைந்து நம்பூதிரி சொன்னதை ஆமோதித்ததாம்.

விளக்கவுரை:—தக்ஷன் தன்னுடைய பிள்ளைகள் எல்லோரும் மோக்ஷ மார்க்கத்தை நாடி ஸந்நியாசிகளாகி விட்டதில் மிகுந்த துக்கத்தை அடைந்துவிட்டதைப் போன ச்லோகத்தில் பார்த்தோம். துக்கமடைந்த தக்ஷனை ப்ரம்மதேவர் ஸமாதானப் படுத்தினார்.

ततः प्राचेतसोऽसिक्न्यामनुनीतः
स्वयं भुवा ।
षष्टिं सञ्जनयामास दुहितॄः पितृ
वत्सलाः ॥

பாகவதம் 6-6-1

தத: ப்ராசேதஸோ ஸிக்னயா
மனுனீத: ஸ்வயம்புவா
ஷஷ்டிம் ஸஞ் ஜனயாமாஸ
துஹித்ரூ: பித்ருவத் ஸலா:

பிறகு அஸிக்னீயிடத்தில் 60 பெண்களை உண்டாக்கினார். அவர்கள் எல்லோரும் தகப்பனாரிடம் மிகுந்த வாத்ஸல்யம் உடையவர்களாயிருந்தார்கள்.

தக்ஷன் 60 பெண்களைப் பெறுவானேன்? மறுபடியும் ஏன் புத்ரர்களை உண்டாக்கவில்லை? தக்ஷன் சிறந்த அறிவாளி. பிள்ளைகளைப் பெற்றால் அவர்கள் நாரதரால் ஸன்யாஸிகளாகி விடுகிறார்கள். பெண்களைப் பெற்றால், அவர்கள் பர்த்தாவை அடைந்து பதி சுச்ருஷை செய்வதே அவர்களுடைய கடமையாகிவிடுகிறது. அவ்வாறு பதியை அடையும் ஸ்த்ரீ, குழந்தைகளைப் பெறுவாள். அப்போது வம்சம் தானாகவே வ்ருத்தியடைந்து விடுகிறது. அந்த வம்ச வ்ருத்தியால் தக்ஷனும் நல்ல கதியை அடைய முடியும். இந்த யுக்தி ப்ரம்மதேவனால் தக்ஷனுக்குத் தோன்றியதால் அவன் தன் மனைவியினிடத்தில் பெண்களை உண்டாக்கினான்.

இங்கு, புருஷர்களுக்கு எவ்வாறு மோக்ஷ மார்க்கமோ அவ்வாறே ஸ்த்ரீகளுக்குப் பதி ஸேவை ஆகும் என்பதை அறியவேண்டும்.

स्त्रीणां आर्यस्वभावानां परमं दैवतं
पतिः ।
नाऽतो विशिष्टं पश्यामि बान्धवं
विमृशन्त्यहम् ॥

ஸ்த்ரீணாம் ஆர்ய ஸ்வபாவானாம்
பரமம் தைவதம் பதி:
நா தோ விசிஷ்டம் பச்யாமி
பாந்தவம் விம்ரு சந்த்யஹம்

இந்த ச்லோகம் ஸீதைக்கு அனஸூயையால் சொல்லப்பட்டது. 'பெரியோர்களுடைய சொற்களைக் கேட்டு அழுக்கற்றதும் பண்புள்ளதுமான உன்

---

ப்பு மகளான மகாமத்தாவுக்கும், என் மகனுக்கும் இலங்கை நாடே வியக்கும் வண்ணம் திருமணத்தை நடத்தி வைக்கிறேன்' என்றான் மன்னவன் வசபன்.

'மன்னவா! தமிழ்மற வேந்தன் ஒருவனின் மகளை, உங்கள் மகனுக்குத் திருமணம் செய்ய முனைந்தது இலங்கை வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்' என்றான் அமைதியாகச் சூலநாகன்.

'தமிழரும், சிங்களவரும் எனது இரு கண்கள் போன்றவர்கள். இந்த நாட்டில் இரு சாதியரும் இணைந்து வாழ வேண்டுமென்பதே எனது எண்ணம்... மகாமத்தா! சாகாத காதலினால் கட்டுண்ட நீ உன் அன்புக் காதலனுடன் ஆனந்தமாக வாழ்க்கையை நடத்து. உங்கள் இருவருக்கும் என்றுமே என் ஆசி' என்று வாழ்த்தினான் மன்னவன் வசபன்.

மகாமெத்தாவும், தீசனும் மகிழ்ச்சி ததும்பி வழிய வசபனைப் பணிந்து எழுந்தார்கள். சாகாத காதலால் பிணைக்கப்பட்ட அன்புக் காதலர்களுக்கு ஆசி கூறுவதுபோல் கதம்ப மரங்களும், மலர்களை அவர்கள்மேல் உதிர்த்தன.

☆

னத்தைப் படைத்த ஸ்த்ரீக்கு சிறந்த தெய்வம் அவளுடைய பர்த்தாவே யாவார். எவ்வளவு அலசி ஆராய்ந்து பார்த்தும், பர்த்தாவைவிட மிக நெருங்கிய விசேஷமான உறவினரை நான் பார்க்கவில்லை' என்று பல யுகங்களாய் ஜீவித்துவரும் அனஸூயை கூறுகிறாள். ஆகையால், ஸ்த்ரீகளுக்கு பர்த்தாவை அடைந்து பதியினிடத்தில் ப்ரியமாக ஸேவை செய்வது ஒன்றே மோக்ஷ மார்க்கமாகும்.

தக்ஷனுடைய 60 பெண்களின்மூலம் தான் மூவுலகங்களிலும் ச்ருஷ்டி ஏற்பட்டது.

नामधेयान्यमूषां त्वं सापत्यानां
च मे शृणु॥
यासां प्रसूतिप्रसवैः लोका आपूरिता
स्त्रयः ॥
6-6-3

நாம தேயான்ய மூஷாம்த்வம்
ஸாபத்யானாம்ச மேச்ருணு
யாஸாம் ப்ரஸூதி ப்ரஸவை:
லோகா ஆபூரிதாஸ்த்ரய:

ஸ்ரீ சுகர் இந்த ச்லோகத்தைக் கூறுகிறார். 'எவர்களுடைய புத்ர பௌத்ரர்களினால் மூன்று உலகங்களும் நிறைந்து விட்டனவோ அவர்களுடைய பெயர்களை என்னிடமிருந்து தெரிந்து கொள்' என்று ஸ்ரீ சுகர் அந்த அறுபது பெண்களின் விருத்தாந்தங்களையும் விரிவாகச் சொல்லிக் கொண்டு போகிறார்.

இந்த அறுபது பெண்களிடமிருந்து தான் மீன் முதலிய ஜலத்தில் வசிக்கும் ஜீவராசிகள், பாம்பு, பல்லி முதலிய ஊர்ந்து செல்லும் ப்ராணிகள், கருடன் முதலிய பறவைகள், பசு, எருமை முதலிய நாலுகால் ப்ராணிகள், மனிதர்கள், தேவர்கள், அஸுரர்கள் முதலிய ஸகல ஜீவராசிகளும் உண்டாயின. இந்த அறுபது பெண்களில் திதி என்பவளுக்கு த்வஷ்டா என்ற புத்ரன் பிறந்தான். தைத்யர்களின் (அஸுரர்களின்) தங்கையான 'ரசனே' என்பவளை த்வஷ்டா மனைவியாக்கிக்கொண்டான். த்வஷ்டாவுக்கு ரசனையினிடத்தில் பிறந்த பிள்ளையே மஹா வேதவித்தான விச்வரூபன் என்பவன்.

விச்வரூபனுடைய கதை வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ம்ருதிகளுக்கும், புராணங்களுக்கும் ஆதாரம் வேதமே. வேதத்தில் சொல்லியிருப்பதற்கு மாறாக புராணங்களோ, ஸ்ம்ருதிகளோ ஒன்றையும் கூறா. வேதத்தை அனுசரித்தேதான் புராணங்களும், ஸ்ம்ருதிகளும் எழுதப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமத் பாகவதம் என்ற பக்தி க்ரந்தம் முழுக்க முழுக்க வேதத்தையும், வேத தத்துவத்தையும் அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டது. ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டிருக்கும் சம்பவங்களெல்லாவற்றிற்கும் வேதத்தில் ஆதாரம் உண்டு.

விச்வரூபனுடைய வரலாறு யஜுர் வேத ஸம்ஹிதையில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது:—

विश्वरूपोवै त्वाष्ट्रः पुरोहितो
देवानामासीत् स्वस्त्रियोऽसुराणां

விச்வ ரூபோ வை த்வாஷ்ட்ர:
புரோஹிதோ தேவானாமாஸீத்
ஸ்வஸ்ரியோ ஸுராணாம...

'விச்வரூபன் த்வஷ்டாவின் பிள்ளை. தேவர்களுக்குப் புரோஹிதன். அஸுரர்களுக்கு மருமான்......' என்று ஆரம்பித்து, இந்தக் கட்டத்தில் வேதம் ரஜஸ்வலையான ஸ்த்ரீ, தீண்டத் தகாத நாட்களில் எவ்வாறு இருக்கவேண்டும் என்று விவரித்துக் கொண்டு போகிறது.

இந்த விச்வரூபனைத்தான் ஸ்ரீ நாராயண நம்பூதிரி 'தௌஹித்ரஸூனு:' (பெண் வயிற்றுப் பேரனின் பிள்ளை) அதாவது தக்ஷனுடைய பெண்ணின் பிள்ளையான த்வஷ்டாவின் பிள்ளை என்று கூறியிருக்கிறார்.

இவ்வாறு புராணங்களும், ஸ்ம்ருதிகளும் வேதத்தை அனுசரித்தே செல்கின்றன என்பதை காளிதாசன் வெகு அழகான உபமானத்துடன் வர்ணிக்கிறான்.

मार्गं मनुष्येश्वर धर्मपत्नी
श्रुतेरिवार्थं स्मृतिरन्वगच्छत् ।

மார்கம் மனுஷ்யேச்வர தர்ம
பத்னீ
ச்ருதே ரிவார்த்தம் ஸ்ம்ருதிரன்
வகச்சத்

திலீபன் என்ற அரசன் வசிஷ்ட முனிவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தான். வசிஷ்டருடைய ஆச்ரமத்தில் காமதேனு என்ற பசு வெகு காலம் வசித்து வந்தது. காமதேனுவின் கன்றுக்கு நந்தினி என்று பெயர். திலீபன் நந்தினியை தினசரி மேய்ச்சலுக்காக ஓட்டிக்கொண்டு போவது வழக்கம். அவ்வாறு செல்லும்போது தனது பர்த்தாவுடன் நந்தினியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி திலீபனுடைய மனைவியான ஸுதக்ஷிணை சென்றாளாம். ஸுதக்ஷிணை அந்த நந்தினியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்வதைத்தான் கவி காளிதாசன் பின்வரும் உபமானத்தால் விளக்குகிறான்:—'எவ்வாறு ஸ்ம்ருதியானது வேதத்தின் பொருளைப் பின்பற்றிச் செல்லுமோ, அதே மாதிரி திலீபனுடைய மனைவி நந்தினி சென்ற வழியைப் பின்பற்றிச் சென்றாள்.' திலீபன் புத்ரனைப் பெற வேண்டி இந்தப் பணிவிடையைச் செய்தான். திலீபனுக்கு காமதேனுவின் சாபம் ஒன்று இருந்ததால், அதைப் போக்கிக் கொள்வதற்காகக் காமதேனுவின் கன்றிற்கே பணிவிடை செய்யும்படி வசிஷ்டரின் ஆக்ஞையின்பேரில் திலீபன் நந்தினியைப் போற்றி ஆராதித்தான். இந்தப் பூஜையினால் பசுவின் சாபம் விலகி, திலீபனுக்கு நல்ல புத்ரன் பிறந்தான் என்பது மேற்கொண்ட கதை.

இந்த விச்வரூபன் வேத சாஸ்த்ரங்களில் தேர்ச்சி பெற்று விளங்கினான். இந்திரன் விச்வரூபனை குருவாக அடைகிறான். இந்த விருத்தாந்தம் மிகவும் சுவாரஸ்யமானது. ஸ்ரீமத் பாகவதத்தில் இது விரிவாக வர்ணிக்கப்படுகிறது.



"ஓய் அப்பா! இப்போ எனக்கு, அன்னையும்-பிதாவும் முன்னறி தெய்வம்கற சினிமா பார்க்கக் காசு தரப் போறியா இல்லையா?"

ஒரு சமயம் இந்திரன் தனது பட்டமஹிஷியான இந்திராணியுடன் ஸிம்மாஸனத்தில் உட்கார்ந்து, இந்திர சபையில் நடந்துகொண்டிருந்த அப்ஸரஸ்ஸுகளின் நடனத்தையும், கானத்தையும் ரசித்துக்கொண்டிருந்தான். அப்ஸரஸ்த்ரீகளின் ரூப லாவண்யத்திலும், அவர்களுடைய கானத்திலும், ந்ருத்யத்திலும் இந்திரன் அப்படியே மயங்கிக் கிடந்தான். அந்த சமயம் இந்திரனுடைய குருவான ப்ருஹஸ்பதி அந்த ஸபையில் நுழைந்தார்.

वाचस्पतीं मुनिवरं सुरासुर
नमस्कृतम् ।
नोचचालासनादिन्द्रः पश्यन्नपि
सभागतम् ॥

ततोनिर्गत्य सहसा कविः आङ्गिरसः प्रभुः ।
आययौ स्वगृहं तूष्णीं विद्वान् श्रीमदविक्रियाम् ॥

ஸ்ரீமத் பாகவதம் 6-7-8. 9

வாசஸ்பதிம் முனிவரம் ஸுராஸுர நமஸ்க்ருதம்
நோச்ச சாலா ஸனுதிந்த்ர: பச்யன்னபி ஸபாகதம்
ததோ நிர்கத்ய ஸஹஸா கவி: ஆங்கிரஸ: ப்ரபு:
ஆயயௌ ஸ்வ க்ருஹம் தூஷ்ணீம் வித்வான் ஸ்ரீமத விக்ரியாம்

முனிகளுக்குள் சிறந்தவரும் சிறந்த ஞானியுமான ப்ருஹஸ்பதி இந்திர ஸபைக்குள் நுழைந்ததை இந்திரன் பார்த்தான். இருந்தும் பார்க்காததுபோல் இருந்துவிட்டான். தன் ஆஸனத்திலிருந்து எழுந்து, தனது குருவுக்கு ஆஸனம் முதலியவை கொடுத்து, அவரை வரவேற்று உபசரிக்கவில்லை. சிறந்த கவியும் ப்ரபுவுமான ப்ருஹஸ்பதி இந்திரனுடைய இந்த அவமதிப்பை அறிந்து கொண்டார். பணத் திமிரால் ஏற்படும் விகாரம் இத்தகைய அவமதிப்பைச் செய்யத் தூண்டியது என்பதையும் அறிந்தார். உடனே பேசாமல், மௌனமாய் வந்த வழியே திரும்பித் தன் வீட்டை அடைந்தார்.

இவ்விடத்தில் ஆபஸ்தம்ப முனிவர் 'பெரியோர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்' என்பதைக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

'வயதிலும், சீலத்திலும், ஞானத்திலும் முதிர்ந்த பெரியோர்கள் நம் இருப்பிடத்திற்கு வந்தால், நாம் உடனே நமது ஆஸனத்தைவிட்டு எழுந்துவிட வேண்டும். உடனே அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரிக்க வேண்டும். பிறகு அவர்களுக்கு ஆஸனம் கொடுத்து உட்காரச் சொல்லி உபசரிக்க வேண்டும். இவ்வாறு பெரியோர்களைக் கண்டு எழுந்திராமல் அவர்களை அவமதித்தால், நம்முடைய ஆயுள் குறைந்து விடுகிறது' என்று ஆபஸ்தம்பர் குறிப்பிடுகிறார். அதாவது, நம்முள் இருக்கும் ப்ராணனாகிய மூச்சுக் காற்று வெளியில் சென்று ஆயுட்காலத்தைக் குறைத்து விடுகிறதாம். நாம் எழுந்து பய பக்தியுடன் வந்திருக்கும் பெரியவரை நமஸ்கரித்து உபசரிக்கும்போது, அவ்வாறு வெளியேறிக்கொண்டிருக்கும் ப்ராணனை அப்பெரியவரின் அனுக்ரஹம் பிடித்திழுத்து வந்து, நம்மிடத்தில் சேர்த்து விடுகிறது. அப்போது நமது ஆயுட்காலமும் நீடித்து விடுகிறது. பெரியோர்களை உபசரிப்பதால் நமக்கு ஆயுட்காலம் நீடிக்கும் என்று ஆபஸ்தம்பர்போன்ற ஞானிகள் கூறியிருப்பதை எல்லோரும் கவனத்தில் வைத்திருக்க வேண்டும்.

இந்திரன் எல்லாம் அறிந்தவன். இருந்தும் மமதையால் அவன் அறிவு மறைக்கப்பட்டுவிட்டது. ப்ருஹஸ்பதி மௌனமாக இந்திர ஸபையை விட்டு வெளியேறச் சென்றவுடன், இந்திரன் சுய புத்தியைப் பெற்றான். தான் செய்த மகத்தான குற்றத்தை உடனே உணர்ந்தான்.

तर्ह्येव प्रतिबुद्ध्येन्द्रो गुरुहेलनमात्मनः ।
गर्हयामास सदसि स्वयमात्मानमात्मना ॥

ஸ்ரீமத் பாகவதம் 6-7-10

தர்ஹ்யேவ ப்ரதி புத்யேந்த்ரோ குருஹேலன மாத்மன:
கர்ஹயாமாஸ ஸதஸி ஸ்வய மாத்மான மாத்மனா

'தக்ஷணமே இந்திரன் தன்மூலம் குருவுக்கு நேர்ந்த அவமரியாதையை உணர்ந்தான். சபையில் தன்னைத் தானே நிந்தனை செய்துகொண்டான்.' என்ன நொந்துகொண்டாலும் தவறு நடந்தது நடந்துவிட்டது. அதன் பலனை அனுபவித்துத்தானே ஆக வேண்டும்? தான் செய்த அபசாரத்திற்கு ப்ருஹஸ்பதியிடம் மன்னிப்புக் கோர விரும்பினான், இந்திரன்.

(தொடரும்)





கிழக்கு பாகிஸ்தானில் இந்தியாவின் உதவி ஹை கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீ வி. வி. கிரிஜெட் சமீபத்தில் அந்த ராஜ்ய கவர்னரிடம் தம் அதிகாரப் பத்திரத்தைச் சமர்ப்பித்தார்.



நந்தகோட் மலைச் சிகரத்தில் தேசியக் கொடியை நடத் தாங்கள் உபயோகித்த கோடரியை நேருஜிக்குப் பரிசாக அளித்தார், கடற்படை மலையேறும் கோஷ்டித் தலைவரான ஸ்ரீ எம். எஸ். கோஹ்லி

Regd. No. 2514.
Registered as a Newspaper in CEYLON.






Printed and Published by N. Rajagopalan at the 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road, Madras Editor: C. R. Srinivasan B. A





இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் இலங்கை விஜயத்தை முன்னிட்டு கொழும்புவில்; இந்திய ஹைகமிஷனர் ஒரு வரவேற்பு விருந்தளித்தபோது எடுத்த படம்.



சென்னை மேயர் ஸ்ரீ ஏ. பி. அரசுக்கு ஜூன் 18ந்தேதி கோவை நகர சபை சார்பில் ஓர் வரவேற்பு பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. படத்தில் அவருக்கு நகர சபைத் தலைவர் ஸ்ரீ என். பூபதி பத்திரத்தை அளிக்கிறார்.


# Parry's பாரீஸ் சர்க்கரை

## நியாய விலைக் கடைகள்

ஈஸ்ட் இந்தியா டிஸ்டில்லரீஸ்—பாரி தொகுதியைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகள் கீழ்க்கண்ட இடங்களில் **நியாய விலைக் கடைகள்** நடத்துவதற்கு நம்பகமான சில்லறை விற்பனையாளர்களை நியமித்திருப்பதுபற்றி மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றனர். இந்தக் கடைகளில் பொதுஜனங்களுக்கு **சர்க்கரை 3-1/8 பவுண்டுகளைக்கொண்ட விசை 1-க்கு ரூ. 1-63, அல்லது பவுண்டு 1-க்கு 52 ந. பை. அல்லது கிலோக்ராம் 1-க்கு ரூ. 1-15 இதற்கு மேற்படாத விலைகளில் விற்கப்படும்.**

**சென்னை ராஜ்யம்:** காஞ்சீபுரம், சிதம்பரம், கடலூர், கோயமுத்தூர், திண்டுக்கல், கும்பகோணம், சென்னைநகர் மாயவரம், மதுரை, பொள்ளாச்சி, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, வேலூர் மற்றும் விருதுநகர், சென்னை நகரில் திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேட்டிவ் சொஸைட்டி (டி யூ. ஸி எஸ்) யின் அறுபது கிளைகளிலும் விசை 1-க்கு ரூ. 1-62 விதம் சர்க்கரை கிடைக்கும்.

**கேரளம்:** ஆலப்புழை, கோழிக்கோடு, கொச்சி, செங்கணச்சேரி, பாலக்காடு, கொல்லம், திருவனந்தபுரம், திருச்சூர் மற்றும் தலைச்சேரி.

இவ்விரு ராஜ்யங்களிலுள்ள மற்ற முக்கிய ஊர்களிலும் நியாய விலைக் கடைகளை திறக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

# பொருளடக்கம்

Vol: XXX] [No 22.
விகாரி௵ ஆனி 14. ஜூன் 28.

தலை தூக்கும் தருவாயில் அடி 3
மக்கள் மன்றம் 5
அரசியல் துக்கடா 7
பம்பாய் தபால் 8
இசை அரங்கு —நீலம். 10
தலைநகர்த் தபால் 12
விழிப்பு —கே. ஆர். மீனாட்சி 13
இன்பம் எங்கே?
—சரோஜா ராமமூர்த்தி 24
நட்சத்திர பேட்டி 32
செய்யாத குற்றம்
—வி. எஸ். சரவணபவன் 34
ஆபத்துக்குக் காதல் இல்லை!
—வாசவன் 40
நஷ்ட ஈடு —ராசு. 46
தியாகி —ராஜ் 51
வாழ வைத்தவள் —ஆர். ஏ. கே. 58
அருணஜடையின் ஆவி
—விக்கிரமன் 69
தர்ம ராம வர்மன் —எம். எஸ். 79
பாடகி —கே. பி. நீலமணி 84
தீமையிலும் நன்மை —சு. ரா. 101
காயா பழமா?
எஸ். விஜயராகவன் 108
அஷ்டபதி கீர்த்தனை
—செம்மங்குடி ஸ்ரீநிவாஸ அய்யர் 115

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

★

# தலை தூக்கும் தருவாயில் அடி

கைத்தறி ஜவுளி விற்பனை விஷயத்தில் தற்போதுள்ள பிரத்தியேக ரிபேட்டை (கழிவுத் தொகையை) குறைப்பதென்று மத்திய சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர். அதாவது அந்த ரிபேட் விகிதத்தை (ரூபாய்க்கு) 6 நயே பைஸேவிலிருந்து 4 நயே பைஸேவாகக் குறைத்துவிடப்போவதாக மத்திய வர்த்தக—தொழில் மந்திரி அறிவித்துள்ளார். இந்த ரிபேட்டும் வருஷத்தில் இரண்டு வாரங்கள் மட்டுந்தான் அனுமதிக்கப்படுமாம். கைத்தறி நெசவாளருக்கு இச்செய்தி ஆழ்ந்த ஏமாற்றமுண்டாக்கும். சுமார் ஒன்றரை கோடி மக்களுக்கு இத்தொழில் பிழைப்பளித்து வருகிறது. இவர்களில் ஒரு கணிசமான பகுதியினர் சென்னை ராஜ்யத்திலிருப்பவர்கள். எனவே, குறிப்பாக சென்னை சர்க்கார் மத்திய அதிகாரிகளின் முடிவை மாற்ற ஜரூரான நடவடிக்கை எடுத்துக்கொள்வது அவசியம்.

கைத்தறித் தொழில் எப்போதும் வெளி உதவியைப் பொறுத்ததாயிருக்கக்கூடாது; சொந்த பலத்தைக் கொண்டே செழிக்க வகை காணவேண்டும் என்பது கொள்கை அளவில் யாரும் ஏற்கக் கூடியதே. ஆனால், இத்தகைய நிலையை அது படிப்படியாகத்தான் அடைய முடியும் என்பதை பிரத்தியட்ச உணர்வுள்ளவர்கள் மறுக்க முடியாது. கைத்தறி ஜவுளி உள்நாட்டிலும், வெளியிடங்களிலும் மில் ஜவுளியின் போட்டியைச் சமாளிப்பது சுலபமல்ல. சில வருஷங்களுக்கு முன் கைத்தறித் தொழில் நசிந்துவிடுமோ என்ற அஞ்சத்தக்கதொரு நிலைமை ஏற்பட்டிருந்தது. சர்க்காரும், இத்தொழிலில் ஈடுபட்டவர்களும் சேர்ந்து எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளால் அது ஒருவாறு மீண்டும் தலைதூக்க ஆரம்பித்திருக்கிறது. இதே ரீதியில் சர்க்கார் கைகொடுத்தால், அத்தொழில் நிலையாக ஊன்றிக்கொள்ளுமென்ற நம்பிக்கை ஓங்கியுள்ள இச்சம

யத்தில் மத்திய சர்க்கார் மேற்கண்டவாறு முடிவு செய்திருப்பது வருந்தத்தக்கது.

தற்போதைய ரிபேட்டுடனேயே கைத்தறி ஜவுளி மற்ற ஜவுளி வகைகளுடன் வெற்றிகரமாகப் போட்டியிட முடியவில்லை. எப்படியும் இந்த ரிபேட் நீடிக்கவேண்டியது அவசியமென்று சமீபத்தில் சென்னையில் நடந்த தென்னிந்திய கைத்தறித் தொழில் அரங்கில் பங்கெடுத்துக்கொண்ட பலர் வலியுறுத்தினர். ரிபேட் தொகையை மத்திய சர்க்கார் மான்யமாகக் கொடுத்து உதவுவதென்ற ஏற்பாடு இத்தொழில் தலைதூக்க உதவிகரமாயிருந்திருக்கிறதென்பதை மத்திய வர்த்தக-தொழில் மந்திரியும் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால், அதற்கு வெளி உதவி, அதாவது சர்க்காரது மான்யம் நீடித்துக்கொண்டிருக்கும்வரை, அந்த முறை உண்மையில் அத்தொழிலுக்கு ஆக்கமளிக்காது என்று அவர் கூறுகிறார். ஆனால், திடீரென்று அந்த உதவியை நிறுத்திவிடுவதால் அத்தொழிலின் கதி என்னாகுமென்பதை அவர் யோசித்ததாகத் தெரியவில்லை. வெளி உதவியின்றி அத்தொழில் சமாளித்துக்கொள்ள முடியுமென்று எண்ணத்தக்க நிலையில் அவ்வுதவியை நிறுத்துவது அல்லது குறைப்பது பற்றி யோசிப்பது பொருத்தம். தற்போதைய நிலையில் உதவியைக் குறைத்தால் அவ்வளவுக்கவ்வளவு விற்பனை குறையும்; அதற்கேற்ப உற்பத்தி பாதிக்கப்பட்டு அந்த அளவுக்கு நெசவாளரிடை வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டே தீரும். எனவே, மத்திய அதிகாரிகள் ரிபேட்டை குறைக்கும் எண்ணத்தை இப்போதைக்குக் கைவிட வேண்டுகிறோம்.

இதே சமயத்தில் கைத்தறி நெசவாளரும் இன்னும் விழிப்புடன் தங்கள் தொழில் முறைகளைக் காலத்திற்கேற்ப திருத்தியமைத்துக்கொள்வதில் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். கைத்தறி ஜவுளி ரகங்கள் மக்களின் அவ்வப்போதைய ருசிக்கேற்ப மாற வேண்டும். அதோடு அவற்றின் தரம், விலை இரண்டும் கவர்ச்சிகரமாயிருந்தால்தான் அத்தொழில் மேன்மேலும் செழிக்க முடியும். இதற்குக் கூடியவரை இயந்திர சாதனங்களைக் கையாள்வது உபயோகமாயிருக்குமா என்பதைப்பற்றிய ஆலோசனையில் வீணான வெறுப்பு, விருப்புகளைப் புகுத்தக்கூடாது. இயந்திர சாதனங்கள்மூலம் உற்பத்தி அதிகரிக்குமாதலின், நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் கணிசமாக உயரலாம். ஆனால், அதனால் அத்தொழிலில் தற்போதுள்ளவர்களில் ஒரு பகுதியினர் வேலையிழக்க நேரும் என்று சொல்லப்படுகிறது. மேன்மேலும் உற்பத்திப் பெருகி அதற்கேற்ப அந்த ஜவுளிக்குக் கிராக்கி அதிகரிக்கும் நிலையில், உண்மையில் அவர்களிடை வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படக் காரணமில்லை.

# மக்கள் மன்றம்

மித்திரன் ஆசிரியருக்கு மித்திரன் வாரப்பதிப்பின் நண்பன் டி. என். முகம்மதப்துல் காதர் வரைவது யாதெனில், தங்கள் வாரப் பதிப்பில் வரும் நட்சத்திரப் பேட்டி, திரையில் கண்டிராத காட்சிகள் என்ற இரண்டும் பலே ஜோராக இருக்கிறது. நட்சத்திர பேட்டியில் புரட்சி நடிகரும், இலட்சிய நடிகரும் எப்போது வருவார்கள் என்பதை வாரப் பதிப்பு மக்கள் மன்றத்தில் கூறவும். இத்துடன் சினிமா நடிகர்களின் வாழ்க்கை வரலாற்றையும் சேர்த்தால் தொடர்ந்து மித்திரன் வாரப்பதிப்பை பிரியர்கள் வாங்கிப் படிக்க இயலும். ஆகையால் என் வேண்டுகோளுக்கிணங்க, அதை முயற்சித்து செய்யவும். அத்துடன் சினிமா கேள்வி—பதிலும் சேர்க்கவேண்டும் என்றும் எல்லோர் பிரியர்கள் வேண்டுகின்றோம். தவணை தவறாமல் வாரப்பதிப்புக்குக் கட்டணம் கட்டிவிடுகிறோம்.

டி. என். முகம்மதப்துல் காதர்,
எல்லூர்.

ஃ ஃ ஃ

மித்திரன் 7-6-59-ம் தேதி இதழில் வெளியான கதைகளில் ரசவாதியின் 'கதவு' ரசமான கதை. 'பாவாடை, சட்டைகள் பாத்திரக்காரனிடம் போய் இனி எவர்சில்வராக இருக்கவேண்டியவள்தானடா!' என்று தந்தை கதறும் இடம் ரசவாதியின் எழுத்துக்களின் மூலம் வாசகனையும் கண்ணீர் விடச் செய்துவிடுகிறது. ஸ்ரீ பில்லூர் சுந்தரராமனின் 'துடைகாலி'யில் வாசகனுடைய முழு அனுதாபத்திற்கும் ஆளாகிவிட்டவள் அந்தச் சமையற்காரி. புது வழியில் நடைபோடுகிறது மித்திரன். ஸ்ரீ மா. ரு. நெடுமாறனின் 'மோனம்' நடையில் லா. ச. ராவை நினைப்பூட்டுகிறார். கதையின் 'கருவில்' புதுமையில்லையே! கதையின் பிற்பகுதியின் முடிவில் 'ஊமைப்' பெண் என்று கதாநாயகன் தெரிந்து கொண்டு விட்டுச் செல்வது, பல கதைகளில் படித்தாகிவிட்டது. கருவின் பலஹீனத்தை— நடையில்— வர்ணனையில்—மறைத்துவிட்டார். பரவாயில்லை. மொத்தத்தில் மித்திரனில் இதழுக்கு இதழ் புதுமை மணம் கமழ்கின்றது.

ஸ்ரீ. அனந்தகிருஷ்ணன்,
(இளஞ்சோழன்.)

ஃ ஃ ஃ

7-6-59 சுதேசமித்திரன் வார இதழ் கண்டேன். ராமுவின் கைவண்ணம் ஆர்ட் காகிதத்தில் வெகு அழகாக அமைந்திருந்தது. இனிமேலும் தொடர்ந்து அட்டை ஆர்ட் பேப்பரிலேயே போட்டு பக்கங்களும் குறையாமல் வந்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

தலைநகர் தபால், நட்சத்திர பேட்டி, இலங்கை லிகிதம், அரசியல் தூக்கடா, கார்டூன் இவைகள் மித்திரனை அலங்கரிக்கும் அணிகலன்கள்!

'சிற்ப கலை'—அற்புதம். பக்தி சம்பந்தமான ஓர் பகுதியையும் அட்டைப் படக் கதையும் அவ்வப்போது போட்டுவிட்டால், இனி மித்திரன் தற்போது தமிழகத்தில் அதிகமாக விற்பனையாகி வரும் மாதம் முந்நாள் பத்திரிகையை அடுத்து விற்பனையாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

செ. ரா. கி. ரோசை.

'மங்கள வாத்தியம்' என்ற குஜராத்தி கதையும் துரோக கூண்டு,—என்ற அசுவத்தாமாவின் படைப்பும் அற்புதம். நான் அதை ரசித்து படித்தேன்.

துரைராஜின் துணிகரமான புதுமுக அறிமுகம் பாராட்டுக்குரியது. ஒவ்வொரு படாதிபதிகளுக்கும் இப்படி துணிவு ஏற்பட்டால்! லட்சக்கணக்காக கேட்கும் நடிகை, நடிகர்களுக்கு ஓர் படிப்பினையாகும்.

திருமதி நெல்லை இஸ்மாயில்,
சென்னை-2

"அதை முதலில் கவனிப்போம்"



# அரசியல் குக்கரா..

ஆயுதம் தாங்கிய சுமார் 150 பாகிஸ்தானிகள் இந்திய எல்லைக்குள் புகுந்து 100க்கு மேற்பட்ட கால்நடைகளைத் தூக்கிச் சென்றனர்.

—ஒரு செய்தி.

'சண்டைக்கு எடுபிடி மாடு பிடி' என்பது சரியாகத்தானிருக்கிறது.

ஃ ஃ ஃ

'கேரளத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகச் செய்தி அதிர்ச்சியளித்தது. நீதிமன்ற விசாரணை நடத்தப் போவதில்லை என்று முதன் மந்திரி சொன்னது மேலும் அதிர்ச்சியளித்தது.'

—டாக்டர் கோஷ்.

நீதிமன்ற விசாரணை நடத்தி விட்டு, நீதிபதியின் முடிவைக் குப்பைத் தொட்டியில் போடுவதைவிடக் குறைந்த அதிர்ச்சியளிப்பதல்லவா இது?

ஃ ஃ ஃ

ஜெனிவாவில் இதுவரை கூடியுள்ள எல்லா வல்லரசு மகாநாடுகளும் வெற்றியடையாமல் முறிந்து போயிருக்கின்றன. இதற்கு என்ன செய்யலாம்?

—ஒரு அரசியல்வாதி.

சென்னைக்கு அருகில் உள்ள புத்தூரில், வல்லரசுகள் மகாநாடு நடத்தினால், முறிந்துபோன உறவுகள் எல்லாம் ஒன்று சேரும் என்று ஒருவர் யோசனை கூறுகிறார்!

ஃ ஃ ஃ

சென்னை கோணி வியாபாரிகள் தங்கள் குறைகளை ராஜ்ய, மத்ய சர்க்கார்களை அணுகித் தெரிவிக்கப் போகிறார்கள்.

—ஒரு செய்தி.

அவிழ்த்துக் கொட்டி அளப்பதற்குத் தயார மூட்டைகள் பல இருக்கும்போது நாணிக் கோணிக்கொண்டு நின்றால் கட்டுபடியாகுமா?

நாட்டில் மலேரியா (குளிர் நடுக்க ஜுரம்) அநேகமாக ஒழிக்கப்பட்டு விட்டது.

—நேருஜி.

அதே சமயத்தில், அரசியல் தலைவர்களையும், சர்க்கார் அதிகாரிகளையும் கண்டு பொது ஜனங்கள் அஸ்தியில் ஜுரத்துடன் நடுங்குவது அதிகரித்து இருக்கிறதே!

ஃ ஃ ஃ

சோற்றுப் பிரச்னை தீர தி. மு. கழகத்தார் என்ன செய்தனர்?

—ஸ்ரீ காமராஜ்.

ஏகாதசி, அமாவாசை, சனிக்கிழமை, கிருத்திகை போன்ற தினங்களில் 'ஒருபொழுது' இருப்பதில் அவ்வளவாக நம்பிக்கை இல்லாதவர்களால் எவ்வளவு தூரம் சோற்றுப் பிரச்னையைத் தீர்க்க முடியும்?

ஃ ஃ ஃ

'ஜனநாயகத்தில் தரம்தான் முக்கியமே தவிர, எண்ணிக்கை அல்ல!'

—நேருஜி.

ஜனநாயகத்தில் எண்ணிக்கைதான் முக்கியமென்று நினைத்துக்கொண்டுள்ள நாம் இத்தகைய வியாக்யானத்தை முதல் தரமாகக் கேள்விப்படுகிறோம்!

ஃ ஃ ஃ

ஸ்டேடியம் அருகிலுள்ள குளத்தில் சிறுவன் பிரேதம் மிதந்தது. ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும்போது சிறுவன் மாண்டான். போலீசார் புலன் விசாரிக்கின்றனர்.

—சில செய்தித் தலைப்புகள்.

சிறுவன் இறந்து போவதற்குமுன்பு, அவன் பிரேதம் குளத்தில் மிதந்தது எப்படி என்பதையும் புலன் விசாரிப்பார்களா?

# பத்து வருடங்களில் மாறுதல்

## நடிகை மதுபாலாவின் வாழ்க்கை விவரம்

☆

பத்து வருடங்களில், மனித ஸ்வபாவம் எவ்வளவு மாறுதல்களையும் முன்னேற்றத்தையும் அடைகின்றன என்பதை சினிமா நடிகை குமாரி மதுபாலா தம் வாழ்க்கையைக்கொண்டே 'கல்லின் மேல் எழுத்தைப்போல்' காண்பித்திருக்கிறார்.

பத்து வருடங்களுக்கு முன், குமாரி மதுபாலாவை நான் பேட்டி காணச் சென்றபோது, அவருடைய தகப்பனார் ஸ்ரீ அட்டவுல்லா கான் சொன்னார், 'மது ஒரு சிறிய குழந்தை. ஏதோ சினிமாவில் திடீரென்று புகழ்வந்து விட்டது. பத்திராசிரியர்களிடம் பேசவே தெரியாது. வினாக்களுக்குத் தகுந்த பதில் கொடுக்கவே தெரியாது. அவளுக்கு சினிமா ஸ்டுடியோவும், நாங்கள் குடியிருக்கும் வீடுதான் தெரியும். நான் கீறியக் கோட்டை மீறி நடக்கமாட்டாள்.' 'ஆஹா, என்ன நல்ல பெண் உங்கள் பெண்' என்று நான் அவருடன் தாளம் போட்டேன்.

அதே தகப்பனார், இப்பொழுது சொல்கிறார், 'மதுபாலா இப்பொழுது அனுபவம் வாய்ந்த ஸ்திரீ. அவளே கஷ்டப்பட்டு உழைத்து சினிமாவில் முன்னுக்கு வந்திருக்கிறாள். பேச்சில் எல்லோரையும் வெல்லுகிறாள். உலகம் அறிந்தவளாகப் போய்விட்டாள். வயது வாய்ந்த ஸ்திரீயாக மாறிவிட்டதால், அவள் இஷ்டப்படி என்னைக் கேட்காமலேயே, அவள் வேலையின் நிமித்தமோ, நண்பர்களின் நிமித்தமோ எங்கே வேண்டுமானாலும் செல்கிறாள். இப்பொழுதெல்லாம் நான் அவளைக் கட்டுப்படுத்துவதே கிடையாது. அப்படிச் செய்யவும் முடியாது. அவள் இஷ்டம் என் விருப்பம்.'

மேற்சொன்ன வார்த்தைகள் மிகவும் உண்மையான வார்த்தைகள் என்று என்னைப்போல் சென்ற பத்து, பதினொரு வருடங்களாக குமாரி மதுபாலாவின் வாழ்க்கையைக் கவனித்து வந்தவர்களுக்கு நன்றாகப் புலப்படும். பத்து வருடங்களுக்கு முன் குமாரி மதுபாலாவுக்கு ஆங்கிலம் துளிகூடப் பேசத் தெரியாது. இப்பொழுது ஆங்கிலத்தில் மிகவும் அலட்சியமாகவும், சுத்தமாகவும் சம்பாஷிக்கிறார். அவருடைய பழைய வெட்கம் இப்பொழுது பறந்தோடி விட்டது. முன்னே பத்திராசிரியர்களிடமிருந்த வீண் பயம் நீங்கி, அவர்களிடம் தைரியமாக மனதை விட்டுப் பேசுகிறார்.

சென்ற பத்து வருடங்களில் குமாரி மதுபாலாவின் நடிப்புத் திறமை எவ்வளவோ செழித்து வளர்ந்திருக்கிறது. குறுகின மனப்பான்மை நீங்கி, தற்சமயம் பரந்த நோக்கங்களுடன் அழகு, கலை, புத்தி கூர்மை, யௌவனம், அனுபவம் எல்லாம் நிறைந்த ஒரு தெய்வப் பிறவியைப்போல் தோன்றுகிறார். சாதாரணமாக மதுபாலா கொஞ்சம் கூட சிரிக்கமாட்டார். எப்பொழுதும் 'கருமமே கண்ணாயினார்' என்பது போல், தம் வேலையிலேயே ஈடுபட்டிருந்தார். நல்ல உழைப்பாளி. அவரை நண்பராக அடைவது அவ்வளவு சுலபமல்ல. ஆனால், அவரை சாதுர்யமாக பேச வைத்து விட்டால், அவர் ஒரே ஊக்கத்துடன் பேச ஆரம்பித்துவிடுவார். அவர் பேச ஆரம்பித்து விட்டால், கொஞ்சத்தில் நிறுத்த மாட்டார். அதேபோல், அவர் சிரிக்க ஆரம்பித்து விட்டாலோ அவருடன் சேர்ந்து எல்லோரும் சிரிக்கும்படி நேரும்.



குமாரி மதுபாலா

# இசை அரங்கு

[ நீலம் ]

சுத்தமான வழியில் உள்ள சங்கீதத்தைக் கற்று, கற்ற வித்தையை தீவிரமான சாதக பலத்தால் சொந்தமாக்கிக்கொண்டு அபிவிருத்திக்கான அம்சங்களைப் பதவிசான முறையில் உணர்த்திப் பாடுபவர்கள் தொகை ரொம்பக் குறைவு. தொகையில் குறைந்தவர்களாயினும் அவர்களுடைய இசைக்கு அலாதியான மதிப்பு உண்டு.

சென்ற வாரம் திருவல்லிக்கேணி ஆர்ட்ஸ் அகாடமியில் கச்சேரி செய்த குமாரிகள் ராஜலட்சுமியும், மீனாட்சியும் தாங்கள் தாயமுறையில் பயிற்சி பெற்றவர்கள் என்பதை முதலெடுப்பிலேயே உணர்த்தினார்கள். நல்ல பாடாந்தரத்தின் பயனைப் பெற்றுள்ள இருவரும், கீர்த்தனைகளை அனுபவித்துப் பாடினார்கள். குமாரி ராஜலட்சுமியின் அன்றைய சாரீர நிலை கன, நயங்களை விவரமாகவும் விறுவிறுப்புடனும் வெளியிடும்படி. உதவுபடிகளுடன் இயங்கா விடினும் உழைப்பினால் அவருக்கேற்பட்டிருக்கும் பலம் பெருந்துணையாக நின்று பாட்டுக்கு புஷ்டி தந்தது. இனிமையாக உருப்படிகளையும் ஸ்வரப் பிரஸ்தாரங்களையும் கையாண்டார்.

கணீரென்று இயங்கும் கண்டத்வனி படைத்த குமாரி மீனாட்சியோடு பாடப் பெற்ற கீர்த்தனைகள் கவர்ச்சி பெற்றன. வர்ணத்தை அடுத்து இரண்டு மூன்று உருப்படிகளைப் பாடிய பின்னர், பந்துவராளி ராக ஆலாபனை மிதமான முறையில் செய்யப்பட்டது. இதன் ஜீவகளையை ஒவ்வொரு இடத்திலும் பிரகாசம் பெறும்படி செய்தது குறிப்பிடத்தக்கது.

பாடிய உருப்படிகளுள் கேதார கௌளமும், சுத்த சாவேரியும் சுவையோடும், பாவச் செறிவோடும் அமைந்தன.

குமாரி மீனாட்சி, காம்போஜி ராக ஜோடனைக்காகப் போட்டுக்கொண்ட திட்டம் நேர்மையானது; பெரிய பாணியிலும் இருந்தது. ஆனால், ராகங்களுக்குக் களையூட்டி ரூபம் கொடுத்து, விசிறி விட்டுப் பாடித் திருப்தி தருவதற்கான பக்குவம் கிட்டுவது நிறைந்த அனுபவத்தைப் பொறுத்த விஷயம். ஊக்கமும் உழைப்பும் உள்ள இவ்விரு சகோதரியருக்கும் அவ்வனுபவம் ஏற்பட யதேஷ்டமான சந்தர்ப்பங்கள் நிச்சயம் உண்டு.

'மரகதவல்லீம்' தீட்சிதர் கிருதி தரம், விரிவாக ஸ்வரப் பிரஸ்தாபங்களைச் செய்தார்கள். குமாரிகள் இருவரும் பிரபல எழுத்தாளர் ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி அவர்களின் புதல்வியர்.

ஸ்ரீமதி கமலா சர்மா திருப்திகரமாக பிடிலில் தம்முடைய பயிற்சித் திறமையைக் காட்டினார். ஸ்ரீ துரைராஜய்யர் மிருதங்கத்தில் தக்கவாறு உதவி புரிந்தார்.



குமாரிகள் ராஜலட்சுமி, மீனாட்சி

---

அவரிடம் வெகு நேரம் பேசினால்தான் அவரைப் புரிந்துகொள்ள முடியும்.

குமாரி மதுபாலாவை நான் சமீபத்தில் சந்தித்தபோது, அவர் சொன்னார், 'என்னை சாதாரணமாக ஒருவரும் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. ஸ்வபாவமாக நானாகவே மேல் விழுந்து ஒருவரிடமும் பேசப் போகமாட்டேன். இதை அநேகர் 'கர்வம்' என்று தப்பாக எண்ணுகிறார்கள். கர்வம் ஒருவரின் வீழ்ச்சியின் அறிகுறி யென்று எனக்குத் தெரியும். சென்ற பத்து வருடங்களில் நான் எவ்வளவோ மாறுதல்களையும், முன்னேற்றத்தையும் அடைந்திருக்கிறேன். வாழ்க்கையில் எவ்வளவோ ஏமாற்றங்களையும், அனுபவங்களையும் பெற்றிருக்கிறேன். நடிப்புக் கலையில் என் ஆயுள்வரை தொண்டு செய்ய எனக்கு ஆசை. அந்த ஆசையைப் பூர்த்தி செய்ய, என் தோழர்களின் ஒத்துழைப்பும், ஈசனின் அருளும்தான் தேவை.'

குமாரி மதுபாலாவுக்கு தற்சமயம் 26 வயதாகிறது. அவருடைய சொந்த பெயர் மும்தாஜ். அவர் ஐந்து வயதிலிருந்தே 'பசந்த்' என்ற படத்தில் நடிக்க ஆரம்பித்து 'நீல்கமல்' என்ற படத்தில் ஸ்ரீ ராஜ்கபூருடன் கதாநாயகியாக நடித்தார். பிறகு 'மஹால்' என்ற படத்திலிருந்து அவருக்கு நல்ல புகழ் கிடைத்தது. அவர் இதுவரையில் சுமார் 60 படங்களில் நடித்திருக்கிறார். சமீபத்தில் வெளிவந்த அவருடைய படங்களில் 'காலாபானி' 'சல்திகா நாம் காடி' என்பவைகளைச் சொல்ல வேண்டும். அவர் தற்சமயம் 'ஜ்வாலா' 'தொபி' என்ற படங்களில் நடித்து வருகிறார்.

—ஸ்ரீ மா ராமச்சந்திரன்.

## தொழிலுக்குப் பாராட்டு

தமிழ்ப் பத்திரிகை உலகில் 'தொழில்' ஒரு புது முயற்சி என்று திரு. அ. வே. குப்புசாமி, சென்ற வாரத்தில் 'தொழில்' பத்திரிகையின் ஆசிரியர் திரு பெருமாள் உடையாரை வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டார். தில்லித் தமிழ்ச் சங்கம், தலைநகருக்கு வந்திருந்த 'தொழில்' ஆசிரியருக்கு ஒரு வரவேற்பு அளித்தது. சங்கத்தின் சார்பில் திரு பெருமாள் உடையாரை வரவேற்ற குப்புசாமி அவர்கள், அவரைப் பல ஆண்டுகளாகவே தமக்குத் தெரியும் என்றும் நல்ல நேர்மையாளர் என்றும் குறிப்பிட்டார். 'காங்கிரஸ்காரர் ஆயினும், மற்ற கட்சியினரும் விருப்புடன் வந்து கலந்து பழகக்கூடிய இனிய பண்புடையவர் என்றும் அவர் கூறினார். 'ஆட்சி மொழியாகத் தமிழ் உருவாகி வரும் இந்த நாளில், தொழில் முயற்சிக்கு உரிய இடந்தர அவர் முயன்று வருகிறார்' என்றும் அவர் சொன்னார்.

வரவேற்புக்குப் பதிலளித்த திரு பெருமாள் உடையார் 'தொழில்' பத்திரிகையைத் தோற்றுவிக்கவேண்டும் என்ற எண்ணம் தமக்கு ஏற்பட்டதற்கான காரணங்களை எடுத்துக் கூறினார். 'கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்' என்பது மகாகவியின் வாக்கு. பிற மொழிகளிலே, குறிப்பாக மேலைநாட்டு மொழிகளிலோ – வாழ்க்கையின் ஒவ்வொரு துறைக்கென ஒவ்வொரு பத்திரிகை. அதே போன்று ஒவ்வொரு தரத்தினர்க்கும் தனித் தனிப் பத்திரிகை. ஒரே பத்திரிகையில் பலவற்றையிட்டு நிரப்பும் பழக்கம் அங்கே குறைவு.

சுதந்திர பாரதம் தொழில் முயற்சியில் முன்னேற்றம் காண முயன்று வருகிறது. முதல் இரண்டு திட்டங்களும் தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. சிறு ரகத் தொழிலும், குடிசைத் தொழிலும் பெருக மேலும் வாய்ப்பளிக்கவேண்டும். மக்கள் மேலும் அதிகமாக, இதில் அக்கறை கொள்ளும்படி செய்யவேண்டும். அதற்குப் பத்திரிகைகள் நல்ல சாதனமாக அமையும். நம் நாட்டுக் கைத்தொழிலின் மேன்மையை நமது மக்களுக்கு எடுத்துக் கூறி, அந்தத் தொழில்களுக்கு ஊக்கம் அளிப்பதுதான் 'தொழில்' பத்திரிகையின் நோக்கம்' என்று திரு பெருமாள் உடையார் கூறினார்.

சங்கத்தின் செயலாளர் திரு ஸ்ரீநிவாஸன் நன்றி தெரிவித்தார். 'தொழில் சம்பந்தமான கலைச் சொற்களைத் தமிழில் கொண்டு வர முயலும் இது, சரியதொரு முயற்சியாகும்' என்று அவர் பாராட்டினார்.

## இலவச இசை

அள்ள அள்ளக் குறையாத இறையருள்போல, பருகப் பருகத் தெவிட்டாதது இசையின்பம். எத்தனை கச்சேரிகள் கேட்டாலும், அலுக்காமல் சலிக்காமல் மீண்டும் கச்சேரிகளைக் கேட்க விழைவும் உண்மையான இசையார்வம். தேசிய இசை நிகழ்ச்சிக்குப் பிறகு நடைபெறும் தனிக் கச்சேரிகளுக்கும் மக்கள் திரண்டு வருவதிலிருந்து இது நன்கு புலனாகும். இசையார்வமுடைய மக்களுக்கு, இன்பமூட்டுவதற்காகத் தலைநகரில் பல சபைகள் தொண்டாற்றி வருகின்றன.

அண்மையில் தோன்றிய 'பைன் ஆர்ட்ஸ் கிளப்'பும் இந்தத் தொண்டில் ஈடுபட்டிருக்கிறது. கர்நாடக இசையை பொது மக்களுக்கு இலவசமாக வழங்க முயன்றிருக்கிறது.

சமீபத்தில் பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கான அரங்கில், திரு ஆர். கே. ஸ்ரீகண்டனின் இன்னிசைக்கு இந்த கிளப் ஏற்பாடு செய்திருந்தது. இடம் அளவில் சிறியதாயினும், மக்கள் திரண்டு வந்து கச்சேரியைக் கேட்டு அநுபவித்தார்கள். மைசூர் ஸ்ரீ துரைசாமி அய்யங்காரின் வீணைக் கச்சேரிக்கும், இந்த கிளப்தான் ஏற்பாடு செய்திருந்தது.

அந்தக் கச்சேரி 'இம்பாக்ஸ்' தியேட்டரில் நடைபெற்றது.

வளர்ந்துவரும் இந்த 'பைன் ஆர்ட்ஸ் கிளப்' மிகச் சிறந்த இந்தத் தொண்டில், புகழ் பெற்று வளரும் என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கிறது.



# விழிப்பு

### கே. ஆர். மீனாட்சி

'வீணா...! விழி தெரிந்திருந்தும் குழியில் விழுந்துவிட்டாயே...?'

'வாழ்வையே பாழாக்கிக் கொண்டு விட்டாயேடி வீணா...?'

'இவ்வளவு படித்திருந்தும் வீணா பணத்திற்கு அடிமையாகி விட்டாயே...?'

மூன்றாம்தாரம் நான்காம் தாரமானால் கூடப் பரவாயில்லையடி வீணா இந்தக் கலியுக அர்ஜுனனுக்கு...!'

தோழிகளின் அனுதாப மொழிகளைக் கேட்கக் கேட்க வீணாவின் துயரம் அதிகரித்தது. எப்படியோ சமாளித்துக் கொண்டு அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிவைத்தாள் அவள். தன் உள்ளத்தின் உணர்ச்சிகளைச் சிறிதுகூட மதிக்காமல் பெற்றோர்கள் இருவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருப்பதைக் காண அவள் நெஞ்சம் கொதித்தது. ஆயினும், 'இனிமேல் செய்வதென்ன...? அடிமைத் தளைக்குள் புகுந்தாகிவிட்டது! எளிதில் விடுதலை கிடைத்துவிடுமா...?' என்று எண்ணிக் குமுறியவண்ணமிருந்தாள்.

மணம் முடிந்து மறுநாளே அடுத்த தெருவிலிருந்து ராஜாவின் பங்களாவில் அவனுடன் வசிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது வீணாவிற்கு. அன்பு, அழகு, அந்தஸ்து இம்மூன்றும் ஒருங்கேயமைந்த கணவன், அழகிய பங்களா, இட்ட பணியை நிறைவேற்றக் காத்திருக்கும் ஆட்கள், 'ஏன்?' என்று கேட்கக்கூட யாருமற்றச் சுதந்திரச் சூழ்நிலை. இவ்வனைத்தும் நிரம்பிய இல்வாழ்க்கை வேம்பெனக் கசந்தது அவளுக்கு.



அன்பு மனைவியிடம் ஆசை மொழிகளைக் கொட்ட ஆவலுடன் வரும் கணவனுக்குத் தன்னுடைய கடுகடுத்த முகத்தையே காட்டினாள். ஆசையுடன் அவன் வாங்கிக் குவித்த விலையுயர்ந்தப் பரிசுகளையெல்லாம் அலட்சியத்துடன் வெறுத்து ஒதுக்கினாள். இரவு பகல் எப்போது பார்த்தாலும் உடல் சோர்ந்து உளம்வாடி தன் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தாள்.

அருமை மனைவியின் அதிசயப் போக்கைக் கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்த ராஜா செய்வதறியாமல் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

குடந்தை உயர்நிலைப் பள்ளியாசிரியர் குருமூர்த்தியின் செல்வமெல்லாம் வனஜா ஒருத்திதான். அழகென்னும் தேவதையே அவள் உருவில் வந்துளதோ, ஆணவப்பேயே அவளகத்தில் குடிகொண்டுளதோ என எண்ணும்படி அமைந்திருந்தன வனஜாவின் தோற்றமும் குணமும்.

அருமை மகளுடைய குணவிசேஷத்தை நன்குணர்ந்திருந்த குருமூர்த்தி தம்பதிகள் அரும்பாடு பட்டனர் அதை மாற்ற. ஏமாற்றம்தான் எஞ்சி நின்றது அவர்களுக்கு. பின் காலக் கலைஞன்தான் அனுபவச் சம்மட்டியால் அவளகத்தைச் சமப்படுத்த வேண்டுமென விட்டுவிட்டனர்.

வனஜாவின் விருப்பத்திற்காக எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தும் அவளைக் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைத்தார் குருமூர்த்தி.

பி. ஏ. பரீட்சையைக் கொடுத்துவிட்டு அதன் முடிவையும் பின் தான் வகிக்கப்போகும் பதவியையும் பற்றியே கற்பனை செய்துகொண்டிருந்த வனஜா, அன்று மாலை தந்தை கூறிய செய்தியைக் கேட்டதும் விதிர்த்துப் போனாள்.

'என்னப்பா சொல்கிறீர்கள்...? பெரிய கடைத்தெருவில் இருக்கிறதே 'சரஸ்வதி ஜுவல்லரி மார்ட்' அதன் சொந்தக்காரர் ராஜாவா என்னை மணந்து கொள்வதாகச் சொல்கிறார்...?' என்றாள் தந்தையை எதிர்த்து உரத்த குரலில்.

'ஆம் வனஜா! அந்த ராஜாவேதான் கேட்டான் இந்த ஏழையாசிரியனை, 'தங்கள் பெண்ணை எனக்குத் திருமணம் செய்து கொடுப்பீர்களா?' என்று. நீ கல்லூரிக்குச் செல்லும் போதெல்லாம் பார்த்திருப்பான் போலிருக்கிறது! உன் அழகுதான் அப்படிக் கேட்கத் தூண்டியிருக்கிறதம்மா அவனை!' என்றார் குருமூர்த்தி பெருமிதம் பொங்கும் குரலில்.

'ஐயையோ! அவருடன் வாழும் துர்ப்பாக்கியத்தைக் காட்டிலும் சாவதையே பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் நான்!' எனக் கூவினாள் வனஜா.

'என்ன வனஜா விளையாடுகிறாயா...?'

'விளையாடவில்லையப்பா! விளக்குகிறேன் இதோ! பெற்றோர்கள் இல்லாமல் தன்னந்தனியாக வாழும் அவரைப் பற்றிக் கதை கதையாகப் பேசிச் சிரிக்கின்றது எங்கள் கல்லூரி முழுவதும்...'

'போதும் நிறுத்து! அதிகப் பிரசங்கி! ராஜாவும் உன்னைப்போல் படித்துப் பட்டம் பெற்றவன்தான்! அவன் பண்பையிழந்து நடத்தை கெட்டு நடப்பவன் என்று நீ சொல்வதைச் சிறிதும் நம்பமுடியாது என்னால்! நகர மக்களிடையே அவனுக்கு இருக்கும் நன்மதிப்பை நான் நன்கு அறிவேன்! அவனுக்கு இருக்கும் அந்தஸ்திற்கும் திறமைக்கும் உன்னைக் காட்டிலும் மேலான மனைவியை அடையலாம். ஆனாலும் உன் பூர்வஜன்ம பூஜாபலன்...'

அவர் பேச்சை இடைமறித்து 'போதுமப்பா! நீங்கள் என்னதான் கூறியபோதிலும் அவரை மணக்கச் சம்மதிக்கமாட்டேன் நான்! என் வாழ்வின் முன்னேற்றத்திற்காக இதுவரை தாங்கள் பட்டபாடு போதும்! நன்றி! இனி என் எதிர்காலத்தைப் பற்றிய பொறுப்பு என்னையே சாரும்!' அளவற்ற உக்கிரமும் உறுதியும் கலந்து ஒலித்தன வனஜாவின் குரலில்.

கொதித்தெழுந்தார் குருமூர்த்தி. 'வனஜா! இவ்வளவு நாட்களாக உன் இஷ்டப்படியே விட்டு வந்ததன் பலன்தான் இவ்வளவு துணிவாக என்னிடம் பேசுகிறாய் நீ! இனியும் அப்படியே இருக்கப் போவதில்லை நான். ஒரு வார அவகாசம் தருகிறேன்! அதற்குள் சிந்தித்து முடிவு செய்! உன்னிடமிருந்து சாதகமான பதிலையே எதிர்பார்க்கிறேன்! கிடைக்காவிடில் என் சவத்தைத்தான் காண்பாய்...! இது சத்தியம்...!' இரும்பினும் இறுக்கமான குரலில் இதைக் கூறிவிட்டு விருட்டென எழுந்து சென்றுவிட்டார் அவர்.

வழக்கத்திற்கு மாறான தந்தையின் ஆவேச நிலையைக்கண்டு அரண்டுபோய் விட்டாள் வனஜா. அவருக்காக ராஜாவை மணந்து கொள்ள முடியுமா அவளால்...? கனவிலும் கருதாத விஷயத்திற்காக மண்டையை உடைத்துக் கொண்டாள். தந்தையின் கட்டாயத்திற்காக அவனை மணந்துகொண்டாலும் பின் தோழிகளின் முன் தலையெடுப்பது எப்படி....? ராஜாவைப் பற்றித் தானும் தன் தோழிகளும் பேசியவார்த்தைகள் எல்லாம் இன்னமும் அவள் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றனவே...!

அவள் கல்லூரியில் படித்து வந்த போது மாணவிகளின் தலைவி அவள் தான். அன்றாடம் இடைவேளையின் போது அவள் தலைமையில் கூடும் வம்பர் மகாசபையில், முக்கியமாக, நகரத்து காதல் ஜோடிகள், பிரபலஸ்தர்களான இளம் வாலிபர்கள், பெண்கள் இவர்களைப் பற்றியச் சம்பாஷணைகள் தான் அதிகமாக அடிபடும். அவர்களின் வாயில் புகுந்து புறப்படும் எண்ணற்ற வாலிபர்களில் ராஜாவும் ஒருவன்.

'அழகு, அந்தஸ்து, பணம் அனைத்தும் நிரம்பிய ராஜா, முப்பது வயதைத் தாண்டியும்கூட ஏன் இல்லறத்தில் ஈடுபடவில்லை' என்னும் மர்மத்தைத் தங்கள் கற்பனைத் துப்பினால் கண்டுபிடித்து வனஜாவினிடம் கூறினர் அவள் தோழிகள். அவர்கள் கற்பனைத் துப்பில் அகப்பட்ட விஷயம் இதுதான். ராஜா நடத்தை கெட்டவன்! பணத் திமிரினால் பல பெண்களைத் தன் அடிமையாக்கிக் கொண்டிருக்கிறான் அவன்! அதனால்தான் அவனுக்குப் பெண் கொடுக்க எவரும் முன்வரவில்லை!' தோழிகளின் சாமர்த்தியத்தைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தாள் வனஜா அப்போது.

இன்று...? இப்படி ஒரு சங்கடமான நிலைமை வரும் என்று கனவிலும் கருதினாளா அவள்...? எந்தவிதமான முடிவிற்கும் வரமுடியாமலே ஆறு நாட்களைக் கடத்திவிட்டாள் அவள்.

ஏழாம்நாள் விடிந்ததுமே அவளிடம் வந்துவிட்டார் குருமூர்த்தி. 'என்ன முடிவு செய்தாய் வனஜா? ராஜாவின் தாலிக் கயிற்றை ஏற்கப் போகிறாயா...? அல்லது தாம்புக் கயிற்றில் தொங்கச் செய்யப் போகிறாயா...என்னை...?' என்றார் நிதானமான குரலில்.

தந்தையின் தோற்றத்தையும் பேச்சையும் கண்டு திகைத்துப் போன வனஜா 'சரி நடப்பது நடக்கட்டும்! பின்னால் அவர் தொங்கும் கயிற்றில் நாம் தான் தொங்கினால் போகிறது!' என்ற முடிவிற்கு வந்தவளாய் 'உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள் அப்பா!' என்றாள் எங்கோ நோக்கியவண்ணம்.

பின் என்ன...? காரியங்களனைத்தும் துரிதகதியில் நடந்தேறின. சாதகப் பொருத்தம், பெண்பார்க்கும் படலம், வரதட்சணைத் தகராறு, சீர் பாரதாபங்கள் எதுவுமேயின்றி எளியமுறையில் நடந்தேறியது ராஜா–வனஜா இவர்கள் திருமணம்.

தோழிகளுக்குத் திருமண அழைப்பு அனுப்பாமல் இருந்தும்கூட வந்துவிட்டனர் வனஜாவிற்குத் தங்கள் அனுதாப மொழிகளைத் தெரிவிப்பதற்கு...? அவர்கள் வராமல் இருந்திருந்தால்கூட வனஜாவின் மனம் அன்று அவ்வளவு வேதனையை அனுபவித்திராது.

ஃ ஃ ஃ

திருமணம் முடிந்து திங்கள் பல கழிந்தும், தன் முகம் பார்த்துப் பேச மறுத்து அருகாமையை அறவே வெறுத்து, ஆடையணிகளை ஒழித்து, தன் மணமிழந்து இதழ்வாடி தலை கவிழ்ந்து தொங்கும் மலரைப்போல் சதா அறைக்குள்ளேயே அடைந்து கிடக்கும் மனைவியின் போக்கைக் காணச் சகிக்கவில்லை ராஜாவுக்கு. திரையை விலக்கி ரகசியத்தைத் தெரிந்து கொள்ளும் ஆவல் அதிகரித்தது அவன் உள்ளத்தில்.

அன்று காலை எட்டுமணி சுமாருக்கு அவள் அறைக்குள் நுழைந்தான் ராஜா. வழக்கம்போல் சோபாவின்மீது சுருண்டு கிடந்தாள் வனஜா. அவள் நிலையைக் கண்டு பரிதாபம் அடைந்த

அவன் மெல்ல அவளையணுகி 'வீணா...!' என்றழைத்தான் அன்பு நிரம்பிய குரலில்.

தலையை நிமிர்த்தி அவனை ஏறிட்டு நோக்கிவிட்டு மீண்டும் சோபாவிலேயே முகத்தைப் புதைத்துக்கொண்டாள் வீணா. அவள் பார்வை தன்னை நோக்கி உமிழ்ந்த வெறுப்பையும் குரோதத்தையும் கண்டு துடித்துப்போனான் ராஜா. ஆயினும் அதைச் சமாளித்துக்கொண்டு 'வீணா...? உனக்கு என்ன குறை! மனம் விட்டுச் சொல்லக்கூடாதா என்னிடம்..? உன் அன்பிற்காக ஏங்கி நிற்கும் என்னிடம் எதையும் கூறத் தயங்கவேண்டாம் நீ...? சொல் வீணா! என்னைப் பிடிக்கவில்லையா உனக்கு! ஏன்? என்சொல் செயல் ரூபம்



அத்தனையிலும் எதில் குறையைக் காண்கிறாய் நீ...? என்னை மணந்துகொள்வதற்கு மகிழ்ச்சியுடன் சம்மதித்தாய் என்றுதானே உன் தந்தை கூறினார் என்னிடம்! எதுவானாலும் சொல்லித் தீர்த்துவிடு வீணா!' கெஞ்சும் குரலில் குழைந்தவண்ணம் அவள் முதுகைத் தொட்டு அசைத்தான்.

விருட்டெனச் சோபாவின்மீது எழுந்து உட்கார்ந்து வீணா 'போதும் உங்கள் பசப்பல்! பெண்களிடம் பேசுவதில் தங்களுக்கு ஈடு தாங்களேதான் என்பதை அறிவேன் நான்! எவ்வளவு பெண்கள் இந்தப் பேச்சைக் கேட்டே அடிமையானார்களோ...? என்னையும் அப்படி நினைக்க வேண்டாம்...! விதி என்னைத் தங்களுடன் இணைத்துவிட்டபோதிலும் மதி பிணைக்கவிடவில்லை...!' என ஆக்ரோஷத்துடன் கூவினாள்.

அரை விநாடிக்கு முன் புன்னகைக் கோலத்துடன் காட்சியளித்த ராஜாவின் ரோஜாநிற அதரங்கள் 'ஆத்திரத்தினால் நிலைகொள்ளாமல் துடித்தன. நாடி நரம்புகளனைத்தும் வலிவொன்று புடைத்தெழ விழிகளிரண்டும் ரத்த கோளமெனக் காட்சியளித்தன. முதன் முதலாகத் தான் காணும் கணவனுடைய அந்தத் தோற்றத்தை ஆச்சரியத்துடன் நோக்கிக் கொண்டிருந்தாள் வீணா. அவள் சற்றும் எதிர்பாராத சமயத்தில் தன்னுடைய ஆத்திரமனைத்தையும் பிரயோகித்துப் 'பளார்' என ஒரு அறை கொடுத்த ராஜா, 'உன் மனதில் இருப்பதை இன்று புரிந்து கொண்டு விட்டேன் நன்றாக. கள்ளமற்ற என்மீது குற்றம் சுமத்தியதற்கு தண்டனை இது! கூடிய சீக்கிரத்தில் நான் குற்றமற்றவன்





என்பதை நிரூபித்தும் காட்டுகிறேன்!' எனக் கம்பீரமான குரலில் மொழிந்து விட்டு அகன்றான் அவ்விடத்தினின்றும்.

அவன் தலை மறைந்ததும், சோபாவின்மீது முகத்தைப் புதைத்துக் கொண்ட வீணா, இதயமே நொறுங்கிவிடும் போல் விம்மியழுதாள். நெடுநேரத்திற்குப் பின்னரே அந்த நிலையிலிருந்து மீள முடிந்தது அவளால். 'சீ! என்ன முரட்டு மனிதர்? நான் என்ன சுயமாக வாழ முடியாத அபலையா...? அல்லது இவர் அடிமையா...? இவர் ஆணைக்கு அடங்கி நடக்க வேண்டும் என்ற கட்டுப்பாடொன்றும் இல்லையே...?' இன்னும் பற்பல சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தவள் 'பரபர'வென்று ஒரு கடிதத்தை எழுதி முடித்து, அதைத் தன் அறையில் கிடந்த மேஜையின்மீது வைத்துவிட்டு, தந்தை வாங்கியளித்திருந்த இரண்டொரு துணிமணிகள் மட்டும் எடுத்துக் கைப்பெட்டிக்குள் திணித்துக்கொண்டாள்.

போர்டிகோவினின்றும் புறப்பட்ட ராஜாவின் காரை தன் அறை ஜன்னல் வழியாகக் கண்ட வீணாவின் மனம் நிம்மதியடைந்தது. வேகமாக அறையைவிட்டு வெளியே வந்தவள், பங்களாவிலுள்ள முக்கியமான அறைகளையெல்லாம் பூட்டிச் சாவியை வைக்குமிடத்தில் வைத்துவிட்டு சமையற்காரச் சாம்பசிவத்தினிடம் 'உங்கள் எஜமானர் வந்தால், என் அறையில் கடிதம் வைத்திருக்கிறேன்' என்று சொல்லுங்கள்!" என்று கூறிவிட்டு நடந்தாள் அடுத்த தெருவை நோக்கி.

திடுதிப்பென்று வந்து நிற்கும் மகளை 'வா' என்று அழைக்கக்கூடத் தோன்றாமல் திகைத்துப்போய் நின்று விட்டாள் கல்யாணியம்மாள்.

'என்னம்மா இப்படிப் பார்க்கிறாய்...? உன்னுடன் நான்கு நாட்கள் இருந்து விட்டுப் போகலாம் என்றுதான் கிளம்பினேன்! அவரிடம் சொல்லி விட்டுத்தான் வந்தேன், கவலைப் படாதே!' என்றாள் வலுக்கட்டாயமாக ஒரு புன்னகையைத் தருவித்துக் கொண்டு.

'உம்! என்னவோ பெண்!' என்று அலுத்துக்கொண்டாள் கல்யாணி. ஏனோ வீணாவின் பேச்சில் நம்பிக்கை ஏற்படவில்லை அவளுக்கு. சாப்பாட்டை முடித்துக்கொண்டு நிம்மதியாகப் படுத்துறங்கினாள் வீணா. காபியையும் டிபனையும் தயாரித்து வைத்துவிட்டுப் பன்முறை அவளை வந்து எழுப்பிய கல்யாணி, பின் அலுப்படைந்து வாளாயிருந்துவிட்டாள்.

மாலையும் வந்துவிட்டது. 'வீணா எங்கே.....?' என்ற தந்தையின் குரலைக் கேட்டதும்தான் திடுக்கிட்டுப் போய் எழுந்து உட்கார்ந்தாள் வீணா.

'வீணா, இங்கு வந்திருப்பது எப்படித் தெரியும் உங்களுக்கு.....?' என கணவரிடம் எதிர் வினா விடுத்தாள் கல்யாணி.

'இன்று பகல் பள்ளிக்கூடத்தில் வந்து என்னைப் பார்த்துப் போனான் ராஜா! அப்போதுதான் சொன்னான், தான் ஏதோ காரியமாக சென்னை செல்வதாகவும், அதுவரை வீணா நம்முடன் இருக்கட்டும் என்று அனுப்பி வைத்திருப்பதாகவும்! எங்கே அவள்.....?' என்றார் குருமூர்த்தி, ஆவல் பொங்கும் குரலில்.

வியப்பினால் திகைத்து நின்ற வீணா, சட்டென்று 'இதோ வருகிறேன் அப்பா!' என்று கூறியவண்ணம் தந்தையின் எதிரில் வந்து நின்றாள். கல்யாணியின் முகத்தில் காலையிலிருந்து காணப்பட்ட கலக்கம் மறைந்து கனிவு ததும்பியது. மகிழ்ச்சியுடன் மகளுடன் வார்த்தையாடினர் பெற்றோர்கள் இருவரும். அணுவளவுகூட நிம்மதியில்லை வீணாவின் நெஞ்சத்தில். ராஜா எதற்காகத் தன்னை விட்டுக் கொடுக்காமலே பேசியிருக்கிறான் என்ற குழப்பம் வேறு அவள் அகத்தைக் குடைந்தது. எந்த நிமிடம் ராஜா வீட்டிற்கு வரப்போகிறானோ என்ற பீதியிலேயே இரண்டு நாட்களைக் கழித்தாள்.

மூன்றாம் நாள் காலைத் தபாலில் சென்னை முத்திரையிடப்பட்டக் கடிதம் ஒன்று வந்தது வீணாவிற்கு. முகவரியில் இருந்த எழுத்துக்கள் ராஜாவுடையதுதான் என்பதை அறிந்து கொண்ட வீணா சற்று அலட்சியமாகவே அதைப் பிரித்தாள். கடித உறைக்குள் நான்காக மடிக்கப்பட்டப் பல கடிதத் துண்டுகள் இருந்தன. ராஜாவினால் எழுதப்பட்டதைத் தவிர மற்ற கடிதத் துண்டுகளில் இருந்தக் கையெழுத்தவ்வளவும் பெண்கள் கையெழுத்து. ராஜாவின் கடிதத்தைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் அவைகளைத்தான் முதலில் படிக்க ஆரம்பித்தாள் அவள்.

'அன்புமிக்க ராஜா...!

தங்கள்மீது நான் கொண்டுள்ளக் கட்டுக்கடங்காக் காதல் இந்தக் கடிதத்தை எழுதத் தூண்டுகிறது. நகைகள் வாங்கும் நிமித்தம் அடிக்கடித் தங்கள் கடைக்கு வந்திருக்கிறேன் நான், என் தாயுடன். நான் வரவேண்டிய அவசியம் இல்லாதிருந்தும் தங்களைத் தனிமையில் சந்தித்துப் பேசச் சந்தர்ப்பம் கிடைக்குமோ என்ற எண்ணத்துடன்தான் வந்தேன். ஆனால், ஏமாற்றம்தான் எஞ்சி நின்றது எனக்கு. பின் தினந்தோறும் கல்லூரிக்குச் செல்லும் போதாவது தங்கள் பார்வை என்மீது விழுமோ என்ற ஏக்கத்தில் கல்லூரிக்குக் காரில் செல்லாமல் கால் நடையாகவே சென்றேன் தங்கள் பங்களாவின் வாயிலைத் தாண்டிக்கொண்டு. என்னே என் துரதிர்ஷ்டம்! என்னுடன் வரும் வீணாவையே விழுங்கிவிடுபவரைப்போல் நோக்கும் தங்களது அழகிய விழிகள் தப்பித் தவறிக்கூட என் பக்கம் திரும்பியதில்லை. வீணாவிற்குத் தங்கள்மீது கடுகளவுகூடக் காதல் கிடையாது. உடலழகு படைத்த அவள் உள்ளத்தில் துளிக்கூட இடம் இல்லை உங்களுக்கு. தயவுசெய்து என்னை நம்புங்கள்! உங்களையே நினைத்து ஒவ்வொரு கணமும் மெலிந்துவரும் எனக்கு வாழ்வளியுங்கள். பிரபல அட்வகேட்டான என் தந்தை ராமநாதனைத் தெரிந்திருக்கும் உங்களுக்கு. அவருடைய ஏராளமான சொத்திற்கு நான் ஒரே பெண்தான். பெற்றோர்களுடைய பூரண சம்மதத்தையும் பெற்று விட்டேன். இனி தங்கள் விருப்பம் ஒன்றுதான் பாக்கி.

'அன்பரே! தயவுசெய்து என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்...! தங்களை அடையும் பாக்கியம் கிடைக்காவிடில் மரணத்தை அடைய வேண்டியதுதான் நான்! அத்தகையதோர் துர்ப்பாக்கியம் ஏற்படாதென்றே நம்புகிறேன். தங்களுடைய அன்பான ஆதரவான பதிலை ஆவலுடன் எதிர்பார்த்து ஏங்கிக் கிடக்கும்.

மனோஹரி.'

'மனோஹரி!...ராமநாதனின் பெண்! நம்முடன் கல்லூரியில் படித்தவள்! ஆம்! அவளுடைய அழகிய எழுத்துக்களேதான் இது!' இவ்வாறு வாய் விட்டு முனகிய வீணாவிற்குத்தான் காண்பது கனவாயிருக்குமோ என்று ஐயம்கூடத் தோன்றியது. சற்று நேரம் கண்களை மூடியவண்ணமேயிருந்து விட்டுப் பின்னரே மற்றக் கடிதங்களைப் படிக்க ஆரம்பித்தாள். எல்லாமே அவளுடன் படித்த, ராஜாவின்மீது கண்டபடிக் கதைகளைக் கட்டிவிட்ட, வீணா ராஜாவை மணந்துகொண்டதிற்காக அனுதாப மொழிகளைக் கொட்டிய வீணாவின் அருமைத் தோழிகள் எழுதிய கடிதங்கள் தாம். எல்லோருமே ஒரே மாதிரி எண்ணத்துடன் அதாவது ராஜாவின் காதலுக்காகக் கெஞ்சிக் குழைந்து பிதற்றிப் பணிந்து எழுதியிருந்தனர். வியப்பின் மிகுதியினால் மூச்சு முட்டியது வீணாவிற்கு. எப்படியோ சமாளித்துக்கொண்டு ராஜா எழுதியிருந்த கடிதத்தைப் பிரித்துப் பார்வையைப் பதித்தாள் அதன் மீது.

அன்புமிக்க வீணா,

நீ விட்டுச் சென்ற கடிதத்தைப் படித்தேன். உன்னுடைய விசித்திர மனப் போக்கிற்கு விடை கிடைத்தது. எந்தவிதமான ஆதாரத்தைக் கொண்டு நீ என் நடத்தையில் மாசு கண்டு பிடித்தாய் என்பதைத் தெளிவாக எழுதிச் சென்றதற்கு நன்றி.

என்னருமை வீணா! இத்துடன் அனுப்பியிருக்கும் உன் அன்புத்தோழிகள் எனக்கு எழுதியக் கடிதங்களைப் படித்துப் பார். அவர்கள் பிதற்றலை லட்சியம் செய்யாமல் இருந்ததன் பலன்தான் இத்தகைய விபரீதத்தில் வந்து முடிந்திருக்கிறது.



ஒரு பிச்சைக்காரன்:— என் பெண்ணுக்குப் பெரிய இடத்திலே கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டேன்.

மற்றவன்:—மாப்பிள்ளே எங்கே வேலை செய்துகிட்டு இருக்காரு.

பிச்சைக்காரன்:—டில்லியிலே பிச்சை எடுக்கிறாரு!

'வனு! முதன் முதல் என் இதயத்தில் இடம் பெற்றவள் நீதான். இனி என்றென்றும் உன்னை அந்த இடத்தை விட்டு அகற்ற முடியாது. இது சத்தியம். இதற்கு மேல் மிகைப்படுத்திக் கூற நான் விரும்பவில்லை. அதற்கு அவசியமும் இருக்காது என்று நம்புகிறேன்! இதையெல்லாம் விவரமாக தெரியப்படுத்தவும், நம் இருவருக்குமிடையில் நிகழும் மனஸ்தாபங்களை உன் பெற்றோர்கள் அறியக்கூடாது என்பதற்காகவுமே திடீரென்று சென்னைக்குப் புறப்பட்டு வந்தேன். நாளை இரவு இங்கிருந்து புறப்படுகிறேன்! நான் வருவதற்கு முன்னரே நீ நம் பங்களாவிற்கு சென்றிருந்து இன்முகத்துடன் என்னை வரவேற்பாய் என உறுதியாக நம்புகிறேன்.

இப்படிக்கு

உன் ராஜா

கணவனின் அன்பையும் அடக்கத்தையும், தோழிகளின் வஞ்சகத்தையும் நன்குணர்ந்த வனுவின் உள்ளம் விழித்துக் கொண்டது.

'சீ! என்னைப்போல் நன்றி கெட்ட ஜன்மம் எவருமே கிடையாது. எங்கிருந்து தவிர்த்தவர்களுக்கெல்லாம் கிடைக்காத வாழ்வல்லவா எனக்குக் கிடைத்திருக்கிறது. எவ்வளவு அமைதியான முறையில் என்னைத் திருத்த முயன்றிருக்கிறார்! ஆடவர்களுக்கு இப்படி ஒரு குணம் இருப்பது அபூர்வமல்லவா' இவ்வாறு எண்ணமிட்ட வனு ஒரு முடிவிற்கு வந்தவள், 'அம்மா! அவர் இன்று இரவு புறப்பட்டு நாளை காலையில் வருகிறாராம். நான் போய் வருகிறேன்' எனக் கூறிய மகளை வியப்புடன் ஏறிட்டு நோக்கிய கல்யாணி 'அதற்கு என்ன இப்போதே போக வேண்டுமாடி......?' என்றாள் புன்னகையுடன்.

'போகத்தான் வேண்டுமம்மா! இரண்டு நாட்களாக இருவருமேயில்லாமல் வீடு எப்படிக் கிடக்கிறதோ!' என்று கூறிவிட்டுத் தாயின் பதிலுக்குக்கூடக் காத்திராமல் கைப் பெட்டியுடன் கணவனகம் வந்து சேர்ந்தாள் வனு. அன்று பகல் முழுவதும் தரையில் உட்காராமல் இன்பமாளிகையாக காட்சியளித்தப் பங்களாவை உளம் நிறைந்த மகிழ்ச்சியுடன் சுற்றிச் சுற்றி வந்தாள். எஜமானியின் மன மாற்றத்தைக் கண்டு வியப்படைந்தனர் வேலைக்காரர்கள் அனைவரும். இனிதான் அனுபவிக்கப்போகும் ஆனந்த வாழ்க்கையைப் பற்றியக் கற்பனையிலேயே இறங்கிக் கிடந்தாள் இரவு முழுவதும்.

கதிரவன் உதிக்கு முன்னரே வந்து சேர்ந்தான் ராஜா. நேராகத் தன் அறைக்குள்கூட நுழையாமல் வனுவின் அறைக்குத்தான் வந்தான் அவன். எவ்வளவு முயன்றும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை வனுவினுல். கணவனின் கால்களிரண்டையும் பற்றிக்கொண்டு, குழந்தைபோல் குலுங்கி அழுதாள்.

அன்புடன் அவள் முகத்தை நிமிர்த்திக் கண்ணீரைத் துடைத்த ராஜா, 'இது என்ன அசட்டுத்தனம் வனு! விழித்துக்கொண்ட பின்னரும் அழுவார்களா யாராவது உறங்கிவிட்டோமேயென்று! எங்கே கண்களைத் திறந்து என்னைப் பாரேன்...' என்றான் நகைத்தவண்ணம்.

அவ்வளவு எளிதில் அவன் முகத்தை ஏறிட்டு நோக்கத் துணிவில்லை வனுவின் நெஞ்சத்திற்கு. அவனுடைய பரந்த மார்பினிலே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் முழுவதாக. அந்த நிலையிலேயே ஆயிரமாயிரம் காலம் வாழலாம் என எண்ணியது இரு உள்ளங்களுமே. அதைத் தடுப்பதற்குத்தான் எவருக்கு உரிமையுண்டு?



# இலங்கை விஜயம்

இவ்வாரம் இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் இலங்கைக்கு உத்தியோக தோரணையில் ராஜாங்க விருந்தாளியாக வந்திருப்பது ஒரு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகும். சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னால் டாக்டர் பிரசாத் சென்னையில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டுக்கு வந்திருந்தபோது ஒரு யாத்ரீகராக இங்கு வந்திருந்தார். அப்போது முக்கியமாக அவர் கதிர்காமத்துக்குமட்டுமே சென்றார். அதன் பிறகும் இந்திய ஜனாதிபதி என்ற முறையிலும் அவர் இங்கு வருவது இதுவே முதன் முறையாதலால் அவருக்கு இலங்கை மக்கள் ஆயிரமாயிரமாகத் திரண்டு வந்து உளம் கனிந்த வரவேற்பு அளித்து உபசரித்தார்கள். டாக்டர் பிரசாத்தை விமான நிலையத்தில் வரவேற்க பிரமாதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆயினும், அவர் வந்திறங்கிய சமயம் இடைவிடாமல் மழை பெய்து கொண்டிருந்தபடியால், வரவேற்பு ஏற்பாடுகளில் சிலவற்றைக் கைவிட வேண்டியதாயிற்று. பலத்த மழை பெய்தும்கூட அதைப் பொருட்படுத்தாமல், ஏராளமான மக்கள் சொட்டச் சொட்ட நனைந்துகொண்டு, இந்திய ஜனாதிபதியை வரவேற்க விமான நிலையத்தில் காத்திருந்தார்கள். விமானம் சரியாக காலை 11–30 மணிக்கு ரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கிய டாக்டர் பிரசாத் அதிலிருந்து கீழே இறங்கியதும் 'பாபுக்கு ஜே' என்ற கோஷம் வானைப் பிளந்தது. 'தங்களது வரவேற்பில் வருணனும் கலந்து கொள்ள வந்திருக்கிறான். நாடு குளிர்ந்திருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே பிரதம மந்திரி திரு பண்டார நாயகாவும், கவர்னர்-ஜெனரல் ஸர் ஆலிவர் குணதிலகாவும் ஜனாதிபதியை வரவேற்றார்கள். விமான நிலையத்திலிருந்து பன்னிரண்டு மைல் தூரம் நடந்த ராஜாங்க பவனியில் வழி நெடுக பல்லாயிரக்கணக்கான மக்கள் சாரி சாரியாக நின்று ராஜாங்க பவனி வருகையில் 'ஜே' கோஷம் செய்து ஆர்ப்பரித்து, பாரதத்தின் இணையிலா தலைவருக்கு மரியாதை செய்தனர். இம்மட்டல்ல, ராஜன்பாபு ஒவ்வொரு நிகழ்ச்சிக்காகச் செல்லுகையிலும், அவர் செல்லும் பாதையில் பல மணி நேரத்துக்கு முன்னிருந்து பல ஆயிரம் ஜனங்கள் திரண்டு நின்றது



'சுதேசமித்திரன்' மானேஜிங் டைரக்டரும், நிர்வாக ஆசிரியருமான ஸ்ரீ ஸி. எஸ். நரசிம்மன் அவர்கள் தூரக் கிழக்கு நாடுகளில் சுமார் இரண்டு வார காலம் பிரயாணம் செய்துவிட்டு சென்ற 10-ந் தேதி சென்னை வந்து சேர்ந்தார். இலங்கை, தாய்லாந்து, மலேயா ஆகிய நாடுகளிலுள்ள சமூக நிலவரங்களையும் அங்குள்ள பத்திரிகைகளின் வளர்ச்சி முதலியவற்றையும் ஆராய்ந்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். தூரக் கிழக்கு பொருளாதாரக் கமிஷன் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார். சிங்கப்பூரிலுள்ள 'சிங்கப்பூர் ஸ்டாண்டர்ட், ஸ்ட்ரெயிட் டைம்ஸ்' முதலிய பத்திரிகாலயப் பிரதிநிதிகளையும் சந்தித்தார். 'தமிழ் முரசு' நிர்வாகிகளையும் பார்த்து மலேயா தமிழ்ப் பிரச்னைகளைப்பற்றி விசாரித்தார்.

போலீசாருக்கு சரியான வேலையைக் கொடுத்துக்கொண்டிருந்தது.

இலங்கைக்கு வந்த பிறகு முதலாவது வேலையாக டாக்டர் பிரசாத் சர்வதேச பௌத்தக் கழகத்துக்கு விஜயம் செய்து, இந்தியாவின் அன்பளிப்பாக ஒரு அழகான புத்தர் சிலையை வழங்கினார். அப்பொழுது பேசுகையில், பௌத்தம் பிறந்த நாட்டிலே ஒரு சமயமாக வர்ழாவிட்டாலும், அதன் கோட்பாடுகள் பாரதத்தில் கடைபிடிக்கப்பட்டு வருகிறதென்றும், பௌத்தத்திற்கு பாரதத்தில் நாளுக்கு நாள் அதிகச் செல்வாக்கு ஏற்பட்டு வருகிறதென்றும், கொந்தளிக்கும் இன்றைய உலகில் மனித ஜாதியின் வருங்காலத் தலைவிதி மயிரிழையில் தொங்கும்போது பௌத்தக் கோட்பாடுகளின் அவசியம், இன்று போல் வேறு என்றும் ஏற்பட்டிருந்ததில்லை என்றும் டாக்டர் பிரசாத் கூறினார். இந்தப் பிரசங்கத்தைப்பற்றி ஒரு பத்திரிகை தலையங்கம் தீட்டியபோது பௌத்தம் பிறந்த நாட்டிலே அது ஒரு சமயமாக நிலைத்திரா விட்டாலும், அதன் கோட்பாடுகளான பஞ்சசீலத்தை இந்திய அரசாங்கம் தனது அயல்நாட்டுக் கொள்கைக்கு அடிப்படைத் தத்துவமாகக் கொண்டிருக்கிறதென்றும், சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக பௌத்தத்தைப் போற்றி வளர்த்து வருவதாகப் பெருமையுடன் சொல்லிக் கொள்ளும் இலங்கையிலே கொலைகள் நடக்காத நாளில்லையென்றும், அரசாங்கமே சாராயத்தை வடித்து விற்பனை செய்து குடிப்பழக்கத்தை வளர்க்கிறதென்றும் எழுதியிருந்தது. சென்ற வருடத்திய வகுப்புக் கலகம் இந்நாட்டு மக்களின் சகிப்புத் தன்மையின்மைக்கு ஒரு சர்வதேச உதாரணமாக அமைந்து விட்டதென்றும், இந்த நிலைமை ஒவ்வொருவரையும் வெட்கித் தலைகுனியச் செய்ய வேண்டுமென்றும் இப்பத்திரிகை மேலும் எழுதியிருந்தது.

கொழும்பு ராமகிருஷ்ண மிஷனின் புதிய கட்டிடத்துக்கு டாக்டர் பிரசாத் அஸ்திவாரக்கல் நாட்டியபோது, எந்த ஒரு இயக்கமும் சுலோகங்களினாலும், கோஷங்களினாலும்மட்டும் வலுப்பெற்று வாழ்வதில்லையென்றும், இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் இதய சுத்தியே இயக்கத்துக்கு உண்மையான சக்தியளிப்பவைகளென்றும், ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்தவர்களின் தன்னலமற்ற தியாகப் பண்பு அந்த மிஷனை உலகப் பிரசித்தி பெற்றதாகச் செய்திருக்கிறதென்றும் கூறிவிட்டு, இலங்கையில் ராமகிருஷ்ண மிஷன் சிறப்பாகச் சமூக சேவை செய்து வருவதற்கு தமது பாராட்டைத் தெரிவித்துக்கொண்டார்.

புராதன இந்தியாவில் பிரசித்தி பெற்று விளங்கிய பௌத்தப் பல்கலைக் கழகங்களான நளாந்தா, தக்ஷசீலம் ஆகியவைகளைப்போல இலங்கையிலும் சிறந்த பௌத்தப் பல்கலைக் கழகங்களாக விளங்க இரண்டு பௌத்தக் கல்வி நிலையங்களை அரசாங்கம் பல்கலைக் கழகங்களாக்கியிருக்கிறது. அவைகளிலொன்றான வித்தியாலங்கார பரிவேனா பல்கலைக் கழகத்தை டாக்டர் பிரசாத் உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். அப்பொழுது ஹிந்து சமயத்தையும், பௌத்த சமயத்தையும்பற்றி அவர் ஒரு அற்புதமான சொற்பொழிவு நிகழ்த்தினார். ஒரே மரத்தின் பல கிளைகளிலே பல நிறமுள்ள இலைகள் தோன்றுகின்றன. ஆனால், மரம் ஒன்று, கிளைகளும் இலைகளும்தான் வெவ்வேறாக இருப்பதைப்போலத் தோன்றுகின்றன. மரத்துக்கு நீரூற்றிப் பாதுகாப்பதைப் பொறுத்திருக்கிறது கிளைகளும், இலைகளும் செழித்து வளருவது. அதேபோல சமயத் தத்துவங்களின் அடிப்படை ஒற்றுமையை உணர்ந்து நடப்பதைப் பொறுத்திருக்கிறது வாழ்க்கை வளப்படுவது. இலங்கையர்கள் நல்ல பௌத்தர்களாக விளங்கினால், அவர்கள் இந்தியாவையும், ஹிந்து சமயத்தையும் நன்கு உணர்ந்துகொள்ள உதவியாயிருக்கும். ஹிந்து சமயமும், பௌத்த சமயமும் போட்டி சமயங்களல்ல. உண்மையைச் சொல்லப் போனால், எல்லாச் சமயங்களின் அடிப்படைத் தத்துவமும் ஒரே மாதிரியானவைகள்தான். இவ்வாறு டாக்டர் பிரசாத் ஒரு அருமையான சொற்பொழிவாற்றி அனைவரையும் பரவசப்படுத்தினார்.



அன்று மாலை இந்திய ஹைகமிஷனர் தமது இல்லத்தில் ஒரு வரவேற்பு உபசாரம் நடத்தியபோது, அதற்கு பிரதம மந்திரி, கவர்னர்–ஜெனரல், மந்திரிகள், பார்லிமெண்டின் இரு சபைகளையும் சேர்ந்த அங்கத்தினர்கள், பல்வேறு இந்தியச் சங்கங்களின் பிரதிநிதிகள், நகரப் பிரமுகர்கள் முதலான பலரும் வந்திருந்து இந்திய ஜனாதிபதிக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்கள். இங்குள்ள இந்திய – இலங்கைப் பிரமுகர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் அன்று காணக்கூடியதாயிருந்தது.

கண்டியில் புத்த பகவானின் புனித தந்தமிருக்கும் ஆலயத்துக்கு டாக்டர் பிரசாத் 'விஜயம் செய்தபோது, புனித தந்தம் அவரது பார்வைக்குக் காண்பிக்கப்பட்டது. சாதாரணமாக மகாராஜாக்களைத் தவிர மற்றவர்களுக்கு இந்தப் புனிதச் சின்னம் காண்பிக்கப்படுவதில்லை. அதிலும் பௌத்த சமயத்தைச் சேர்ந்த தேசாதிபதிகளுக்குமட்டுமே புனிதச் சின்னம் வெளியிலெடுத்துக் காட்டப்படுவது வழக்கம். இலங்கையின் புராதனத் தலைநகரமும் அழிந்துபோன நிலையிலிருப்பதுமான பொலன்னருவை, பழைய அனுராதபுரம் ஆகியவற்றை ஜனாதிபதி பார்வையிட்டார். ராஜன்பாபுவின் இந்த விஜயம் இந்நாட்டு மக்களின் மனதிலிருந்து என்றுமே மறக்க முடியாத ஒரு சந்தோஷ நிகழ்ச்சியாகிவிட்டது.

## பௌத்தம் வந்த திருநாள்

ஜூன் 20–ம் தேதி சனிக்கிழமை 'போஸன்' பண்டிகையை இலங்கை பௌத்தர்கள் பக்தி சிரத்தையுடன் கொண்டாடினார்கள். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அசோகச் சக்கரவர்த்தியின் மைந்தரான மஹிந்தர் என்பவரால் பௌத்த சமயம் இலங்கைக்கு முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டதைக் குறிப்பதே போஸன் என்ற பண்டிகை. கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கையில் தேவனம்பியதீசன் என்ற ஒரு சிங்கள அரசன் ஆண்டுவந்தான். அப்பொழுது அசோகன் உலகெங்கும் பௌத்த சமயத்தைப் பிரசாரம் செய்ய சந்நியாசிகளை அனுப்பியதைப் போல இலங்கையில் பௌத்த சமயத்தைப் பிரசாரம் செய்ய தமது சொந்த மைந்தனையே அனுப்பிவைத்தார். அவர் மூலமாக தேவனம்பியதீசன் என்ற மன்னன் ஒரு பௌத்தனாகி பௌத்தத்தை ராஜாங்க மதமாகப் பிரகடனம் செய்தான். அன்று முதல் பௌத்தம் இலங்கையில் நிலை பெற்று வளர்ந்துவருகிறது. இந்த வைபவத்தை நினைவு கூறும் வகையில் போஸன் பண்டிகையை பிரதி வருடமும் சிங்கள பௌத்தர்கள் கொண்டாடி வருகிறார்கள். ஆகாய மார்க்கமாக மஹிந்தர் வந்திறங்கியதாகக் கருதப்படும் மலைச் சிகரத்துக்கு மஹிந்தலை என்ற பெயர் வழங்கி வருகிறது. அங்கு மஹிந்தருக்கு ஒரு ஆலயமும், பல ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. போஸன் பண்டிகையன்று பௌத்தர்கள் தூய வெண்ணிற ஆடையணிந்து ஆயிரம் பதினாயிரமாக மஹிந்தலைக்குச் சென்று வணங்கிவிட்டு வருவார்கள்.




"இப்படி ஹாஸ்யத் துணுக்கு எழுதிக்கொண்டு வந்திருக்கிறீர்களே, இப்படியே இதைப் பிரசுரித்தால் வாசகர்கள் படித்துவிட்டுச் சிரிப்பார்களே!"




## 17

## கற்பனையில் காதல்

**வி**ருந்து முடிந்து தன் அறைக்குத் திரும்பிய செல்லப்பா சலித்த மனத்துடன் சாப்பாட்டு விடுதியின் மேன் மாடத்துக்குச் சென்று துண்டை விரித்துப் படுத்தான். வாழ்க்கைப் புயல் அவனை, பொடுனைக் கரையிலிருந்து ஆயிரம் மைல்களுக்கப்பால் வீசி விட்டிருந்தது. திசை கெட்டுப்போன மரக்கலம் ஒன்றின் பார்வையில் தென்படும் கலங்கரை விளக்காக லதா அவனுக்குக் காட்சி அளித்ததில் வியப்பில்லை. பளீரென்று ஒளி வீசும் அந்த முத்துப் பற்களும், மோகனச் சிரிப்பும் வாடிப்போயிருந்த அவன் மனத்தைத் தளிர்க்கச் செய்தன. நம்பிக்கையூட்டின. ஆனால், ஊர் பெயர் தெரியாத தனக்கு, அவளைக் காதலிக்க என்ன உரிமை இருக்கிறது? மண்ணின் தொடர்பு ஏற்பட்ட அன்றே தாயை இழந்தவன் செல்லப்பா. பிறகு சில வருஷங்களுக்குள்ளாகத் தகப்பனையும் இழந்துவிட்டான். உடன் பிறந்த சகோதரி ஊமை. உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிட முடியாமல் மனப்பெட்டியில் வைத்துக் குமுறும் அந்தப் பேதையைப் பார்த்துப் பார்த்துக் கலங்கியிருக்கிறான் அவன். இந்த இரண்டு குழந்தைகளையும் பெரியவர்களாக வளர்க்கும் பொறுப்பை அவர்கள் தாய் மாமன் ஏற்றுக்கொண்டார். ரத்த பாசத்துக்கும், மனைவியின் தாக்குதலுக்கும் இடையே ஊசலாடும் தர்மசங்கடத்தில் செல்லப்பாவின் மாமா அகப்பட்டுக் கொண்டு தவித்தார். உயர்தரமான பட்டுச்சேலைகளும், வாயில் ரவிக்கைகளும் உடுத்திய மாமி, செல்லப்பாவின் சகோதரிக்குக் கிழிசல் பாவாடையை உடுத்தியிருந்ததைப் பார்த்தால் மனித சுபாவத்தின் பல கோணங்களை அறிந்து கொள்ளலாம். அந்த ஊமைப் பெண் ஆற்றிலிருந்து நீர் சுமந்து வந்தும், பாத்திரங்கள் தேய்த்தும், மாமன்குழந்தைகளைத் தூக்கிச் சுமந்தும் இப்படி குடும்பப் பொறுப்பு பூராவும் ஏற்று நடத்தி வந்தாள்.

செல்லப்பாவின் உள்ளத்தில் கசப்பு, நாவிலே கசப்பு, செயலிலே கசப்பு என்று மாமன் வீட்டாரைப் பற்றிய நினைப்பே அவனுக்குக் கசப்பாக இருந்தது. அந்தக் குடும்பத்தை தன் அகத்திலிருந்து ஒதுக்கிவிட்டுப் புற உலகைப் பார்க்கும்போது அது இன்பச் சோலையாக அவனுக்குத் தோன்றியது. பூத்துக் குலுங்கும் மரங்களும், நீலவானில் பறந்தோடும் பறவைகளும், வீசும் தென்றலும் உலகம் இன்பமயமானது என்று அவனுக்கு உணர்த்தின. மாமன் வீடு என்



கிற கசப்பிலிருந்து வெளி உலகம் என்கிற இனிப்புக்குத் தாவிப் பறந்து செல்ல அவன் துடித்தான். ஊமைப் பெண்ணைப்போல தலை குனிந்து உழைக்க அவனால் முடியவில்லை. செல்லப்பா பல முறைகள் மாமன் வீட்டை விட்டு ஓடிப்போயிருக்கிறான். நாட்கணக்கில் பட்டினியும், பசியுமாக சோழ வளநாடு பூராவும் சுற்றிவந்திருக்கிறான். தெள்ளு தமிழ் பிறந்த பாண்டி நாட்டையும் அவன் விட்டு வைக்கவில்லை. மதுரையில் ஒரு நாள் பூராவும் வெறும் தண்ணீரை அருந்திக்கொண்டே வேலை தேடி இருக்கிறான். அன்னை மீனாட்சியும், அருளாளன் சுந்தரனும் மௌனமாகிக் கல்லாகிக் கருணை வற்றி அந்தக் காட்சியைப்பார்த்துக்கொண்டே இருந்தனர்.

உலகெலாம் அளித்த இறைவியின் கோபுர வாயிலில் தலை வணங்கிக் கண்ணீர் பெருக்கி விட்டு வாழ்வதிலேயே நம்பிக்கை இழந்த செல்லப்பா, மதுரை ரயில் பாலத்தின் மீது உட்கார்ந்து பல திட்டங்களைத் தன் மனத்தில் உருவாக்கிக் கொண்டான்.

திட்டம் ஒன்றும் பிரமாதமானதல்ல! தொலைவிலே பறந்தோடிவரும் ரயிலின் கீழே தலையைக் கொடுத்துவிடுவது அவ்வளவுதான். உலகத்தின் துன்பங்களுக்கு ஒரு முடிவு ஏற்பட்டு விடுமல்லவா?

ரயில் பாதை ஓரமாக இருவர் பேசிக்கொண்டே வந்தார்கள். சென்னைக்கு வடக்கே முன்னூறு மைல்களுக்கப்பால் ராம நகரத்தில் சுரங்க வேலைகள் அபரிமிதமாக நடைபெறுகின்றன. கணக்கின்றி தொழிலாளர்கள்தேவைப்



படுகிறார்கள். காற்று வாக்கிலே இந்த நற்செய்தியைக் காதில் போட்ட மனிதர்களை வாழ்த்திக்கொண்டே செல்லப்பா மதுரையில் ரயில் ஏறி ராம நகரம் வந்து சேர்ந்தான்

புயலடித்தவனுடைய வாழ்க்கையில் இங்கு தென்றல் வீச ஆரம்பித்திருக்கிறது.

வானத்திலே வெள்ளி நிலவு ஊர்ந்து சென்றுகொண்டிருந்தது. செல்லப்பாவின் இதயத்தில் லதாவைப்பற்றிய எண்ணங்கள் வேகமாகச் சுழன்று வந்தன.

'மிஸ்டர். செல்லப்பா!' செல்லப்பா தன்னைத்தானே லதா அழைப்பதுபோலக் கூப்பிட்டுப் பார்த்துக்கொண்டான். நினைவு தெரிந்த நாட்களாக அவன் பெயரைக் கனிவுடன் அழைக்கப் பெற்றோர் இல்லை. மாமா அவனைப் பெயரிட்டே அழைக்கமாட்டார். 'ஏண்டாலே!' என்றால் அவன் ஓடி வந்து அவர் முன் ஆஜராகிவிடுவான். மாமி அவனை அருமையாக, 'அந்தத் தோசிப் பய' என்று குறிப்பிடுவாள். உடன் பிறந்தவள் வாயில்லாதவள். அவளுடைய அன்பு மொழிகள், ஆசைப் பேச்சுகள் யாவும் ஒரு 'பெப்பே'யில் அடங்கிவிடும். ஆனால், அந்தப் பெண் தன் தம்பியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு கண்ணீர் சொரியும்போது இரும்பும் உருகிப் போகும்.

கண் முன்னால் ஒரு மோகன உலகம் தோன்றியது. 'மிஸ்டர். செல்லப்பா! நாம் இரண்டு பேருமாக இப்படி எங்காவது 'டூர்' போகலாமா?' லதா சிரித்தவாறு கேட்டாள். வழக்கமாகத் தலையைக் குனிந்துகொண்டான் செல்லப்பா. உன்னதமான அழகுப் பிம்பம் அவனைத் தன் செவ்வாய் திறந்து கேட்கும்போது அவன் நாக்கு ஏனோ புரள மறுக்கிறது? அட ஈச்வரா! வறுமைக்கும் காதலுக்கும் வெகு தொலைவு போலும்!

இன்னொரு ரசமான சம்பவம். 'உங்களை யார் சின்ன மனிதன் என்று சொன்னது? உள்ளத்தில் தான் உயர்வு ஏற்படவேண்டும்?' குழலின் நாதம்போல் ஒலிக்கும் அந்தத் தீங்குரலில் இருந்த கண்டிப்பும், கருணும்! அடேயப்பா! சாப்பாட்டு விடுதியின் கடிகாரம் இரவு மணி இரண்டு அடித்து ஓய்ந்தது. செல்லப்பா விழித்துக் கொண்டே இருந்தான். அருகில் சென்று அவனைக் கவனிப்பவர்கள், அவன் நன்றாகத் தூங்குவதாகத்தான் நினைப்பார்கள். கண்களை மூடி கற்பனையில் காதல் நினைவுகளில் ஈடுபட்டுத் தன்னையே மறந்த நிலையில் நெடு நேரம் அப்படியே படுத்திருந்தான்.

வைகறை குளுமையான காற்றைச் சுமந்து வந்தது. சாப்பாட்டு விடுதி சிப்பந்திகள் விழித்துக்கொண்டு அலுவல்களில் ஈடுபட்டிருந்தார்கள். தமிழ்நாட்டின் பெருமையை வடநாடெங்கும் பரவச் செய்த இட்டிலியின் மணமும், சாம்பாரின் வாசனையும் அவன் மூக்கைத் துளைத்தன.

வானில் நெடுந்தொலைவில் ஒரே ஒரு தாரகை மட்டும் பளிச் சென்று ஒளி வீசியது. கண்ணுக்கும், கற்பனைக்கும் எட்டாத அந்தத் தாரகையைப்போலவே லதா அவன் மனத்துக்குத் தோன்றினாள். இரவில் அவனுள் எழுந்த கற்பனைகள் யாவும் தேய்ந்த ஒரு கனவுபோல் ஆகி, விடியற்காலத்தில் மனதுக்கு எட்டாத உயரத்துக்குச் சென்று விட்டன. துயரமும், வேதனையும் நெஞ்சைப் பிழிய, விழிகளின் ஓரத்தில் நீர் கசிய செல்லப்பா கீழே கிடந்த துண்டை எடுத்து உதறியவாறு எழுந்தான்.

அவன் பல் விளக்கி முகம் கழுவிக்கொண்டு தன் அறைக்குள் நுழைந்ததும் அங்கே பிரம்பு மேஜைமீது வாடித் துவண்டு போன மல்லிகைச் சரம் ஒன்று இருப்பதைக் கண்டான். அந்தச் சரம்! ஆ...நேற்று லதாவின் கூந்தலிலிருந்து யசோதாவின் வீட்டு மாடிப் படிகளில் நழுவி விழுந்ததல்லவா? ஒரு திருடனைப்போல சரேலென்று குனிந்து அதை எடுத்து ஜேபியில் திணித்துக்கொண்டதும், அந்தச் சரம் எழுப்பும் இன்பமான மணத்தில் விருந்தின் மணத்தைக்கூட மறந்ததும் அவனுக்கு நினைவு வந்தது. கைக்குட்டையை எடுத்து முகம் துடைத்துக் கொள்ளும் போதெல்லாம் தன் காதலியின் மென்மையான ஸ்பரிசத்தை உணர்ந்த அனுபவத்தை அடைந்தான் செல்லப்பா. அவள் குழலை அலங்கரித்த அந்த மலரே உலகத்து இன்பங்களையெல்லாம் அவனுக்குக் காட்டியது. மாலை மலர்ந்து, காலை வாடும் அவைகளின் வாழ்வு குறுகிய காலமேயானாலும், அதற்குள் வாழ்க்கையின் இன்பத்தை அவை சிறை பிடித்து விடுகின்றன.

பால் நிலவிலே அவை அவள் கூந்தலில் மலர்ந்து சிரித்த சிரிப்புக்கு ஈடு இணை ஏது? துன்பமேயில்லாத குறுகிய வாழ்க்கை. ஆனால், அதில் மனிதன் நூறு வயதுவரை அனுபவிக்க ஆசைப்படும் இன்பங்கள் அனைத்தும் அடங்கி விடுகின்றன.

சிறிய ப்ளாஸ்டிக் பெட்டி ஒன்றை எடுத்து வாடிப்போன மல்லிகைச் சரத்தை அதனுள்

வைத்துப் பத்திரப்படுத்தினான். காதல் மணத்தை மனத்துள் வைத்துக் காக்கிறமாதிரி இருந்தது அவன் செயல்.

கீழே குழாயடியில் தட்டுகளும், டம்ளர்களும் 'ணங்ணங்' கென்று மோத அவசரமாகக் கழுவிக்கொண்டிருந்தான் ஹோட்டல் பையன்.

'மசாலா மூன்று!' மேல் பஞ்சமத்தை எட்டிப் பிடித்தது பணியாளர் ஒருவரின் குரல்.

இரண்டு வாளிகளில் தட்டுகள், டம்ளர்களைக் கழுவி நிரப்பிக் கொண்டு போய் வைத்த பையன் அவசரமாக மாடி ஏறி வந்தான். செல்லப்பாவின் அறைக் கதவைத் திறந்து உள்ளே எட்டிப்

# புதுக் கட்சி ஒண்ணு!

☆

[ மாயாண்டி - சங்கரன் ]

உச்சவரம்பு சட்டம் வர்ரது உறுதியாச்சுதாம்! -
ஊரைஆளும் நம்ப சர்க்கார் ஒத்துப் பாடுநாம்
அச்சத்தாலே ரொம்ப நிலக் காரரெல்லாம்!
அவசரமாய் விழுதுப்புட யோசிக் கிராங்களாம்
ஒருத்தருக்கு இத்தனை காணி நிலம் வச்சுக் துங்க
உரிமை யி . ணு கண்டிப்பாகச் சொல்ல வில்லேங்க
திருத்தமாகத் தீர்ப்புச் சொல்ல வேணும் பாருங்க?
தீர்ந்து போகும் மிராசுதாரு கவலை தானுங்க!
நிலத்தைப் பிரிச்சு விவசாயிக்குப் பங்கு போடங்க
நிச்சயமாய் ஆளும், நிலமும், சரிவரா துங்க!
சுலபமாக கூட்டுப் பண்ணை இண்ணு சொல்ராங்க
சுத்தமாக நல்ல விளைச்சல் குறைஞ்சு போவுங்க!
தட்டிப் பேச சருக்காருக்கு எதிர்க் கட்சில்லேண்ணு
தாம்பிடிச்ச முயலுக் குட்டிக்கு மூணு காலுண்ணு
வெட்டிப் பேச்சு பேசி இனிமே பயனில்லேண்ணு
வேண்டிக் கிட்ட ஜனங்களுக்கு "புதுக்கட்சி ஒண்ணு!"



பார்த்து, 'ஸார்! டிபன் இங்கேயே கொண்டு வரட்டுமா?' என்று கேட்டுக் குழைந்தான்.

'வேண்டாம்ப்பா! கீழே போய்ச் சாப்பிட்டுக் கொள்கிறேன்.'

'நேற்று ராத்திரி எங்கே ஸார் சாப்பாடு? நம்ப குண்டப்பன் உங்களுக்காக சூடா ரசம் வைத்திருந்தார்.'

'அப்படியா? எங்க முதலாளி வீட்டிலே பிறந்த நாள் விருந்து. சாப்பாடு அங்கே நடந்து விட்டது.'

'என்ன விருந்து ஸார்? சாப்பாடு பலமா? ஐட்டங்களைச் சொல்லுங்க பார்க்கலாம்...'

'வந்து... உருளைக்கிழங்கோ என்னவோ பொடிமாஸ் செய்திருந்தார்கள்...மல்லிகைப் பூ ரசம்...!'

பையன் ஒரே விழிப்பாக விழித்தான்!

மல்லிகைப் பூ ரசம்! அப்படியானால் அது பெரிய 'ஸ்பெஷல் ஐட்டம்'தான். பையனின் திணறலைக் கண்டு செல்லப்பாவுக்குத் தன் உளறல் நினைவுக்கு



வந்தது.

'அட, நீ போப்பா கீழே, முதலாளி பார்த்தா உன் சீட்டைக் கிழிச்சுடுவாரு...'

பையன் கீழே போகத் திரும்பியதும் தில்லையப்பன் சர்வர் குண்டப்பாவுடன் மாடி ஏறி வந்தான்.

(தொடரும்)

# நாடகமும் நாட்டியமும்

## அயனாவரம் அமெச்சூர்ஸ் 2-வது ஆண்டு விழா

அயனாவரம் அமெச்சூர்ஸார் தங்களது இரண்டாவது ஆண்டு விழாவை பெரம்பூர் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை இன்ஸ்டிட்யூட்டின் திறந்த வெளி அரங்கில் மூன்று தினங்கள் சிறப்பாக கொண்டாடினர்.

விழாவை மேற்படி பாக்டரி பிரதம மெக்கானிகல் என்ஜினீயர் ஸ்ரீ கிருஷ்ண ஸ்வரூப் ஜூன் 13-ந் தேதி துவக்கி வைத்தார். அவ்வை ஸ்ரீ டி. கே. சண்முகம் தலைமை வகித்தார்.

அன்றைய தினம் அந்த அமெச்சூர் குழுவினர் 'புரொடக்ஷன் நெம்பர் 3' என்கிற ஹாஸ்ய நாடகத்தை நடித்தனர். அதை எழுதியவர் ஸ்ரீ கே. பாலசந்தர்.

உதவி டைரக்டர் பாகம் ஏற்றிருந்த மணக்கால் மணி, சூபர்வைசரி டைரக்டராக வந்த தியாகராஜன், 'வேணு' சந்தானம், 'மஞ்சுபாஷிணி' கிருஷ்ணன், 'செட்டியார்' சீனுவாசன், கதாசிரியர் 'குருவி'யாகத் தோன்றிய ராமசாமி கோர்ட் ஸீன் 'கோகு'லாக வந்த பத்மநாபன் ஆகியவர்கள் நடிப்பு பாராட்டும்படி இருந்தனவாம்.

மறுநாள் சினிமாப் புகழ் ஸ்ரீ டி. எம். செளந்திரராஜன் இன்னிசை விருந்தளித்தார். கடைசி தினம் கோஸள சகோதரிகளின் நடனத்தை ரசிகர்கள் கண்டுகளித்தனர்.

## வி. ஸி. ஷண்முகம் — சகுந்தலா



சிவாஜி கணேசனின் தம்பி ஸ்ரீ ஷண்முகத்திற்கும், ஸ்ரீமதி சகுந்தலாவிற்கும் (சிவாஜியின் மைத்துனி) சென்ற 17-6-59 அன்று சென்னையில் விமரிசையாக விவாகம் நடந்தது. அரசியல் தலைவர்களும், படவுலக பிரபலஸ்தர்களும், நட்சத்திரங்களும் திரள் திரளாக வந்திருந்து மண மக்களை வாழ்த்தினர்.



## கிரிமினல் கிருஷ்ணஸ்வாமி

'அமெச்சூர் ஆக்டர்ஸ் க்ரூப்' அங்கத்தினர்கள் மா. ரா. எழுதிய 'கிரிமினல் கிருஷ்ணஸ்வாமி' என்கிற நாடகத்தை மயிலை ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் ஜூன் 20, 21-ந் தேதிகளில் நடித்தனர்.

நான் பார்த்த இரண்டு மணி நேரமும் பேச்சு மிஞ்சியதேயொழிய, நாடகத்தில் விறுவிறுப்பே ஏறவில்லை. சாதாரணமாக தமிழ் நாடகங்களில் பார்த்துப் பார்த்து அலுத்துப்போன குமாஸ்தா, கான்ஸ்டபிள்களின் அதிகப் பிரசங்கித்தனமான பேச்சுக்கு இந்நாடகத்தில் குறைவே இல்லை.

டி. எஸ். சேஷாத்ரி, கே. ராஜகோபால், எ. என். பொன்னம்பலம் ஆகிய மூவரின் நடிப்பு சீராக இருந்தது. 'சவுண்ட் சங்கர'னாக வந்தவர் மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்கியபடி பேச, நடிக்கவும் முயன்றார்.

## ஜெயஸ்ரீயின் நடன அரங்கேற்றம்



சங்கீத வித்வான் ஸ்ரீ டி. ஸ்ரீனிவாசய்யாவின் சிஷ்யை குமாரி ஜெயஸ்ரீயின் பரதநாட்டிய அரங்கேற்றம் எழும்பூர் மியூஸியம் தியேட்டரில் சென்ற வியாழன் மாலை நடந்தேறியது. 'பேசும் படம்' ஸ்ரீ டி. ஸ்ரீநிவாசனின் புதல்வி அவர்.

சட்டசபை சபாநாயகர் டாக்டர் யு. கிருஷ்ண ராவ் அவ்விழாவுக்குத் தலைமை வகித்து குமாரி ஜெயஸ்ரீயின் நடனத் திறமையைப் பாராட்டினார். நட்டுவாங்கம் புரிந்த ஸ்ரீ டி. சீனிவாசய்யாவையும் அவர் புகழ்ந்து பேசினார்.

—ஸஞ்சாரி.

நட்சத்திரர் பேட்டி:

# பாத்திரங்களுக்கேற்ற நடிகர்களைப் போடவேண்டும்

## எம். வி. ராஜம்மா கருத்து:

"கதைக்கேற்றவாறு பாத்திரங்களை உருவாக்கி, அவற்றிற்குப் பொருத்தமான, திறமையுள்ள நடிகர், நடிகைகளைத் தெரிந்தெடுத்தால் படத்தின் தரம் உயர்வாயிருக்கும்' என்று பிரபல நடிகை எம். வி. ராஜம்மா கூறினார்.

திருமதி எம். வி. ராஜம்மா தற்செயலாகவோ, அதிருஷ்டவசத்தாலோ, பெரிய படாதிபதிகளின் தயவாலோ சினிமாத்துறையில் புகழ் அடைந்தவரல்ல. பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில் அவர் உள்ளத்தில் ஏற்பட்ட ஆர்வத்தை பூரணமாக பயன்படுத்தி திரைப்பட உலகில் படிப்படியாக முன்னுக்கு வந்தவர்.

1936-ம் ஆண்டில் திரைப்பட உலகில் புகுந்த அவர், கிட்டத்தட்ட கால் நூற்றுண்டாகியும் தொடர்ந்து படங்களில் நடித்து வருவதே அவரது நடிப்புத் திறமைக்கு சான்று. பல படங்களில் பலவித பாத்திரங்களில் நடித்துள்ள இவர், தமிழ்ப் பட உலகின் படிப்படியான முன்னேற்றத்தை அனுபவ வாயிலாக அறிந்துள்ளதுடன் அந்த அனுபவத்தையொட்டி தன் நடிப்புக்கு மெருகூட்டிக் கொண்டு வந்திருக்கிறார். அவரே தனது பட உலக அனுபவத்தை கூறியதிலிருந்து இது புலப்பட்டது.

தமது வாழ்க்கை வரலாற்றைப்பற்றி அவர் பின்வருமாறு கூறினார்:—

நான் சேலம் ஜில்லாவில் உள்ள ஓசூரில் பிறந்தேன். பங்களூரில் உள்ள ஆர்யவர்த்த பாடசாலையில் எட்டாவது வகுப்பு வரை படித்தேன். அப்போதே எனக்கு நடிப்புக் கலையில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. பள்ளிக்கூட நாட்களில் மிகவும் ஊக்கத்துடன் நடித்து வந்தேன். அனேகமாக கிருஷ்ணன் வேடம் எனக்குத் தரப்பட்டது. நாளடைவில் நடிப்பு ஆர்வம் பெருகிக் கொண்டே வந்தது.

நான் முதலில் நடித்த படம் 'சம்சார நௌகா' என்ற கன்னடப் படம். இப்போது கட்டபொம்மன் திரைப் படத்தைத் தயாரித்துள்ள பி. ஆர். பந்துலு 'சம்சார நௌகா'வில் கதாநாயகன். நான் கதாநாயகியாக நடித்தேன்.

பிறகு 'கிருஷ்ண லீலா சந்தா' என்ற தெலுங்குப் படத்தில் நடித்தேன். அதைத் தொடர்ந்து யயாதி (தமிழ்) யில் நடித்தேன். பின்னர் 'உத்தம புத்திரனி'ல் பி. யு. சின்னப்பாவுடன் நடித்தேன். 'குமாஸ்தாவின் பெண்' என்ற படம்தான் நான் நடித்த முதல் தமிழ் சமூகப் படம். அதில் ஏ. பி. நாகராஜன் பெண் வேடம் தாங்கி நடித்தார் என்பது ரசமானது. பிரண்டு ராமசாமி அப்படத்தில் ஒரு முக்கிய நடிகர். குடுகுடு கிழவராக அவர் நடித்தார்.

'மதனகாமராஜன், அனந்த சயனம்' ஆகிய தமிழ்ப் படங்களிலும், 'பிரஹலாதா, ராதா ரமணு' ஆகிய கன்னடப் படங்களிலும் நடித்த பிறகு 'பக்த வேமனு', சிட்டாடல் தயாரிப்பான 'ஞான சௌந்தரி' ஆகிய படங்கள் எனக்கு ரசிகர்களின் அமோக ஆதரவை சம்பாதித்துக் கொடுத்தன.

நடிப்புக் கலையில் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்டு வந்துள்ள நான் பலவிதமான பாத்திரங்களையும் ஏற்று நடிக்க பழகிக்கொண்டதுடன், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மும்மொழிப் படங்களிலும் தொடர்ந்து நடித்து வந்திருக்கிறேன்.

கோகுலதாசி, விஜயலட்சுமி ஆகிய படங்களுக்குப் பிறகு நான் நடித்த வேலைக்காரி, லைலா மஜ்னு ஆகியவை எனக்கு பட உலகில் நிரந்தரப் புகழ் அளித்தன.

'தாய் உள்ளம்' என்ற படத்திலிருந்து எனக்குத் தாய் வேஷம்தான் தரப்பட்டு வருகிறது. பெண் மனம், கண்ணின்மணிகள் தங்கமலை ரகசியம், இல்லறமே நல்லறம், எங்கள் குடும்பம் பெரிசு, ஸ்கூல் மாஸ்டர் ஆகிய படங்களில் நானு தாய் வேஷம் ஏற்று நடித்துள்ளேன்.

இப்போது நான் சரவணு பிக்சர்ஸ் தயாரிக்கும் படத்திலும் தாய் வேடத்தில்தான் நடிக்கிறேன். அவ்வாறே குமார் பிக்சர்ஸ் தயாரித்து வரும் 'தளபதியின் தாய்' என்ற படத்திலும் எனக்குத் தாய் வேடம் தான்.

முன்பு வேலைக்காரி, லைலா மஜ்னு, ஞான சௌந்தரி ஆகிய படங்களில் இளமையான பாத்திரங்களிலும்சரி, இப்போது தாயார் வேடத்திலும்சரி உள்ளமுருக்கும் பாத்திரங்களாகவே நடித்திருக்கிறேன். இந்தவித குணசித்ர நடிப்புதான் எனக்கு மிகவும் பிடிக்கும்.

சோக கட்டங்களில் நான் நடிக்கும் போது அதிகமாக கண்ணீர் உருக்க கதறி அழுது ஆர்பாட்டம் செய்வது கிடையாது. உள்ளத்தைத் தொடும் வகையில் முகபாவத்தின் மூலம் சோக உணர்ச்சியை வெளிப்படுத்துவதே எனது வழக்கம்.

நான் 1943-ம் வருடம் 'ராதா ரமணு' என்ற கன்னடப் படத்தை சொந்தமாகத் தயாரித்தேன். பிறகு சொந்தப் படம் எடுக்கவில்லை. நான் நடித்து வரும் ஹிந்தி 'ஸ்கூல் மாஸ்டர்' படப்பிடிப்பு சில தினங்களில் முடிந்ததுடன் கன்னடப் படம் ஒன்றை சொந்தமாகத் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறேன்.

கன்னட ஸ்கூல் மாஸ்டரில் நடித்ததற்காக எனக்கு ஜனாதிபதி பரிசு தரப்பட்டது. 1958-ல் சிறந்த கன்னட நடிகை என்று சினிமா ரசிகர் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டேன்.

ரேடியோ கேட்பதும், புத்தகங்கள் படிப்பதும் எனது பொழுது போக்குகள். நாய், மான்கள், கிளி, பூனை, மாடு ஆகியவற்றை நான் என் வீட்டில் வளர்க்கிறேன். தோட்ட வேலை செய்வது எனக்கு மிகவும் பிடிக்கும்.

ஓசூர் அருகேயுள்ள அக்ண்டபள்ளி கிராமத்தில் நான் 10 ஆயிரம் ரூபாய் செலவில் பள்ளிக்கூடம் கட்டியிருக்கிறேன். அதைச் சென்ற மார்ச் மாதம் 10-ந் தேதி மந்திரி ஓர்தம்மாள் திறந்துவைத்தார்.



(பேண்ட் ஆசாமி)

"இந்தாப்பா! இப்ப மாசக் கடைசியாப் போச்சு! யாரும் கடன் தர மாட்டேங்குறாங்க. நீயாவது எட்டணா கொடேன்! முதல் தேதி திருப்பிக் கொடுத்துடறேன்!"

ஒரே வாரத்தில் வந்துவிடுவேன் சரோ! நீ ஒன்றுக்கும் பயப்படாதே! துணைக்குப் பக்கத்து வீட்டு மாமியை வரச்சொல்லியிருக்கிறேன்... ஜாக்கிரதையுடன் இரு...' என்று மனைவியிடம் சொல்லியபடி விடை பெற்றான் சுந்தரம்.

அவன் சுங்க இலாகாவில் ஒரு உயர்தர அதிகாரி.

சுந்தரத்தை ஏற்றிக்கொண்ட ஜீப்... விர்... ரென்று பறந்தது...

அவனை... அவன் சென்ற திசை நோக்கி நின்ற மங்கை சரோ, கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே திரும்பினாள்.

சரோ...பெற்றோர்களுக்கு ஒரே பெண்தான். ஆனாலும் அவளை சீராட்டிப் பாராட்டி வளர்க்க அவர்கள் செல்



# செய்யாத குற்றம்

வி.எஸ். சரவணபவன்

வத்தைப் பெற்றிருக்கவில்லை! எப்படியோ கஷ்டப்பட்டு அவளைப் படிக்க வைத்துவிட்டனர்!

ஏழைக் குடும்பம்! நிலையறிந்த மகள்! அதுவும் படித்தவள்...பின்பு கஷ்டம்... வறுமை அவர்களைப் பின்பற்ற முடியுமா?

கற்ற கல்வியின் உற்ற துணையுடன் குடும்பத்துக்கு உழைக்க ஆரம்பித்தாள் சரோ! தான் ஒரு ஆண் மகனாக இருந்தால் தன் கடமை இதுதானே என்பது அவள் வாதம்!

நமது குடும்பத்துப் பெண்கள் உழைக்க மற்றவர்கள் பிழைத்த நிலை என்றுமே கிடையாதே என அவள் பெற்றோர்கள் நினைக்கவில்லை...மகளின் கண்டிப்பு நிறைந்த கடமை உணர்ச்சியை மறுக்க வில்லை.

சுந்தரம்தான் அவள் மேல் அதிகாரி. முப்பது வயது இருக்கலாம்...பெயருக்கேற்ற அழகன்! கணீரென்ற குரலில், 'சரோ!' என்று ஒரு நாள் அழைத்தான்!

திடுக்கிட்டு திரும்பிய சரோஜாவை மற்ற பெண் குமாஸ்தாக்கள் கேலி நிரம்பிய புன்னகையுடன் நோக்கினர்!

ஆத்திரத்துடன் சுந்தரத்தை அணுகிய சரோஜா...கனல்போன்ற மொழிகளைக் கக்கினாள்...'என்னை இனி முழுப் பெயர் சொல்லி அழையுங்கள்... இல்லையேல், இன்றே என் ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளுங்கள்...!' என்றாள்.



மலர்ந்த புன்னகையுடன் 'நானே முடிவு செய்துவிட்டேன் சரோ! உன் ராஜினாமாவுடன் உன்னையும் ஏற்றுக் கொள்வதென்று!' எனக் கூறினான் சுந்தரம்.

இதில் எப்படி ஒப்புக்கொள்வாள் சரோ! சரியென சம்மதம் கூறத் தந்தையின் அனுமதியும் பெற வேண்டும் எனக் கூறினாள்.

வரன் தேடி அலையும் தொல்லை இல்லாமல் உயர்ந்த பதவி வகிக்கும் சுந்தரம் அவர்களுக்குக் கிடைத்ததை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டனர், சரோவின் பெற்றோர்கள்.



விரைவில் சுந்தரத்தின் இல்லத்தரசியானாள் சரோ! ஆனால், திருமணம் தடபுடலாக நடைபெறவில்லை: மிக சிக்கனமாக நடத்தி விட்டான் சுந்தரம்.

இதில்தான் சரோவிற்கு வருத்தம்! ஆபீஸில் பரிகாசம் செய்தவர்களை எல்லாம் அழைத்து விருந்து வைக்க வேண்டும் என்றாள் அவள்... அதை ஏனோ மறுத்துவிட்டான் அவன்!

ஓராண்டுகள் ஓடின!

இன்று தன் மணவாழ்வில் இரண்டாவது ஆண்டு ஆரம்ப தினம்...என்ற நினைவு அவள் மனதைக் கிளுகிளுக்கச் செய்தது!

சுந்தரம் வெளியூர் சென்று இரண்டு தினங்கள்தான் ஆகின! என்றாலும் மூன்று கடிதங்கள் வந்துவிட்டன!

அவன் மேலும் நான்கு தினங்கள் சென்றுதான் ஊர் திரும்ப வேண்டுமாம்! பிரிவைத் தாங்காத சரோ, தன் அன்பு இதயத்தை கடிதத்தில்...எழுத்தில் வடித்துக்கொண்டிருந்தாள்...

வாசல் கதவை யாரோ தட்டிய சப்தம் கேட்டது.

விரைவில் சென்று கதவைத் திறந்தாள்! பயங்கரமான தோற்றத்துடன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான்.

அவன் உருவம் சரோவிற்கு பயத்தை உண்டாக்கியது! அவன் தாடியின் கருமைக்கு உவமை கூற எதுவும் கிடையாது...அழுக்கு ஆடைகள் அவன் தரித்திர நிலைமைக்கு கட்டியம் கூறின...அவன் கண்களோ...இருக்குமிடம் தேடி நம்மை அலைய விட்டுவிடும். அவ்வளவு குழிவிழுந்து கிடந்தது!

...மன்னிக்கவேண்டும்! தவறுதலாக நேர்ந்துவிட்டது...சுங்க அதிகாரி சுந்தரம் வீட்டைத்தேடினேன். இது என்று ...ஒரு குறும்புக்காரச் சிறுவன் கூறிவிட்டான்...

...இல்லை...இல்லை! இந்த வீடுதான் ...நீங்கள் யார்?

...என்ன? இதே வீடுதானா! அப்படியென்றால் நீங்கள் யார்?...அவனின் மனைவியாக இருக்க முடியாது!... அவளை எனக்குத் தெரியும்...நீங்கள்... நீங்கள் அவன் முணுமுணுத்தான்.

...முதலில் நீ யார் என்று தெரிய வேண்டும்? என் கணவனைப்பற்றிக் கண்ணியக் குறைவான முறையில் பேசுகிறாய்! உன்னைப் போலீஸில் ஒப்புவிக்கவேண்டும்... சொல் ..நீ யார் என்று?

...அவசரப்படாதீர்கள்! நீங்கள் அவனின் ஆசைக்குரியவளாக இருக்கலாம்...ஆனால் மனைவியாக இருக்க முடியாது...நான் அவனது உடன் பிறந்த தம்பி...சகோதரன்.

...ஆம்! சூழ்ச்சி வலையில் சிக்கியவன்...அண்ணனின் விநோத ஆசைக்கு களம் அமைத்தவன்! பலியானவன்... ஏழு ஆண்டுகள் சிறையில் வாடி இன்றுதான் விடுதலை பெற்றவன்...என்றான் அவன்.

...ஐயோ! என் கணவரா சூழ்ச்சிக்காரர்? துரோகி? உடன் பிறந்த தம்பிக்கு ஊறு செய்தவர்...என்றால் நம்ப முடியவில்லையே........நடந்தவைகளைக் கூறுங்கள்...என்றாள் சரோ!

...நீங்கள் அவன் முகத்தில் களங்கத்தைக் கண்டிருக்க முடியாது...அவன் வாழ்வின் கறை மெல்லிய துணியால் மூடப்பட்டது அல்ல! இரும்புக் கவசம் அணிந்திருக்கிறது; அவனுடைய இதயம்! அவன் நடிப்பதில் மிகத் தேர்ந்தவன்...அவன் உள்ளம் நினைவு...செயல் இவைகள் துரோகம்...வஞ்சகம், சுயநலம் இவைகளைத்தான் பின்பற்றும்... புரிகிறதா...நான் சொல்வது?

...தவறாக நினையாதீர்கள்! என்னை மன்னித்துவிடுங்கள்! அவரின் பொறுப்பு மிக்க பதவி...ஆசை கொண்ட பேச்சு...இவைகளில் மயங்கிவிட்டேன்! முறைப்படி மனைவியானவள்தான் நானும்...

ஆனால், மனம் நினைந்து பிறருக்குத் துன்பம் இழைத்தது கிடையாது! இப்பொழுதுதான் உணர்கிறேன், திட்டமிட்டு செய்தால்கூட இவ்வளவு கஷ்டம் தர முடியாது ஒருவருக்கு...நான் மனமறியாமல் செய்துவிட்டேன் அவர் மனைவிக்கு! அவள் எங்கே இருக்கிறாள்? உங்களுக்கு பெற்றோர்கள் இருக்கிறார்களா, கூறுங்கள்?

...இருக்கிறார்கள்! இப்பொழுது அவர்கள் உங்களுடன் இல்லை என்றால்! இவனின் கறைபடிந்த வாழ்வுமேல் வெறுப்பு மேவி, எங்கேனும் ஒரு இடத்தில் ஒதுங்கி வாழ்வார்கள்!

...கறைபடிந்த வாழ்வு இல்லை...இப்போது...மிக மிகக் கௌரவமாகத்தான் வாழ்கிறார்...வெளியில் இருப்பவர்கள் அவரது ஈகைச் சிந்தனைக்கு மதிப்பு தருவார்கள். வேலை அலுவலகத்தில் பொறுப்புள்ள பதவிக்கு உரிய அத்தனை தகுதிகளும் பெற்றவர் என்று சொல்லுவார்கள்...ஆனால் இத்தனையும் போலி...என்று தெரிகிறது...நீங்கள் சொல்வதிலிருந்து!

வந்தவன் கூறினான் :—

...ஆமாம்! தன் வாழ்வின் முந்திய நிகழ்ச்சிகளை மறைத்து, தங்களிடம் அவன் தனக்கு உறவினர்கள் யாரும் கிடையாது என்று கூறியிருக்கலாம்... அதில்தான் தொக்கி நிற்கிறது சூழ்ச்சி!

சுந்தரமும் நானும்தான் குழந்தைகள், எங்கள் பெற்றோருக்கு!

எங்கள் தந்தை ஒரு வியாபாரி... நான் பிறக்கும் முன்னெல்லாம் செல்வம் தந்தையிடம் தங்குவதில்லையாம்... நான் பிறந்தவுடன் உருண்டு ஓடிக்கொண்டிருந்த செல்வம் தங்கியிருந்ததோடு அல்லாமல், ஏராளமாகத் தேங்கவும் ஆரம்பித்துவிட்டதாம்!

அதனால் என்னை செல்வம் என்றே அழைத்தார்கள்!

இருவரும் பள்ளிக்குச் சென்றோம்! சுந்தரம் கல்வி பெற்றதில் முன்னேறியதுடன் களவு...பொய்...இவைகளில் அதிகப் பயிற்சி பெற்றுவிட்டான்! எனக்கோ படிப்பே வருவதில்லை! இந்த திருட்டு...பொய்... இவைகளும் தெரிவதில்லை...

எங்கள் வீட்டில் தங்கியிருந்தாள் எங்கள் அத்தை! அவள் மகள் கலாவதி! ...அவர்களின் ஏழ்மையை விரட்டி ஆதரவு தருபவர் எங்கள் தந்தை.

நல்ல நிலைமையில் வியாபாரம் நடந்து கொண்டிருந்தது! அண்ணன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான்! நான் வீட்டில் தண்டச் சோறு தின்றுகொண்டிருந்தேன்!

இதனால் என்னைக் காட்டிலும் என் பெற்றோர்களுக்கு சுந்தரம் மேல்தான் அன்பு...வாஞ்சை...எல்லாம். இதனால் எனக்குதான் எப்போதும் கஷ்டம்.

அடிக்கடி அண்ணனின் சூதாட்டத் தோல்விக்குப் பலியாகும் பணத்துக்கு நான்தான் விசாரிக்கப்படுவேன்...தண்டனை அடைவேன்...இழிவுபடுத்தப்படுவேன்!

இப்போதெல்லாம் எனக்கு ஆறுதல் சொல்பவள் கலாவதிதான்! அவள் அன்பை நான் காதலாகக்கொண்டேன்! அவளோ அதை அநுதாபத்துடன் செய்வதாக நினைத்தாள்!

கலாவதியை எனக்குக் கல்யாணம் செய்து வைத்துவிடும்படி என் தந்தைக்கு யோசனை கூறும்படிக் கடைகணக்குப் பிள்ளைக்குக் கூலி கொடுத்தேன்!

மறுத்துவிட்டார் என் தந்தை! சோம்பேறிக்கு காதல் ஒரு கேடா என்றதுடன், அவளை சுந்தரத்துக்கு மனைவியாக்கி மகிழ்ந்தார்!

நான் மனம் மிக வருந்தினேன்! என்னைப் புரிந்துகொள்ளாத தந்தையின்பேரில் எனக்கு அளவற்ற கோபம்! என்ன செய்வது?...அவருடன் பேசுவதையே நிறுத்திக்கொண்டேன்.

பெற்றோரின் கண்டிப்பு அற்ற சுந்தரம், மிகவும் கெட்ட பழக்கங்களில் ஈடுபட்டான் மேன்மேலும்...

தினமும் குடித்துவிட்டு வரும் அவனை உண்மையில் தெரிந்துகொண்ட கலா, கண்ணீர் விட்டாள்! அவனைத் திருத்த வழியின்றித் தவித்தாள்!

அப்போது அவனுக்கு மற்றொரு வெற்றி! ஆம்...உயர்ந்த உத்தியோகம் கிடைத்தது...அவனுக்குப் படிப்பு மட்டும் இருந்தது! பண்பு...கட்டுப்பாடு... கிடையாதே! இந்தப் பதவியில் இவன் எப்படி நிலைப்பான் என நான் எண்ணினேன்!

நான் நினைத்தது எதுவும்தான் நடப்பதில்லையே! வேலை கிடைத்த பிறகு அவனுக்கு பெற்றோர்களின் பாராட்டு அதிகமாகக் கிடைத்தது! நான் ஊரைச் சுற்றி அலைந்தேன்.

ஒரு நாள்...வீட்டுக்குத் திரும்பிய எனக்கு ஆச்சரியமாக இருந்தது! சுந்தரம் ஒரு மாதம் விடுமுறை பெற்று வந்து இருந்தான்...என்னுடன் அவன் எப்போதும் சகஜமாகப் பேசுவதில்லை ...இந்த முறை அன்பாகப் பேசினான்...

அன்று இரவு...பக்கத்து அறையில் கலாவும் அவள் தாயாரும் பேசிக்கொண்டிருந்தார்கள்!

சுந்தரம் அவளை மிகவும் கொடுமை செய்கிறானும்! பாதி நகைகளை விற்றுவிட்டானும்! தினமும் சூதாட்டம், குடி ...என்று போய்விட்டு பாதி இரவில் தான் வருவானும். இதை நினைத்து வருந்தினாள் கலா!

பெற்ற குழந்தை அழும்போது அதற்குக் கொடுக்க ஒரு தாய்க்கு பால் இல்லை...ஆனால் அளவற்ற அன்பு மட்டும் இருக்கிறது...அன்பினால் அதன் அழுகையை நிறுத்த முடியுமா...தாய் தவிப்பாள்...ஆனால் கேவலம்...கொஞ்

சம் புட்டிப்பால் அழும் குழந்தையை சிரிக்கச் செய்துவிடுமே!

இதே தாயின் நிலைதான் கலாவிற்கு! மதுவும் சூதாட்டமும் புட்டிப்பால் எனத் தோன்றியது என் அண்ணாவுக்கு!

ஒரு நாள் இரவு! ஐயோ என்று எங்கள் தந்தையின் அலறல் கேட்டு ஓடினேன் நான்!

எங்கள் வீட்டு இரும்புப் பெட்டி திறந்து கிடந்தது! அதன் அருகில் எங்கள் தந்தை இறந்து கிடந்தார்!

திடுக்கிட்ட நான் தந்தையைத் தூக்கினேன்! அறைக்குள்ளிருந்து அண்ணா ஓடினான்! எனக்கு விஷயம் விளங்கியது.

பெட்டியை உடைத்துப் பணம் எடுத்திருக்கிறான் அவன். தடுத்திருக்கிறார் தந்தை! தாக்கியிருக்கிறான் மகன்!

வலிமை நிரம்பிய இளமைக்கு மெலிந்த உருவம் கொண்ட முதுமை பலியாகிவிட்டது!

தந்தை கொலை செய்யப்பட்டார்! அண்ணாவின் அறிவு சுழற்சியில் எல்லோரும் அகப்பட்டுக் கொண்டார்கள்! போலீஸார் வந்தனர்! எல்லோரையும் விசாரித்தனர்!

எனக்கும் தந்தைக்கும் தனியான தொரு பகையுண்டு என்றாள் தாய்! அது காதல் ஏமாற்றத்தால் ஏற்பட்ட மோதல் என்றார் கடை கணக்குப் பிள்ளை! அப்பாவைக் கொன்றுவிட்டாயேடா துரோகி என்றான் அண்ணா!

நான் கலாவை நோக்கினேன்! அவள், 'இல்லை!...இல்லை!...நான் கொலை செய்யவில்லை என்று சொல்லுங்கள்' என்றாள்!

அவளை வெறித்து நோக்கினான் அண்ணா! ஏற்கனவே அவனது கொடுமைக்கு அடிமைப்பட்டவள்! இனி என்ன செய்வாளோ அவளை என்று எண்ணினேன்!

நான் சொல்லியதை என் தாய்கூட ஒப்புக்கொள்ளவில்லையே! போலீஸார் எப்படி ஒப்புக்கொள்வார்கள்?

என்னைக் கைது செய்து தண்டிப்பதில்தான் தங்களின் கடமை நிறைவு பெறும் எனப் போலீஸார் நினைத்தனர்.

நீதிபதி! வக்கீல்! இவர்களின் கேள்விகள் என் இதயத்தில் ஈட்டிகளைப் பாய்ச்சின! சுழன்றடிக்கும் சூறாவளியில் தள்ளின!

பெண்களின் கூந்தலில் இருக்கும் போது மெல்லிய பட்டு ரிப்பன் எவ்வளவு அழகாகத் தோன்றும்...அதுவே ஒருவனின் தூக்குக் கயிறாக மாறிவிட்டால் எவ்வளவு பயங்கரம்!

இந்த நிலைக்கு ஆளாகிவிட்டேன் நான்! தந்தையைக் கொன்ற குற்றம் என்மேல் நன்றாக ஏறிவிட்டது...சுமப்பதைத் தவிர வேறு வழி ஒன்றும் இல்லை!

நீதிபதி தீர்ப்புக் கூறினார்!

கொள்ளையடித்துக்கொண்டு ஓடிவிட முயன்றவனை தகப்பன் தடுத்திருக்கிறார் ...தாக்குண்டார். மரணமடைந்தார். குற்றவாளி திட்டமிட்டுச் செயல் புரியவில்லை. திடீரென்று ஏற்பட்ட ஏமாற்றம் ... அவமானம் ... குற்றமிழைக்கச் செய்துவிட்டது! மொத்தமாக ஏழு ஆண்டுகள் தண்டனை கொடுக்கப்படுகிறது.

வெறுப்பு கலந்த பார்வையுடன் என்னை நோக்கினாள் தாய்!...வெற்றி கலந்த பார்வையுடன் வெளியேறினான் அண்ணா! சோர்ந்து போன இதயத்துடன் நடைப்பிணமாகச் சென்றாள் கலா! பூட்டிய கைவிலங்குகளுடன் மரத்துப்போன உணர்ச்சியோடு நான் சிறையில் தள்ளப்பட்டேன்.

தண்டனை பெற்ற எனக்கு என்றைக்கும் தீராத மற்றொரு வேதனை! அது தான் சுந்தரம் கலாவை வெறுப்பது! கொடுமை செய்வது!

கலா...குணத்தில் தங்கம்...உருவில் வைரம். எப்படியும் அவனைத் திருத்தி விடுவாள் என மனதைத் தேற்றிக் கொண்டேன். ஏழு ஆண்டுகள் ஓடின! எனக்கு சிறைவாசம்...உண்மையில் குற்றமிழைத்தவனுக்கு உங்களுடன் உல்லாச வாழ்க்கை! கலா என்ன ஆனாளோ?

நீங்கள் அவனைப்பற்றி நினைக்கிறீர்கள்! குணத்தில் ஸ்புடம் போட்ட தங்கம்! கடமையில் பரதனின் மறு பிறப்பு...அன்பில் (மஜ்னு) லைலாவின் வழித்தோன்றல் என்று!



எவ்வளவு சூழ்ச்சிபிடித்த இதயம் கொண்டவன்...என்று இப்போது தெரிகிறதா...உங்களுக்கு? என்றான் செல்வம்.

சரோஜா! விழிநீர் சிந்திச் சிலையென வீற்றிருந்தாள்...அவள் பேசும் சக்தியை இழந்தவள்போல் தோன்றினாள்!

அவள் மனதில் போராட்டம்! சுந்தரத்துடன் இனி வாழ்வதைவிட சாவது மேல் என நினைத்தாள்...ஆனால், அவன் மறுபடியும் வேறொரு பெண்ணை தேடிக் கொண்டு, விட்டால்...என்ன செய்வது?

மனப் போராட்டத்தின் முடிவு! செல்வத்துக்கு மகிழ்ச்சியைத் தந்தது! தன்னால் முடிந்த உதவியை செய்வதாக வாக்குறுதியளித்தான்.

அதன்படி சரோஜாவும் செல்வமும் கலா இருக்கும் இடம் தேடிக் கண்டு பிடித்தார்கள்!

செல்வத்தைக் கண்ட தாய், அவனை ஆரத்தழுவி அழுது புலம்பினாள்! அவள் நடந்த உண்மையைக் கலாவின்மூலம் தெரிந்துகொண்டிருக்கிறாள். அதனால் தான் அவள் சுந்தரத்துடன் இருக்க விரும்பவில்லையாம்!

கலாவிற்கு வாழ்வு தர இசைந்த சரோஜாவைப் பாராட்டினார்கள் செல்வமும், அவன் தாயும்! மகிழ்ச்சியோடு எல்லோரும் சரோவுடன் புறப்பட்டார்கள்!

கேம்பை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய சுந்தரத்தை வழக்கம்போல் வரவேற்றாள் சரோ! ஆனால், அவள் பின்னால் நின்ற கலாவைக் கண்ட சுந்தரம், திடுக்கிட்டான்!

இவளை நினைவு இருக்கிறதா? பெண்களைப் பொம்மைகளாக நினைக்கும் உங்களுக்கு?—என்றாள் சரோ!

ஐயோ! அவரை ஒன்றும் கேட்டுத் தொந்தரவு தராதீர்கள் என்று ஒரு அடி பின்வாங்கினாள் கலா!

வேகமாகப் பங்களாவினுள் நுழைந்த செல்வத்தைக் கண்ட சுந்தரம், மேலும் அதிர்ச்சியில் தள்ளாடினான்!

என்னை மன்னித்துவிடு அண்ணா! அன்று கருணை காட்டும்படி நீதிபதியைக் கேட்கச் சொல்ல? எனக்கு யோசனை சொன்னாய்! அதுமாதிரியல்ல இப்போது நான் சொல்வது!

கலாவின்மேல் நீ உண்மையான கருணை காட்டவேண்டும்! திறந்துவிடு உன் மனசாட்சியை! கொன்றுவிடு வஞ்சக நினைவை!

நீ செய்த குற்றத்துக்கு நான் தண்டனை பெற்றேன்! கலா...உத்தமி...இன்பத்தைப் பயிரிட வேண்டிய அவள் இதயத்தில், துன்பத்துக்கு அல்லவா விதை விதைத்துவிட்டாய்...

நினைத்துப் பார் நீ செய்தவைகள் சரியா...நாங்கள் குற்றவாளிகளா? படித்தவன்...பண்பு கெட்டவன்... பாசத்துக்கு எல்லை அமைத்தவன். யார்...யார்!

செல்வத்தின் இரும்புப் பிடியினுள் அகப்பட்ட சுந்தரம் திணறினான்... என்னை மன்னித்துவிடுங்கள்...மன்னித்துவிடுங்கள்...என அவன் தாயின் கால்களில் விழுந்து கதறினான்!

தாயின் கால்களில் வீழ்ந்த அவனைத் தாய் தேற்ற முடியவில்லை!...திமு...திமு...வென உள்நுழைந்த போலீஸார்... சுந்தரத்தை சோதனையிட வந்துவிட்டனர்...

போலீஸ் அதிகாரி கூறினார் :—

மிஸ்டர் சுந்தரம்...உம்மை கைது செய்கிறேன்...இப்போது நாங்கள் கைப்பற்றிய சாமான்கள் யாவும் நீங்கள் லஞ்சமாகப் பெற்றது என்பது எங்கள் குற்றச்சாட்டு...வாருங்கள் போகலாம்!

கலா...கதறினாள் ... சரோ . . பாவாயில்லை! தண்டனை பெற்றபின் திருந்தி விடுவார்—என்றாள்...

அம்மா...அம்மா! என்னை மன்னித்துவிடுங்கள்! செல்வம்! எல்லோரையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள் என்று விழிகளில் கண்ணீர் மல்க விடைபெற்றார் சுந்தரம்.

## அட்டைப் படக்கதை

# ஆபத்துக்குக்



நாலும் ஐந்தும் ஒன்பது...பலமாகச் சொன்னால் என்ன குழந்தைகளா! என்னைக் கண்டு யாரும் பயப்படக் கூடாது. தைரியமாப் பேசணும். நான் என்ன ராட்சஸனா?...'

'ராட்சஸன் இல்லாமல் மனிதரா? மனிதர் என்கிறதுக்கு உங்க மனசிலே கொஞ்சமாவது ஈரம் இருக்கா? இருக்கான்னு கேட்கிறேன்?'

சிறு பசலைக் குழந்தைகள் பிஞ்சுக் குரல் எழுப்பும் பள்ளியில் பருவக் குயிலின் பாகுக் குரலா?

ஆச்சர்யத்தால் விரிந்த ஆசிரியர் துரையின் விழிகள் வாசல் பக்கம் ஆசையுடன் பாய்ந்தன.

பதினெட்டு வயதுப் பாவை அவள்! மன்மதனின் பஞ்சபாணங்களையும் வஞ்சிக்கொடியாக வடித்து எடுத்த உயிர்ச் சித்திரமோ?...மனமும் விழிகளும் கொள்ளாமல் துரை மலங்க மலங்க ஒளிச்சுடர்களைப் புரட்டிய பொழுது மற்றொரு காட்சி இதயத்தை அசைத்தது. அவளின் இரு கால்களுக்கும் இடையே எட்டு வயது பையனொருவன் கண்களைப் பிசைந்து, வாயைக் கிழித்துத் தேம்பிக்கொண்டிருந்தான்.

அவள் முறுகிச் சிவந்த அரளி விழிகளை இரு நெருப்புச் சரங்களாக்கித் துரையைத் துளைத்தாள். துடித்துச் சிவந்து கன்றிய பையனின் வலது கையை லபக்கென்று பற்றி, துரையின் நெஞ்சுக்கு நேரே நீட்டினாள். 'இந்தப் பச்சைக் குழந்தையின் கையை உங்க பிரம்பு அப்பளமாப் பொரிச்சு வச்சிருக்கு. இதுக்குப் பெயர் என்ன? ராட்சஸத்தனம் தானே? என்று விம்மிய நெஞ்சிலிருந்து ஆத்திரத்தை விதைத்தாள்.

முதலில் அவன் மனத்தைக் குடைந்தாள். பொறுத்தான். இப்பொழுது மனிதத்தன்மையையே பூச்சிபோல் வெட்டுகிறாளே! தண்ணீருக்கு மேலே தலை நீட்டுகிற மீனின் வாலைப்போலக் குரலை நெளித்தான்: 'அந்தக் குழந்தை ஒண்ணும் பச்சை இல்லை; காய்ந்ததுதான். செல்வச் சீமானின் செல்லக் குழந்தையாக இருக்கலாம். அது வீட்டோடே. பள்ளிக்குப் பைக்கட்டைத் தூக்கிட்டு வந்துட்டா, எங்களுக்குப் பணக்காரக் குழந்தையும் பரதேசிக் குழந்தையும் ஒண்ணுதான். எங்களுக்கு அறிவைப் புகட்டுகிற வேலைதானே தவிர, அந்தஸ்தைத் திணிக்கிற வேலை இல்லை. உங்க பணக்காரக் குழந்தை முளைக்கிற முளையிலேயே அந்தஸ்தை எதிர்பார்க்குது. 'பாடத்தை ஏண்டா படிக்கலை'ன்னு கேட்டா, 'நீ ஏழை வாத்தியார். என்னையா கேள்வி கேட்கிறே?'ன்னு வாயடி கையடி அடிச்சான். அறிவுரையாலே திருத்துகிற மனிதக் குழந்தையாக இல்லை. அடிச்சாக் கறக்கிற திருட்டு மாடாக இருந்தான். அடிச்சேன். அவன் மட்டும் ஓடிப் போகாமலிருந்திருந்தா, அவன் தோலை உரிச்சு உப்புத் தடவி வெயிலிலே காயப்போட்டிருப்பேன். உங்க குழந்தைக்கு நான் ஆசிரியர். அவனுடைய நெளிந்த அறிவைக் குட்டிச் சீராக்கி ஓர் ஒழுங்குக்குக் கொண்டு



# காதல் இல்லை!

வாசவன்

'மன்னிக்க முடியாத குற்றம். இந்த ஓராசிரியர் பள்ளி தொடங்கின இந்த ஒரு வருஷத்துக்குள்ளே நீங்க பத்தாவது வாத்தியார். எட்டு வாத்தியார் தலையிலே என் தம்பிதான் குட்டிக்கிட்டிருந்தான். ஒன்பதாவது வாத்தியார் உங்களைப் போல, அவனை அடிச்சார். அதுக்காக அவரை எங்க அப்பா படுத்திய பாட்டை இந்தப் பசங்களுக்கிட்டேயே கேளுங்க. சொல்வாங்க. அவர் ராத்திரியோட ராத்திரியா ஊரைவிட்டே ஓடிப் போயிட்டார். இப்போ உங்களுக்கு நல்ல காலம். அப்பா ஊரிலே இல்லை. அவர் மத்தியானம் திரும்பி வருகிறதுக்குள்ளே ஓடிப்போயிடுங்க!'



வரவேண்டிய என் பணியில், எத்தனையோ பிரயோகங்கள் இருக்கலாம். இதிலே எல்லாம் பெத்தவங்க தலையிட்டால் பிள்ளை குட்டிச் சுவராகி விடும்.

'அவன் என் பிள்ளை இல்லை தம்பி என்று படபடத்தாள் அந்தப் பட்டு ரோஜா'

'மன்னியுங்க.'

'என்ன?' என்று ஒரு குதிக் குதித்த துரை, நிமிர்ந்து நெஞ்சை வளைத்தான். 'ஓடிப் போவதா

உங்க அப்பாவுக்குப் பயந்தா? நான் வீரத் தமிழன்...'

'மண்ணாங்கட்டித் தமிழன்! உங்க செங்குட்டுவன் பெருமையும், ராஜேந்திரச் சோழன் பெருமையும் இங்கே செல்லுபடியாகாது. இப்போ ஆபத்து வந்திருப்பது தமிழனுக்கல்ல ஐயா, உங்க தலைக்கு. அதைக் காப்பாற்றிக் கொள்ளுங்க.'

'தலை போனாலும் சரியே, தன்மானத்தை இழக்க மாட்டேன். இருந்து பார்ப்பேன் என்ன நடக்கிறது என்கிறதை! எனக்கு எச்சரிக்கை தருகிறதுக்காக இப்படி அழகான மகளைப் பெற்ற அவருக்கு என் நன்றி. நீங்க போகலாம்.'

எதிரே நின்றவள் அகங்காரத்துடன் சாட்டைப் பின்னலை நெஞ்சில் அறைந்து கொண்டாள். இன்னும் சிவன் செத்ததனமாகத் தேம்பிக் கொண்டிருந்த பையனை இழுத்துப் பிடித்தான். 'வாடா. தம்பி, போகலாம்.'

நடந்தவர்கள் வாசலைக் கடந்து மறைந்தார்கள். நின்றவன் சோர்வுடன் நாற்காலியில் அமர்ந்தான். குழி முயல் கூட்டத்தைப் போல விருக்விருக்கென்று விழித்துக் கொண்டிருந்த சிறுவர்கள், தங்கள் ஆசிரியரை அனுதாபத்துடன் பார்த்தனர்.

ஒரு பையன் உடம்பை எட்டு வளைவாக வளைத்தபடி எழுந்து நின்றான். இரண்டு அதரக் கீற்றுகள் பயத்துடன் அசைந்தன. 'சார்...பண்ணையார் பொல்லாதவர் சார். அவரைப் பகைச்சுக்கிட்டா யாரும் இந்த ஊரிலே குடி இருக்க முடியாது சார். ஆனா இப்போ வந்தாங்களே பூமாலை அக்கா, அவுங்க தப்பிப் பிறந்தவங்க சார். பட்டணத்திலே போய் நாலு கிளாசு படிச்சு வந்தவங்களில்லை? அதனாலே, ரொம்பத் தங்கமா இருக்காங்க சார். நீங்க அந்த அக்கா சொன்னதைப்போலே உடனே ஓடிப்போயிருங்க சார்......'

துரை பையனை உறுத்துப் பார்த்தான். பையனுடைய உயிர்தான் இப்பொழுது ஓடிக்கொண்டிருந்தது!

ஃ ஃ ஃ

பிற்பகல். கரும்பலகையில் நாலு கூட்டல் கணக்கைப் போட்டு, பையன்களை விடை எழுதும்படி பணித்துவிட்டு, நாற்காலியில் அமர்ந்தான் துரை. சிந்தனைவசமான நெஞ்சம் புற உலகின் வாசலான விழியைச் சாத்தியது.

'ஏ, வாத்தியாரே! உன்னைப் பண்ணையார் கூட்டிக்கிட்டு வரச் சொன்னாரு. புறப்படு.'

தடித்தனமாக மோதிய குரலைக் கேட்டுக் கண் விழித்தான் துரை. எதிரே முரடன் ஒருவன் முஷ்டியை அலைத்துக்கொண்டிருந்தான்.

அலட்சியமாக உதடுகளைக் குழைத்தான் துரை. 'பண்ணையாருக்கு என்னைப் பார்க்க ஆசையாக இருக்காமா? அப்படியானா பூமாலையோடே அவரை இங்கே வரச் சொல்; போ.'

'என்ன! பூமாலை அம்மாவோடேயா?'

'இல்லே; புஷ்ப மாலையோடே!'

'அப்போ நீ வரப் போவதில்லையா?'

'வருவேன், அவர் வந்து என்னை அழைச்சா!'

"ஊஹூம்!" என்று உறுமிய முரடன் விருதாபட்டிச் சனியனைப்போல விழுந்தடித்துக்கொண்டு ஓடினான்.

அரை மணி நேரத்தில் அதே முரடன் அங்கே வந்து சிங்கநாதம் செய்தான்: 'ஏய், வாத்தி! உன் திமிரான பதிலாலே எங்க பண்ணையார் ரொம்பக் கோபமா இருக்கார். உனக்கு உயிர் மேலே ஆசை இருந்தா, சின்னப் பண்ணையாரை அடிச்ச கையாலே பெரிய பண்ணையார் காலை வந்து பிடிச்சுக்க. இல்லாட்டி......'

'என்ன நடக்கும்?'

'சாயங்காலம் பள்ளிக்கூடம் விட்டவுடனே ஒழுங்கா வீட்டுக்குப் போய்ச் சேரமாட்டே. வாசல்லேயே உன்னை மடக்கி, அடிச்ச கையை வெட்டி நெருப்பிலே போட்டு எரிப்போம்.'

'இங்கே பூச்சி காட்டாதே. முடிஞ்சதை செய்யுங்க.'

முரடன் மார்பைத் தேய்த்துவிட்டுக் கொண்டு நடந்தான்.

ஃ ஃ ஃ

ஐந்து மணிக்கே முடிந்துவிடும் பள்ளி, அன்று ஆறு மணிவரை நடந்தது. பூமாலையிடம் 'வீரத் தமிழன்' என்று தன் மார்பைத் தட்டிவிட்டுக் கொண்டான் அல்லவா துரை? இப்பொழுது பூமாலை சொன்னதைப்போல அவன் மனத்தில் மண்ணாங்கட்டித் தமிழன்தான் இருந்தான். அந்த மண்ணாங்கட்டித் தமிழன் எந்தச் சமயத்திலும் பயத்தால் உதிர்ந்து போகத் தயாராயிருந்தான். ஊரில் கொடிக் கட்டி அரசாளும் பண்ணையாரிடம் பிழைக்க வந்த ஏழை வாத்தியார் வாலாட்டினால் என்ன நடக்கும்?

வாசலைப் பார்த்தால் நடக்கப்போவது என்ன என்பது தெரியுமே! அந்த முரடனும், அவன் கையாள் ஒருவனும் ஐந்து மணியிலிருந்தே கையில் அரிவாளுடன் சேர்ந்து அடித்துக்கொண்டிருக்கிறார்களே! இனி வகுப்பு நடத்துவதை வியாஜ்ஜியமாகக்கொண்டு பையன்களைப் பள்ளியில் அடைத்துப் போட முடியாது. ஏனென்றால், இருள் கூடி வருகிறது. வெளியூர்ப் பையன்கள் போகப் பறந்தனர்.

மணி அடிக்கப்பட்டது. அது அவன் மனத்தில் சாவோலம் போல ஒலித்தது. பிள்ளைகள் கூக்குரலிட்டுக் கலைந்தனர். தானும் தன் வினையுமாக மிஞ்சிய துரை, வீதியைப் பார்த்தான். இப்பொழுது அந்த முரடர்கள் பள்ளி வாசற்படியில் நின்று கொண்டிருந்தனர்.

'கைகளே! பறி போக இருக்கும் என் செல்வங்களே! எழுத்தறிவிப்பவனைக் கடவுள் என்று சொன்னவனைக் கும்பிடுங்கள். இது கடவுள்களுக்குப் போதாத காலம். எழுத்தறிவிக்கும் கடவுளுக்கும் போதாத காலம் வந்துவிட்டது. அந்தப் போதாத காலத்தின் அப்பாவிக் கடவுளுக்கு வாய்த்த கரங்களே, உங்களுக்கு என் இறுதி வந்தனம்.' வாய் முணுமுணுக்க வாசற்படியில் இறங்கினான்.

அவன்மேல் ஓடி வந்து விழுந்தார் ஒருவர். அடுத்தகணம் அவன் கைகளைப் பிடித்துக்கொண்டார் அவர். 'வாத்தியார் சார்! நான்தான் அகம்பாவம் பிடிச்ச பண்ணையார்......என் ஆளிடத்திலே பூமாலையோடே வந்து உங்களைப் பார்க்கச் சொன்னீங்களாமே! அதனாலே, என் பெண் பூமாலையோடே வந்திருக்கேன். என்னை மன்னிச்சிடுங்க. மன்னிச்சேன்னு நீங்க சொல்லலையானா நான் உங்க காலைப் பிடிச்சுக்குவேன். ஐம்பது வயசுக் கிழவன் காலைப் பிடிக்கிறது பாவம் இல்லேன்னுச் சொல்லுங்க, விழுந்திடுறேன்.' கண்ணீரில் உருகிக் கரைந்தது அவர் குரல்.



விழித்த துரைக்கு விளங்கியது ஒன்றும் இல்லை. மனிதர் காலைப் பிடிக்கக் குனிந்துவிட்டார். அவரைத் தடுத்து நிறுத்தி, 'உங்களை மன்னிச்சிட்டேன். தப்புக் காரியம் எதையும் செய்திடாதிங்க, பாவம்' என்றவன், அப்பொழுதான் பக்கவாட்டில் பார்த்தான்.

பூமாலை நின்று கொண்டிருந்தாள்.

தடுத்து நிறுத்திய துரையின் கைகளைப் பலமாகப் பிடித்துக்கொண்டார் பண்ணையார். 'புத்தி வருகிறதுக்காகப் பிள்ளைகளை வாத்தியார் அடிக்கிறது நியாயம்தான். என் ஆணவக் கொழுப்பாலே அப்போ அது அநியாயமாத் தோணுச்சு. அறிவை விதைக்கிற கையை வெட்டுகிறதுக்கும் ஆள் வச்சேன். அதுக்கு நீங்க செய்த காரியமும் சரிதான்......'

'நான் என்ன செய்தேன்?'

'தெரியாதது மாதிரி பேசிறீங்களே! உங்க இன்ஸ்பெக்டர் நண்பரிடத்திலே சங்கதியைச் சொல்லிட்டீங்க. அவர் அஞ்சாறு கான்ஸ்டபிளோடே வந்திட்டாரு. விலங்கைப் பார்த்ததுமே என் பிராணன் போயிடுச்சு. நாம் ராசியாப் போயிட்டோம்னு இரண்டு பேரும் சேர்ந்து சொன்னா, என்னை விட்டுட்டுப் போவாராம். இல்லையானா......மதிப்பா வாழ்ந்த பண்ணையார் திருட்டுப் பய மாதிரி கைவிலங்கைப் போட்டுக்கிட்டுத் தெருவிலே ஊர்வலம் போவாரு. பிறகு வாழுற ஜென்மமும் ஒரு ஜென்மமாகுமா? அப்படி ஏதாவது நடந்தா ஊருக்குத் திரும்பி வரமாட்டேன். எங்கேயாவது உயிரைப் போக்கிக்கிடுவேன். உயிர் எனக்குத் துச்சம். ஆனா, உலகம் தெரியாத மகளையும், மகனையும் நடுத் தெருவிலே விட்டுட்டுப் போக மனம் வரலை......செய்ததை மறந்து என்னைக் காப்பாத்துங்க. இனிமே யார் விஷயத்திலேயும் தலையிடமாட்டேன். வாங்க......இன்ஸ்பெக்டரிடத்திலே நாம் கூட்டாளிகளாகிட்டோம் என்கிறதை நேரே வந்து சொல்

னுக்கு பண்ணையாரின் நீண்ட உரையில் மன மாற்றம் இருந்தது; தன் தவற்றைப் புரிந்த வேதனை இருந்தது.

துரைக்குக்கூட வேதனைதான். அவனுக்குத் தெரிந்த இன்ஸ்பெக்டரா? அவரிடம் ரிப்போர்ட் கொடுத்தாளு? எப்பொழுது? இந்தத் தலைவேதனையை எப்படிச் சமாளிப்பது? ஒன்றும் தோன்றாமல் விறைத்த கட்டையாய் நின்றான்.

'இன்னம் உங்க மனசு இரங்கலையா?' பண்ணையார் பாதி அழுகையுடன் கேட்டார்.

'எப்படி இரங்குவார்?' என்று கேட்டது பூமாலையா? பண்ணையாரை அப்பால் நகர்த்திவிட்டுக்கொண்டே துரையின் முன்னால் வந்து நின்றாள். 'அப்பா, நீங்க படுத்தியபாட்டுக்கு இவர் சுலபமா மசிவாரா? நான் அவரைச் சமாதானப்படுத்திக் கூட்டி வாரேன். நீங்க முதல்லே போய், 'இதோ உங்க சிநேகிதர் வருகிறார்'ன்னு இன்ஸ்பெக்டரிடம் சொல்லுங்க. அதோடே அந்த அடியாட்களையும் விரட்டி விட்டுட்டுப் போங்க' என்றாள்.

பண்ணையார் சிறு குழந்தையைப் போல விரைந்து ஓடினார்.

இரண்டு நிமிஷங்கள் இருவருக்கும் இடையே மௌன வேலி வேய்ந்தன.

மூன்றாவது நிமிஷம் பூமாலையில் தேன் வடிந்தது. 'வருகிறீர்களா, போகலாம்?'

'போய் என்ன செய்வது? தெரியாத இன்ஸ்பெக்டரிடம், கொடுக்காத ரிப்போர்ட்டுக்காக எப்படிப் போய் ராசி பேசுவது?'

'உங்க திண்ணைலப் போக்கத்தானே அப்பாவை முன்னாலே அனுப்பிச்சிட்டு நான் உங்களோடே நின்னுட்டேன்?'

'நீங்க நின்னுமட்டும் போதாது. எனக்குத் தெரியாமல் நடந்திருக்கிற இந்தக் குழறுபடிக்குக் காரணம் யார்?'

'நான்!'

'எதுக்காக இப்படிச் செய்தீங்க?'

'அப்படிச் செய்யலையானு இந்நேரம் உங்க கை வெட்டுப் பட்டுப் போயிருக்கும். எங்க அப்பா பொல்லாதவர் என்கிற சங்கதியை உங்களிடத்திலே காலையிலே வந்து சொன்னேன். நீங்க அப்பொழுதே ஓடிப் போயிருந்தா, நான் இத்தனையும் செய்யத் தேவை இல்லாமேப் போயிருக்கும். உங்களுக்கு மாணுக்களைக் கண்டிக்கிறது நியாயம்னு தோணுச்சு. எங்க அப்பாவுக்கோ அது அவமானமாத் தோணுச்சு. ஊரிலிருந்து வந்தவுடன் விஷயத்தைக் கேட்டுப் பதறினார். அப்போதே பள்ளிக்கு வந்து உங்களை அவமானம் பண்ணி இருப்பார். ஆனா, நான் அதைத் தடுத்துட்டேன். அதனாலேதான் சமாதான தூதுவனாக அந்த முரடனை உங்களிடம் அனுப்பிவச்சார். நீங்களோ தூக்கி எறிஞ்சு பேசி, அவனைத் துரத்திட்டீங்க. அதுக்கப்புறம் எங்கப்பாவின் கோபத்துக்கு என்னாலே அணையாக நிற்க முடியலே.

'உங்களை எப்படித் தப்பிக்கவைக்கிறது? தவியாத் தவிச்சுத் தண்ணீராக உருகிய நான், காற்றாட ஏரிக்கரைப் பக்கம் போனேன். அங்கே நான் எதிர்பார்க்கலே, என் சென்னைத் தோழி ரஞ்சிதத்தோடே அவ்வண்ணன் சேகரைச் சந்திப்பேன் என்கிறதை. அவர் இந்த சர்க்கிளுக்கு இன்ஸ்பெக்டராக வந்திருந்தாராம். யாரோ ஒரு கொலைகாரனைப் பிடிக்க கோஷ்டியோடே வந்தாராம். ஆள் அகப்படாமே வெறுங் கையோடே திரும்பிய சேகரைக் கண்டதும் என் மனசில் குதி போட்டது!'

'எதுக்காம்?'

'அவரைக் கொண்டே உங்களை எங்கப்பாவிடத்திலேயிருந்து தப்ப வைக்கலாம் என்கிறதை நினைச்சு, அப்பா எத்தனை பொல்லாதவராக இருந்தாலும், போலீஸைக் கண்டா மட்டும் குலை நடுங்கும். சேகரிடத்திலே இன்னிக்கு நடந்த விவகாரத்தைச் சொன்னேன். நீங்க ஒரு ரிப்போர்ட்டுக் கொடுத்ததாகச் சொல்லச் சொல்லி வந்திருக்கிற படையோடே அப்பாவை ஒரு கலக்கு கலக்கச் சொன்னேன். அதுதான் இவ்வளவு தூரம் நடந்து, அப்பாவை உங்களிடம் ஓடி வந்து காலைப் பிடிக்கவைச்சிருக்கு. சேகர் உங்க சிநேகிதர் போலச் சரளமாகப் பேசுவார். நீங்களும் அது மாதிரியே பேசணும். இல்லையானா, எல்லோருக்கும் முன்னாலே என் சாயம் வெளுத்துப் போயிடும்.'

'உங்க சாயம் எப்போதும்போலே கெட்டிச் சாயமாகவே இருந்திட்டுப் போகலாமே? என் விஷயத்திலே உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை?'

'உங்க தங்கை சரோஜா உங்களைக் கவனிச்சுக்கும்படி கடிதம் எழுதி இருந்தா. பிறகு நான் அக்கறை இல்லாமே இருக்க முடியுமா?'

'உங்களுக்கு அவளைத் தெரியுமா?' என்று ஆச்சரியப்படுபவன்போலக் கண்களை உயர்த்தினான்.

'யாரைக் காது குத்துறீங்க? நானும் அவளும் ஒண்ணாப் படிச்சோம்கறது உங்களுக்குத் தெரியாதா? என்னை நெருங்காமலேயே எனக்காக எட்ட நின்று தவம் செய்தீங்களே, அதுகூட உங்களுக்குத் தெரியாதா?' என்று சிரித்த பூமாலை, சிந்தனையோடு மேலே தொடர்ந்தாள்: 'சரோஜா இன்னும்கூட எவ்வளவோ எழுதி இருந்தாள். என்னிடத்திலே உங்களுக்கு அபாரக் காதலாமே! நான் படிப்பை முடித்துக்கொண்டு ஊர் திரும்பியதும், நீங்க பைத்தியம் பிடித்தவர் போலாகிட்டீங்களாமே! என்னைப் பார்க்காமே இருக்க உங்களாலே முடியலியாமே! அதனால்தான், பி. ஏ. படித்திருந்தும், இந்தத் தற்காலிக ஆசிரியர் பதவியை அரும் பாடுபட்டுத் தேடி இந்த ஊருக்கு வந்தீர்களாமே! எனக்காக வந்தவர் என் தம்பியை அடிக்கலாமா? பகுத்தறிவைச் சீண்டி என் அப்பாவைப் பகைச்சுக்கலாமா? ஆபத்து வந்த காலத்திலும் என்னைப் பார்த்துக்கொண்டே இருக்க விரும்பி, ஊரைவிட்டு ஓடமாட்டேன்னு அடம் பண்ணலாமா?'

'நான் அடம் பண்ணினா என்ன? கெட்ட கழுதைக்குப் பட்டதே ஆதாயம்னு நினைச்சு ஒதுங்கிப் போக வேண்டியதுதானே?'

'ஒதுங்கிப் போனா உங்க கை என்ன ஆகிறது? அந்தக் கைக்கு நான் ஆயிரம் வேலைகளை வச்சிருக்கேனே!'

'நிஜமாகவா?'

'இல்லாமே இருந்தா நான் எதுக்காக இவ்வளவு பாடுபடப்போறேன்? உங்




"ஏம்பா என்ன ஒரே நெருப்பா தகிக்கறதே?"

"கண்டக்டர்: இதாங்க ஐஸ் ஹவுஸ் இறங்குங்க!!"

களுக்குத்தான் காதலிக்கத் தெரியும்னு நினைக்காதீங்க; எனக்கும் தெரியும்! அவசர காலத்தில் வெளிப்படுவது ஆணின் காதல். ஆபத்துக் காலத்தில் தன் மெல்லிய இதழை மலர்த்தித் தலைக்காட்டுவது பெண்ணின் காதல். இப்படி ஓர் ஆபத்து உங்களுக்கு வராதிருந்தா என் காதலை இத்தனை சீக்கிரமாக வெட்கம் கெட்டு வெளிக் காட்டிக் கொண்டிருக்கமாட்டேன்...இன்ஸ்பெக்டர் சேகரைக் கொண்டே நம்ம கல்யாணத்துக்கும் ஏற்பாடு செய்திடலாம். வாங்க போகலாம்.'

அவன் உடனே புறப்படவில்லை. உற்சாக மிகுதியால் என்னென்னவோ செய்தான். அவன் கைகளுக்கு பூமாலை வைத்திருந்த ஆயிரம் வேலைகள் அப்பொழுதே ஜரூராகத் தொடங்கி விட்டன!

பாவம், வெளிச்சம்! இருட்டுக் கண்கள் அவிந்து போயிருந்தன.




இடுப்பிலே தூக்கிச் செருகியிருந்த புடவைத் தலைப்பை எடுத்து உதறி விட்டபடி உள்ளே நுழைந்தாள் பானு. சற்று முன்பு அவள் முகத்திலே கொந்தளித்து புயல் வீசிய கோபம் இப்போது காணப்படவில்லை. அதற்கு மாறாகப் பச்சாதாபமும் வேதனையுமே குடிகொண்டிருந்தன.

அவளுக்குத்தான் அவசரப்பட்டு விட்டதாகவே தோன்றியது. மனிதராய் பிறந்தவருக்குக் கோபம் வருவது சகஜமே. அதற்கு அவள் மட்டும் விதிவிலக்கு அல்ல; ஆயினும் தன் கோபத்தை வெளிப்படுத்த எத்தனையோ வழிகள் இருக்கும்போது அவள் கொஞ்சம் கூட யோசிக்காமல் நடந்துகொண்டு விட்டாளே!

மாடி அறையினுள் நுழைந்த அவள் மூடிக்கிடந்த ஜன்னல் கதவுகளைத் திறந்துவிட்டாள். அவள் பார்வை யதேச்சையாகப் பக்கத்து வீட்டு முற்றத்திலே திரும்பியது. தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான் அவன்; அவன்தான் பாக்கியநாதன். பக்கத்து வீட்டுச் சொந்தக்காரன். வெந்நீரிலே துணியை நனைத்து கோழியின் கால்களுக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தான்.

பானுவின் உள்ளம் விம்மியது. அவள் விழிக்கடையில் தேங்கிய கண்ணீர் திவலைகளாக உருண்டு கன்னத்தில் வழிந்தோடின. பாவம்! வாயில்லா ஜீவன்! என்ன பாடு படுகிறதோ? கையோ, காலோ கொஞ்சம் இடித்தால் கூட நாம் வலியால் துடித்துப் போகிறோம். அந்த ஜீவனுக்குத் தன் வேதனையைச் சொல்லி அழக்கூட முடியாது.

அந்த வீட்டுக்கு அவர்கள் குடிவந்து முழுக்க ஒருமாதம் ஆகவில்லை. ஸ்டேஷனுக்கும் வீட்டுக்கும் ஒரு மைல் தூரம் இருக்கலாம். இருந்தாலும், பட்டணத்துச் சந்தடி இல்லாமலிருக்கிறதென்று அவர்கள் அங்கு குடிவந்தனர். தனி வீடு; ஒண்டுக் குடித்தனம் கிடையாது. வீடு அப்போதுதான் கட்டி முடிக்கப் பட்டிருந்தது. முதல் குடியே அவர்கள் தான். தெரு இன்னும் பூர்த்தியாகவில்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக ஐந்தாறு வீடுகளே இருந்தன.

பானு பள்ளிப் படிப்பை பூர்த்தி செய்துவிட்டாள். கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று அவளுக்குக் கொள்ளை ஆசை. அவள் ஆசையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அவர்கள் பொருளாதார நிலை இல்லை. நூற்றிருபது ரூபாய் சம்பளம் வாங்கும் அவள் தகப்பனார் இந்த அளவுக்காவது அவளைப் படிக்க வைத்தாரே!

வீட்டிலே வெட்டிப் பொழுதைப் போக்க விரும்பவில்லை பானு. பள்ளியில் ஸ்பெஷல் பாடமாகத் தோட்டம் போடுதலை எடுத்துக் கொண்டிருந்தாள். ஆகவே, வீட்டிற்கு முன்பு இருந்த இடத்தைக் கொத்திப் பூச் செடிகளைப் பயிராக்க விரும்பினாள். நன்றாகக் கொத்திப் பாத்திகளை அமைத்தாள். ரோஜா, முல்லை, மல்லிகை முதலிய செடிகளின் பதியன்களை வாங்கி வந்து நட்டாள். பால்ஸம் எனப்படும் நடைபாதை ஓரத்தில் பயிரிடும் பூச்செடி வகைக்காக அவள் சிரமப்பட்டுப் பாத்திகளை அமைத்திருந்தாள். தினமும் காலையில் எழுந்து பார்க்கும்போது, அப்பாத்திகள் கண்டவாறு கலைக்கப் பட்டுக் கிடக்கும். இந்த வேலையை யார் செய்கிறார்கள் என்பதை முதல் இரண்டொரு நாட்களுக்கு அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதன் பின்னர் ஒருநாள் அவளிடம் அத்திருடன் அகப்பட்டுக்கொண்டான்.

'திருடன்' வேறு யாருமில்லை, பக்கத்து வீட்டில் வளர்த்துவரும் கோழி தான். இதை அறிந்தபோது அவளுக்குப் பிரமாத கோபம் வந்தது. இரண்டு வீடுகளுக்குமிடையே காம்பவுண்டு சுவர் கிடையாது. வேலி என்ற பெயருக்கு இரண்டொரு மூங்கில் கழிகளை நிறுத்தி, அதில் முள் கம்பியை இழுத்துக் கட்டியிருந்தனர். கோழி அதன் வழியாக அவர்கள் வீட்டுக்கு வந்து அட்டகாசம் செய்தது. பாத்திகளை நகங்களால் குறுக்கும் நெடுக்குமாகக் கலைத்தபடி ராஜநடை போடும்போது, பானு ஆத்திரத்தோடு ஓடிவந்து அதை விரட்டுவாள். அப்போதைக்கு அது போய்விடுமே தவிர, சிறிது நேரத்துக்கெல்லாம் அது திரும்பவும் அவள் வீட்டுத் தோட்டத்தில்தான் இருக்கும்.

முதல்நாள் மாலையில் மிகுந்த சிரமப்பட்டு அபூர்வவகைச் செடியின் விதைகளை வாங்கிவந்து பாத்திகளில் போட்டிருந்தாள் பானு. காலையில் எழுந்து வந்தபோது கோழி ஆனந்தமாகப் பாத்தியைக் கலைத்துக்கொண்டிருந்தது.

பானுவுக்குச் சொல்ல முடியாத கோபம் வந்துவிட்டது. திண்ணையோரத்தில் கிடந்த செங்கல் துண்டு ஒன்றை எடுத்துக் குறிபார்த்து அதன் மீது எறிந்தாள். அவள் குறி தப்பவில்லை. வரப்போகும் விபத்தைப் பற்றிய சிந்தனையே இல்லாது தரையைக் கிளறிக்கொண்டிருந்த கோழியின் காலிலே வந்து விழுந்தது அவள் எறிந்த கல். கோழி கர்ணகடூரமாக அலறிக்கொண்டு ஓடிப் போய் வேலிக்கப்பால் விழுந்தது.

கோழியின் அலறலைக் கேட்டு உள்ளிருந்து ஓடிவந்தான் பாக்கியநாதன். தரையிலே விழுந்து துடிக்கும் கோழியைக் கையில் எடுத்து அணைத்தபடி, 'கோழியை யார் அடித்தது?' என்று அதட்டினான்.

'ஏன், நான்தான்!' என்று வேலி ஓரமாக வந்து நின்று பதில் அளித்தாள் பானுமதி.

'இப்படித்தான் வாயில்லா ஜீவனை அடிப்பதா?'

'பின்னே, கொஞ்சறதா? இங்கே வந்து பாருங்கள். அது செய்திருக்கிற அட்டகாசத்தை.'

'தரையைக் கால் நகங்களால் கிளறிக் கிளறி புழுப் பூச்சிகளைத் தேடுவது அதன் சுபாவம். நீங்கள் பாத்தி போட்டிருப்பது அதற்குத் தெரியுமா என்ன?'

'எத்தனைச் சிரமப்பட்டு, எவ்வளவு செலவு செய்து பால்ஸம் வாங்கிக் கொண்டு வந்து விதைச்சேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? க்ஷண நேரத்தில் கிளறி நாசப்படுத்திவிட்டதே...'

'ஓட்டினால் போய்டுமே!'



**சௌ. சுந்தராம்பாள்-சி. ராமநாதன்**

சென்னை அம்பீஸ் கபே உரிமையாளர் ஸ்ரீ கே. ஏ. சுப்பிரமணியன் சகோதரி சௌ. சுந்தராம்பாளுக்கும், சிரஞ்சீவி. பி. ஆர். ராமநாதன், எம். ஏ.-க்கும் விவாகம் சிறப்பாக நடந்தது.




'ஓட்டி ஓட்டி என் கையும் வாயும் தான் விழுந்து போச்சு...'

'வாஸ்தவம். அதற்காகக் காலை ஒடித்து விடுவதென்று தீர்மானித்து விட்டீர்களா? ஒரு பாத்தி போனால் இன்னொரு பாத்தி போடலாம். கோழியின் கால் ஒடிந்துவிட்டால் சரி செய்ய முடியுமா...'

மேற்கொண்டு அவர்களிடையே பேச்சு வார்த்தைகளுக்கு இடமில்லாமல், கொல்லையிலிருந்து அவள் தகப்பனார் கூப்பிடவே, பானு விருட்டென்று உள்ளே வந்து விட்டாள்.

பானுவுக்கு வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. பாக்கியநாதன் சொன்னபடி கோழிக்குக் கால் நொண்டியாகிவிட்டால்...?

அவளால் அதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. ஒரு பாத்திக்கு ஒன்பது பாத்தி புதியதாகப் போடலாம். கோழியின் உடைந்த காலைச் சரி செய்ய முடியாதே. நொண்டி நொண்டியபடி கோழி நடந்து செல்லும் காட்சி அவள் மனக்கண்ணிலே தோன்றி புழுபோலத் துடிக்கச் செய்தது. அவள் எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டாள்!

ஏறக்குறைய ஒருமாதம் ஓடிவிட்டது. பானுவின் மனக்குறை இன்னும் நீங்கியபாடில்லை. அன்றைய சம்பவத்துக்குப் பிறகு அவள் கோழியைப் பார்க்கவேயில்லை. ஒருவேளை அது செத்துத்தான் போய்விட்டதோ என்னவோ?

பாக்கியநாதனையும் அவளால் சந்தித்துப் பேச முடியவில்லை. அவள் கண்ணில் அவன் சரிவரப் படவேயில்லை. முன்பெல்லாம் காலையில் சிறிது நேரமாவது தோட்டத்தில் விச்ராந்தியாக அமர்ந்திருப்பான். இப்போது அது கூடக் கிடையாது. காலையில் சுமார் அரைமணி நேரம் தோட்டத்தில் வேலை செய்கிறான். கொஞ்சம்கூட அவளை நிமிர்ந்து பார்க்கவில்லை.



அவனை எப்படியாவது சந்தித்து தன் தவறைச் சொல்லி வேதனையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று தவித்தாள் பானு. அவனோ குனிந்த தலை நிமிராது இருந்துவந்தான்.

பாக்கியநாதன் தோட்டத்திலே செடிகள் தலைதூக்கின. இரண்டொரு வாரங்களில் பூக்களும் மலர்ந்தன. எந்தப் பால்ஸம் விதை விதைத்தப் பாத்தியைக் கோழி கிளறி சண்டைக்கு வழி வைத்ததோ, அதே செடி அவன் வீட்டு வாயிலில் பூத்துக் குலுங்கியது. பாவம்! பானுமதி உள்ளூற வேதனையால் வெந்து மடிந்தாள்.

அன்றையத் தினம் விடியற்காலை நேரம். பானு சற்று சீக்கிரமாகவே எழுந்துவிட்டாள். செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள். யதேச்சையாகத் திரும்பியவள் பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் பாக்கியநாதன் இருப்பது தெரிந்தது. குடத்தைக் கீழே வைத்துவிட்டு வேலி ஓரமாகச் சென்றாள். அதே சமயம் பாக்கியநாதன் கட்டு பூக்களுடன் அவளை நோக்கித் திரும்பினான்.

'இந்தா, உனக்கு வேண்டிய அளவு பூ இருக்கிறது' என்று அவளிடம் நீட்டினான்.



நடுங்கும் கைகளோடு அவனிடமிருந்து அதை வாங்கிக் கொண்டாள்.

'அன்றைக்கு... வந்து... வந்து... நான்...' என்று சொல்லமுடியாமல் தடுமாறினாள். வார்த்தைகள் வெளி வராமல் தொண்டையிலே அழுங்கின.

'உன் நஷ்டத்தை ஈடு செய்துவிட்டேன். தினமும் வேண்டிய அளவுக்குப் பூப்பறித்துக்கொள். கோழியின் கால் நொண்டியாகிவிட்டதே. அதை ஈடு செய்ய உன்னால் முடியுமா?'

பானுவின் கண்களிலிருந்து நீர்த் திவலைகள் பொலபொலவென்று கொட்டின.

'என்ன?... கால் நொண்டியாகி விட்டதா?...' என்று விம்மிய குரலில் கேட்டாள்.

இரண்டடி எடுத்து வைத்த பாக்கியநாதன் திரும்பி அவளைப் பார்த்தான்.

'ஆமாம்...சந்தோஷம்தானே? இனிமேல் உன்வீட்டுத் தோட்டத்துக்கு அது வராது...'

'மன்னித்து விடுங்கள் பாக்கியநாதன்! அவசரத்தில் நான் செய்துவிட்ட தவறுக்காகச் சென்ற ஒன்றரை மாதமாக நான் பட்டுவரும் வேதனை சொல்லி முடியாது. உங்கள் வீட்டுக் கோழியின் காலை நொண்டியாக்கிவிட வேண்டுமென்று அடிக்கவில்லை. அரும்பாடு பட்டுப் போட்டிருந்த பாத்தியைக் கலைத்து விட்டதே என்று ஆத்திரத்தில் அவ்வாறு நடந்து கொண்டுவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்' என்று விசும்பல்களுக்கிடையே சொன்னாள் பானு.

அருகில் வந்த பாக்கியநாதனின் முகத்திலே மெல்லிய சிரிப்பு மலர்ந்தது.

'பானு!...' என்று அன்போடு கூப்பிட்டான்!

'பைத்தியமே! அழாதே. என் கோழிக்கு ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. அதன் காலிலே ஒரு நரம்பு உள்ளூறப் பிசகியிருந்தபடியால் சரிவர நடக்க முடியாமல் இருந்துவந்தது. நீ அடித்த அடியில் அந்தக் குறை நீங்கி விட்டது. பானு!' என்றான்.

'நிஜம்மாவா?...' என்று ஆச்சரியத்தோடு கண்கள் அகலவிரியக் கேட்டாள் பானு.

'ஆமாம், பானு!'

'நான் என்ன வேதனைப்பட்டிருக்கிறேன், தெரியுமா?'

'இன்றென்று, பானு, நான் கேட்கலாமா வேண்டாமா என்று யோசனை




பண்ணுகிறேன்...' என்று இழுத்தான் பாக்கியநாதன்.

'ஏன், தாராளமாகக் கேட்கலாமே!...' என்றாள் பானு.

'கோழிக்கு இருந்த குறையை நீ நிவர்த்தி செய்தாய். அதேபோன்று வாழ்க்கையில் அவையின்றி தனித்திருக்கும் என் நிலையையும் சரிபடுத்துவாயா'?

பானுவின் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்தது. சொல்ல முடியாத ஆனந்தத்தில் திளைத்தாள்.

'என்ன! சொல்கிறாய், பானு?' என்று கேட்டான் பாக்கியநாதன்.

கலகலவென்று சிரித்தாள் பானு. 'அப்படின்னா, இன்னொரு கல்லையெடுத்து உங்கள் காலையும் ஒடிக்கச் சொல்லுகிறீர்களா?...' என்று சிரிப்புக்கிடையே கேட்ட பானு கீழிருந்து ஒரு கல்லைப் பொறுக்கி விளையாட்டாக அவனை நோக்கி ஓங்கினாள்.

'உஸ்... பானு! பின்னால் பார்!' என்றான் பாக்கியநாதன்.

பின்னால் திரும்பிய பானு வெட்கத்தால் கையிலிருந்த கல்லைக் கீழே போட்டுவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். அங்கே அவள் தகப்பனார் சிரித்தபடி நின்றுகொண்டிருந்தார்.

'என்ன, மாப்பிள்ளை, என் பெண் கல்யாணத்துக்கு முன்பே உங்களை மிரட்டுகிறாளா?' என்று கேட்டுவிட்டுச் சிரித்தார்.

'போங்கோ, அப்பா!' என்று சொல்லிவிட்டுச் சிட்டாய் பறந்துவிட்டாள் பானு.

உள்ளே முற்றத்தில் உலர்ந்திருந்த நெல்லைக் கொத்திக்கொண்டிருந்தது பக்கத்து வீட்டுக் கோழி. இப்போது அவள் அதை அடிக்கவில்லை. ஒரு பிடி நெல்லை வாரி அதை நோக்கி இறைத்து 'நிறைய சாப்பிடு!' என்று சொல்லிவிட்டுச் சென்றாள். நஷ்டஈட்டை வசூலிக்காமல் மேலும் தன்னையே நஷ்டமடையச் செய்த அந்தப் பாகிருதியை எண்ணி எண்ணி குதூகலம் அடைந்தாள் பானு.

★





# தியாகி

ராஜ்

திருவையாறு என்றால் சங்கீத வித்துவான்களுக்கும், சங்கீத அபிமானிகளுக்கும் உடனே தியாகையர் வாள் நினைவுதான் வரும், தை மாதத்தில் அங்கு நடக்கும் ஆராதனை உத்சவம் ஞாபகத்துக்கு வரும். ஆம். சங்கீத தேவதை குடி இருக்கும் இடத்தில் சங்கீதத்தைத் தவிர - வேறு எதை நினைவு கூற முடியும். உற்சவத்திற்கு முன் காலியாக அமைதியாக இருக்கும் தியாகராஜ சமாதி பஞ்சமி ஆராதனையின் போது கோலாகலத்துடன் பார்த்த பந்தல், மின்சார ஒளி, 'மைக்'கின் ஒலி, சமாராதனை இவைகளுடன் ஒரு தேவபுரி போல் விளங்கும். கும்பல் குழுமி, செவி நிரம்ப இன்ப கானங்களும், வயிறு நிரம்ப பிரசாதமும் உண்டு கலைந்துவிடும். மறுபடியும் அடுத்த ஆராதனை வரும் வரை அங்கு அமைதியும், சாந்தியும் தான். ஜனங்கள் வருவார்கள், போவார்கள், சமாதியில் தியாகய்யர்வாள் ஆழ்ந்த நித்திரையில் இருப்பார்,

ஆனால் சமாதியில் ஒரு ஆத்மா எப்பொழுதுமே உலாவி வருவதைக் காணலாம். கட்டுக்கட்டாக விபூதி அணிந்து, வெளுத்த கேசம், மீசை, தாடியுடன் கௌபீன தாரியாக கையில் ஒரு கமண்டலம் ஏந்தி அங்கு ஐயர்வாள் கீர்த்தனைகளை சுருதி சுத்தமாக, இனிய குரலால் பாடிக் கொண்டு காலங்கழிப்பார். அவரைப் பார்த்தால் பயமில்லை, பக்தி வரும், வாயில் இன்பமொழி, வருபவர்களை அன்புடன் அழைப்பார், அங்கு வரும் யுவதிகளுக்கும் பாடத் தெரியும் என்று கண்டுகொண்டால் லேசில் விடமாட்டார். 'தாயே சுவாமிகள் முன் பாடவேண்டும். அவர் கீர்த்தனை ஒன்று பாடவேண்டும்' என்று உற்

சாகமூட்டி உட்கார வைத்து பாடக் கேட்டு அனுபவிப்பார். இளம் வித்துவான்கள் அங்கு வந்து 'சாமி! இந்த வருஷம் ஆராதனைக் கச்சேரிகளில் எனக்கு இடம் கிடைக்கவில்லை' என்று வருத்தப்படுவார்கள். 'அட அசடுகளா! மேடைமேல் ஏறி கச்சேரி செய்தால் தான் ஐயர்வாளுக்கு உவப்பு என்ற எண்ணமா, பிடில், மிருதங்கம் பக்க வாத்தியங்களுடன் சண்டமாருதமாகப் பாடி சுவர யுத்தம் செய்தால்தான் சங்கீதமா, உட்காருங்கள் ஆரம்பமாகட்டும் 'சாலகல்ல' என்று ஆபி ராகத்தில் எடுத்துக் கொடுப்பார். இளம் வித்துவான்கள் பாட ஆரம்பித்துவிட்டதும் கண்மூடி மௌனியாவர். அவர்கள் பாடி முடிந்ததும் 'பலே! ஐயர்வாள் அனுக்கிரகம் உங்களுக்கு பூர்ணமாக வரும். சாதகம் செய்து மேலும் முன்னுக்கு வாருங்கள்' என்று இங்கிதமாகப் பேசி அனுப்புவார். இளம் வித்துவான்களும் ஒரு திருப்தியுடன் செல்வார்கள். சிறுவர், சிறுமியர்கள் அங்கு வந்தாலும் அச்சிறு குரல்களை எழுப்பி சுநாதத்தைக் கிளப்பிவிடுவார்; பாடத் தெரியாது என்று சொன்னால் அவர்களை உட்கார வைத்து சிறு கீர்த்தனை ஒன்றை சொல்லிக் கொடுத்தனுப்புவார். சுமார் அறுபத்தைந்து வயது ஆன சாமியாரின் உடல் நல்ல வனப்புடன் காட்சி அளிக்கும், எல்லாம் சங்கீத யோகத்தின் விளைவு போலும்! ஒரு விசேஷம், சங்கீதத்திலேயே மூழ்கி, அங்கு ஐயர்வாள் சமாதியைச் சுற்றிவரும் அந்த மகானை விழாவின்போது காணவே முடியாது. எங்கிருப்பாரோ, எங்கு போவாரோ ஆள் பந்தல்போட ஆரம்பிக்கும் நாளிலிருந்து பந்தல் பிரிக்கும் நாள்வரை மாயமாய் மறைந்துவிடுவார். அநேக வித்துவான்களும் அவரை உத்சவத்தின்போது அங்கு இருந்து தங்களை ஆசீர்வதிக்கும்படி கேட்பார்கள். ஆனால் அவர் இதுவரை இணங்கினதாகத் தெரியவில்லை; அவர் பாடகர்களை ஏதோ அவமரியாதை செய்வதாக எண்ணுவதற்கில்லை. ஏனென்றால் உத்சவம் முடிந்த பிறகு சில பிரபல வித்துவான்களைத் தனிமையில் சந்தித்துச் சமாதியில் அவர்களைப் பக்க வாத்தியங்கள் இல்லாமல் பாடச் சொல்லி கேட்டு மகிழ்ந்திருக்கிறார். தவிரவும் அநேக பிரபல, பாடக பாடகிகள் அவர் வேண்டுவதற்கு முன்பே ஒரு நாளைக் குறிப்பிட்டுக்கொண்டு வந்துவிடுவார்கள். அப்பொழுது அவர் சங்கீதம் அனுபவிப்பதைக் காண்பதே ஒரு காட்சி 'அப்பனே! ஆண்டவா! அமிர்தம்! அமிர்தம்!' என்று கூறி அனுபவிப்பதை அந்த வித்துவான்களே வந்து கூறக் கேட்கலாம். ஒரு ஆண்டியை, அவர் விரும்பும் சங்கீதச் செல்வத்தை இயன்றவரை வழங்கி அவர் ஆசியைப்பெற விரும்பும் சங்கீத வித்துவான்களின் பண்பு தமிழ் நாட்டுப் பண்பைத்தான் குறிக்கிறது. இந்த மகானின் பெயர் முதலில் 'தியாகராஜசாமியர்' என்று ஆரம்பித்து 'தியாகசாமியார்' ஆகி 'தியாகி'யாக வந்து நின்றது.

இந்த ஐயர்வாள் ஆராதனை உத்சவத்தில் வருடந்தோறும் கலந்துகொள்ளும் பாக்கியம் எனக்கு உண்டு, தியாகியைப்பற்றியும் கேள்விப்பட்டதுண்டு, நேரில் கண்டதில்லை. போன வருடம் திருவையாறு உற்சவம் கொடுத்து வைக்கவில்லை. அது ஒருவிதத்தில் நல்லதுதான் என்று பட்டது. ஏனென்றால், தஞ்சை சென்ற நான், திருவையாறு தியாகய்யர்வாள் பிருந்தாவனத்திற்குச் சென்றேன். அங்கு தியாகியைக் கண்டேன். அளவளாவினேன், அவருடன் சேர்ந்து சில கீர்த்தனங்கள் பாடினேன். 'அடாடா அவர் முன் உட்கார்ந்தால் என்ன உற்சாகம், என்ன கொம்மாளம், சங்கீதாஞ்சலி செய்யும் போது அடையும் புளகாங்கிதம் எழுத முடியாது, அனுபவிக்க வேண்டும். அவருடன் கான ருசியை சுவைத்தது தவிர ஒரு முக்கியமான விஷயம் அவரைப் பற்றி தெரிந்துகொள்ள முடிந்தது. ஆராதனை உற்சவத்தின்போது திருவையாற்றில் ஏன் தங்குவதில்லை என்பதை ரொம்பக் கேட்டுக்கொண்டதன்பேரில் விளக்கினார். அந்தக் கதையை அவர் வாயிலாகவே கேளுங்கள்.

இன்றைக்குச் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் வண்ணாத்தங்கரையில் பஞ்சாபகேசய்யர் என்று ஒரு மிராசுதார் இருந்தார். அவரை அப்படி அழைத்தால் ஒருவருக்கும் தெரியாது. 'வண்ணாத்தங்கரை மைனர்' என்று சொன்னால்தான் தெரியும். அவருக்கு ஏக நில புலன்கள், தான்ய லட்சுமியும், தன லட்சுமியுமாக தாண்டவமாடுவாள் அவர் இல்லத்தில். ஐயரோ பார்ப்பதற்கு ஆஜானுபாகு, காதுகளில் ஜொலிக்கும் வைரக் கடுக்கன்கள், நல்ல உட்டாணி வைரம் பட்டாணிபோலிருக்கும், முப்புரிநூல் மார்பில் புரளும், சேலம் ஜரிகை வேஷ்டி பத்தாறு பஞ்சக்கச்சம் கட்டிக்கொண்டு, விபூதி அணிந்து, கம்மென்று கலவைச் சந்தனம் பூசிக் கொண்டு விளங்குவார். அவர் ஒரு சங்கீதப் பைத்தியம் நாதோபாசனை செய்தவரல்ல, ஆனால் சுநாதத்துடன் வரும் எந்த சங்கீதமுமே அவரைக் கவரும். வித்துவான்கள் அவரிருக்குமிடம் தேடி வருவார்கள், எப்பொழுதும் சங்கீதத்தின் நடுவிலேயே இருப்பார். ராம நவமி உற்சவம் அமக்களமாகக் கொண்டாடுவார். எத்தனை கச்சேரிகள், நாட்டியங்கள். அந்த மகானுக்கு ஒரு பிள்ளை பிறந்தான், வளர்ந்தான் அவன் பிறந்ததில் மகிழ்ச்சி, அவன் வளர்ச்சியில் அக்கறை. பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார். சங்கீதத்தைச் சொல்லி வைத்தார். அவனும் படித்தான், பாடினான். தந்தையின் எண்ணத்தை பூர்த்திசெய்து சத்புத்திரனாக வாழ ஆசைப்பட்டான். வீட்டிற்கு வரும் வித்துவான்கள் அவனை உற்சாகப் படுத்தி கீதங்கள், வர்ணங்கள், கீர்த்தனைகள் என்று சொல்லிக் கொடுத்தார்கள்.



ஐயர் வீட்டிற்கு நாலு வீடுகள் தள்ளி ஒரு சிறு வீடு உண்டு. அங்கு விசாலாட்சி என்ற அம்மாள் அவள் ஒரே மகள் சங்கரியுடன் வசித்து வந்தாள். சங்கரியை நல்ல அழகுடையவள் என்று சொன்னால் அவளை முழுவதும் வர்ணித்ததாகச் சொல்லமுடியாது.

அவள் அழகு என்றால் தெய்வீக அழகு, அகன்ற கண்கள், குழியும் கன்னங்கள் சிவந்த உதடுகளில் தவழும் புன்னகை. அவள் எங்கிருந்தோ அந்த கிராமத்துக்கு வந்துவிட்ட மோகினி. பரம ரஸிகை; சங்கீதம் கேட்பதில் பிரியம், கற்பதில் ஊக்கம். பணம் கொடுத்து பாட்டுச் சொல்லிக்கொள்ள முடியவில்லை. ஆனால், கேள்வி ஞானத்தில் சிறந்திருந்தாள். மைனர் மகனுக்கு 19 வயதிருக்கும். சங்கரி 16 வயது இளமங்கை. இருவர்களும் இணைந்துவிட்டால், இதுவே பஞ்சாபகேசய்யருக்குத் தோன்றியது. இருவரையும் புருஷன் மனைவியாகப் பிணைத்துவிடுவது என்று ஏற்பாடு ஆயிற்று. சிறு உள்ளங்கள் சந்தோஷத்தால் பூரித்தன. ஆனால், திட்டம் நிறைவேற வேண்டாமா. ஒரு நாடகம்தான் நடந்து முடிந்தது.

சென்னையிலிருந்து ஒரு வாலிபன் அருணஜடை—அவள் அத்தை மகன்—எங்கிருந்தோ வந்து குதித்தான். ஆள் பார்ப்பதற்கு கட்டழகன், அறிவில் சூன்யம். பெண்களின் மனப்போக்கே விசித்திரமானது; மைனர் மைந்தனை மணக்க இசைந்தவள், அருணசடையைக் கண்டதும் மனமாறிவிட்டாள். அத்தை மகனை பலவிதமாக உபசரித்தாள், உள்ளூரானிடம் காணமுடியாத இன்பத்தை அவனிடமிருந்து அடைய எண்ணினாளோ என்னமோ, மனம் மாறிவிட்டாள்; அவனுக்கு வாழ்க்கைப்படத் துணிந்துவிட்டாள். அந்த வாலிபனும் எப்படியோ அவளை மயக்கிவிட்டான். 'பெண்ணே! உடல் வளர்ச்சியில் ஊக்கம் வேண்டாம், அறிவு வேண்டும், பண்பு வேண்டும்' என்ற உபதேசங்கள் ஏறவில்லை. மனப்புண்ணுடன் புதிதாக வந்தவனை அணுகி, அப்பனே வரித்து விட்டேன். விட்டுக் கொடு என்று கெஞ்சியதும் பயனளிக்கவில்லை. 'என் முறைப் பெண்ணடா. கிட்ட நெருங்கினால் சுட்டுப்பிடுவேன்' என்ற எச்சரிக்கைதான் கிட்டியது.

திருவையாறு ஐயர்வாள் உற்சவம் ஏற்பாடாகிக்கொண்டிருந்தது. அப்பொழுது கட்சி பேதங்கள் கிடையாது. பெரிய கொட்டாரப் பந்தல் போட்டு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன.



மைனர் மகன் அங்கு சென்றான், அருணசடையும் வந்திருந்தான். மாலை நேரம். அருணசடையும், ஐயரின் பிள்ளையும் காவேரி படித்துறையில் உட்கார்ந்திருந்தார்கள். தோல்வியடைய விருப்பமில்லாத அந்த பிள்ளை ஒரு முன்னேற்பாடு செய்திருந்தான். ஒரு கடிதத்தை நீட்டினான். 'அருணசடை சங்கரி எனக்கு இன்று ஒரு கடிதம் எழுதி இருக்கிறாள்' என்றான். 'என்ன உனக்கா என்ன எழுதி இருக்கிறாள்' என்ற கேள்வி பிறந்தது. 'நீதான் படித்துப் பாரேன்.' 'படிப்பானேன். நீயே சொல்லு போதும்.' 'ஒன்றுமில்லை மடையன் அருணசடை என்னை அடையப் பார்க்கிறான். எழுத்தறிவு இல்லாதவன். அவனை மணப்பதைவிட காவேரியில் விழுந்து சாவேன். நான் உங்களுக்கேதான்' என்று எழுதி இருக்கிறாள். அந்தக் கடிதத்தைக் கையிலிருந்து, பிடுங்கினான் சுக்குநூறாகக் கிழித்தான் ஓடும் ஜலத்தில் வீசி எறிந்தான். அவன் நெற்றி நரம்புகள் புடைத்தன. மிருகமாக மாறினான் அருணஜடை. 'எழுத்தறிவில்லாதவன் எனக்குப் படிக்கத் தெரியாது' என்று தானே ஏச்சு. அவளைக் கொல்வதற்குமுன் உன்னை ஒழித்துக் கட்டுகிறேன் என்று ஐயர் மகனை அணுகினான். அவனோ நீந்துவதில் சமர்த்தன் 'டால்' என்று தண்ணீரில் குதித்துவிட்டான். அருணசடையும் குதித்தான். ஆனால், பாவம் அவன் பட்டணத்துப் பிள்ளை, நீரைக் கண்டவனல்ல, கட்டபாரைபோல் ஜலத்தில் உள்ளே போனான், அவன் வெளியே வரவில்லை. அவன் பிணம் மிதந்து ஒதுங்கியது. அன்று பஞ்சாபகேசய்யரின் திருக்குமாரன் மனமாற ஒரு பொய் சொன்னான். அருணசடைக்கு எழுத்து வாசனை இல்லை என்பதை தெரிந்துகொண்டு. சங்கரியின்மேல் உள்ள காதலினால், சூழ்ச்சி செய்தான். அது வேறு விபரீதமாகப் போய்விட்டது. விஷயம் அத்துடன் போகவில்லை. அத்தானைப் பிரிந்த சங்கரி துடித்தாள், கதறினாள், எங்கோ மாயமாக மறைந்துவிட்டாள், எங்கு போனாள், என்ன ஆனாள் என்பது யாருக்கும் தெரியாது. அவள் போனபின் பஞ்சாபகேசய்யர் மகன் பித்துப்பிடித்தவன் போல் ஆனநிலை கண்டு துயரடைந்தார். ஊராரின் ஏச்சு, அருணசடை மரணம், சங்கரியின் மறைவு எல்லாம் சேர்ந்து அவரை தாக்கியது. அந்த தாக்குதலிலிருந்து அவர் மீளவில்லை. அவர் மகன் இந்த சூழ்நிலையில் எப்படித்தான் வாழமுடியும், தன்னையே நொந்தான், தன் சொத்துக்களை தருமத்துக்கு எழுதி வைத்தான், துறவறமே பூண்டான். அவன் கதி இப்படியாயிற்று. இந்தச் சமாதியை சுற்றி வந்து கொண்டு காலங்கழிக்கிறான். அருணசடை தியாகய்யர்வாள் ஆராதனை உற்லவத்தின்போது உயிரை விட்டதால் அந்த நாட்களில் தியாகி சாமியார் வைபவங்களில் கலந்துகொள்வதில்லை' என்று மேற்கண்ட விவரங்களைக் கூறி முடித்தார் பூர்வாசிரமத்தில் தியாகராஜனாக விளங்கிய 'தியாகி' சாமியார். கதையைக் கூறி முடித்துவிட்டு 'அப்பனே இந்த கட்டைக்கு இன்னும் எத்தனை நாட்களோ. கட்டையை கீழே போடுமுன் சங்கரி என்னவானாள் என்று தெரிந்துகொள்ள ஆசை உண்டு. இதுவரை எனக்கு எவரும் அவளைப் பற்றி விவரமே தெரிவிக்கவில்லை' என்று நொந்துகொண்டார். அந்த முற்றும் துறந்த சந்நியாசியின் கண்கள் ஈரமானதுடன் என் கண்களிலும் என்னையறியாமல் நீர் சுரந்தது.

'சுவாமி அந்த விவரங்களை நான் கேள்விப்பட்டதுண்டு. சொல்லட்டுமா' என்றேன்.

'அப்பனே சொல் கேட்கிறேன். அவள் சுகமாக இருக்கிறாளா.'

'சுவாமி! அருணசடை இறந்த மூன்றாம் நாள் சங்கரியை வீட்டில் காணவில்லை. இங்கு ஐயர்வாள் திருவிழாவிற்கு வந்தவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடம் திரும்பிக்கொண்டிருந்தார்கள். இரவு சென்னை செல்லும் போட்மெயிலில் ஏற ஒருவர் ரயில் பாதை வழியாக ஓடி வந்துகொண்டிருந்தார். அங்கே தண்டவாளத்தருகில் தலைவிரித்து ஓர் உருவம் நின்றுகொண்டிருந்தது. ஒருகணம் அம்மனிதர் பிசாசோ என்று பயந்துவிட்டார். ஆனால் அது ஒரு பெண் என்று தெரிந்ததும், அங்கு நின்ற நோக்கம் 'தற்கொலை' என்று கண்டுகொண்டதும், நல்ல வார்த்தைகள் சொல்லி அப்பெண்மணியை வெகு சிரமத்துடன் பம்பாய்க்கு அழைத்துச் சென்றுவிட்டார். நாளடைவில் அவர்களுக்குத் திருமணம் நடந்தது. ஒரு புத்திரனைப் பெற்றார்கள். அந்தப் பையன் பெரியவனாக வளர்ந்து ஒரு உத்தியோகத்தில் அமர்ந்தான். அவன் தாய் தியாகராஜர் கீர்த்தனைகளை அவனுக்குச் சொல்லிக் கொடுத்து வருடந்தோறும் திருவையாறு ஆராதனை உற்சவத்துக்கு அனுப்பி வந்தாள். இந்த வருஷம் ஆராதனை உற்சவத்துக்கு அப்பையன் வரமுடியாமல் போனது அந்தத் தாய் ஆராதனை அன்று உயிர் நீத்ததே காரணம். அவள் உயிர் விடுமுன் தன் மைந்தனிடம் தன் சோகக் கதையைச் சொன்னாள். தியாகிசாமியாரைப் பற்றிக் கேட்டிருந்தாள்; பம்பாயிலிருந்து அந்த பையன் வரும் பொழுதெல்லாம் சாமியாரைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. இப்பொழுதுதான் அந்த பாக்கியம் அவள் பிள்ளைக்குக் கிடைத்தது! என்று கூறி முடித்ததும். 'அப்பனே! நீ சங்கரியின் பிள்ளையா' என்று என்னைக் கட்டிக்கொண்டார். 'ஐயோ சங்கரி போய்விட்டாளா. பாவி நான் இன்னும் உயிருடனிருக்கிறேன். அப்பனே அவள் நல்ல நிலையிலிருந்து நல்ல மகனைப் பெற்று உயிர்விட்டாளா. இன்றே என் மனது சுவாதீனத்துக்கு வந்தது. அப்பனே! சங்கரிக்குச் சங்கராபரணம் என்றால் உயிர். நீ அழகாகப் பாடுகிறாய். எங்கே 'மனஸுஸ்வாதீனமை' கீர்த்தனம் பாடு என்றார்.

நான் பாடத் தொடங்கினேன். அவர் கண்களில் நீர் வடிய யோக நித்திரையில் ஆழ்ந்தார்.


தோற்றங்கள்
வைரம்
பாதசாரிகளுக்கு லாரியும் பஸ்ஸும் எமன் போலத் தோன்றும்!
உபாத்தியாயருக்குப் பிள்ளைகளின் தோற்றம்!
விருந்தாளி வருவது ஒரு பட்டாளமே வருவதாகத் தோன்றும்
பிடில் வாசிக்கும் மனைவியின் தோற்றம்!
மாப்பிள்ளைக்கு மாமனார் ஒரு புழு போலத் தோன்றலாம்!
மாமனாருக்கு மாப்பிள்ளை ஒரு விஷப்பாம்பாகத் தோன்றும்!
மருமகளுக்கு மாமியாரின் தோற்றம்!
மாமியாருக்கு மருமகள் ஒரு வேலைக்காரி போலத் தோன்றும்!
பல விதம்!
சில வீடுகளில் கொடுக்கப்படும் காப்பியின் தோற்றம்!
அடுத்த வீட்டுக்காரரின் மோட்டார் கட்டை வண்டி போலத் தோன்றலாம்!
கல்யாணத்துக்கு முன் மானாகவும் மயிலாகவும் தோன்றும் அதே பெண்— — — — — —
கல்யாணத்துக்குப் பின் இப்படி இருப்பது போலவும் தோன்றலாம்!
தாயாருக்குத் தன் குழந்தை கிருஷ்ண விக்ரஹம் போலதான் தோன்றும்!
மனைவிக்குத் தன் புருஷன் ஒரு அம்மாவின் கைப்பொம்மை" என்கிற தோற்றம்!
ஓரமா போயேன் சுத்த எருமை மாடு!
காரில் போகிறவருக்குப் பாதசாரியின் தோற்றம்!
ஓட்டல்காரருக்கு சாப்பிட வருபவர்கள் இப்படித் தோன்றுவதால்தான் கல்லையும் மண்ணையும் தோலையும் போடுகிறார்கள்!

# வாழவைத்தவள்

ஆர். கே



காரியாலயத்தில் வேலை செய்து கொண்டிருந்த சேகரிடம், ஒரு கடிதத்தை கொண்டு வந்து கொடுத்தான் வேலைக்காரப் பையன். முத்து முத்தாக எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை படிக்கலானன் சேகர்.

அன்புள்ள சேகருக்கு,

'வாழ்க்கையில் என்னைப்போல் அபாக்கியவதிகள் அதிகம் இருக்க மாட்டார்கள். பல வருடங்கள் கழித்து வந்துள்ள என்னுடைய இந்தக் கடிதம், உங்களுக்குப் பழைய சம்பவங்களை ஞாபகப்படுத்தும் என்று நினைக்கிறேன். அதற்காக உங்களிடம் நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். என் துன்பகரமான வரலாற்றை உங்களுக்கு கூற விரும்புகிறேன். ஆதலால், நான் உங்களைச் சந்தித்து, என் கதையைக் கூறவேண்டும். அப்பொழுதுதான் என் மனம் சாந்தியடையும். தங்கள் மனைவி பார்வதிக்கு, என் வணக்கங்கள்.'

இப்படிக்கு,
நிர்மலா.

கடிதத்தை மேஜையின்மேல் போட்டான். மேலே சுற்றும் மின்சார விசிறியைப்போல சேகரின் பழைய கால நினைவுகளும் சுற்ற ஆரம்பித்தன.

ஃ ஃ ஃ

அப்பொழுது சேகர், 'பி. ஏ.' வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். எல்லாவற்றிலும் முன்னணியில் நிற்கும் அவனுக்கு, 'காலேஜ்' நாடகத்திலும் நல்ல பெயர். அன்று வருடாந்தர கொண்டாட்டம். சேகர் நடிக்கும் நாடகம் அன்று இருந்தது. தான் நடிக்கும் நாடகத்திற்கெல்லாம், முதல் வகுப்பில் வந்து அமர்ந்திருந்து, தன் நடிப்பை ரசிக்கும் அந்த அழகியப் பெண்ணை, சேகர் காணத் தவறமாட்டான். ஆனால், அவளைப்பற்றி அறிய அவன் ஒன்றும் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. அன்றும் வழக்கம்போல் நாடகம் பார்க்க அவள் வந்திருந்தாள். நாடகம் வெற்றிகரமாக நடந்தது. முதல் பரிசு தட்டிக்கொண்டு போன சேகரை எல்லோரும் போற்றினார்கள். 'மேக்கப்' அறையில் இருந்த சேகரை காண வந்தாள், அந்த முதல் வகுப்பில் அமர்ந்திருந்த பெண்.

'நமஸ்காரம்! என் பெயர் நிர்மலா!' என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்.

பதிலுக்கு வணக்கம் தெரிவித்தான் சேகர். அப்பொழுதுதான் அவளைக் கூர்ந்து நோக்கினான். அவள் உண்மையிலேயே பேரழகிதான். 'காலேஜி'ல் எவ்வளவோ நாகரீகப் பெண்களைப் பார்த்திருக்கிறான். ஆனாலும், 'அவர்களெல்லாம் இந்த அழகிக்கு ஒப்பாவார்களா!' என்று எண்ணமிட்டது அவன் மனது.

'உங்கள் நடிப்பு இன்றைக்கு மிகவும் நன்றாக இருந்தது!' என்று அவள் இனிமையான குரலைக் கேட்ட பிறகுதான் தன் நினைவை அடைந்த சேகர், அவளை நோக்கி 'ரொம்ப நன்றி' என்று கூறினான்.

'நாளைக்கு என் பிறந்த நாள்! நீங்கள் கண்டிப்பாய் என் வீட்டிற்கு வர வேண்டும்' என்று கூறி, ஒரு பத்திரிகையை அவனிடம் கொடுத்தாள்.

'கண்டிப்பாய் வருகிறேன்' என்று கூறிய சேகர் மீது, அர்த்தபுஷ்டியுடன் ஒரு பார்வையை செலுத்திவிட்டு மறைந்தாள் அந்த வனிதை.

நிர்மலாவின் பிறந்த தின விழாவுக்குச் சென்ற சேகரை, தன் தாய் தந்தையருக்கு அறிமுகப்படுத்தினாள் நிர்மலா. அன்றைய நாளிலிருந்து சேகரும், நிர்மலாவும் சகஜமாகப் பழகத் தொடங்கினர். நிர்மலாவுடன் பழகி அவளுடைய தூய உள்ளத்தைப் புரிந்து கொண்ட சேகர், தன்னைப் போல் அதிர்ஷ்டசாலி யாரும் இல்லை என்று எண்ணி இறுமாப்பு அடைந்தான். நிர்மலாவின் அழகிய முகமும், அடக்கமான பேச்சும் அவனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. பணக்கார வீட்டுப் பெண்ணாக இருந்தாலும், அவளிடமுள்ள அடக்க ஒடுக்கம் பற்றி எண்ணி எண்ணி வியப்படைந்தான். நிர்மலாவும், சேகரிடம் மிகவும் அன்பாகத்தான் பழகி வந்தாள். சேகரை மணப்பதனால், தனக்கு கிடைப்பதற்கரிய ஒரு பொருள் கிடைப்பது போன்று எண்ணினாள்.

சேகரும் நிர்மலாவும் காதலிப்பது போல், நாட்களும் வேகமாக ஓட ஆரம்பித்தன. அன்று, நிர்மலாவுடன் படம் பார்க்க கிளம்பிக்கொண்டிருக்கும் சேகரை, அவனுடைய தந்தையின் குரல் தடுத்து நிறுத்தியது.

'சேகர்! நீ இந்த மாதிரி நிர்மலாவுடன் பழகுவது எங்களுக்குக் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை' என்று கோபமாகக் கூறினார்.

திடுக்கிட்ட சேகர், 'நான் அப்படியொன்றும் தவறுதலாகப் பழகவில்லை, அப்பா!' என்று கூறினான்.

'அதற்குச் சொல்லவில்லையடா சேகர்! உனக்குக் கல்யாணம் நிச்சயம் செய்யப் போகும்பொழுது, நீ இந்த மாதிரி வேறொரு பெண்ணுடன் பழகினால், நாளைக்கு உலகம் என்ன சொல்லும்? கொஞ்சம் யோசித்துப் பார்!' என்று சொன்னாள் அவன் தாயார்.

இந்த வெடிகுண்டைக் கண்டு அதிர்ச்சியடைந்த சேகர், 'என்னம்மா! நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே! எனக்கு கல்யாணமா? பெண் யாரம்மா?' என்று கேட்டான்.

'உனக்குப் பார்த்திருக்கும் பெண், உன் அத்தை மகள் பார்வதிதான்' என்று கூறிய தன் தாயிடம், ஒரே குதியாகக் குதித்தான் சேகர். அவன் கோபத்தைத் தணிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டாள் அவள். பிறகு அவனை நோக்கி, 'உன் அத்தை இறக்கும் தறுவாயில், உன் அப்பாவால் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கு இது! இதைத் தட்டிப் பேசாதே!' என்றாள்.

நிர்மலாவைப்பற்றி எவ்வளவோ எடுத்துக் கூறியும் ஒரேயடியாக மறுத்துவிட்டனர், அவன் பெற்றோர்கள்.

தன் மனக்கோட்டையெல்லாம் சுக்கு நூறாக வெடித்து விட்டதைக் கண்ட சேகருக்கு, இந்த உலகமே ஒரு வஞ்சக உலகமாகக் காட்சியளித்தது. அன்று நிர்மலாவை சந்திக்கவே அவன் மனம் கூசியது. சமாசாரத்

ஷ்தைச் சொன்னதும், அதிர்ச்சியடைந்த நிர்மலா, பிறகு சமாளித்துக் கொண்டு சேகரிடம், தாய்–தந்தையர் இஷ்டத்திற்கு மாறாக ஒன்றும் செய்யக் கூடாது என்றும், பார்வதியை மணந்துகொண்டு சுகமாக இருக்கும்படியும் கூறினாள். அவளுடைய இந்த தியாகத்தைக் கண்ட சேகருக்கு, அவளிடம் அன்பு அதிகமாயிற்றே ஒழிய குறையவில்லை. சேகர் எவ்வளவு சொல்லியும் கேளாமல் நிர்மலா, தன்னை மறந்துவிடும்படி கூறிவிட்டுச் சென்றாள். ஆனால், அவள் சென்றபொழுது, அவள் அழகிய விழிகளிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர், அவன் கையில் விழுந்தது அவன் இதயத்தைச் சுட்டது. இதனால், பார்வதியிடம் அவன் கொண்ட வெறுப்பு பன்மடங்கு அதிகரித்தது.

* * *

கடிகாரத்தில் மணி ஐந்து அடிக்கவே, தான் காரியாலயத்தில் இருக்கிறோம் என்றறிந்த சேகர், தன் தலை ஒரேயடியாய் கனப்பதை யுணர்ந்தான். வீட்டை நோக்கிச் சென்றான். அவன் மனம் மிகவும் சோர்ந்திருந்தது. தான் நிர்மலாவை அடைந்திருந்தால், தன் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணினான். ஆனால், இப்பொழுது தன் அத்தையின் அழகற்ற, பட்டிக்காட்டுப் பெண், பார்வதியை மணந்து கொண்டிருப்பதை அவனால் நினைக்கவே முடியவில்லை. நிர்மலாவையும், பார்வதியையும் ஒப்பிட்டுப் பார்த்தான். தங்கத்திற்குப் பக்கத்தில் இரும்பை வைப்பதுபோல் இருந்தது. இன்னும் இரண்டெட்டில் வீடு. சுமார் முக்கால் மணி நேரம் 'பஸ்'ஸுக்காக காத்து நின்ற எரிச்சல் வேறு. பசியோ வயிற்றைக் கிள்ளியது. எல்லாமாகச் சேர்ந்து சேகரின் மனம் குழம்பிக்கொண்டிருந்தது. வீட்டு வாசல் கதவைத் தட்டினான். ஒரு நிமிடம் ஆகியும் கதவு திறக்கப்படவில்லை. சாதாரணமாகவே யாருக்கும் அரை நிமிஷமாகும். பார்வதிக்கு ஒரு நிமிஷத்திற்கு மேலேயே ஆகும். ஏனென்றால், அவள் பூரண கர்ப்பிணி. இந்த விஷயமெல்லாம் ஆத்திரத்தில், சேகருக்கு எப்படித் தெரியப்போகிறது! கதவு திறக்கப்பட்டது. பார்வதியைக் கண்ட சேகருக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

'ஏ, சனியனே! ஆபீஸிலிருந்து ஒருவன் ஓய்ஞ்சுப்போய் வீட்டிற்கு வந்தால், அவனை வாசலிலேயே காக்க வைத்துக் கொல்லவேண்டும் என்று நினைக்கிறாயா? கதவைத் திறக்க ஏன் இவ்வளவு நாழிகை?' என்று அடிப்பது போல் கேட்டான்.

பார்வதி பதிலே சொல்லவில்லை. பதில் சொன்னால், அதற்குப் பரிசு உடனடியாய் கிடைக்கும் என்று அவளுடைய ஐந்து வருட குடும்ப வாழ்க்கையில், அவள் நன்கு கற்றிருந்தாள்.

'ஏதாவது டிபன் பண்ணியிருக்கிறாயா?'

பேசாமல் உள்ளே சென்று ஒரு தட்டில் 'உப்புமா' எடுத்துக்கொண்டு வந்தாள்.

'என்ன இது? உப்புமாவா.....? மகாராணி அம்மாளுக்கு இதை விட்டால், வேறு மட்டமான 'டிபன்' பண்ணத் தெரியாதோ?' என்றான் ஏளனத்துடன்.

'இல்லை...இன்றைக்கு உடம்பு நன்னாவில்லை...' என்று தயங்கியபடியே கூறினாள் பார்வதி.

தட்டைத் தூக்கியெறிந்துவிட்டு வெளியே சென்றான் சேகர்.

ஐந்து வருட குடும்ப வாழ்க்கையில், பார்வதி அனுபவித்த துன்பங்கள் கொஞ்ச நஞ்சமன்று. தன் மேல் கணவன் கொண்டுள்ள ஆத்திரம் பற்றிய காரணம், அவளுக்கு நன்கு தெரியும். ஏன் இந்த பெண் ஜன்மம் எடுத்தோம், அதுவும் அழகற்ற, பட்டிக்காட்டு பெண்ணாய் ஏன் இப்படி கடவுள் தன்னை படைத்தார் என்று தன்னையே நொந்து கொண்டாள். இனி மேலும் தன் கணவனுக்கு தன்னால், ஒருவித மனக்கவலை இருக்கவேண்டாம் என்று எண்ணி ஒரு முடிவுக்கு வந்தாள் பார்வதி.

கோபத்துடன் வெளியேறிய சேகர், ஒரு 'ஹோட்டலு'க்குச் சென்றான்.



'இன்றைய 'ஸ்பெஷல்' டிபன் கொண்டு வரட்டுமா சார்?' என்று கேட்டான் 'சர்வர்'.

'சரி' என்று தலையசைத்தான்.

'சர்வர்' கொண்டு வந்த 'டிபனை' பார்த்த அவனுக்கு என்னவோ செய்தது. அது உப்புமா...! பார்வதி தன் தள்ளாமையையும் மறந்து அவனுக்காக அன்புடன் செய்து வைத்த உப்புமாவை, மட்டமான 'டிபன்' என்று தூக்கியெறிந்துவிட்டிருக்கும் சேகர், அதே 'டிபனை' 'இன்றைய ஸ்பெஷல்' என்று 'ஹோட்டலி'ல் கொண்டு வந்து வைத்தபொழுது, சாப்பிட்டான். நேரே கடற்கரைக்குச் சென்றான், வீட்டிற்குச் செல்ல மனமில்லாமல்.

கடற்கரையில் பல இளம் வாலிபர்களும், பெண்களும் கை கோர்த்துக் கொண்டு செல்லும் அழகை ரசித்துக் கொண்டிருக்கும்பொழுது, தானும் நிர்மலாவும் அப்படிச் சென்றதை நினைத்துப் பார்த்தான். அப்பொழுது தன்னருகே சென்றுகொண்டிருந்த ஒரு பெண்ணைக் கண்டு திடுக்கிட்டான். தான் யாரை மனதில் நினைத்துக் கொண்டிருந்தானோ, அதே நிர்மலாதான் சென்றுகொண்டிருந்தாள். தன்னையறியாமல் 'நிர்மலா!' என்று கூப்பிட்டுவிட்டான். திரும்பிப் பார்த்த நிர்மலா, அங்கு சேகரைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். அவனருகே வந்தமர்ந்தாள். சிறிது நேரம் இருவரும் ஒன்றும் பேசவில்லை. நிர்மலாதான் முதலில் பேசினாள்.

'சேகர்! என் கடிதம் கிடைத்ததா?' என்று கேட்டாள்.

'உம்' என்று தலையை ஆட்டினான் சேகர்.



'பார்வதி சௌக்கியமா சேகர்? அவளுக்கு, இது எட்டாவது மாதம்தானே? என் சிநேகிதி ஒருத்தி சொன்னாள்' என்றாள் நிர்மலா.

'நிர்மலா! நீ சென்ற பிறகு என் மனம் ஒரு நிலையில் இல்லை. நான் இப்பொழுது ஒரு நடைப்பிணமாக உலாவுகிறேன். அவ்வளவுதான். வீணாக என் மனத்தைக் குழப்பாதே. அது சரி, நீ சௌக்கியமாய் இருக்கிறாயா? உன் கணவர் உன்னிடம் அன்புடன் இருக்கிறாரா?' என்று சேகர் கேட்டான். நிர்மலாவின் கண்கள் குளமாகி விட்டன. புடவைத் தலைப்

யால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். இதைக் கவனித்த சேகர் 'என்ன நிர்மலா! அழுகிறாயா?' என்று பரிவுடன் கேட்டான். 'சேகர்! நான் உங்கள் நிலையை நன்றாக அறிவேன். நீங்கள் பார்வதியிடம் நடந்து கொள்ளும் விதத்தைப் பற்றியும் நான் அறிவேன். பாவம்! பார்வதி மிகவும் நல்லவள். அவள் மனம் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும் தெரியுமா? பெண்ணின் உள்ளம், அதுவும் பார்வதிபோல் உள்ள, பெண்ணின் உள்ளம், அவள் போல் கஷ்டப்பட்டுள்ள பெண்ணிற்குத் தான் தெரியும். நானும் முதலில் அவளிடம் கோபமாகத்தான் இருந்தேன். நம் இன்ப வாழ்க்கைக்குத் தடையாக வந்த புயல் காற்று என்றுஎண்ணினேன். பிறகுதான் அவளிடம் கொண்ட அத்தனை துவேஷமும் அன்பாக மாறியது. பாவம்! அவளுக்கு யார் இருக்கிறார்கள்? உங்களைத் தவிர. மேலும் அவள் இப்பொழுது கர்ப்பிணி. இன்னும் சில நாட்களில் அவள் ஒரு அழகிய குழந்தைக்கு தாயாகப் போகும் பாக்கியத்தை அடையப் போகிறாள். அவளுக்கும், எனக்கும் எவ்வளவு வித்தியாசம்! அவளிடம் அழகு இல்லை. ஆனால், அதிர்ஷ்டம் இருக்கிறது. தாயாகப் போகும் அதிர்ஷ்டம். என்னிடமோ அழகு இருக்கிறது. பார்வதிக்கு வாய்க்கப் போகும் அதிர்ஷ்டத்தை என்னால் அடையவே முடியாது. புரியவில்லையா சேகர்! நான் ஒரு மலடி. தாம்பத்திய வாழ்க்கை சந்தோஷமாக இருக்கச் செய்வது குழந்தைகள்தான். இதை என் நான் அடைய முடியாத காரணத்தினால் என் கணவரால் நான் வெறுக்கப்பட்டுள்ளேன். மணமாகி ஓரிரு வருடங்களே என்னால் நல்வாழ்க்கை நடத்த முடிந்தது. இப்பொழுது என் கணவர் விவாக ரத்து செய்யப் போகிறார். வாழ்க்கையில் வெறுப்படைந்த நான், இதற்குச் சம்மதித்து விட்டேன். இப்பொழுது நீங்களே சொல்லுங்கள் யார் அதிர்ஷ்டசாலி என்று! நானா? அல்லது பார்வதியா?' என்று கூறி விக்கி விக்கி அழுதாள்.



"இப்ப எங்க இருக்காப்போல?"

"ஏர்ணாகுளத்தில் இருக்கேன்...!!"

நிர்மலாவின் இந்த உருக்கமான பேச்சைக் கேட்கக் கேட்க சேகர் தன் தவறுகளை உணரத் தொடங்கினான். தான் பார்வதிக்குப் பெருந்துரோகத்தைச் செய்துவிட்டோம் என்று எண்ணினான். ஆதரவற்ற தன் மனைவியை இது காலம் கொடுமைப்படுத்தியது குறித்து அவன் மனம் சொல்லொணா துயரமடைந்தது. அவனையறியாமல் அவன் கண்கள் நீரைச் சிந்தின. நிர்மலாவோ மேலும் மேலும் அவனுக்கு புத்திமதி புகட்டிக் கொண்டிருந்தாள். அவள் பேசப் பேச, சேகருக்கு பார்வதி மேல் உள்ள வெறுப்பெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்து விட்டது. பார்வதியிடம் மன்னிப்புக் கேட்டு நல்வாழ்க்கை தொடங்க வேண்டும் என்று எண்ணத் தொடங்கினான். நேரம் இருட்டிவிட்டதைக் கூட கவனியாமல் இருவரும் அமர்ந்திருந்தனர். எல்லோரும் சென்று விட்டனர். சேகரும் நிர்மலாவும் தனியாக இருந்தனர். ஒரு பெண்ணுருவம் தங்களைத் தாண்டி கடலை நோக்கிச் செல்வதைக் கண்டனர். சேகருக்கு மனதில் ஒரு பயம் கண்டது. ஒருவேளை இந்தப் பெண் பார்வதியாக இருக்குமோவென்று. தன் கொடுமை தாங்காமல் பார்வதி தற்




அன்றாட அலுவல்களை



அதிசக்தியுடன் ஆற்றல் புரிய

காமதேனு வனஸ்பதி!




சாஸ்த்ரீய முறையில் தயாரிக்கப்பட்டது. வைடமின் A, D, கலக்கப்பட்டது. நெய்யிற்கு சமமானது. ஆனால் விலை குறைவானது.

*காமதேனு வனஸ்பதி* சுத்தமானதும், ஆரோக்யம் அளிக்க வல்லதுமான சிறந்ததோர் சமையல் சாதனம்.

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜண்ட்ஸ் : சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

MC-634

கொலை செய்து கொள்ள கடலை நோக்கிச் செல்கிறாளோ என்று நினைத்தான். இருவரும் எழுந்து அந்தப் பெண்ணின் பின் சென்றனர். கடலில்இறங்கிவிட்ட அந்த பெண்ணை ஓடிச்சென்று பிடித்து கரையில் இழுத்துப் போட்டான் சேகர். அந்த பெண்ணின் முகத்தைப் பார்த்த சேகருக்கு இரத்தம் உறைந்து விட்டது. சேகர் பயந்தபடியே அந்தப் பெண் பார்வதிதான்.

'பார்வதி!' என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய்? நாங்கள் இங்கில்லையென்றால் உன் கதி என்னவாயிருக்கும்! என்று கத்தினான். அவன் குரல் நடுங்கியது. துன்ப ஏணியின் கடைசிப் படியில் நிற்கும் பார்வதி, எப்படி இங்கு சேகர் தன்னைக் காப்பாற்றினான் என்று எண்ணி திடுக்கிட்டாலும் பிறகு அவனை நோக்கி ஒரு வறண்ட சிரிப்பு சிரித்தாள்.

'நான் இனிமேலும் உங்களுக்கு பாரமாக இருக்கமாட்டேன். என்னை நிம்மதியாக சாகவிடுங்கள்' என்றாள் விம்மலுடன்.



'அப்படிச் சொல்லாதே பார்வதி உன் பாலைவன வாழ்க்கையை சோலைவனமாக்குவதற்குத்தான் கடவுள் என்னை இங்கே அனுப்பினார் போலும். நீ இறந்திருந்தால்... அப்பப்பா அதை நினைக்கவே முடியவில்லை என்னால்! இனிமேல் நான் பழைய சேகர் இல்லை. இதோ உன் அருகில் நிற்கும் என் சகோதரி நிர்மலாதான் என் மூடிய கண்களைத் திறந்துவிட்ட உத்தமி. நமக்கு புதுவாழ்வளித்த பெண் தெய்வம். நான் இன்று முதல் புது மனிதன். உன் வாழ்க்கையை பாழாக்கிய இந்தப் பாவியை மன்னிப்பாயா பார்வதி?' என்று பார்வதியின் கைகளை பிடித்துக் கொண்டான்.

நிர்மலா பார்வதியிடம் எல்லாவற்றையும் விவரமாகக் கூறினாள். தன் வாழ்வை நாசம் செய்த அதே நிர்மலாதான் இப்பொழுது தனக்கு வாழ்வளித்தவள் என்று தெரிந்துகொண்ட பார்வதி நிர்மலாவை நன்றி ததும்பும் கண்களால் நோக்கினாள்.

'சேகர்!' உங்களிருவரையும் சேர்த்து வைத்து நீங்களிருவரும் சந்தோஷமாக வாழ வேண்டும் என்று எண்ணியபடியே என் எண்ணமும் நிறைவேறியது. இனிமேல் எனக்கு கவலையில்லை. நான் வருகிறேன்.' என்று கூறிச் சென்றாள்

இந்த நல்ல காட்சியைக் காணத் தானோ என்னவோ இவ்வளவு நேரம் மேகத்திலே' மறைந்திருந்த சந்திரனும் தன் முகத்தை வெளியே நீட்டினான். அந்த மங்கிய ஒளியில் தங்கள் வாழ்வை ஒன்றாக்கிய தியாகச் சுடர் நிர்மலா தூரத்தே மறைவதைக் கண்டனர் சேகரும் பார்வதியும். அவர்களை அறியாமல் அவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் தரையில் விழுந்து மணலை ஈரமாக்கியது.







தெலுங்கு 'வாழ்க்கை ஒப்பந்த'த்தில் நடித்த ஜமுனா, ஜனாதிபதியின் பரிசைப் பெற்றார். தான் பெற்ற பரிசுகள் அத்தனையும் இது ஒன்றுக்கு ஈடாகாது என்கிறாரோ? பரிசு பெற்ற ஆனந்தத்தில்!

லக்ஷ்மம்மாவிடம் தலை அலங்கரித்துக் கொள்ளும் இவர் எதற்கும் அப்பா, அப்பா என்று அப்பாவைக் கலந்துதான் முடிவு செய்வார்.





பத்திரிகை படிப்பதில் ஆர்வம் காட்டும் இந்த பிரபல நட்சத்திரம் மித்திரனில் கண்ணைக் கவரும் நட்சத்திரப் படங்களைக் கண்டு பிரமித்தார்.





வீட்டு மாடியில் புதிதாக கட்டும் கட்டிடங்களை பெற்றோர்களுடன் பார்வையிடும் இவர், அவர்களைப் போட்டோ பிடிக்கிறார்.





‘நான் பிளாக்கியைப் படமெடுத்து உங்களுக்குக் காட்டுகிறேன் பாருங்கள்’ என்று சொன்ன ஜமுனு, பிளாக்கியைப் படமெடுக்கருர்.



‘படப்பிடிப்பு இல்லாதபோது தோட்டத்தில் உள்ள பூங்காவிலும், ரேடியோகிராமில் ரிகார்டுகள் கேட்பதிலும் என் நேரத்தைக் கழிப்பதுதான் எனக்கு நிம்மதியைக் கொடுக்கிறது’ என்று கூறுகிருர், பிரபல நட்சத்திரம் ஜமுனு.





# அருணஜடையின்

விக்கிரமன்

திருவாளர் அருணஜடையைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா என்று உங்களைக் கேட்டேனு? அப்படிக் கேட்டிருக்கக்கூடாதுதான். ஏனென்ருல் அருணஜடை அண்டு கம்பெனியின் தலைவரை உங்களுக்குத் தெரியாமல் இருக்கும் என்று நினைப்பது தவறுதானே. அதனுடன் செய்தித்தாளில் சிறிது நாட்களுக்கு முன்பு பிரமாதமாக அடிபட்ட அவரது மரணச் செய்தி அதற்குள்ளாகவா மறந்திருக்கப் போகிறது. ஆனுல் உங்களேவிட எனக்குக் கொஞ்சம் அதிகமாகத் தெரியுமாதலால் நான் அறிந்த செய்தி பெருக இல்லையகம் என்று கூற வந்தேன். தற்காலப் பிரச்னையைப்பற்றிக் கூருவிடின் என் போன்றவர்களுக்குத் தூக்கம் ஏது?

அருணஜடை வியாபார வட்டாரத்தில் பிரபலமான புள்ளி. தந்தை இருந்தவரை எந்தவிதக் குறையும், அசௌகரியமும், பொருளாதாரப் பற்றுக் குறையும் அறியாமல் அவர் வளர்ந்தார். பள்ளிக்கூடம் போய்வரக் கார். விளையாட்டு மைதானம் செல்லக் கார். குளிப்பதற்குப் போகக்கூடக் கார்— அதுதான் ‘பாத்திங் கிளப்’பிற்கு. அப்பாவின் காரியாலயத்திற்குச் சென்ருலோ ‘சின்ன எஜமான், சின்ன முதலாளி’ என்று எல்லோருடைய அன்புச் சொற்கள். அந்தக் குரலேக் கேட்பதில் அருணஜடைக்குத் தனி இன்பம். ஆனுல் சின்ன முதலாளி ஸ்தானத்திலிருந்து பெரிய முதலாளியின் பீடத்திலே வந்து அமர்ந்த பிறகுதான் அவருக்குப் ‘பீடத்தின்’ சங்கடம் புரிந்தது. தள்ளப்பட்ட கூட்ஸ் வாகின் சிறிது தூரம் தானே சென்று பிறகு நிற்பதுபோல் அவருடைய வியாபார விவகாரங்கள் சிறிது காலம் சுமுகமாகப் போய்க்கொண்டிருந்தது. காரியாலய மானேஜர் கணபதி திடீரென இறந்த பிறகு பூசி மெழுகிக் காரியங்களேக் கொண்டு செல்ல முடியாது போகவே நெருக்கடி உதயமாயிற்று. தந்தைக்குக் கடன் கொடுத்திருந்தவர் ஒவ்வொருவராக வற்புறுத்த ஆரம்பித்தனர். தவணைக் கடன் ஒன்றிரண்டு தவறியது.

அருணஜடை, கடன் பட்டியலே ஒரு நாள் தயார் செய்தபோது அது லட்சக் கணக்கில் ஓடியது. வியாபார வட்டாரத்தில் ‘கசமுச’ பேச்சுக்கள் அதிகமாயின. அவருடைய கம்பெனிக்கு உதவிவந்த பாங்க் ஒன்று தன் சலுகையை நிறுத்திவிட்டதுடன் கடனேயும் உடனடியாகக் கட்டச்சொல்லி உத்தரவு பிறப்பித்தது. அருணஜடைக்கு ஊண் பிடிக்கவில்லே. உறக்கம் வரவில்லே. சிந்தனையாலேயே ஒரு வாரத்தைக் கழித்தார். இருபத்தி நான்கு மணி நேர அவகாசம் மட்டுமே இருந்தபோது அவர் பெரும் சிந்தனேயோடு வீட்டிற்கு வந்து மாடி வராந்தாவில்

நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு யோசனையிலாழ்ந்தார்.

வழக்கத்துக்கு மாறாகத் தன் கணவர் வீட்டிற்கு வந்து ஏதோ இழந்தவர் போல் இருக்கிறாரே என்று அவர் துணைவி மேகலை அவரருகே வந்து நின்றாள். மல்லிகையின் மணமும், புதுப்புடவையின் சரசரப்பும் உணர்ந்து சட்டெனத் திரும்பிய அருணஜடைக்கு ஆபத்தில் காக்கவந்த அற மகள் போன்று மேகலை நிற்கவும் புதுத் தெம்பு பிறந்தது. இதுவரை மனைவியிடம் வியாபாரத்தைப் பற்றியும், தொல்லையைப் பற்றியும் எதும் கூறியறியாதவர் மேகலை மனது வைத்தால் இப்போது பல காரியங்கள் சுலபமாக நடக்கும் என்று நம்பினார். அந்த உணர்வுடன் பேச்சுக் கொடுத்தார்.

முதலில் தன் தந்தையைப்பற்றியும், தந்தையின் தர்மசிந்தனையைப் பற்றியும் அவர் வைத்துப்போன கடன் பளுவைப் பற்றியும் இப்போது கடன்காரர்கள் சூழ்ந்துகொண்டதைப் பற்றியும் அவர் பேசிக்கொண்டே வரும்போது அவரை அறியாமல் அவர் நாதழுதழுத்தது.

மேகலை அவர் கண்களைத் துடைத்தாள். புது ஸ்பரிசம் அது அன்று எனினும் அருணஜடை ஆபத்தெல்லாம் நீங்கியதுபோன்ற உணர்ச்சியை அடைந்தார். 'இதற்காகவா வருத்தப்படுகிறீர்கள்?' என்று பணக்கஷ்டம் நீங்கப் பல யோசனைகள் கூறினாள். பெட்டிக்குள் அடைபட்டுக் கிடக்கும் நகைகளின் மதிப்பைக் கூட்டினாள்; வீட்டிற்கு மதிப்புப் போட்டாள். தன் சிநேகிதி ஒரிருவர் பெயரைக் கூறி அவர்களிடம் சென்று உதவி கேட்டு வருவதாகக் கூறினாள். ஆனால் அருணஜடை அதை மறுத்தார். எல்லா உதவிகளையும் சேர்த்தாலும் தொல்லை தீராது என்றும் அதற்குப் பதிலாக ஊர் முழுமையும் செய்தி பரவி அவமானம்தான் மிச்சமாகும் என்று கூறினார். இருவரும் சிறிது நேரம் யோசித்த பிறகு அருணஜடை ஒரு யோசனை கூறினார்.

அவர் கூறிய அந்த நபரின் பெயரைக் கேட்டவுடனே மேகலை திடுக்கிட்டாள். ராமதாஸ்— ராமதாஸ் அவளுடைய அத்தை மகன்தான். அவளுடைய சொந்த அத்தான். ஏராளமான சொத்துச் சுதந்திரத்துடன் சமமாக வாழும் அவனைப்பற்றி மேகலை மறந்தே விட்டாள் எனலாம். எப்போதாவது அத்தை, இங்கு வந்து போகும் போது அவள் ராமதாஸை நினைப்பாள். அவள் இதயத்திலிருந்து பொங்கி வரும் ஆத்திரம் அந்த நினைப்பை விரட்டிவிடும்.

## 2

ராமதாஸை மணக்கப் போவதாகத் தான் அவளுடைய சொந்தக்கார வட்டாரத்தில் பலத்த பேச்சு அடிபட்ட சமயம். ராமதாஸின் தகப்பனார்கூட தன் மகனை மேகலையின் தந்தை ஏற்பாரா என்று சந்தேகிக்கப்பட்டதுண்டு. ஆனால் பணம் குறுக்கே புகுந்தது. மேகலையின் தந்தை பிரபல பங்கு மார்க்கெட் வியாபாரி. திடீரென்று ஷேர் மார்க்கெட்டில் அவருக்கு ஏராள நஷ்டம் ஏற்பட்டது. கெட்ட பெயர் உண்டாகியது. ராமதாஸின் தந்தையின் கை ஓங்கத் தொடங்கிய சமயம். அதனால் ராமதாஸிற்கு வேறு இடத்தில் பெண் பார்க்கத் தொடங்கினார்.

மேகலையின் பெற்றோர்கள் எவ்வளவோ வேண்டினர். கல்யாணம் முடிவானது போன்ற நிலையில் வரன் தட்டிப்போனால் தன் மகளின் கல்யாணத்திற்கே தடங்கல் ஏற்படும் என்று கூறினர். ஆனால் ராமதாஸ் உட்பட அந்தக் குடும்பத்தில் எல்லோரும் பிடிவாதமாக இருந்தனர். தந்தைக்காக ராமதாஸ் ஆடினாலும், மேகலையின்பேரில் உள்ளூர ஆசை இல்லாதில்லை. கல்யாணப் பேச்சு முறிந்த பிறகு ஒரிரு தடவை ராமதாஸ் மேகலையைக் கண்டிருக்கிறான். மேகலை முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விடுவாள்.

காலம் அப்படியே இல்லை. மேகலைக்குக் கல்யாணம் நடந்தது. அருணஜடை அவளை சொத்து— பணம் என்று பார்க்காமல் மணந்தார். இப்போது அருணஜடையின் கஷ்டத்துக்கு உதவக்கூடியவன் ராமதாஸ் ஒருவனே. அவன் தந்தையும் இறந்துவிட்டார்.



ஒருவர் யோசனையைக் கேட்கவேண்டியதுமில்லை. மேகலை நேரிடையே சென்று ராமதாஸை அணுகி கணவனின் பண நெருக்கடியைத் தெரிவித்துக் கேட்டால் அவன் மறுக்க மாட்டான். அவன் பாங்கியின் டைரக்டர். பாங்கியின் அவசரம் தீர்ந்துவிட்டால் அவர் தலைதூக்கி விடுவார். பாங்கு தகராறு தீராவிடில் அவர் வியாபாரி என்றே வாழ முடியாது. மனிதன் என்றே அவர் வாழ முடியாது. பாங்கிற்குக் கட்ட முடியாது போனது வெளியே தெரிந்துவிட்டால் எல்லாக் கடன்காரர்களும் ஒரே நாளில் சூழ்ந்து விடுவர். இதை நினைக்கவே அருணஜடைக்குப் பயங்கரமாயிருந்தது. மேகலை தன்னை இந்த இக்கட்டிலிருந்து விடுவித்து விடுவாள் என்ற திட நம்பிக்கை அவருக்கு.

மேகலை முதலில் இதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால் அருணஜடை அமைதியாக ராமதாஸிடம் செல்ல வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். மேகலை மௌனமாக நின்றாள். அவள் கண்கள் கலங்கின. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ராமதாஸிடம் செல்வதா என்பதைப்பற்றி அவள் மனத்தில் போராட்டம். கடைசியாக அவளை அடிக்காத குறையாகப் பயமுறுத்திவிட்டு அங்கிருந்து ஓடோடி வந்த சம்பவம் அவள் நினைவுக்கு வந்ததும் அவள் உடல் முழுமையும் சோமாஞ்சலி ஏற்பட்டது.

## 3

ராமதாஸின் தந்தை கல்யாணப் பேச்சை முறித்துவிட்ட பிறகு ஒரு நாள் மேகலை தன் அத்தை வீட்டிலிருந்து பாத்திரமொன்று வாங்கி வர வந்திருந்தாள். வீட்டில் எவரும் இல்லை. ராமதாஸ் சாய்வு நாற்காலியில் சாய்ந்து புகை மண்டலத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். மேகலையைக் கண்டவுடன் அவனுக்கு மணிமேகலா தெய்வமே நடந்து வருவது போன்ற உணர்ச்சி.

'யார் மேகலையா?' என்று வியந்து கேட்டவாறு எழுந்தோடி வந்து அவள் கரங்களைப் பிடித்தான். ராமதாஸின் தோற்றமும் அவன் கண்களில் மிளிரும் காம வெறியும் அவன் பேச்சும் பதட்டமும் அவளால் புரிந்துகொள்ள முடியாதவையா? கையை உதறிவிட்டு, 'உன்னைத் தேடி வரவில்லை. அத்தை எங்கே?' என்று பதிலிறுத்தி பின்கட்டிற்குச் சென்றாள்.

ராமதாஸ் பின்தொடர்ந்தான். பெற்றோர் செய்த முடிவுக்குத் தன்னை மன்னித்து விடுமாறு அவன் வேண்டினான். மணந்தால் மேகலையையே மணப்பேன் இல்லாவிடில் பிரம்மச்சாரியாகவே காலங்கழித்து விடுவதாகச் செய்திருக்கும் முடிவை மேகலையிடம் கூறினான். அவளுடைய தந்தைக்கு தன் சொந்த பணத்திலிருந்து கொடுத்து அவர் அந்தஸ்தை உயர்த்த முடிவு செய்திருப்பதாகக் கூறினான். இன்னும் அவன் உதடுகள் என்னென்னவோ முணுமுணுத்தன.

வீட்டில் தன் தாய் இல்லை என்பதையும், அதைப் பயன்படுத்திக்கொண்டு ராமதாஸ் ஆசை வார்த்தையால் தன்னை மயக்கப் பார்த்துத் தன் காரியத்தைச் சாதிக்க முயல்கிறான் என்பதையும் புரிந்துகொண்ட மேகலை அங்கு ஒரு நொடிகூட இருக்க விரும்பாமல் திரும்பினாள். ராமதாஸ் தடுக்கப் பார்த்தான். மேகலை பெண் புலி போல் சீறியிராவிடில் அவன் பிடியிலிருந்து அவள் தப்பியிருக்க முடியுமா? இந்தச் சம்பவம் அவளுக்கு நினைவுக்கு வந்ததும் மீண்டும் நான்கு ஆண்டுகள் பிறகு அவனை எப்படிச் சந்திப்பது என்ற வேதனை அவளைச் சூழ்ந்தது.

'மேகலை' என்று அருணஜடை அழைத்தார். அவள் முகத்தை நிமிர்த்தி, அவள் கண்களைத் துடைத்து 'நீ எதற்காகக் கலங்குகிறாய் என்பது எனக்குத் தெரியும். தயக்கமும் அறிவேன். இப்பொழுதும் அதைத் தெரிந்தே உன்னை அனுப்புகிறேன். உன்னை ஒருபோதும் நான் சந்தேகிக்க மாட்டேன். நாளை மறுநாள் உன் கணவன் இந்த ஊரில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்; சொற்ப சுகபோகங்கள் இருக்க வேண்டும் என்றால் நீ ராமதாஸை அணுகி நிலையை விளக்கித்

தான் ஆகவேண்டும் என்ருர். மேகலே தமிழ் படித்தவள். சிலப்பதிகாரம் அறிந்தவள். கோவலன் மீண்டும் மாதவி வீட்டினின்று வந்தபோது மாதவிக்குக் கொடுக்கப் பொருள் இல்லாமல்தானே என்னவோ என்று தன் கால் சிலம்பைக் கழற்றிக் கொடுத்த சம்பவம் அவளுக்கு நினைவுக்கு வந்தது. கணவன் நலன்தான் முக்யம் என்ற முடிவுக்கு வந்தாள். ராமதாஸிடம் உடனே செல்வதாக வாக்களித்தாள். அவள் கிளம்பும் முன்பு அருணஜடை அவளே அழைத்து, 'நீ வந்திருக்கும் இக்கட்டான நிலேயை ராமதாஸ் பயன்படுத்திக்கொள்ளலாம். ' உன்னிடம் தகாத வார்த்தை பேசலாம்; நடந்து கொள்ளலாம். எனக்காக நீ பொறுத்துக்கொள். நமக்கு இப்போது காரியம் முக்யம்' என்று நெஞ்சடைக்கக் கூறும்போது மேகலே 'கோ'வெனக் கதறினுள்.

4

'கடற்காற்று' என்று பெயர் பூண்ட அந்தப் பெரிய அரண்மனே போன்ற வீட்டில் ராமதாஸ் இருந்தான். பெற்ருேர்கள் இறந்த பிறகு ஏராளமான ஆஸ்திக்கு அவன் ராஜா. அவன் தொட்டதெல்லாம் பொன்ஞனது. நாலு சினிமா தியேட்டர், மூன்று பெரிய ஓட்டல், இரண்டு நூற்பு மில் என்று அவன் தொழில் செழித்துக் கொழித்து வந்தது. மூன்ருவது மாடியில் தோட்டத்திற்குள் கார் ஒன்று பிரவேசிப்பது தெரிந்தது. காரினின்று யாரோ இறங்கினுர்கள்.

யார்? மேகலே போலிருக்கிறதே.

ராமதாஸ் விரைந்து கீழே இறங்கி வந்தான். அவ்ன் அருணஜடையைப் பற்றி விசாரித்து வைத்திருந்தான். அருணஜடைக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு ராமதாஸுக்கும் ஓரளவு பொறுப்புண்டு. அவன் பிரவேசிக்க இருந்த ஒரு தொழிலில் அருணஜடை முன்கூட்டியே புகுந்து வேருெருவருக்கு முடித்துக் கொடுத்துவிடவே ராமதாஸ் தன் அஸ்திரத்தைப் பிரயோகிக்கத் தொடங்கினுன். தன் பிடியிலிருந்த பாங்க் மூலம் அருணஜடைக்குக் கிடைத்துவந்த சலுகையை வெட்டினுன். தொடர்ந்து பொருளாதார நிர்ப்பந்தங்களே ரகசியமாகக் கொண்டு வந்தான். தன்னிடம் அருணஜடை ஓடிவருவான் என்று அவனுக்குத் தெரியும். ஆனுல் அவனுக்குப் பிறகு மேகலே அன்ருே வருகிருள்.

'மேகலேயா,



வா, வா. என்ன ஆச்சர்யம். என் கண்கள் கனவு காண்கின்றனவோ?' என்று நாடக பாணியில் வரவேற்ற ராமதாஸைப் பார்த்து மேகலே புன்னகை பூத்தாள்! முன்னேவிட இப்பொழுது மேகலே அழகாக இருப்பது ராமதாஸிற்கே வியப்பை அளித்தது.

மேகலே சகஜமாகப் பேசினுள். தான் வந்த காரியத்தைப் புலப்படுத்தாமல் பேசிக்கொண்டே போனுள். அந்தப் பெரிய வீட்டைச் சுற்றிக் காட்டினுன் ராமதாஸ். மூன்ருவது மாடியில் ராமதாஸின் சொந்த அறைக்கு அவளே அழைத்துச் செல்லும்போது குறுகிய மாடிப் படிக்கட்டு குறுக்கிட்டது. அந்த நெருக்கடியான இடத்தில் ராமதாஸ் மேகலேயை நெருங்கினுன். மேகலே மிகச் சாமர்த்தியமாக அங்கிருந்து அகன்று நடு ஹாலுக்கு வந்து சேர்ந்தாள். ராமதாஸும் வந்தமர்ந்தான். அவளுடைய சுகதுக்கங்களே விசாரித்தான். அதுதான் தக்க சமயமென்று மேகலே பேச்சைத் தொடங்கி வந்த விஷயத்தை வெளியிட்டாள்.

'ராமதாஸ் ஹோ ஹோவென்று சிரித்தான். மேகலே, இந்தச் சிறு விஷயத்திற்காக நீ வர வேண்டுமா? டெலிபோன் செய்திருந்தால் போதுமே. உன் கணவன் எனக்கு எவ்வளவோ இடைஞ்சல்கள் செய்திருக்கிருர் என்ருலும் உனக்காக நான் பணத்தை உன்



னிடம் ஓடிவரச் செய்திருப்பேனே...' என்று கூறினான்.

'பணம் எனக்கல்ல அத்தான் என்னைத் தேடி வர. வியாபார அவசரத்திற்குத்தான்' என்று மேகலை மெல்லக் கூறினாள்.

'எதற்காக இருந்தாலும் உனக்காகத்தான். மேகலா உனக்குத் தெரியாது. நான் உன்னை மறந்திருப்பதாக நீ நினைத்திருப்பாய். நான் ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை தெரியுமா? இந்த இல்லத்திற்கு உரியவர் யாரோ அவள் அடையவேண்டியதை வேறொருவர் அடைவது நியாயமா? என் பெறோரின் முட்டாள்தனம் உன்னை நான் இழந்தேன். உம்...இப்போது மட்டுமென்ன முழுகிப் போய் விட்டதா? நீ ஒரு வார்த்தை கூறினால்...' என்று ராமதாஸ் இடத்தை விட்டு எழவும் மேகலையும் எழுந்து 'அத்தான் நான் வந்து கேட்ட காரியத்தை விட்டுப் பாதையை மாற்றி எங்கோ செல்கிறோம். என் கணவரின் மானத்தைக் காப்பாற்று. விட்ட தொடர்புதான் இப்போது மீண்டும் ஒட்டிக்கொண்டதே... அவர் எனக்காகக் காத்திருப்பார்...' என்று பரபரப்புடன் அங்கிருந்து கிளம்பத் துடித்தாள்.

'அப்போதே கூறிவிட்டேனே என்னைப் பொறுத்தவரையில் தொல்லை உன் கணவனுக்கு நேராது. நாளைய தினமே உன் கணவன் கட்டவேண்டிய தொகையை பாங்கியில் நான் கட்டிவிடுகிறேன். நீ அமைதியாகச் செல்லலாம். அதுபோகட்டும் நீ தினம் இந்தப் பக்கம் ஒருமுறை வாயேன். கடல் காற்று உடம்புக்கு நல்லது...' என்று கூறி வழியனுப்பினான்.

## 5

அகத்தில் ஆத்திரமும், வேதனையும் கலந்து கூத்தாட அத்துடன் கணவனைக் காப்பாற்றி விட்டோம் என்ற இன்பம் சுருதி போட புறத்தில் மகிழ்ச்சி மட்டும் பிரகாசிக்க மேகலை வீட்டின் படியேறினாள். அருணஜடை மேகலை வரவிற்காகக் காத்திருந்தான். மேகலை சென்ற பிறகு அவனுக்குக் குழப்பம் மிகுந்தது. மனைவிக்குஇடையூறு ஏதும் நேராதிருக்க வேண்டுமே என்ற வேதனை. தன் மானம் பிழைக்க மனைவியின் மானம் போவதா? பெண் ஒருத்தியைத் தன் சுயநலத்துக்காக ஆடவர் பயன்படுத்துவதா? என்ற கேள்விகள் பொங்கிப் பிரவாகித்தன.

'வெற்றி வெற்றி' என்று குதி நடை போட்டு வந்து மேகலை அருணஜடையின் கழுத்தினை அணைத்துக்கொண்டாள். சென்ற காரியம் குறித்து அவர் வினவு முன்னரே, 'எல்லாவற்றையும் ராமதாஸிடம் கூறினேன். நாளைக் காலை நீங்கள் கேட்ட தொகையைப் பாங்கியில் கட்டுவதாக வாக்களித்தார். அதனுடன் தன்னால் உங்களுக்கு எவ்விதத் தொல்லையும் நேராது என வாக்களித்திருக்கிறார்' என்று பெருமிதத்துடன் கூறினாள் பேதைப் பெண்.

அருணஜடை முகத்தில் எந்தவித மாறுதலும் இல்லை. அவர் சிந்தனை நாளைய தினத்தைப் பற்றியதாக இல்லை. ராமதாஸ் பண உதவி செய்ய வந்ததைக் குறித்ததில்லை. மேகலையைப் பற்றிய சிந்தனை சிலம்பமாடியது. ராமதாஸிடம் அவளை அனுப்பியது குறித்துத் தன்னை நொந்து கொண்டார். மேகலை — பாவம்; இளவயதினள். தன்னை மணந்து அடைந்த உயர்ந்தபட்ச இன்பம் மானமிழந்தது ஒன்றுதானா? பெண்மையை விலை பேசி அதற்குப் பதில் பல இலட்ச ரூபாய்ப் பெறத் துணிந்த நான் ஒரு மனிதனா? கணவனின் கடமையை நான் நிறைவேற்றினேனா? மேகலை மீது ராமதாஸிற்கு ஒரு கண் உண்டு என்பது தெரிந்தும் தனியே அனுப்பியது வேண்டுமென்றே குற்றமிழைத்ததாகாதா? தன் மானம் காக்க மனைவியின் மானத்தைக் காட்டிக்கொடுத்தவன் என்று ஊரார் பேச வாழ்ந்து என்ன பயன்? அவள் போகாதிருந்தால் என்ன தான் நேர்ந்திருக்கும்? ஒரே நாளில் கம்பெனி முறிந்திருக்கும். வீடு, வாசல், கார் மற்றும் அசையும் அசையாப் பொருள் யாவும் கடன்காரர்களுக்கு இரையாகியிருக்கும்.



ராமதாஸிடம் காரியசித்தி பெற அவள் எவ்வளவு கெஞ்சினாளோ சே! நானும் ஒரு மனிதனா இனி ஒரு நிமிடம் இந்த உலகில் வாழ்ந்து என்ன பயன்...?

அருணஜடை இரவு ஒன்பது மணி வரை மேகலையுடன் பேசிக்கொண்டிருந்தார். மேகலை களைப்பால் சீக்கிரம் தூங்கிவிட்டாள். அவர் ஒரு முடிவுக்கு வந்தார். ஒரு தோல் பையில் சில காகிதங்களையும் கொஞ்சம் ரூபாய்களையும் எடுத்துப் போட்டுக்கொண்டு கிளம்பினார். கண்காணா இடம் சென்று உயிர்த்தியாகம் செய்து கொள்ளவேண்டும் என்பது அவர் முடிவு. மேஜை மீது ஒரு காகிதத்தில் ஏதோ எழுதி வைத்தார். வாயிற்கதவைத் திறந்து வெளியேறினார். பேஸின் பிரிட்ஜ் ரயில்வே ஸ்டேஷனை அடைய ரயில்வே லையன் ஓரமாகநடந்தபோது அவரைத் தொடர்ந்து வந்தான் வழிப்பறி நபர் ஒருவன். அவரைப் போன்ற தோற்றம். உருவம் உடையிலிருந்து அவனை எவரும் திருடன் என்று கூறிவிட முடியாது. திடீரென்று கைப்பையைப் பறித்து ஓடினான். அப்போது வந்த கூட்ஸ் வண்டியில் அப்பப்பா சொல்லக் கூசுகிறது.

## 6

மறுநாள் காலையில் அருணஜடை விபத்தில் சிக்கி உருத்தெரியாமல் நசுங்கிக் கிடந்த செய்தி தெரிய வந்தது. தோல் பையினின்றும், உடையினின்றும் அடையாளம் கண்டனர். பிரேத பரிசோதனைசாலையில் கோரமாகக் கிடந்த உருவத்தைப் பார்த்து மேகலை மூர்ச்சித்து விட்டாள். காலையில் எழுந்தவுடனேயே அவள் முதன் முதல் கண்டது அருணஜடை எழுதி வைத்திருந்த கடிதம். தன் மரணத்திற்கு ராமதாஸ்தான் காரணம் என்று எழுதி வைத்திருந்த கடிதம் கண்டு திடுக்கிட்டாள். அந்தக் கடிதம் கண்டு குழப்பம் தீர்வதற்குள் மரணம் பற்றிய செய்தி கிடைத்தது. போலீஸில் அந்தக் கடிதத்தைக் குறிப்பிடவில்லை. எதேச்சையாக விபத்தில் சிக்கி மரணம் என்று பஞ்சாயத்தார் முடிவு செய்தனர்.

பிரேதத்தை ஆஸ்பத்திரியிலிருந்து எடுத்து வந்தது முதல் அடக்கம் செய்தது வரை ஆக வேண்டிய காரியங்களை ராமதாஸே செய்தான். அருணஜடை மாண்டது குறித்து ராமதாஸிற்கு வியப்பாக இருந்தாலும் மேகலையிடம் நெருங்கிப் பழக வாய்ப்பேற்பட்டதே என்ற எண்ணம் உண்டாகாமலுமில்லை. மேகலையின் துயரத்தை மாற்ற அங்கே இரண்டு தினங்களிருந்தான். மேகலைக்கு ராமதாஸைப் பார்க்கும்போது வேதனையும் பயமும் ஏற்பட்டன. கணவரின் கடைசிக் கடிதத்தை அவனிடம் காட்டிவிட வேண்டும் என்று ஏனோ துடித்தாள்.

## 7

அருணஜடை இறந்து நாட்கள் பல மறைந்தன. அவரது ஆபீஸ் விவகாரங்கள் பலவற்றை மேகலை கவனிக்க வேண்டியிருந்தது. சிக்கல் பல நிறைந்து அவளுக்குக் குழப்பமளித்தன. தன்னையும் அந்தக் கம்பெனி பாகஸ்தருள் ஒருவராகச் சேர்த்திருக்கும் விவரம் அப்போதே அவள் அறிந்தாள். பல பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. வேலைப்பளுவினால் அவள் துக்கம் மறந்தாள். தூக்கத்தைத் துறந்தாள். ஏக்கம் மிகுந்த ராமதாஸின் உதவியைக் கேட்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. ராமதாஸுடன் மேகலை வருவதுபோவது பலருக்குப் பிடிக்கவில்லை. ராமதாஸ் தலையிட்டிருக்கிறார் என்றவுடனேயே பலர் பொருளாதார நிர்ப்பந்தங்களைக் கொண்டு வந்தனர். ராமதாஸிற்கு இது தலைவலியாகப் போய் விட்டது. ஒரு நாள் அவன் மேகலையிடம் இதைப் பற்றிக் கூறிவிட்டான்.

கம்பெனியைக் கலைத்துவிடுமாறு யோசனை கூறினான். மேகலை அதற்குச் சம்மதிக்கவில்லை.

ஒரு நாள் ராமதாஸ் மேகலையிடம் வந்தான். அன்று அவள் அருணஜடை ஆண்டு கம்பெனி விஷயமாக ஏராளமான பொறுப்புகளை நிறைவேற்றுமாறு நேர்ந்தது. 'மேகலை உனக்கு விவரம் தெரியாது. நான் உனக்கு உதவி செய்வதாலேயே பலர் எதிர்க்கிறார்

கள்' என்று பேச்சைத் தொடங்கினன் ராமதாஸ். மேகலை பதில் கூறவில்லை.

'பெயர்தான் கெடுகிறதே ஒழிய எனக்கு எந்தவிதப் பலனும் இல்லை தெரியுமா?'

'உதவியை எதிர்பார்த்தா நீங்கள் செய்கிறீர்கள்?'

'இல்லை, இல்லை இருந்தாலும் நான் உதவிய இவ்வளவு பெருந்தொகை உனக்காகத்தான் என்பது உனக்காவது தெரியுமா?'

'பேஷாகத் தெரியும் ஆபீஸ் நிலை ஒழுங்கு ஆனவுடன் அதைச் சிறிது சிறிதாகக் கொடுத்துவிட முடிவு செய்திருக்கிறேன். திரும்பி வராதோ என்ற கவலை வேண்டாம்?'

'அதற்குச் சொல்லவல்லை. மேகலை வெளியே எல்லோரும் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா?'

'என்ன நினைக்கிறார்கள்?'

ராமதாஸ் குறும்புத்தனமாகச் சிரித்தான். அருணஜடைக்குப் பிறகு மேகலை ராமதாஸை மறுமணம் புரிந்து கொள்ளப் போகிறாள் என்று நினைக்கிறார்கள்' இதைக் கூறிவிட்டு அவன் அவள் முகத்தை நோக்கினன்.

அமைதி நிறைந்திருந்த அந்த வீட்டில் மெல்லிய காலடி ஓசை கேட்டது. அவர்கள் அதைக் கவனிக்கவில்லை. மேகலை மௌனமாக இருந்தாள்.

மௌனத்தை ராமதாஸ் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, 'மேகலை வெளியார் கூறுவதில் தவறில்லையே. இந்தத் திருமணம் முன்பே நடந்திருக்க வேண்டியது தானே. திருமணம் என்பது மண்ணுலகில் மனிதர்களால் முடிவு செய்யப்படுவதன்று விண்ணுலகில் தேவர்களால் முடிவு செய்யப்படுவது. நமது திருமணமும் அப்படி முடிவானதே. அதை மனிதர்கள் மாற்றி வைத்துவிட்டால் இயலுமா?...

காலடியோசை கேட்டது.

அவனைத் தொடர்ந்து பேச மேகலை விடவில்லை. சட்டென்று எழுந்தாள். இரும்புப் பெட்டியிலிருந்து அருணஜடையின் கடைசி கடிதத்தைக் கொண்டுவந்து அவன் முன்பு போட்டாள். ராமதாஸ் அதைப் படித்தான். அவன் கரங்கள் நடுங்கின.

'மேகலை, மேகலை என்ன இது? அருணஜடையின் இந்தக் கடிதத்தை ஏன் என்னிடம் முன்பே காட்டவில்லை' ராமதாஸ் பதறினன்.

ஜன்னல் திரைச்சீலை குலுங்கியது. காற்று வீர்வீர் என அடித்தது. கதவுகள் படபடவென அடித்துக் கொண்டன. அந்த ஓசையில் யாரோ நடமாடும் அரவம் கேட்டது.

மேகலை அந்தக் கடிதத்தை அவன் கரங்களினின்று வாங்கினாள். அவள் கரங்கள் அவன் விரல்களில் மெல்லப் பட்டன. மேகலைக்கு எந்தவித உணர்ச்சியும் ஏற்படவில்லை. ராமதாஸ் அதிர்ச்சியுண்டவன் போலானான். நடுங்குங் குரலில் மேகலை நீ ஓர் அபூர்வப் பெண். இந்தக் கடிதத்தை அன்றே போலீஸில் கொடுத்திருந்தால் என் கதி என்ன ஆகியிருக்கும்...' என்று முடிப்பதற்குள் மேகலை குறுக்கிட்டு 'நன்றி மறக்கும் குணம் எனக்கு இன்னும் வரவில்லை. அந்தக் கடிதத்தை ஒப்படைப்பதால் என் கணவர் மீண்டு வருவாரா? அதன் விளைவு பாதகமாகலாம். நீங்கள் உடனே விலங்கைப்பூண அவ்வளவு மதியீனரா? எனக்கும் உங்களுக்கும் நீண்டநாள் தொடர்பென்றும் அதன் விளைவாக எழுந்ததே இந்தக் கடிதமென்று வாதிடுவீர்கள் கணவனையிழந்ததோடு ஒழுக்கத்தையும் இழந்தவள் என்று நானே அறிவித்துக் கொள்ளும் நிலை ஏன் ஏற்பட வேண்டும்?'

யாரோ பெருமூச்சுவிடும் ஒலி கேட்டது.

ராமதாஸ் உணர்ச்சி வசப்பட்டான். மேகலையின் கரங்களைக் கெட்டியாகப் பிடித்தான். 'மேகலை மேகலை உன்னைப் போன்ற பெண்ணை உலகில் பார்க்கவே முடியாது. உனக்கு இனி எந்தவிதத் தொல்லையும் வரவே கூடாது. மேகலை, உன்னை நான் வேண்டிக் கொள்வது ஒன்றே ஒன்றுதான். முதன் முதலாக என்னை நாடி உதவிக்குவந்த அன்றே உன் உள்ளத்தில் எனக்கும் இடமிருக்கிறதென்பதை அறிந்தேன். சட்டப்படி நாம் பதிவுத் திருமணம் புரிந்து கொள்வோம். என்னுடைய ஏராளமான ஆஸ்திக்கு வாரிசாக யாராவது வேண்டாவா?





மெல்லிய கனைப்பொலியா? காலடி ஓசையா? அவர்கள் காதிலும் அந்த அபூர்வ ஒலி வீழ்ந்திருக்க வேண்டும். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் இருந்தனர். ராமதாஸ் எழுந்துபோய் ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு வந்தான்.

திரைத்துணி அசைந்தது.

ராமதாஸ் இன்னும் அதிகமாகப் பேசினன். மேகலை ஒரு வார்த்தை இன்று கூறு. நாளைக்காலை ரிஜிஸ்திரார் ஆபீஸ் போவோம். சட்டப்படி சில செய்ய வேண்டியது அவசியம். இப்பொழுது கொடுத்துள்ள பணமெல்லாம் இதுவரை உன் பெயரில் பற்று எழுதி வைத்துள்ளேன். அவற்றை எல்லாம் நீக்கிவிடுவேன். அருணஜடை இன்னும் இருபது வருடம் கழித்து இறந்திருந்தால் நான் உன்னைக் கேட்பேனா இப்படி? மேகலை... மேகலை...' என்று கூறி நெருங்கினன் ராமதாஸ்.

மேகலை துள்ளி எழுந்தாள். கொஞ்சங் கொஞ்சமாக அவள் உடலில் கொதிப்பு ஏறியிருக்க வேண்டும். அந்தத் தீப்பிழம்பு அவள் கண்களின் மூலம் பிரகாசித்திருக்க வேண்டும். சுருங்கிய நெற்றியின் மூலம், சிவந்த கன்னங்கள் மூலம் எல்லாவற்றிற்கும் மேலாக துடிக்கும் உதடுகள் மூலம் ...

'நில் ராமதாஸ் நிறுத்தி விடு'என்று கர்ஜித்தாள் மேகலை.

நாடக மேடையாக இருந்திருந்தால் சபையோர் மெய்மறந்து நாற்காலியின் ஓரமாகத் துடிப்புடன் அமர்ந்து என்ன நேருமோ என எதிர்பார்ப்பர்.

'ராமதாஸ், என்ன பேசுகிறோம் என்பது தெரியாமல் பேசுகிறாய். நீ பேசுவதையும், அதை நான் கேட்டுக் கொண்டிருப்பதையும் என் கணவர் ஆவி கேட்டுக் கொண்டிருந்தால் என்ன நினைக்கும். இவ்வளவு நாள் உன்னோடு நான் பழகியதை ஊரார் தவறாக எண்ணியிருந்தாலும் என் உள்ளத்து உயிருடன் கலந்து அவர் ஆவி என்னைப் புரிந்து கொண்டிருக்கும். இப்போது ...

'இப்போது மட்டுமென்ன? அருணஜடையின் ஆவி சுற்றிவராதா? புரிந்து கொண்டிருக்காதா? புரிந்து நான் என்ன செய்யும்? மேகலா! இன்னும் நீ



"என்ன 'ஏர்கட்டு' தானுங்களே"
"ஆமாம்! பாதிதான்! கவ்னிச்சுக்கோ!"

கற்காலப் பெண்ணாக இருக்கிறாய், தற்காலத்தையும் அறிந்து கொள்' ராமதாஸ் கேலியாகப் பேசினன்.

மேகலை சிறினாள். அதைத் தொடர்ந்து நாகம் சீறுவதுபோன்ற பெருமூச்சு எங்கிருந்தோ கேட்டது.

'ராமதாஸ், உன் பேச்சு மலை ஏறுகிறது. நீ நினைப்பதுபோல் இல்லை. முதன் முதலில் உன்னைத் தேடிவந்த போது என் கணவரின் மானம் காக்க முயன்றேன். அதனால் என் மானத்தின் மாற்று குறைந்தாலும் பரவாயில்லை என எண்ணினேன். நீ உதவினாய். கணவர் மானம் காப்பாற்றப்பட்டது. ஆனால் அவர் உயிர் காப்பாற்றப்படவில்லை. அத்துடன் காரியம் நின்றதா? அவர் பெயர் நிரந்தரமாகவே இழிபடும் காரியங்கள் நேர்ந்தன. அதனால் நான் தொடர்ந்து உன் உதவியை நாடினேன். பணஉதவி கேட்டேனே உன்னை மனஉதவி கேட்கவில்லை. எந்த நேரமும் கடனைத் திருப்பித்தந்தால் கடன் அடையும். இழந்த மானத்தை எதைக் கொடுத்துப் பெறுவது? ஆண் துணையின்றி என்றால்

வாழ முடியும். எந்த ஆபத்து நேரினும் காக்க என் உயிர்க் கணவரின் ஆவி சுற்றிச் சுற்றிவரும் என்ற நம்பிக்கையுண்டு...' மேகலையின் இரத்தம் கொதித்தது.

'மேகலை நீயா பேசுகிறாய்? உன் முடிவு கடைசி முடிவுதானா? உனக்கு நான் உதவிய பணத்தை நினைத்துப் பார். அது வீணாவதா?— ராமதாஸ் குரலில் கெஞ்சலும், கொஞ்சலும் கொஞ்சம் வரம்பு மிஞ்சுதலும் இருந்தன.

இப்போது யாருடைய விம்மல் ஒலியும், வேதனை கலந்த பெருமூச்சொலியும் கேட்டன.

இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினர். மேகலை சட்டென முடிவா? ஆரம்பம் இருந்தாலன்றோ முடிவுஏற்பட. உன்னை என்றும் விரும்பியதில்லை. இன்று விரும்ப. லட்ச ரூபாயைப் பற்றிக் கவலைப் படாதே. என் உயிர் இருந்தால் நிச்சயம் திருப்பித் தந்துவிடுவேன். இல்லையெனில் அடுத்த பிறவியிலாவது நிச்சயம் தீர்ப்பேன். நீ போகலாம். இங்கிருந்து போய் விடலாம். உடனே போய்விடு போய்விடு' என்று கூவினாள். பேரிடி இடித்தது. ஆகாயத்தை வெட்டுவது போன்ற மின்னல்.

## 8

கதவு திறந்தது. ராமதாஸ் வெளியே செல்ல அல்ல. அருணஜடை உள்ளே வர.

அருணஜடை உள்ளே வந்து கொண்டிருந்தார். ராமதாஸும் மேகலையும் ஹோ என்று வீரிட்டலறினர். அருணஜடை மேகலையை அணைத்துக்கொண்டு அமைதிப்படுத்தி, 'மேகலை அஞ்சாதே. நீ எண்ணுவது போல் நான் ஆவியன்று. அருணஜடையின் ஆவி வந்துவிட்டதாக அஞ்சாதே. அருணஜடையே வந்துவிட்டேன். உன்னைப் பற்றி தவறாக எண்ணி அந்த தவறான செய்கை ஏற்படக் காரணமான நான் உயிரை மாய்த்துக்கொள்ள அந்த இரவு ஓடினேன். அப்படி உயிரை நீத்திருந்தால் பெருந்தவறு செய்தவனாக ஆவி வடிவில் அமைதியின்றி அலைந்திருப்பேன். வாழ்க அந்த வழிப்பறித் திருடன். பேஸின் பிரிட்ஜ் ரயில் பாதையில் என்னைத் தொடர்ந்துவந்த அந்தத் திருடன் என் கையிலிருந்து சட்டென பையைப் பறித்துக்கொண்டு ஓடினான் அதில் உயில் இருந்தது. சொத்து விவரம் இருந்தது. கொள்ளைக்காரனிடம் அது சிக்கிவிட விரும்பவில்லை. அவனைத் துரத்தி ஓடினேன். என்னிடமிருந்து தப்ப ரயில்வே லயனைக் கடந்தபோது கூட்ஸ் வண்டித் தொடரால் தாக்கி எறியப்பட்டான். வண்டி நிற்கவில்லை. என்னைப்போன்ற உருவமுடைய அவனது முகம் உருத்தெரியாமல் நசுங்கியிருந்தது. ஒரு கணம் யோசித்தேன். அவனது உடையை எடுத்து விட்டு என் உடையை அவனுக்கு மாட்டினேன். தேவையானவற்றை எடுத்துக்கொண்டு என் விலாசம் கொண்ட தோல் பையை மட்டும் அங்கே விட்டுச் சென்றேன். அந்த அடையாளமில்லாவிடில் அந்த உருவத்தை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. நான் அங்கிருந்து மறைந்தேன். நான் இறந்துவிட்டதாக எங்கும் பேச்சு அடிபட்டது. நீயும்ராமதாஸும் ரொம்பவும் அன்யோன்யமாக இருப்பதாக எல்லோரும் கூறுவது மறைந்து வாழ்ந்த என் காதுக்கும் எட்டியது. உண்மையை அறிய இங்கு வந்தேன். இருவரும் அமர்ந்து பேசுவதைக் கேட்டவுடனேயே செய்தியை நம்பி விரைந்து சென்று உயிரை மாய்த்துக் கொண்டிருப்பேன். ஆனால் நீங்கள் பேசிக் கொண்டவை அனைத்தையும் அறிந்த பிறகு... மேகலை நீ இரண்டாவது கண்ணகி. உன் தியாகம் வீண் போகாது. நீ செய்த தியாகத்துக்கு உயர்தரமான பரிசு உன் கணவனை நீ பெற்றுவிட்டாய்? தொழிலும், சொத்தும், ஆஸ்தியும் போனாலும் பாவாயில்லை எனக்கு நீ போதும்...'

அருணஜடை பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு மேகலை விம்மி விம்மி அழுதாள். திக்பிரமை பிடித்துப் பேயைக் கண்டதுபோல் முகம் வெளுத்துப்போன ராமதாஸ் கண்களிலும்நீர் ததும்பியிருக்க வேண்டும். குனிந்த தலையுடன் அவன் மேகலையின் பாதங்களைத் தொட முயன்றபோது ஒரு சொட்டு நீர் அந்தச் சிவந்தபாதத்தை நனைத்தது.

☆






ஆலயத்தில் உள்ள சிலைமீது பாலைச் சொரிகின்றோம், தேனைக் கொட்டுகின்றோம்; காசையும் காணிக்கையாகக் கொடுக்கின்றோம். ஏன்? ஆண்டவன் உவந்து நமக்கு அளித்ததை முதலில் அவனுக்கு அர்ப்பணம் செய்வோம், பின்பே நாம் அனுபவித்தல் வேண்டும் என்பதே நல்மாந்தரது கருத்து.

**ஆலய சொத்து:**—திருப்பதி வெங்கடாசலபதி கோயில் உண்டியலிலே தினம் விழும் காசு பணத்துக்கு ஒரு கணக்கு உண்டோ? காசு பணம் மட்டுமா? அரிய ஆபரணங்களும் விழுகின்றன. தேவாதிதேவனுக்கு நவரத்தின கிரீடம் சாத்துவர்; முத்து மாலை, மோகன மாலை முதலியன முழு மனதுடன் பூட்டிப் பூரிப்பர்.

அவ்விதம் ஆலயங்களிலே பொன்னும் மணியும் குவிகின்றன. கவர்னர்கள், ராஷ்டிரபதிகள் கிடக்கட்டும். அயல்நாட்டு அதிபர்கள் வரின், ஆலய உடைமைகளைப் பார்த்து ஆனந்தம் அடைகின்றனர். அத்தகைய ஆலய சொத்தின்மீது பலரும் கண் வைத்தல் இயற்கைதான்.

**திப்புவின் தோல்வி:**— ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் முகம்மது கஜினி என்பான் இங்கு வந்து, ஆலயங்களைச் சூறையாடி, அளவிறந்த பொருள்களை அபகரித்துச் சென்றான் என்பது சரித்திரம். திப்பு சுல்தானுக்கும் அவ்விதம் திருவனந்தபுரம் பத்மநாப சுவாமியின் சொத்துமீது ஆசை பிறந்தது. பிறக்கவே,

ஆயிரத்து எழுநூற்று தொண்ணூறும் வருஷம் திருவாங்கூரின்மீது அச்சுல்தான் படையுடன் பாய்ந்தான். கிழவன் ராஜா என்ற தர்ம ராம வர்மன்—அத்திருவாங்கூர் வேந்தன்—சீறியெழவே, மைசூர் மன்னவன் செம்மையாக அடியுண்டு, புறமுதுகிட்டு ஓட நேர்ந்தது.

**உளவு உணர:**- அடியுண்டு திரும்பிய அவமானம் ஒன்று; ஆலய உடைமைகளின்மீது ஆசையொன்று. இரண்டும் அவனைப் பிடித்தாட்டின. ஆசை வெட்கம் அறியாது என்பர். பத்மநாப சுவாமி கோயில் கொடி மரத்தின்மீது தனது குதிரையைக் கட்டி வீறு காட்டப் போவதாகக் கூறி நின்றான் அவன்.

மறுமுறை படையுடன் பாயுமுன்னம், திருவனந்தபுரத்தின் உளவை உணர, பத்மநாப சுவாமி கோயிலின் அமைப்பை அறிய, ஆலயப் பாதுகாப்பின் தன்மையைத் தெரிந்துகொள்ள அச்சுல்தான் முனைந்தனன். உடனே, வேதத்தில் கைவந்த இரு கன்னடியப் பிராமணரை ஏவினன்.

**வேத கீதம்:**- அன்றும் சரி, இன்றும் சரி, அந்தண சிரேஷ்டர்கள் ஆலயத்தினுள்ளே தாராளமாகப் புகலாம்; மண்டபத்தில் அமர்ந்து முறைப்படி வேதம் ஓதலாம். அனுதினமும் தவறாமல் ஆலயத்துக்கு வரும் அரசன் அவ்வேத கோஷத்தைச் செவி மடுப்பான், சித்தம் குளிர்வான். முடிவிலே மறை

வல்லாருக்கு மரியாதையெல்லாம் கிட்டும்.

கன்னடியப் பிராமணர் இருவரும் தினம் அதிகாலையிலே நீராடி, ஜப தபங்கள் செய்த பின்னர், அந்த ஆலயம் செல்வர். மூலமண்டபத்தில் அமர்ந்து, உச்சரிப்பும் சுரமும் பிறழாமல் வேத கீதம் ஓதுவர். வேத கானம் கேட்டு அக்கொற்றவன் தர்மராம வர்மன் பரவசம் பூத்தான். அதனால்,

இரு வேதியருக்கும் தினம் அறுசுவை கலந்த உணவு கிடைத்தது. உபசாரங்களெல்லாம் தட்டாமல் கிட்டின.

துப்பு பார்த்தல்.— அரசனையே பரவசப்படுத்திய வேதியர் என்பது ஒருபுறம், அவர்களது முக விலாசம் ஒருபுறம், பக்தி சிரத்தை ஒருபுறம். இவை மூன்றும் சேர்ந்து ஆலய அதிகாரிகளின் உள்ளத்தை அடிமை கொண்டன. பிற நான்மறையாளரும் அக்கன்னடியரிடம் அன்பும் மதிப்பும் பூத்தனர். போற்றியும் வந்தனர்.

வரவே, ஆலய அமைப்பின் நேர்த்தியைப் பருகுவார்போல் இருவரும் ஆலயத்தைச் சுற்றி வந்து, அமைப்பை அறிந்து கொண்டனர்; கட்டையும் காவலையும் கவனத்துடன் கண்டு கொண்டனர். ஆலய உடைமைகளின் விவரமும் அறியவந்தனர். பொக்கிஷசாலையையும் பார்த்தறிந்தனர்.

சிப்பந்திகள் நிலை:— அவ்விதம் அறிந்த காலையில், ஆண்டவனது மகிமையே மகிமை! அரசனது பக்தியே பக்தி! ஆலய அதிகாரிகளின் நேர்மையே நேர்மை!—என்றெல்லாம் புகழ்ந்தனர் அவ்விருவரும். வெளுத்ததெல்லாம் பால் என்று கொள்ளும் பான்மை வாய்ந்த சிப்பந்திகள் சொக்கிப் போயினர்.

அந்நிலையில் சிப்பந்திகளோ அரசன் ராம வர்மனது படை வகுப்பு, பராக்கிரமம் முதலியவற்றையும் உரைத்தனர் அக்கன்னடியருக்கு. அச்சிப்பந்திகளின் உதவி கொண்டு, திருவனந்தபுர அரண்மனை அமைப்பையும் காவலையும் நேரில் பார்த்துக் கூர்ந்துணர்ந்து கொண்டனர்.

அரசன் சமூகம் — அவ்வேளை, 'இத்தகைய நரபதியின் கையில் சிக்கி அத்திப்பூ தான் சிதறியாமல்





சிறக்க முடியுமோ?' என்றும் கன்னடியர் களித்துரைத்தனர். ஆதிமுதல் இருவரும் தம்மைக் கன்னடியர் என்று கூறிக்கொள்ளவில்லை; நடையுடையிலும் காட்டிக்கொள்ளவில்லை. பாண்டிநாட்டினராகவே நடித்து வந்தனர்.

ஆலயத்தில் அமர்ந்து வேத கானம் புரியும் பூசுரரோ ஒன்றிரண்டு மாதம்



ஆனதும் சொந்த ஊருக்குத் திரும்ப நினைப்பர். அப்போது ஆலய அதிகாரிகளோ அன்னவரை அரசனது சமூகத்துக்கு அழைத்துச் செல்வர். அரசனும் தக்கவாறு சம்மானம் செய்தனுப்புவான். இது முறைமை.

**மங்கள அட்சதை:**-கன்னடிய வேதியர் ஒரு மாத காலம் ஆனதும் ஊர் போக உன்னினர். ஆலய அதிகாரிகளோ வழக்கப்படி அந்த இருவரையும் வேந்தனது அத்தாணி மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர். இருவரையும் ஏற இறங்கப் பார்த்தான் இறைவன். அயலே இருந்த அமைச்சனுக்கு அது கண்டு துணுக்கம் பிறந்தது.



(புதிதாக மணம் செய்துகொண்ட பிச்சைக்கார தம்பதிகள்)

மனைவி:—'என்னங்க? ஏதாவது பிழைப்புக்கு வழி தேட உத்தேசமிருக்குதுங்களா?'

கணவன்:—'அடசே! அந்தக் கவலை நமக்கு ஏன்? இதுவரையில் இந்த ஒரு வயிற்றுக்கு நிச்சயமா சோறு போட்ட சாமி இரண்டு வயிற்றுக்கும் போட்டுட்டுப் போவுது!

வேதம் வல்ல இருவரும் விமலனைத் தொழுது, வேந்தனுக்கு மங்கள அட்சதை கொடுத்தனர். பயபக்தி விசுவாசத்துடன் ராம வர்மன் அதனை வாங்கிக்கொண்டான்; இருவருக்கும் வேண்டுமளவு ஆடையும் அணிகளும் அரதனமும் அளித்தான் அத்தர்மராஜன். இருவரும் விடைகொண்டனர்.

**வேந்தன் யூகம்:**— வேதியருக்குப் பரிசு வழங்கும் சமயந்திலே வேந்தன் வாய் திறந்து ஏதும் பேசுவது கிடையாது, நகைமுகம் காட்டுவதுடன் இருப்பதே முறைமை. தர்ம ராம வர்மனோ வாய் திறக்க ஆயத்தமானான். அமைச்சனும் தளவாயும் 'ஈதென்ன புதுமை?' என்று பிரமிக்கலாயினர்.

அத்தருவாயில், 'விப்பிர சிரேஷ்டரே! சொந்த ஊர் திரும்பியதும், திப்புசுல்தானை நான் நிரம்ப விசாரித்ததாகச் சொல்லுங்கள். அவனுக்கும் மங்கள அட்சதை அளியுங்கள்! உங்கள் தேச அரசன் சுகமே வாழ்வதில் உங்களுக்குச் சிரத்தை இருத்தல் நியாயந்தானே!' என்றான் ராமவர்மன்.

**வாழ்வு முடியும்:**-உடனே அப்பூபதி தனது அருகே நின்றுகொண்டிருந்த மந்திரியையும் தளவாயையும் நோக்கினான். இருவருக்கும் உள்ளம் ஒடுங்கியது. வேதியரிருவரும் திப்புவின் உளவர் என்பதை நாம் அறியாது போனோமே என்று வேங்கினர். பூபதியை நோக்காமல் பூமியை நோக்கி நிற்கலாயினர்.

கன்னடிய வேதியர் இருவருமோ அரை உயிர் ஆகிவிட்டனர். அரசன் நமது நிலையை உணர்ந்துவிட்டனனே, யாது விளையுமோ? என்ன நேருமோ? இன்றோடு வாழ்வு முடிந்துவிடும். காசுக்கு ஆசைப்பட்டுக் குலத்துக்கே கேடு தேடிக்கொண்டோமே என்று வருந்தினர், வாடினர், நடுங்கினர், அறிவு அழிந்தனர்.

**பெருந்தன்மை:**-குற்றமுள்ள நெஞ்சு அல்லவா? இருவரும் தமது மதி மோசத்தை விரித்து உரைத்தனர்; உயிர்ப் பிச்சை வேண்டினர். மாபாதகத்துக்குப் பிராயச்சித்தம் ஏது? என்றுரைத்தனர். ராம வர்மன் ஆண்மையாளன்; ஆயினும் கருணை நிரம்பியவன்; பூசுரருக்குக் கனவிலும் தீங்கு நினையாதவன். ஆதலின்,

'அந்தணரே! அச்சம் வேண்டாம். உங்களது உயிருக்கு ஆபத்து நேராது. திருவாங்கூரின் எல்லையைத் தாண்டும் வரையில், தக்க பாதுகாப்பு அளிப்பேன். தைரியமாக இருங்கள். எனது பரிசு, திப்புவின் வெகுமதி இரண்டும் கொண்டு சுகமே வாழுங்கள்' என்றான் அவ்விறைவன்.

**மந்திரி மறுகல்:**-அமைச்சனும் தளவாயும், 'உளவனை உணர்தல் நமது கடமையன்றோ? அக்கடமையினின்று தவறினோமே. தேசம் யுத்த முஸ்தீப்பிலே இருக்குங்காலத்தில் நாம் மதி மழுங்கிப் போயினமே. அரசன் இந்த உளவரை உணராவிடின், நம் சீமைக்கே அனர்த்தம் நேர்ந்திருக்குமே' என்று நைந்தனர்.

கன்னடியப் பிராமணர் இருவரும், 'தர்ம அரசே! நாங்கள் மைசூர் செல்லோம்; திப்புவின் முகத்தில் விழியோம். எனவே, இச்சீமையின் உளவை அவன் அறிதல் எங்ஙனம்? எங்கள் இருவரையும் மன்னித்ததே பெருந் தண்டனை. தக்க பாதுகாப்பு அளித்து எங்கள் இருவரையும் விடுத்தல் இன்னும் பெரிய தண்டனையாம்' என்றுரைத்து ஏகினர்.

**தக்க பரிகாரம்**—இருவரும் தங்கள் தேசம் போகவில்லை. மனைவி மக்களுக்கும் தகவல் கொடுக்கவில்லை. பாண்டி நாட்டிலே மதுரையம்பதியிலேயே தனித்து வாழ்ந்து வரலாயினர். மனைவி மக்களைத் துறந்து வாழ்தலே தக்க பரிகாரம் என்பது அவர்களின் முடிவாயிற்று.



"என் கல்யாணத்துக்குக் கல்யாணமான தம்பதிகளாகவே பார்த்துக் கூப்பிடப் போகிறேன்"

"ஏன்டா அப்படி?"

"அவர்கள் இப்போது எனக்குச் செய்கிற பரிசுக்குப் பதில், நான் திருப்பிச் செய்ய வேண்டியிராது பாரு!"

தர்மராம வர்மன் என்பான் நாற்பதாண்டு திருவாங்கூரை நன்கு பரிபாலித்தவன். 1798–ம் ஆண்டிலே எழுபத்து மூன்றாவது வயதில் கண் மூடியவன். மகா தெய்வ பக்தன். பத்மநாப சுவாமி அவனுக்குப் பிரத்தியட்சம். திருவாங்கூர் சீமைக்கு நற்பெயர் தேடித் தந்தவன்.

அன்றிருந்த ஆங்கிலேயரோ அவனைக் குடிமக்களின் தந்தை என்று கொண்டாடுவர். எல்லாரும் தர்மராஜன் தர்மராஜன் என்று போற்றுவர். அத்தகைய வேந்தனது கையில் திப்பு சுல்தான் தோற்றோடினன்!






கடியாரத்திலுள்ள ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு மணியாகப் பெருகி வளருவதைப்போல்," அத்தனை நேரம் அதிருப்திப்பட்டுக் கொண்டிருந்த வாசுவின் முகம் திடீரென்று பிரகாசமடைந்தது. யாருடைய வருகையை எதிர்பார்த்து அவன் உள்ளம் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்ததோ, அந்த எழில்மோகன உருவம் அவன் வீட்டிற்குள் நுழைந்தது. வாசுவிற்கு மனத்தால் நினைத்தாலே இனிக்கும் அவள் பெயர்தான் பிரேம குமாரி.

விசாலமான கூடத்தில் போடப்பட்டிருந்த அழகிய விரிப்பின் மீது அவள் வந்து அடக்கமாக அமர்ந்து கொண்டாள். அதைத் தொடர்ந்து, வாசுவின் தங்கை துளசியும் கையில் தம்பூராவுடன் அவள் முன்பு வந்து உட்கார்ந்து கொண்டாள். முதலில் துளசிக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டிய அன்றைய புதுப்பாடத்தை பிரேம குமாரி அவளுக்குப் பாடிக் காண்பித்தாள். துளசிக்குப் பிடிபடாமலிருந்த சங்கதிகளைத் திரும்பத் திரும்ப அவள் பாடினாள். அப்போது அந்த வீடே நாத வெள்ளத்தில் மிதப்பது போலிருந்தது வாசுவிற்கு.



# பாடகி

கே. பி. நீலமணி



சங்கீதத்திலே அதிகப் பிரமை கொண்டிருந்த வாசு, இப்படியேதான் ஒவ்வொரு நாளும் பிரேமாவிற்குத் தெரியாமல், தன் அறையிலிருந்தபடியே அவள் பாட்டைக் கேட்டு ரசிப்பது வழக்கம். தேனினுமிய அவளது தெய்வீகக் குரல் அவன் உள்ளத்தை பாகாய் உருக்கியது. முற்றிய மாதுளையிலிருந்து உதிர்ந்தோடும் முத்துக்களைப்போல் சிறிதும் தேய்வின்றி, அநாயசமாக அவள் பேசும் 'பிர்க்கா'க்களைக் கேட்டு வாசு பிரமிப்பான்.

காளானிலிருந்து கிடைக்கும் பென்சிலினைப்போல்,ஏழையாகப் பிறந்து விட்டது தூர் அதிர்ஷ்டம் ஒன்றைத் தவிர, இறைவன் அவள் விஷயத்தில் அழகிற்கும், அறிவிற்கும் வஞ்சனை செய்யவில்லை. அவளது சங்கீத வித்வத்தை எண்ணும் போதுதான் அவள் மீது அவனுக்கு எல்லை மீறிய அன்பு மேலோங்கி நிற்கும். ஆயுள் முழுவதும் அவள் அருகிலேயே இருந்து அந்த இசைப் பேரின்பத்தை அள்ளி அள்ளிப் பருகிக்கொண்டிருந்தாலே போதும், வாழ்வில் அதைவிட அவனுக்கு வேறெதுவும் வேண்டாம். ஆனால், 'சிஷ்யை என்ற உரிமையுடன் ஞான சூன்யமான தன் தங்கை துளசிக்கு, இன்று அந்தப் பாக்கியத்தை அனுபவிக்கக் கொடுத்துவைத்திருக்கிறது. நானே.....? ஆம்! அவளையும், அவளோடு பிறந்த இசையையும் விலைக்கு வாங்கும் ஒருவன் வந்து தானே ஆகவேண்டும்.' அதற்கு மேல் அவனால் எண்ணவே முடியவில்லை.

ஏதேச்சையாத் திரும்பிய வாசுவிற்குத் தூக்கி வாரிப் போட்டது. சுவற்றிலே தொங்கிக் கொண்டிருந்த காலண்டரில், யாரோ ஒரே கொத்தாய் அத்தனை தாட்களையும் கிழித்தெறிந்து விட்டாற்போல் அவனுக்கு

வியப்பாக இருந்தது. ஆம்! அன்றோடு அவன் ஊருக்கு வந்து பத்தொன்பது நாட்கள் ஆகிவிட்டனவாம். காலண்டர் கூறிற்று. இன்னும் நான்கு நாட்களில், ஏரிலே கழுத்தை வலிய மாட்டிக் கொள்ளும் காளையைப்போல், பங்களூரிலுள்ள தன் வேலையில் சென்று அவன் ஒட்டிக்கொண்டாக வேண்டும்.

இதற்கிடையில் ஒரு நாள், பிரேமாவினுடைய பாட்டைத் தான் நேரில் கேட்க விரும்புவதாகத் தன் தாயாரிடம் வாசு கூறினான். தாயாரும் அதற்கு ஏற்பாடு செய்தாள். ஏழை வீட்டுப் பெண், பெரிய இடத்துக் கோரிக்கைக்கு இணங்கினாள் என்றாலும், 'வாசு தன் பாட்டை ஆசையோடு கேட்க விரும்புகிறான்' என்பதில் பிரேமாவிற்கு உள்ளூர எல்லையற்ற சந்தோஷம். குறிப்பிட்ட நேரத்திற்கு அவள் வந்துவிட்டாள்.

சற்று ஓரமாக இருந்த சோபா ஒன்றில் தாயார், சகோதரி புடைசூழத் தன்னையே பார்த்துக்கொண்டிருந்த வாசுவை, ஒருகணம் ஏறிட்டுப் பார்த்துவிட்ட பிரேமாவின் உள்ளம், ஏதோ தாங்க முடியாத கிளுகிளுப்பை அநுபவித்தது. தன்னை மறந்த அவள், மறுகணம் தன்னிலே உணர்ந்தாள். கடமை அவள் கைவிரல்களுக்கு அசைவூட்டி தம்பூராவை மீட்டச் செய்தன. அவள் குரலும் மெய்மறந்து அதில் ஐக்கியமாகிவிட்டது.

அன்று, 'அவள் பாடினாள்' என்கிற சாதாரணச் சொல்லே, எல்லோரையும் போல் வாசுவினாலும் கூறிவிட முடியாது. உடலையும், ஊனையும் ஊடுருவிச் சென்று கேட்கும் மனிதனை நெக்குருகச் செய்யும் பிரேமாவின் இசையினால் கல்லையும், கடும் பாறையையும் ஒரு நாள் குழம்பாக்கிக் காட்ட முடியும் என்றே எண்ணினான்.

பாவம்! தான் கற்ற வித்தை அத்தனையையும், அன்றே வாசுவிடம் காண்பித்துவிட வேண்டும் என்று எண்ணினாளோ என்னமோ; தன்னை மறந்து, தன்னைச் சூழ்ந்துள்ளவரை மறந்து, ஏன்? இவ்வுலகையே மறந்து தான் பிரேமா பாடிக்கொண்டிருந்தாள். உடலைப் பிழிந்து, உயிரைக் குரலாக்கி அவள் பாடிய கல்யாணி ராகத்தைக் கேட்ட வாசுவின் உடம்பிலே புல்லரித்தது. உள்ளத்திலே சொல்லொணாத இன்பக் கிளர்ச்சி.

எல்லாவற்றிற்கும்மேல், அவள் எடுத்துக்கொண்ட 'பாரெங்கும் பார்த்தாலும் உம்மைப்போல—பரிமளமுள்ள பரம புருஷர் கிடைக்குமோ' என்ற பாட்டைக் கேட்டதும், பனித்திரை போன்று இமைகளில் படிந்திருக்கும், கண்ணீரின் வழியாக ஒருமுறை வாசு அவளைக் கூர்ந்து நோக்கினான். அவளும் பார்த்தாள். தனக்காகவே அவள் அந்தக் கிருதியைப் பொறுக்கிப் பாடியிருக்க வேண்டுமென்று அவனது அந்தராத்மா கூறிற்று. அருகிலிருந்த துளசி ரகசியமாக, தன் அண்ணாவின் காதருகே சென்று, 'இது டீச்சரின் சொந்த சாஹித்தியமா?' என்று கேட்டுக்கொண்டிருந்தாள். வாசு அவளைக் கடிந்து கொண்டான்.

கணவர் வருவதற்குள் இந்தக் கச்சேரி முடிந்துவிட வேண்டுமேயென்று வாசுவின் தாயார் எண்ணினாள். அதை இங்கிதமாக உணர்ந்து கொண்ட பிரேமாவும், ஒரு பதத்தைப் பாடி, நிறுத்திவிட்டாள். எல்லோருடைய பிடிவாதத்தின்பேரிலும் மறக்க முடியாமல், பிரேமா அன்றைய காபி டிபனை அவர்களுடனேயே கழித்து விட்டு, தன் வீட்டிற்கு விடை பெற்றுச் சென்று விட்டாள்.

ஆனால், தனியாக வந்த பிரேமா, போகும்போது தன் உள்ளத்தையும் அபகரித்துச் சென்று விட்டதாகவே வாசுவிற்குத் தோன்றியது. நாளைய இரவு வண்டிக்குப் போக வேண்டிய பயணத்தை ஒத்திப்போட முடியுமா என்று எண்ணினான். அதற்குள் எப்படியாவது இன்றே அவள் வீட்டிற்குச் சென்று, நேரில் தன்னுடைய நன்றியைத் தெரிவித்துவிட வேண்டுமென்பது அவன் விருப்பம். அவள் நினைவு கண்களிலே மிதந்துகொண்டிருந்தது; செவிகளிலே அவளது இனிய கானம், ரீங்காரம் செய்த வண்ணமிருந்தது. அவளது வீட்டை நோக்கி நடந்தான் வாசு.

அந்தி மங்கும் நேரம். களைத்துச் சென்று கொண்டிருந்த கதிரவனது விலாவிலே, யாரோ வேல் பாய்ச்சி



ரத்தக் கிளறி செய்து விட்டாற்போல், அழகிய வானமே செக்கச் செவேலென்று காட்சியளித்துக்கொண்டிருந்தது. மங்களூர் ஓடு வேய்ந்த அச்சிறிய வீட்டினுள் யாரோ விளக்கேற்றிக்கொண்டிருப்பது தெரிந்தது. மரியாதைக்காகப் பிரேமாவின் தந்தையின் பெயரைச் சொல்லி அழைத்தான் வாசு.

'யாரது?' என்கிற கனிந்த குரல் ஒன்று உள்ளிருந்து வந்தது. மறுகணம், 'பிரேமா' என்று அழைத்த வண்ணம் குரல் வந்த பக்கம் திரும்பினான் வாசு.

'நான் பிரேமா இல்லே. அவள் தங்கை கிருஷ்ணகுமாரி. அக்கா அடுத்த கடைக்குப் போயிருக்கிறாள். இப்படி உட்காருங்கள், இதோ வந்துவிடுவாள்' என்று கூறியவண்ணம் இடுப்பில் குடத்தை சொகுசாக வைத்துக் கொண்டு அவ்விளையவள் அவ்விடத்தைவிட்டு மறைந்துவிட்டாள்.

வாசுவிற்கு ஒருகணம் தூக்கி வாரிப் போட்டது. உருவத்திலும், அழகிலும், இத்தனை பொருத்தமுள்ள ஒரு தங்கை பிரேமாவிற்கு இருக்கிறாள் என்பதே அவனுக்குத் தெரியாது. ஒரே அச்சில் கடைந்தெடுத்த இரண்டு தந்தப் பொம்மைகளே அவர்கள் இருவரும். அவனது ஆச்சரியம் பெருகிக் கொண்டே போகுமுன் பிரேமாவே அங்கு வந்துவிட்டாள்.

வாசுவினுடைய இந்தத் திடீர் வருகை பிரேமாவை பிரமிக்க வைத்து விட்டது. பெரிய பங்களாவிலே வசிக்கும் அவன், தன்னுடைய ஏழைக் குடிசையைத் தேடி வந்திருக்கிறான். அவனது உடலும், உள்ளமும் பரந்தது. அன்புடன், உபசார வார்த்தைகள் கூறி வரவேற்றாள். அந்தச் சொற்கள் வாசுவின் மனத்தை எங்கெல்லாமோ உள்ள இன்ப உலகிற்கு இழுத்துச் சென்று கொண்டிருந்தது.

'தெய்வீகத் தன்மை பொருந்திய தங்களுடைய சிறந்த சங்கீதத்தை எனக்குக் கேட்க வாய்ப்பளித்த தங்களிடம் நேரில் என் நன்றியையும், அன்பையும் தெரிவித்துவிட்டுப் போகலாமென்றுதான் வந்தேன்.' முடிக்கிவிட்ட இயந்திரமாக வாசு பேசித் தீர்த்துவிட்டான். பிரேமா தலை நிமிரவே இல்லை. நாணம் அவள் கழுத்தை வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தது. ஆனால், இப்படி எத்தனை நேரம் மௌனமாக இருப்பது? அது வாசுவையே அவமதிப்பது போலல்லவா ஆகிவிடும்?

'தங்களுடைய இத்தனை புகழ்ச்சிக்கும், பெருமைக்கும் நான் அருகதையேயில்லே. தலைவலியை விலைக்கு வாங்கும் என்னுடைய பாட்டை அத்தனை நேரம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த தங்களுக்கல்லவா நான் நன்றி கூறவேண்டும்.' தன் உடம்பிலுள்ள அத்தனை தைரியத்தையும் ஒன்று திரட்டி எப்படியோ கூறி விட்ட பிரேமா கலகலவென்று கண்ணாடி வளையல்கள் குலுங்குவது போல் சிரித்தாள்.

அந்த மோகனச் சிரிப்பிலே வாசுவும் பங்கு கொண்டான். அவளுடைய அடக்கமான குணமும், சாதுர்யமான பேச்சு வன்மையும் அவன் சிந்தையில் இடம் பெற்று நின்றது. அழிந்து போகும் செல்வத்தைத் தவிர ஆண்டவன் அவளுக்கு மற்றெந்த அம்சங்களிலும் வஞ்சனையே செய்யவில்லே. ஆனால், வாழ்க்கை முழுவதும் இப்படியே அவளுடன் சேர்ந்து சிரித்து வாழ, இறைவன் தனக்கு வழி வகுப்பானா? என்கிற ஒரு கேள்வி மின்வெட்டு வேகத்தில் அவன் மூளையைச் சென்று தாக்கியது.

'நீங்கள் பங்களூரிலேயேதான் இருக்கிறீர்களா?' என்கிற பிரேமாவின் மிருதுவான குரல், அவனைச் சுய நினைவிற்கு இழுத்து வந்தது.

'ஆமாம்! நாசமாய்ப்போகிற அந்தக் கம்பெனியைவிட்டு ஒழித்தால்தான் விமோசனம். இரண்டு மாசம் லீவ் கேட்டால் இருபது நாள் கொடுப்பான். நேற்று வந்ததுபோல் இருக்கிறது; நாளைப் போயாகவேண்டும்.' அலுத்துக்கொண்டே கூறினான் வாசு.

பிரேமா தனக்குள் சிரித்துக்கொண்டாள். வாசுவின் பேச்சிலிருந்தும், அவனது முகபாவங்களிலிருந்தும், அவனது உள்ளப் போக்கை அவளால் நன்

—90-ம் பக்கம் பார்க்க.



35 சிங்கக்குட்டி சீனு
மேலே நடப்பவை எல்லாவற்றையும் கீழே சேற்றில் அழுந்தி இருக்கும் யானைக்குட்டி கவனித்தது. சீனுவின் ஆபத்தான நிலைமையைக் கண்டதும், அவனைக் காப்பாற்றும் பொருட்டு தன் துதிக்கையை உயர்த்தி அவனைத் தாங்கிக் கொண்டது.
சந்திர
யானைக் குட்டியின் உதவியைக் கண்ட சீனு மெள்ள அதன் துதிக்கையில் குதித்தான்.
அதன் தலையைப்பற்றி முதுகில் ஏறிக் கொண்டான். அதை மரக்கிளையின் மேலிருந்து கவனித்த சிறுத்தை பயங்கரமாகக் கர்ஜித்தது.
உடனே அங்கிருந்தபடியே சீனுவின் மீது பாய குறி பார்த்தது.




அதேசமயத் அருகிலிருந்த மரம், செ களைத் தள்ளிக் கொண்டு பெரும் சப்தத்துடன் கஜேந்திரன் தன் கூட்டத்துடன் வந்தது
அதைப் பார்த்துவிட்ட சிறுத்தை பயமடைந்து உடனே மரத்திலிருந்து கீழே குதித்து காட்டுக்குள் ஓடிவிட்டது.
யானைகள், குட்டையில் மாட்டிக் கொண்டிருக்கும் யானைக்குட்டியையும் சீனுவையும் எப்படிக்காப்பாற்றுவது என்று தெரியாமல் முழித்தன. சீனு அவைகளுக்கு ஒரு தந்திரத்தைக் கூறினன்.
சீனுவின் சொல்படி கஜேந்திரன், அருகிலிருந்த நீண்ட மரத்தை தன் பலத்தினுல் வேரோடு முறித்தது.
தொடரும்

றாக உணர்ந்து கொள்ள முடிந்தது. அவன் அவளை எத்தனை தூரம் விரும்புகிறானோ, அதைவிட ஆயிரம் மடங்கு அதிகமாகத்தான் அவள் அவனை நேசிக்கிறாள். ஆனால், செல்வத்திலே புரளும் சீமான் வீட்டுப் பிள்ளையான வாசு எங்கே? அன்றாடம் காய்ச்சியான குமஸ்தா குப்புசாமியின் மகள்தானெங்கே? மலைக்கும் மடுவிற்குமாவது அடுத்தடுத்து இருக்கும் ஒரு சிறு தொடர்பு உண்டு. தனக்கு வாசுவின் நிழலில்கூட நிற்க அருகதையில்லையே!' இதை நினைக்கையில்தான் அவளுக்குத் துடித்துக்கொண்டிருக்கும் தன் இதயமே நின்றுவிடும் போலிருந்தது.

'பிரேமா!' என்று, ஏதோ ஆழமான கிணற்றிற்குள்ளிருந்து, யாரோ கூப்பிடுவது போன்ற வாசுவின் குரல் அவள் காதுகளில் லேசாக விழுந்தது. பெரும் உடைப்பாகக் கண்களிலே பொங்கி எழுந்த நீரைப் பிறர் அறியா வண்ணம் துடைத்துக்கொண்டு, அவன் பக்கம் திரும்பியவள் அப்படியே ஸ்தம்பித்துவிட்டாள்.

'அந்த மங்கலான ஒளியில், வாசுவின் கையிலே தவழ்ந்து கொண்டிருந்த வைர மாலை வீசிய விதம் விதமான வர்ண ஜாலங்கள், அவள் கண்களைப் பறித்தது. காரணமற்ற ஒருவித பயத்தினால் அவளது உடல் வெடவெடத்துக்கொண்டிருந்தது.'

'பிரேமா! இச்சிறிய பரிசை என் பேரன்பின் காணிக்கையாக உன்னிடம் கொடுத்துப் போகவே இங்கு நான் வந்தேன். இதை நீ ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்றான் வாசு.

பிரேமா மறுத்தாள். விவரமறியாத ஒருவித திகில் அவள் உள்ளத்தைப் பற்றிக் கொண்டுவிட்டது. தனவந்தர் பிள்ளைகளுக்கு இதெல்லாம்—ஏன், எதுவுமே அவர்களுக்குச் சாதாரண விஷயம்தான். அங்கு எது நடந்தாலும் வெளிவராது; வந்தாலும் அவர்களுக்கு அதைப்பற்றி அக்கறையில்லை. ஆனால், தன்னைப்போன்ற ஏழைக்கு?...ஒன்றுமில்லாவிட்டால்கூட, நூறு உண்டு பண்ணிக் கூறுவதற்கு இவ்வுலகில் எத்தனை பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள்! காரணம், அந்த வாய்க்கு உறை போட்டு மறைக்கும் பணம்தான் அவர்களிடமில்லையே. இந்த நிலையில் தன் தங்கையோ, தந்தையோ வந்துவிட்டால்?' என்று நினைத்தபோது, அவள் உடல் முழுவதும் 'குப்'பென்று வியர்த்துவிட்டது. உள்ளத்திலே முன்னிலும் பன்மடங்காகப் பயம் தலைவிரித்தாடியது. அவளது தடுமாற்றத்தின் மூல காரணத்தை வாசு எளிதில் புரிந்து கொண்டுவிட்டான்.

'பிரேமா! இதை என்னிடமிருந்து பெற்றுக்கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. இது நான், என் சுய சம்பாத்தியத்தில் ஊரிலிருந்து வரும்போது துளசிக்கு என்று வாங்கி வந்தது. அவளுக்குத்தான் இதைப்போல் எத்தனையோ 'செட்' இருக்கின்றனவே. இதை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் என் மனம் நிம்மதியடையும். என் அன்பின் நினைவாக, இது உன் மார்மீது தவழ்ந்து கொண்டிருக்கட்டும்' என்று அடுக்கடுக்காக கூறிக்கொண்டே வந்தவன், பதிலுக்குக்கூடக் காத்திராமல் பலவந்தமாக அவள் கையில் திணித்துவிட்டு வாசு அங்கிருந்து மறைந்துவிட்டான்.

கையில் மாலை ஏந்தி நிற்கும் கற்சிலை ஒன்றைப்போல் நின்று கொண்டிருந்த பிரேமாவின், ஏதோ ஒரு உள்ளுணர்வு அவளை தலையில் ஓங்கி ஒரு குட்டு வைத்தது. குடத்து நீருடன் உள்ளே வந்து கொண்டிருந்த சகோதரிக்குத் தெரியாமல், மின்னல் வேகத்தில் அவள் அந்த மாலையைத் தன் புடவைத் தலைப்பினுள் மறைத்துக் கொண்டாள்.

வாசுவை, எவ்வளவோ பெரிய புத்திசாலி என்றுதான் பிரேமா எண்ணிக் கொண்டிருந்தாள். இப்போதும் அவளுடைய அந்த எண்ணத்திற்குப் பழுதில்லை. ஆனால், அன்றைய அவனுடைய செய்கையைப் பொறுத்தவரையில், அவன் பெரும் அசட்டுத்தனமாக நடந்து கொண்டு விட்டதாகவே அவள் எண்ண வேண்டியிருந்தது.

ஏனென்றால், வாசு சுலபமாகக் கூறிக் கொடுத்துச் சென்றுவிட்டானே! 'அந்த உயர்ந்த மாலையை அவன் கூறியதுபோல் எப்படித் துணிவுடன் அவள் கழுத்தில் அணிந்து கொண்டு,



அந்த வீட்டில் வளைய வர முடியும்? அப்பாவும், தங்கையும் அதைப்பற்றிக் கேட்டால், அவள் எந்த பதிலைச் சொல்ல முடியும். இதைக் கொஞ்சமாவது யோசித்திருந்தால் வாசு......?' வளர்ந்து கொண்டே சென்ற சிந்தனை, பழைய படம் 'டப்'பென்று பாதியிலேயே அறுந்து விழுந்துவிட்டது.

வாசுவின் பொன் உள்ளம் அவளுக்குத் தெரியுமாதலால், அதைத் திருப்பி அவனிடம் சேர்த்து, அவன் மனதைப் புண்படுத்த அவள் மனம் இசையவில்லை. எத்தனைதான் பிறர் அறியா வண்ணம் அந்த விலையுயர்ந்த மாலையை பிரேமா, தன் பெட்டிக்குள் பத்திரமாகப் பதுக்கிவைத்துப் பூட்டியிருந்தாலும், அதையும் உடைத்துக் கொண்டு அவள் உள்ளம் ஏனோ படபடத்துக்கொண்டுதானிருந்தது.

## 2

வாசு பங்களூருக்குச் சென்று அன்றோடு ஒரு வாரம் ஆயிற்று. அதற்குள் அவன் தாயாருக்கு நான்கு கடிதங்கள் எழுதிவிட்டான். அவை ஒவ்வொன்றிலும் அவன் பிரேமாவைப்பற்றி விசாரித்து எழுதியிருந்தான். இறுதியாக வந்த ஒரு கடிதத்தில், அவனுக்கு மனைவியாகக்கூடிய தகுதி பிரேமா ஒருத்திக்குத்தான் இருக்கிறதாம். எப்படியாவது தன் ஆசையை நிறைவேற்றி வைக்கும்படித் தன் தாயாரைக் கெஞ்சி எழுதியிருந்தான்.

எத்தனையோ பெரிய பெரிய இடங்களிலிருந்தெல்லாம் வந்த பெண்களை ஒதுக்கிவிட்டு, 'எனக்கு இப்போது ஒன்றும் கல்யாணமே வேண்டாம்' என்று அடம் பிடித்துக்கொண்டிருந்த பிள்ளையின் மனசு, இப்போதாவது மாறிற்றே என்பதில் பெற்றவளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சிதான். ஆனால், அதையொட்டி ஒரு விவரிக்க இயலாத சஞ்சலமும் அல்லவா அவள் உள்ளத்தை வாட்டி வதைக்கிறது.

பிரேமா தனக்கு மருமகளாக வருவதில், அவளுக்கும் கொள்ளை ஆசைதான். ஏழையாகப் பிறந்துவிட்ட ஒரு குற்றத்தைத் தவிர அவளிடம் யாரும் எவ்வித குறையும் காண முடியாது. அவளைப்போன்ற அழகும், அடக்கமும், குணமும் கொண்ட பெண்களைப் பார்ப்பது அரிது. ஆனால், இதைத் தன் கணவரிடம் கூறிவிட்டு, அவள் உயிரோடு மீள்வதேது?

ஆனால், என்றாவது ஒரு நாள் கூறித்தானே ஆகவேண்டும். மனத்திற்குள்ளேயே அடைத்து வைத்துக்கொண்டிருந்தால் மாத்திரம் கவலை தீர்ந்துவிடுகிறதா? பொறுப்பு அவள் தலைமீதல்லவா சுமந்துவிட்டது. வாரத்திற்கு ஆறும் ஏழுமாக, வாசுவின் கடிதங்கள் பெருகி வளர்ந்து கொண்டே வந்தன.

ஒருபுறம் பிள்ளையின் பிடிவாதம், மறுபக்கம் கணவரின் மேலுள்ள பயம்; இதற்கிடையில் எவ்வித முடிவிற்கும் வர இயலாமல் எத்தனை நாட்கள்தான் குழம்பிக்கொண்டேயிருக்கிறது? ஒரு நாள் வாசுவினிடமிருந்து வந்த அத்தனை கடிதங்களையும் கணவரிடம் காண்பித்து, தன் தாழ்வான அபிப்பிராயத்தையும் ஜாடையாகக் கூறியேவிட்டாள். ஆனால், அதைக் கேட்டதும், மலையாளத்துக் 'கதகளி' மாதிரி அவர் குதித்த குதியையும், ஆடிய ஆட்டத்தையும் அவளால் ஆயுசுக்கும் மறக்க முடியாது.

'ஓஹோ! தாயும் பிள்ளையும், இரண்டு பேருமாகச் சேர்ந்தே – என் கௌரவத்தையும், அந்தஸ்தையும் தரைமட்டமாக்குவதென்று திட்டமிட்டு விட்டீர்களா? இதற்குத்தானா, கெஞ்சினால்கூடத் தயங்காதவன், லீவு முடிந்தும் ஊருக்குப் போகாமல் இங்கேயே சுற்றிக்கொண்டிருந்தான்? இப்பொழுதல்லவா புரிகிறது. பார்க்கிறேன், என் மூச்சு உள்ளவரை இந்தப் பிச்சைக்காரக் கல்யாணம் நடக்கிறதா என்று'—என ஆவேசத்தோடு இரைந்தார்.

ஆனால், அத்துடன் தன் கடமை முடிந்ததென்று இருந்துவிட அவரால் முடியவில்லை. 'பணத்தாசையால், தன் பிள்ளையின் மனத்தையே, பிரேமா தான் மயக்கிக் கலைத்து விட்டதாக அவள் தந்தையிடம் சென்று வாய்க்கு வந்தபடி பேசிவிட்டு, இனிமேல் உமது பெண் என் வீட்டுப் பக்கமே

வரக்கூடாது' என்கிற கடுமையான உத்தரவும் வேறு போட்டுவிட்டார்.

எவ்வளவுதான் சமாதானம் செய்து கொண்டாலும், தான் ஒரு ஏழை என்கிற ஒரே காரணத்தினால், அத்து மீறிப் பேசிவிட்டுச் சென்ற வாசுவின் தந்தையினது கடும் மொழிகள், குப்பு சாமியின் மனத்தினின்றும் மாற மறுத்தது. தாயற்ற அநாதைகளான தன் இரு பெண்களையும், குமாஸ்தா வேலையின் மூலம் தனக்குக் கிடைக்கும் நாற்பது ரூபாயில் காப்பாற்றி வரும் தான் ஒரு பரம ஏழைதான் என்றாலும், சுய கௌரவமும், தன்மான உணர்ச்சியும், அவரது வறுமை வாழ்க்கையிலிருந்தும் ஓடிப் போய்விடவில்லை. குத்தீட்டிபோல் கூர்மையாக, எடுத்து எறிந்துவிட்டுச் சென்ற, வாசுவின் தந்தையினது ஒவ்வொரு சொல்லம்புகளும், வாழ்க்கையில் விதம் விதமான கோணங்களில் அடிபட்டுத் தேறிவிட்டதாக எண்ணிய குப்புசாமிக்கு, ஒரு புதுப் பாடமாகவேதான் பட்டது.

அன்றையிலிருந்து, அரைவயிற்றிற்குக் கூழோ, கஞ்சியோ குடித்தாலும் போதுமென்று, தன் மகள் பிறர் வீடுகளுக்குச் சென்று பாட்டுச் சொல்லிக் கொடுத்தது போதுமென்று நிறுத்திவிட்டார். இதனால் குடும்பத்தின் பொருளாதார சீர் கெட்டது. சுமைதாங்கியைப்போல், அத்தனை காலம், வாழ்வில் சுக துக்கங்களுக்கு நிமிர்ந்து நின்று ஈடு கொடுத்து வந்த அவரது உள்ளம், இப்போதும் அவருடன் தன் பூரண ஒத்துழைப்பை அளிக்க மறுத்தது. நாளடைவில் வறுமையும், வேதனையும் அவரைப் படுத்த படுக்கையாக்கிவிட்டது.

தந்தையின் சம்பாத்தியமும் தடைபட்டுப் போகவே, பிரேமா தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டாள். வீட்டை வித்யாலயமாக மாற்றியமைத்தாள். தன் வீடு தேடி வந்து பாட்டுக் கற்றுக்கொண்டு போக வரும் ஏழைக் குழந்தைகள் கொடுக்கும் அன்புக் காணிக்கையினின்றும், நிமிர்ந்து நின்று குடும்பத்தை ஏற்று நடத்தினாள்.

தான் வழக்கமாக ஏறிச் செல்லும் விமானம், வழியில் நெருப்புப் பிடித்துக்கொண்டு விட்டது என்றிருந்தால் கூட அதிலிருந்த வாசு அத்தனை கலங்கித் துடித்திருக்கமாட்டான்; அன்று தன் தாயாரிடமிருந்து வந்த கடிதம், அவனை அத்தனை பாடுபடுத்திவிட்டது. எய்தவனைவிட்டு அம்பை நோவது போல், தன்னுடைய செய்கைக்கு நிரபராதிகளான பிரேமாவையும், அவள் தந்தையையும் வாய்க்கு வந்தபடிப் பேசித் தீர்த்துவிட்ட தன் தந்தையின் தவறு, அவன் உள்ளத்தை வாள் கொண்டறுத்தது.

அவரது கடுசொற்கள் பிரேமாவின் மெல்லிய மனத்தை என்ன பாடுபடுத்தியிருக்கும். அவள் தந்தைதான் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்? என்பதையெல்லாம் அவனால் ஒருமுறை எண்ணிப் பார்க்கக்கூட முடியவில்லை. உடனே ஊருக்கு ஓடிச் சென்று தன் தந்தையின் பொருட்டு, அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டால்தான் அவன் மனம் ஆறும் போலிருந்தது. ஆனால், இனி எந்த முகத்துடன் அவனால் அவர்கள் முகத்தில் விழிக்க முடியும்?

ஒவ்வொரு சமயம் இதை எண்ணிப் பார்க்கும்போதுதான் அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. சமீபத்தில் வந்த ஒரு கடிதத்தில், அவன் அப்பா கண்டிப்பாக எழுதியிருந்தார். 'பிரேமாவை அவன் மறந்துவிட வேண்டுமாம்.' 'அதைவிடத் தன் பிள்ளைக்கு உயிரை விட்டுவிடுவதுதான் சுலபம்' என்று அவருக்கு யார் எழுதுவது?

பெரிய மீன் சின்ன மீனைத் தின்று வாழ்வதுபோல், தந்தையே அவனுக்கு பிரேமா விஷயத்தில் எதிராகிவிட்ட பிறகு, வாழ்க்கையில் இனி அவன் என்ன புதிய கலையை ரசிக்கப் போகிறான்? கருத்தை அள்ளும் அவள் கயல்விழிகளும், அழகு உருவமும் இனி அவன் கண் முன்பு நர்த்தனம் செய்யாது. பிரேமாவின் அன்புக் குரலும், மயக்கும் இசையும் இனி அவன் செவிகளில்



என்றுமே ஒலிக்காது. அவளையும், தன்னையும் பிரிக்கத் தன் தந்தையே — இல்லை; தெய்வமேதான் சதி செய்துவிட்டது.

நூல் அறுந்த காற்றாடியாகத் தன் பிடியிலிருந்து—தான் கனவு கண்டு வந்த வாழ்க்கைப் பாதையிலிருந்து, எத்தனையோ ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் பிரிந்து சென்று, கண்ணுக்கே புலப்படாதவளாகிவிட்டாள். ஆனால், அவளுக்கு நுழைய அனுமதியில்லாத வீட்டில், இனி இந்த வாசுவிற்கு இடமில்லை. இதை அப்பா உணர்ந்து என்னைத் தேடி வரும்வரை நான் அவர் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கப்போவதில்லை; இது சத்தியம்.

மறுகணம், சட்டென்று யாரோ சம்மட்டியால் ஓங்கித் தன் தலைமேல் 'படீர்' என்று அடிப்பது போன்ற அதிர்ச்சி. 'சீ! இது என்ன? எனக்குப் பைத்தியமே பிடிக்க ஆரம்பித்துவிட்டதா?' சதையைக் கிள்ளிப் பார்த்தான், உணர்வு இருந்தது. எதிரே மேஜைமீது இருந்த டீ சில்லிட்டுக்கொண்டே வருவதை அறிவு உணர்ந்தது. ஆனால், ஏறுக்குமாறாக ஏனோ உள்ளம் பிரமாதமாகக் கொதிக்கத் தொடங்கிவிட்டதே!

தன் போக்கும், எண்ணமும் அவனுக்கே பிடிக்கவில்லை—உண்மையில், பிடிபடவில்லை. சத்தியத்தின் ஞாபகம் வந்ததும், தன்னையும் மீறி 'அப்பா' வென்று அலறியேவிட்டான். ஆனால், அடிவயிற்றிலிருந்து எழும்பிய அந்த ஓசையை வெளியே வராமல், தொண்டை நடுவிலிருந்து யாரோ அந்தச் சொல்லைப் பிடுங்கிக்கொண்டுவிட்டார்கள்போலும். காற்றுத்தான் வெளியே வந்தது. அவனது கண்களிலே நீர் ததும்பிக்கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

உலகில் மனிதன் போடுகிற திட்டங்களையெல்லாம் தகர்த்தெறிய, ஏதோ ஒரு சக்தி வெறி பிடித்தலைகிற தென்பதை, வாசு தன் வாழ்க்கையில் இரண்டாவது முறையாக அநுபவித்தான். 'உன் அம்மாவின் உடம்பு மிக



பெண்:—'என்ன கடைக்காரரே, உங்களிடம் வாங்கின புடவையில் சுத்தமாக சாயம் போய்விட்டதே!'

கடைக்காரர்:—'அதற்கென்னங்க அம்மா, பக்கத்தில் என் தம்பி சாயக் கடை வைத்திருக்கிறான் வாங்கித் தோய்த்தால் போகிறது.'

வும் கவலைக்கிடமாக இருக்கிறது. உனக்காகத்தான் அவள் உயிர் உடலை ஒட்டிக்கொண்டிருக்கிறது' என்கிற தந்தியைப் பிரித்துப் படித்த பிறகு வாசுவினால், அலறாமல் எப்படி இருக்க முடியும்? ஆகாய விமானம்கூட, ஆமை வேகத்தில் அசைவதுபோல்தான் அவனுக்கு ஆத்திரமாக வந்தது.

பிள்ளை ஓடோடியும் வந்துவிட்டான். அம்மாவும் பிள்ளையைப் பார்த்துவிட்டாள். அத்தனை நேரம் அவசரப்பட்டுப் போகத் துடித்துக்கொண்டிருந்த உயிர், நல்ல யோக்கியமானதாக இருந்தால், ஒழுங்காக விடை பெற்றுக் கொண்டு போய்ச் சேர வேண்டியது தானே? ஏன் இந்த சண்டை; வாழ் அவள் எழுந்து உட்கார்ந்ததிலே பிடிப் காலன் முகத்தில் கரி. ரவில் என்னை

ஆம்! மறு ஒரு வார முத்துக்கொண்டு தாய், எழுந்து நடமா வளது எண்ணங் விட்டாள். எல்லோ அப்படிப்பட்ட கள். பங்களூரிலிருந்து பாங்கி எழும் க் காத்தப்போல்

அருமைத் தாய்க்கென்று உயிரைத் தேங்கவைக்கும் அதிசய மருந்து எதையாவது வாங்கி வந்து, கண்ணிற்குத் தெரியாமல் கொடுத்துவிட்டானோ? ஆனால், அளவிற்கு மீறிய இந்த சந்தோஷத்தை, இந்த அதிர்ச்சியை அதிகம் மனதில் போட்டுக்கொள்ளக்கூடாதென்று அறியாமலோ என்னமோ, நிமிர்ந்து நின்ற வாழைத்தண்டைப் போன்றிருந்த வாசுவின் தந்தை ஒரு நாள் 'பொட்'டென்று ஒடிந்து உட்கார்ந்துவிட்டார். அத்தனை நேரம் கலகலப்பாயிருந்தவர், நிமிஷ நேரத்தில் கவலைக்கிடமாகிவிட்டார். கோடி வீட்டுப் பாட்டி கூறிக்கொண்டிருப்பது போல், 'காலனுக்கு யாரும் கடுக்காய் கொடுக்க முடியாது.' வந்தவன் வெறுங் கையோடு போகமாட்டான். அவன் கணக்கில் யாரும் சிறு தவறும் காண முடியாது. மஞ்சளோடும், மாங்கல்யத்தோடும் போக வாசுவின் தாய் கொடுத்து வைக்கவில்லை. தந்தை முந்திவிட்டார்.

## 3

வாழ்க்கை என்பது விளையாட்டு மைதானமல்ல; திறமையும், பிரச்னைகளும் தீவிரமாகச் செயலாக்கப்பட வேண்டிய ஒரு போர்க்களம் என்பதை வாசு தன் தந்தை இறந்த பிறகுதான் பூரணமாக உணர்ந்தான். குடும்ப பாரம் அவன் தலைமேல் இறங்கியிருந்தது. அப்பா இறந்த மறு வருஷத்திற்கெல்லாம் தங்கை துளசியின் திருமணத்தைச் சிறப்பாகச் செய்து முடித்தான். அவளும், முற்றிலும் புதிய அந்த அன்னியனோடு கணவன் என்ற உறவால் குசாலாய் வாழ்க்கை நடத்த, அவன் கையைப் பிடித்துக் கொண்டு பம்பாய் சென்றுவிட்டாள்.

இங்கு வீட்டு வேலை முழுவதும்
[illegible]வின் தலைமேல்தான். அவன்
வீட்டை[illegible]ந்தது. உட்கார்ந்து அதிகா
தாள். தன் [illegible]டி சாப்பிட்டுக்கொண்டு
கற்றுக்கொண்டு[illegible]க்க வேண்டிய வயசு.
குழந்தைகள் [illegible]யிடம் அவன் வாயே
காணிக்கையினின்[illegible]ல உருவத்திலும் அவ
நின்று குடும்பத்[illegible] சொல்லிச் சொல்லி
னுள். [illegible]தம் போதுமென்றுனி
விட்டது. தனக்கு மருமகள் சிசுருஷை செய்யும் பிராப்தமே இல்லை போலிருக்கிறது என்று ஒதுங்கிவிட்டாள்.

இரவும் பகலுமாக வாசுவின் அறை விளக்கு எரிந்து கொண்டேயிருந்தது. சிந்தித்துச் சிந்தித்து அவன் சித்தஸ்வாதீனம் இழக்கும் நிலைக்கே வந்துவிட்டான். ஓயாத ஒழியாத சிந்தனை. இந்த ஒன்றரை வருஷத்திற்குள் வாசு அரைக் கிழவனாகிவிட்டான். தலையில் இருபத்தைந்து சதவிகிதம் கறுப்பு மயிருடன், வெள்ளை மயிரும் போட்டி போட்டு வளர்ந்து வந்தது. மாம்பழக் கன்னங்கள், சூப்பிப் போட்ட கொட்டைபோல் சுருங்கிவிட்டன. எண்ணத்தைப்போலவே, நடையிலும் தடுமாற்றம்; முதுகிலே கூனல், புதிதாக தளிர்விட்டிருந்தது.

ஆனால், திடீரென்று ஒருநாள் வாசு நிமிர்ந்து உட்கார்ந்தான். இரைந்து பேசினான். நிறையச் சாப்பிட்டான், முகம் மலர்ந்திருந்தது. அவனைப் பார்த்தால்—நம்பிக்கை நிறைந்தவனாகக் காணப்பட்டது. நேராக பிரேமாவின் வீட்டை நோக்கி நடந்தான். இருபது மாதங்களுக்குப் பிறகு அன்றுதான் பிரேமாவைக் கண்டான். திராவகம் விழுந்த இடத்திலே பண்டம் வீணாகி விடுவதுபோல், அவளும் தன் நினைவால் உருக்குலைந்துதான் போய்விட்டாள் என்பதை, பிரேமாவைப் பார்த்ததுமே வாசு உணர்ந்து கொண்டுவிட்டான். கடும் வெய்யிலினால் பல நாட்களாகத் தண்ணீரே காணாமல், காம்பிலிருந்து வாடிக்கொண்டுவரும் இளஞ்செடியின் மாளாத சோகம், அவள் கண்களிலே நிழலாடிக்கொண்டிருந்தது.

பிரேமாவின் தந்தையிடம் தான் வந்த காரியத்தை எடுத்துரைத்தான். ஏங்கிக்கொண்டிருக்கும் இரு உள்ளங்களை ஒன்று சேர்த்து ஆசீர்வதிக்கும்படி வேண்டினான். ஆனால், பிரேமாவின் தந்தை சிறிதும் இரக்கமின்றி, பழைய விரோதத்தையே மனதில் வைத்துக் கொண்டு, வாசுவை உதாசீனம் செய்து அனுப்பிவிட்டார். எல்லையில்லாத ஏமாற்றத்தைச் சுமந்தவண்ணம்,



உடைந்த உள்ளத்துடன் வீடு திரும்பினான் வாசு.

இந்தக் காட்சியைப் பிரேமாவினால் சகித்துக்கொண்டிருக்கவே முடியவில்லை. 'அப்பா!' என்று தன்னையும் மீறி அலறினாள். சிறிது காலமாவது அவர்களது உப்பைத் தின்று வளர்ந்த நன்றிகூட இல்லாமல், வாசுவிடம் மனிதத் தன்மையையே இழந்து பேசி அனுப்பிவிட்ட தன் தந்தையின் செய்கையை எண்ணிப் பார்த்தபோது, தாங்க முடியாத பெரும் துயரம் அவள் இதயத்தில் பொங்கி எழுந்தது. மறுகணம் தன் இரு கைகளிலும் முகத்தைப் புதைத்துக்கொண்டு, பிறர் அறியாத ஒரு மூலைக்குச் சென்று, சிறு குழந்தையைப்போல், தேம்பித் தேம்பி அழுதாள்.

கடைசியான இந்தத் தன்னுடைய ஒரே நம்பிக்கையிலும் ஏமாற்றம் அடையவே, வாசு விருப்பு—வெறுப்புகளைத் துறந்த, ஒரு முனிவருடைய நிலைக்கு வந்துவிட்டான். தனக்கென்று வாழும் எண்ணமே அவன் மனத்தில் இல்லை. தாயார் சுட்டிக் காட்டிய பெண்ணுக்கு இயந்திரமாக மாலையிட்டான். கடைக்காரனைப் போல் கேட்ட கேள்விக்குப் பதிலளித்தான். இப்போது அம்மாவிற்கு பொறுப்பு விட்டது. ஓய்வு இருந்தது. இரண்டு வருஷத்தில் ஒரு பெண் குழந்தையையும் பெற்று, அவள் மடியில் கிடத்தி அம்மாவைப் பாட்டியாக்கினான். விரும்பியதெல்லாம் அவளுக்குக் கிடைத்துவிட்டது. இனி மேல் பிள்ளையைப்பற்றி அவளுக்கென்ன கவலை.

வாரங்களும், மாதங்களும், வருஷங்களுமாக வளர்ந்து, புதுப் புது காலண்டர்கள் மாறிக்கொண்டே வந்தன. அதைப்போன்ற மாறுதல்களை மனிதர்களுடைய வாழ்க்கையிலும் இறைவன் வஞ்சனையின்றி வழங்கிக்கொண்டுதான் இருக்கிறான்.

தோன்றிய நாள் முதல் துன்பத்திலேயே சுழன்று கொண்டிருந்த பிரேமாவின் வாழ்க்கையிலேயும் ஆண்டவன் சில அதிர்ஷ்ட ஏடுகளைத் தாவினான். அவன் ஆரம்பித்த வீட்டுப் பள்ளிக்கூடம், தனிப் பள்ளியாக இடம் பெற்று சங்கீதம் பயில வரும் மாணவிகளின் எண்ணிக்கைப் பெருகி வளர்ந்தது. அதே சமயம் பிரேமகுமாரியின் இனிய கானம் ரசிகர் குழாத்தின் உள்ளங்களிலும் பெரும் புரட்சியையும், ஆவலையும் கிளறி விட்டுவிட்டது. அவளது கச்சேரி என்றால், அதற்கென்று ஒரு தனிக் கூட்டம் கூடவாரம்பித்தது.

பிரபல சபைகளெல்லாம் பிரேமாவின் கச்சேரியைப் போட்டி போட்டுக் கொண்டு ஏற்பாடு செய்யலாயின. அகில இந்திய ரேடியோ நிலையங்கள் அனைத்தும், அவளது குரலை ஒலி பரப்பின. அவளது இனிய குரலும், மேதா விலாசமும், சுருக்கத்தில் சங்கீத உலகத்தையே ஒரு உலுக்கு உலுக்கியது என்றாலும் மிகையாகாது. பலராலும் போற்றப்பட்டாள், கௌரவிக்கப்பட்டாள். அவளுடைய பேட்டி கிடைப்பதே அரிதாகிவிட்டது.

குமாஸ்தா குப்புசாமி திடீர்க் குபேரனாகிவிட்டார். காலையில் ஓவலும், இரவு பாதம் பருப்பும் பாலுமாக; அவருக்குப் பொழுது விடிந்து இருட்டிற்று. ஆனால், பிரேமா மாத்திரம், அந்த ஆடம்பரச் சேற்றில் தன் விரலைக்கூட நனைக்கவில்லை. விவரம் தெரிந்த நாள் முதல் அவள் மனத்தில் இருந்த ஒரே ஆசை வாசுவை அடைய வேண்டுமென்பதுதான்; எப்போது அந்த ஆசையில் இடி விழுந்ததோ, அன்றையிலிருந்து அவள் தனக்கென்று வாழ்வதை வெறுத்து விட்டாள். அவள் வாழ்வில் கசப்புமில்லை, இனிப்புமில்லை; பிறருக்காகச் சம்பாதிக்கும் ஒரு இயந்திரமாக, ஓயாத ஒழியாத உழைப்பு, உழைத்தாள். வாழ்க்கையில் கிட்டாத பெரும் மன அமைதியைத் தன்னை மறந்து தொழில் செய்யும் அந்த கச்சேரி நேரங்களில் அவள் அடைந்து வந்தாள். இடி விழுந்த மரம்; வாழ்விலே வெறுப்பு; உயிரிலே பிடிப்பில்லை. 'இறைவா, விரைவில் என்னை உன் அடிகளுக்கே அழைத்துக்கொண்டு விடு' என்பதுதான் அவளது எண்ணங்களின் ஓயாத புலம்பல். அப்படிப்பட்ட இதயத்திலிருந்து பொங்கி எழும் இசை, பிறர் மனதைக் காந்தம்போல்

இழுத்து மெய்மறக்கச் செய்வதற்குக் கேட்பானேன்!

பிரேமாவிற்காக எத்தனையோ பெரிய பெரிய இடங்களிலிருந்தெல்லாம் நல்ல நல்ல வரன்கள் வந்த வண்ணமிருந்தன. ஆனால், அவள் மணம் செய்து கொள்ளப்போவதில்லை என்று தீர்க்கமாக மறுத்துவிட்டாள். வாசுவைப் பிரதிஷ்டை செய்திருந்த இடத்தில், மற்றொரு உருவத்தை வைத்துப் பூஜிக்க அவள் விரும்பவில்லை. அதைவிட, விக்ரகமில்லாத கோயிலாகத் தன் இதயத்தை வைத்திருப்பது தான் அவளுக்குச் சுலபமாகப்பட்டது.

ஆனால், காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லையல்லவா? செல்வத்தின் ஓட்டத்திற்குத் தக்கபடி இழைந்து செல்லும் உலகிற்கு, பிரேமாவானால் என்ன, கிருஷ்ணகுமாரியானால் என்ன? கலை, கலை என்று பிதற்றிக்கொண்டு, சதா தங்கள் நலனிலேயே கண்ணும் கருத்தும் கொண்டவனைப்போன்று காட்சியளித்த சீமான் வீட்டுப் பிள்ளையான பூபதியைவிட நல்ல வரனாக கிருஷ்ணகுமாரிக்கு வேறு யாரும் இருப்பதாகக் குப்புசாமியின் கண்களுக்குப் புலப்படவில்லை. திருமணம் முடிந்தது.

வீட்டோடிருக்கும் மாப்பிள்ளையிடம் நிர்வாகச்சாவியைக்கொடுத்தார் குப்புசாமி—அதைவிட உண்மையாகக் கூறப்போனால், 'அவருக்கே தெரியாமல், அவரை அப்படிச் செய்யும்படி பூபதி, குப்புசாமியைத் திறமையாகக் கையாண்டுவிட்டான்' என்றுதான் கூறவேண்டும். துரும்பிலிருந்து தூணை அசைப்பதுவரை அந்த வீட்டில் நிகழும் எதுவும் அவன் அறிந்தாகவேண்டும். அனைத்தும் அவன் குடையின் கீழே. சுருக்கமாகக் கூறவேண்டுமானால், பூபதி தனது திறமையினால் குப்புசாமியின் குடும்பத்தையே ஒரு 'ஏ' கிளாஸ் அரசாங்கக் கைதிக்கூடமாக மாற்றிவிட்டான்.

பைசாவைப் பூட்டுவதிலிருந்து ரூபாயை வீசி எறிவதுவரை பூபதியின் இஷ்டம். 'ஏன்' என்று யாரும் வாயைத் திறக்கக்கூடாது; குப்புசாமி எப்போதாவது இது விஷயமாகக்



குரலை உயர்த்திவிட்டால், மறு நிமிஷம் அந்த வீடு கொலைக்களமாக இரைச்சலில் ஆழ்ந்துவிடும்.

பச்சை நோட்டைக் கண்ணாலேயே பார்க்காமல், தன் ஆயுளில் பாதிக்கு மேல் கழித்துவிட்ட குப்புசாமிக்கல்லவா பணத்தின் அருமை தெரியும். தன் குழந்தைகளுக்குப் பூபதியின் ரூபத்தில் பெரும் கொடுமை செய்துவிட்டதாக, அப்போதுதான் அவர் உள்ளத்தில் மீள முடியாத ஒரு இடி விழுந்தது. இறந்த காலம் அவரை நோக்கி இளநடை போட்டுக்கொண்டிருந்தது. அதன் பிடிகளிலே மீண்டும் சிக்கிக்கொள்ளுமுன் இன்றைய மணத்தோடேயே போய்விட வேண்டுமென்று விரும்பினார், ஏங்கினார்; அது அவருக்குச் சீக்கிரமே சித்தித்தும் விட்டது.

ஃ ஃ ஃ

விளையாட்டுப்போல வருஷங்கள் பல உருண்டன. துளசிக்குப் பிரசவம் பார்ப்பதற்காக வாசுவின் தாய், தன் பேத்திப் பெண்ணுடன் பம்பாய் சென்றிருந்தாள். வாசுவின் மனைவி கல்யாணி, அவன் வாழ்விலிருந்து மறைந்து அன்றோடு நான்கு வருஷங்கள் இருக்கும். சாகும்போது இரண்டு வயது குழந்தையாகக் கணவன் கையில் ஒப்புவித்துவிட்டுப் போன ஒரே ஆசைப் பெண் சுபத்ரா இன்று ஆறு வயதுச் சிறுமி. சிறு வயதிலிருந்தே அவளுக்கு இசையில் ஆர்வம் இருந்ததோடு, ஞானமும் இருந்ததனால், அவளுக்குத் தகுந்த வித்வான்கள்மூலம், உயர்ந்த சங்கீதத்தைக் கற்றுக் கொடுக்கச் செய்ய வேண்டுமென்று வாசு விரும்பினான். பத்திரிகையில் விளம்பரம் செய்தான். அவன் இருந்து வரும் நாசிக்கிலே, 'சங்கீதம் என்றால், பொருள் என்ன?' என்று கேட்பார்கள். பணத்திற்கு ஆசைப்பட்டுக்கொண்டு வந்த இரண்டு, மூன்று உள்ளூர் வித்வான்களை வாசு [illegible] கொடுத்தனுப்பிவிட்டான். இதனால், குழந்தை சுபத்ரா பாட்டுக் கற்றுக்கொள்ள ஆரம்பித்த ஆறு மாதத்திற்குள், நான்கு வாத்தியார்கள் மாறிவிட்டனர்.

கூட்டிற்குள் அடைத்துவைத்த புறாக் குஞ்சைப்போல், தனிமையில் விடப்பட்டிருந்த வாசுவின் சிந்தனை குறுக்கும் நெடுக்குமாக எதிர் நடை போட்டுக்கொண்டிரு[illegible]. ஹோட்டல் பையன் வை[illegible]விட்டுப் போன டிபன்காரியர் மூலையில் பத்திரமாக இருந்தது. அரிப்பு எடுத்தவன், தானே சொரிந்து கொள்ள வேண்டுமென்பது போல், பசி எடுத்தபோது அவனே எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிட வேண்டும். உப்பும் உறைப்பும் இல்லாத வாழ்க்கை. அவனைப்போலவே, அந்த வானமும் குமுறிற்று. இடி இடித்தது, கண்ணாமூச்சி காட்டி மறைந்த மனைவியைப்போல் மின்னல் மின்னியது; அதை எண்ணி அவன் வடிக்கும் கண்ணீரைப்போல், சிறிது நேரத்திற்கெல்லாம் வெளியில் 'சோ'வென்று பெருமழை கொட்டிக்கொண்டிருந்தது. சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஜன்னல் வழியாக அதை ரசித்துக்கொண்டிருந்தான் வாசு.

சிறிது நேரத்திற்கெல்லாம், 'ஸார்! வெளியூரிலிருந்து யாரோ ஒரு [illegible] மாள் வந்திருக்கிறாள். பாட்டு வாத்தியாராம். உங்களைப் பார்க்கவேண்டுமாம்.' பாவோடிக்கொண்டிருந்த அவனது சிந்தனையைக் கலைத்தவண்ணம், வேலைக்கார ராஜய்யா அங்கே நின்றுகொண்டிருந்தான்.

'உள்ளே வரச் சொல்' என்று அவனுக்கு உத்தரவளித்துவிட்டு எழுந்த வாசு, தன் உடைகளைச் சரி செய்த வண்ணம் தன் அறையை அடைந்தான். மறுகணம் அங்கே நின்ற உருவத்தைக் கண்டதும், வாசு நடுங்கியே போனான். ஆம்! அந்த நடுக்கத்திற்குக் காரணம் பயமல்ல; அன்பும் கருணையும்தான்.

மின்சாரத்தினால் அதிர்ச்சி அடைந்தவனைப்போல், அவன் உடல் படபடத்தது. தான் காண்பது கனவல்ல என்பதை உணர்ந்தபோது, வாய் அவனையும் மீறி 'பிரேமா' என்று அலறிவிட்டது.

உச்சி முதல் உள்ளங்கால்வரை தெப்பமாக நனைந்து, ஈரமான ஆடைகள் உடம்புடன் ஒட்டிக்கொள்ள, ஏழ்மையே ஒரு உருவெடுத்து வந்தாற்போல் கண் முன் நிற்கும் பிரேமாவிற்குத் துரிதமாக வேறு உடைகள் கொடுத்து மாற்றிக்



மனைவி—(நாகரீகமானவள்) 'என்னங்க, இன்னிக்குச் சமையல்காரன் வரவில்லை. இன்று ஒரு நாள் மாத்திரம் நீங்களே சமைத்து விடுகிறீர்களா?'

கொள்ளச் செய்தான். அவளும் மறுக்கவில்லை. அந்த ஒரு நிமிஷ நேரத்திற்கும், அவன் உள்ளத்தில் ஆயிரமாயிரம் கேள்விகள், அலாவுதீனது தீபத்திலிருந்து கிளம்பும் பூதம் போல் ஓடி வந்து தலைதூக்கின. ஆனால், அவையொன்றுக்கும் அவனால் விடை கண்டுபிடிக்க முடியவேயில்லை.

உலகம் புகழத்தக்க பெயரையும், அந்தஸ்தையும் அடைந்துவிட்ட பிரேமாவை, ஏழ்மை எப்படி வஞ்சித்து அடிமை கொண்டது என்பதுதான் அவனுக்கே பிடிபடவில்லை. அவளது அழகிய கைகளிலோ, காதிலோ எவ்வித சாதாரண நகைகள்கூட இன்றி விதவையைப்போல் காட்சியளித்தாள். ஆனால், வாசு என்றோ அளித்த அந்தப் பதக்கம் மாத்திரம், அவள் மார்பிலே தவழ்ந்து கொண்டிருந்தது, அவன் நினைவை மறக்காதவள்போல். அதைப் பார்த்ததில், அவனுக்கு ஒரு திருப்தி. அதோ அவள் வரும் காலடி ஓசை. அவன் தனிமை விடை பெற்றுக் கொண்டது.

வாசுவே வலுவில் பேசி, அவள் ஆயாசத்தைப் போக்க எண்ணினான். 'இப்பொழுது நேராக ஊரிலிருந்து தான் வருகிறாயா பிரேமா?'

'......' பதிலில்லை.

'எதற்காக இப்படி மழையில் நனைந்து வரவேண்டும்? உடம்பிற்கு ஆகுமா? வரப்போவதாக ஒரு வரி எழுதியிருந்தால் ஸ்டேஷனுக்கு நானே கார் கொண்டு வந்திருக்கமாட்டேனா பிரேமா?'

'அதற்கும் அவள் வாயே திறக்கவில்லை. மனம் உருக உருக கூறிய அன்பு மொழிகளிலே மனம் லயித்துச் சிலையாகிவிட்டாள்போலும். ஆனால், ஜீவனுள்ள சிலை. ஆம்! அவளது இரு கண்கள் வழியாகவும் கண்ணீர் மாலை மாலையாக வழிந்தோடிக்கொண்டிருந்தது. அப்போதுதான் அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்த வாசுவிற்குத் தூக்கி வாரிப்போட்டது. உடம்பின் ஜுர வேகம் அனல் காற்றாக வீசிக்கொண்டிருந்தது. சற்று முன் அவள் புடவை மாற்றும்போதே, பல முறை இருமின ஞாபகம் வந்தது.

'பிரேமா! உனக்கு உடம்பு சரியாக இல்லையா?' என்று தன்னையும் மீறிய கவலையுடன் கேட்டான் வாசு.

'ஆமாம்! ஒரு வாரமாகவே கடுமையான ஜுரம். ஆனால், குறைகிற வழியைக் காணோம்.'

'அப்போது இந்த நிலைமையில், அதுவும் தனியாக ஏன் புறப்பட்டு வந்தாய் பிரேமா?' அவனது குரலிலே தாங்க முடியாத கவலையும், கலக்கமும் கலந்து தொனித்தது. அது அவள் நெஞ்சையும் தொட்டுவிட்டதுபோலும் வாசுவையே வெறிக்கப் பார்த்தாள்.'

'இறப்பதற்கு முன் ஒரு முறையாவது உங்களை வந்து பார்த்துவிட வேண்டுமென்கிற, ஒரு அடக்க முடியாத ஆவல். அப்போதுதான் என் நெஞ்சு வேகும் போலிருந்தது. அது தான் ஓடோடியும் வந்தேன்.'

'பிரேமா!' என்று கூவினான் வாசு. அவளது பேச்சு அவன் மனதை நிலை குலையச் செய்தது. பலஹீனமாக இருக்கும் அவளுக்கு, உணர்ச்சி உண்டாக்கும் பேச்சுக்களை மேலும் தொடர்ந்து பேசவிடக்கூடாதென்று கருதிய வாசு, அவளுக்குப் படுக்கை ஆயத்தம் செய்தான். அலமாரியிலிருந்த ரொட்டியையும், பிளாஸ்கிலிருந்த பாலையும் ஊற்றி அவள் அருகில் வைத்தான். தன்னையே அவள் ஓரக் கண்ணால் கவனித்துக்கொண்டிருப்பதை அவனும் பார்த்தான்.

'என் உடம்பு சரியானதும், நான் உங்கள் பெண்ணிற்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கலாமல்லவா?' அவனது இதயத்தையே எதிரிலுள்ள ரொட்டியைப்போல் துண்டு துண்டாகக் கூறு போடுவதுபோல் இருந்தது அந்தக் கேள்வி. பனித்திரைபோல் அவன் கண்களிலே கண்ணீர் படிந்திருந்தது.

'பிரேமா! இது என்ன அசட்டுக் கேள்வி! என்னைப்பற்றி நீ தெரிந்து கொண்டது இவ்வளவுதானா? இன்று முதல் நீதான் இந்த வீட்டின் எஜமானி. என் செல்வப் பெண் சுபத்ராவிற்குத் தாய், தந்தை, குரு; அனைத்தும் இனி நீதான் பிரேமா' அவனது குரலிலே தொனித்த உறுதி அவளை வியக்கச் செய்தது.

'உண்மையாகவா?' தன்னையும் மீறிக் கேட்டு விட்டாள், அந்தப் பேதைப் பெண்.

'சத்தியமாகச் சொல்லுகிறேன் பிரேமா! வாழ்வின் பெரும் பகுதியை, எல்லையற்ற மனோதிடத்துடன் என் நினைவிலேயே கழித்துவிட்ட உன்னை விட நான் தாழ்ந்தவன்தான். ஆயினும் அன்பை உணரும் ஆற்றல் என் உள்ளத்தில் என்றுமே மரத்துப்போனதில்லை. சந்தர்ப்பம் சதி செய்து நம்மைப் பிரித்து வைத்தாலும், வாசுவிற்கு பிரேமாவின்மீது எழுந்த அன்பும் காதலும், ஆயுள் முழுவதும் அழியாதது' என்று கூறும்போது வாசுவின் குரல் தழதழத்தது.

'ஏதோ பெரும் அதிர்ச்சியால் தாக்கப்பட்டவள்போல், பிரேமா சட்டென்று தன் மார்பைப் பிடித்துக் கொண்டாள். நெற்றி சுருங்கி, புருவங்கள் வளைந்து நெளிந்தன. உயிரையே வாயால் கக்கி விடுபவள்போல் பல முறை பயங்கரமாக இருமினாள். கண்



களிலே பொரி பறந்தது. வாசு அவளது தலையைத் தன் கைகளினால் பிடித்துக் கொள்ளச் சென்றான். ஆனால், அதற்குள் சட்டென்று அவள் ஒதுங்கி விலகிக்கொண்டு விட்டாள்.

'படீ'ரென்று யாரோ பின்னாலிருந்து தடிக்கம்பினால் ஓங்கித் தன் தலையைத் தாக்கியதுபோன்ற ஒரு உணர்ச்சி, வாசுவை வாட்டி வதைத்தது. அவனது வேதனையின் காரணத்தைக் கவனித்த பிரேமா, பல இருமல்களைச் சமாளித்துக்கொண்டு கேட்டாள், 'நான் உங்களிடம் ஒரு தவறு செய்து விட்டேன். என்னை மன்னிப்பீர்களா? நான் உங்கள் பிரேமா இல்லை.' அவள் வார்த்தைகளை முடிக்குமுன்னர், கொடிய சர்ப்பமொன்றை மிதித்து விட்டவன்போல், 'ஆ'வென்று அலறினான் வாசு. ஆனால், அவள் நிறுத்தவேயில்லை. 'நான் அவளது தங்கை கிருஷ்ணகுமாரி.'

'பின் நீ ஏன் இத்தனை நேரம் பிரேமாவைப்போல் நடித்தாய் கிருஷ்ணா' அவனது குரலிலே ஏமாற்றத்தின் சாயை எதிரொலித்தது. அதில் கடுமையும் கலந்திருந்தது.

'என்னை இத்தனை காலம் உள்ளன்புடன் ஆதரித்த என் உடன் பிறந்தவளுக்காக நான் இறக்குமுன் செய்ய வேண்டிய கடமை அதில்தான் இருந்தது.'

'எதில்? என்னை ஏமாற்றிச் சித்திரவதை செய்வதிலா?' வாசு பொறுமையை இழந்தான் என்பது அவனது குரலின் ஸ்தாயி அறிவித்தது. 'நீங்கள் அவசரப்பட வேண்டாம். நான் முழுவதையும் கூறிவிடுகிறேன். அது வரை நீங்கள் நீதிபதியாக இருங்கள்.'

அக்காவின் பிடிவாதத்தை மாற்ற முடியாது என்று அறிந்தபின், அப்பா என்னை பூபதிக்கு மணம் முடித்து வைத்தார். அவருடைய போக்கு அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. அடிக்கடி வீட்டில் பேச்சு வார்த்தைகள் முற்றும். இதே ஏக்கத்தோடு அப்பா போய்விட்டார். ஆதியிலிருந்தே குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்துவதாக ஏமாற்றிவந்த என் கணவர், ஒரு நாள் எங்களை ஓட்டாண்டியாக்கிவிட்டு, அத்தனை காசுடனும் வடநாட்டுக்காரி ஒருத்தியுடன் விமானமேறிவிட்டார்.

அன்றையிலிருந்து அக்கா அதிகமாகக் கச்சேரிகளுக்குச் செல்வதையும் நிறுத்திவிட்டாள். ஆனால், எந்த நிமிஷத்திலும் அவளுக்கு ஒரே கவலை, ஒரே நினைவு. கவலை என்னைப்பற்றி, நினைவு உங்களைப்பற்றி. ஆம், ஓயாத ஒழியாத ஏக்கம்; உங்கள் நினைவிலேயே அவள் அணுவணுவாக இறந்து கொண்டுவந்தாள். அக்காவைப் பார்க்கும்போதெல்லாம் எங்கள் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காத உங்கள் மீது எனக்குக் கோபம் கோபமாக வரும். அந்தக் கோபத்தில் உங்களுக்காக உருகும் அவளைக்கூடக் கண்டித்திருக்கிறேன்.

இந்த சமயத்தில்தான் பத்திரிகையில் உங்கள் விளம்பரத்தைக் கண்டேன். மின்னல் வேகத்தில் இந்த யோசனை என் மூளையில் உதயமாயிற்று. அப்போது நான் படுக்கையிலிருந்தேன். கருகிய மொட்டாக, கசங்கிய மலராக மாறிவிட்ட என் உயிரைப்பற்றிய கவலை எனக்கு எழவில்லை. ஆனால் அக்காவின் வாழ்வில் அரும்பை எதிர்பார்க்க முடியுமா, அல்லது அந்த முல்லைக்கொடி ஆதரிப்பாரின்றி வாடி மடியவேண்டியதுதானா என்பதைத்தான் அறியத் துடித்தது என் உள்ளம் :

என் யோசனைகளைக் கேட்ட அக்கா, 'வேண்டாம் இந்த விஷப் பரீட்சை' என்றாள். நான் கேட்கத் தயாராக இல்லை. நான் இறங்கப்போகும் இந்தப் பரீட்சையில் வெற்றி பெற்றால் – அதாவது அவளுக்குத் தங்கள் இதயத்தில் இடமிருந்தால் அவளாவது இன்பமாக வாழட்டும். இல்லையேல் சதா என் சகோதரியின் சிந்தையைக் கிளறிவிட்டுக் கொண்டிருக்கும் உங்களது இந்த மாலையை உங்களிடமே திருப்பிக் கொடுத்துவிட்டுப் பேசாமல் இருவரும், மரணத்தின் மடியில் தலையைச் சாய்த்துவிடுவோம் என்றுதான் புறப்பட்டேன். 'ஆனால், என் சகோதரி அதிர்ஷ்டசாலிதான்' என்று அவள் கூறிக்கொண்டு வரும்போதே மீண்டும்

பழைய தொடர் இருமல் வந்துவிட்டது.

கண்கள் வெளியே பிதுங்கி விழுந்து விடுவது போல இருமி இருமிக் களைத்துப்போன அவள் கையில், பால் டம்ளரைக் கொடுத்த வாசு, உடனடியாக டாக்டருக்கு போன் செய்துவிட்டு, 'இப்போது பிரேமா எங்கே யிருக்கிறாள் கிருஷ்ணா?' என்றான். அவனது கேள்வியின் அவசரத்திலும் ஆர்வத்திலும், தன் சகோதரி காப்பாற்றப்பட்டுவிட்டதைப் போன்றதொரு நிறைவை அவள் உள்ளம் அநுபவித்தது.

'துளஸிதாசர் சத்திரத்தில்' என்று அவள் கூறி முடிக்கு முன்னர் வாசு வெளியே புறப்படத் தன்னைத் தயார் செய்து கொண்டுவிட்டான். கிருஷ்ண குமாரி அவனையே பார்த்தவண்ணம், 'மழையில் எங்கே புறப்படுகிறார்கள்' என்றாள்.

'ஆற்றோடு போய்க் கொண்டிருக்கும் ஒரு அபலைப் பெண்ணைக் காப்பாற்ற', என்று 'டக்'கென்று கூறிய வாசு, அருகிலிருந்த ராஜய்யாவிடம் கிருஷ்ண குமாரியைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, காரை எடுத்துக்கொண்டு நேராக துளஸிதாசர் சத்திரத்தை நோக்கிப் பறந்தான்.

சரியாகப் பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு, பிரேமாவுடன் வாசு வீட்டிற்குள் நுழைந்தபோது, கிருஷ்ண குமாரியின் உடலை டாக்டர் பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

'எப்படியிருக்கிறது டாக்டர்?' என்று ஏககாலத்தில் எழுந்த வாசுவின் குரலும், பிரேமாவின் குரலும் கவலையின் உச்சஸ்தாயியில் ஒலித்தன.

'என் கையில் இனி ஒன்றுமில்லை மிஸ்டர் வாசு! கடவுளைப் பிரார்த்தியுங்கள். இரண்டு மூன்று நிமிஷங்கள்தான் அவளுக்குச் சொந்தம்', என்ற டாக்டர் அவளது வலக் கையில் ஒரு ஊசியைச் செலுத்தினார். அந்த மூன்று நிமிஷங்களுக்குள் ஒரு சித்திரவதையா?

சகோதரியை அணைத்துக் கொண்டிருந்த பிரேமா குலுங்கிக் குலுங்கி அழுதாள்: வசந்த காலத்து மாங்கிளியிருந்து, பொல பொலவென்று உதிரும் மலர்களைப் போல், அவளது இரு விழிகளினின்றும் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தன. தன் பொருட்டு அவள் செய்த உதவியை, எத்தனை ஜென்மங்கள்தான் எடுத்தாலும் மறக்க முடியுமா?

இடக்கையால் பிரேமாவின் கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணகுமாரி மறுகணம், தன் கழுத்திலிருந்த மாலையை சகோதரியின் கழுத்தில் பூட்டினாள்: இந்த சோகக் காட்சியையெல்லாம் பார்க்கச் சகிக்காத வாசு டாக்டருடன் பேசிக் கொண்டே வாசலுக்கு வந்தான்.

அத்தனை நேரம் பிசுபிசுவென்று தூறியதும்—நன்றாக விட்டு இப்போது ஆகாயம் நிர்மலமாக இருந்தது, கிருஷ்ணகுமாரியின் வதனத்தைப் போல. அடுத்த நிமிஷம் உள்ளே இருந்து எழும்பிய, 'ஓ' என்ற பிரேமாவின் அழுகுரல், புறப்பட்டுக்கொண்டிருந்த டாக்டரின் மோட்டார் வண்டியின் 'புர்—புர்' என்கிற சப்தத்தில் தேய்ந்து ஒலித்தது. உள்ளே ஓடினான் வாசு. அத்தனை நேரம் ...மைப் அணைத்துக்கொண்டிருந்த ...வாசுவிற்கு உடலை, இப்போது வாசுவி... அன்பும் ...ம் அழியா வாழ்க்கையோடு அணைந்து வாசுவின் ...டிருந்தன.

அதிர்ச்சியால் ... பிரேமா சட் ...பப் பிடித்துக் ...ருங்கி, புருவங் ...தன. உயிரையே ...வள்போல் பல இருமினாள். கண்



# தீமையிலும் நன்மை




இம் முறை சென்னைக்கு நான் சென்றிருந்தபோது என்னுடன் கூட என் காரியாலய நண்பன் தேசாய் தேசாயும் வந்திருந்தான். தட்சிண ரயில்வேயில் வேலை பார்க்கும் என் பழைய நண்பன் நாகரத்தினத்துடன் நானும் தேசாயும் மகாபலிபுரம் போகத் திட்டமிட்டிருந்தோம்.

நாகரத்தினம் செங்கல்பட்டில் வசித்துக்கொண்டு சென்னையில் வேலை பார்த்து வந்தான். அன்று மாலை காரியாலய நேரம் முடிந்ததும், அவன் எங்களை அழைத்துக்கொண்டு செங்கல்பட்டு செல்வதென்றும், இரவை அவன் வீட்டிலேயே கழித்துவிட்டு, மறுநாள் காலை மூவரும் திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம் முதலிய இடங்களுக்குப் போவதென்றும் தீர்மானித்திருந்தோம்.

அன்று காலைதான் நானும் தேசாயும் சென்னை போய்ச் சேர்ந்திருந்தோம். பிரயாண அலுப்பினால் தேசாய் நான் இறங்கியிருந்த உறவினர் வீட்டிலேயே ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். நான் மட்டும் நாகரத்தினத்திடம் சென்று மேற்படி ஏற்பாடுகளைச் செய்து வந்தேன்.

மாலை நாலரை மணிக்கு நானும் தேசாயும் கோட்டை ஸ்டேஷனில் நாக

ரத்தினத்தின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு காத்திருந்தோம். முதல் காஞ்சிவரம் பாஸஞ்சரிலேயே செங்கல்பட்டுக்குப் போவதாக இருந்தோம்.

குறித்த நேரத்திற்கு நாகரத்தினம் வந்து சேர்ந்தான். அவனுடன் இரண்டு பேர்கள் வந்தார்கள்.

'வாப்பா வா! சொன்ன நேரத்திற்கு வந்து விட்டாயே!' என்று அவனை வரவேற்றேன்.

'காலையில் ஆபீசுக்குப் போகத் தாமதமானாலும் ஆகுமே தவிர, மாலையில் நாலரை மணிக்கு மேல் ஒரு விநாடி கூட ஆசாமியை ஆபீசில் காண முடியாது!' என்றார் அவனுடன் வந்தவர்களில் ஒருவர்.

'டேய் கிருஷ்ணமூர்த்தி! என்ன கேட்கிறதோ? நீ மட்டும் என்ன வாழுகிறதாம்!' என்று நாகரத்தினம் விளையாட்டாகக் கையை ஓங்கினான். பிறகு தேசாயைப் பார்த்துக் கொண்டே, 'இவர்தானே நீ சொன்ன தேசாய்?' என்று கேட்டான்.

'ஆமாம்!' என்று சொல்லிவிட்டு, இவர்தான் நாகரத்தினம்!' என்று தேசாயிடம் அவனை அறிமுகம் செய்து வைத்தேன்.

'உங்களைச் சந்தித்ததில் மிகவும் சந்தோஷம்' என்று ஆங்கிலத்தில் கூறிக்கொண்டே நாகரத்தினத்தின் கைகளை குலுக்கினான் தேசாய்.

'இவர்கள் என் சக ஊழியர்கள். இவர் கிருஷ்ணமூர்த்தி. அவர் ஷண்முகம்' என்று நாகரத்தினம் தன்னுடன் வந்தவர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

'அவர்களும் செங்கல்பட்டிலிருந்து தான் வருகிறார்களா?' என்று தேசாய் விசாரித்தான்.

'இல்லாவிட்டால் சென்னையில் எங்களுக்கு ஏது ஸார் வீடு? ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் ரயில்வே நிர்வாகமே எங்களுக்கு வீடு ஏற்பாடு செய்துவிடும் என்று சொல்லிக் கொள்கிறார்கள்' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

'அதற்கும் நீ ரிடையர் ஆவதற்கும் சரியாக இருக்கும்' என்று நாகரத்தினம் சொல்ல அனைவரும் நகைத்தோம்.

அதற்குள் காஞ்சீவரம் பாஸஞ்சர் வந்து விட்டது. பிளாட்பாரத்தில் சுமாரான கூட்டம் இருந்தும், அடித்தல், தள்ளுதல் இல்லாமல் எல்லோரும் வண்டியில் ஏறினோம்.

உட்கார இடமும் கிடைத்துவிட்டது. தேசாய் வியப்போடு, 'மதராஸ் பரவாயில்லையே! ஜனங்கள் ஒழுங்காக வண்டியில் ஏறுகிறார்களே!' பம்பாயில் பத்து பேரைக் கீழே தள்ளி, எட்டு பேரை மிதித்து, சட்டை நிஜாரைக் கிழித்துக்கொண்டு தான் ரயிலில் ஏறுவார்கள் என்று கூறினான்.

'கூட்டம் இருந்தால்தான் அப்படி என்று கிடையாது. காலியாக வரும் வண்டியில் இரண்டே பேர் ஏறுவதாக இருந்தால்கூட ஒருவரை மற்றவர் தள்ளிக்கொண்டுதான் ஏறுவார்கள். அவர்களின் ரத்தத்தில் இந்த வழக்கம் ஊறிப்போய் விட்டதோ என்னவோ?' என்றேன்.

ரயில் புறப்பட்டது.

ஃ ஃ ஃ

'நீங்கள் குஜராத்தைச் சேர்ந்தவரா அல்லது மஹாராஷ்டிரரா?' என்று ஷண்முகம் தேசாயை விசாரித்தார்.

'ஏன், நான் குஜராத்திக்காரன்தான். ஆனால், பிறந்ததிலிருந்து பம்பாய் நகரத்தில் தான் இருந்து வருகிறேன்!' என்று தேசாய் பதிலளித்தான்.

'இல்லை, மொழிவாரி மாகாணப் பிரிவினை சம்பந்தமாக பம்பாயில் ஏக கலாட்டா நடந்ததே, அப்போது குஜராத்திக்காரர்களுக்கு ரொம்ப கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டதாமே, அதைப் பற்றி விசாரிக்கத்தான் கேட்டேன்' என்றார் ஷண்முகம்.

'வாஸ்தவம்தான்! பம்பாய் நகரோடு கூடிய சம்யுக்த மஹாராஷ்டிர மாகாணம் ஏற்படுவதற்கு இடையூறாக இருந்தோமென்று எங்களை மஹாராஷ்டிரர்களும் சரி, இந்த மாதிரி சந்தர்ப்பங்களுக்காகவே காத்திருக்கும் காலிகளும் பலவித இன்னல்களுக்கு ஆளாக்கினார்கள். எங்கள் கடைகளைச் சூறையாடினார்கள். சில இடங்களில் எங்கள் ஸ்திரீகளை மானபங்கம் செய்யவும் செய்தார்கள். எத்தனையோ குஜராத்திக் குடும்பங்கள் பம்பாயில் இரு



க்க அஞ்சி குஜராத்துக்குச் செல்லவும் நேர்ந்தது.'

'எது எப்படிப் போனாலும், இந்தக் கலவரங்கள் தேசாயிக்கு மட்டும் நன்மையே செய்தது!' என்று அவனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினேன்.

'அது என்ன நன்மை?' என்று ஆவலோடு கேட்டார் கிருஷ்ணமூர்த்தி.

'அதில் ஒரு கதையே அடங்கியிருக்குமே! இல்லையா சுந்தர்?' என்றான் நாகரத்தினம்.

'கதையைப்போலவே சொல்லிவிடுகிறேன் செங்கல்பட்டு போகும் வரை பொழுதும் போக வேண்டுமல்லவா?' என்று ஆரம்பித்தேன்.

ஃ ஃ ஃ

தீருபாய் தேசாயின் பெற்றோர்கள் ராஜ்கோட்டுக்கு அருகேயுள்ள ஒரு கிராமத்தில் இருந்து வந்தார்கள். விவசாயத்தை நம்பி வாழும் குடும்பம். எனினும் தங்கள் ஒரு மகனாவது கல்லூரிப் படிப்புப் படித்து, நகரவாசியாக வாழ வேண்டுமென்று விரும்பினார்கள். அதற்கு அவன் மாமா அனுசரணையாக இருந்து, அவன் தன்னுடன் தங்கி கல்வி கற்க வசதி செய்தார்.

தீருபாய் தன் ஒரே சகோதரியின் மகன் என்பதனால் மட்டும் அப்படிச் செய்யவில்லை. அவருக்கு ஒரு மகள் இருந்தாள். அவளைத் தீருபாய்க்கே கல்யாணம் செய்து கொடுத்து, இருவரையும் நிரந்தரமாகத் தம் வீட்டிலேயே வைத்துக்கொண்டு விடலாம் என்பது அவருடைய ஆசை, தீர்மானம் கூட!

சிறு வயதிலிருந்தே அவர்கள் வீட்டில் வளர்ந்து வந்த தீருபாய் தன் மாமன் மகள் சம்பாவை நேசித்ததில் வியப்பில்லை. அவன் அவளுடைய கணவன், அவள் அவனுடைய மனைவி என்னும் எண்ணத்தை வீட்டிலிருந்த பெரியவர்கள் அவ்விருவர் மனங்களிலும் நிலைபெறச் செய்தார்கள். தீருபாயின் பெற்றோர்



களுக்கும் இந்த விஷயத்தில் ஆட்சேபணை இல்லாமலிருந்தது.

பெற்றோர்கள் விருப்பத்தினால் ஒரு பாதியைத்தான் தீருபாயினால் நிறைவேற்ற முடிந்தது—மிகுந்த சிரமத்தின் பேரில் அதாவது அவன் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை தேறுவதற்கே 'உன்பாடு என்பாடு' என்றாகி விட்டது!

கல்லூரியில் சேர்ந்து 'காலேஜ் படிப்பு' படிப்பதென்பது இனி அடுத்த பிறவியில்தான் என்று அவன் தீர்மானமாகச் சொல்லிவிட்டான். அதோடு ஒருவருமறியாமல் ரயில்வே வேலைக்கு மனுப்போட்டு, வேலையும் கிடைத்து விட்டது.

இதை அறிந்தபோது அவன் மாமாவுக்கு வந்த கோபத்துக்கு அளவே கிடையாது. அதற்குக் காரணமும் இருந்தது. தீருபாய் தட்டுத் தடுமாறி எஸ். எஸ். எல். ஸி. கோட்டையைப் பிடித்தபோது, சம்பா மாகாணத்திலேயே இரண்டாவதாக அந்தப் பரீட்சையில் தேறினாள். அரசாங்கமே அவள் கல்லூரிப் படிப்புக்கு வசதி செய்து கொடுத்தது.

தன் மகள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, கல்லூரிப் படிப்பே வேண்டாமென்று சொல்லும் தீருபாய்க்கு அவளை எப்படி மணம் செய்விக்க முடியும்? சாதாரண ரயில்வே குமாஸ்தாவுக்குப் பட்டதாரியாகப் போகும் மகளைத் தருவதா?

'இதோ பார் தீரு! நீ குமாஸ்தா வேலை செய்து சம்பாதிப்பது அனாவசியம். அது உனக்கே தெரியும். உனக்குள்ள சொத்துக்கு நீயே நாலு குமாஸ்தாக்களை வைத்துக் கொள்ளலாம். பேசாமல் இதைவிட்டு விட்டு, கல்லூரியில் சேர்ந்து விடு. நான் கல்லூரியில் இடம் வாங்கித் தருகிறேன். ட்யூஷன் வைத்துக்கொண்டு மும்முரமாகப்படி. அதுதான் உன் அப்பா, அம்மாவின் ஆசை என்று நயமாகவும், அதட்டலாகவும் சொல்லிப் பார்த்தார்.

'மாமா! நீங்கள் எல்லோரும் எத்தனை ஆசைப்பட்டாலும் சரி, நான் எவ்வளவு முயற்சி செய்தாலும் சரி, எனக்குப் படிப்பு வரலே வராது. வீணாக எனக்கு இருக்கும் கொஞ்சம் மூளையையும் குழப்பிக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. படிக்க வேண்டும் படிக்க வேண்டும் என்று துடிக்கிறவர்கள் எத்தனையோ பேர் கல்லூரியில் இடம் கிடைக்காமல் திண்டாடும் பொழுது, அவர்கள் இடத்தை நான் ஏன் அபகரிக்க வேண்டும்? உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் நான் இந்த வேலையை வேண்டுமானால் விட்டு விடுகிறேன். ஆனால் கல்லூரியில் சேரும் விஷயத்தை மட்டும் மறந்து விடுங்கள்' என்று தீருபாய் அடித்துச் சொல்லி விட்டான்.

'தீரு! கடைசியாகச் சொல்கிறேன். எங்கள் பேச்சைக் கேட்காவிட்டால் நீ சம்பாவை மணந்து கொள்வது முடியாது.'

'உங்கள் பேச்சு வேடிக்கையாக இருக்கிறதே, மாமா! சம்பாவும், நானும் கணவன்—மனைவி என்பது என்றைக்கோ தீர்ந்து போன விஷயமாயிற்றே! அதற்கும் என் படிப்புக்கும் என்ன சம்பந்தம்?' என்று தீருபாய் கேட்டான்.

'நீ நன்றாகப் படித்து, பெரிய பெரிய பட்டங்கள் எல்லாம் வாங்குவாய் என்ற நம்பிக்கையின்பேரில்தான் சாம்பாவை உனக்குத் தருவதாக இருந்தோம். எப்போது நீ கல்லூரிப் படியே ஏற முடியாதென்கிறாயோ, அப்போது சம்பாவை மறக்க வேண்டியதுதான்!' என்று முடிவாகச் சொன்னார்.

தீருபாய் சம்பாவை நோக்கினான். 'சம்பா! நீ என்ன சொல்கிறாய்? என் கல்வியறிவைப் பொறுத்தா நீ என்னை விரும்புகிறாய்?' என்று கேட்டான் நிதானமாக.

'அவளை ஏன் கேட்கிறாய்? அவள் கணவனைத் தேர்ந்தெடுக்க வேண்டியவன் நான். எனக்கு வரப்போகும் மாப்பிள்ளை, என் பெண்ணுக்கு எல்லா விதத்திலும் பொருத்தமாயிருக்கிறானா என்று பார்க்க வேண்டியது என் கடமை' என்று அவன் மாமா [illegible] கட்டிச் சொன்னார்.

'அவளையும் சற்றுப் பேச[illegible] மாமா' என்று அவன் சொல்[illegible]தான். சம்பாவும் ஏதோ [illegible]டுத்தாள். ஆனால், [illegible] அதைத் தடுத்து விட்[illegible]



'நீ உள்ளே போம்மா!' என்று அவளிடம் சொல்லிவிட்டு 'இனி நீ இங்கே தங்கியிருப்பதையும் நான் அனுமதிக்கமாட்டேன். சம்பாவின் மனதைக் கெடுத்து விடுவாய். தனியிடம் பார்த்துக்கொள்' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

'சரி, மாமா! காலம் உங்கள் மனதை மாற்றும்' என்று கூறி அவ்வீட்டை விட்டு வெளியேறினான். 'நீ உன் முடிவை மாற்றிக்கொள்ளும் வரை என் மனம் மாறாது!' என்று அவர் முணுமுணுத்துக் கொண்டார்.

ஃ ஃ ஃ

தீருபாய் தன் மாமாவின் வீட்டை விட்டு வெளியேறிய விஷயமும் அதன் காரணமும் தெரிந்தபோது, அவன் தந்தை அவனுக்குக் காரசாரமாகக் கடிதங்கள் எழுதினார். அவன் தங்கள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யாத வரை அவனுக்குத் தம் சொத்தில் ஒரு ரூபாய் கூடத் தர முடியாது என்று பயமுறுத்தினார்.

தன் மாமாவுக்குத் தந்த பதிலையே தன் தந்தைக்கும் அளித்தான் தீருபாய். 'உங்கள் சொத்தை நம்பி நான் பிழைக்கவில்லை. இந்த நாட்டில் எத்தனையோ லட்சக் கணக்கானவர்கள் ஒரு வேளைச் சோற்றுக்கே கஷ்டப்படுகிறார்கள். அவர்களைவிட நான் அதிகக் கஷ்டப்பட்டுவிடப் போவதில்லை...' என்று பதில் எழுதிவிட்டான்.

இரண்டு மூன்று மாதங்கள் வரை அவன் பெற்றோர்கள் கடிதமே போடவில்லை. பிறகு அவன் தாயார் கடிதம் எழுதத் தொடங்கினாள். ரகசியமாக அவனுக்குப் பணமும் அனுப்பி வந்தாள். தன்னுடைய நண்பன் ஒருவனுடைய அறையில் அவன் இருந்து வந்தான்.

ஃ ஃ ஃ

மேற்படி சம்பவங்கள் நடந்த ஏழாவது மாதம் பம்பாயில் மாகாணப் பிரிவினை சம்பந்தமான கலவரங்கள் ஏற்பட்டன. அராஜகம் தலைவிரித்தாடியது. மின்சார ரயில்கள் ஓட முடியாமல் மின்சாரக் கம்பிகள் அறுக்கப்பட்டன. பஸ்கள், ரயில்கள் மீது கல்வீச்சு நடந்தது. அதைத் தொடர்ந்து போலீஸ் தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் யாவும் சம்பிரமாக நடந்தேறின. நடக்கப்போவது தெரியாமல் காரியாலயங்கள், கல்லூரிகள், தொழிற்சாலைகளுக்குப் போனவர்கள் மாலையில் வீடு திரும்ப மிக்க சிரமப் பட்டார்கள்.

கலவரங்கள் ஆரம்பித்த இரண்டாம் நாள் முற்பகல், தீருபாய் தன் மாமாவின் வீட்டின் வழியாக அவசர அவசரமாகப் போய்க்கொண்டிருந்தான்.

'தீரு' என்ற ஈனமான குரல் கேட்டுத் திரும்பினான். அவன் மாமிதான் அவனை அழைத்துக் கொண்டிருந்தாள். தயக்கத்துடன், அவளை அணுகினான். அவள் முகமெல்லாம் வீங்கியிருந்தது. ஏகமாக அழுதிருக்க வேண்டும் என்று தோன்றியது.

'என்ன விஷயம் மாமி? வீட்டில் எல்லோரும் சௌக்கியம் தானே?' என்று வாசலில் நின்றபடியே கேட்டான்.

'உள்ளே வா தீரு!' என்று அவன் மாமி அழைத்தாள். மெதுவாக அவளைப் பின் தொடர்ந்து உள் நுழைந்தவன், 'மாமா, சம்பா ஒருவரும் இல்லையா?' என்று கேட்டான்.

அவனுக்குப் பதில் சொல்லாமல் அவள் 'ஓ'வென்று குரலெடுத்துப் புலம்பத் தொடங்கி விட்டாள். தீருபாய் திடுக்கிட்டான்.

---



கண்டக்டர்:—'ஒரே ஒரு ஆளுதான் எறங்கினது...உம்.... இரண்டு பேர் எறுங்க!'

'ஏன் மாமி அழுகிறாய்? என்ன நடந்து விட்டது' என்று பதட்டத்துடன் கேட்டான்.

'அதை எப்படியப்பா சொல்வேன்? நேற்று கல்லூரிக்குப்போன சம்பா, இதுவரை வீடு திரும்பவில்லை. ஊரெல்லாம் ஒரே கலாட்டாவாக இருக்கிறது. பெண் பிள்ளைக்குப் படிப்பு எதற்கு என்று படித்துப் படித்துச் சொன்னேன். கேட்டால் தானே? 'படிப்பு' 'படிப்பு' என்று உன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார். இப்பொழுது சம்பா எங்கே இருக்கிறாளோ? தெரியவில்லை. அவளைத் தேடிக்கொண்டுதான் உன் மாமா போயிருக்கிறார்' என்று கூறிவிட்டு மறுபடியும் அழத் தொடங்கிவிட்டாள்.

'மாமி! கவலைப்படாதே. நானும் போய்த் தேடிப் பார்க்கிறேன். எங்கும் போயிருக்கமாட்டாள். யாராவது கல்லூரித் தோழியின் வீட்டிலேயே தங்கச் சொல்லியிருப்பார்கள். ரயில், பஸ் ஒன்றும் சரியாகப் போகவில்லையல்லவா?' என்று ஆறுதலாகச் சொல்லிவிட்டுப் புறப்படப் போனான்.

'நீ போகாதே தீரு. மாமா வரும் வரையாவது இங்கே இரு. விஷயத்தைத் தெரிந்துகொண்டு போகலாம்' என்றாள்.

'சம்பாவைக் காணவில்லை என்று கேட்ட பிறகு நான் எப்படி மாமி வீட்டில் உட்கார்ந்திருக்க முடியும்? மாமா ஏதோ சொல்லிவிட்டாரே என்பதற்காக என் கடமையை நான் செய்யாமலிருக்கலாமா? நானும் போய் எனக்குத் தெரிந்த இடங்களின் தேடிப் பார்க்கிறேன்' என்று கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டான்.

ஃ ஃ ஃ

மறுநாள் காலை தீருபாய், அவர்கள் வீட்டுக்குப் போனபோது சம்பா திரும்பி இருக்கவில்லை. அவன் மாமா இடிந்துபோய் உட்கார்ந்திருந்தார். போலீசுக்கும் தகவல் சொல்ல முடியவில்லை. கலவரங்களை அடக்க ஒரு பட்டாளமே தேவையாயிருந்தபோது, இந்தமாதிரி விஷயங்களைப் போலீஸார் எங்கே கவனிக்க முடியும்?

'மாமா! கவலைப்படாதீர்கள். சம்பாவின் கல்லூரித் தோழிகள் சிலருடைய வீடுகள் எனக்குத் தெரியும். நண்பன் ஒருவன் கார் கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறான். போய் விசாரித்து வருகிறேன்' என்றான். அவர் பதிலே பேசவில்லை. வீட்டை விட்டு விரட்டி விட்ட மருமானிடம் பேச வெட்கமாயிருந்ததோ என்னமோ? அவன் 'மாமி மட்டும் 'ஊர் அமளி துமளிப்படுகிறது. ஜாக்கிரதையாக இரு, தீரு' என்றாள்.

அவள் குரல் ரொம்பக் கம்மிப் போயிருந்தது. சம்பா புத்திசாலி. எங்கேயாவது பத்திரமாக இருப்பாள். நீங்கள் அதிகம் கவலைப்படாதீர்கள்' என்று சொல்லிவிட்டுப் போனான் அவன்.

ஃ ஃ ஃ

அடுத்த நாள் காலை தொங்கிய முகத்துடன் தன் மாமாவின் வீட்டையடைந்தான் தீருபாய். அவன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என்பதை அவன் நடையே காட்டியது.

ஆனால் வீட்டில் நுழைந்த அவனை அவன் மாமா கட்டிக்கொண்டு கண்ணீர் விடத் தொடங்கிவிட்டார். 'தீரு! தீரு' என்று பொருமினார்.

'மாமா! இதென்ன இப்படிக் கலங்குகிறீர்கள்? இன்னும் முயற்சி செய்யலாம். சம்பா அகப்படாமல் இருக்க மாட்டாள்' என்றான்.

'ஐயோ, தீரு! அவள் அகப்படாமலேயே இருந்திருந்தால் தேவலையே? அபவாதத்துடனல்லவா வந்து விட்டாள்? தீராப் பழிக்கு ஆளாகிவிட்டாளேடா உன் சம்பா' என்று கூறிக் கதறினார் அவர்.

'என்ன, சம்பா வந்துவிட்டாளா? எப்பொழுது வந்தாள்? அவள் பழிக்காளானதாக யார் சொன்னது மாமா' என்று குரலை உயர்த்திக் கேட்டான்.

'வேறு யார் சொல்ல வேண்டும்? அவள் இன்று விடியற்காலை வந்த அலங்கோல நிலையே சொல்லி விட்டதே. முந்தா நாள் கல்லூரியிலிருந்து திரும்பும்போது யாரோ காலிகள் அவளைப் பிடித்துக்கொண்டு போனார்களாம். இன்று காலை அவர்களே இந்தத் தெருக்கோடியில் கொண்டு வந்து விட்டு விட்டுப் போய்விட்டார்களாம். வந்ததிலிருந்து வேறு ஒன்றும் சொல்லவில்லை. உன் மாமி பலமுறை கேட்ட பிறகு இதை மட்டும் சொன்னாள் என்றார்.

அச்சமயம் அவன் மாமி அடுத்த அறையிலிருந்து வெளியே வந்தாள். அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. 'உன் மாமாவுக்கு பைத்தியம்தான் பிடித்திருக்கிறது. படிப்பில்லாதவன், உனக்குப் பெண்ணைத் தரமாட்டேன் என்று முன்னால் உன்னை விரட்டி அடித்தார். இப்பொழுது 'என் பெண் கெட்டுப்போய்விட்டாள்' என்று ஊரெல்லாந் தமுக்கு அடிப்பார்போல் இருக்கிறது. அவள் வாழா வெட்டியாக இருக்க வேண்டுமென்று இவரே பாடுபடுகிறார்' என்று பொரிந்து தள்ளினாள்.

'மாமி! என்னை மறந்துவிட்டுப் பேசுகிறீர்களே! கொஞ்ச நேரத்துக்கு முன்தான் 'என்' சம்பாவுக்குப் பழி வந்துவிட்டதாக மாமாவே சொன்னார். என் சம்பாவை யார் ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும் அவளை ஏற்க நான் என்றும் தயார். 'அவளுக்கு நான்' எனக்கு அவள் என்பது என்வரை அசைக்க முடியாத தீர்மானம். என் படிப்பைப் பற்றிக் கவலைப்படாமல் 'இப்பொழுதே அவளுக்குத் தாலியைக் கட்டுடா! என்று மாமா சொன்னால் நான் மறுக்கப் போவதில்லை' என்றான்.

'தீரு! எச்சில் செய்யப்பட்ட பண்டத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்றா சொல்கிறாய்?' என்று தழுதழுத்த குரலில் கேட்டார் மாமா.

'நிறையப் படித்த நீங்களே இப்படிச் சொல்வது நன்றாக இல்லை மாமா. நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தாலும், அதற்கு அவள் எப்படி பொறுப்பாவாள்?' என்று கேட்டான்.

அவன் மாமி ஓடிவந்து அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீருகுத்தாள். 'தீரு! நடந்ததை மறந்து உன் மாமாவை மன்னித்து விடு. சம்பாவை நீதான் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்றாள்.

அவன் புன்னகை செய்தான். 'மாமா அல்லவா அதை நிச்சயம்செய்ய வேண்டியவர்' என்றான்.

'என்னைச் சோதிக்காதே தீரு. சம்பாவுக்கு நீதான் வாழ்வளிக்க வேண்டும்' என்று உருக்கத்துடன் கூறினார் அவர்.

ஃ ஃ ஃ

ரயில் செங்கல்பட்டை அடைந்து இரண்டு நிமிஷங்கள் ஆகிவிட்டதைக் கூட உணராமல் தேசாயின் கதையில் ஈடுபட்டிருந்தோம். நான் சொல்லி முடித்ததும் கிருஷ்ணமூர்த்தி 'அடடா செங்கல்பட்டு வந்து விட்டதே' என்று சொல்லிக்கொண்டே இறங்கினார். நாங்களும் இறங்கினோம்.

'உங்கள் காதல் ரொம்ப அதிசயமானது மிஸ்டர் தேசாய்! 'காதலி கெட்டுப் போனாள்' என்று தெரிந்தும் அவளைக் கைவிடாமல் கல்யாணம் செய்துகொண்டது ரொம்ப பாராட்டப்பட வேண்டிய விஷயம். உங்கள் மாமா உங்களுக்கு எவ்வளோ நன்றிக் கடன் செலுத்த வேண்டியவர்' என்றார் ஷண்முகம்.

'பெண்ணைத் தரமாட்டேன்' என்று கூறி வீட்டை விட்டு வெளியேறவும் செய்த மாமாவைப் பழிக்குப் பழி வாங்க நமது 'குறள் சொல்லித்தரும் வழியல்லவா இது' என்று அதிசயப்பட்டார் கிருஷ்ணமூர்த்தி.

பிறகு அவ்விருவரும் விடை பெற்றுக்கொண்டனர். நானும் தேசாயும் நாகரத்தினத்துடன் அவனுடைய வீட்டுக்குச் சென்றோம்.

போகும் வழியில் 'சுந்தர்! எனக்கொரு சந்தேகம். உண்மையைச் சொல்வதானால் கேட்கிறேன்' என்றான் என்னிடம்.

'என்ன?'

'சம்பாவுக்குப் பழி ஏற்பட்டதாகவும், கெட்டுப்போனதாகவும் சொன்னாயல்லவா? அதற்கெல்லாம் காரண புருஷர் ஸ்ரீமான் தீருபாய் தேசாய் என்று நினைக்கிறேன். என் ஊகம் சரிதானா' என்று கேட்டான்.

'சபாஷ்! ரொம்ப கச்சிதமாகச் சொல்லி விட்டாய். கலவரம் ஆரம்பமானவுடனேயே சம்பாவைத் தன் அறைக்கு அழைத்துப் போய்விட்டான் தேசாய். பிறகு இவனும், சம்பாவும் ஆடிய நாடகத்தில் இவன் மாமா கலகலத்து விட்டார். தன் மாமாவை, தன் காலில் விழவைத்து சம்பாவை அடைந்தான் இவன்' என்று முடித்தேன்.

# காயா பழமா?

'அப்பா என்ன சேதி கொண்டு வரப் போகிறார்? காரியம் காயாகுமா, பழமாகுமா?

கூடத்துச் சாய்வு நாற்காலியில் புதைந்து கிடந்த என் கைகளில் புரண்ட புத்தகம் ஒரு வியாஜம்தான். கருத்தும், கவனமும் என்னவோ அப்பாவின் வருகையை எதிர் நோக்கிக் கொண்டு வாசற்படியண்டைதான் தவம் கிடந்தது. அம்மாவைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. அடிக்கொரு தடவை அடுக்களையிலிருந்து வந்து தலையை நீட்டி, 'என்னடா அம்பி, இன்னமும் அப்பா வரக் காணலியே!' என்று விசாரித்து விட்டுப் போய்க்கொண்டிருந்தாள்.

ஆனால், எங்கள் சரசு மட்டும் துளியாவது முகத்தை அங்கே இங்கே திருப்ப வேண்டுமே! ஊஹும்..! ஏதோ ஒன்றிலுமே சிரத்தை இல்லாதவள் மாதிரி இந்த உலகிலேயே—இப்படியான ஒரு சூழ்நிலையிலேயே— ஒட்டாதவள் மாதிரிதான், முகத்தில் சூன்யமான ஒரு 'முகமூடி' யுடன் கூடத்திலே வளைய வந்துகொண்டிருந்தாள். மகா பாசாங்குக்காரி!

எஸ்.விஜயராகவன்




உண்மையில் என்னவோ அவள்தான் இப்போது ஆவலே உருவாக, கவலையே கருத்தாக இருக்க வேண்டியவள். அப்பா கொண்டு வரப்போகும் சேதியில் அவளுடைய வாழ்வின் எதிர்காலம்பற்றிய சூசகம்தானே அடங்கியிருக்கிறது...?

ஃ ஃ ஃ

எங்கள் சரசு குழந்தைப் பருவத்திலிருந்தே படுசூடிகை. வீட்டிற்கு ஒரே பெண் ஆனதால் எங்கள் அன்பையெல்லாம் முதலில் சுவீகரிப்பவள் அவள் தான். எங்களுடைய பாசத்தின் விழிப்பிலே, அன்பின் அரவணைப்பிலே, 'வெடவெட'வென்று வளர்ந்துவிட்ட அவள், சென்ற வருஷம்தான் எஸ்.எஸ்.எல். ஸி. பாஸ் செய்தாள். தொடர்ந்து ஹிந்திப் பரீட்சைகள் பலவும் தேறினாள். தையல் வேலைகளிலும், சங்கீதத்திலும் அவளுக்கு நிகர் அவளே தான்.




அத்துடன் இயற்கையாகவே மூக்கும் முழியுமாக இணையற்ற எழிலுடன் விளங்கிய அவள், இப்போது பருவம் எய்திவிட்ட காரணத்தால் நன்றாக வாளித்துப் பூரித்துப் புது மெருகுடன் ஜ்வலித்தாள்.

ஆனாலும் அவளை நல்ல ஒருவனின் கையில் பிடித்துக் கொடுக்க வேண்டுமென்றால், இவைமட்டும் போதுமா? முக்கியமாகக் காசு பணமும் தேவையாக இருக்கிறதே! வாழ்வில் அடிபட்டவரான எங்கள் தந்தையார், இந்த லௌகிகத் தத்துவத்தையும் உணராமலில்லை. அதற்காக அவர் ஒரு 'ஐந்தாண்டுத் திட்டத்தை' வகுத்துக் கடந்த ஐந்து வருஷங்களாக வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி எப்படியோ ஒரு [illegible]யாயிரம் ரூபாயையும் கூடச் சேமித்து வைத்திருந்தார்!

சரசுவின் படிப்பு முடிந்ததுமே அவளுடைய ஜாதகத்தை ஒரு நூறு பிரதிகள் அச்சிட்டு வைத்துக்கொண்டு, வரன் வேட்டையில் இறங்கி, வலை வீச ஆரம்பித்தார் அவர்.

'எனக்கு என்னப்பா இப்போது கல்யாணத்திற்கு அவசரம்? நான் மேலே காலேஜில் படிக்கிறேன். அல்லது ஏதாவது வேலை

யொன்றில் சேருகிறேன்...' என்ற சரசுவின் அன்புக் கோரிக்கையைக் கூட அவர் உறுதியுடன் நிராகரித்து விட்டார்.

அதற்காக அவரைக் குறை கூறவும் முடியாது. எந்தக் காரியமானாலும் முன்கூட்டியே திட்டம் வகுத்து, அதன்படியே அதை நிறைவேற்ற முயலும் இயல்புடையவர் அப்பா. எனவேதான், சரசுவின் கல்யாண விஷயத்திலும் அவர் தாம் போட்டிருந்த திட்டத்தைத் திடீரென்று மாற்ற விரும்பவில்லை. சரசு மேலே படிப்பதானால், அதற்கான செலவுக்கு வகை செய்வது ஒருபுறமிருக்கட்டும்; அதிகமாகும் அவள் படிப்புக்கேற்ப, அவள் பார்க்க வேண்டிய வரனின் தகுதியும் மாறி, காசு பண விஷயங்களிலும் ஏற்றம் கண்டால், அவற்றைச் சேர்க்க மேலும் மேலும் புதிதான திட்டங்கள் அல்லவா வகுக்க நேரிடும்?

எனவே, அவர் எங்கெங்கோ அலைந்து, யார் யாரையோ கண்டு ஜாதகங்கள் பல வாங்கி வந்தார். ஆனால், 'வேளை' வராததாலோ என்னவோ ஒன்றும் சரியாகக் குதிராமல் தட்டிக்கொண்டே போயிற்று. இந்தச் சமயத்தில்தான் பம்பாயில் நல்ல உத்தியோகத்திலிருக்கும், அவருடைய தமக்கையின்—எங்கள் அத்தையின்—பிள்ளை ராஜு லீவு எடுத்துக்கொண்டு ஊருக்கு வந்திருந்தான்.

'சரசு அவள் அத்தானுக்குத்தான் மாலையிட வேண்டுமென்று பிராப்தமோ என்னவோ! நீங்கள் ஏன் வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு அழுகிறீர்கள்?' என்று அம்மாவே கேட்டாள்.

சரசுவுக்குமட்டும் கசக்குமா என்ன? அழகும் குணமும் பொருந்திய காளை ராஜு; பம்பாயில் கௌரவமான உத்தியோகம்; கை நிறையவும் சம்பாதிக்கிறான். எனவே, இதுவரை அதிகமாக ஒட்டாதிருந்த உறவைப் புதுப்பித்துக்கொண்டு மாம்பலத்தில் உள்ள எங்கள் அத்தை வீட்டிற்கு அடிக்கடிச் செல்ல ஆரம்பித்தார் அப்பா. அத்தையை மெதுவாக வசப்படுத்தி ஜாதகப் பரிவர்த்தனையெல்லாம்கூட நடந்தது; எல்லாமே கனப் பொருத்தம்!

மேலே பேசி நல்ல ஒரு முடிவிற்கு வருவதற்குள் ராஜுவின் லீவு முடிந்துவிட்டதால், வருகிற புதனன்று அவன் பம்பாய் திரும்பிப் போவதாகத் தகவல் எட்டியது. அதனால்தான் இன்று அவசரமாக அப்பா மாம்பலம் சென்றிருக்கிறார். அத்தையிடம் இது பற்றித் தீர்மானமாகப் பேசி, ஐயம் திரிபற்ற ஒரு முடிவைச் செய்து கொண்டு வரவேண்டுமென்பது அவர் திட்டம். அவருடைய முயற்சி காயாகுமா, பழமாகுமா?

* * *

வாசலில் காலரவம் கேட்டது.

ஆம்; அப்பாவே வந்துவிட்டார். நான் நாற்காலியைவிட்டுப் பெயர்ந்து எழுந்தேன். அம்மாவும் அடுக்களையிலிருந்து ஓடி வந்தாள். சாகஸக்காரி சரசுமட்டும் பார்வையைக்கூடத் திருப்பாமல் புத்தக அலமாரியைக் கிளறும் பாவனையில் கூடத்திலே நின்றுகொண்டிருந்தாள். ஆனால், அவள் காதுகள் வாசற்படிக்கு அப்பாவும் நடப்பதை சப்த பூர்வமாகக் கிரகித்துக் கொள்ளத் தயாராக இருந்ததை நான் அறியமாட்டேனா?

'முருகா' என்ற வழக்கமான தீனக் குரலுடன் அப்பா சாய்வு நாற்காலியில் அமர்ந்தார். உடனே, 'சரசு! அப்பாவுக்கு ஒரு தம்ளர் நீர் மோராகக் கரைச்சிண்டு வா; ஒரே வெயில், பாவம்!' என்ற அம்மா, அப்பாவை நோக்கி, 'உங்கள் தமக்கை என்ன சொன்னார்? காரியம் பழந்தானே?' என்றாள் ஆவலுடன்.

'பாதி பழம், பாதி காய்!'

'இதென்ன அப்பா, புதிர்?' நான் இடைமறித்தேன்.

'புதிர் ஒன்றும் இல்லையடா. நீடிக்க வேண்டுமென்றிருந்த லீவு கிடைக்காததால் ராஜு அவசரமாகப் பம்பாய் போகிறானாம். எனவே, அடுத்த தை மாசத்தில் அவன் மறுபடியும் லீவுக்கு வரும்போது கல்யாணத்தை வைத்துக்கொள்ளலாம் என்று கூறிவிட்டாள் அத்தை!'

'அப்படியானால் ஒரு வருஷம் ஒத்திப் போயிருக்கிறது. அவ்வளவுதானே இதற்குக் 'காய்' என்று சொல்வானேன்?'



'அதற்குக் காரணம் உன் அத்தை போடும் நிபந்தனைகள்தாம்! நான் பத்தாயிரம் ரூபாய்வரை சீர்வகைகள் செய்வதாகச் சொன்னேன். உடனே அவள், 'அதெல்லாம் முடியாது. உனக்கும் ஒரு பெண்; எனக்கும் கருவேப்பிலைக் கொழுந்து மாதிரி ஒரே பிள்ளை. எப்படியாவது அந்தப் பத்தாயிரத்தோடு, கையிலே ஒரு நாலாயிரம் கொடுத்து விடு. ஒரு வருஷம் அவகாசம் தானிருக்கிறதே!' என்று சிரித்துக் கொண்டே, ஒரு நிபந்தனை போட்டு விட்டாள். அவள் சாமர்த்தியம் யாருக்கு வரும்?' என்றார்.

'அதனால் என்ன அப்பா? உங்கள் ஐந்தாண்டுத் திட்டத்தை இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடித்து விடுங்களேன்!' என்று நான் கிண்டல் செய்தேன்.

'அப்படித்தான் தீர்மானம் செய்திருக்கிறேன். ஆனாலும் ஒரு வருஷத்தில் இரண்டாயிரத்திற்கும் மேல் எப்படி வகை செய்ய முடியும்?'

'அப்படியானால் துண்டு விழும் இரண்டாயிரத்திற்கு வழி?'

'கவலைப் படாதே; அதற்கும் ஒரு திட்டம் வகுத்துவிட்டேன்!' என்று சிரித்தார் அப்பா.

'அதென்னப்பா திட்டம்?' நீர்மோருடன் ஒயில் நடை பயின்று வந்த சரசு கேட்டாள்.

'நீதான் படிப்பு முடிந்ததிலிருந்தே, 'ஒன்று காலேஜுக்கு அனுப்பு; அல்லது ஏதாவது வேலைக்காவது போகிறேன்' என்று பிடிவாதம் செய்தாயல்லவா? இப்போது உன் இச்சைப்படியே உன்னை ஒரு வேலையில் சேர்த்துவிடப் போகிறேன். ஒரு வருஷத்திற்கு மட்டும். நீ வாங்கும் சம்பளப் பணத்தை அப்படியே பாங்கியில் போட்டு...'

'வெரிகுட்!' என்று துள்ளினாள் சரசு. வேலைக்குப் போவதில் அந்த நவநாகரிகப் பெண்ணுக்கு அவ்வளவு ஆனந்தம்!

பிறகு என்ன? மறுநாள் முதலே சரசுவுக்கு வேலை தேடும் படலம் ஆரம்பமாயிற்று. தெரிந்தவர்களிடமெல்லாம் சொல்லி வைத்து, அங்கங்கே சரசுவை மனுக்கள் போடச் செய்தார் அப்பா. இறுதியில் 'ஜேம்ஸ் டிரேடிங் கம்பெனி' என்ற மேல் நாட்டு ஸ்தாபனம் ஒன்றிலிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது. சிபாரிசுக் கடிதங்கள் சில வாங்கிக் கொண்டு அந்தக் கம்பெனியின் இளம் இந்திய மானேஜரான சந்திரசேகர் என்பவரை நானும் அப்பாவுமாகச் சந்தித்துப் பேசினோம். பண்பும் பரிவும் மிக்க அவர், எங்களுடன் அன்போடு பேசித் தன்னாலியன்றவரை உதவுவதாக வாக்களித்தார்.

இறுதியில் ஒரு நாள் மாசம் இருநூறு ரூபாய் சம்பளத்தில் சரசுவை குமாஸ்தாவாக எடுத்துக் கொண்டிருப்பதாக உத்தரவு வந்தது. சரசுவும் வேலையில் சேர்ந்து குதூகலத்துடன் ஆபீசுக்குப் போய் வரலானாள். மானேஜர் சந்திரசேகர் கண்ணியமாக நடந்து கொள்வதாகவும், வேலை தனக்குப் பிடித்திருப்பதாகவும் கூறிய அவள், உற்சாகத்துடன் பணியாற்றி வந்தாள்.

மாதா மாதம் அவள் பெற்ற சம்பளப் பணத்தைத் தமது சொந்தச் சேமிப்புடன் சேர்த்துப் பாங்கியில் கட்டி வந்தார் அப்பா!

* * *

நாட்கள் நகர்ந்தன.

மாசியும் பங்குனியும் பெயர்ந்து, புது வருஷம் பிறந்தது. ஆடிக் காற்றில் அம்மியும் புரளுவதுபோல் அடுத்து வந்த மாதங்களும் பின்னோடி மறைகையில், மறுபடியும் தை பிறந்து விட்டது; இனி சரசுவுக்கும் வழி பிறந்தாக வேண்டுமே!

அப்பா காரியமே கண்ணாக அடிக்கடி மாம்பலத்திற்கு விஜயம் செய்து, அத்தையைக் கண்டு பேசி வந்தார். இன்னும் ஒரு மாசத்தில் ராஜுவும் லீவில் வரப் போவதாகச் சேதி கிட்டியது.

மிகுந்த உற்சாகத்துடன் கல்யாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்த அவர், அன்றொரு நாள் சாப்பிடும் போது, 'சரசு, வருகிற முதல் தேதியோடு உன் கணக்கில் இரண்டாயிரம் ரூபாய் சேர்ந்துவிடும்; என் வகையிலும் ஈடான தொகை சேர்ந்திருக்கிறது. நீ இனிமேல் கால் கடுதாசியை எழுதி உன் கம்பெனியில் கொடுத்துவிடலாம்!' என்று சிரித்தார், தன் திட்டத்தை நிறைவேற்றிவிட்ட மகிழ்ச்சியுடன்.

'போங்கள் அப்பா... உங்களுக்கு வேலையில்லை!' என்று சிலிர்ப்பினள் சாரு செல்லமாக.

'என்னடீ உருமறே? இன்னமும் உத்தியோகம் பார்க்க வேணுமென்று உனக்கு ஆசையாக இருக்கிறதா? ராஜு வந்தால், அவனுக்கு இதெல்லாம் பிடிக்குமோ என்னவோ? அவன் வருவதற்குள்ளேயே நீ வேலையிலிருந்து நின்றுகொண்டுவிடு' என்றாள் அம்மா.

'அதெல்லாம் முடியாது! நான் வேலை பார்ப்பது அத்தானுக்குப் பிடித்தால் என்ன, பிடிக்காவிட்டால்தான் எனக்கென்ன? ஐ டோன்ட் கேர்!' என்று ஒரு வெடிகுண்டை வீசினள் இந்த 'ஆபீஸ் சுந்தரி' சாரு.

அவளது பேச்சில் தொனித்த அலாதியான தைரியமும் வெறுப்பும் எங்கள் யாவரது வாயையும் அடைத்து விட்டன. வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழியை உடைப்பவள் மாதிரி பேசுகிறாளே இச் சாரு?

அப்பா ஏனோ பதிலே பேசவில்லை. யாவரும் மௌனமாக மேலே சாப்பாட்டைத் தொடர்ந்தோம். சாரு இலையில் இருந்ததை அவசர அவசரமாக அள்ளி வாயில் போட்டுக் கொண்டாள். அதற்குள் ஏனோ அவள் கண்களில் நீர் முட்டி, அந்த நீர்ப் பெருக்கில் அவள் விழிகள் நீந்தலாயின. தனது தவறை உணர்ந்து விட்டாளோ என்னவோ?

தொடர்ந்து இலையை விட்டு எல்லோருக்கும் முன்னால் எழுந்த அவள், கைகளைக் கழுவிவிட்டுச் 'சரசர'வென சாரைப் பாம்பு மாதிரிப் படிகள் ஏறி மாடி அறைக்கு ஓடினள். சற்றைக்கெல்லாம், மாற்று உடையுடன் கீழே இறங்கி வந்த சாரு, கூடத்திலிருந்த அப்பாவை நெருங்கி, 'என்னை மன்னித்து விடுங்கள், அப்பா! நான் ஆபீசுக்குப் போகிறேன்...' என்று கெஞ்சும் குரலில் மொழிந்தவாறே, ஒரு கடிதத்தையும் அவர் கையில் கொடுத்தாள். மறுகணம் 'விர்'ரென்று வாசலைத் தாண்டித் தெருவில் இறங்கி மின்னலென மறைந்து விட்டாள்!

ஆவலுடன் கடிதத்தைப் பிரித்த அப்பா உரக்கவும் படித்தார்:

'அருமை அப்பாவுக்கு நமஸ்காரம்.

எனது நலனே கருத்தாக நீங்கள் இட்ட திட்டங்களைத் தகர்த்தெறிவதற்கு என்னை மன்னித்து விடுங்கள். எங்கேயோ பம்பாயில் உள்ளவரும், எனக்கு அதிகமாகப் பழக்கமில்லாதவருமான அத்தானை மணக்க நான் சம்மதிக்க முடியாமலிருப்பதற்கு வருந்துகிறேன்.

அதற்கென்று எனக்குக் கல்யாணமே வேண்டாமென்று நான் சொல்லவில்லை. உங்கள் விருப்பப்படி இந்தத் தையிலேயே மணமகள் ஆவதற்கு எனக்குச் சம்மதமே.

எங்கள் கம்பெனி மானேஜர் சந்திரசேகரைத்தான் உங்களுக்கு நன்றாகத் தெரியுமே! மிகவும் நல்ல மனிதர்; படிப்பும் பண்பும் மிக்கவர்; என்னிடம் அவருக்கு அதிகமான பிரியமும் உண்டு.

இன்று மாலை ஆபீஸ் விட்டதும், அவர் காரிலேயே நான் அவரை வீட்டிற்கு அழைத்து வருகிறேன். பணம் காசு ஒன்றும் அவர் எதிர்பார்க்க மாட்டார். அவருக்கு நல்ல வரவேற்பளித்து, என்னை வாழ வைப்பீர்கள் என்று நம்பும்,

உங்கள் அருமை மகள்,
சாரு'

கடிதத்தைப் படித்து முடித்ததும். அப்பாவின் முகம் 'பளிச்'சிட்டு மலர்ந்தது. நானோ, 'சாரு கெட்டிக்காரி!' என்று வாய்விட்டே கூறிவிட்டேன்.

'மானேஜர் என்றால் சம்பளம் ஆயிரத்துக்கு மேலாவது இருக்குமே! அப்பவே தோழுந்தூர் குங்குமப் பொட்டுச் சாமியார் சொன்னார், சாருவுக்கு உயர்ந்த வரனாகத்தான் குதிருமென்று!'— இப்படிப் பெருமைப் பட்டுக்கொண்ட அம்மா, வழக்கமாகக் கிளறும் சொஜ்ஜியை விட்டுவிட்டு, அல்வாவுக்கே கோதுமை நனைக்க உள்ளே ஓடினள்.

அன்று மாலை சந்திரசேகரின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த எங்கள் எண்ணத்திலே, 'காயா பழமா?' என்ற கேள்விக்கு இடமிருக்கவில்லை!



# வளரும் விஞ்ஞானம்

கே. ஆர். எஸ்.

## முட்டைகள் கெடாமலிருக்க!

இந்தியாவில் கோடை காலத்தின் வெப்பத்தின் கொடுமையினால் பழம், காய்கறிகள், முட்டைகள் பெருமளவில் சேதப்படுகின்றன. இதனால் நாட்டுக்கு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மேற்படி பண்டங்கள் நாசமடைகின்றன. உணவுப் பொருளைக் கெடாமல் பாதுகாப்பது எப்படி என்று விஞ்ஞானிகள் சிந்திக்கலாயினர். இதன் விளைவாக குளிர் சாதனக் கருவிகள் (ரெப்ரிஜிரேட்டர்) கண்டுபிடிக்கப்பட்டன. கோடையில் முட்டைகள் கெடுவதைத் தடுக்க மலிவான முறையொன்றை இஸட் நகரில் உள்ள இந்திய கால்நடை ஆராய்ச்சி நிலையம் சமீபத்தில் கண்டுபிடித்துள்ள செய்தி கிடைத்துள்ளது. இம்முறைக்கு 'தெர்மோ ஸ்டெபிலைசேஷன்' என்று ஆங்கிலத்தில் பெயர் கொடுத்துள்ளனர். பெயரைக் கண்டு மலைத்து விடாதீர். இதை அனுஷ்டிக்கும் முறை மிகச் சுலபம். 54½ டிகிரி சென்டிகிரேடு (அதாவது, தண்ணீரை அதிக உஷ்ணத்துக்கு காய்ச்சாமலும் ரொம்பவும் வெதவெதப்பாக இல்லாமலும்) உஷ்ணமுள்ள தண்ணீரில் முட்டைகளை ½ மணி நேரம் அமுக்கி வைக்க வேண்டும். இந்த முட்டைகள் மிகப்பழையனவாகவோ அல்லது மிகப் புதியனவாகவோ இருக்கலாகாது. நல்ல ரக முட்டைகளாக இருக்க வேண்டும். 200 அல்லது 250 முட்டைகளை ஒரு கூடையில் போட்டு மேற்சொன்ன உஷ்ணமுள்ள தண்ணீரில் அமுக்கி அதன் மேல் வெந்நீரை ஒரு குழாயிலிருந்து தொடர்ந்தாற்போல் ½ மணி நேரம் பாயும்படி செய்ய வேண்டும். பிறகு அதை எடுத்து ஓடும் குளிர்ந்த ஜலத்திலோ அல்லது வாளி ஜலத்திலோ வைக்க வேண்டும். வாளி ஜலமாக இருந்தால் அதை மூன்று முறை மாற்ற வேண்டும். இவ்வாறு பதனம் செய்யப்படும் முட்டைகள் கோடையில் 10 நாட்களுக்கு கெடாமல் இருக்கின்றன. இம்முறை சுலபமாக இருப்பதால் கிராமங்களில் கோழி, வாத்துப் பண்ணை வைத்திருப்போர் உபயோகித்துப் பயனடையலாம்.

## கடல் அலைகளிலிருந்து மின்சாரம்

கடல் அலைகளிலிருந்து மின்சார சக்தி உற்பத்தி செய்யும் வழி முறை பற்றி சோவியத் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். அலை மின்சார நிலையங்கள் நிறுவ, வெள்ளைக் கடல் அலைகள் ஏற்றதாக இருக்குமென்று அவர்கள் கருதுகின்றனர். இதற்காக 100 கிலோ மீட்டர் நீளம் 20 மீட்டர் உயரமுள்ள அணையொன்றைக் கட்ட உத்தேசித்துள்ளனர். இதில் 1500 டர்பைன்கள் (மின்சாரம் தயாரிக்கும் சாதனம்) பொருத்தப்படலாம். தர்மல், அணுசக்தி மின்சார நிலையங்களுடன், அலை மின்சார நிலையங்களையும் இணைக்கலாம் என்று சோவியத் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## காந்த சக்தி கண்டுபிடிக்கப்பட்ட விதம்

முதல் மாக்னெட் (காந்தக் கல்) எப்படி கண்டுபிடிக்கப்பட்டது தெரியுமா?



லோட் ஸ்டோன் என்ற கல் மீது மின்னலைப் பாய்ச்சி அதற்கு காந்த சக்தி கொடுக்கப்பட்டது. 5000 வருடங்களுக்கு முன் லோட்ஸ்டோனை (ஒரு வகைக் கல்) பயன்படுத்தி திசை காட்டும் கருவிகள் தயாரிக்கப்பட்டன. அதற்கு 4000 வருடங்களுக்குப் பிறகு லோட் ஸ்டோனையும் உலோகத்தையும்

இணைத்து காந்த சக்தி உண்டாக்கப் பட்டது. தற்போது மின்சாரம் மூலம் காந்த சக்தி உண்டாக்கப்படுகிறது.

### கடிகார மூலம் திசை அறியலாம்

ஒரு கை கடிகாரத்திலிருந்து திசையை அறியலாம். கடிகார மொன்றை இடது கையில் முன்பக்கம் கண்ணுக்கு தெரியும்படி வைத்துக் கொள். மணி காட்டும் முள் சூரியனை நோக்கியிருக்கும் படி செய்து கொள். வட கோளார்த்தத்தில் மணி காட்டும் முள்ளுக்கும் 12 மணிக்கும் நடுவில் தென் திசையும் தென் கோளார்த்தத்தில் வடக்குத் திசையும் இருப்பதைக் காணலாம்.



### பூமண்டலத்தின் வயது

இந்த பூமண்டலத்தின் வயது, உருவம் சமீபத்தில் கலிபோர்னியாவில் பலோமார் மலைமீது நிறுவப்பட்டவான ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்துள்ளதாக டாக்டர் அல்லன் ஆர். சன்டேஜ் கூறுகிறார். தற்போதுள்ள மதிப்பீட்டின் படி உலகின் வயது 10,00000000 வருடங்கள் முதல் 13,000,000,000 வருடங்களாம். மலைகளில் விழுந்து அழிந்துபோன அணுத்துகளைக்கொண்டு நடத்திய ஆராய்ச்சியின்மூலம் வயதை அது கணக்கிட்டுள்ளதாம். அணுசக்தியை சமாதானப் பணிக்கு உபயோகிக்க முடியுமென்பதற்கு இது ஒரு உதாரணம்.

### டெலிவிஷன் மூலம் கல்வி போதனை

ஆரம்பக் கல்வி முதல் கல்லூரிக் கல்விவரை சுமார் 5 லட்சம் மாணவர்களுக்கு டெலிவிஷன்மூலம் அமெரிக்காவில் கல்வி கற்பிக்கப்படுகிறது. வகுப்பு அறை பாட போதனையில் டெலிவிஷன் இடம் பெற்றுள்ளது. இந்த ஆராய்ச்சிகளுக்கு போர்டு ஸ்தாபனம் 10 லட்சம் டாலருக்குமேல் உதவி புரிந்துள்ளது. 25 கல்லூரிகளும், 100 பள்ளிகளும் 1 லட்சம் ஆசிரியர்களும் இதில் பங்குகொண்டுள்ளனர். டெலிவிஷன்மூலம் கல்வி கற்பிக்கப்படுவதால் இருவித நன்மைகள் கிட்டுகின்றன. (1) தலைசிறந்த ஆசிரியர்களின் சேவை அதிகமான மாணவர்களுக்குக் கிடைக்கும். (2) வழக்கமான கல்வி முறைகளுக்கு மாறுபட்ட புதிய அனுபவங்கள் மாணவர்களுக்கு கிடைக்கும். சாதாரணக் கல்வி போதனை முறையில் மாணவர்கள் எவ்வளவு கல்வி அறிவு பெறுவார்களோ அதை விட அதிகமான அறிவை டெலிவிஷன் கல்விமூலம் பெறுகின்றனர் என்பது தெளிவாகிறது.

### நிலக்கரி புகையும் வீணாவதில்லை

கடந்த 50 வருடங்களுக்கு முன்பு வரை தொழிற்சாலைகளில் உபயோகிக்கப்படும் நிலக்கரியிலிருந்து வெளி வரும் புகை வீரயமாக்கப்பட்டு வந்தது. தற்போது இதைத் தடுக்க அமெரிக்கா ஒரு புதிய சாதனத்தைக் கண்டு பிடித்துள்ளது. இச்சாதனம்மூலம் புகையைத் தேக்கி அதை கிருமி நாசினிகள், செயற்கை ரப்பர், பெயின்டுகள், வாசனைப் பொருள்கள், ஆஸ்பரின் முதலிய பல பண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

### சூரியனின் சக்தி

நமக்குத் தேவைப்படும் சக்தி அனைத்தும் இந்த உலகிலிருந்தே தோன்றுகிறது. நிலக்கரி, எண்ணெயினால் உண்டாகும் சக்தியை தொலைதூரத்திலிருக்கும் சூரியன் கொடுக்கிறது. பயிர்கள், பிராணிகள் உயிர் வாழ்வதற்கான சக்தியும் அங்கிருந்துதான் கிடைக்கிறது. சூரியனிடமிருந்து கிடைக்கும் சக்தி அணுவில் மறைந்து கிடப்பதை விஞ்ஞானிகள் கண்டுள்ளனர்.



ஃ ஃ ஃ

ஒரு டன் நிலக்கரியிலிருந்து 145 பவுண்டு நிறையுள்ள உபபொருள்கள் தயாரிக்கலாமென்பதை அமெரிக்கர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். குடை முதல் உதட்டுச் சாயம் வரை தயாரிக்கலாம்.



# ஸ்ரீ ஜயதேவர் அஷ்டபதி கீர்த்தனை

சங்கீத கலாநிதி ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீநிவாஸஅய்யர், ஸ்வரப்படுத்தியது.

## அஷ்டபதி 15.

ராகம்: ஸாவேரி.] [தாளம்: ஆதி. (1 களை)

1. ஸமுதித மதனே ரமணீ வதனே சும்பன சலிதாதரே
மிருகமத திலகம் லிகதிஸ புலகம் மிருகமிவ ரஜனீகரே
ரமதே யமுனா புளின வனே
விஜயீ முராரி ரதுனா

2. கனசய ருசிரே ரசயதி சிகுரே தரளித தருணானனே
குரவக குஸுமம் சபலா ஸுஷமம் ரதிபதி மிருக கானனே

3. கடயதி ஸுகனே குசயுக ககனே மிருகமத ருசிரூஷிதே
மணிஸர மமலம் தாரக படலம் நகபத ஸஸிபூஷிதே

4. ஜிதபிஸ ஸகலே மிருதுபுஜ யுகளே கரதல நளினீதளே
மாரகத வலயம் மதுகர நிசயம் விதரதி ஹிமஸீதளே

5. ரதிகிருஹ ஜகனே விபுலா பகனே மனஸிஜ கனகாஸனே
மணிமய ரஸனம் தோரண ஹஸனம் விகிரதி கிருதவாஸனே

6. சரண கிஸலயே கமலா நிலயே நக மணிகண பூஜிதே
பஹிரப வரணம் யாவக பரணம் ஜனயதி ஹிருதி யோஜிதே

7. த்யாயதி ஸதி ருஸம் காமபி ஸுபிருஸம் கலஹலது ரஸோதரே
கிமபல மவஸம் சிரமிஹ விரஸம் வதஸகி விடபோதரே

8. இஹரஸ பணனே கிருதஹரி குணனே மதுரிபு பதஸேவகே
கலியுக சரிதம் நவஸது துரிதம் கவிநிருப ஜயதேவகே

சென்னை-600 008

### சரணம் I

| | | |
|---|---|---|
| ; ப மா ப தா  ப த ப ம க ரி | . ஸ  ஸ ரி க ஸா | ஸா ரி க ரி ஸா ரி த ‖ |
| ஸ மு தி த  ம . த  னே | . ர மணி | வ த னே , . ‖ |
| 3  3 | | 3 |
| ; ஸ ரி ம ம ... ப ம த ப | தா ; ; ; | த ப மா பா ; ‖ |
| ... தா  த . | ரே | . . . . ‖ |
| 4 | | |
| 1 ; ப மா  ப தா  ஸ்ா ஸ்ா ஸ்ா ; | ; ரி ரி க் ரி ஸ்ா | ஸ் ரி தா  தா ; ‖ |
| ம்ருக  ம த  தி  ல  கம் | வி க  தி  ஸ | பு  ல  கம் ‖ |
| 3  3 | 2 | |
| 2 ; ப மா ப தா  ஸ்ா ஸ்ா ரி க்ர , | ரி ரி க ா ரி ஸ் ரி | ஸ் ரி தா தா ; ‖ |
| ம்ருக ம த  தி  ல  கம் . | . வி க தி ஸ . | பு . ல கம் ‖ |
| 3  3 | 2 | |

### பல்லவி

| | | |
|---|---|---|
| ; ப தா ரி ஸ்ா ரி தா பா , ப ம | தா பா தா ; | ; ; ரி த ப ம ‖ |
| ம்ருக மி வ  ர ஜ வி  க . | ரே . . | . . . . ‖ |
| 3 | | |

### அநுபல்லவி

| | | |
|---|---|---|
| ப த ரி ஸ்ா தா , ப த ப ம க ரி ரி | ; ஸ ரி க ஸ | ரி ; ; ; ‖ |
| . ர ம தே ய  மு . ஞ | பு ளி ந வ  ர | மே ‖ |
| ; ப தா ரி ஸ்ா  ஸ் ரி ஸ் ரி தா  பா | ப ம த ப தா ; | ; ; ரி த ப ம ‖ |
| வி ஜ யீ . .  மு  ரா . .  ரி | ர  து . ஞ | . . . . ‖ |
| | 4 | |

ப த ரி ஸ்ா தா ,
ர  ம  தே (யமுனா புளினவரே)

(மற்ற சரணங்களுமிதுபோல்)



ஜனவரி 13-ந்தேதியன்று காட்மாண்டுவிலுள்ள நேபாள் அகாடமி அதிகாரிகள் பிரதமர் நேருவுக்கு சில புத்தகங்களைப் பரிசாக அளித்தார்கள்.